வெளியீடு—14—7—1972]
Issued—14—7—1972]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

புதன்கிழமை 1972 மார்ச் 1
Wednesday 1st March 1972

தொகுதி XVI—எண் 1
Volume XVI—No. 1

©
தமிழ் நாடு அரசு
1972
GOVERNMENT OF TAMIL NADU
1972

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise]

# Tamil Nadu Legislative Assembly Debates

Fourth ~~THIRD~~ SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

(*1st, 3rd, 4th, 6th and 7th March* 1972.)

[VOLUME XVI (NOS. 1 TO 5).]

TABLE OF CONTENTS.


| | Pages |
|---|---|
| ***Wednesday, 1st March* 1972.** | |
| Personnel of the Government of Tamil Nadu ... ... ... | i–vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies ... ... ... ... ... | ix–xvi |
| I Condolence Resolution— | |
| Thiru N. Gopala Menon ... ... ... ... ... ... | 1 |
| II Questions and Answers ... ... ... ... ... ... | 2–26 |
| III Point of Order— | |
| Raising of adjournment motions before the presentation of the Budget ... ... ... ... ... ... ... | 26–32 |
| IV Budget for the year 1972-73—Presentation ... ... ... | 32–56 |
| V Papers laid on the Table ... ... ... ... ... | 56–62 |
| ***Friday, 3rd March* 1972.** | |
| I Obituary references— | |
| (1) Thiru K. A. Sheik Dawood | |
| (2) Thiru S. Chinnakaruppa Thevar | |
| (3) Thiru M. Marimuthu ... ... ... ... ... | 159–160 |
| II Questions and Answers ... ... ... ... ... | 160–191 |
| III Adjournment Motions— | |
| Death of Thirumalaichamy in Central Jail, Coimbatore, Strike in Textile Mills, Labour unrest and State-wide strike ... ... ... ... ... ... ... | 191–216 |
| IV Announcement— | |
| Business of the House ... ... ... ... ... ... | 216 |
| V General Discussion on the Budget for the year 1972-73 ... | 216–286 |
| VI Papers laid on the Table ... ... ... ... ... | 287 |




61545

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | | |
|---|---|---|
| Consid. Cl. | ... ... | Consideration of Clauses of a Bill. |
| D.E.E. | ... ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | ... ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... ... | Governor's Address. |
| G.D. | ... ... | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | ... ... | Half-hour Discussion. |
| Int. | ... ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... ... | Legislative Assembly. |
| L.C. | ... ... | Legislative Council. |
| M. | ... ... | Motion. |
| P.M. | ... ... | Privilege Motion. |
| R/Res | ... ... | Resolution. |
| [illegible] | ... ... | Statement. |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்:

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசைமாற்று வாரியம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுது-பொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

Pages

*Saturday, 4th March 1972.*

I Questions and Answers ... ... ... ... ... ... 289–324

II Adjournment Motions—

(a) Hunger strike by B.T. Teachers ... ... ... 325–333

(b) Alleged attack on students of St. Xavier's College, Palayamcottah ... ... ... ... ... 334–337

(c) Strike and arrest of Banian Factory Workers at Tiruppur ... ... ... ... ... ... 337–342

III General discussion on the Budget for the year 1972-73—(cont.) ... ... ... ... ... ... ... 342–410

IV Papers laid on the Table ... ... ... ... ... 411

*Monday, 6th March 1972.*

I Questions and Answers ... ... ... ... ... ... 413–447

II Privilege Matter—

Notice by Thiru K. Suppu against the Superintendent, Central Jail, Madras regarding the manner of his release ... ... ... ... ... ... ... ... 447–449

III Adjournment Motions—

Motions given by Members on various subjects ... ... 449–452

IV Announcement—

Business of the House ... ... ... ... ... ... 452

V General discussion on the Budget for the year 1972-73—(cont.) ... ... ... ... ... ... ... 453–547

VI Papers laid on the Table ... ... ... ... ... 547–548

*Tuesday, 7th March 1972.*

I Questions and Answers ... ... ... ... ... ... 549–580

II Point of Order—

Expunction of walk-out staged by Congress Party Members ... ... ... ... ... ... 581–597

III Adjournment Motion—

Hunger strike by Graduate Teachers at Madras and consequent arrests ... ... ... ... ... ... 597–606

IV Statement by Minister—

Paddy smuggling into Kerala ... ... ... ... ... 607–609

V General discussion on the Budget for the year 1972-73—(cont.) ... ... ... ... ... ... ... 609–672

VI Papers laid on the Table ... ... ... ... ... 672



## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the Main Headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | |
|---|---|
| A.M./Ad. Motion ... ... | Adjournment Motion. |
| Ann. ... ... | Announcement. |
| B.O.H. ... ... | Business of the House. |
| C.A. ... ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. ... ... | Calling Attention Statement. |
| Consid. ... ... | Consideration stage of a Bill. This stage includes: (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

### THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (*Chief Minister*)—in charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Local Administration*)—in charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (*Minister for Public Health*)— in charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (*Minister for Labour*)—in charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare*)—in charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (*Minister for Food and Revenue*)— in charge of Food, Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வணிக வரிகள் வருவாய், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள். மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீர்கலாக வேளாண்மை இயக்கத் தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

*10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை, உணவு உற்பத்தி.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.



13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான்—கிராமதான இயக்கங்கள்.

* 1972 மார்ச் 8-ம் தேதி மாண்புமிகு அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் தமது அமைச்சர் பதவியை இராஜிநாமா செய்தார்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி அவர்கள் 1972 மார்ச் 10-ம் தேதியிலிருந்து வேளாண்மைத் துறை அமைச்சராக பொறுப்பேற்றார்.

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Industries*)—in charge of Industries, Textiles, Yarn, Handloom) Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (*Minister for Public Works*)—in charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR (*Minister for Co-operation*)—in charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

* 10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (*Minister Agriculture*)—in charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM (*Minister for Backward Classes*)— in charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O. P. RAMAN (*Minister for Electricity*)—in charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Transport*)—in charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN (*Minister for Religious Endowments*)—in charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

---

* The Hon. Thiru A. P. Dharmalingam resigned his Ministership on 8th March 1972.

The Hon. Thiru Mannai P. Narayanasamy assumed charge of Minister for Agriculture on 10th March 1972.

## தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

**பேரவைத் தலைவர்.**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன், பி.ஏ.**

**பேரவைத் துணைத் தலைவர்.**

**மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்:**

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

திரு. செ. கந்தப்பன்.
திரு. எஸ். முருகையன்.
திரு. பெ. மலைச்சாமி.
திரு. என். டென்னிஸ்.
திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.
திரு. எம். சுரேந்திரன்.

**சட்டப் பேரவைச் செயலாளர் :**

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

**இணைச் செயலாளர்.**

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

**உதவிச் செயலாளர்கள் :**

திரு. த. இராதாகிருஷ்ணன், (எஸ்டேட் அதிகாரி).
திரு. கோ. இராகவன்.
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

**விவாதப் பதிப்பாளர்.**

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி. வி. எம். .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத்தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். ஃபௌலர் திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி (செ.வ.) |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.) |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.) |
| 33 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 38 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குநேரி. |
| 42 கணேசன், திரு. எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. பி. .. .. .. | குத்தாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. .. .. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. .. .. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதலமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை. மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 56 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. .. | முதுகுளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 59 கார்த்திசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 60 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 62 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. .. .. | பேரணாம்பட்டு (செ. வ.) |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். .. | மதுரை (கிழக்கு). |
| 68 குமாரசாமி, திரு. அ. செ. .. .. | திருக்கோயிலூர். |
| 69 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வே. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.) |
| 74 கோபால், திரு. கே. பி. .. .. | கம்பம். |
| 75 கோபால், திரு. பி. .. .. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 76 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை. திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 79 கோவிந்தன், புலவர் கா. .. .. | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 சதாசிவம், திரு. சே. .. .. .. | ஆண்டிமடம். |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 86 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 90 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. | இராமநாதபுரம். |
| 91 சம்பத், திரு. டி. வி. | செய்யனூர்கோயில் |
| 92 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மாதேவி. |
| 96 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ. வ.) |
| 98 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர் |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் செ. வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 102 சின்னசாமி, திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, டாக்டர் வ. | ஏற்காடு (ஆ.வா.). |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ.வ.) |
| 105 சின்ன வெள்ளையன், திரு. சி. | சேர்ந்தமங்கலம் (ஆ.வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல் |
| 107 சுப்ரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம் |
| 108 சுப்பிரமணியம், திரு. எ. | சிங்கநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை |
| 112 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ.வ.). |
| 114 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ.வ.) |
| 116 சுப்பையா, திரு. எ. ஆர். | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 120 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ.வ.). |
| 121 ஜெயராமன், திரு. கி. | சேலம்-1. |
| 122 செல்லதுரை, திரு. வீ. | ஓமலூர் (செ.வ.). |
| 123 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |
| 124 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 126 சோனையா, திரு. த. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ.வ.). |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்திரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 130 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை மேற்கு. |
| *132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 134 தவமணித் தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ரம்பள்ளி. |
| 136 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி, திரு. எ. க. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.). |
| 143 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ.வ.). |
| 146 தோப்பூர் திருவெங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |

* 1972 மார்ச் 8-ம் தேதியில் அமைச்சர் பதவியை இராசிநாமா செய்தா

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 151 நாகராஜன், திரு. க. .. .. .. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம், திரு. பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.). |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. .. .. | ஒட்டன்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. .. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. .. .. .. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. .. | திருவொற்றியூர். |
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்) | திருவல்லிக்கேணி. |
| 158 நைனாமலை, திரு. இரா. .. .. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. .. .. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி ஏ. கோ. .. .. | முசையூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. .. .. .. | சடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். .. .. .. | தாரமங்கலம் |
| 163 பலராமன், திரு. என். எஸ். .. .. | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. .. .. .. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. .. .. | பெருந்துரை. |
| 166 பழனிசாமி, திரு. மு. .. .. .. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. .. .. | பழனி (செ.வ.). |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. .. .. | கோபிசெட்டிப்பாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. .. .. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. .. .. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. .. .. .. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு. .. .. | தேனி. |
| 174 பன்னீர்செல்வம், திரு. எம். .. .. | ஆம்பூர் (செ.வ.). |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. .. .. | செங்கம் (செ.வ.). |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. .. .. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. .. .. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. ஏ. .. .. .. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. .. .. .. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஓ. .. .. | அவிநாசி. |
| 181 பெருமாள், திரு. செ. .. .. .. | காட்டுமன்னார்கோயில். |
| 182 பெருமாள், திரு. ஏ. ஆர். .. .. | காரியப்பட்டி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 183 பொன்னன், திரு. கு. அ. .. .. | கூடலூர் (செ.வ.). |
| 184 பொன்சொக்கலிங்கம், திரு. பி. .. .. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். .. | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. இ. .. .. | டனைமாத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். .. | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். .. .. | சோழவந்தான். |
| 190 மதியழகன், மாண்புமிகு திரு. கே. ஏ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். .. .. | பேரூர் (செ.வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. .. .. | இளையாங்குடி. |
| 193 மலைச்சாமி, திரு. பெ. .. .. .. | மேலூர் வடக்கு. |
| 194 மன்னியப்பன், திரு. சி. .. .. .. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். .. .. | பென்னாகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 198 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை |
| 199 மாரிமுத்து, திரு. மூ. .. .. .. | தலைவாசல் (செ.வ.). |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. .. | வேதாரண்யம் |
| 201 முகமது காதர் முகைதீன், திரு. எஸ். .. | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. .. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. .. .. .. | சங்கரி (செ.வ.). |
| 204 முத்துசாமி, திரு. ப. .. .. .. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. .. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. .. .. .. | வானூர் (செ.வ.). |
| 207 முத்தையா, திரு. கே. கே. .. .. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 209 முருகையன், திரு. எஸ். .. .. | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. .. .. .. | நிலக்கோட்டை (செ.வ). |
| 211 முனு ஆதி, திரு. மு. .. .. .. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. .. .. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். .. | துறைமுகம் (சென்னை நகரம்). |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 214 மோசஸ், திரு. ம. .. .. .. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. .. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 216 ராமசாமி, திரு. இ. .. .. .. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. .. .. .. | திருப்பத்தூர். |
| 218 ராமராசன், திரு. வ. க. .. .. .. | பவானிசாகர் (செ.வ.). |
| 219 ராஜா, திரு. எ. எம். .. .. .. | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. .. .. .. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 லத்தீப், திரு. எம். ஏ. .. .. .. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. எ. .. .. .. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. .. .. .. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. .. | செங்கல்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. .. .. .. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. .. .. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. .. .. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை. (சென்னை மாநகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. .. .. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. .. .. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. .. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி .. | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 235 ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்**

தொடர் எண்ணும், பெயரும்.

| | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன் .. | அமைச்சர். |
| 2 திரு. எஸ். கோவிந்த சாமிநாதன் .. | தலைமை வழக்கறிஞர். |

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

**புதன்கிழமை, 1972 மார்ச் 1.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. இரங்கல் தீர்மானம்.

### சட்டப் பேரவையின் முன்னாள் தலைவர் திரு. என். கோபால மேனன் அவர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1952-ம் ஆண்டிலிருந்து 1956-ம் ஆண்டு வரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராகவும் 1955-ம் ஆண்டு முதல் 1956-ம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப் பேரவையின் தலைவராகவும் இருந்த திரு. என். கோபால மேனன் அவர்கள் 9—2—1972-ம் நாளன்று மறைந்த செய்தியை இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் வேறு பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருந்தாலும், சென்னை நகர மக்களுடன் நீண்ட காலமாகத் தொடர்புகொண்டு, சென்னையின் துணை மேயராகவும் இருந்தார்கள். மிகுந்த இனிய பண்பும் அன்பும் நிறைந்தவராக விளங்கிய தன்மையையும், அவர் காலத்தில் சட்டப் பேரவையை நடத்திச் சென்ற பாங்கினையும் நல்ல பெற்றியினையும் எல்லோரும் ராட்டி வந்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ஒரு பெரியவரின் றவுகுறித்து இந்தப் பேரவையின் எல்லாத் தரப்பினருடைய ர்பிலும் என்னுடைய சார்பிலும் இந்த உணர்வுகளை மறைந்த ந. கோபால மேனன் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் வினருக்கும் தெரிவிக்கின்றேன்.

"பொன்னானி பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் டு 1952-ம் ஆண்டிலிருந்து 1956-ம் ஆண்டுவரை அன்றைய நங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராகவும், 55-லிருந்து 1956-ம் ஆண்டுவரை சட்டப் பேரவைத் தலைவராகவும்

இருந்த திரு. என். கோபால மேனன் அவர்கள் 9—2—1972-ம் நாளன்று மறைந்ததைக்குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில், அவையினர் எல்லோரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அவையினர் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்க, தீர்மானம் நிறைவேறியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மறைந்த பெரியவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் இந்த மாமன்றம் முற்பகல் 10-15 வரை ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் முற்பகல் 10-15 மணிக்குக் கூடியது.

## 2. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### தமிழ் ஆட்சி மொழி.

*261 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தலைமைச் செயலகம், மாவட்ட, வட்ட அலுவலகங்கள் முழுமையும் தமிழை ஆட்சி மொழியாக அமைய காலவரம்பு நிர்ணயிக்கும் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** காலவரம்பு நிர்ணயிக்கப்படவில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** சட்டப் பேரவைத் தலைவரவர்களே. மாண்புமிகு அமைச்சரவர்கள் காலவரம்பு நிர்ணயிக்கப்படவில்லை என்று பதில் சொன்னார்கள். தமிழ் அரியாசனத்தில் ஏற வேண்டுமென்ற கொள்கையுடைய இந்தக் காலத்திலே தமிழ் தலைமைச் செயலகம், மாவட்ட, வட்ட அலுவலகங்களில் இடம் பெறுமல் போனால் வேறு நல்ல சூழ்நிலை உருவாகாது என்ற



எண்ணம் தமிழ் நெஞ்சங்களில் இருப்பதால் இதை இன்னும் மேம்படுத்த அரசுத்துறை ஊழியர்களுக்கு வேலை உயர்வு, ஊதிய ஆய்வு கருதும்போது தமிழை அதிகமாக எடுத்தாலும் அதிகாரிகளுக்கு உரிய வாய்ப்பு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, காலவரம்பு நிர்ணயிக்கப்படவில்லையே தவிர விரைவுபடுத்துகின்ற முயற்சிகளெல்லாம் அரசின் சார்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 1957-ஆம் ஆண்டு தொடங்கி 1963-ஆம் ஆண்டு முடிய மாவட்டநிலை அலுவலகங்களிலும் அதன் சார்பு அலுவலகங்களிலும் முழுத் தமிழ்த் திட்டம் செயல்படுத்தப்பட்டது. துறைத் தலைமை அலுவலகங்கள் அதன் சார்நிலை அலுவலகங்களிலும் தமிழை நடைமுறைப்படுத்தும் திட்டம் நான்கு நிலைகளில் வகுப்பட்டது. முதல் நிலையில் தமிழில் வரும் கடிதங்களுக்குத் தமிழில் பதில் அனுப்பப்படும். இரண்டாவது நிலையில் தத்தம் சார்நிலை அலுவலகங்களுடனும், சார்நிலை அலுவலகங்கள் ஒன்றுக்கொன்றுடனும் தமிழிலேயே தொடர்பு கொள்ளும். மூன்றாவது நிலையில் துறைத் தலைமை அலுவலகங்கள் ஒன்றுக்கொன்று தமிழிலேயே தொடர்புகொள்ளும். நான்காவது கட்டத்தில் துறைத் தலைமை அலுவலகங்கள் செயலகத் துறைகளுடன் தமிழிலேயே தொடர்புகொள்ளும். இவற்றுள் முதல் இரண்டு நிலைகள் முறையே 1963, 1965-இல் செயற்படுத்தப்பட்டன. 27—9—1969 முதல் இவ்வலுவலகங்களில் மூன்றாவது நிலையும் செயற்படுத்தப்பட்டது. நான்காவது நிலையைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

தலைமைச் செயலகத்திலுள்ள தமிழ் வளர்ச்சித் துறை, மொழி பெயர்ப்புத் துறை மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்கம் ஆகியவற்றில் முழுத் தமிழ்த் திட்டம் செயற்படுத்தப்பட்டது. 11—9—1967-இல் செய்தி விளம்பரத் துறையிலும் முழுத் தமிழ்த் திட்டம் செயற்படுத்தப்பட்டது. மற்ற துறைகளிலும் அதற்கான பெரு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

சிறந்த வரைவுகள் குறிப்புகள் எழுதியவர்களைப் பெரும்பான்மையாக தமிழில் அலுவல் பணியாற்றுவோரை ஊக்குவிக்கும் முறையில் மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களுக்கு 500 ரூபாய் ரொக்கப் பரிசு கொடுக்கப்படுகின்றது.

தட்டச்சர்கள் தமிழ்த் தட்டச்சிலும் தகுதி பெற்றிருக்கும் படியாகச் செய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஆகவே, இப்படி விரைவு படுத்தும் திட்டங்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தமிழை நீதிமன்றங்களிலே ஆட்சிமொழி ஆக்குவதற்கு அரசாங்கம் சிறப்புத் திட்டம் வைத்திருக்கிறதா ? இதை உயர்நீதி மன்றத்தில் உடனடியாக அமல் நடத்த அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கீழ்மட்டங்களில் இருக்கும் நீதிமன்றங்களில் தமிழை ஆட்சி மொழியாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சட்டத்துறை மொழிபெயர்ப்புக்கென்று தனியாக ஒரு குழு அமைக்கப் பட்டு அந்தக் குழுவினர் மொழிபெயர்ப்புப் பணிகளிலே ஈடுபட்டி ருக்கிறார்கள். கீழ் மட்டங்களிலே தமிழ் வந்த பிறகு உயர்நீதி மன்ற அளவிலும் தமிழைக் கொண்டுவர வேண்டுமென்ற ஆவல் இருக்கிறது. அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யவேண்டு மென்ற கருத்தையும் இந்த அரசு கொண்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** நீதிமன்றங்களிலே, குறைந்த அளவு மாவட்ட மட்டங்களிலாவது கோர்ட்டுகளில் ஆங்கிலத்தில் தீர்ப்புகள் வரும்போது அதே அளவு தமிழிலும் தீர்ப்புகள் உடனடி யாக வர அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் :** நான் பொது தான் சொல்ல முடியும். இதைப்பற்றி விரிவாக மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள்தான் சொல்லவேண்டும். கீழ்மட்டங்களில் தமிழில் கொண்டுவரவேண்டுமென்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. விவரம் தேவையென்றால் தனிக் கேள்வி போட்டால் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப் படுகின்ற மசோதாக்கள் சில சமயங்களில் தமிழில் கொடுக்கப் படுவது உண்டு. மசோதா அறிமுகப்படுத்திய பிறகு தமிழ்





மொழிபெயர்ப்பு வருவது உண்டு. இப்போது தமிழ் மொழிப் பெயர்ப்பு ஒன்றுகூட வருவது இல்லை. இனிமேலாவது வருகின்ற மசோதாக்களுக்குத் தமிழ் மொழிபெயர்ப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் :** இங்கே அறிமுகப் படுத்தப்படுகின்ற மசோதாக்கள், தீர்மானங்கள், மற்றவைகள் எல்லாம் ஆங்கிலத்தோடு தமிழிலும் கொடுக்கப்பட வேண்டுமென்ற முறை கையாளப்பட்டு வருகிறது. ஒன்றிரண்டு தவிர்க்கப் பட்டிருக்குமானால் அவற்றையும் தமிழில் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. கா. காளிமுத்து :** பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்களின் நடவடிக்கைகளை, நிகழ்ச்சிக் குறிப்புகளைத் தமிழில் கொண்டுவர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் :** வேறுபல துறைகளில் தமிழ்த் திட்டத்தைக் கொண்டுவரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சட்டம், நிதி ஆகிய துறைகளில் தமிழ் ஆட்சி மொழித் திட்டம் இன்னும் நடைமுறைப்படுத்தப் படவில்லை. அந்தத் துறைகளில் நடைமுறைகளைத் தமிழில் ஆக்காமல் பொதுக் கணக்குக் குழு . போன்ற குழுக்களின் நிகழ்ச்சிக் குறிப்புகளைத் தமிழில் கொண்டுவருவது இயலாது. அந்தத் துறைகளில் தமிழ் ஆட்சி மொழியாகக் கொண்டு வந்த பிறகு இந்தக் குழுக்களின் நடவடிக்கைகளையும், நிகழ்ச்சிக் குறிப்புகளையும் தமிழில் கொண்டு வருவது பற்றி முடிவு செய்யலாம்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister for Education whether Telugu, Kannada and Malayalam will be the official language where there are minorities living in Tamil Nadu in Hosur, Krishnagiri, Ootacamund and other places ? If so, have any specific instructions been given to all the concerned Officers to implement Telugu, Kannada and Malayalam languages in all the offices in district and taluk headquarters?

**மாண்புமிகு டாக்டர் .இரா. நெடுஞ்செழியன் :** தமிழக அரசைப் பொறுத்தவரை தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளை

[1972 மார்ச் 1

மட்டும் ஆட்சி மொழிகளாகக் கொண்டு செயலாற்றிக் கொண்டு வருகிறது. சிறுபான்மையோர் இருக்கும் பகுதிகளைப் பொறுத்த வரை அந்தந்தப் பகுதி மக்கள் தெரிவிக்க விரும்புகிற கருத்துக்களை அந்தந்தப் பகுதி மக்கள் விரும்புகிற மொழியில் தரலாம். அந்த ஏற்பாடு மாநில அளவில் இல்லை, அந்தந்தப் பகுதிகளைப் பொறுத்து வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி** : தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குக் கால வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? தாமதத்திற்கு என்ன காரணம்? தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள் அலுவலகங்களுக்குத் தேவையான அளவுக்கு ஆட்கள் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுவது உண்மையா? அதைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்** : இந்த முயற்சி ஏதேனும் ஒருவர் எடுக்கும் முயற்சியாக இருக்குமானால், ஒரு குழுவினரின் முயற்சியாக மட்டும் இருக்குமானால் அதற்குக் கால வரம்பு நிர்ணயிக்க முடியும். தமிழ் ஆட்சிமொழி என்பது தலைமைச் செயலகம் முதல் கடைசிக் கட்டம் வரை, பொது மக்கள் எல்லோருடைய ஒத்துழைப்புடனும் செய்ய வேண்டிய ஒன்று. இதற்கு காலவரம்பு என்று நான் குறிப்பிட முடியாது. அதற்கான முயற்சிகளை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழ் தட்டச்சர்களைப் பெருக்குகின்ற வகையில் தக்க பயிற்சிகளைக் கொடுக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : வட்ட அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள், தலைமைச் செயலகம் ஆகிய இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் கொடுக்கும் மனுக்களுக்கு இன்னும் கூட ஆங்கிலத்தில் பதில்கள் வந்து கொண்டிருக்கின்றன. இனிமேலாவது அந்தக் கடிதங்களைத் தமிழிலே அனுப்ப அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்** : கோட்ட அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்களில் இருந்து கடிதங்கள் எழுதும் போது தமிழில் எழுத வேண்டுமென்ற முறை இருந்து வருகிறது.



1972 மார்ச் 1]

அதற்கான பயிற்சி சரியாக இல்லாத காரணத்தால் சில சமயங்களில் பழக்கத்தையொட்டி ஆங்கிலத்தில் பதில் தரக்கூடும். அதற்காக மேற்பார்வையாளர்கள் என்று நியமிக்கப்பட்டு அவர்கள் ஒவ்வொரு அலுவலகங்களிலும் சென்று மேற்பார்வையிடவும், பயிற்சியளிக்கவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. ஒரே ஒரு மேற்பார்வையாளர் இருந்த இடத்தில் இப்போது மாவட்டத்திற்கு ஒரு மேற்பார்வையாளர் விதம் நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தக் குறைபாடுகள் இனி நீங்கிவிடும் என்று கருதுகிறேன்.

## கலைக்களஞ்சியம்.

* 262 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் வளர்ச்சிக் கழகம் கலைக்களஞ்சியம் தயாரித்ததற்காக அரசு எவ்வளவு நிதி உதவி வழங்கியது?

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்** : தமிழ் வளர்ச்சிக் கழகத்துக்குக் கலைக் களஞ்சியம் வெளியிடுவதற்குத் தமிழக அரசு ரூ. 4,31,552 மானியம் வழங்கியுள்ளது.

**திரு. என். கிட்டப்பா** : தமிழ்க் கலைக் களஞ்சியம் தொகுக்கும் பணிக்கு மத்திய அரசாங்கம் மானியம் வழங்கியுள்ளதா? இல்லையெனில் இந்திக்கு கொடுப்பதுபோல் தமிழ்க் கலைக் களஞ்சியப் பணிக்கும் மானியம் வழங்குமாறு மத்திய அரசாங்கத்தை நம் அரசாங்கம் வற்புறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்** : இதற்காக இது வரை ரூ. 49,31,552.12 காசு செலவழிக்கப்பட்டிருக்கின்றன. இது வரை ஒன்பது தொகுப்புகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அந்த தொகுப்புகளில் புதிய சேர்க்கைகளைச் சேர்ப்பதற்கு இணைப்பு நூல் ஒன்றை வெளியிடும் முறையில் கொண்டு வந்து அதற்கு ஆகும் செலவில் பாதியை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். முதல் தொகுதி இணைப்பு நூல் வரும் போது பாதி மானியத்தை தர மத்திய அரசு ஒப்புக் கொண்டு அந்த வகையில் 46,500 ரூபாய் மாநில அரசும், 46,500 ரூபாய்

மத்திய அரசும் செலவு செய்து முதல் இணைப்பு நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. குழந்தைகள் களஞ்சியம் என்று இரண்டு லட்ச ரூபாய் செலவில் ஐந்து தொகுப்புகள் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு மூன்று தொகுப்புகள் வெளி வந்திருக்கின்றன. இன்னும் இரு தொகுப்புகள் வெளி வர இருக்கின்றன. பாடத் திட்ட வளர்ச்சியைப் பொறுத்தவரை மத்திய அரசு மொத்தமாக ஒதுக்கியிருக்கிற ஒரு கோடி ரூபாயிலிருந்து கொடுக்கிற பணத்தை வைத்துக் கொண்டு 25 சதவிகிதம் மாநில அரசு செலவழித்து புத்தகங்களைக் கொண்டு வருகிறது. மொழியைப் பொறுத்த வரை தமிழ் மொழி வளர்ச்சிக்கு என்று தனியாகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்கான சரியான விடை கிடைக்கவில்லை. வற்புறுத்திக் கொண்டு வருகிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது 9 தொகுப்புகள் வெளிவந்திருக்கின்றன என்று சொன்னார்கள். இந்த ஒன்பது தொகுப்புகளோடு இது நின்று விடுமா அல்லது மேலும் வெளியிடுவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இந்தப் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது குழந்தைகள்கலைக் களஞ்சியம் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு மூன்று தொகுப்புகள் வந்திருக்கின்றன. மேலும் இரண்டுதொகுப்புகள் கொண்டுவரும் நிலைமையில் இருக்கிறது. வெளியிட்டப்பட்ட தொகுப்புகள் 20 ஆண்டு காலத்திற்கு முன்னால் இருந்து தயாரிக்கப்பட்ட நிலையில் அதற்குப் பிறகு ஏற்பட்ட புதிய விலைவுகள். கருத்துக்களை எல்லாம் சேர்க்கும் அளவுக்கு இணைப்பு நூல்கள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவை எல்லாம் முடியும் வரை அந்தக் குழு பணியாற்றும்.

**திரு. சொ. காவேரிமணியம் :** இம்மாதிரி கலைக்களஞ்சியம் வெளியிடுவதற்கு ஏதாவது குழு அமைக்கப்பட்டிருக்கிறதா ? அக்குழு எவ்வளவு காலமாக பணிபுரிந்து வருகிறது ? இது தவிர தனியார் துறையில் நூல் பதிப்புக் கழகம் மூலம் ஏதாவது கலைக் களஞ்சியம் தமிழகத்தில் வெளியிடப்பட்டிருக்கிறதா ?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்தக் குழு 1948-ம் ஆண்டு அமைக்கப்பட்டு அதன் கௌரவத் தலைவராக திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் இருந்து வருகிறார்கள். இதன் முழு நேர உறுப்பினராக திரு. பெரியசாமி தூரன் அவர்கள் இருந்து தொகுப்புகளைக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். இதில் தகுதி படைத்த வல்லுநர்கள் எல்லாம் நியமிக்கப்பட்டு அந்தக் குழுவினர் ஆராய்ந்து வருகிறார்கள். இத்தொகுப்பினை வெளியிட வெளியிடங்களில் உள்ள வல்லுநர்கள் மற்றவர்களோடு தொடர்பு கொண்டு தொகுப்பு வேலைகளைக் கவனித்துக்கொண்டு வருகிறார்கள். இந்தக் குழுவினர் தங்கள் பணிகளை ஆற்றிக் கொண்டு வருகிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சில இணைப்புகளுக்கு மட்டும் ரூ. 46,500 மத்திய அரசு கொடுப்பதாகச் சொன்னார்கள். இதுவரை ரூ. 4,30,000 வரையில் செலவழித்திருக்கிறார்கள். இந்த என்சைக்ளோபீடியா கொண்டுவருவது நாட்டிக்கு உதவியாக இருக்கின்ற காரணத்தினால் எந்த அளவிற்கு தமிழக அரசாங்கம் செலவழிக்கிறார்களோ அந்த அளவிற்கு மத்திய அரசாங்கமும் கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் கேட்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கலைக்களஞ்சியத்தை ஆரம்பித்தபோது அதற்காக ஒரு குழு அமைத்து பொது மக்களிடம் பாதிப்பணம் திரட்டுவது, அரசாங்கம் பாதி தருவது என்று இருந்தது. பிறகு பொது மக்கள் மூன்றில் ஒரு பங்கு தருவது, அரசாங்கம் மூன்றில் இரண்டு பங்கு தருவது என்றாகி, பிறகு பொது மக்கள் ஒரு பங்கு, அரசாங்கம் மூன்று பங்கு என்றாகி. பிறகு பொது மக்களிடமிருந்து வராத காரணத்தினால் அரசாங்கமே பொறுப்பேற்றுக்கொள்ளும் படியான நிலைமை ஏற்பட்டது. மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். மத்திய அரசாங்கத்திலிருந்து இவ்வளவு காலம் கழித்து இடையில் இணைப்பு நூல் வரும்போது பாதி மானியமாகக் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். இப்படி பொதுவாக வெளியிடப்படுகிற பெரும்பணிகளுக்கு மத்திய அரசின் உதவி பாதி அளவிலாவது இருக்க வேண்டுமென்ற கருத்தை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

[1972 மார்ச் 1

**திரு. துரைமுருகன் :** இவ்வளவு முயற்சி எடுத்து வெளியிடுகிற கலைக்களஞ்சியத்தில் சரியான கருத்துக்கள் தரப்படவில்லை என்று பரவலாக பேசப்படுகிறது. உதாரணமாக தமிழைப் பற்றிய சரியான தகவல் தரப்படவில்லை. தேவநேய பாவாணர் போன்றவர்கள் கலைக்களஞ்சிய சீர்கேடு என்று ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் களைய அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்தப் பணியை ஆற்றுவதில் கலைக்களஞ்சியத்தில் தவறான கருத்துக்கள் இருந்தால் அவற்றை அக்குழுவின் தலைவருக்கு எழுதியனுப்பினால் அவர்கள் அவற்றைத் திருத்திக்கொள்வார்கள். ஆனால் சிலபல தவறுகள் பற்றி விவாதங்கள் வந்தன. அவை லெக்ஸிகனைப் பொறுத்ததே தவிர கலைக்களஞ்சியத்தைப் பொறுத்ததல்ல. லெக்ஸிகன் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டது. சிலபல கருத்துக்கள் தவறானவை என்று பத்திரிகைகளில் எல்லாம் விவாதங்கள் நடைபெற்றன. கலைக்களஞ்சியத்தைப் பொறுத்தவரையில், ஒரு பெரிய கலைக்களஞ்சியத்தை உருவாக்கும்போது கருத்துக்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பிழைகள் வரக்கூடும். அவற்றை சுட்டிக்காண்பித்தால் திருத்திக்கொள்ள அவர்கள் ஆயத்தமாக இருப்பார்கள். அரசாங்கம் தலையிட வேண்டிய அவசியம் இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி ஏதாவது கண்டுபிடித்திருந்தால் அவற்றை அவர்களுக்கு எழுதியனுப்பினால் தக்க பரிகாரம் காணலாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** குழந்தைகளுக்கு என்று ஏற்படுத்தக்கூடிய கலைக்களஞ்சியத்தில், அதற்கு மட்டும் தனிப்பட்ட முறையில், குழந்தைகளுக்கான ப்ரோக்ராமுக்காக, மத்திய அரசிலிருந்து பெறுகிற பணத்தை மானியமாக மத்திய அரசு கொடுப்பதற்கு மாநில அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இந்தச் சிறுவர் கலைக்களஞ்சியத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய்க்கு திட்டம் போட்டு இதுவரையில் ரூ. 1,45,000 கொடுத்திருக்கிறோம். மேற்கொண்டு ரூ. 55,000 இரண்டாம் தொகுதி வெளியிட கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு மத்திய அரசு உதவி வரவில்லை. ஆனால் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் தருகிற நிலைமை ஏற்படுமானால் இதை இன்னும் விரைவுபடுத்த வாய்ப்பாக இருக்கும்.



1972 மார்ச் 1]

**திரு. ஜே. எஸ். இராசு:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கலைக்களஞ்சிய வெளியீடுகளில் தேவையில்லாத அளவிற்கும், அவசியமற்ற அளவிற்கும் பிற மொழிச் சொற்கள் குறிப்பாக வடமொழிச் சொற்கள் ஊடுருவிக் காணப்படுகின்றன. இவைகளைக் களைவதற்கு அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இக்கருத்தை அக்குழுத் தலைவருக்கு அனுப்பி வைக்கலாம். யார் யார் இடமோ ஒப்படைக்கிறார்கள். அவர்களின் மொழிப்பற்று, மொழி அறிவு வேறு. தவறுகள் வரக்கூடும், அவர்கள் தனிப்பட்ட துறைகளில் ஆற்றல் அறிவு படைத்தவர்கள். அவர்களிடம் முழு தமிழ் அறிவை எதிர்பார்க்க முடியாது. அவர்கள் தங்களுக்குத் தெரிந்த தமிழ் அறிவைக் கொண்டு எழுதியனுப்பினால் இங்குள்ளவர்கள் ஓரளவிற்கு திருத்தி வெளியிடுகிறார்கள். திருத்தக்கூடிய, செம்மைப்படுத்தக்கூடிய வாய்ப்புக்கூறுகள் இருக்குமானால் அடுத்த பதிப்பில் திருத்திக்கொள்ள ஆயத்தமாக இருப்பதாக முன்னுரையிலேயே தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் எழுதியனுப்பலாம்.

**திரு. கோ. இளங்கோவன் :** இக்குழு 1948-ல் அமைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அந்தக் குழுவின் பதவிக் காலத்திற்கு ஏதாவது வரையறை உண்டா? காலத்திற்கேற்றாற்போல் அந்தக் குழு மாற்றியமைக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்தப் பணிகள் முடிந்துவிட்டால் அக்குழுவின் பணிகளும் முடிந்துவிடும். சிறுவர் கலைக்களஞ்சியத்தின் பணியை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது முடிந்த பின்பு நூல் வெளியிட்ட பிறகு அக்குழுவிற்கு தேவை இல்லை என்றால் அப்போது அக்குழு கலைக்கப்படலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சிறுவர்களுக்காகத் தயாரிக்கப்படுகிற கலைக்களஞ்சியத்தில் சிறுவர்கள் மத்தியில் நல்ல அனுபவம் படைத்த சிலரையும் சேர்ப்பதற்கு ஏதாவது திட்டம் உண்டா அரசாங்கத்தினிடம்? (சிரிப்பு) (பதில் இல்லை.)

, **மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. நாகராஜன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஸார் . . . .

கேட்கப்படுகிற கேள்விகளுக்கெல்லாம் அமைச்சர்கள் பதில் கூறவேண்டுமென்று நம் விதிமுறைகளில் இல்லை.

He can decline to answer. எப்படி உறுப்பினர்களுக்கு கேள்விகள் கேட்பதற்கு உரிமை இருக்கிறதோ அதேபோல் அமைச்சர்களுக்கும் உரிமை இருக்கிறது. எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கூறவேண்டுமென்று இல்லை. அவர்கள் இஷ்டப்பட்டால் பதில் சொல்லலாம். விதி முறைகளைச் சொல்லிவிட்டேன். வினாவின் டைம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் இஷ்டப்பட்டால் சொல்லலாம். புதிதாக ஒரு கேள்வி கேட்க நான் அனுமதி கொடுத்தால் அப்போது வேண்டுமானால் நீங்கள் கேட்டுப் பார்க்கலாம்.

**திரு. க. நாகராஜன்:** இந்தக் கலைக்களஞ்சியத் தொகுப்புகளை வெளிக்கொண்டுவர யுனெஸ்கோ போன்ற அமைப்புகளிடமிருந்து உதவி நாடப்பட்டதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய குறிப்பு இல்லை.

**திரு. செ. கந்தப்பன்:** வளர்ந்துவரும் அறிவியல் வளர்ச்சியின் முன்னேற்றம் காரணமாக பெரும்பாலும் வளர்ந்த மொழிகளைக் கொண்ட நாடுகளிலும்கூட கலைக்களஞ்சியப் பணி என்பது ஒரு நிரந்தரப் பணியாகவே இருந்து வருகிறது. அதோடு தமிழகத்தோடு சேர்த்து வேறுபல நாட்டின் பகுதிகளிலும் இது பேசப்படுகிற மொழியாக அல்லது அதிகமாகப் புழங்கக்கூடிய மொழியாக இருக்கிற காரணத்தினால் தமிழகத்தில் அமைய இருக்கிற உலக ஆய்வு நிறுவனம் மூலமாக இதை ஒரு நிரந்தர நிறுவனமாக ஆக்கித் தொடர்ந்து அவ்வப்போது வெளியாகிற நிலைகளையெல்லாம் உள்ளடக்கிய ஒரு கலைக்களஞ்சியம் வரக்கூடிய ஒரு ஏற்பாட்டினை அரசு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அது விரிவான தொரு திட்டம். இப்போது இத்திட்டத்தை முடித்துவிட்டால் அதற்குப் பிறகு நிதிவசதி அடிப்படை, மற்றவற்றை வைத்து இதன் வளர்ச்சிக்கான முறைகளை வகுக்கும்போது அவைகள் யோசிக்கப்படும்.





**திரு. எம். சுரேந்திரன்:** இந்தக் கலைக்களஞ்சியத் தொகுப்புகள் பல்லாண்டுகளாக பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவிட்டு செய்யப்படுகிற ஒரு மகத்தான பணியாகும். அந்தப் பணியை தொடர்ந்து செய்துவருகிறார்கள். அவ்வப்போது தொகுக்கப்படுகிற பிரதிகளை இலவசமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தருவதற்கு ஆவன செய்வீர்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இந்தப் புத்தகத்தின் விலை ஒவ்வொன்றும் [illegible] மேலாகிறது. ஆகவே இலவசமாகத் தருவது என்று ஆரம்பித்தால் கடினமாகிவிடலாம். அதைப் போடுகிற எண்ணிக்கை ஆயிரத்திற்கு குறைவாக இருப்பதால் வேண்டியவர்கள் எடுத்துப் பார்த்து அதைப் பயன்படுத்திக்கொள்ளலாமே தவிர உறுப்பினர்கள் படித்துப் பயன்பெறுவதற்கு வசதியாக நூலகத்தில் வைத்திருக்கிறோம்—ஒவ்வொருவருக்கும் இலவசமாகத் தருவது என்று சொன்னால் அரசாங்கப் பணம் இன்னும் பல லட்சம் ரூபாய் இதற்கு செலவு செய்ய வேண்டிவரும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I want to know from the Government whether they intend to associate some child-psychologists in the preparation of the encyclopaedia and if so, what is the method adopted in that regard?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** யார் யார் என்ற விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. ஆனால் குழந்தைகள் நூல் எழுதுவதில் அக்கறை கொண்டவர்கள், அதில் அனுபவம் பெற்றவர்கள், அதைப்பற்றித் தெரிந்தவர்கள் ஆகியவர்களை வைத்துத்தான் கலைக்களஞ்சியம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று, எந்த அளவிற்கு எவ்வளவு செய்திகள் தரலாம், எவ்வளவு படங்கள் போடலாம் போன்ற நோக்கங்களை எல்லாம் அறிந்துதான் அந்தக் கலைக்களஞ்சியம் உருவாக்கப்படுகிறது. அதில் யார் யார் இருக்கிறார்கள் என்ற விவரக்குறிப்பு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் தருகிறேன்.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** பிற நாட்டு மொழிகளில் தயாரிக்கப்பட்ட கலைக்களஞ்சியத் தொகுப்புகள் நம் நாட்டு நூலகங்களில் இடம் பெறுவதைப் போல் நமது கலைக்களஞ்சியம் பிற நாட்டு நூலகங்களில் இடம் பெறுகின்றனவா? அப்படியானால்

எந்தெந்த நாடுகளில் உள்ள நூலகங்களில் அது இடம் பெற்றிருக்கிறது என்று தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பிற பல்கலைக் கழகங்கள், பிற நாடுகளிலிருந்து இந்தக் கலைக்களஞ்சியத்தைப் பெற விரும்புகிறபோது அவைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. பல பல்கலைக்கழகங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அமெரிக்கா போன்ற இடங்களில், அமெரிக்காவில் பி.எல். 480 திட்டத்தின்கீழ் வந்திருக்கிற நிதியில் இருந்து புத்தகங்கள் வாங்கி அனுப்புவது என்ற முயற்சியில் கிட்டத்தட்ட ஐந்தாறு பல்கலைக் கழகங்களுக்கு இங்கிருந்து தமிழ் நூல்கள் மட்டும் பத்து, பதினைந்தாயிரம் நூல்கள் போய் இருக்கின்றன. அதில் ஐந்தாறு இந்த கலைக்களஞ்சிய நூல்களும் கூட சேர்ந்து போயிருக்கின்றன. குறிப்பாக, வாஷிங்டன் லைப்ரரி, சிக்காகோ பல்கலைக்கழக லைப்ரரி, பெர்க்லி பல்கலைக்கழக லைப்ரரி போன்ற ஐந்தாறுக்கு இவர்கள் வாங்கி அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதில் கலைக்களஞ்சியமும் சேர்ந்திருக்கிறது.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, கலைக்களஞ்சியத்தின் முதல் தொகுப்பில் 'அ' வரிசையில் அறிஞர் அண்ணாவைப் பற்றிய குறிப்பு இல்லை என்பதை அரசு அறியுமா? அந்தக் குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, முதலிலே சொல்லியபடி அந்தக் குழுவின் தலைவருக்கு இந்தக் குறையைப் பற்றி எழுதியனுப்பினால், அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

## சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிலையம்

* 263 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் அமையவிருக்கும் உலகத் தமிழாராய்ச்சி நிலையத்திற்கு திருவள்ளுவரின் பெயர் சூட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, இந்த ஆராய்ச்சி நிலையத்தின் தலைமைப் பொறுப்பை தமிழ் நாட்டைச் சேர்ந்த



தமிழ் அறிஞர் ஒருவருக்கு வழங்கப்படவேண்டுமென்று அரசு வற்புறுத்துமா? மேலும், அங்கேயுள்ள தமிழ் அறிஞர்கள், டாக்டர் கலைஞர் அவர்கள் அண்மையில் குறிப்பிட்டதுபோல், ஆராய்ந்தவற்றையே மேலும், மேலும் ஆராய்ந்து கொண்டிராமல், புதிய சிந்தனைகளை உணர்த்தும் வகையில் ஆராய்ச்சி நடத்தும்படி அந்த நிலையத்திற்கு யோசனை கூற அரசு முற்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இண்டர்நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டமில் ஸ்டடீஸ், உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளில் கற்பிக்கும் லிங்குவிஸ்டிக்ஸ் அனைத்தையும் இணைக்கும் நிலையமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், உலகத்திலுள்ள மொழியியல் ஆராய்ச்சியாளர்களும், உலகத்திலுள்ள மொழிகளோடு தொடர்புடையவர்கள் பலரையும் வைத்துக்கொண்டு மொழிகளின் மேம்பாட்டை ஆராய்ச்சி செய்வதற்கான அடிப்படையில் அது அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தமிழ் மொழி மேலும் வளம் பெறுவதற்கும், வளப்படுத்துவதற்கும், தமிழ் மொழியின் சிறப்பை உலகுக்கு பயன்படுத்துகிற வகையில் அமைப்பதற்கும் ஆராய்ச்சிகள் நடத்த, பல்வேறு வகைப்பட்ட பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த வேலை தொடங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து ஒரு துறைகளில் அதனுடைய பணிகள் தொடங்கும்.

தற்காலிகமாக, மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் அதனுடைய கௌரவ இயக்குநராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பொறுப்பில் வேறு பல தமிழ்மொழி ஆராய்ச்சியாளர்களும், தமிழ் நன்கு அறிந்தவர்களும், உலகப்புகழ் பெற்றவர்களும் இடம்பெறுவார்கள். அவர்களுடைய தலைமையின் கீழ் அந்த நிலையம் சிறப்பாக பணியாற்றும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

## மாட்டின வளர்ச்சி

* 264 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் மாட்டின வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் ஆஸ்திரேலிய ஜெர்சி காளைகளை மற்ற மாவட்டங்களுக்கும்

இறக்குமதி செய்து வழங்க திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவரவர்களே, அத்தகைய திட்டமொன்று பரிசிலனையில் உள்ளது.

**திரு. கா. வேழவேந்தன்** : தலைவரவர்களே, ஜெர்சி இனக் காளைகளை. செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்வது மற்ற மாநிலங்களில் நல்ல பலன் கிட்டியிருப்பதால் நம்முடைய மாநிலத்திலும் எந்தெந்த இடங்களில் இவ்வித செயற்கை கருத்தரிக்கச் செய்யும் முறை அமுல்படுத்தப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் நல்ல பால் வளம் பெருகியிருக்கிற சூழ்நிலையைப் பார்க்கிறபோது, பால் புரட்சி உருவாக்கவேண்டுமென்று சொல்கிற அமைச்சரவர்கள் எல்லா மாவட்டங்களிலும் இந்த செயற்கை கருத்தரிக்கும் முறையை அமுல்படுத்த முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதியிலும், ஏற்கெனவே இந்த செயற்கை முறை மூலமாக கரு ஏற்படுத்துவதற்கு இத்தகைய காளைகள் பயன்படுத்தப்படுகின்றன. அதே முறையில் எல்லாப் பகுதிகளிலும் விரிவாக இந்த ஜெர்சி இனக் காளைகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு 200-250 காளைகளை ரூ. 60 லட்சம் செலவில் வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்படுவதற்கு மத்திய அரசாங்கத்திடம் அனுமதி கேட்க ஆலோசிக்கப் பட்டு வருகிறது. அனுமதி கிடைத்து, அவைகள் வந்து சேர்ந்தவுடன், அவை பல்வேறு மாவட்டங்களுக்கும் பரவலாக விநியோகிக்கப் படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : தலைவரவர்களே, இந்த ப்ரீசியன் புல்ஸ் வெளிநாட்டிலிருந்து வரவழைப்பதற்கு அரசிடம் திட்டமிருக்கிறதா? அதை உடனடியாக வரவழைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: தலைவரவர்களே, நம்முடைய நாட்டிற்கு அதிகமாக பொருந்தி வருவது ஜெர்சி தான். அதற்கு அடுத்த நிலையில் உள்ளது. இந்த ப்ரீசியன் புல்ஸ். அந்தக் காளைகள் 27 தேவை என்று மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அதை வரவழைப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணியை ஏற்றுக்கொண்டு வரவழைத்துக் கொடுப்பார்களானால் நாம் அதை நல்லமுறையில் பயன்படுத்தலாம்.



## அக்காமலை புல்வெளியில் கால்நடைப் பண்ணை

*265 வினா—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறையைச் சேர்ந்த அக்காமலை புல்வெளியில் கால்நடைப் பண்ணை ஒன்று அமைக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவரவர்களே, அந்தத் திட்டம் பரிசிலனையில் இல்லை.

**திரு. இ. ராமசாமி** : தலைவரவர்களே. 1½ ஆண்டுகளுக்கு முன்பே சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் வந்து அந்த இடத்தைப் பார்த்து விட்டுச் சென்றார்கள். 50 ஆயிரம் ஏக்கர் புல்வெளி இருப்பதாகவும், மாடு வளர்ப்பதற்கு வசதி இருக்கிறது என்றும் சொன்னார்கள். வெளிநாட்டினர் உதவியுடன் அந்த இடத்தில் ஒரு கோடி ரூபாய் செலவில் கால் நடைப்பண்ணை ஆரம்பிக்க இருப்பதாக ஒரு திட்டம் இருந்ததே, அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவரவர்களே, அந்த இடமும், பல்வேறு இடங்களோடு ஒரு இடமாகப் பரிசிலனைக்குள்ளானது. பல்வேறு இடங்களிலும் எந்த இடத்தில் முதலீடு செய்தால் என்ன பொருளும் அங்குள்ள தட்ப வெப்பநிலை கால்நடை வளர்ப்பிற்குப் பொருத்தமாக இருக்குமா என்றும் ஆராயப்பட்டு வருகிறது. அதற்கான முடிவை வெளி நாட்டினரின் தொடர்போடு எடுக்கவேண்டியிருப்பதால், அது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

## வேலூரில் அரசு அச்சகம்

*266 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூரில் ஒரு அரசு அச்சகம் (Government Press அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** : வேலூரில் ஓர் அரசு அச்சகம் நிறுவும் செயற்குறிப்பு தற்போதைக்கு அரசிடம் இல்லை.

திரு. ஏ. சி நரசிம்மன்: தலைவரவர்களே, வேலூரில் ஒரே ஒரு கோவாபரேடிவ் பிரிண்டிங் பிரஸ் தான் இருக்கிறது. அதனிடம் வேலை கொடுத்தால் சிக்கிரமாக செய்து கொடுப்பதில்லை. எனவே அரசுத் துறையில் ஒரு அச்சகத்தை நிறுவினால், அங்கே பல வேலைகள் அதிகமாக நடைபெறுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே அரசாங்கம் விரைவிலே அங்கே ஒரு அரசு அச்சகத்தை அமைக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அரசு அச்சகம் ஒன்று நிறுவுவது என்பதை கொள்கையளவில் அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. நிதி வசதியைப் பொறுத்து அது நடைமுறைப்படுத்தப்படும்.

## முத்துக்குளிப்பு

* 267 வினா—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில் முத்துக்கள் கிடைக்கின்றன ?

(இ) முத்துக்குளிப்பவர்களுக்கு அரசு என்னென்ன சலுகைகள் கொடுத்துள்ளது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:**

(அ) (1) திருநெல்வேலி வருவாய் மாவட்டத்தின் கடற்கரையோரங்களில் வடக்கில் உள்ள வைப்பார் பெரியபாரிலிருந்து தெற்கேயுள்ள பள்ளிக்கல்லுப்பார் வரையில் 30 அடி முதல் 72 அடி ஆழம் வரையிலும்.

(2) இராமநாதபுரம் வருவாய் மாவட்டம் கடற்கரை ஓரங்களில் வடக்கேயுள்ள பாம்பன்கரைபார் தொடங்கி தெற்கேயுள்ள வெம்பார்கரைபார் வரையில் 27 அடி முதல் 42 அடி ஆழம் வரையிலும் ;

(3) இராமேஸ்வரம் தீவின் ஓரங்களில் வடக்கே 30 அடி முதல் 42 அடி ஆழம் வரையிலும் ;

(4) பாக் வளைகுடாவின் மேற்குக் கடற்கரையில் 79.8' 79.12', கிழக்கு நேர் கோடுகளுக்கு இடையிலும் முத்துச்சிப்பிப் பார்கள் காணப்படுகின்றன.



(இ) முத்துக் குளிப்பவர்கள், அவர்கள் எடுத்த முத்துச் சிப்பிகள் மூன்றில் ஒரு பங்கினை தங்களது பங்காக எடுத்துக் கொள்கிறார்கள்.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் முத்து கிடைக்கிறது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு நமக்கு எவ்வளவு வருவாய் கிடைக்கிறது என்பதைப்பற்றி அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, 1955-லிருந்து 1961-ம் ஆண்டு வரையிலும்தான் முத்து எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலே 21 ஆண்டுகளுக்கு முன்பு முத்து எடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பு இருக்கிறது. 1955-ம் ஆண்டிலிருந்து 1961-ம் ஆண்டு வரையிலும் கிட்டத்தட்ட ரூ. 17,64,013 பெருமான முத்துக்கள் அரசாங்கத்தின் வருவாய்க்கு வந்திருக்கின்றன.

* 268 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி கடலில் முத்து எடுப்பது எத்தனை ஆண்டிற்கு ஒரு முறை நடைபெறுகிறது ?

(இ) அடுத்தப்படியாக முத்து எப்போது எடுக்கப்படும் ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) முத்துக் குளிப்பதற்கென்று குறிப்பிட்ட கால இடைவெளி எதுவும் கிடையாது. முத்துச் சிப்பிகள் முதிர்ச்சி அடைவதைக் கொண்டே முத்துக் குளிக்கப்படுகிறது. முத்துக்குளிப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிவதற்காக ஒவ்வோர் ஆண்டும் முத்துச்சிப்பிபார் ஆய்வு செய்யப்படுகிறது. 26 ஆண்டுகளுக்குப் பின்னர் 1955 முதல் 1961 வரையில் கடைசியாக முத்துக் குளிக்கப்பட்டது.

(இ) 1970-ல் நடத்திய முத்துச்சிப்பிப்பார் ஆய்விலிருந்து, முத்துக்குளிப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்று தெரிய வந்துள்ளது.

[1972 மார்ச் 1

**திருமதி. த. ந. அனந்தநாயகி:** சார், அடுத்த ஆண்டு முத்துக் குளிக்கப்படும் என்று 1971-லேயே செய்தி வந்தது. அது 1972-ல் செய்யப்படுமா அல்லது 73-ல் செய்யப்படுமா என்பதை திட்டவட்டமாக அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** 1973-ல் தான் முத்துக் குளிக்கப்படும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பொதுவாக 'பாண்டிய நாடு முத்துடைத்து' என்று குறிப்பிட்டாலே தூத்துக்குடியில் தான் என்பது ஞாபகத்திற்கு வரும். 1973-ல் முத்துக் குளிப்பது என்பதில், இப்பொழுது இருக்கும் முறையைப் பின்பற்றுவார்களா அல்லது அதில் ஏதாவது மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** 1973-ல் முத்துக் குளிக்கப்படும் என்று உறுதியாகக் கூறியிருக்கிறார்கள். சங்கு குளிப்பவர்கள்தான் முத்துக் குளிக்கிறார்கள். அவர்கள் எடுப்பதில் மூன்றில் ஒரு பங்கை எடுத்துக்கொண்டு மீதத்தை அரசாங்கத்திற்குக் கொடுக்கிறார்கள். அதுதான் இப்பொழுது இருக்கும் முறை.

### சென்னை கலெக்டர் அலுவலகத்திற்குக் கட்டடம்

* 269 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை கலெக்டர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, தற்போது உள்ள சென்னை மாவட்ட கலெக்டர் அலுவலகக் கட்டடம் உபயோகத்திற்கு ஏற்ற வகையில் இல்லை என்று பொறியாளர்கள் அறிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது. அதோடு அந்த நெரிசலான இடத்தை மாற்றியமைக்க, புதுக் கட்டடம் அமைத்துக் கொடுக்க அரசாங்கம் ஆலோசிக்குமா?



1972 மார்ச் 1]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இப்பொழுது இருக்கும் கட்டடத்தையே பழுதுபார்த்து சரி செய்தால், அதுவே நீண்ட நாட்களுக்கு உபயோகப்படுத்த முடியும் என்று அரசாங்கத்திற்குத் தெரிகிறது.

### கிரியாறுத் திட்டம்

* 270 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'கிரியாறுத் திட்டம்' இப்பொழுது அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

### தமிழ் நாட்டில் புதிய வேளாண்மைக் கல்லூரிகள்

* 271 வினா—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மேலும் புதிய வேளாண்மைக் கல்லூரிகள் திறக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில்?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

### பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை

* 272 வினா—திரு. க. சுப்பு: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகள், பயிற்சிப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு அவர்களுடைய இன்றியமையாத கல்வித் தேவையை அடிப்படையாகக் கொண்டு உதவித் தொகைகள் வழங்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவை முன் ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இப்பொழுது பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு ரூ. 2,000-க்கு வருமானம் உட்பட்டிருந்தாலே உபகாரச்சம்பளம் கொடுக்கப்படுகிறது. அந்த வரம்பை ரூ. 3,000 என்று உயர்த்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அப்படிப்பட்ட எண்ணம் அரசின் கருத்தில் இருக்கிறது. அதில் முடிவு எடுக்கவில்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, பாக்வர்ட் கிளாஸ் டிபார்ட்மெண்டால் நடத்தப்படும் ஆஸ்டல்களில் இருக்கும் மாணவர்களுக்கு ரூ. 25 கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் பிரைவேட் ஆஸ்டலில் இருப்பவர்களுக்கு ஹரிஜன இலாகா அலவாக ரூ. 20 தான் கொடுக்கப்படுகிறது. இந்த வித்தியாசம் எதற்காக என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அரசு நடத்துகிற விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு ரூ. 25-ம், தனியார் நடத்துவதில் ரூ. 20 என்றும் கொடுக்கப்படுகிறது. உணவு விடுதிகளில் தங்கி கல்லூரிகளில் படிப்பவர்களுக்கு ரூ. 45-ம், நகரங்களில், பிற இடங்களில் ரூ. 36-ம் கொடுக்கப்படுகிறது. அதேபோல், தொழில் கல்வி படிப்பவர்களுக்கு நகரங்களில் ரூ. 45-ம், பிற இடங்களில் ரூ. 35-ம் கொடுக்கப்படுகிறது. பிற வகைகளில் ரூ. 25, ரூ. 25 என்ற அளவில் கொடுக்கப்படுகிறது. மாணவிகளுக்கும், மலைப் பிரதேசங்களிலும் ஒரு ரூபாய் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. வேறு வித்தியாசம் இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இப்பொழுது கொடுக்கப்பட்டு வரும் உதவித் தொகை, தொழில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கை வரையில்தான் கொடுக்கப்படுகிறது. வேறு கல்லூரிகளில் படித்தால் அவர்களுக்கே கிடைக்கும். ஆகவே, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இந்த ஸ்காலர்ஷிப்பை எல்லோருக்கும் கொடுக்க அரசு முன்வருமா?

60-62-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தொழில் கல்வி பயிலும் மாணவர்கள் அத்தனைபேர்களுக்கும் விடுதியில் சேர்ந்து படித்தால் கிடைக்கும்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, இப்பொழுது பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் பழைய முறையில் இருக்கிறதா அல்லது அண்மையில் ஏதாவது மாறுதல் அரசாங்கம் செய்திருக்கிறதா? உருது பேசும் லப்பைகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் சலுகைகள் கொடுக்கப்படவில்லை. தாசில்தார்களும் மற்றவர்களும் தடுக்கும் நிலைமைகள் இருக்கின்றன. அதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது ஜி.ஓ. அனுப்பியிருக்கிறார்களா? அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இப்பொழுது முன்பு இருந்ததை மாற்றிக் கொடுக்கப் பட்டிருக்கிறது. பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் நகரத்தில் ரூ. 75 கொடுக்கப்படுகிறது. முன்பு இது ரூ. 40 ஆக இருந்தது. முன்பு பிற இடங்களில் ரூ. 36 என்று இருந்தது, இப்பொழுது ரூ. 70 என்று கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட மாறுதல்கள் இந்த ஆண்டிலிருந்து வந்திருக்கின்றன. கலைக் கல்லூரி, சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு பழைய முறை ரூ. 40 என்பதை இப்பொழுது ரூ. 60 ஆகவும் நகரங்களில் கொடுக்கப்படுகிறது. பிற இடங்களில் அதுவே ரூ. 50 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதே போல், தொழில் கல்விக்குப் பழைய முறை ரூ. 40. இப்பெழுது ரூ. 50. உருது பேசும் லப்பைகள் பற்றி அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு எந்தத் தகவலும் இல்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், சமீபத்தில் ஓசூர் பகுதியில் இருக்கும் ஐ.டி.ஐ. பள்ளியில் எல்லோருக்கும் இந்த உதவித் தொகை கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். வேறு பள்ளிகளில் கொடுக்கப்படுகிறது. ஆனால், இந்தப் பள்ளியில் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அதை ஒழுங்குபடுத்த அரசு நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறைபாடுகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் ஆவன செய்யப்படும்.

திரு. அ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு விடுதிகளில் இடம் கிடைக்காததால், வெளியிலே தங்கிப் படிக்க வேண்டியதாக இருக்கிறது. அது மாணவர்களுடைய தவறு இல்லை. ஆகவே, அப்படி வெளியிலே இருக்க வேண்டிய அவசியத்தில் உள்ள மாணவர்களுக்கும் இந்த உதவித் தொகையைக் கொடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படிப்பட்ட நிலையில் உதவி கொடுக்க திட்டம் இப்பொழுது ஒன்றும் இல்லை.

## பல்லடம் வட்டத்தில் மின்சார நிறைவு விழா

*273 வினா—திரு. என். குமாரசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை ஜில்லாவில், பல்லடம் தாலூக்காவில் மின்சார நிறைவு விழா ஏதேனும் அரசாங்கத்தால் கொண்டாடப்பட்டதா ?

(இ) ஆம் என்றால், இன்னும் பல கிராமங்களில் அரிஜன சேரிகளுக்கு விளக்குகள் இல்லாமல் இருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) பல்லடம் வட்டத்தில் 27—9—1971 வரையில் மாவட்ட அரிசன நல அதிகாரி மற்றும் பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் கொடுத்த பட்டியல்களின்படி எல்லா அரிசன குடியிருப்புகளுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இன்னும் பல கிராமங்களில் விளக்குகள் கொடுக்காமலேயே, சேரியும் பூராவும் நிறைவு பெறாமலேயே, பூர்த்தி செய்துவிட்டதாக அதிகாரிகள் நினைத்துக்கொண்டு நிறைவு விழாக்கள் கொண்டாடுகிறார்கள். ஆனால், ஜனங்கள் பூர்த்தி செய்யவில்லை என்று சொல்லி, அரிஜனங்கள் அல்லல்படுகிறார்கள். இதற்கு அரசாங்கம் இனியாவது அப்படிப்பட்ட நிலைகள் இல்லாமல் அந்தக் கிராமங்களுக்கும் மின் வசதி கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எதையாவது குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். உறுப்பினர் சில கிராமங்களைப் பற்றிக் கேட்டார்கள். வாரியத்தால் செய்ய வேண்டிய வேலைகள் முடிவு



பெற்றுவிட்டன. செக்யூரிடி டெபாசிட் கட்டி, மின்சாரத்தைப் பெறவேண்டியது பஞ்சாயத்தின் கடமை. வாரியத்தில் எந்தத் தவறும் இல்லை.

## அரசு பேருந்துகளில் வேகமானிகள்

*274 வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு உந்து வண்டிகளில், ஸ்பீடோ 'மீட்டர்' களைப் பொறுத்தி வேகத்தை நிர்ணயிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாவட்டப் பேருந்துகளில் வேகமானிகளைப் (Speedo meters) பொருத்தும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. மாநகரப் பேருந்துகளைப் பொறுத்தவரை, வேகமானிகளைப் பொருத்துவது சிக்கலமற்றது என்று கருதப்படுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, டி.வி.எஸ். நிறுவனத்தில் ஸ்பீடோ மீட்டார்கள்—வரைவுமானிசன் பொருத்தப்பட்டு, நல்ல முறையில் பேருந்துகள் நடத்தப்பெற்றுள்ளன. அதைப போல வருங்காலத்திலாவது பாண்டியன் பஸ் போக்குவரத்து நிறுவனத்தில் பேருந்துகளுக்குப் பொருத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஸ்பீடோ மீட்டர்—வேகமானி—என்று ஒன்று இருக்கிறது. டேக்கோ மீட்டர்—வரைவுமானி—என்று ஒன்று இருக்கிறது. வேகமானி என்பது வேறு. வரைவுமானி என்பது வேறு. பாண்டியன் பஸ் போக்குவரத்து நிறுவனத்தில், டி.வி.எஸ். நிறுவனத்தில் உள்ளதைப்போல வரைவுமானி இருக்கிறது. அரசாங்கப் போக்குவரத்துத் துறையிலும்கூட விரைவு பேருந்துகளில் டேக்கோ மீட்டர்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. கனம் உறுப்பினர் எப்படி நினைக்கிறாரோ அதைப்போன்றே பாண்டியன் பஸ் போக்குவரத்துக் கழகத்திலும் தொடர்ந்து நீடித்து, அந்த முறைகள் செயல்பட்டுவருகின்றன.

[Thiru K. T. K. Thangamani] [1972 மார்ச் 1

business of the House is taken up for other matters at your discretion, then any time today the Budget can be presented So my submission is that myself and other Members also have raised certain questions in the form of adjournment motions. Nothing in this rule precludes us from tabling adjournment motions and the Hon. Speaker admitting it. On 25th March 1959 the then Speaker gave a ruling on the point of order regarding admission of adjournment motions during the Budget session. Of course he has elaborately dealt with it ....

MR. SPEAKER: Let the hon. Member read it. Shall I help you?

THIRU K. T. K. THANGAMANI: I will read the ruling. Then on 20th June 1967......

MR. SPEAKER: What is the ruling given with regard to the adjournment motion raised by the hon. Member, Thiru Palanisamy?

THIRU K. T. K. THANGAMANI: Thiru Sattanathan has raised the adjournment motion and the ruling was of a general nature. On 20th June 1967 an adjournment motion was raised with regard to the leakage of budget and an elaborate discussion went on. Then on 28th February 1968 a peremptory ruling was given. I will read it. It is as follows—

• இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கோவையில் தேசியக்கொடி எரிக்கப்பட்டதைக் குறித்தும், திரு சுரேந்திரன் அவர்கள் லாரி கவிழ்ந்து இரண்டுபேர் உயிர் இழந்ததைக்குறித்தும், டாக்டர் ஹாண்டே அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக நிகழ்ச்சிகளைக் குறித்தும் இங்கே மூன்று ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நாள் நிதிநிலை அறிக்கையை அளிப்பதற்காக என்று ஆளுநர் அவர்கள் வரையறுத்துக் கொடுத்திருக்கும் நாள். ஆகவே, இன்று வேறு எந்த நிகழ்ச்சியும் எடுத்துக்கொள்ளக்கூடாது. ............ என்று விதிமுறை ............................Sir விதிகளின்படி இல்லையென்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: I would ask the hon. Member to resume his seat. I have understood his point of order. His point of order is that the adjournment motion can be taken up for consideration. That is his point of order. Am I right?



1972 மார்ச் 1]

THIRU K. T. K. THANGAMANI: Sir, I have not completed.

MR. SPEAKER: I would give my ruling. I am not going to allow the hon. Member to proceed further. So far I have been trying to catch what the hon. Member wants to establish. I have understood his point. He says that the adjournment motion can be taken up for consideration. I am going to give my ruling.

THIRU K. T. K. THANGAMANI: Sir, I want two more minutes.

MR. SPEAKER: I would ask the hon. Member to resume his seat.

THIRU K. T. K. THANGAMANI: Not only adjournment motion ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களை அவருடைய ஆசனத்தில் அமரும்படி திரும்பத் திரும்ப நான் கேட்டுக்கொள்கிறேன். அவர் குறிப்பிட விரும்பிய விதிமுறை என்ன என்பதை நான் புரிந்துகொண்டேன். அவர் எழுப்பியுள்ள ஒழுங்குப் பிரச்சினைக்கு நான் தீர்ப்பு சொல்லப்போகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தம் கருத்தை விளக்குவதற்குப் போதிய அவகாசம் கொடுத்தாகிவிட்டது. அதற்கு மேலும் அவர் தொடர்ந்து பேச முற்பட்டால் அடுத்த கட்டம் என்ன என்பதைக் கனம் உறுப்பினர் அவர்களே அறிவார்கள்.

THIRU K. T. K. THANGAMANI: Sir, when the Chair wanted me to read out the point of order ......

MR. SPEAKER: I want to give my ruling.

THIRU K. T. K. THANAGAMANI: Before the Chair gives his ruling, I want to make my point clear . .

THIRU J. JAMES: Sir, there is no meaning in giving your ruling before the hon. Member makes his point clear.

MR. SPEAKER: Let the hon. Member resume his seat.

This is my ruling. Under Rule 152 of the Tamil Nadu Legislative Assembly Rules, the date for the presentation of "the Budget" is fixed by the Governor.

Rule 153 (2) enables the Speaker to allot days in consultation with the Leader of the House and the Business Advisory Committee, for the various stages of the Budget.

Rule 155 (2) prohibits the taking up of any other business before 1.30 p.m. on days allotted for the discussion or voting of "the Budget", except with the consent of the Speaker.

On 28th February 1968, the then Hon. Speaker has ruled as follows :—

. . . . . இந்த நாள் நிதிநிலை அறிக்கையை அளிப்பதற்காக என்று ஆளுநர் அவர்கள் வரையறுத்துக் கொடுத்திருக்கும் நாள். ஆகவே இன்று வேறு எந்த நிகழ்ச்சியும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று விதிமுறை இருப்பதைக் கருதி நான் இந்தத் தீர்மானங்களுக்கு முடிவு அளிக்க இயலாத நிலையில், அவற்றை நாளைய தினம் எடுத்துக்கொள்வதாக இருக்கிறேன்." எற்கனவே, முன்பு இங்கிருந்த பேரவைத் தலைவர்கள்

"Motion that the meeting be adjourned cannot be moved during the "Budget Session" as the days have been specifically allotted by His Excellency the Governor for the Budget."

என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே அவற்றை நாளை எடுத்துக் கொள்கிறேன். என்று சொல்லியிருக்கிறார்கள். இதை நீங்களும் புரிந்து கொள்ளலாம். நீங்கள் திரு. சட்ட நாதக்கரையாளருக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பைப் பற்றி மட்டும் சொன்னீர்கள். உங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. என். கே. பழனிசாமி அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீதும், திரு. சின்னத்துரை அவர்களின் தீர்மானத்தின்மீதும் வழங்கப்பட்ட தீர்ப்பையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இத்தீர்ப்பு 1959 மார்ச்சு 30-ம் தேதி அளிக்கப்பட்டது.

On 30th March 1959, an hon. Member Thiru N. K. Palanisami gave notice of an adjournment motion.

அதற்குத் தீர்ப்பு அளிக்கிறபோது

"An adjournment motion cannot be allowed during Budget time. The fundamental principle is, it should be raised if that matter cannot be brought before the House within a reasonable time. That is the fundamental principle of all adjournment motions. Now, today, we are going to discuss the Appropriation Bill. If he gets an opportunity during the dicussion of the Bill he can talk about it and the Hon. Minister will reply to the points raised. I cannot allow any discussion to take place today. Being a leader of the party, I will give him a chance to speak during the discussion of the Bill, when he can refer to the points



raised in his adjournment motion. I therefore, do not give him permission to move the motion and rule it out of order.

என்று சொல்லிவிட்டு, மீண்டும் திரு. வி. கே. கோதண்டராமன் ஒரு மோஷன் கொடுத்தபோதும்

"The same thing that I said in respect of the other adjournment motions that I disallowed today will apply to this motion also. The fundamental principle is, can this be brought to the notice of the House within the appropriate time? We are discussing the Appropriation Bill to-day. If the hon. Member gets a chance or a member belonging to his party gets a chance to participate in the discussions on the Appropriation Bill, the matter can be raised then. I therefore do not give my permission to the hon. Member to make the motion and rule it out of order.

என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். இதுபோன்று 'இந்த அவையில் இதற்கு முன்னால் அளிக்கப்பட்ட எல்லாத் தீர்ப்புகளையும் எடுத்துச் சொல்லத் தேவையில்லை.

இன்று ஆளுநர் அவர்கள் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப் படுவதற்கு வரையறுத்திருக்கும் நாள். ஆகவே பேரவைத் தலைவர் அவர்கள் முன்பே சொன்னதுபோல் 'வேறு தீர்மானங்கள் எல்லாம் நாளைக்குப் பரிசீலிக்கப்படும்' என்ற கருத்துப்பட— இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல—இதற்கு முன்னாலே இருந்த கட்சியின் ஆட்சியிலேயே பேரவைத் தலைவர்கள் அளித்த தீர்ப்புக்கள் பல இருக்கின்றன. அவற்றுக்கிணங்க திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கோருவது போல—அந்தத் தீர்மானத்தை இன்றைக்கு எடுத்துக்கொள்வதற்கு இல்லை என்று கூறி, அவர் எழுப்பியுள்ள பாயின்ட் ஆப் ஆர்டரில் எந்தவிதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை என்று கூறி—மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை 1972-73-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சமர்ப் பிக்குமாறு நான் அழைக்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இன்றைக்கு நாட்டில் பஞ்சாலைத் தொழிலாளர்களிடையே கொந்தளிப்பு நிலவுகின்ற நேரத்தில்— எங்கள் கட்சித் தலைவர்கள் எல்லாம் தாக்கப்படுகின்ற நேரத்தில் அதைப்பற்றி எடுத்துக்கூறக்கூட சந்தர்ப்பம் அளிக்காத நிலையில் —நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படக்கூடிய இந்தச் சபையில் நாங்கள் இருக்க விரும்பவில்லை.

[1972 மார்ச் 1

(திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் தலைமையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினர் வெளிநடப்புச் செய்தார்கள்.)

THIRU R. PONNAPPA NADAR : On behalf of the Congress Party also we are staging a walk-out on the ground that the matter has not been allowed to be discussed in the House. The attitude is not very helpful. We are also staging a walk-out.

(திரு. ஆர். பொன்னப்பநாடார் அவர்கள் தலைமையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தார்கள்.)

**திரு. எம். சுரேந்திரன் :** இந்தச் சபையில் கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பற்றிப் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு இல்லாத அளவில் நாங்களும் இந்தச் சபையில் இருந்து வெளியேறுகிறோம்.

(பி.எஸ்.பி. கட்சியினரும் வெளிநடப்புச் செய்தார்கள்)

**திரு. எம். ஏ. லத்தீப் :** தொழிலாளர்கள் பிரச்சினைப்பற்றி இங்கே பேசுவதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் கொண்டுவந்த தீர்மானத்திற்கு இங்கே அனுமதி மறுக்கப்பட்ட காரணத்தினால். . .

THE HON THIRU K. ANBAZHAGAN : On a point of order Sir. There was no resolution before the House or an adjournment motion. It was only under the disguise of an adjournment motion, some members spoke. So, no hon. Member is entitled to create an impression that there was something moved in the House or resolution was brought before the House.

## 4. 1972–73-ம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டம்—அளித்தல்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

வெற்றிமாலை, நியாயத்தின் கழுத்தில் விழுந்தே
தீரும் என்பதற்கேற்ப இந்தியத் திருநாடும்—
உரிமை முழக்கம் தொடக்கத்திலே அலட்சியப்
படுத்தப்பட்டாலும் ஒரு நாள் அதற்கான
உயர்ந்த மரியாதை கிடைத்தே தீரும் என்பதற்கு
அடையாளமாக புதிய வங்க தேசமும்—



1972 மார்ச் 1] [டாக்டர் மு. கருணாநிதி]

உலக அரங்கில் கம்பீரமாகத் தலைதூக்கிப் புன்னகை சிந்தும் எழுச்சிமிகு காட்சிகண்டு இதயம் பூரித்தவாறு, இந்த நிதிநிலை அறிக்கையை பேரவையின் சார்பில் நாலரைக் கோடித் தமிழ் மக்களின் திருமுன் வைத்து அவர்களின் பேராதரவை என்றும் போல் இன்றும் இறைஞ்சி நிற்கின்றேன்.

2. 1972-73-ம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீடுகளையும், 1970-71-ஆம் ஆண்டின் கணக்குகளையும், 1971-72-ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடுகளையும் * இன்று உங்கள்பால் வழங்குவதில் உவகையடைகிறேன்.

3. நடந்து முடிந்த போரில் கிழக்கு வங்கத்தின் குரலுக்கு ஜனநாயக உணர்வோடு காது கொடுத்து இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் செயல்பட்ட திறனையும், இந்தியத் தளபதிகள், வீரர்கள் காட்டிய வியத்தகு ஆற்றலையும், எத்தனை முறை இந்த அவையில் பாராட்டிப் புகழ்ந்திடினும் தெவிட்டுவதே இல்லை.

4. நாட்டுப் பாதுகாப்பிற்கு நமது மாநிலத் தமிழ் மறவர்கள் சிந்திய ரத்தம்—மாநில அரசின் மூலம் மாநில மக்கள் எல்லா வகையிலும் அளித்த ஆதரவு, இந்திய ஒருமைப்பாட்டில், தமிழகத்திற்கு உள்ள ஆழமார்ந்த நம்பிக்கையின் அடையாளங்களாகும்.

5. மூன்றுமாத கால அளவில் 3.30 கோடி ரூபாய் நாட்டுப் பாதுகாப்பு நிதியாகத் திரட்டியிருப்பதும், அதற்கு தமிழ் மக்கள் மனமுவந்து அள்ளித் தந்திருப்பதும், கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையில் நமது ஒன்றுபட்ட தேசிய முழக்கம் எதிரியின் செவிப்பறையைக் கிழித்திடச் செய்யும் என்பதற்கு மற்றுமொரு உதாரணமாகும்.

6. பகைப்புலத்தைப் போர்முனையில் இந்திய மக்கள் காட்டிய ஒற்றுமை மேலும் மேம்பட வேண்டுமென்பதில் இந்த அரசு தணியாத ஆர்வம் கொண்டுள்ளது. அதே நேரத்தில் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே இந்திய ஜனநாயகத்தின் வலிமை என்ற பேருண்மையை யாரும் மறந்து விடக்கூடாது. ஒற்றுமை என்றால் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று பொருளல்ல. ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டுமானால் பல்வேறு

* இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.

* நிதி அமைச்சருடைய உரையின் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.

கருத்துக்களுக்கும், பல்வேறு கொள்கைகளுக்கும் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். இந்த நாடு சமதர்மம், ஜனநாயகம் மலர வேண்டியதை முழு மனதுடன் ஒப்புக்கொண்டாலும், அந்த நோக்கத்தை எந்த வழிவகைகளில் இந்நாட்டின் பல பகுதிகளிலும் எய்திடுவது என்பதில் கருத்துவேறுபாடு இருக்கத்தான் செய்யும். இந்தியாவின் பல மாநிலங்களும் ஒரே வழியில்தான் செயல்பட வேண்டுமென்றும், அறநெறி பிறழாது வேறு வழிகளில் சென்று இந்த நன்னோக்கத்தை அடைந்திட முயற்சித்தல் கூடாதென்றும் தடைக் கற்களைப் பரப்புவது, நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஏற்றதாக அமையாது. இந்த உண்மையை உள்ளத்தில் நிறுத்தி, பரந்த இந்திய பூபாகத்தின் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகளை உலவ விடுவது இன்றியமையாத ஒன்று என்பது இந்த நிதி நிலை அறிக்கையின் முன்னுரைப் பகுதியாக அமைகிறது.

7. 1971-72 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அவை முன் வைத்து நான் உரையாற்றுங்கால், சமதர்ம வளங்கொழு சமுதாயத்தினை ஏற்படுத்துவது நமது பொறுப்பாகும் என சுட்டிக் காட்டினேன். சமதர்மம் என்றால் வெறும் பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல ; சமுதாய நிலையிலும் மாற்றங்கள் பூத்துக் குலுங்கிட வேண்டும். சமுதாய மாற்றமற்ற பொருளாதார மாற்றம், புண்ணை மறைத்துப் பொன்துகில் அணிந்து கொள்கிற கதையாக முடிந்துவிடும். பொருளாதாரத் துறையில் மட்டும் நவீன கால முன்னேற்றங்களை நடமாட விட்டுவிட்டு சமுதாயத் துறையில் பகுத்தறிவற்ற கொள்கைகளை படமெடுத்தாட அனுமதித்து விட்டால், சமதர்மம், புயல் நுழைந்த பூங்காவாகத்தான் தோற்றமளிக்கும்.

8. இந்தக் கருத்துக்களை நெஞ்சத்துச் சித்திரங்களாக்கி, நாடு வாழ, நலிவு தீர, சமுதாயக் கேடு களைய, 1967 ஆம் ஆண்டு தமிழகத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் பொறுப்பேற்று, தொடர்ந்து 1971-லும் மக்களின் பேராதரவோடு பயணம் நடத்தும் இந்தத் தமிழக அரசு, தேர்தல் காலத்து வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட வேண்டியவை என்று கருதாமல், அவைகளைக் கல்மேல் எழுத்தெனக் கொண்டு இயன்ற வரையில் கடமை ஆற்றி வருகிறது.

* சென்னை ராஜ்யம் சென்றது ;
  தமிழ் நாடு என்னும் பெயர் வென்றது ;



* எங்கும், எதிலும் தமிழ் ;
  இறைவனுறையும் இடத்திலும் தமிழ் ;
* சுயமரியாதை சீர்திருத்தத் திருமணங்கள் சட்ட சம்மதம் பெற்றது ;
* அர்ச்சகர் நியமனம், தகுதி அடிப்படையில் அனைவருக்கும் பொருந்துமென்றாக் கூறியது ;
* பின்தங்கியோர் நலக்குழு ;
* பிச்சைக்காரர் மறுவாழ்வு ;
* குடிசை மாற்று வாரியம் ;
* குடிநீர் வாரியம் ;
* கல்லூரிப் புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி ;
* நில உச்ச வரம்பும், விதிவிலக்குகள் நீக்கமும் .
* விவசாயத் தொழிலாளருக்கு குடியிருப்பு மனைகள், நியாயக் கூலி நிர்ணயம் ;
* ஏழையெளியோர், அரிசனங்கள், பின்தங்கிய மக்களுக்கு இலட்சக் கணக்கில் நிலப்பட்டா—மனைப் பட்டா ;
* பேருந்துகள் உச்சவரம்பு—அதனைத் தொடர்ந்து நாட்டுடைமையாக்கும் திட்டம் ;
* இளைஞர் அணி வாயிலாகப் பட்டதாரி மாணவர்க்கு வேலை வாய்ப்பு . பட்டிதொட்டி எல்லாம் சமுதாய மறுமலர்ச்சிப் பணிகள் ;
* உணவுக் கட்டுப்பாடு நீக்கம் ;
* ஊரெல்லாம் மின்னொளி மயம் ;
* மாநிலத் திட்டக் குழு ;
* நிர்வாகச் சீர்திருத்தக் குழு ;
* மத்திய-மாநில உறவு பற்றி ஆராய மற்றுமோர் குழு ;
* காவலர்க்குச் சலுகைகள் ;
* கைத்தறியாளர் துயர் நீக்கத் திட்டங்கள் ;
* தொழிலாளர் நலநிதி அமைப்பு ;
* ஆசிரியர்களுக்குச் சலுகைகள், வேலைவாய்ப்பு ;
* அரசு அலுவலாளர்க்கு ஊதிய உயர்வு ;

எனவே, செலவைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்து, நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கும் நம்மால் ஆனதைச் செய்துள்ள இந்நிலையில், இந்த அளவுத் திட்டத்தை வரைந்து நிறைவேற்றியது நியாயமேயாகும். நாம் எதிர்பார்த்த இவ்வுதவி கிட்டாத சூழ்நிலையில், திட்டச்செலவின் விளைவாகவே ரிசர்வ் வங்கியிடம் நமக்கு அதிகப்பற்று ஏற்பட்டிருக்கிறது. நடப்பாண்டு திட்ட அளவினைக் குறித்தும் நமது பொதுவான நிதிநிலைமையினைக் குறித்தும், மத்திய நிதி அமைச்சருடனும் மத்திய திட்ட அமைச்சருடனும் திட்ட ஆணைக்குழுவுடனும் கடந்த டிசம்பர் திங்களில் நான் வந்து பேசினேன்; இம் மாநிலத்தின் 1972-73 ஆம் ஆண்டுத் திட்டத்தின் அளவு ரூபாய் 117 கோடியாக இருக்கவேண்டுமென்றும், நடப்பாண்டு திட்டச் செலவு ரூபாய் 114-115 கோடியாக இருக்கலாம் என்றும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதற்கேற்ப, உங்கள் முன் வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தின்படி, நடப்பாண்டில் ரூபாய் 114.98 கோடி திட்டத்திற்கும், 1972-73 ஆம் ஆண்டில் ரூபாய் 116.63 கோடி திட்டத்திற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. அப் பேச்சுகளின் அடிப்படையில், 1971-72 ஆம் ஆண்டிற்குரிய தேவையான திட்டத்திற்கு ஆகும் செலவின் விளைவாக ஏற்படும் அதிகப்பற்றை சரி செய்ய மத்திய அரசின் வழிவகை முன்பணமாக ரூபாய் 66.33 கோடி வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளது. இதில், ரூபாய் 1.99 கோடி இந்த ஆண்டிலேயே மத்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். ரூபாய் 9.95 கோடி 1972-73-ல் திருப்பிக் கொடுக்கப்படும். அசல் வகையிலும் வட்டி வகையிலும் இந்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டிய இந்தத் தொகைக்காக வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**12. வேளாண்மை.**

பார் முழுவதும் ஏர் முனையில்!—அதனை ஏற்றமிகு முனையாக ஆக்கப் பசுமைப் புரட்சி நடத்துகிறோம். கடன்பெறும் வசதிகளை விரிவுபடுத்தியும், பாசன வாய்ப்புகள், உரங்கள், பயிர் பூச்சி கொல்லிகள் முதலியன எளிதாகக் கிட்டும்வண்ணம் செயல்பட்டு வருகிறோம். மிகுபயன் தரும் பயிர் வகைகள் நடப்பாண்டில் 59 இலட்சம் ஏக்கரில் விளைவிக்கப்பட்டுள்ளன. 1972-73-ம் ஆண்டின் இதற்கான இலக்கு 66 இலட்சம் ஏக்கராகும். சத்துணவில் சிறப்பிடம் பெற்றுள்ளவைகளில் ஒன்றான புரதம் மிகுந்த பயிறு வகைகளை 1969-70-ம் ஆண்டில் 11 இலட்சம் ஏக்கரில் விளைவித்ததற்கு



மாறாக, 1971-72-ம் ஆண்டில் 14 இலட்சம் ஏக்கரில் விளைவித்து வருகிறோம். குடுமியாமலையில் பயிறு விதைப்பண்ணை ஒன்றைத் தொடங்கியுள்ளோம். பயிறு உற்பத்தி பெருகுமேயானால் நமது மாநிலத்தில் அதன் விலை கட்டுப்படுத்தப்பட வழி ஏற்படும்.

**13. வேளாண்மைப் புதிய முறைகள்.**

உழவர் பிரச்சினைகளை ஆராய்ச்சியாளர்களுக்கு எடுத்துரைத்து, ஆராய்ச்சியாளர்கள் கண்ட புதிய முறைகளை உழவர்களிடம் அறிமுகப்படுத்துவதே வேளாண்மை விரைந்து முன்னேறுவதற்கான சிறந்த வழியாகும். குடுமியாமலையிலும் ஏனைய ஆராய்ச்சி நிலையங்களிலும் இந்தப் பணி தீவிரமாக்கப்படும். நெல், பருத்தி, பயிறு ஆகியவற்றின் புதிய வகைகளின் மேம்பாட்டில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் முனைப்புடன் பணி தொடங்கிவிட்டது. நெட்டிழைப் பருத்தியின் வளர்ச்சியில் இப் பல்கலைக் கழகம் விரைந்து கவனம் செலுத்தி அந்தப் பருத்தியின் இறக்குமதியையே நாம் பெரிதும் நம்பியிருப்பதை மட்டுப்படுத்துமெனக் கருதுகிறேன்.

**14. வேளாண்மைத் தொழிற் கழகம்.**

வேளாண்மைத் தொழிற் கழகம் ஏற்படுத்தியுள்ள பணி நிலையங்களின் வளர்ச்சி மகிழத்தக்க வகையில் அமைந்துள்ளது. இதுவரையில் டிராக்டர் பழுது பார்க்கும் நிலையங்கள் ஐந்து ஏற்படுத்தப்பட்டுள்ளன. வேளாண்மைத் தொழிற் கழகம் மூலமாக 1971-72-ல் இதுவரை 1,080 டிராக்டர்கள் கொடுக்கப்படும். பயிர் பூச்சி கொல்லி மருந்துகள் தயாரிப்போடு மட்டுமல்லாமல், பல்வேறு வேளாண்மை பயிரீடு பொருட்கள் வழங்குவதிலும் இக் கழகம் கவனம் செலுத்தக் கருதியுள்ளது.

**15. வேளாண்மைக் கடன் வசதி.**

கூட்டுறவுத் துறையில் வேளாண்மைக்கென 1966-67-ல் ரூபாய் 31.41 கோடியும், 1970-71-ல் ரூபாய் 44.43 கோடியும் குறுகிய கால, மத்திய கால கடன் வசதி அளித்துள்ளதை ஒப்புநோக்கின், நமது சாதனையின் வெற்றி வெள்ளிடைமலையென விளங்கிடும். 1971-72-ல் ரூபாய் 50 கோடியும், 1972-73-ல் ரூபாய் 61 கோடி கடன் வசதியளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுறவு இயக்கத்தின் வாயிலாக வழங்கப்பெறும் நீண்ட காலக் கடன் வசதி, 1966-67-ல் ரூபாய் மூன்று கோடி அளவிலிருந்து 1968-69-ல் ரூபாய் 15.48

*** அரசியல் விருப்பு வெறுப்பின்றி, ஆறுமாதத்திற்கு மேற்பட்ட தியாகிகளுக்கு மாதாந்திர நிதி உதவி :**

இவைகளன்னியில் ஒவ்வொரு துறையின் சார்பாகவும் ஆற்றிய பணிகளை எண்ணிப் பார்த்தும், ஆற்றிட வேண்டிய பணிகளை எடுத்துரைத்தும் மேலும் சில குறிப்புகளைத் தருவதற்கு முன்பு, நமது மாநில நிதிநிலை பற்றிக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

## 9. வரவு-செலவுத் திட்டம்.

1971-72 திருத்த வரவு-செலவுத் திட்டத்தை அளித்தபோது, வருவாய்க் கணக்கில் ரூபாய் 342.65 கோடி வரவு இருக்குமென்றும், ரூபாய் 358·52 கோடி செலவிருக்குமென்றும், இதன் விளைவாக வருவாய் பற்றாக்குறை ரூபாய் 15.87 கோடி இருக்குமென்றும் நாம் கருதினோம். இப்போதுள்ள நிலைமையில், வரவு ரூபாய் 377.41 கோடியாக இருக்குமென்றும், செலவு ரூபாய் 375.67 கோடியாக இருக்குமென்றும், வருவாய் உபரி ரூபாய் 1.74 கோடியாக இருக்குமென்றும் கருதப்படுகிறது. (கரவொலி) பேரவையின் முன் வைக்கப்படும் 1972-73 வரவு-செலவுத் திட்டப்படி, வருவாய்க் கணக்கில் செலவு ரூபாய் 394.78 கோடியாகவும், வரவு ரூபாய் 397.27 கோடியாகவும் இருக்குமென்றும், இதன் விளைவாக வருவாய் உபரி ரூபாய் 2.49 கோடி கிடைக்குமென்றும் கருதியுள்ளோம். (கரவொலி)

## 10. கடன் சுமை.

மத்திய அரசுக்கு நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் சுமையினால் நமக்கு ஏற்படுகிற இடர்ப்பாட்டினையும் இப்பேரவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1972–73 ஆம் ஆண்டில் திட்ட வகையிலும் பிற வகையிலும் மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கும் கடன் தொகை ரூபாய் 45.80 கோடியாகும். ஆனால் இதே ஆண்டில் மத்திய அரசுக்கு நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகை ரூபாய் 53.32 கோடியாகும். மத்திய அரசிடமிருந்து நாம் பெறுவதைவிட, நாம் திருப்பித் தருகிற தொகை ரூபாய் 8 கோடி கூடுதலாக இருக்கிறது. எனவே மூலதனக் கணக்கில் வளர்ச்சிப் பணிகளுக்கான செலவு முழுவதையும் இம் மாநில அரசின் நிதியிலிருந்தே செய்ய வேண்டி வருகிறது. வட்டி வீதத்தைக் குறைத்தும், கடன் தவணைக் கால அளவை நீட்டித்தும், கடனைத் திருப்பித் தருவதற்கான





நிபந்தனைகளை தளர்த்த வேண்டுமென்று நாம் மத்திய அரசைப் பலகாலம் வேண்டி வருகிறோம். மாநில அரசின் இந்த நியாயமான முறையீட்டுக்கு மத்திய அரசு இணங்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

## 11. திட்டச் செலவு-அதிகப் பற்று.

1968-69 ஆம் ஆண்டில் ரூபாய் 93·49 கோடி அளவுக்கு நாம் திட்டத்தை நிறைவேற்றியிருக்க, 1969-70 ஆம் ஆண்டில் ரூபாய் 72.00 கோடி நாம் செலவிடுவதற்கு மட்டுமே மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இவ்வாறு குறைவான தொகை ஒதுக்கினால், வளர்ச்சி வேகம் தடைப்பட்டு பின்னோக்கிப் போகும் என நாம் சுட்டிக் காட்டினோம். எனினும், 1970-71 ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 79.30 கோடியாகவும், 1971-72 ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 80·20 கோடியாகவும் அமைக்க வேண்டுமென மத்திய அரசு நம்மை வலியுறுத்தியது. ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூபாய் 575 கோடியாவது செலவிட வேண்டுமெனவும், ஆண்டொன்றுக்கு ரூபாய் 100 கோடி முதல் ரூபாய் 125 கோடி அளவிலேனும் செலவிட வேண்டுமெனவும் நாம் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டோம். இதற்காக மத்திய அரசு நமக்கு அளிக்கும் நிதி உதவியாகிய ரூபாய் 202 கோடியை ரூபாய் 250 கோடியாக உயர்த்துவது, நிதி ஆணைக்குழு நமக்கிழைத்த அநீதியைப் போக்குவது; கடன் தவணைக் கால அளவை மாற்றி அமைப்பது: இவை பற்றி நாம் விடுத்த வேண்டுகோளை பரிவுடன் கருதிப் பார்க்கவேண்டுமென மத்திய அரசை நாம் வேண்டினோம். இக் கோரிக்கைகள் மத்திய அரசின் ஆய்வில் இருப்பதையொட்டித்தான், 1969-70 ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 87.05 கோடி அளவிலும் 1970-71 ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 97.45 கோடி அளவிலும் நிறைவேற்றி, 1971-72 ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 114·98 கோடி அளவிலும் செயல்படுத்தி வருகிறோம். இதற்காக நம்மால் முடிந்தவரை கூடுதல் நிதி ஆதாரத்தைத் திரட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளோம். அதே நேரத்தில், திட்டத்தினுள் வராத செலவினங்களை நாம் எவ்வகையிலும் உயர்த்திவிடவில்லை. நிதி ஆணைக்குழு பரிந்துரைகளின் விளைவினை நீக்கிவிட்டுப் பார்த்தால், திட்டத்தினுள் வராத செலவின் அளவு, கடந்த சில ஆண்டுகளாக 1968-69 ஆம் ஆண்டில் இருந்ததைவிட பெரிய அளவு உயர்வு இன்றி இருப்பதை மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டியுள்ளோம்.

கோடியாகவும், 1970-71-ல் ரூபாய் 22.66 கோடியாகவும் உயர்ந்தது ; 1971-72-ல் ரூபாய் 29.40 கோடிக்கு உயரும். 1972-73-ல் அதற்கு மேலும் உயருமென எதிர்பார்க்கிறோம்.

## 16. கால்நடை வளர்ப்பு.

கால்நடை மருத்துவப் பணியின் சீரமைந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தை அரசு மேற்கொண்டுள்ளது. 1972-73-ல் பத்து புதிய கால்நடை மருந்தகங்கள் உருவாகும். ஒருசில மாவட்டங்களில் கால்நடை வளர்ச்சிச் சிறப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். கோழிப்பண்ணையும் பன்றி வளர்ப்பும் சீராக விரைந்து நடை பெறுகிறது. 1970-71-ல் ரூபாய் 3.06 கோடி என்று இருந்ததற்கு மாறாக, 1972-73-ல் கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பில் ரூபாய் 4.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 17. பால் வழங்கு திட்டம்.

பால் உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்தியும், பால் சேகரிப்பு, பாலைப் பதப்படுத்துதல், எடுத்துச் செல்லுதல் போன்றவற்றில் வசதிகளை ஏற்படுத்தியும், நகரங்களின் கூடுதல் பால் தேவையை நிறைவு செய்து கிராமப் பகுதிகளில் வருமானத்தைப் பெருக்க திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ், இந்தியப் பால்பண்ணைக் கழகம் இம் மாநிலத்தில் பால் பண்ணை சீரமைப்பிற்கு ரூபாய் 8.87 கோடி ஒதுக்கியுள்ளது. இது பால்பண்ணைக்குரிய இயல்பான திட்டங்களுக்கு மேற்பட்ட சிறப்புத் திட்டமாகும். 1967-68-ல் 33,000 லிட்டர் பாலை நாள் ஒன்றுக்கு உற்பத்தி செய்த மாதவரம் பால்பண்ணை, இப்போது 70,000 லிட்டர் என்ற நிலையை எய்தியுள்ளது. பால் உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின்கீழ், சென்னை மாநகருக்கு வழங்கும் பால் அளவு, மூன்று இலட்சம் லிட்டர்களாக ஐந்தாண்டுகளில் உயர்த்தப்படும். ரூபாய் 55 இலட்சம் செலவில் சென்னையில் இரண்டாவது பால்பண்ணை அமைத்திட அனுமதி வழங்கப் பட்டுள்ளது. பால்பண்ணைத் தொழில் விரிவடைவதன் மூலம், செங்கற்பட்டு, வட ஆற்காடு, சேலம், கோவை, நீலகிரி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களின் பகுதிகளில் உள்ள குடியானவர்களுக்கு கணிசமான கூடுதல் வருவாய் கிடைக்கும். இத் திட்டங்கள் செம்மையாகச் செயல்படுத்த தமிழ்நாடு பால் பண்ணைக் கழகம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.





## 18. பாசன வசதி

பாசன ஏற்பாடுகளின் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கீடு, 1966-67-ல் ரூபாய் 7.84 கோடியிலிருந்து 1971-72-ல் ரூபாய் 14.23 கோடிக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இது 1972-73-ல் ரூபாய் 14.28 கோடியாக அமையும். இந்த நிதியைக் கொண்டு காவேரி, அமராவதி, வைகை, தாமிரபரணி போன்ற ஆற்றுப் பாசன ஏற்பாடுகளின் பராமரிப்பு வேலைகள் செயல்படுத்தப்படும். தற்போதுள்ள பாசன ஏற்பாடுகளைத் தக்க முறையில் மாற்றி அமைப்பதற்கான மாற்றங்களைப் பற்றி அரசு ஆய்ந்து செயல் பட்டு வருகிறது. தஞ்சைப் பாசன ஏற்பாட்டைப் புதுமைப் படுத்தும் நமது செயற்குறிப்புகளுக்கு உலக வங்கி மதிப்பீட்டுத் தூதுக் குழுவினர் ஒப்புதல் அளித்திருந்த போதிலும், மத்திய அரசு தொழில் நுட்ப அனுமதியை வழங்கியிருந்த போதிலும், நாம் எவ்வளவோ முயன்றும் முதலீட்டுப் பணிகள் நடைபெற முடியாமல் தடைப்பட்டு விட்டன. வேளாண்மை உற்பத்தி நிலையும், நீர்வளத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவதையும் எண்ணிப் பாராமல் இன்றியமையாத இத் திட்டத்தின் செலவை ஒதுக்கி வைப்பது பொருளாதாரக் கண்ணோட்டத்தில் விவேகமுடையதல்ல என்பதை பன்முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இத்தகைய நேரங்களில் மத்திய அரசு தலையிட்டு மாநிலங்களுக்கிடையே உள்ள தண்ணீர் தகராறுகளுக்கு நியாயமான தீர்வு காண வேண்டுமென்று வற்புறுத்தி வந்துள்ளோம்.

## 19. கங்கை-காவிரி இணைப்பு.

மாநிலங்களுக்கிடையில் தண்ணீர் தகராறுகள் ஏற்படாமலே இருக்கவும், வறட்சி நிலைமைகளை நிரந்தரமாகத் தீர்த்திட ஏற்ற வழியாகவும், கங்கை நதி நீரைத் திருப்பி காவிரி நதி தீரம் வரையில் கொண்டு செல்லும் திட்டமாகவும், இந்தியப் பெருநாட்டின் ஒருமைப்பாட்டின் சின்னமாகவும் காவிரியுடன் கங்கையை இணைக்கும் மகத்தான திட்டத்தை உருவாக்கத் தொடங்க வேண்டுமென அண்மையில் மத்திய திட்ட அமைச்சராயிருந்த டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் ... நான் பேச்சுவார்த்தை நடத்தியபோது ... பெரிய திட்டத்தில் கங்கை-காவிரி இணைப்புக்கிடையே கோதாவரி கிருஷ்ணா போன்ற நதிகளும் இணைக்கப்படும். முதலில் காவிரியுடன் அந்த நதிகள் இணைக்கப்படும். ... மகாநதி போன்றவைகளை

கங்கையுடன் இணைத்தும், அதன் தொடர்பாகக் கங்கை-காவிரி நதியை இணைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டால், படிப்படியாக தொடர்புடைய மாநிலங்கள் பயன்பெற்று, ஓரிடத்தில் வெள்ளப் பெருக்கும் பிறிதோரிடத்தில் வறட்சியும் என்கிற ஏற்றத் தாழ்வான நிலையும் மாறிடக் கூடும். அதற்கான ஆரம்பப் பணிகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

## 20. புதிய பாசனத் திட்டங்கள்.

மாநிலம் முழுவதும் பாசன வசதி பெறும் பழைய ஆயக் கட்டுகளை நிலைப்படுத்தவும், புதுப் பாசனம் பெறும் ஆயக் கட்டுகளைப் பெருக்கிடவும் தொடங்கப்பட்ட சின்னாறு, பரப் பலாறு, பாலாறு-பொருந்தலாறு, தண்டரை, நந்தன் கால்வாய், கருப்பாநதி, பொன்னனியாறு, பிளவுக்கல் ஆகிய திட்டங்களுக்கு, 1972-73 ஆம் ஆண்டு ரூபாய் 3.90 கோடி செலவழிக்கப்பட இருக்கிறது; இது உட்பட பாசன வசதிகள் ஏற்படுத்த ரூபாய் 8.17 கோடி மூலதனக் கணக்கில் திட்டத்தில் செலவிடப்பட இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## 21. மின் வசதி.

மின்னொளி வசதி இல்லாத கிராமங்களே தமிழகத்தில் இல்லாத நிலைமை உருவாக்குவோம் என்று இந்த அரசு மேற்கொண்ட சூளுரையின் அடிப்படையில் 1971-72-ஆம் ஆண்டு இறுதியில் மின் வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை 50,900 என இருக்குமென மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1972-73-ஆம் ஆண்டு இறுதியில் நமது குறிக்கோள் தமிழக முழுவதும் பெருமளவில் நிறைவேறிவிடும்.

## 22. புதிய மின் உற்பத்தித் திட்டங்கள்.

அதிக அளவு மின்சார உற்பத்திக்கான திட்டங்களை நாம் உடனடியாக வகுக்க வேண்டியுள்ளது. தூத்துக்குடியில் அனல் மின் நிலையம் ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் நம்மிடம் உள்ளது. இத் திட்டத்திற்கு விரைவில் இந்திய அரசு அனுமதி வழங்கும் என நம்புகிறோம். நெய்வேலி அனல் மின் உற்பத்தி இயந்திரச் சாலையை முழுவதும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், இரண்டாவது சுரங்கம் வெட்டும் வேலை இன்றியமையாததாகிறது. கல்பாக்கம் திட்டத்தின் வேலைகளையும் இந்திய அரசு விரைவு



படுத்துமென நம்புகிறேன். மேலும் மின்னிணைப்பில் 100 மெகாவாட் மின் உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளும் வகையில் பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்திற்கு காலந் தாழ்த்தாது ஒப்புதல் அளிக்குமாறு கேரள அரசை விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

## 23. சாலைகள், போக்குவரத்து வசதி.

வரும் ஆண்டில், சாலை மேம்பாட்டிற்கான புதிய செலவுகளுக்காக ரூபாய் 3.68 கோடிக்கும், சாலை பராமரிப்புக்காக ரூபாய் 6.63 கோடிக்கும் வகை செய்துள்ளோம். இது தவிர, தேசிய நெடுஞ்சாலைகளுக்காக 1971-72-ல் ரூபாய் 5.44 கோடி நம் மாநிலத்தில் செலவிடப்படும். இந் நிதி நிலை அறிக்கையில் அடங்கியுள்ள அரசின் முக்கியமான முடிவு ஒன்று 1,000 மைல் நீளமுள்ள பேருந்துகள் செல்லும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை அரசு மேற்கொள்ளுவது பற்றியதாகும். (கரவொலி) இதனை இந்த அவை வரவேற்குமென நம்புகிறேன். இந்த அவையின் முன் நான் அறிவிக்க விரும்பும் இன்னொரு முக்கியமான செய்தி, ரூபாய் 5.33 கோடி செலவாகும் பாம்பன் பாலத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதாகும். (கரவொலி) இதனையொட்டி, நெடுநாட்களாக நாம் வேண்டிவரும் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்திற்கும் மத்திய அரசு விரைவில் ஒப்புதல் அளிக்குமென நம்புகிறேன்.

## 24. கிராம முன்னேற்றம்.

சமதர்ம அரசின் முதன்மையான பணிகளில் ஒன்று, நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையேயுள்ள ஏற்றத்தாழ்வை அகற்றுவதாகும். அந்த அடிப்படையில் நமது அரசு கிராமப்புற முன்னேற்றத்தில், கிராமங்களின் நல்வாழ்வில் தொய்வில்லாத அக்கறையைக் காட்டி வருகிறது. எல்லாக் கிராமங்களுக்கும் மின்னொளி என்பதைப்போல, எல்லாக் கிராமங்களிலும் எல்லா வசதிகளும் இருந்திடச் செய்ய வேண்டுமென்பதே அரசின் குறிக்கோளாகும். பெரும்பாலான கிராமங்களில் இணைப்புச் சாலைகள் இல்லை; குடிநீர் வசதியில்லை. இந்தத் தொல்லை தீர பல்லாண்டு காலமாகத் தவித்துக் கிடக்கும் பட்டிக்காட்டு பாமர மக்களை மகிழச் செய்ய வேண்டிய மகத்தான பொறுப்பு சாமான்ய மக்களின் பிரதிநிதிகளான நமக்குத்தான் உண்டு என்பதை நாடறியும். சிற்றூர்கள் அனைத்துக்கும் சீர்மிகு சாலைகள்

அமைத்திடவும், குடிநீர் வசதி அளித்திடவும் 300 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகுமெனினும், அதனையெண்ணி பெருமூச்சு விட்டுக் கொண்டேயிருந்தால் அந்த நல்ல காரியத்திற்கான தொடக்க விழாவில்கூட நம்மால் அடியெடுத்து வைக்க முடியாமல் போய்விடும். அந்தப் பயன்மிகு காரியத்தைப் படிப்படியாகச் செய்து முடித்திட வேண்டுமென உறுதி செய்து, முதற்கட்டமாக ஐந்தாண்டுக் காலத்தில் மாநிலம் முழுதும் 1,500 மக்களும் அதற்கு மேற்பட்டவர்களும் வாழ்கின்ற கிராமங்களை முக்கிய சாலைகளுடன் சேர்க்கும் இணைப்புச் சாலைகளை அமைப்பதென்றும், அதற்கிடையே உள்ள சிறிய கிராமங்களை இணைக்கும் திட்டத்தையும் சேர்த்து நிறைவேற்றுவதென்றும், அதற்காகும் செலவிற்கு மோட்டார் வாகன வரி மீது 10 சதவிகிதம் உபரி வரி விதிப்பதென்றும் முடிவு மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக கிராமச் சாலை வளர்ப்பு நிதியொன்று அமைக்கப்படுகிறது. இதற்கு மேலாக, ஒன்றியங்கள் தங்கள் பகுதியிலுள்ள சிற்றூர்களை இணைப்பதற்கான சாலைகளை அமைப்பதற்காகவும், குடிநீர் வசதியைப் பெருக்குவதற்காகவும், ஊராட்சித் தீர்வை மேல்வரி (Local cess surcharge) 1½ ரூபாய் வரை விதிக்கலாம் என்று இப்போதிருப்பதை 2½ ரூபாய் வரையில் விதிப்பதற்கு ஒன்றியங்களுக்கு அனுமதி அளிக்கப்படும். அரசுக்குள்ள நிதிப் பற்றாக்குறையின் காரணமாகவும், அதே நேரத்தில் தீவிரத் திட்டமிட்டு இணைப்புச் சாலை வசதிகளையும் குடிநீர் வசதிகளையும் எல்லாக் கிராமங்களும் பெற வேண்டுமென்பதற்காகவும் இத்தகைய ஏற்பாடு செய்யப்படுகிறது. குடிநீர் வாரியம் செயல்படுத்துகிற நகர் குடிநீர் வழங்குத் திட்டத்தில் ஆயுள் ஈட்டுறுதி கழகத்தின் உதவியைப் பெறுவது போலவே, கிராமப் பகுதி குடிநீர் வழங்குத் திட்டத்திற்கும் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் உதவியை நாம் நாடியுள்ளோம்.

**25. மக்கள் நல்வாழ்வு.**

மக்கள் நலம் பேணுவதற்கும், பொதுவான புறத் தூய்மை அமைவதற்கும் இந்த அரசு எடுக்கும் முயற்சிகள் மேலும் தீவிரப்படுத்தப்படுகின்றன—பரவலாக்கப்படுகின்றன—என்பதற்கு எடுத்துக் காட்டாக 1966–67-ஆம் ஆண்டில் ரூபாய் 16.75 கோடி ஒதுக்கீடும், 1971–72-ஆம் ஆண்டில் ரூபாய் 33.38 கோடி ஒதுக்கீடும், 1972-73 ஆம் ஆண்டில் ரூபாய் 34.69 கோடி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருப்பதை ஒப்புநோக்கிட வேண்டுகிறேன்.



மதுரை, கோவை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மருத்துவக் கல்லூரி மேம்பாட்டுக்குப் புதிய ஏற்பாடுகள்—

குடந்தை, ஆத்தூர், திருப்பத்தூர், தென்காசி ஆகிய இடங்களில் 32 படுக்கைகள் கொண்ட மகப்பேறு மருத்துவமனைப் பிரிவுகளைக் கட்டுதல்—

காளிப்பாடி, திட்டக்குடி, கள்ளிபுரம், காரைக்குடி, மேட்டூர் அணை ஆகிய இடங்களில் மருத்துவமனைப் படுக்கைகளை அதிகப்படுத்துதல்—

ஆகியவை இந்த ஆண்டு மேற்கொள்ளும் திட்டங்களாகும். இந்தத் துறையில் புதிய வளர்ச்சித் திட்டமொன்றை அறிவிக்க விரும்புகிறேன். மாவட்ட கழகங்கள் ஏற்கனவே நடத்தி, ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இருநூற்றுக்கு மேற்பட்ட மருந்தகங்களை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டுமென்ற ஊராட்சி ஒன்றியங்களின் நீண்டநாள் முறையீட்டை ஏற்றுக்கொண்டு, முதற்கட்டமாக 1972–73-ஆம் ஆண்டில் 45 ஒன்றிய மருந்தகங்களை இந்த அரசு எடுத்துக் கொள்ள முன்வந்துள்ளது. (கைதட்டல்.)

**26. கல்வி.**

1967–68-ஆம் ஆண்டில் 'கல்வி' என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கிய தொகை ரூபாய் 53.56 கோடியென்பதற்கு மாறாக, 1972–73-ஆம் ஆண்டு ரூபாய் 89.65 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையில் முன்னேறியுள்ள நாடுகளின் கல்விச் செழுமையை நமது அறிவுக் கூடங்களில் மணம் பரப்பும் மலராகச் செய்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் வல்லுநர் குழு ஒன்றினை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

27. தமிழகத்தைவிட்டு வெளியேறி வெளி நாடுகளுக்குச் சென்று அங்குள்ள பல்வேறு நிறுவனங்களில் பலர் பணி புரிகின்றனர். அவர்களில் சிலர் தமிழகத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அழைக்கப்பட்டு, அவர்கள் கற்றுள்ள புதிய மேம்பாட்டு முறைகளை இங்குள்ள நிறுவனங்களில் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக ஒரு புதிய திட்டத்தை அரசு மேற்கொள்கிறது. அத்தகையோரில் தகுதி வாய்ந்த ஐம்பது பேருக்கு உயர்பணி உதவித்தொகை (Fellowships) அளிக்கப்படும். அதற்கு "தமிழ் நாடு உயர்பணி உதவித்தொகைத் திட்டம்" (Tamil Nadu Fellowship Scheme) எனப் பெயர் இடப்படும்.

ஆறு திங்கள் முதல் ஓராண்டுக் காலம் வரை, அவர்கள் நம் நாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களில் பணியாற்ற இத் திட்டம் வாய்ப்பளிக்கும்.

**28. அரிசன, பிற்பட்ட வகுப்பினர் நலன்.**

அரசின் மேம்பாட்டு திட்டங்களிலே, அரிசன, பிற்பட்ட வகுப்பினரது நலன்களுக்கான திட்டங்கள் முக்கிய இடத்தைத் தொடர்ந்து பெற்று வருகின்றன. 1966-67-ல் ரூபாய் 3.59 கோடி மாநில அரசு ஒதுக்கியிருந்ததற்கு மாறாக, 1972-73-ஆம் ஆண்டில் ரூபாய் 8.41 கோடி அரிசன வகுப்பினர் மேம்பாட்டிற்காக மொத்தம் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து இதற்கென தனித்த நிதி ஒதுக்கம் நிறுத்தப்பட்டுவிட்ட போதிலும், இந் நிதி ஒதுக்கத்தை நாம் செய்துள்ளோம். இவ்வரசு பொறுப்பேற்ற நிலையில் 2.400 அரிசனக் குடியிருப்புகள் மின் வசதி பெற்றிருந்தன; நாம் எடுத்த தீவிர முயற்சிகளின் பயனாக இன்று 15,600 அரிசனக் குடியிருப்புகள் மின்னொளி பெற்றுத் திகழ்வதை மகிழ்வுடன் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். (கரவொலி) பிற்பட்ட வகுப்பினர் நலன்களுக்காக 1966-67-ல் ரூபாய் 0·91 கோடி மாநில அரசு செலவிட்டதற்குப் பதிலாக, 1972-73-ல் மொத்தம் ரூபாய் 4.68 கோடி செலவிட வகை செய்யப்பட்டுள்ளது.

**29. கைத்தறி நெசவாளர்கள்.**

நமது மாநிலத்தில் கைத்தறி நெசவாளர்கள் நலன்களுக்கான திட்ட நிதி ஒதுக்கம் 1966-67-ல் ரூபாய் 1·82 கோடியாக இருந்ததற்கு மாறாக, 1971-72-ல் ரூபாய் 2.03 கோடியாக உயர்த்தப்பட்டது; 1972-73-ல் ரூபாய் 2.34 கோடியாக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. கைத்தறித் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அக் குழுவின் பரிந்துரைகளை அரசு விரைவில் பெற்று, ஆய்ந்து முடிவுகள் எடுக்கும்.

**30. தொழிலாளர் நலன்.**

அங்கொன்றும் இங்கொன்றுமாக சில வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் தொழிலாளர் பிரச்சினையில் உருவாயிற்றெனினும், மாநிலமெங்குமுள்ள தொழிலாளர் நலனில் இந்த அரசு மிகுந்த அனுதாபத்துடன் அக்கறை காட்டி வந்துள்ளது. இந்தியாவின் வேறு பல பகுதிகளோடு ஒப்பிடும்போது, தமிழகத்தில்





தொழிலாளர் பிரச்சினைகளில் அரசு கடைப் பிடித்து வரும் நிதானப் போக்கினை நடுநிலையாளர் உணர்ந்து பாராட்டவே செய்வர். வன்முறையாளர்களும் சமூக விரோதிகளும், சில கிளர்ச்சிகளைப் பயன்படுத்திக் கொள்ளும்போது சட்டம், ஒழுங்கினைக் காத்து அமைதி நிலவிடச் செய்யும் பொறுப்பை இந்த அரசு தட்டிக் கழித்துவிட இயலாது.

31. கோவையில் மூடப்பட்ட ஐந்து ஆலைகளைத் தொழிலாளர் நலனுக்காக ஏற்கனவே இந்த அரசு திறந்ததும், அதற்கு முன்பு வேலையின்றிப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்க்கு இரண்டு இலட்ச ரூபாய் நிவாரணத் தொகை அளித்ததும், இப்போதும் மூடப்பட்ட ஆலைகளைத் திறந்திட மத்திய அரசோடு வாதாடுவதோடு நில்லாது பாதிக்கப்பட்ட தொழிலாளருக்கு மூன்று இலட்ச ரூபாய் நிவாரணத் தொகை அளிக்க முன்வந்ததும், (கரவொலி) ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை அளித்ததும், தொழிலாளர் நலனுக்காகவே கோவை டெக்ஸ்டூல்ஸ், சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ், லாம்கோ ஆகிய தொழிற்சாலைகளை அரசு பொறுப்பேற்று நடத்த முன்வந்ததும் அவர்கள் பால் அரசு கொண்டுள்ள அன்பின் அடையாளங்களேயாகும்.

32. பொருளாதாரக் குவியல் முறையை அகற்றி சமதர்ம சமுதாயத்தை நிறுவிட, கூட்டுறவுத் துறை, அரசுத்துறைகளில் தொழில் வளர்ச்சி காண வேண்டும். இந்தத் துறைகளில் நடைபெறும் தொழில்களில், தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திலும், பங்கு மூலதனத்திலும் இடம் அளித்து நிர்வாகிகளும், தொழிலாளிகளும் சேர்ந்து தொழிலை நிர்வகிப்பதற்கு வழிவகை காண்பது ஒரு புதிய கொள்கைத் திட்டமாகும். இதில் தொழில் சீருறவும் தொழிலாளர் நலன் பாதுகாக்கப்படவுமான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பரிந்துரை செய்ய ஒரு குழு நியமிக்கப்படும்.

**33. தொழில் வளம்.**

தமிழக அரசு இடைவிடாது எடுத்துள்ள முயற்சிகளின் பயனாக மத்திய அரசு, சேலம் உருக்காலைக்கான ஆக்கப்பணிகளை விரைவுபடுத்துவதற்கு இசைவு தெரிவித்திருப்பதற்கு நன்றி கூறுவதோடு, சேலம் திட்டத்திற்குத் தடைகளாக இடையில் வந்த சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டதற்கும் மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையில் மாநில அரசின் தொழிற்கொள்கையும், தொழில் வளர்ச்சிக்கு அரசு எடுத்த

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 மார்ச் 1

நடவடிக்கைகளுக்குக் கிடைத்த வெற்றிகளும் விரிவாக இடம் பெற்றதைப் பேரவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். 1971-ஆம் ஆண்டில் இதுவரையில் மத்திய அரசிடமிருந்து நமது அரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக 49 அனுமதிக் கடிதங்களும் 45 உரிமங்களும் புதிய தொழில்கள் தொடங்குவதற்குக் கிடைத்துள்ளன.

**34. அரசு அலுவலாளர்கள்.**

அரசு எடுக்கும் முடிவுகளைச் செயல்களாகத் தொடுக்கும் அரசு அலுவலாளர்களின் வாழ்வில் நிம்மதியிருக்க வேண்டுமென்ற குன்றா விழைவுடன், இரண்டாவது ஊதியக்குழு அமைத்து ஆண்டொன்றுக்கு ரூபாய் 23 கோடி அளவுக்கு ஊதிய உயர்வு அளித்துள்ள இந்த அரசு, அண்மையில் அவர்களது மிக முக்கியமான முறையீடு ஒன்றை ஏற்றுக் கொண்டுள்ளது. பல்லாண்டு காலமாக அவர்களை அடிமை மனப்பான்மையுடன் நடத்தி வருவதாக அவர்களால் கருதப்பட்டதும் எடுத்துச் சொல்லப் பட்டதுமான ரகசியக் குறிப்பேட்டு முறையை அடியோடு ரத்து செய்து விட்டோம். (காவல்) பதவி உயர்வுகளுக்கு, அலுவலர்கள் மீது வெளிப்படையாக சாட்டப் பெற்ற குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு அதற்கான ஆதாரக் குறிப்புகள் இருந்தால் அவைகளை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டால் போதுமானது. ரகசியக் குறிப்போ, திறந்த குறிப்போ தேவையில்லை.

35. ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் வீட்டு வாடகைப்படி விகிதங்களை மேலும் உயர்த்த வகை செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட விரும்புகின்றேன். இதன் பயனாக சென்னை நகரில், 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல், ஊதியத்தில் 12 சதவிகிதமும், கோவை, மதுரையில் 8 சதவிகிதமும், இரண்டாம் நிலைப் பகுதிகளில் 6 சதவிகிதமும், மூன்றாம் நிலைப் பகுதிகளில் 4 சதவிகிதமும் ஆக வீட்டுவாடகைப்படி உயர்த்தப் படுகிறது. இதன் விளைவாக ரூபாய் 1·82 கோடி ஆண்டொன்றுக்கு கூடுதல் தொடர் செலவை அரசு மேற்கொண்டுள்ளது. நிதி இடர்ப் பாடுகள் மிகுந்த இந் நிலையிலும் தனது அலுவலாளர்கள்பால் அரசுக்குள்ள ஆழ்ந்த அக்கறையை இம் முடிவுகள் எடுத்துக் காட்டுமென நான் நம்புகிறேன். மேலும் அரசு அலுவலாளர் களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் இரண்டாவது ஊதியக்



1972 மார்ச் 1] [டாக்டர் மு. கருணாநிதி]

குழுவில் தங்களுக்கு ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை (anomalies) களைவதற்காக இதுவரை அளிக்கப்பட்டுள்ள முறையீடுகளைப் பரிசீலித்து ஆறு திங்கள்களுக்குள்ளாக அரசுக்குப் பரிந் துரைகளை வழங்க அரசுத் தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படும்.

**36. தமிழ் நாடு வாணிபக் கழகம்.**

ஏறிவரும் விலைவாசிகளுக்குக் காரணம், மக்களிடம் வாங்கும் சக்தி உயர்ந்திருக்கிறது என்று கூறி நிம்மதி பெற்றுவிட முடியாது. வாங்கும் சக்தி எட்டிப் பார்க்க முடியாத ஏழை எளிய மக்கள் ஏராளமாக வாழ்ந்திடும் நாட்டில் இந்தப் பிரச்சினை அனைத்திந்திய அளவில் பரிசிலித்துத் தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். நமது தமிழகத்தைப் பொறுத்தவரையில் உணவுப் பொருள் வாங்கி வழங்கும் கழகம் (Civil Supplies Corporation) ஒன்று அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் பணி, அரிசி முதலிய ஒன்றிரண்டு பொருள்களை ஓரளவு வாங்கி தேக்கி வைத்து, விலையேறும்போது நியாய விலையில் மக்களுக்கு வழங்குவது என்பதாகும். குறிப்பிட்ட அளவில், தொடங்கியுள்ள இந்த முயற்சியை மேலும் விரிவுபடுத்தி, மாநில ரீதியாக நம்மால் முடிந்த அளவு விலைவாசிகளைக் கட்டுப்படுத்த, தமிழ் நாடு வாணிபக் கழகத்தை நிறுவுவதற்கு விரைவான நடவடிக்கைகள் குறுகிய காலத்திற்குள்ளாக எடுக்கப்படும்.

**37. பிச்சைக்காரர் மறுவாழ்வு.**

ஏற்பது இகழ்ச்சி என்றாள் தமிழ் மூதாட்டி. இகழ்ச்சி யாருக்கு? ஏற்பவருக்கு அல்ல! அவர்கள் ஏற்பது; அதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் நமக்குத்தான் இகழ்ச்சி, தமிழகத்தில் அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட பிச்சைக்கார சகோதர சகோதரி களும், ஆறாயிரத்திற்கு மேற்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர் களும் நம் மண்ணின் மக்களேயாவர். அவர்கள் வறுமைச் சகதியில் நெளியும் புழுக்களாய் வாடும் கொடுமை காணச் சகியாது. இந்திய நாட்டிலேயே முதல் மாநிலமாக, நமது தமிழகத்தில் சென்ற ஆண்டு ஜூன் திங்கள் மூன்றாம் நாள் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி தொடங்கப் பெற்றது. என் பணிவான வேண்டுகோளுக்கிணங்க, கருணையுள்ளங் கொண்ட பொதுமக்கள் சில மாதங்களிலேயே ஒரு கோடி ரூபாய்க்கு அதிக மாக பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியினை வாரி வழங்கினர்.

பரனூர் உளுந்தூர்பேட்டை, பர்கூர் ஆகிய மூன்று இடங்களில் தொழுநோய் இரவோர்க்கான விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்தம் அவதி நீக்கிவிடும் வண்ணம் தீவிரத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, நமது மாநிலத்தில் பிச்சைக்காரரே இல்லையெனும் புது நிலை ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. அதற்குத் தொடர்ந்து நல்லகம் வாய்ந்தோர் நிதி குவித்திட வேண்டுகிறேன். அத்துடன் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் மேலும் அமைத்திடவும், அவர்களுக்குச் சிகிச்சை அளித்திடவும், அவர்களைப் பராமரித்திடவும் அவர்களுக்குத் தொழில் பயிற்சி அளித்திடவும் ஆகிய செலவுகளுக்காக, அன்பளிப்பு நிதிகள் மட்டும் போதுமானவையல்ல என்ற நிலையில், குதிரைப் பந்தயவரி, பந்தயம் பிடிப்போர், பந்தயக் கணக்கு இயந்திரம் மீது 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகவும், மற்றவர்கள் மீது 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகவும் உயர்த்தப்படும். இதன் வாயிலாக ஆண்டுக்கு ரூபாய் ஐம்பது லட்சத்திற்குக் குறையாமல் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கூடுதல் வருவாய் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு அளிக்கப்படும்.

**38. நிலச் சீர்திருத்தம்.**

சமதர்ம வழியில் நடைபயிலும் இந்த அரசு, நிலப் பிரபுக்கள் முறையைக் களையெடுத்து உச்ச வரம்புச் சட்டத்தின் உண்மைப் பயனை அறுவடை செய்ய, முனைந்து முன்னேறுவதை அனைவரும் உணர்வர். 1961-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உச்சவரம்புச் சட்டம், விரிவான நீண்டகால எச்சரிக்கை விளம்பரத்துடன் கொண்டு வரப்பட்டதால், சட்டம் வருவதற்கு முன்பே அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான தந்திரங்களில் நிலக் குபேரர்கள் ஈடுபட்டு, பினாமி முறையிலும்—ஏராளமான தங்கு தடையற்ற விதிவிலக்கு வாய்ப்புக்களிலும் தங்கள் பரந்த நிலப் பரப்பை மறைத்துக் கொண்டு நிமிர்ந்து நின்றார்கள். சட்டமோ நாணிக்கோணி தலை தாழ்த்திக் கொண்டது. அந்த நிலையை மாற்றி இந்த அரசு, 1970-ஆம் ஆண்டு மீண்டும் ஒரு உச்ச வரம்புச் சட்டத்தை பதினைந்து ஸ்டாண்டர்டு ஏகரா என்ற அளவில் திடுமென அறிவித்து, அதன் தொடர்பாக கரும்பு, மேய்ச்சல் காடுகளுக்கான விதிவிலக்குகளை ரத்து செய்துள்ளது. இந்த பாட்டிகா சட்டம் பேரவையில் நிறைவேறி, குடியரசுத் தலைவரின் அங்கீகாரம் கிடைத்து, அதற்கான பணிகள் நடைபெறத் தொடங்கியுள்ளன. பல்லாண்டு காலமாக வீட்டுமனை சொந்தமற்றிருந்த விவசாயத்





தொழிலாளிகளுக்குக் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்க நாம் நிறைவேற்றிய சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் அங்கீகாரம் கிடைத்து அந்தப் புனிதப் பணியும் தஞ்சைக் காணியில் சென்ற திங்கள் 27 ஆம் நாள் திருவையாற்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

39. நிலச் சீர்திருத்தத்தின் மற்றொரு சட்டமாக புதிய அறிவிப்பு ஒன்றினைச் செய்ய விரும்புகிறேன். நில உச்ச வரம்புச் சட்டத்தில் உள்ள விதிவிலக்குகளின் மூலம் ஏராளமான நிலங்கள், அரசு கையகப்படுத்த முடியாத நிலையில் உள்ளன. நமது அரசாங்கக் கொள்கையின் அடிப்படையில் ஏற்கனவே கரும்பு, மேய்ச்சல் நில விதிவிலக்குகளை நீக்கியிருக்கிறோம். அதனைத் தொடர்ந்து, அரசியல் சட்டம் செயல்படத் தொடங்கிய 1950 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26 ஆம் நாளுக்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட அறக் கட்டளைகளில் (Trusts) கல்வி, மருத்துவம் ஆகிய பெயரால் உள்ள அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்களில் அந்த அறக்கட்டளைகளுக்கென ஒரு குறிப்பிட்ட அளவு விதிவிலக்கு அளித்துவிட்டு, 1950 ஆண்டு ஜனவரித் திங்கள் 26 ஆம் நாளுக்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட ஏனைய அறக்கட்டளைகளுக்குள்ள நிலங்களுக்கான விதி விலக்குகள் அனைத்தும் அறவே நீக்கப்படும் என்றும் இந்த மாமன்றத்தில் அறிவிக்கிறேன். (கரவொலி) இதற்குரிய சட்டம் இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவரப்படும்.

இதன்னியில் ஒரு குடும்பத்துக்கு அதிக அளவு 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வைத்திருக்கலாம் என்ற அளவை, 40 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும் இன்று முதல் மாற்றியமைக்க, வேண்டிய திருத்தங்கள் சட்டத்தில் செய்யப்படும் (கரவொலி.)

**40. கடன் நிவாரணச் சட்டம்.**

நாட்டுப் பொருளாதார வளர்ச்சியெனும் தருவுக்கு, கிராமப் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படைகள்தான் வளமூட்டும் வேர்களாகத் திகழ்கின்றன. நிலத்தை நம்பி வயிற்றைக் காக்கும் எண்ணிறந்த ஏழை விவசாயப் பெருங்குடி மக்களோ, கடன் சுமை பாரத்தை தாங்கிக் கொண்டிருக்கிறது. அவர்கள் அதிக வட்டிக்குத் தனியாரிடம் கடன்கள் பெறுவதால், அந்த வட்டியோ முதலையும் மிஞ்சி அதிகமாகப் பெருகிப் பயமுறுத்துவதால், திருப்பிச் செலுத்த முடியாமல் திண்டாடுவதை நாம் காண்கிறோ

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 மார்ச் 1

காணும் காட்சியாகும். அஃதேபோல் குறைந்த வருமானமுள்ள தொழிலாளர்கள், உழைப்பாளிகள், அரசு அலுவலாளர்கள், தனிப்பட்டோரிடம் கடன்கள் பெற்று தாங்கவொண்ணா வட்டி விகிதத்தால் கடன் பளு தலைக்கேறத் தவித்திடுகின்றனர்.

இந்த அவல நிலை போக்குவதற்கு, 1939 ஆம் ஆண்டு விவசாயிகள் நிவாரண சட்டத்தின் அடிப்படையில் கடன் நிவாரணங்களை விவசாயிகளுக்கு அளிக்கப் புதிய சட்டம் கொண்டு வரப்படுவதோடு, மேலும் குறைந்த வருவாயுள்ள தொழிலாளர்கள், உழைப்பாளிகள், அரசு அலுவலாளர்கள் ஆகியோருக்கும் நிவாரணம் வழங்குகிற வகையில் அவர்களது கடன் சுமையைக் குறைக்கவும் சட்டம் கொண்டுவரப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் அறிவிக்கிறேன். (கரவொலி.)

41. இது தவிர, நிலக் குத்தகைதாரர்கள் நில உடைமையாளர்களுக்குத் தரவேண்டிய பழைய நிலுவையை நான்கு ஆண்டுகளில், ஆண்டுக்கொரு தவணையாக செலுத்திட வேண்டுமென்று, குத்தகைதாரர்களுக்கு சாதகமாக 1969 ஆம் ஆண்டில் சட்டம் இயற்றியுள்ளோம். இந்தக் தவணைக் காலச் சலுகை கிடைத்தும்கூட குத்தகைதாரர்கள் நில உடைமையாளர்க்குச் செலுத்திட வேண்டிய பழைய நிலுவைகளை முழுவதும் செலுத்த முடியாமல் இடர்படுவதால் அவர்கள் துயரைத் துடைக்கும் வகையில், இந்த நடப்புப் பசலிக்கு அவர்கள் நில உடைமையாளருக்குத் தரவேண்டிய குத்தகையை பாக்கியின்றித் தந்திருப்பவர்களாக இருப்பார்களேயானால், அவர்கள் 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாள் முடிய (1380-வது பசலி முடிய) செலுத்த வேண்டிய பழைய குத்தகை நிலுவை அனைத்தும் ரத்து செய்யப்படுவதற்கான சட்டம் இந்தக் கூட்டத்தொடரில் கொண்டுவரப்படும் என்பதை மிக்க மகிழ்வுடன் அறிவிக்கின்றேன். (கரவொலி)

42. மாநில சுயாட்சி.

ஏழை நடுத்தர வர்க்கத்தினரின் நல் வாழ்வினையே மையமாகக் கொண்டு அந்தச் சாமானிய மக்களின் பிரதிநிதிகளாக ஆளும் பொறுப்பிலிருந்து, எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையேயும், உயர் மட்டத்திலிருப்போரின் உறுமல்களுக்கிடையேயும், "இதுகள் ஆள்வதா?" என்ற ஏகடியங்களுக்கிடையேயும் - மக்கள் தொண்டே



1972 மார்ச் 1] [டாக்டர் மு. கருணாநிதி]

மகேசன் தொண்டு எனக் கொண்டு, பழைய அந்தஸ்துக்கள், குடும்பப் பெருமைகள், குலப்பெருமைகள் எதுவுமற்றப் பாமரர்களின் தோழர்களாய், அரசுக் கடமையாற்றி, இருக்கின்ற அதிகாரங்கள், வசதிகள், வாய்ப்புகளை அடிப்படையாக வைத்து சமுதாயத்தின் அடித்தளத்தில் அழுந்திக் கிடக்கும் மனித தெய்வங்களை மரியாதைக்குரியவர்களாக ஆக்க, இந்த நிதிநிலை அறிக்கை வாயிலாகவும் இதற்கு முன்பு வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கைகள், திட்டங்கள் வாயிலாகவும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை, எங்களைத் தாராளமாகக் கருதினாலும், எங்கள் முற்போக்கு எண்ணங்களை நேர்வாகக் கருதிடாதவர்கள் காய்தல் உவத்தலின்றிச் சிந்திப்பர் என நம்புகிறேன்.

43. நமது அரசுக்குள்ள அதிகார வரம்புகளுக்கேற்றவாறு, பின்னடைந்தோர், தாழ்த்தப்பட்டோர், தவித்து நிற்போர் நெஞ்சுயர்த்த ஆவன செய்துள்ளோமெனினும், உடனடியாகச் சந்தித்துத் தீர்வு காண வேண்டிய பல்வேறு பிரச்சினைகளுக்கு அதிகாரமோ, நிதியாதாரமோ, குறைந்த பட்ச உரிமைகளோ கூட இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

44. இதற்குத் தலையாய காரணம் இந்திய அரசமைப்பு, 'கூட்டாட்சி' என்று கூறப்பட்ட போதிலும் 'ஒன்றியம்' என்ற சொல்லே அரசமைப்புச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு, அதன் தொடர்பாக 'கூட்டாட்சி' கோட்பாடுகளுக்கு முரணான பல வகைமுறைகள் சேர்க்கப்பட்டுவிட்டன. ஒன்றியம் என்பது பொருளற்றதாகி, ஒற்றையாட்சிப் போக்கு மிகுந்து விட்டதென்பதை யாரும் மறுக்க இயலாது. அதிகாரப்பிரிவில் மத்திய அரசின் பக்கம்தான் தராசுத் தட்டு தாழ்ந்து நிற்கிறது. உயர்ந்து நிற்கும் தராசுத் தட்டை அண்ணாந்துப் பார்த்து பெருமூச்சு விடும் நிலைதான் மாநிலங்களுக்கு!

"மாநில விவகாரங்களில் மைய அரசு தலையிட பெருமளவு வாய்ப்புக்கள் காண்கின்றன. இதன் மூலம் மாநிலங்களின் சுயாட்சி உரிமை பாதிக்கப்படுகின்றது".

என்று இராஜமன்னார் குழுவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப்போதுள்ள அமைப்பில் மாநிலங்களில் சட்டமன்றங்கள் இருப்பதும், முதலமைச்சர், மற்றும் அமைச்சர்கள் இருப்பதும்

சுயாட்சிதானே என வாதிடுவோர் உண்டு. தனக்குத் தேவையற்ற அதிகாரங்கள் பலவற்றை மத்திய அரசு மாநில அரசிடமிருந்து பறித்துக் கொண்டும்—மாநில அரசுகளுக்குத் தேவையான பல அதிகாரங்களை பகிர்ந்தளிக்காமலும் இருக்கின்ற நிலை, சுயாட்சித் தத்துவத்தின் முழுமையைக் காட்டுவதாகாது. கால தாமதமின்றி மக்கள் தேவைகளை நிறைவு செய்திடவும், நிதிக் கூறுகளை விரிவாக்கி மாநிலங்களில் வளம் பெருக்கிடவும், அந்தந்த மாநில மக்களின் உணர்வுகளுக்கேற்ப செயல்படவும், மத்திய அரசு எஜமானாகவும்; மாநில அரசுகள் ஏவல் கேட்போராகவும் மாறுகிற நிலையொழிந்து தோழமை உணர்வு வலுப் பெற்றிடவும் மாநிலங்களுக்கு முழு சுயாட்சி வேண்டுமென்று கருதுகிறோம். இந்தியாவின் பாதுகாப்பு, மத்திய அரசு வலிமையுடன் இருந்திட வேண்டுமென்பதில்தான் உள்ளதென்பதில் இரு கருத்துக்களுக்கு இடமே இல்லை.

விழுதுகள் வலிவடைவதால் ஆலின் அடிமரம் வலிவிழந்து விடுவதில்லை. விழுதுகளும் சேர்ந்துதான் ஆலமரத்திற்குப் பெருமை—அழகு!

“மாநிலத்தில் சுயாட்சி—மத்தியிலே கூட்டாட்சி” என்பது பிரிவினை வாதமல்ல, ‘கூட்டாட்சி’ என்பதற்குப் பதிலாக ‘ஒன்றியம்’ என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதாகவும்; ஒன்றியம் என்ற சொல்லைப் பயன்படுத்தியிருந்தாலும் நடைமுறையில் நம் அரசியல் அமைப்பு கூட்டாட்சி முறையில்தான் அமைந்திருக்கிறதென்றும் அரசமைப்புச் சட்டமியற்றியவர்களில் தலைமையானவராகத் திகழ்ந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களே கூறியிருக்கிறார். அந்தக் கூட்டாட்சியும், சுயாட்சியும் சொல் அளவில்தான் இருக்கின்றன. அவை எதார்த்தம் பெறவேண்டும்—உண்மையான சுயாட்சியாக மலர்ந்து, இந்தியக் கூட்டாட்சி மணம் பரப்ப வேண்டுமென்றால், அப்படிச் சொல்கிறவர்கள் தேசத்துக்கே விரோதிகள் என்று கூறுவது பொருத்தமாகுமா? 1947 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 ஆம் நாளன்று அரசமைப்புச் சட்ட மன்றத்தில் முன் வைக்கப் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் வரைந்து சமர்ப்பித்த தீர்மானத்தில்; “சுதந்திர இந்தியாவில் அமைந்திடும் மாநிலங்களும், பிற ஆட்சிப் பகுதிகளும் சுயாட்சி (Autonomy) உரிமை பெற்று, மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் என குறிப்பிட்ட அதிகாரங்கள் நீங்கலான எஞ்சிய





அதிகாரங்களுடன் (Residuary Powers) அமைந்து செயல்படும்” என்று கூறியிருக்கும் கருத்தினை உற்று நோக்கின் மாநில சுயாட்சி என்பது நாட்டு ஒற்றுமைக்கு விரோதமான கோரிக்கையல்ல என்பது தெளிவாகும்.

45. மாநில சுயாட்சி என்பது அதிகார உரிமைகளை மாநிலங்கள் பெறுவது என்பது மட்டுமல்ல! தங்குதடையின்றி வளமிகு திட்டங்களை மாநிலங்களில் நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதிவாயில்களை மத்திய அரசிடமிருந்து பெற்றிட வேண்டுமென்பதும் இன்றியமையாத ஒன்றாகும். எடுத்துக் காட்டாக, நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வருமான வரி (Corporation Tax) மற்ற வருமான வரிகளைப்போல் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. பொது வருமான வரி மீது மத்திய அரசு விதித்த உபரி வரியும் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மீது மாநிலங்களுக்கு நிர்வாகப் பொறுப்பில் பங்கு சிறிதளவுகூட இல்லை. இவைகள் ஒன்றிரண்டு உதாரணங்கள். இந்த நிலைமைகளில் மாநிலங்கள் முழுப்பயன் அடையத்தக்க மாறுதல்கள் தேவையென்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

46. “உரிமைக்குக் குரல் கொடுப்போர் மாநில அரசிலும், உறவுக்குக் கைகொடுப்போர் மத்திய அரசிலும் இருந்திடும் இந்தக் காலத்திலேயே தமிழகத்தின் முறையீடுகள் பல தட்டிக் கழிக்கப்படுகின்றன வென்றால், தயவுக்குத் தவம் கிடப்போர் மாநிலத்திலும்—தாராள சிந்தையற்றோர் மத்திய அரசிலும் இருந்திட்டால் மாநிலத்தின் வேண்டுகோள்கள் விழலுக்கிறைத்த நீராகும்”. என்று நான் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின் போது எடுத்துக் கூறியதை இப்போதும் நினைவூட்டுகிறேன்.

ஆகவே, மத்தியிலும்—மாநிலங்களிலும் ஆளுகிறவர்களைப் பொறுத்து இல்லாமல் மத்திய மாநில உறவுகள் அரசமைப்புச் சட்ட அடிப்படையிலேயே நிலைபெறவும், உறுதிபெறவும் வேண்டும். அதற்கு அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும்.

இந்த வேண்டுகோளை மத்திய அரசு ஏற்றிடும் என்ற நம்பிக்கையுடனும் இந்த அரசு தன்னிகரற்ற தகைவுறு திட்டங்களை தமிழ்ப் பெருங்குடி மக்களுக்குத் தீட்டியுள்ளது என்ற மகிழ்ச்சியுடனும், இந்த நிதிநிலை அறிக்கையை அவையின் முன் வைக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. மார்ச் 3-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## (5) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

@ 27. Notification issued with G.O. Ms. No. 2588, Agriculture, dated the 24th July 1971 in regard to declaration of notified areas for the purpose of Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 (Tamil Nadu Act 31 of 1959). [Laid on the Table of the House under section 44 (3) of the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 (Tamil Nadu Act 31 of 1959).]

@ 28. Notification issued with Roc. No. 180401 69-P1, dated the 3rd March 1970, in regard to exclusion of Pokkampatti area from the existing Pannikundu Panchayat in Tirumangalam taluk of Madurai district for constitution into a separate Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 29. Notification issued with G.O. Ms. No. 2817, Agriculture dated the 23rd October 1971, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 30. Notification issued with G.O. Ms. No. 3312, Public (Services-A), dated the 2nd November 1971, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, relating to exclusion of the post of Assistant Director of Technical Education (Administration) in the Directorate of Technical Education, when appointment is made by recruitment by transfer of a Deputy Collector in the Tamil Nadu Civil Service (Executive Branch) from the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of Constitution of India).]



@ 31. Notification issued with G.O. Ms. No. 2955, Agriculture dated the 10th November 1971, in regard to regulation of trade for the purchase and sale of gingelly at Lalgudi, Perambalur, Thuraiyur, Pudukkottai and Thottiam in Tiruchirappalli district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 32. Notification issued with G.O. Ms. No. 2950, Agriculture, dated the 10th November 1971 in regard to regulation of trade over the purchase and sale of tapioca in the Tiruchirappalli district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 33. Notification issued with G.O. Ms. No. 3360, Public (Services-A), dated the 3rd November 1971, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for exclusion of the temporary post of Technical Assistant for Photography and Block making in Tamil Nadu Industries Subordinate Services from the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

@ 34. Notification issued with G.O. Ms. No. 2949, Agriculture, dated the 10th November 1971, in regard to regulation of trade over the purchase and sale of turmeric in the Tiruchirappalli district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 35. Notification issued with G.O. R. No. 2024, Revenue, dated the 8th November 1971, in regard to exemption from liability to entertainments tax to the benefit film show organised by the Director, Vocational Service Rotary Club, Madras on 14th November 1971 at Devi Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

@ 36. Notification issued with G.O. Ms. No. 3219, Revenue, dated the 20th October 1971, in regard to certain amendments to Tamil Nadu Betting Tax Rules, 1935. [Laid on the Table of the House under section 10 (4) of the Tamil Nadu Betting Tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1935).]

@ 37. Notification issued with G.O. Ms. No. 3059, Revenue, dated the 16th October 1971, in regard to certain amendments to the Revenue Department's Notification published at page 1379 of Part II—Section 1 of the Tamil Nadu Government Gazettee, dated the 26th August 1970 relating to revision of jurisdiction of Rent Courts and the Conciliation officers. [Laid on the Table of the House under sections 17 (3) and 61 (2) of the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Tamil Nadu Act XXIV of 1956) and the Tamil Nadu Public Trust (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Tamil Nadu Act 57 of 1961).]

@ 38. Notification issued with G.O. Ms. No. 3078, Revenue, dated the 19th October 1971, in regard to constitution of Rent Court at Chidambaram and appointment of Special Tahsildar, Rent Court, Chidambaram, South Arcot district as conciliation officer. [Laid on the Table of the House under sections 17 (3), 16 (2) and 14 (4) of the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Tamil Nadu Act XXIV of 1956) and the Tanjore Tenants and Pannaiyal Protection Act, 1952 (Tamil Nadu Act XIV of 1952) and the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Tamil Nadu Act 57 of 1961) respectively.]

B. *Reports, Notifications and other Papers.*

@ 30. Notification issued with G.O. Ms. No. 2892, Revenue, dated the 5th October 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) for sanction of interest free loans to Scheduled Castes (Hindus) to start petty trades.

@ 31. Notification issued with G.O. Ms. No. 2352, Revenue, dated the 26th August 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the transfer deeds of stock certificates executed in connection with the loans raised by *the Tamil Nadu Electricity Board* from 1968 onwards.

@ 32. Notification issued with G.O. Ms. No. 2760, Revenue, dated the 22nd September 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the Endowment Declaration Sub-Trust Deed in favour of the Ariya Vaisya High School, Pudumandapam of Madurai district.



@ 33. Notification issued with G.O. Ms. No 3349, Revenue, dated the 3rd November 1971 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the Settlement deed to be executed in favour of Dr. Zakir Husain College Management Committee, Ilayangudi of Ramanathapuram district.

@ 34. Notification issued with G.O. Ms. No. 2835, Revenue, dated the 25th September 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the mortgage deed to be executed by the Tamil Nadu Electricity Board for taking a loan from the Life Insurance Corporation of India during the current year 1971–72.

@ 35. Resume of work transacted by the Tamil Nadu Legislative Assembly from 4th to 18th December 1971 (Fifth Assembly—Third Session Second Meeting).

@ 36. The Tamil Nadu Labour Welfare Fund Bill, 1972.

£ 37. Demands for Grants and Detailed Budget Estimates for 1972–73 (In three volumes).

£ 38. Statement of Posts and Scales of Pay.

£ 39. Detailed Public Works Budget.

£ 40. Detailed Irrigation Budget.

£ 41. Plan Supplement (English and Tamil).

£ 42. Introduction to Budget (English and Tamil).

---

@ Despatched to members on 21st February 1972.

£ Circulated to Members on 28th February 1972.

## இணைப்பு—1.

(22-ம் பக்கத்தில் 272-ம் எண்ணுள்ள குறிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படிக்கும் பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை உதவித் தொகை வழங்கி வருகிறது. இவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை இருவகைப்படும். ஒன்று 'உண்டி-உறையுள் உதவித் தொகை' (Residential scholarship) மற்றொன்று சம்பள உதவித்தொகை (Non-residential scholarships) ஆகும். இச் சலுகைகள் 40 விழுக்காடு மதிப்பெண் பெற்று ஆண்டு வருமானம் ரூ. 2,000 க்கு மேற்படாத குடும்பத்தைச் சேர்ந்த பின் தங்கிய வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் உண்டு.

உண்டி-உறையுள் சலுகை பின்தங்கிய வகுப்பினருக்கு கல்லூரிப் படிப்புக்கு மட்டும் கொடுக்கப்படும். 9, 10, 11-ம் ஆம் வகுப்புகளில் படிக்கும் பின்தங்கிய மாணவர்களுக்கு கட்டணங்கள் (Fees) புத்தகச் செலவு, தனிக் கட்டணங்கள் (Special fees) முதலியவை ஈடு செய்யப்படுகின்றன. இவர்களுக்கு உண்டி உறையுள் சலுகை கிடையாது.

ரூ. 1,500 க்கு உட்பட்ட வருமானமுள்ள பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு கல்வித் துறையினர் அரைச் சம்பளச் சலுகை அளிக்கின்றனர். மீதியுள்ள அரைச் சம்பளத்தை பின்தங்கிய வகுப்பினர் துறை அளிக்கிறது. ரூ. 1,500 க்கு மேல் ரூ. 2,000 வரை வருமானமுள்ள பின் தங்கிய மாணவர்களுக்கு பிற்பட்ட வகுப்பினர் நலத்துறை அரைச் சம்பளச் சலுகை அளிக்கிறது. குறிப்பிட்ட சில டெக்னாலஜிக்கல் (Technological) படிப்புகளுக்கு முழுச் சம்பள சலுகை அளிக்கப்படுகிறது.

ஆசிரியர் பயிற்சி பள்ளியில் பயின்று வரும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு கல்வித்துறையினரால் கொடுக்கப்படும் உதவித் தொகை (Stipend) போக பிற்பட்ட வகுப்பினர் நலத்துறையும் கீழ்க்கண்டவாறு உதவி அளித்து வருகிறது.

| | Junior | Senior |
|---|---|---|
| Elementary Grade | Rs. 15 per annum | Rs. 18 per annum |
| Secondary Grade | Rs. 35 ,, | Rs. 25 .. |

(B.T.) அல்லது (Residential) பயிலும் மாணவர்களுக்கு உண்டி உறையுள் உதவித் தொகையும், அது அல்லாத உதவித்



தொகையும் அளிக்கப்படுகிறது. பின்தங்கிய வகுப்பு மாணவர்களின் கல்விக்கு உதவித் தொகை அளிக்க நடப்பு ஆண்டில் ரூ. 275.96 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் தங்கிப் படிக்க 28 விடுதிகள் அரசினரால் நடத்தப்படுகின்றன. 1971-72 ஆம் ஆண்டில் 50 விடுதிகள் திறக்க ஆணையிடப்பட்டுள்ளது. அதில் உறையும் மாணவர்களுக்கு உணவுக்கு மாதம் ஒன்றிற்கு தலைக்கு ரூ. 25 வீதம் செலவிடப்படுகிறது.

மேற்சொன்ன அரசினர் விடுதிகளைத் தவிர தனியாரால் நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாதமொன்றுக்கு தலைக்கு ரூ. 20 வீதம் மானியமாக அளிக்கப்படுகிறது.

Backward Classes students studying in High Schools and colleges are sanctioned scholarship by the backward classes Department. The scholarships are of two kinds. One is residential scholarship and another non-residential scholarship. This vill be applicable to students who secure 40 per cent marks and whose parental income does not exceed Rs. 2,000 per annum.

2. Residential scholarship is payable to Backward Classes students for post matric studies only. Students studying in the 9th, 10th and 11th standards are sanctioned fees, book money and special fees. They are not eligible for Boarding and Lodging charges.

3. Backward Classes students whose parental income does not exceed Rs. 1,500 per annum are paid half tuition fees by the Education Department. The remaining half tuition fees is being paid by Backward Classes Department. Students in the income group Rs. 1,501 -2,000 are being paid half tuition fees by the Backward Classes Department. Full tuition fees is being paid to certain technological courses.

4. In addition to the stipend paid by the Education Department to the Backward Classes students undergoing training in Teachers' Training School, the Backward Classes Department sanctions the following amount :—

| | Junior | Senior |
|---|---|---|
| Elementary Grade | Rs. 15 per annum | Rs. 18 per annum |
| Secondary Grade | Rs. 35 ,, | Rs. 25 per annum |

Students pursuing B.T. and B.Ed. are paid both residential and non-residential scholarships.

A provision of Rs. 275.96 lakhs has been made in the current year's budget for sanction of scholarship to Backward Classes students.

Twenty-eight hostels are being run by the Backward Classes Department for the benefit of Backward Classes students. Fifty new hostels have been ordered to be opened during 1971-72. A sum of Rs. 25 is being paid as food charges to the Backward Classes students staying there.

Besides the Government hostels referred to above, Backward Classes students staying in private hostels recognised by the Harijan Welfare Department are paid Rs. 20 per mensem each.

இணைப்புகள்

[1972 மார்ச் 1 — 1972 மார்ச் 1]

## இணைப்பு—II

### தமிழ் நாடு ரெவின்யூக் கணக்கின் வருவாயும் செலவினமும்

(ரூபாய் லட்சத்தில்).

அ. வருவாய்

| பெருந்தலைப்புகள். (1) | 1938–9. (2) | 1963–4. (3) | 1964–5. (4) | 1965–6. (5) | 1966–7. (6) |
|---|---|---|---|---|---|
| நிறுவன வரி நீங்கலாக ஏனைய வருமான வரிகள்— | | | | | |
| வருமான வரியில் பங்கு | 22·50 | 9,72·44 | 10,04·79 | 10,01·27 | 11,44·64 |
| வேளாண்மை வருமான வரி .. .. .. | .. | 1,35·15 | 1,42·86 | 1,22·73 | 1,45·82 |
| சொத்துரிமை வரி .. .. .. .. | .. | 38·47 | 59·76 | 58·91 | 35·86 |
| நிலவரி— | | | | | |
| பாசனத்திற்குரிய பகுதி உட்பட மொத்த வருவாய். | 7,00·78 | 8,92·37 | 8,45·10 | 9,12·84 | 6,65·94 |
| ஆயத் தீர்வை .. .. .. .. | 3,72·23 | 40·71 | 40·46 | 49·02 | 51·29 |
| வண்டி வரி .. .. .. | 81·22 | 12,33·59 | 12,99·99 | 13,31·11 | 14,96·08 |
| விற்பனை வரி .. .. .. .. | .. | 27,01·73 | 35,30·15 | 40,95·38 | 48,76·51 |
| ஏனைய வரிகளும் தீர்வைகளும் .. .. | 3·19 | 6,73·16 | 8,23·88 | 10,50·79 | 12,46·43 |
| முத்திரைத்தாள்கள் .. .. .. .. | 1,73·37 | 6,68·21 | 7,75·21 | 8,15·13 | 8,99·05 |
| பத்திரப்பதிவு . .. .. .. .. | 32·70 | 1,51·43 | 1,61·90 | 1,80·52 | 2,03·00 |
| வட்டி .. . .. .. .. .. | 19·73 | 11,21·65 | 12,37·46 | 13,76·54 | 15,27·45 |
| நீதி நிர்வாகம் .. .. .. .. | 15·39 | 87·03 | 94·90 | 1,21·80 | 1,23·90 |
| சிறைச்சாலைகள் .. .. .. .. | 5·98 | 41·19 | 45·65 | 42·35 | 58·94 |
| காவல்துறை .. .. .. .. | 5·66 | 31·39 | 43·27 | 51·00 | 41·38 |
| பல்வகைத் துறைகள் .. .. .. .. | 7·62 | 38·51 | 39·47 | 45·32 | 53·54 |
| துறைமுகங்களும் கப்பல் வழிகாட்டலும் .. | 44·67 | .. | .. | .. | .. |
| கல்வி ‖ .. .. .. .. .. | 8·35 | 1,54·72 | 1,09·93 | 91·20 | 1,09·79 |
| மருத்துவம் ‖ .. .. .. .. | 10·25 | 94·60 | 1,02·50 | 1,12·52 | 1,18·20 |

| பெருந்தலைப்புகள். (1) | 1967–8. (7) | 1968–9. (8) | 1969–70. (9) | 1970–71. (10) | 1971–72. திட்ட மதிப்பீடு. (திருத்தியது.) (11) | 1971–72. திருத்த மதிப்பீடு. (12) | 1972–73. திட்ட மதிப்பீடு. (13) |
|---|---|---|---|---|---|---|---|
| நிறுவன வரி நீங்கலாக ஏனைய வருமான வரிகள்— | | | | | | | |
| வருமான வரியில் பங்கு | 14,60·13 | 16,27·70 | 24,04·46 | 29,46·82 | 39,41·00 | 35,43·00 | 37,31·00 |
| வேளாண்மை வருமான வரி | 1,61·71 | 1,88·05 | 1,97·28 | 1,83·25 | 1,97·00 | 1,91·00 | 3,20·00 |
| சொத்துரிமை வரி | 1,19·57 | 55·38 | 58·87 | 63·78 | 60·00 | 58·00 | 58·00 |
| நிலவரி— | | | | | | | |
| பாசனத்திற்குரிய பகுதி உட்பட மொத்த வருவாய். | 8,16·84 | 3,28·67* | 6,35·18 | 4,14·92* | 5,05·58 | 7,29·10 | 7,27·26 |
| ஆயத் தீர்வை | 76·06 | 84·49 | 1,16·72 | 1,39·87 | 1,26·94 | 25,12·08 | 35,49·02 |
| வண்டி வரி | 16,83·26 | 18,65·17 | 19,46·98 | 21,84·15 | 23,05·16 | 23,63·37 | 24,27·42 |
| விற்பனை வரி | 56,47·74 | 61,20·04 | 72,15·47 | 81,85·51 | 93,19·48 | 95,50·18 | 1,04,90·18 |
| ஏனைய வரிகளும் தீர்வைகளும் | 15,22·00 | 16,70·15 | 18,04·43 | 20,68·77 | 20,53·89 | 20,69·70 | 15,95.13 |
| முத்திரைத்தாள்கள் | 11,04·89 | 10,91·13 | 12,77·09 | 13,42·44 | 14,82·70 | 16,14·47 | 16,12·92 |
| பத்திரப்பதிவு | 2,29·81 | 2,59·52 | 2,76·11 | 3,35·95 | 3,16·60 | 3,37·33 | 3,41·33 |
| வட்டி | 20,63·67 | 31,17·60 | 19,01·61 | 19,36·75 | 19,82·40 | 21,11·55 | 26,93·01 |
| நீதி நிர்வாகம் | 1,37·91 | 1,55·30 | 1,80·15 | 1,81·00 | 1,92·09 | 1,40·77 | 1,26·00 |
| சிறைச்சாலைகள் | 41·31 | 53·59 | 63·11 | 73·85 | 53·63 | 62·17 | 61·83 |
| காவல்துறை | 56·44 | 57·12 | 67·17 | 49·98 | 58·38 | 57·58 | 54·21 |
| பல்வகைத் துறைகள் | 60·57 | 2,35·75 | 2,25·22 | 1,51·76 | 1,35·68 | 1,40·19 | 1,14·42 |
| துறைமுகங்களும் கப்பல் வழிகாட்டலும் | .. | .. | .. | .. | .. | .. | .. |
| கல்வி ‖ | 1,80·14 | 2,64·52 | 2,08·44 | 1,31·77 | 1,64·66 | 1,06·81 | 1,03·63 |
| மருத்துவம் ‖ | 1,86·09 | 1,02·39 | 2,94·14 | 2,60·08 | 2,45·17 | 2,93·23 | 2,90·49 |

*பாசனத்திற்கு உரிய )தொகை நீங்கலாக.

இணைப்பு II—தொடர்ச்சி.

தமிழ்நாடு ரெவினியூக் கணக்கில்— வருவாயும், செலவினமும்—தொடர்ச்சி.

(ரூபாய் லட்சத்தில்.)

அ. வருவாய்—தொடர்ச்சி.

| பெருந்தலைப்புகள். | 1938–9. | 1963–4. | 1964–5. | 1965–6. | 1966–7. | 1967–8. | 1968–9. | 1969–70. | 1970–71. | 1971–72. திட்ட மதிப்பீடு. (திருத்தியது.) | 1971–72. திருத்த மதிப்பீடு. | 1972–73. திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| பொதுச் சுகாதாரம் ‖ .. .. | 2·59 | 13·97 | 28·34 | 16·66 | 13·36 | 15·08 | 18·07 | 33·78 | 20·03 | 19·88 | 25·56 | 18·30 |
| வேளாண்மை ‖ .. .. .. .. | 3·12 | 2,80·74 | 3,30·32 | 3,84·40 | 4,51 78 | 6,12·85 | 6,01·02 | 8,29·03 | 7,38·05 | 7,13·28 | 7,14·71 | 7,96·64 |
| கால்நடை வளர்ப்பு ‖ .. .. .. | 1·02 | 16·95 | 19·06 | 30·65 | 32·34 | 41·50 | 41·19 | 40·51 | 40·30 | 36·78 | 39·85 | 42·21 |
| கூட்டுறவு ‖ .. .. .. .. .. | 4·18 | 35·04 | 36·90 | 59·33 | 64·84 | 59·79 | 60·91 | 89·39 | 86·23 | 80·60 | 107·76 | 91·76 |
| தொழில்கள் ‖ .. .. .. | 18·85 | 3,46·90 | 4,88·86 | 3,39·93 | 1,49·04 | 2,67·15 | 3,81·71 | 3,09·37 | 3,38·20 | 2,72·80 | 2,59·23 | 2,66·52 |
| சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி, உள்ளாட்சி மேம்பாட்டு வேலைகள்.‡ | .. | 2·57 | 3·81 | 6·78 | 9·93 | 17·39 | 12·10 | 10·99 | 10·82 | 10·40 | 9·90 | 10·30 |
| பல்வகை—சமூக—மேம்பாட்டு நிறுவனங்கள். | .. | 23·62 | 30·24 | 33·41 | 36·92 | 82·99 | 3,55·11 | 3,71·79 | 4,26·24 | 4,29·11 | 4,41·32 | 5,31·56 |
| பாசனம்— | | | | | | | | | | | | |
| நேரடி வருவாய் ‡ .. .. .. .. | 6·31 | 9·02 | 10·60 | 14·80 | 13·26 | 20·43 | 1,93·16 | 2,33·20 | *2,19·46 | 55·15 | 60·28 | 59·56 |
| (கழிக்கவும்)—நடைமுறை செலவுகள் .. | —38·39 | § | § | § | § | § | § | § | § | § | § | § |
| நிகர வருவாய் .. | — 32·08 | 9·02 | 10·60 | 14·80 | 13·26 | 20·43 | 1,93·16 | 2,33·20 | *2,19·46 | 55·15 | 60·28 | 59·56 |
| நேரடி வருவாய் ‡ .. .. .. .. | 1·99 | 2·10 | 2·88 | 5·13 | 6·18 | 23·60 | 1,60·19 | 5·33 | *1,24·79 | 5·68 | 5·64 | 4·54 |
| பொதுப் பணிகள் .. .. .. .. | 25·12 | 1,14·56 | 1,24·34 | 1,52·35 | 1,51·55 | 1,31·20 | 1,45·81 | 1,60·27 | 1,99·48 | 1,65·61 | 1,44·74 | 1,50·83 |
| மின்சாரத் திட்ட (மொத்த) வருவாய் .. | 42·51 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| (கழிக்கவும்)—நடைமுதல் செலவுகள் .. | — 24·81 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| நிகர வருவாய் .. | 17·70 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| சாலை, நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்கள் (b) மொத்த வருவாய்கள். | .. | 5,18·73 | 6,23·65 | 7,95·94 | 9,30·11 | 11,59·50 | 15,60·85 | 17,64·26 | 17,02·39 | 20,00·34 | 17,63·59 | 11,05·96 |
| நடைமுதல் செலவுகள் .. .. .. | .. | § | § | § | § | § | § | § | § | § | § | § |
| நிகர வருவாய் .. | .. | 5,18·73 | 6,23·65 | 7,95·94 | 9,30·11 | 11,59·50 | 15,66·85 | 17,64·26 | 17,02·39 | 20,00·34 | 17,63·59 | 11,05·96 |

*இதில் நிலவரித் தொகையும் அடங்கும்

‡ நிலவரி அடங்கவில்லை.

§ 1962 ஏப்ரல் 1-ம் தேதி முதல் செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது.

‖ இத் துறைகள் சம்பந்தப்பட்ட மேம்பாட்டு திட்டங்களுக்காக மத்திய அரசினிடமிருந்து கிடைக்கும் உதவித் தொகை "LVI. மத்திய அரசினிடமிருந்து கிடைக்கும் உதவி மானியம்" என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

(b) 1949–50-க்கு முன்பு, வரவுகள் "பல்வகை" என்னும் வருவாய்த் தலைப்பின்கீழ்ச் சேர்க்கப்பட்டன. நடைமுதல் செலவுகள் "பல்வகை" என்னும் செலவுத் தலைப்பின்கீழ் காட்டப்பட்டன,

இணைப்பு II—தொடர்ச்சி.

தமிழ்நாடு ரெவின்யூக் கணக்கில்—வருவாயும், செலவினமும்—தொடர்ச்சி.

(ரூபாய் லட்சத்தில்)

| பெருந் தலைப்புகள். | 1938-9. | 1963-4. | 1964-5 | 1965-6. | 1966-7. | 1967-8. | 1968-9. | 1969-70. | 1970-71. | 1971-72. திட்ட மதிப்பீடு (திருத்தியது). | 1971-72. திருத்த மதிப்பீடு. | 1972-73. திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| அ. வருவாய்க் கணக்கில்—தொடர்ச்சி. | | | | | | | | | | | | |
| ஓய்வு ஊதியம், ஏனைய ஓய்வுகால சலுகைகள் ஆகியவை குறித்த உதவித் தொகைகளும் வசூல் தொகைகளும். | 2·88 | 24·62 | 25·76 | 33·20 | 28·75 | 34·10 | 33·53 | 37·36 | 41·77 | 38·11 | 35·25 | 35·86 |
| எழுதுபொருள்-அச்சுத்துறை .. .. | 3·96 | 43·45 | 54·70 | 53·79 | 60·75 | 58·59 | 60·33 | 51·33 | 60·92 | 53·82 | 50·66 | 40·17 |
| காட்டுவளம்* .. .. .. .. .. | 45·63 | 2,59·03 | 3,07·62 | 2,80·78 | 3,18·91 | 3,38·65 | 3,36·71 | 3,35·81 | 3,66·08 | 3,51·64 | 3,71·12 | 3,56·81 |
| பல்வகை .. .. .. .. .. | 14·58 | 86·35 | 1,29·07 | 1,07·91 | 1,75·17 | 1,00·14 | 1,71·64 | 2,40·78 | 9,78·02 | 8,93·00 | 8,68·30 | 8,41·78 |
| மத்திய ஆயத் தீர்வையில் அரசின் பங்கு .. | † | 9,40·43 | 8,80·44 | 10,06·18 | 17,55·40 | 17,79·21 | 22,01·99 | 22,29·03 | 27,23·57 | 34,18·32 | 33,09·00 | 37,18·00 |
| மத்திய அரசினரின் உதவி மானியங்கள் .. | – | 16,70·30 | 18,97·35 | 23,69·83 | 23,10·00 | 28,76·04 | 41,40·62 | 26,51·57 | 25,96·15 | 25,60·99 | 36,30·73 | 33,37·24 |
| மத்திய, மாநில யூனியன் நேரடி ஆட்சிப் பகுதி அரசுகளிடையே பல்வகைச் சரிக் கட்டுதல்கள். | ·27 | 1·04 | ·85 | ·90 | 0·87 | 1·29 | 1·33 | 1·27 | 2·56 | 3·17 | 3·92 | 3·92 |
| வாணிக, ஏனைய நிறுவனங்களிடமிருந்து பங்கு வீதங்கள் முதலியன. | .. | 10·07 | 10·96 | 17·31 | 19·97 | 14·36 | 41·37 | 2·23 | 63·58 | 16·00 | 18·69 | 19.22 |
| ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும். | .. | 0·04 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| சிறப்பு வருவாய்கள் .. .. .. .. | .. | 0·89 | 25·24 | 1,11·80 | 1,28·20 | 1,57·30 | ‖ | ‖ | ‖ | ‖ | ‖ | ‖ |
| சிவில் பாதுகாப்பு .. .. .. .. | .. | .. | .. | ·34 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| பெரு மொத்தம் .. | 16,13·45 | 1,34,76·77 | 1,53,88·27 | 1,72,79·85 | 1,94,55·18 | 2,33,39·30 | 2,77,92·21 | 2,80,91·01 | 3,13,89·29 | 3,42,65·04 | 3,77,40·78 | § 3,97,27·08 |

†"மத்திய ஆயத் தீர்வைகள்" என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.
§நிகழ்கால வரி விதிப்பு விகிதப்படி
‖பொது நிர்வாகம் என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது

*இத் துறைகளுக்குச் சம்பந்தப்படுகிற மேம்பாட்டுத் திட்டங்களுக்காக மத்திய அரசினரிடமிருந்து கிடைக்கிற உதவித் தொகை "மத்திய அரசினர் உதவி மானியம்" என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

இணைப்பு II—தொடர்ச்சி.

தமிழ்நாடு ரெவின்யூக் கணக்கில்— வருவாயும், செலவினமும்—தொடர்ச்சி.

(ரூபாய் லட்சத்தில்.)

ஆ. ரெவின்யூக் கணக்கில்

| பெருந் தலைப்புகள். (1) | 1938-9. (2) | 1963-4. (3) | 1964-5. (4) | 1965-6 (5) | 1966-7. (6) |
|---|---|---|---|---|---|
| கூட்டு நிறுவன வரி நீங்கலாக ஏனைய வருமான வரிகள். | .. | 12·77 | 13·44 | 14·69 | 14·43 |
| நில வரி .. .. .. .. .. | 25·36 | 64·95 | 70·97 | 97·90 | 1,19,85 |
| ஆயத் தீர்வைகள் .. .. .. .. | 32·18 | ** | 0·04 | 0·04 | 0·06 |
| மோட்டார் வண்டிச் சட்டங்கள் குறித்த செலவு— | | | | | |
| உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் தொகை. | 72·77 | †† | †† | †† | †† |
| ஏனைய துறைச் செலவு .. .. .. .. | 2·29 | 17·51 | 17·96 | 29·02 | 33·24 |
| விற்பனை வரி .. .. .. .. .. | .. | 76·66 | 93·50 | 1,12·09 | 1,20·70 |
| ஏனைய வரிகளும் தீர்வைகளும்— | | | | | |
| உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கொடுக்கப் படும் தொகை. | .. | †† | †† | †† | †† |
| ஏனைய துறைச் செலவு .. .. .. .. | ·64 | 5·64 | 8·53 | 11·07 | 15·60 |
| முத்திரைத்தாள் .. .. .. .. | 4·72 | 31·22 | 31·62 | 25·20 | 19·31 |
| பத்திரப் பதிவு .. .. .. .. | 29·13 | 50·06 | 55·50 | 64·80 | 70·36 |
| கடன்கள், ஏனைய பொறுப்புகளின்மீது வட்டி. | 58·54 | 11,28·86 | 12,91·27 | 15,94·13 | 19,86·53 |
| (கழிக்கவும்)—வாணிகத் துறையினருக்கு மாற்றப்பட்ட வட்டி. | —1,07·54 | aa | aa | aa | aa |
| சாதாரண வருவாயிலிருந்து கொடுக்கப்பட்ட நிகரத் தொகை. | 49·00 | 11,28·86 | 12,91·27 | 15,94·13 | 19,86·53 |

| பெருந் தலைப்புகள். (1) | 1967-68. (7) | 1968-69. (8) | 1969-70. (9) | 1970-71. (10) | 1971-72. திட்ட மதிப்பீடு (திருத்தியது). (11) | 1971-72. திருத்த மதிப்பீடு. (12) | திட்ட மதிப்பீடு 1972-73. (13) |
|---|---|---|---|---|---|---|---|
| கூட்டு நிறுவன வரி நீங்கலாக ஏனைய வருமான வரிகள். | 11·10 | 16·48 | 23·09 | 24·49 | 27·61 | 27·20 | 27·17 |
| நில வரி | 1,31·10 | 1,69·43 | 1,90·16 | 2,09·06 | 2,51·77 | 2,64·25 | 2,47·42 |
| ஆயத் தீர்வைகள் | 0·06 | 1·12 | 3·62 | 3·88 | 4·41 | 46·04 | 64·91 |
| மோட்டார் வண்டிச் சட்டங்கள் குறித்த செலவு— | | | | | | | |
| உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் தொகை. | †† | †† | †† | †† | †† | †† | †† |
| ஏனைய துறைச் செலவு | 31·57 | 34·61 | 38·56 | 42·36 | 52·13 | 45·81 | 52·63 |
| விற்பனை வரி | 1,33·06 | 1,55·71 | 1,70·50 | 1,96·30 | 2,35·15 | 2,50·18 | 2,33·75 |
| ஏனைய வரிகளும் தீர்வைகளும்— | | | | | | | |
| உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கொடுக்கப் படும் தொகை. | †† | †† | †† | †† | †† | | |
| ஏனைய துறைச் செலவு | 21·34 | 18·18 | 18·19 | 25·77 | 24·93 | 32·28 | 32 37 |
| முத்திரைத்தாள் | 26·44 | 27·32 | 30·86 | 33·53 | 31·87 | 27·83 | 27 72 |
| பத்திரப் பதிவு | 70·58 | 82·17 | 89·49 | 99·67 | 1,20·65 | 1,28·05 | 1,27·00 |
| கடன்கள், ஏனைய பொறுப்புகளின்மீது வட்டி. | 22,83·55 | 24,71·60 | 28,67·12 | 28,08·05 | 33,79·88 | 39,22·83 | 36,46·15 |
| (கழிக்கவும்)—வாணிகத் துறையினருக்கு மாற்றப்பட்ட வட்டி. | aa | aa | aa | aa | aa | aa | aa |
| சாதாரண வருவாயிலிருந்து கொடுக்கப்பட்ட நிகரத் தொகை. | 22,83·55 | 24,71·60 | 28,67·12 | 28,08·05 | 33,79·88 | 39,22·83 | 36,46·15 |

** "விற்பனை வரி" என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

†† "ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்" என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

aa 1962 ஏப்ரல் 1-ம் தேதி முதல் " XVI. வட்டி" என்பதன்கீழ் வரவுகளாகக் காட்டப்படுகிறது.

இணைப்பு II—தொடர்ச்சி.

தமிழ்நாடு ரெவின்யூக் கணக்கில்— வருவாயும், செலவினமும்—தொடர்ச்சி.

(ரூபாய் லட்சத்தில்.)

| பெருந் தலைப்புகள். | 1938–9. | 1963–4. | 1964–5. | 1965–6. | 1966–7 | 1967–68. | 1968–69. | 1969–70. | 1970–71. | 1971–72. திட்ட மதிப்பீடு (திருத்தியது). | 1971–72. திருத்த மதிப்பீடு. | 1972–73 திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11 | (12 | (13) |
| **ஆ. வருவாய்க் கணக்கில் செலவினம்—தொடர்ச்சி.** | | | | | | | | | | | | |
| கடன் குறைப்பு அல்லது தவிர்ப்புத் தொகை ஒதுக்கம். | 5·13 | 1,23·90 | 1,25·96 | 1,43·47 | 6,88·86 | 7,72·40 | 8,54·72 | 8,57·13 | 9,67·82 | 10,27·85 | 10,27·85 | 38,77·03 |
| மாநில சட்ட மன்றமும் தேர்தல்களும் .. | ‖ | 20·14 | 27·45 | 39·66 | 73·95 | 61·18 | 29·19 | 45·61 | 1,59·05 | 51·16 | 49·92 | 40·67 |
| பொது நிர்வாகம் .. .. .. .. | 2,76·70 | 6,95·46 | 8,20·72 | 9,59·71 | 10,11·88 | 10,38·72 | 10,96·18 | 11,88·42 | 15,54·22 | 17,24·04 | 17,34·64 | 16,90·11 |
| நீதி நிர்வாகம் .. .. .. .. | 90·63 | 1,67·37 | 1,73·27 | 1,98·83 | 2,18·83 | 2,40·90 | 2,59·82 | 2,74·28 | 2,91·65 | 3,50·46 | 3,49·67 | 3,51·12 |
| சிறைச்சாலைகள் .. .. .. .. | 23·22 | 1,45·37 | 1,72·03 | 1,93·39 | 1,95·17 | 1,74·81 | 1,76·42 | 1,98·74 | 2,24·87 | 1,95·83 | 2,00·50 | 2,00·87 |
| காவல் துறை .. .. .. .. .. | 1,60·96 | 6,75·84 | 7,53·09 | 9,46·10 | 10,49·46 | 11,37·94 | 13,03·66 | 13,66·43 | 15,41·18 | 17,44·27 | 18,54·17 | 18,00·50 |
| பல்வகைத் துறைகள் .. .. .. .. .. | 21·11 | 66·44 | 74·17 | 82·90 | 98·22 | 1,08·28 | 10,69·94 | 12,82·84 | 8,13·29 | 7,95·46 | 6,06·55 | 3,57·99 |
| விஞ்ஞானத் துறைகள் .. .. .. | 0·96 | 6·64 | 7·83 | 7·27 | 8·19 | 8·56 | 9·30 | 10·12 | 10·29 | 15·28 | 17·25 | 14·98 |
| கல்வி .. .. .. .. .. .. | 2,61·98 | 27,41·46 | 31,73·86 | 37,85·13 | 43,85·62 | 53,55·50 | 57,51·48 | 65,74·23 | 72,54·08 | 81,84·00 | 85,52·93 | 89,84·6 |
| மருத்துவம் .. .. .. .. .. .. | 98·14 | 8,20·24 | 8,57·72 | 10,32·80 | 11,73·17 | 12,70·31 | 14,60·28 | 16,81·08 | 18,55·36 | 20,98·21 | 21,69·80 | 22,23·495 |
| பொதுச் சுகாதாரம் .. .. .. .. | 26·57 | 2,41·41 | 2,89·43 | 3,62·07 | 5,02·16 | 5,19·25 | 5,95·60 | 7,48·06 | 8,50·08 | 12,21·62 | 11,68·38 | 12,45·11 |
| வேளாண்மை .. .. .. .. .. | 20·62 | 6,81·90 | 8,42·18 | 10,67·97 | 11,80·54 | 13,39·92 | 13,85·06 | 15,83·48 | 16,72·78 | 18,83·83 | 20,00·64 | 20,15·76 |
| கால்நடை வளர்ப்பு .. .. .. .. | 12·85 | 1,89·01 | 2,21·95 | 3,30·85 | 3,37·08 | 3,55·41 | 3,57·71 | 3,50·65 | 3,06·12 | 3,62·91 | 4,26·35 | 4,30·60 |
| கூட்டுறவு .. .. .. .. .. .. | 13·82 | 2,29·59 | 2,63·39 | 2,84·33 | 2,54·39 | 2,65·57 | 4,04·67 | 3,81·57 | 4,35·79 | 5,78·97 | 5,39·00 | 5,51·09 |
| தொழில்கள் .. .. .. .. .. .. | 27·54 | 4,94·87 | 6,30·39 | 6,56·65 | 2,51·07 | 3,56·39 | 3,62·12 | 4,26·54 | 4,32·84 | 4,82·61 | 5,35·47 | 4,83·74 |
| சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி, உள்ளூர் மேம்பாட்டு வேலைகள். | ** | 6,68·65 | 6,80·65 | 7,52·72 | 6,40·66 | 6,38·89 | 6,09·31 | 6,07·92 | 6,89·83 | 7,63·15 | 10,28·32 | 9,93·87 |
| தொழிலாளரும் வேலை வாய்ப்பும் .. .. | † | 1,28·94 | 1,50·18 | 1,88·56 | 2,04·05 | 1,91·67 | 1,96·17 | 77·91 | 85·87 | 99·67 | 1,00·66 | 1,00·29 |
| பல்வகை—சமூக, மேம்பாட்டு நிறுவனங்கள் முதலியவை. | § | 4,80·21 | 5,30·44 | 5,85·64 | 6,89·27 | 7,84·93 | 11,06·61 | 12,37·96 | 14,38·37 | 17,13·81 | 18,07·13 | 19,95·65 |

‖ "பொது நிர்வாகம்" என்பதன் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.
† "47 பல்வகைத் துறைகள்" என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

** "63-B. சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி, உள்ளூர் மேம்பாட்டுப் பணிகள்" என்பதன் கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

§ நிகழ்கால வரி விதிப்பு வீதப்படி.

[1972 மார்ச் 1

இணைப்பு

தமிழ்நாடு ரெவின்யூக் கணக்கில்—



1972 மார்ச் 1]

II—தொடர்ச்சி.

வருவாயும், செலவினமும்—தொடர்ச்சி.

(ரூபாய் லட்சத்தில்.)

ஆ. வருவாய்க் கணக்கில செலவினம்—தொடர்ச்சி.

| பெருந் தலைப்புகள் | 1938–9. | 1963–4 | 1964–5. | 1965–6. | 1966–7. | 1967–68. | 1968–69. | 1969–70. | 1970–71. | 1971–72. திட்ட மதிப்பீடு. (திருத்தியது. | 1971–72. திருத்த மதிப்பீடு. | 1972–73. திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| பாசனம்—மூலதனக் கணக்கு வைத்துள்ளவேலைகள் மீதான வட்டி. | 87·59 | 4,39·38 | 4,67·51 | 5,12·46 | 5,66·84 | 6,29·78 | 6,86·91 | 7,24·61 | 8,10·15 | 8,34·85 | 9,26·15 | 9,56·78 |
| பாசனம்—சாதாரண வருவாயிலிருந்து செலவு செய்யப்பட்ட ஏனைய வருவாய்ச் செலவு. | 39·09 | 1,76·07 | 1,64·86 | 1,95·40 | 2,22·19 | 3,11·18 | 3,78·89 | 4,24·33 | 4,44·10 | 4,04·97 | 4,[illegible]·91 | 4,71·19 |
| பாசனம் முதலிய வேலைகளை நிறைவேற்றுதல். | 1·25 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| பாசன, நீர்வழி, கரையுயர்த்து, வடிகால் வேலைகளுக்கான மூலதனச் செலவு. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| பொதுப்பணிகள் .. .. | 10,19·70 | 1,00·34 | 9,60·05 | 11,86·63 | 11,35·27 | 11,93·38 | 11,15·18 | 16,29·01 | 14,16·00 | 15,75·25 | 15,83·77 | 16,02·71 |
| பொதுப் பணிகளுக்கான மூலதனச் செலவு. | .. | .. | .. | .. | 4·37 | 7·42 | 12·46 | 61·22 | 75·22 | 2,20·10 | 1,67·60 | 79·16 |
| சாலை, நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்கள். | * | 5,35·81 | 6,50·50 | 8,31·03 | 9,86·76 | 12,14·16 | 16,16·60 | 17,90·58 | 18,57·51 | 21,56·41 | 18,98·96 | 10,45·56 |
| மின்சாரத் திட்டங்களின் மூலதனச் செலவின்பேரில் வட்டி. | 18·92 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| பஞ்சத் தணிப்பு .. .. | 16·04 | 58·38 | 72·09 | 94·37 | 50·00 | 50·00 | 50·00 | 13,24·35 | 2,47·46 | 66·49 | 2,36·63 | 1,64·59 |
| ஓய்வூதியமும், ஏனைய ஓய்வு கால சலுகைகளும். | 97·12 | 3,56·16 | 3,39·48 | 3,40·51 | 3,49·69 | 3,60·65 | 4,05·34 | 4,26·83 | 5,25·07 | 4,68·98 | 5,47·83 | 5,38·85 |
| பிரதேச, அரசியல் காரண ஓய்வூதியங்கள். | .. | ·60 | ·33 | ·29 | 0·32 | 0·43 | 0·75 | 0·06 | 0·35 | 0·33 | 0·45 | 0·45 |
| முன்னாள் சமஸ்தான மன்னர்களுக்கு உபகாரத் தொகைகளும், படிகளும். | .. | 3·73 | 2·37 | 2·34 | 2·15 | 2·59 | 2·90 | 2·08 | 2·17 | 2·02 | 2·24 | 2·24 |
| எழுதுபொருள்—அச்சுத் துறை. | 27·07 | 1,65·91 | 1,64·21 | 2,02·73 | 1,96·99 | 2,15·81 | 2,52·70 | 2,48·24 | 3,55·12 | 3,97·11 | 3,93·39 | 3,94·61 |
| காட்டு வளம் .. .. | 40·17 | 1,06·15 | 1,26·82 | 1,37·47 | 1,47·24 | 1,69·59 | 2,19·00 | 1,94·23 | 2,07·13 | 2,20·91 | 2,23·63 | 2,32·84 |

* கோரிக்கை 9-ன் கீழ் "26. பல்வகை துறைகள்" என்னும் தலைப்பில் காட்டப்பட்டுள்ளது.

இணைப்பு II—தொடர்ச்சி

தமிழ்நாடு ரெவின்யூக் கணக்கில்— வருவாயும், செலவினமும்—தொடர்ச்சி.

(ரூபாய் லட்சத்தில்.)

| பெருந் தலைப்புகள். | 1938-9. | 1963-4. | 1964-5. | 1865-6. | 1966-7. | 1967-68. | 1968-69. | 1969-70. | 1970-71. | 1971-72. திட்ட மதிப்பீடு (திருத்தியது). | 1971-72. திருத்த மதிப்பீடு. | 1972-73 திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| ஆ. வருவாய்க் கணக்கில் செலவினம்—தொடர்ச்சி. | | | | | | | | | | | | |
| பல்வகை .. .. .. | 4.45 | 2,82·51 | 3,19·35 | 3,43·45 | 3,87·03 | 4,83·98 | 5,66·49 | 6,90·59 | 13,32·15 | 12,74·47 | 13,40·23 | 13,40·66 |
| ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக மாற்றுதல். | .. | 6·08 | 4·47 | 8·11 | 8·66 | 7·76 | 12·43 | 6·28 | 10·71 | 9·64 | 10·06 | 10·56 |
| பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். | .. | 3,94·48 | 4,49·21 | 5,33·80 | 5,92·94 | 6,46·06 | 7,69·06 | 7,76·53 | 8,38·15 | 798·80 | 8,24·98 | 8,21·24 |
| சிறப்புச் செலவினங்கள் .. | .. | 9·03 | 30·98 | 1,07·35 | 1,47·22 | 7,09·80 | † | † | † | † | † | † |
| தேசிய நெருக்கடி சம்பந்தப்பட்ட செலவு. | .. | .. | .. | 3·41 | 2·38 | 0·51 | 0·56 | .. | .. | .. | .. | .. |
| பெரு மொத்தம் .. | 16,09·72 | 1,34,99·74 | 1,51,29·80 | 1,80,66·34 | 2,01,42·70 | 2,33,32·53 | 2,60,94·13 | 3,06,23·50 | 3,21,47·89 | 3,58,51·88 | 3,75,66·53 | 3,94,77·85 |
**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** கன்னியாகுமரி மாவட்டத்திலே பல பாரஸ்ட் ஏரியாக்களைத் தனிப்பட்டவர்கள் ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் அரசாங்கம் வசப்படுத்தி நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்க முன்வருமா? ஒரு நபர் 90 ஏக்கருக்குப் பதிலாக 900 ஏக்கர் கையகப்படுத்தி வைத்திருக்கிறார். அது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நான் சென்றிருந்தபொழுது கனம் உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விவரங்கள் கேட்டிருக்கிறோம். யார் அதிகமாகக் கையகப்படுத்தியிருந்தாலும் அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது என்ற உறுதிமொழியை நான் தந்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அந்த நபர் யார் என்றாவது பெயர் சொல்ல முடியுமா?



1972 மார்ச் 3]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பள்ளக்குளம் எஸ்டேட் என்று சொல்லி ஒரு எஸ்டேட்காரர் வைத்திருக்கிறார்.

**திரு. த. சோலையா:** தலைவர் அவர்களே, வனத்துறை புறம்போக்கு நிலங்களை ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்ததாகச் சொன்னார்கள். மதுரை மாவட்டத்தில் எவ்வளவு என்ற விவரம் கொடுத்தார்கள். இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியான பகுதி, அங்கே ஏழை விவசாயிகளுக்கு எத்தனை பேர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** வறட்சிப் பகுதியான அந்த இடத்திலே விவசாயம் செய்யக்கூடிய வகையில் 5,200 ஏக்கர் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. தொ. ப. சீனிவாசன்:** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலைப் பகுதியில் காட்டுக்குள்ளே மலைவாசிகள் விவசாயம் செய்து வாழ்கிறார்கள். அவர்களுக்குப் பட்டா கொடுக்காவிட்டாலும்கூட, நீண்ட குத்தகைக்குக் கொடுக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அரசாங்கத்தினுடைய கொள்கைப்படி நிலமில்லாதவர்களுக்கு நிலம் வழங்கப்படுகிறது. ஆண்டுக்கு இவ்வளவு என்ற முறையிலே முடிவு செய்யப்பட்டு கொடுக்கப்பட்டு வருகிறது. கேட்கிறவர்களுக்கு எல்லாம் நிலம் கொடுப்பது முடியாது. கொடுக்கக்கூடிய நிலங்கள் எங்கு எங்கு இருக்கிறதோ அதைப் பரிசீலனை செய்து அரசாங்கம் நிலமில்லாதவர்களுக்குக் கொடுத்து வருகிறது.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் கோத்தகிரி மலைப் பகுதியில் உள்ள வனப் பகுதியில் காடுகள் இருக்கின்றன. அவைகளில் மரங்கள் எதுவுமில்லை. ஆனால் நம்முடைய எல்லையோரத்தில் மைசூர் மாநிலத்தின் எல்லை இருக்கிறது. அந்த எல்லைப் பகுதியிலே மைசூர் மாநில அரசு அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு அந்த நிலத்தைப் பிரித்துக் கொடுத்து விவசாயம் செய்கிறார்கள். அதைப்போல நம்முடைய பகுதியிலேயும் தரிசாக இருக்கும் நிலங்களை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 மார்ச் 3

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். தரிசாக இருக்கும் நிலம் மட்டும் அல்ல, விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய நிலங்கள் இருந்தால் விவசாயிகளுக்கு எந்த அளவிற்குக் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்குக் கொடுக்கலாம். மத்திய சர்க்காரிலே கூட அதிகமாகக் காட்டு இலாக்கா நிலங்களைக் கொடுக்கக் கூடாது என்ற தாக்கீதை ஆலோசனையாகச் சொல்லியிருக்கிறார்கள். மரங்கள் இல்லாவிட்டால் மரங்களை வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் மாநில அரசாங்கத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இருக்கிறது. ஓரளவு நிலமற்றவர்களுக்கு எந்த அளவிற்குக் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்குக் கொடுக்கலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சில ஏழைகள் வனப் பிரதேசத்தில் என்க்ரோச் செய்து வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அப்புறப் படுத்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் அந்த நடவடிக்கையை நிறுத்தி வைப்பதற்காவது, உறுதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, அந்த ஆக்கிரமிப்பு எப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு என்பதைப் பரிசீலனை செய்துதான் முடிவு சொல்ல முடியும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, வனத் துறைக்கு உரிய நிலங்களை விவசாயிகளுக்குத் தரும் நல்ல திட்டத்தைக் கொஞ்சம் துரிதப்படுத்தினால் விரைவில் விவசாயம் முன்னேறுவதற்கும். ஏழைகளின் வாழ்வுக்கும் வழி வகை ஏற்படும். எனவே இந்தத் திட்டத்தைத் துரிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். 50,000 ஏக்கர் நிலங்களை சுமார் 25,000 விவசாயிகளுக்கு ஒப்படைத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, மலைகளிலிருக்கும் காடுகளை அழிப்பதால் மழை வருவதில்லை என்று சொல்லப்படுகிறது காட்டு வன விலங்குகளும் அழிந்து வருகின்றன. எனவே சமவெளிகளில் வேலிகாத்தான் முட்செடிகள்



1972 மார்ச் 3]

உள்ள நிலங்களை ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்டில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களை விவசாயத்திற்குக் கொடுத்தால் நல்லதாக இருக்கும் அல்லவா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். பொதுவாக, தொழிற்சாலைக்கு வேண்டுமென்றால் சமவெளிப் பகுதிகளில் யூகலிப்டஸ்' போன்ற மரங்களை பல ஏக்கர்களில் பயிர் செய்து வருகிறார்கள். சமவெளியில் இருக்கும் நிலங்கள் வேளாண்மைக்குப் பயன்படும் என்று கருதினால் கொடுத்து வருகிறோம்.

**திரு. ஏ. கே. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் குடியாத்தம் தாலுக்காவில் ஏராளமான காட்டு நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் நிலை இருக்கிறது. நரிக் குறவர்கள் சுமார் 15 ஆண்டுக் காலமாக 40 ஏக்கர் நிலங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்று வரையில் தரப்படவில்லை. எனவே இனிமேலாவது அரசு தருவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இந்தக் கேள்வி பொதுப் படையான கேள்வியாகும். அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதியிலுள்ள நிலங்களைக் கொடுக்கச் சொல்லும் விண்ணப்பங்களைத் தரலாம். இதைப் பரிசீலனை செய்துதான் முடிவு செய்ய முடியும்.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் கோதமலை பகுதியில் ஏராளமான தரிசு நிலம் இருக்கிறது. இதை முன்னாள் மதிப்பிற்குரிய அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் நிலங்களைப் பார்வையிட்டு பட்டா கொடுப்பதாகச் சொன்னார்கள். மரங்கள் இல்லாவிட்டால் மழை பொழியாது என்ற கருத்துச் சொல்லப்பட்டது. இப்பொழுது அங்கே பட்டா வழங்கினால் ஏராளமான தென்னை மரங்கள். மாமரங்கள் வளர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும். எனவே அவ்வாறு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இதுவும் பரிசீலனைக்குரிய கருத்தாகும்.

[1972 மார்ச் 3

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, விவசாயத்திற்குச் சம்பந்தப்படாதவர்களுக்கு இப்படிப்பட்ட தரிசு நிலங்கள் வழங்கப்பட்டு உற்பத்தி செய்யாமல் கிடக்கிறது. எனவே, விவசாயம் செய்யக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு கொடுக்க ஆலோசிக்குமா? அதை முன்மாதிரியாகவாவது செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இதை கொஞ்சமும் விவசாயம் செய்யாதவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அரசு கொடுக்கவில்லை. வேளாண்மை செய்யும் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்பது கொள்கை. அப்படித்தான் கொடுக்கிறோம். குறிப்பிட்டுச் சொன்னார்கள் என்றால் கவனிக்கலாம், அதை ரத்து செய்யக்கூடிய அதிகாரம் இருக்கிறது.

**திரு. ஏ. ஆறுமுகம் :** தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் சிலயிடங்களில் இந்த ஆண்டு பட்டா வழங்கியிருக்கிறார்கள், ஆனால் நிலம் ஒப்படைக்கப்படவில்லை, எனவே விரைவில் நிலத்தை ஒப்படைக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து பரிசீலனைக்குரிய ஒரு பிரச்னையாகும்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவரவர்களே, ஆரணி வட்டத்தில் பூசிமலை குப்பம் என்று இருக்கிறது. அங்கே சிலோன் ரீப்பேட்ரியேட்ஸ்களுக்காக காட்டிலாக்கா நிலங்களை ஒப்படைத்திருக்கிறார்கள். ஏதோ 10, 12 குடும்பங்கள்தான் வந்திருக்கிறார்களே தவிர மற்றபடி யாரும் வரவில்லை. எனவே, மீதியுள்ள நிலங்களை அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்குக் கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இலங்கை அகதிகள் எவ்வளவு பேர்கள் வருவார்கள் என்று கணக்கிடப்பட்டு மத்திய சர்க்காரின் மூலம் தகவல் கொடுக்கப்பட்டு அப்படிப்பட்ட இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வர ஆரம்பித்திருக்கிறார்கள், வருவார்கள். அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதுவல்லாமல் ஏதாவது இருந்தால் குறிப்பிட்டுச் சொல்லலாம்.



1972 மார்ச் 3]

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, வன வளம் குறைந்து விட்டால் மழை வளம் குறைந்து விடுமென்ற காரணத்தால் வன மகோற்சவங்கள் நடத்தினார்கள். ஆனால் இன்று நல்ல காட்டுப் பகுதிகளை அழித்து உழவர்களுக்குச் சிலயிடங்களில் தரப்படுகின்றன. ஆனால் பலயிடங்களில் அப்படி அழிக்கப்படாமல் இருக்கும் காட்டு வளங்களை நல்ல முறையில் பாதுகாக்க அரசாங்கம் முயற்சி எடுத்துச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** மழை வளத்தைப் பெருக்க மர வளத்தைப் பெருக்குவது நல்ல யோசனை. வளத்தை அளிக்கும் இடங்களை யாருக்கும் கொடுக்க வேண்டுமென்பது கொள்கை அல்ல.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, வனத்துறைக்குச் சொந்தமான நிலங்களை ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க கூடாது என்று மத்திய சர்க்கார் யோசனை சொல்லியிருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அப்படியானால் அந்த வனத் துறையைப் பாதுகாக்க மத்திய சர்க்கார் ஏதாவது நமக்கு நிதி உதவி கொடுக்கிறதா ? அப்படியில்லையென்றால் இனியாவது நமது அரசு அதை வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, ஏழைகளுக்கு நிலங்களைக் கொடுக்க கூடாது என்ற தாக்கீது இல்லை. காட்டிலாக்கா நிலங்களை அதிகமாக விநியோகித்து விட்டால் மழை பெய்யாமல் போக வாய்ப்பு ஏற்படும், எனவே பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. எனவே, கொடுப்பதை யோசித்துப் பரிசீலித்துக் கொடுக்க வேண்டும். அதிகமாகக் கொடுக்க வேண்டாமென்று யோசனை சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது மத்திய சர்க்கார் வனத்துறைக்குச் சொந்தமான நிலங்களை அதிகமாக விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டாமென்று குறிப்பிட்டிருப்பதாகக் கூறினார்கள். இந்திய உபகண்டத்திலேயே தமிழக மக்கள்தான் விவசாயத்திலே நல்ல முறையில் கட்டுப்பாடு விவசாயம் செய்யக் கூடியவர்கள் என்று பெயரெடுத்தவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மற்ற மாநிலங்களில்

விவசாயத்திற்கு நிலங்களை எடுத்துக் கொடுக்க மத்திய அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா? இல்லையென்றால் அப்படி ஒரு திட்டத்தைத் தீட்டுவதற்கு நம்முடைய அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே. இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை ஆகும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, இந்த வன இலாக்காவைச் சேர்ந்த நிலங்களை எந்தெந்த ஜில்லாக்களிலே விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய, தனி நபர்களுக்கு எத்தனை ஏக்கர்கள் கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். பொதுப்படையான கேள்வி. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 50,000 ஏக்கர் நிலங்கள் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தனி நபர் என்ற முறையில் தனி நிலச்சுவாந்தார்களுக்குக் கொடுத்ததாக இல்லை. சட்டப்படி ஏலத்திலே எடுக்க வேண்டும், அதற்குச் சில விதிமுறைகள் இருக்கின்றன. அதற்கேற்றபடி எடுக்கலாம். தனிப்பட்டவர்களுக்கு விதிமுறைக்கு மாறாகக் கொடுத்ததாக ஞாபகம் இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, என்னுடைய கேள்வி விவசாயம் செய்வதற்கு என்று ஏழைகளுக்குக் கொடுப்பதில் ஒரு தனி நபருக்கு 'ஈச் மெம்பர்'-க்கு எத்தனை ஏக்கர் கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** கொடுக்கப்பட வேண்டியது 3 ஏக்கர் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. நா. வெ. குருசாமி :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது மதுரை மாவட்டத்தில் 25,000 பட்டாக்கள் வழங்கப்படவிருப்பதாகக் கூறினார்கள். அது எந்தப் பகுதி என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதிக்கு கிட்டத்தட்ட 15,000 ஏக்கர் வரும் என்று கருதுகிறேன்.





## அர்ச்சனைகளுக்கான திருமுறைகள்

* 294 வினா திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழில் அர்ச்சனை செய்வதற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருமுறைகள் என்னென்ன?

(இ) அவற்றை அச்சிட்டு வெளியிட அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் தமிழில் அர்ச்சனை செய்வதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைத் தமிழ்நாடு தெய்வீகப் பேரவை அச்சிட்டு வெளியிட்டிருப்பதால், அரசு அவற்றை அச்சிட்டு வெளியிடும் அவசியம் ஏற்படவில்லை.

**திரு. என். கிட்டப்பா :** சில கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று கேட்டால்தான் தமிழில் அர்ச்சனை செய்கிறார்கள். மற்ற நேரங்களில் வட மொழியில்தான் அர்ச்சனை செய்யப்படுகிறது. இந்நிலையை மாற்றி யாரேனும் வட மொழியில் கேட்டாலொழிய தமிழில்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** 1971-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் தேதிக்குப் பின்னால் தமிழில்தான் வழிபாட்டு முறை நடைபெற்று வருகிறது. வட மொழியில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று கேட்டால்தான் செய்யப்படுகிறது. இதிலே ஏதாவது புகார்கள் இருக்குமானால் உறுப்பினர் அவர்கள் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். தேவராசன் :** பக்தர்களின் நலனுக்காகத் தமிழ் அர்ச்சனைகளை இசைத் தட்டுகளாகப் பதிவு செய்து வெளியிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பக்தர்களின் நலனுக்காகத்தான் தமிழ் வழிபாட்டு முறையே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** சில கோயில்களில் தமிழில் பாடுகின்ற திருமுறைப் பாடல்களை ஓதுவார்கள் தான் பாடுகிறார்கள். ஐயர்கள் பெரும்பாலும் பாடுவதில்லை ஒரு சில கோயில்களில்

தான் ஐயர்கள் பாடுகிறார்கள். எல்லாக் கோயில்களிலும் ஐயர்களே, யார் அர்ச்சகர்களாக இருக்கிறார்களோ, அவர்களே பாட வேண்டுமென்று சட்டம் செய்ய அரசு முன்வருமா ? சைவத் திருமுறைகளைப் பற்றிச் சொன்னார்கள் ? வைஷ்ணவக் கோயில் களில் எந்தப் பாடல்களைப் பாடுகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தமிழ் வழிபாட்டு முறையில் ஐயர்களும் பாடித்தான் ஆகவேண்டும். இதிலே எந்த விதமான மாறுபட்ட நிலைமைக்கும் இடம் இல்லை. வைணவக் கோயில்களில் திவ்யப் பிரபந்தங்களில் இருந்து அர்ச்சனை நாமாவளி நடத்தப்படுகிறது.

**திரு. க. உரா. எட்மண்ட் :** பக்தர்கள் தமிழில் செய்யும் அருச்சனை தங்களுக்குப் புரியவில்லை என்று எதாவது தெய்வங் களிடமிருந்து அரசுக்குப் புகார்கள் வந்திருக்கின்றனவா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அரசுக்கு அப்படிப்பட்ட தகவல்கள் ஏதும் இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** அமைச்சர் அவர்களுடைய பதிலில் வழிபாட்டு முறைக்கு சைவத் திருமுறைகள் கையாளப்படுகின்றன என்று சொன்னார்கள். சமரசக் கொள்கையைப் பகுத்தறிவு உணர்வோடு பாடிய இராமலிங்க அடிகளாருடைய திருவருட்பாப் பாடல்கள் வழிபாடு செய்வதில் இடம் பெறுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தற்போது அருச்சனைக்குப் பயன்படுத்தப்படும் சைவத் திருமுறைகளை இயற்றியவர்கள் தமிழ்நாட்டில் சைவத் திருமுறைகளை உணர்த்திய பெரும் கவிஞர்கள்தான். திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், நக்கீரர், கபிலர், பரணர் போன்ற பழம் பெரும் புலவர்களுடைய சைவத் திருமுறைகள்தான் தற்போது அருச்சனைக்குக் கையாளப் பட்டு வருகின்றன. தேவையானால் இராமலிங்க அடிகளாருடைய திருவருட் பாடல்களை ஓதுவதிலே யாருக்கும் கருத்து மாறுபாடு கிடையாது.

**திரு. க. சுப்பு :** அண்மையில் நமது முதலமைச்சர் அவர்கள் பழனிக்குச் சென்றபோது அருச்சனை தமிழில் நடைபெற்றதா அல்லது சமஸ்கிருதத்தில் நடைபெற்றதா?





**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தூய தமிழில்தான் நடை பெற்றது அதிலே சந்தேகம் வர வேண்டிய அவசியமில்லை.

**திரு. தி. பொன்னுமலை :** சட்டமன்ற உறுப்பினர்கள் வந்த போது கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்தார்கள். அந்த ஒரு நாள் தவிர மற்ற நாட்களில் சமஸ்கிருதத்தில்தான் அருச்சனை செய்கிறார்கள். இது பற்றிய புகார் வந்து அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** எந்தக் கோயில் என்று உறுப்பினர் அவர்கள் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** அர்ச்சகர்கள் தமிழில் அருச்சனை செய்ய அச்சடித்த தாளைக் கையில் வைத்துக் கொண்டு அதைப் படிப்பதற்குள் தட்டுத்தடுமாறுகிறார்கள். ஆகவே, தமிழில் அருச்சனை செய்யும் அர்ச்சகர்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** நீண்ட நாட்களாக வட மொழியில் சொல்லிக் கொண்டு வந்த காரணத்தால் தற்போது சில பேர் தமிழில் சொல்லத் தடுமாறுகிறார்கள். அதுவும் கொஞ்ச நாட்களில் சீர்திருத்தப்பட்டுவிடும் என்று அரசாங்கம் நம்புகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** வெளியிடப்பட்டுள்ள சைவத் திருமுறைகளை ஒவ்வொரு கோயில்களுக்கும் வழங்க தகுந்த ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** தற்போது எல்லாக் கோயில்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். வடிவேல் :** நம்முடைய மாநிலத்தில் அர்ச்சகர் களாக இருப்பவர்களில் ஆதித் திராவிட மக்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** எல்லா சாதியினரும் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று அரசு சட்டம் இயற்றி இருக்கிறது. அந்தப் பிரச்சினை உச்ச நீதிமன்றத்தில் இருக்கும் காரணத்தால் இன்னும் அதைப் பற்றி முடிவு எடுக்க வில்லை.

[1972 மார்ச் 3

**திரு. கே. டி. கே. தங்கமணி :** வைணவ மதக் கோயில்களைப் பொறுத்தவரை இராமானுஜர் இயற்றிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் வடக்கே கூட பிரபலமாக இருக்கிறது. ஆகவே, வைணவக் கோயில்களில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தந் தான் அருச்சனைக்குப் பயன்படுத்தப்படும். மற்ற மொழிகளுக்கு இடம் இல்லை என்ற வகையில் அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** நாலாயிரத் திவ்வியப் பிரபந்தந்தான் வைணவக் கோயில்களில் வழிபாட்டு முறைக்குப் பயன்படுத்தப்படுகிறது.

### பிரகதீஸ்வரர் கோயிலைச் சேர்ந்த நிலங்கள்

* 295 வினா திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலுக்கு தற்போது சொந்தமான நஞ்சை புஞ்சை நிலங்கள் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :**

நஞ்சை நிலங்கள்—ஏக்கர் 42.05 சென்ட்.
புஞ்சை நிலங்கள்—ஏக்கர் 118.80 சென்ட்.

**திரு. என். கிட்டப்பா :** கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் காணப்படும் தகவல்படி தஞ்சைப் பெரிய கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை இப்போது யார் யார் வைத்திருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து அவற்றை மீட்க தனிக் குழு ஒன்றை அமைக்க அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** கிடைத்திருக்கும் ஆதாரங்களை எல்லாம் வைத்துத்தான் இந்த நிலங்கள் எல்லாம் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் என்று நிர்ணயித்திருக்கிறோம். கல்வெட்டுகளின்படி பார்த்தால் இலங்கை அரசர்கள் விளக்கேற்றி வைக்க, விளக்குக்கு எண்ணெய் தரவேண்டும் என்றெல்லாம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே, இந்தக் கல்வெட்டுக்களை வைத்துச் சொத்துக்களை மீட்பது என்பது தற்போது இயலாத காரியம்.



1972 மார்ச் 3]

**திரு. எஸ். வடிவேல் :** தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலுக்கு எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறது? எவ்வளவு காணாமல் போய் விட்டது? அப்படிக் காணாமல் போய்விட்ட நிலங்கள் கிடைத்து விட்டதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஏற்கெனவே இருக்கின்ற நிலங்களின் அளவு பற்றிச் சொன்னேன். நஞ்சை 42 ஏக்கர் 5 சென்ட்; புஞ்சை 118 ஏக்கர் 80 சென்ட்.

**திரு. கோவை செழியன் :** தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் தமிழக அரசின் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறதா அல்லது மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறதா? ராஜராஜ சோழன் சிலை வைக்கின்ற விஷயம் என்னவாயிற்று?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாநில சுயாட்சிக்கு இறைவனும் அருள் புரிய வேண்டும்.

### அரிசனங்களுக்குக் குடியிருப்புகள்

* 281 வினா.—திரு. கே. என் குமாரசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசனங்களுக்கு கூட்டுறவுத் துறையின் மூலம் வீடுகள் கட்ட, பணம் வழங்கும் திட்டம் தற்போது செயல்படுகிறதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தற்போது இல்லை. இக் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. என். குமாரசாமி :** கூட்டுறவு முறையில் வீடுகள் கட்ட பணம் வழங்கும் திட்டம் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டு பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரிசன மக்கள் இந்தத் திட்டம் எப்போது வரும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே அரசு சீக்கிரமாக முடிவு எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இன்னும் சில மாதங்களில் முடிவு எடுத்து அறிவிக்கப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** அந்தத் திட்டத்தை எந்த முறையில் கொண்டு வருவது என்று அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது? இப்போது பெரும்பகுதி நிலங்கள் வீட்டு மனையாக வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த மனைகளை ஈடாக வைத்துக் கொண்டு நகரங்களில் கடன் கொடுப்பது போன்று கிராமப் புறங்களிலும் எல்.ஐ.சி. கடனைப் பெற்றோ அல்லது பாங்குகளின் மூலமாகவோ கூட்டுறவு முறையில் பணம் கொடுக்க அரசு சீக்கிரத்தில் முடிவு எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** எல்.ஐ.சி. கடன் உதவி பெற்று ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அதன் மூலம் அவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதுதான் இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்பட்டு அமலுக்கு வரும்.

### மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலை

* 283 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் மணல்மேடு கூட்டுறவு நூற்பாலையில் 1970-க்குப் பின்னால் எத்தனை பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாயூரம் தாலுக்கா மணல்மேட்டிலுள்ள தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலையில் 31—12—1970க்குப் பின்னால் 11 தொழிலாளிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். பின்னர் இதில் 10 பேர்கள் மறுபடியும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு விட்டார்கள்.

### *Vanaspathi factory*

* 284 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to start a vanaspathi factory in the State; and

(b) if so, the details of the same?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம் வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலையில் கூட்டுறவுத் துறையில் வனஸ்பதி தொழிற்சாலை ஒன்றை நிறுவ ஒப்புக் கொண்டு, ஆலை நிறுவும் இடத்தையும் தேர்ந்தெடுத்து அதை வாங்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடனும் சில தனி நபர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. மேற்சொன்ன கழகமானது இந்த ஆலைக்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறது.

**திரு. கே. ஏ. வகாப் :** வட ஆற்காடு மாவட்டத்தில் இதற்கு முன்பே ஒரு வனஸ்பதி தொழிற்சாலை இருந்து அது இப்போது நடைபெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மணிலா உற்பத்தி செய்வதால் இந்தத் திட்டம் ஒரு பெரிய அடிப்படையில் அமைய வேண்டும். ஆகவே, அத் திட்டத்தின் விவரங்களையும், அதன் மூலதன விவரங்களையும் அரசு அறிவிக்குமா.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விவர அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அதைத் தயாரித்தவுடன் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கலாம்.

**திரு. என். கே. பழனிசாமி :** அதன் மூலதனச் செலவு எவ்வளவு என்று கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதுதான் சொன்னேன். அவர்கள் திட்டம் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஸ்டேட் மார்க்கெட்டிங் பெடரேஷனை அவர்கள் தீர்மானித்த பிறகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் அதைப் பற்றி கேள்வி கேட்கலாம்.

### அணைக்கட்டுத் திட்டங்கள்

* 285 வினா.—திரு. பி. எஸ். மணியம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாடு அரசால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ள அணைக்கட்டுத் திட்டங்கள் தற்போது எத்தனை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஐந்து திட்டங்களுக்கு மத்திய நீர் மின்விசைக் குழுவின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. பி. எஸ். மணியன் : இத் திட்டங்கள் எவ்வளவு ஆண்டுகளாக மத்திய அரசிடம் இருக்கின்றன? இது போன்ற முக்கியமான திட்டங்களுக்குக் கூட மத்திய அரசிடம் நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது என்ற நிலையை எடுத்துக் கூறி உடனடியாக இத் திட்டங்களை அங்கீகரிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தஞ்சாவூர் கால்வாய்களை நவீனப்படுத்துதல், கொல்லிமலையின் அருகே அய்யாற்றில் நீர்த் தேக்கம் கட்டுதல். பெரியார் கால்வாய்களை அபிவிருத்தி செய்தல், தொட்டஹள்ளா நீர்த் தேக்கத் திட்டம், காவேரியின் குறுக்கே வெள்ளத் தடுப்பு அணை யொன்றை கல்லணையில் கட்டுதல்.

இவைகள் மூன்று நான்கு ஆண்டுகள் ஆகின்றன, சில ஒரு ஆண்டு கால தாமதமாகின்றன. அடிக்கடி வற்புறுத்தி மத்திய அரசிடம் தெரிவித்து வருகிறோம்.

*Coastal road at Santhome*

* 286 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether a new road is being put up at Santhome, Madras along the seashore; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அகில இந்திய வானொலி நிலையத்தின் எதிரிலுள்ள மெரினா கடற்கரை முதல், ஓசியானிக் ஓட்டலின் எதிரில் தெற்கு கடற்கரையும் சேரும் இடம் வரையிலும், கடற்கரையை ஒட்டி ரூ 20.85 இலட்சம் செலவில் ஒரு விஸ்தரிப்புச் சாலை போடும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.



**சென்னை—மாமல்லபுரம்—செங்கற்பட்டு இருப்புப்பாதை**

287. வினா—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து கடற்கரை ஓரமாக மாமல்லபுரம் வழியாக செங்கற்பட்டுக்கு ரயில்பாதை அமைக்க இந்த அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கிட்டப்பா : மாமல்லபுரத்தை அடுத்துள்ள கல்பாக்கத்தில் அணுமின்நிலையம் அமைக்கப்படுவதாலும், சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரையில் புதிய குடியிருப்புகள் ஏராளமாக உருவாகி வருவதாலும் இந்த ரயில் பாதையை அமைக்க வேண்டி இனிமேலாவது நம் அரசு மத்திய அரசிடம் கோர முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே பல இருப்புப் பாதைகள் போடுவதற்கு இந்த அரசு வற்புறுத்தி இருக்கிறது. அவைகள் எடுத்துக்கொள்ளப்படாத நிலையில் இவைகளை வற்புறுத்துவதால் பயன்விளையும் என்று எதிர்பார்க்கப் படவில்லை.

திரு. கே. ஏ. வகாப் : இதற்கு முன்பு சின்னச்சேலம்-படாளம் இடையே ஒரு ரயில் பாதையை அமைப்பதற்காக வேண்டிய சிபார்சுகளை அரசு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? கேள்வி, சென்னை—மாமல்லபுரம்—செங்கற்பட்டு இருப்புப் பாதை பற்றியது. இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? அப்படிக் கேட்கக் கூடாது.

## கோமுகி நதியின் குறுக்கே மேம்பாலம்

*288. வினா—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி—கச்சிராயபாளையம் சாலையில் கோமுகி நதியின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இவ் வேலை வரைவு நான்காம் ஐந்தாண்டுத் திட்ட கால வேலைப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் நிதி நிலைமையை அனுசரித்து இவ்வேலை நிறைவேற்றப்படும்.

திரு. ந. நாச்சியப்பன்: இந்த மணிமுத்தா நதியின் குறுக்கே இருக்கிற கள்ளக்குறிச்சி—கச்சிராயபாளையம் சாலையில் மேம்பாலம் கட்டப்படாமல் இருப்பதால், அங்குள்ள அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடும்போது பேருந்துகள் செல்வதற்கு வசதியில்லாமல், மாட்டு வண்டிகள் போன்றவை செல்வதற்கு முடியாமல் இருக்கின்றன. ஒரு ஆண்டு ஒரு மாட்டு வண்டி அடித்துச் செல்லப்பட்டு அந்த மாடுகள் இறந்துபோய் விட்டன. அந்த வண்டியை ஓட்டிச் சென்றவர் இறந்து இருக்கிற நிலையும் ஏற்பட்டிருக்கிறது. மலைவாழ் மக்கள் அந்தப் பாலத்தின் மேல் வரக்கூடிய சூழ்நிலை இருப்பதால் விரைவாக இந்த மேம் பாலத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்த இடத்தில் A Bed-level causeway with cement concrete pavement இருக்கிறது. கோரிக்கை மேம்பாலம் கட்டுவது என்பது. இந்தக் கோரிக்கை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப் பட்டிருக்கிறது. நிதிநிலைமையை அனுசரித்து இது எடுத்துக் கொள்ளப்படும் என்ற பதில்தான் சொல்லியிருக்கிறேன்.





## *Sale of textiles in 'Kamadenu'*

*289 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact that reduction has been granted by Super-market, viz., Kamadenu at Madras over sale of Textiles during August-September 1971;

(b) if so, the details thereof;

(c) the loss sustained in this regard; and

(d) the reason for this reduction?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) 20 சதவீதத்திலிருந்து 75 சதவீதம் வரை விலைக் குறைப்பு செய்யப்பட்டது.

(உ) ரூ. 20,000 (தோராயமாக).

(எ) இரண்டாண்டுகளுக்கு மேலாக விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்த துணிகளை விற்பனை செய்வதற்காக விலைக் குறைப்பு செய்யப்பட்டது.

THIRU K. M. SUBRAMANIAM: Is it a fact that there have been cases of overpayment or purchase of textiles at higher rates. Have they been brought to the notice of the Government, particularly garments whose purchase prices have differed to the extent of Rs. 3 per garment? What action has been taken by this Government? Have any staff been dismissed or suspended?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: There is at the moment no charge about overpayment (Thiru K. M. Subramaniam: overcharging of prices and not overpayment) I have at the moment no charge about overcharging on the part of any employee or on the part of any other person.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்தக் காமதேனு கூட்டுறவு நிலையத்திற்கு என்று தனியாக ஒரு கட்டடம் கட்டும் உத்தேச முண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இது அரசாங்கத்தி னுடைய ஆலோசனையில் இருக்கிறது.

*திரு. ஆர். பொன்னப்பா நாடார் :* இந்தத் துணி ரகங்களை விற்றதில் ரூ. 20,000 நஷ்டம் ஏற்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்படித் துணி விலையைக் குறைத்துக் கொடுப்பதற்கு முன் அனுமதி ஏதாவது வழங்கப்பட்டிருந்ததா? அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :* முன் அனுமதி வழங்கப்பட்டது. அதற்குக் காரணம் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தேங்கிக் கிடந்த துணிகள் அழுக்கு அடைந்து சேதம் அடைந்திருக்கின்றன. அவைகளை விரைவாக விற்க வேண்டிய காரணத்திற்காக அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

THIRU K. M. SUBRAMANIAM : Is it not a fact that the cloth is purchased at ex-mill prices by the co-operative society through the central organisation and other retail merchants are purchasing at wholesale prices paying 10 to 12 per cent? Yet, as they have incurred loss in this society, does not the Government think that there is something very wrong with the purchases?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : I did not say that this society is incurring loss. (Thiru K. M. Subramaniam : in textiles). I did not say that the society had incurred loss even in textiles. I merely said that cloths which were stagnant and which were not sold over 12 years were disposed of at reduced rates.

MR. SPEAKER : Whether there is anything wrong in purchase or sale?

THIRU K. M. SUBRAMANIAM : I am only referring to purchases. I am not referring to sales. I said that the purchase rate was ex-mill and the selling rate was 20 to 25 per cent above the ex-mill price in all cloths except controlled cloth which is 20 per cent. How could this society have disposed of the soiled cloths at a particularly low price incurring a loss. That is my question.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : I have answered this question. The question is, has the society incurred loss in textiles also. I am answering, it has not incurred loss.

*திரு. ஜே. ஜேம்ஸ் :* தலைவரவர்களே, சென்னையிலுள்ள சூப்பர் மார்க்கெட்டில் தேங்கிக் கிடந்த துணிகள் அழுக்கடைந்து போன காரணத்தால் நஷ்டத்திற்கு விற்க வேண்டி வந்தது என்று





சொன்னார்கள். இந்த மாதிரியான நிலைமை வேறு எந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலாவது ஏற்பட்டு இருக்கிறதா? இல்லையென்றால், சென்னையிலுள்ள சூப்பர் மார்க்கெட்டில் மட்டும் அப்படி ஏற்பட்டதற்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :* தலைவரவர்களே. இரண்டாண்டுகளுக்கு மேல் விற்காமல் தேங்கிக் கிடந்த, சேதம் அடைந்த அழுக்கடைந்த துணிகளை மட்டும் நஷ்டத்திற்கு விற்க வேண்டி வந்தது என்று தெரிவித்தேன். மொத்தத்தில் துணி விற்பனை செய்வதில் அந்தக் கூட்டுறவு அங்காடி நஷ்டம் அடைந்ததாகச் சொல்லவில்லை. எல்லா அங்காடிகளிலும், எல்லாத் தொழில்களிலும் அழுக்கடைந்து நீண்ட காலம் விற்காமல் இருக்கும் துணிகளை குறைந்த விலைக்கு விற்பது வழக்கம்.

*திரு. நா. வீராசாமி :* தலைவரவர்களே, இந்தக் காமதேனு சிறப்பு அங்காடி 1965-ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது. அது இப்போது பல வகைகளில் நஷ்டம் அடைந்து வருவதற்குக் காரணம், அதற்கு வாடகை ரூ. 5,000 என்று நிர்ணயித்து இருப்பது தான் என்று சொல்கிறார்கள். அப்படியானால் அந்தக் கட்டடம் யாருக்குச் சொந்தமானது? அந்த வாடகை நியாயமானதுதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :* என்ன சொன்னீர்கள்? ரூ. 5,000 ஆ? எத்தனை நாளைக்கு ரூ. 5,000? இப்போது கொடுத்துக் கொண்டு வருகிற வாடகை ரூ. 25,000-க்கு மேல்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, may I know whether this Government are aware particularly that ready-made garments have been brought by the Society at a very high price and they have been sold at below the purchase price and if so, whether this Government have taken any action about it?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, this Super-market is under the management of the T.U.C.S. and so far as we could see, they are carrying on the management in a good way.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is it not a fact that the T.U.C.S. has been under fire for a long time by the Government and the Government had even superseded it sometime back?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : That is past history.

[1972 மார்ச் 3

**திரு. என். கணபதி:** தலைவரவர்களே, இந்த காமதேனு கூட்டுறவு விற்பனை நிலையத்திற்கு மாதம் ரூ. 25,000 வாடகைத் தருவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்படி மாதம் ரூ. 25,000 வாடகை கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தால், பொது மக்களின் பணம் வீணாகிறது என்பதைக் கருத்தில் கொண்டு. அதற்குச் சம்பந்தப்பட்ட சொசைட்டிக்குச் சொல்லி, சொந்தமாக ஒரு கட்டடம் கட்ட அரசு ஏதாவது ஆலோசனை கூறுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, அது ஆலோசனையில் இருப்பதாகத் தெரிவித்தேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The Government can think of requisitioning the building instead of putting up new building. Will the Government take steps to requisition the said building?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: No, Sir, that is a question of law. I doubt very much whether acquisition is possible for a commercial concern.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: It is for a public purpose...

THIRU K. M. SUBRAMANIAM: Was there any attempt made to get the rent reduced from Rs. 25,000 and whether the Government have taken any action to reduce the rent. I think it is a monthly rent.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, it is monthly rent. It is a fairly spacious building and the owners, I understand, are asking for more rent.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, இந்த சூப்பர் மார்க்கெட் இருக்கும் கட்டடம் முன்னாள் முதலமைச்சர் ஒருவருடைய நெருங்கிய உறவினருக்குச் சொந்தம் என்றும், அந்த அரசாங்கம் இருந்த நேரத்தில் இத்தகைய அதிக வாடகை நிர்ணயிக்கப்பட்டது என்றும் சொல்லப்படுகிறதே, இதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அதை நான் அறிய மாட்டேன்.



1972 மார்ச் 23]

**திரு. எம். செல்வராஜ்:** பேரவைத் தலைவரவர்களே, இந்த சூப்பர் மார்க்கெட் கட்டடம் யாருக்குச் சொந்தமானது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அது யாருக்குச் சொந்தமானது என்ற புள்ளி விவரம் என் கையில் இல்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: This sort of answer will not help legislators. The Hon. Minister must be prepared with the answer...

MR. SPEAKER: The Hon. Minister can decline to answer.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: That question related to the rent of the building and I could have objected to that supplementary on the ground that that was irrelevant. I thought I had better answer it to the best of my ability on the basis of the facts available with me. The original question relates to the sale of textiles at a reduced rate.

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவரவர்களே, இந்த வாடகை எந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது? இந்தக் கட்டடத்திற்குப் பதிலாக வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் தனியாக கட்டடம் கட்டித் தர முன்வந்தால், அதை ஏற்றுக் கொள்ள அரசாங்கம் அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** வீட்டு வசதி வாரியம் கட்டித் தர முன்வந்தால் அதை ஏற்றுக்கொள்ள நிச்சயமாக தயாராக இருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், கூட்டுறவுத் துறைக்கு என்று ஒரு கட்டடத்தை சட்ட பூர்வமாக எடுத்துக் கொள்வதும் 'பப்ளிக் பர்பஸ்' தான். இதை கனம் அமைச்சரவர்கள் அறிவாரா? அப்படியானால், அந்தக் கட்டடத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: That is a question of law and I think the Hon. Minister for Law will be in a better position to answer that.

THIRU K. M. SUBRAMANIAM: Only if it refers to the Hon. Minister for Law....

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே. இந்த காமதேனு அங்காடியின் வாடகை நாளொன்றுக்கு ஏறத்தாழ ரூ. 1,000 ஆகிறது. நிர்வாகச் செலவு ரூ. 1.000 அல்லது ரூ. 2,000 ஆகலாம். இப்படிச் செலவாகிறது என்று சொன்னால் ரூ. 5,000க்கு விற்க வேண்டும். அதிலே ஒரு நாளைக்கு எவ்வளவு லாபம் கிடைக்கிறது ? அப்படி அதிக லாபம் கிடைக்கிறது என்று சொன்னால், அதை யெல்லாம் வாங்குவோர் தலையில் வைத்து விற்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வாங்குவோர்கள் அந்தச் சிறப்பங்காடியில் நல்ல பொருள்கள், கலப்படம் இல்லாத பொருள்கள், கிடைக்கின்ற காரணத்தால்தான் வாங்குகிறார்கள். அந்த வாடகையும் கொடுத்து, அந்தத் தொழிலாளர்களுக்கு அந்தச் சம்பளத்தையும் கொடுத்து ஊதிய உயர்வும் இப்போது கொடுத்து, அதற்குப் பிறகும் அந்தச் சிறப்பங்காடி லாபத்தோடுதான் நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, சென்னையில் உள்ள பொது மக்களின் நலனைக் கருதி, மினி-சூப்பர் மார்க்கெட்டுகள் ஒவ்வொரு வட்டத்திலும் திறக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஏறத்தாழ 100 மினி-சூப்பர் மார்க்கெட்டுகள் திறப்பதற்குத் திட்டம் இருக்கிறது. அதற்கு வேண்டிய பணமும் இருக்கிறது. ஆனால், இப்போது 29 மினி-சூப்பர் மார்க்கெட்டுகளே திறக்கப் பட்டிருக்கின்றன. அவை எப்படிச் செயல்படுகின்றன என்பதை அனுசரித்து, மற்ற இடங்களிலும் ஆரம்பிக்கலாம் என்று அரசு கருதி, அதற்கான ஆணையைப் பிறப்பித்து இருக்கிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, mav I know from the Hon. Minister for Co-operation whether this Government will open Co-operative Super-market in every taluk headquarters?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The same question was asked by the previous Member. The opening of such markets in every taluk headquarters would mean round about 120 mini-supermarkets. We have got money and the Central Government's





sanction for 160 mini-supermarkets. But we have started only 29, and we are waiting to see the results. As I said, we have got a proposal to start up to 100 mini-supermarkets which will mean roughly one for every taluk.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, there has been a proposal to start a mini-supermarket in Mylapore and so far it has not been started. So, will the Government take steps to expedite the opening of a mini-supermarkets in Mylapore ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, supermarkets are more suitable for bigger cities. Mini-supermarkets are suitable for smaller towns. There should be sale of Rs. 2,000 for mini-supermarkets and bigger supermarkets must have a sale much higher than that. Therefore, mini-supermarkets are not particularly suitable for the Madras City.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் வேண்டுகோளின் படி. வினாக்கள் 290, 291, 292 தள்ளி வைக்கப்படுகின்றன. இத்துடன், வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்]

## (3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

**கோவை மாவட்டத்தில் பஞ்சாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம், கோவை மத்திய சிறைச்சாலையில் திருமலைச்சாமி என்பவர் இறந்தது, மாநிலம் முழுவதும் பரவியுள்ள வேலை நிறுத்தம் ஆகியவை குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் . மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கான அறிவிப்புக் கொடுத்திருக்கின்றார்கள். அப்படித் தீர்மானம் கொடுத்திருக்கும் உறுப்பினர்களின் பெயர்கள்—திரு. என். மருதாசலம், திரு. என். கே. பழனிசாமி, திரு. கே. என். குமாரசாமி, திரு. கே. டி. கே. தங்கமணி, டாக்டர் எச். வி. ஹாண்டே., திரு. ஜே. ஜேம்ஸ், திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. எம். சுரேந்திரன், திருமதி த. ந. அனந்தநாயகி. அந்தத் தீர்மானத்தின் பொருள் :

" strike by workers of Coimbatore district, death of Thiru. Thirumalaiswami in Central Jail, Coimbatore and the proposed State-wide strike from 1st March 1972 ". இவ்வளவு உறுப்பினர்களும் தீர்மானத்தைக் கொடுத்திருக்கும் காரணத்தால், ஒவ்வொரு கட்சியிலிருந்தும் ஒரு உறுப்பினர் மட்டும் சுருக்கமாக, இது எப்படி ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் கீழ் வருகிறது என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. கே. என். குமாரசாமி அவர்களை அழைக்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, பேரவையின் 42-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

'கோவை மாவட்டத்தில் அனைத்துப் பஞ்சாலைகளிலுமுள்ள 55,000 தொழிலாளர்கள் தங்களின் 19 கோரிக்கைகளுக்காக பிப்ரவரி 12-ம் நாள் தொட்டு பொது வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். கோரிக்கைகள் குறித்து திருப்திகரமான, நியாயமான தீர்வுக்கு ஆலை அதிபர்களும் அரசும் முன்வராததால், கிளர்ச்சியுற்றுள்ள தொழிலாளர்கள் பிப்ரவரி 22-ம் நாள் தொட்டு கோவையில் ஆலை அதிபர் சங்கம், ஆட்சித் தலைவர் அலுவலகம், மத்திய தந்தி அலுவலகம் ஆகியவற்றின் முன்பும் மற்றும் தாலுக்கா தலைமையகங்களிலும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சட்டமன்ற உறுப்பினர்கள் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் தங்களுடைய தீர்மானத்தின் பொருளையும் அவைக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** . . . . . தொழிற்சங்கத் தலைவர்கள் உட்பட ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதனால் மிகக் கடுமையான நிலைமை கோவை மாவட்டத்தில் மட்டுமின்றி மாநிலம் முழுவதும் தோன்றியுள்ளது."

தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில், தொழிலாளர்களுடைய 19 அம்ச கோரிக்கைகளில் முதலாவதானது, மூடப்பட்ட ஆலைகளை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும் என்பது. அதை கொள்கைபூர்வமாக ஒத்துக்கொண்டு, கடந்த ஜூன் மாதத்திலேயே தொழில் அமைச்சரவர்களும், முதல் அமைச்சரவர்களும்



மூடப்பட்ட ஆலைகளை இரண்டு மாதங்களில் ஏற்று நடத்துவதாக வாக்குறுதி கொடுத்தார்கள். தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி ஒப்புக் கொண்டதன் பேரில் போராட்டம் கைவிடப்பட்டது. இன்றைக்கு கிட்டத்தட்ட ஏழு மாதங்கள் ஆகின்றன. இருந்தும், அந்த ஆலைகள் திறந்தபாடில்லை. கடந்த டிசம்பர் மாதம் அனைத்துச் சங்கங்களையும் கூட்டி, அரசாங்கத்திற்கும் முதலாளிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து, மூடப்பட்ட ஆலைகளை ஏற்று நடத்துவதாகவும், அதைத்தொட்டு 19 கோரிக்கைகள் முதலாளிகளுக்கும் அரசாங்கத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டன. அதன்பேரில், கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஆகியும், அரசாங்கம் எந்த ஆலோசனைக்கும் வராமல், கடந்த பிப்ரவரி மாதம் 10-ம் தேதி இங்கே சென்னையிலே தொழிலாளர் தலைவர்களை கூட்டிப் பேசி கொள்கை அளவில் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதாகச் சொன்னாலும், பூரணமாக தொழிலாளர்களுக்கு திருப்தி கிடைக்காமல், கடந்த இரண்டு மாத காலமாக அரசாங்கம் காலதாமதம் செய்து வருவதால், தொழிலாளர்கள் இந்தப் பிரச்சினைக்கு தீர்க்கமான முடிவு காண வேண்டும் என்று பிப்ரவரி மாதம் 12-ம் தேதி முதல் மறியல் போராட்டம் நடத்தி, வேலைநிறுத்தம் செய்யும் போராட்டத்திலும் ஈடுபட்டிருக்கிறார்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் தெரிவிக்கும் விவரங்கள் முழுவதும் இந்த மன்றத்திற்கும், வெளியிலே உள்ளவர்கட்கும் நன்றாகத் தெரியும். இந்தத் தீர்மானம் எப்படி ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் கீழ் வருகிறது என்றும், இதில் அரசாங்கத்தின் பொறுப்பு எவ்வளவு என்பதையும் விவரித்துச் சொன்னால் எல்லோருக்கும் நலமாக இருக்கும்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, இந்த வேலைநிறுத்தத்தின் காரணமாக, சமுதாயத்தில், தமிழகம் முழுவதும் பெரிய பொருளாதாரப் பிரச்சினையாக மாறி, இன்றைக்கு தமிழகம் முழுவதும் பொது வேலைநிறுத்தம் ஏற்படும் நிலை உருவாகியிருக்கிறது. அதனால் மக்கள் பாதிக்கப்படும் நிலை, கடுமையான நிலை, சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதை

சமுதாயப் பிரச்சினையாகக் கருதி, எல்லாச் சிக்கல்களுக்கும் தீர்வு காணும் முறையில், சட்ட மன்றத்தில் இதை விவாதிக்க வேண்டும் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கோருகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் ஸ்பீக்கர், சார், பிப்ரவரி மாதம் 12-ம் தேதி கோவையில் ஆரம்பித்த ஆலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் நேற்று முதல் தமிழ் நாடு பூராவும் பரவியிருக்கிறது என்றால், லட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கும் நிலையில் தமிழ் நாட்டில் இருக்கும் மிகக் கேந்திரமாக இருக்கும் தொழிலாகிய பஞ்சாலைத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்டதன் காரணமாக பஞ்சாலைகளிலிருந்து உற்பத்தியாகும் நூல் கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. பருத்தியை பஞ்சாக உற்பத்தியாக்கி, விற்கக்கூடிய நிலை இல்லாமல் இடைஞ்சல் ஏற்பட்டிருக்கிறது. இதை வைத்துப் பார்த்தால், பொருளாதார நிலையில் சற்று சீர்கெட்டிருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது தமிழ் நாட்டில். ஆகவே, இதைத் தொழிலாளர் பிரச்சினையாகப் பார்ப்பதற்கு முக்கியத்துவம் இருக்கிறது.

அடுத்து, தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், ஜனவரி 10-ம் தேதியே நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். பிப்ரவரி 12-ம் தேதி வேலைநிறுத்தத்திற்கு. ஆக ஒரு மாதத்திற்கும் மேலாகவே அவகாசம் கொடுத்தும், அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் அல்லது எடுத்த நடவடிக்கை போதாமல் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தும் நிலையில் மறியல் இயக்கம் நடத்தும்போது, நம் சட்டமன்ற உறுப்பினர், இந்து மஸ்தூர் சங்கத்தின் உறுப்பினர் திரு. எ. சுப்பிரமணியம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அகில இந்திய மத்திய ஸ்தாபனங்கள், தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருந்தும், ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கேட்பதில் நியாயம் உண்டு. அம்மாதிரி மறியல் செய்த நிலையில் உடுமலைப்பேட்டையில் ஒரு மில் தொழிலாளரின் மகன், பி.யு.சி. படித்த மாணவன், சபையில் சொல்கிறேன், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர், திருமலைச்சாமி என்பவர், தகப்பனருக்காக சிறை சென்று சிறையில் போதுமான அளவுக்கு கவனம் செலுத்தப்படாமல் அவன் இறந்திருக்கிறான்.



அதனால் கோவை மாவட்டத்தில் மிகப் பெரிய ஒரு கிளர்ச்சி என்று சொல்வதை விட, வருத்தத்தையும், வேதனையையும் உண்டு பண்ணியிருக்கிறது. அங்கே நம்முடைய வைத்திய வசதி போதுமானதாக இல்லை என்றும், இப்படிப்பட்ட மிக முக்கியமான பிரச்சினையில் அரசாங்கம் போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், ஆகவேதான் இது ஒரு மிக முக்கியமான விஷயம் என்றும், ஆகவே, நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் சட்டமன்றத்திலே நாட்டு மக்களிடத்திலே விரிவாக விவாதிக்கப் படும் பிரச்சினையாக இருக்கிறது. இந்தப் பிரச்சினையில் எல்லாக் கட்சிக்காரர்களுடையவும் கருத்துக்கள் என்ன என்று ஏற்ற வகையில், இந்தத் தீர்மானம் மிக முக்கியமானது என்பதால், சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து, மத்தியானம் $1\frac{1}{2}$ மணி முதல் 3 மணி வரையில் ஒரு ஒன்றரை மணி நேரம் விவாதிக்கப் பட்டால் பேருதவியாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

DR. H. V. HANDE : Sir, I have given notice of the following motion :—

'I move that the business of the House do stand adjourned to discuss a matter of definite and urgent public importances, viz., death of Mr. Thirumalaiswami, a college student at the Coimbatore Central Jail on the morning of 28th February 1972 and also the strike by over 50,000 textile workers for the past eighteen days'.

After I have given notice of this, it has come to light that a few more units have also started striking and they have also sought relief from Government. I would therefore like that the proceedings of the House be adjourned and we discuss this question for $1\frac{1}{2}$ to 2 hours. That is the request I would make at the outset.

With regard to the student Thirumalaiswamy, it is mentioned in the papers that he died due to an attack of asthma. We do not know what kind of asthma it is. I am not going into the technical side of it. It is outside the purview of this House. As far as I know, I have consulted some specialists. I do not think any young man can die of asthma. It is an impossibility. So far, such things have not been brought to the medical lime-light also. So, it is quite possible that he died due to some other reason. Therefore, it is a very, very hard thing for us to swallow and

also for the public to swallow the theory that he died of asthma. I would like the Government to appoint immediately a committee consisting of high-level specialists and find out what exactly was the cause of the death of the student Thirumalaiswamy.

In fact, we find of late here and there, especially in police lockups people dying. Therefore, it is a matter of grave concern not only for the House but for the entire State. Therefore, I would like the Hon. Chief Minister to give us at least some assurance during the course of his reply. I expect the Hon. Speaker to request the Hon. Chief Minister also to give his views. When he gives his views, I would be very happy to know whether it is possible for the Government to appoint a High Power Committee and find out what exactly was the reason for the death of the student. It is an impossible thing for us to believe this.

In several places, in several lockups attached to police stations we find people dying. We do not know whether any extraordinary violence was applied over the gentleman, we do not know what are reasons, we do not know whether any repressive measures were done in the police lockup itself. In fact this House may remember, a few years ago in my own constituency a similar thing happened and the late Mr. Anna assured us that immediately all the necessary things would be done to find out what exactly was the reason and lot of investigations were undertaken. Later on no satisfactory solution was also found. So, I want to remind this House that this is a thing which has to be stopped.

The police people must not think that they can do anything they like in the lock-up and get away with the whole thing by saying that the person died of asthma or died of other natural causes. This is a very serious matter. This may happen to any one of us. Any one of us may be kept in the lock-up. Ultimately it may be said that the person died of natural causes. It may happen to M.L.As also. That is the point. It may happen to members of the party in power also. The Government cannot have a joy ride over it. This is a very serious matter which the Government should take note of. This kind of thing happened even when there were other Governments. So, we must find out how exactly this is happening. I want the Government to take serious notice of this matter.

The other point is also there—the textile crisis and the labour crisis. What has the Government done so far? I want to know whether it has woken up from the slumber or whatever it is. What



exactly is the solution? Why not we adjourn the other business of the House and discuss this matter and find out how exactly is the problem to be solved? Now it has spread to Madurai also. There is labour crisis in every place. It is going on in every place. To-morrow we are likely to have a problem with regard to sugar mills. The problem has arisen near Cuddalore, Nellikuppam. Simpson problem is not yet solved. No problem is solved. At the same time problems are increasing. The whole labour aspect may break down ultimately. (There was laughter in some quarters in the House). It is a very serious matter. It is not a matter to be laughed at. You cannot laugh it away. It is not a joke or any such thing. I am quite sure that the Hon. Chief Minister will agree with me that if it is snowballed into a great crisis, ultimately it will affect the stability of the State, the stability of the economy of the State and everything may be thrown into jeopardy. Therefore, I request the Hon. Chief Minister to impartially discuss the whole thing. I would request all the members not to import politics into it. I would be the last man to import politics into it. Let us forgot our party affiliations. Let us do something good for the State. I am very much concerned about the future of the State. Therefore, I am very happy if a discussion takes place in a spirit of comradeship opinions and ideas are given without any bias or without any attempt to improve the party position which should be the last thing to be done. I will be very happy if the Hon. Chief Minister in his reply comes forward with his considered views. We should not make it a party issue. We, that is political parties should not try to exploit the situation. I am very much interested in the improvement of the State economy and the labourers. Their position must be properly safeguarded. We must discuss the whole thing in a spirit of comradeship. If we adjourn the other business of the House for two hours and discuss the matter and arrive at a decision, it will be good. Once a decision is arrived at in this House we will all abide by that decision. If such a thing takes place, I am quite sure that it will be in the interest of the State. Otherwise, the stability of the State and the economic stability would be in jeopardy. Nearly about two lakhs of workers are on strike. Simpson problem has yet been solved. It is going on. I will be very grateful if you accede to our request, Sir. Thank you.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த அவசர முக்கியமான தீர்மானம் அவையின் முன் விவாதிக்கப்பட வேண்டும் என்று கோருவதற்காக நாங்கள் இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறோம்.

பொதுவாக, கோயம்புத்தூரில் இன்று ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறதென்றால் அது மிகையாகாது. குறிப்பாக கோயம்புத்தூரில் இருக்கின்ற மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து அவர்களுடைய கோரிக்கைகளை அரசாங்கத்தின் முன் வைத்திருக்கிறார்கள். மூடிக் கிடக்கும் ஆலைகள் அனைத்தையும் திறக்க வேண்டும். அவைகளைத் திறப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அரசாங்கம் பல முறை இந்த மன்றத்திலும் வெளியிலும் வாக்குறுதிகள் தந்திருக்கின்றது. அதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டதாகவும் அறிக்கை மூலம் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், இன்றிருக்கும் நிலைமை அதுவல்ல.

தொழிலாளர்கள், அவர்களே நோட்டீஸ் கொடுத்து அவர்களுடைய கோரிக்கைகளை அரசாங்கத்தின் முன் வைத்து இன்று ஒரு ஸ்டிரைக்கானது நடந்து கொண்டிருக்கிறது. ஸ்டிரைக் நடந்து கொண்டிருக்கும் காலத்தில் அரசியல் கட்சித் தலைவர்கள், சட்டசபை உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து அதில் கைதாகி அவர்களில் பலர் இன்று சிறைச்சாலையில் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு மாணவன் இறந்ததாகத் தகவல் வந்தது. அவர் இறந்தது ஆஸ்த்துமா காரணமா, அல்லது அடக்குமுறை காரணமா என்பது பற்றி சொல்வதற்கில்லை. அதைப் பற்றி விசாரணை செய்து அரசாங்கத்தில் பதில் சொல்வார்கள் என்று கருதுகிறேன். பொதுவாக கோயம்புத்தூர் ஜில்லாவானது, இந்தியாவில் ஆமதாபாத் எவ்வளவு முக்கியமானதோ அது போல் முக்கியமான இடமாக இருக்கின்றது. லட்சக்கணக்கான ரூபாய்க்கு பொருள்கள் முடங்கியிருக்கின்றன. அது மட்டும் அல்லாமல் அங்கே உள்ள நிலைமையைப் பார்க்கும்போது பொது வேலை நிறுத்தம் உருவாகி விடுமோ என்ற ஐயப்பாடு கிளம்பி இருக்கிறது. பொதுவாக தொழில் அரங்கத்தில் இன்று பலவிதக் குழப்பங்களும், சந்தேகங்களும் இருக்கின்ற காரணத்தால், இந்தப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்கு இன்றோ அல்லது நாளைய தினமோ அது விவாதிக்கப்பட வேண்டும். பலவித அபிப்பிராயம்





கூறவேண்டி இருக்கிறது. அதிலே கூட அரசாங்கம் சரியான முறையில் தொழிலாளர் கொள்கையில் நடந்து கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டை நாங்கள் கூறுவதற்குக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். நீண்டகாலமாக நடந்து கொண்டிருக்கும் அவசர முக்கியமான பிரச்சினையை தீர்க்க ஏன் தயக்கம் என்று மறுமுறை கேட்க விரும்புகிறேன்.

இதைப் பற்றி விரிவாக விவாதிப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும், அதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கோருகிறேன்.

THIRU N. K. PALANISWAMY: My adjournment motions are quite different from this. They relate to settling of disputes. Therefore, I may be permitted to speak.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவர் பேசியிருப்பதை கவனித்திருப்பீர்கள் என்று கருதுகிறேன். அவரும் "செட்லிங் ஆஃப் டிஸ்ப்யூட்ஸ்" பற்றித்தான் பேசினார் . . . . ஆனரபிள் மினிஸ்டர்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, நடைபெறுகின்ற 'டெக்ஸ்டைல் ஒர்க்கர்ஸ்' வேலைநிறுத்தம் பற்றி இங்கே பிரச்சினை. அதைப் பற்றி தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் விளக்கமாகக் கூறுவார்கள். ஆகையினால் இந்த அரசாங்கம் எதுவுமே செய்யவில்லை என்ற தொனியில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதற்காக ஒன்றை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அரசாங்கம் எடுத்த நடவடிக்கை பற்றி அகில இந்திய தொழிலாளர் தலைவர், தொழிலாள வர்க்கத்தின் பிரபல தலைவர் உடனடியாக தெரிவித்த கருத்து—"இந்த அரசாங்கத்தைப்போல் வேறு எந்த அரசாங்கமும் இப்படிப்பட்ட சலுகைகளை தொழிலாளர்களுக்கு கொடுத்ததில்லை. முதலமைச்சர் அறிக்கையைப் பாராட்டுகிறேன். அதை ஒரு வெற்றியாக எடுத்து இந்த தொழிலாளர்கள் இயக்கம் அதை ஏற்றுக்கொண்டு உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டும்" என்ற ஒரு நல்ல கருத்தைத் தெரிவித்தார்கள். ஆகையினால் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்வது தவறு என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

[திரு. செ. மாதவன்] [1972 மார்ச்

நேற்று மாலை கூட மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுடன் நேரடியாகப் பேசினேன். "இப் பிரச்சினையில் காலதாமதம் அதிகமாகாமல் செய்ய வேண்டுமென்று நிதியமைச்சருடன் பேசியிருக்கிறேன்; எப்படியும் இந்த மாநிலம் எடுத்த நடவடிக்கைகளும் முயற்சிகளும் வெற்றி பெறவேண்டும்", என்ற தகவலை என்னிடத்தில் தெரிவித்தார்கள்.

சிறையிலே இறந்துவிட்ட மாணவர் பற்றி பலவித ஐயப்பாடுகளை எழுப்பியிருக்கிறார்கள். போலீசாரின் கொடுமை காரணமாக அந்த மாணவர் இறந்திருப்பாரோ என்ற ஐயப்பாட்டினை டாக்டர் ஹாண்டே அவர்கள் தெரிவித்தார்கள். டாக்டரே அப்படிச் சந்தேகப்படுகின்றாரே என்ற எண்ணத்தினாலோ என்னவோ மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் பொன்னப்ப நாடாரும் அந்தக் கருத்தினை வலியுறுத்துவது போல் பேசினார்கள். பொறுப்பு மிக்கத் தலைவர்கள் இப்படிப் பட்டச் சந்தேகங்களை எழுப்பினால் அது மக்களிடையே தவறான ஒரு எண்ணத்தை ஏற்படுத்தும் என்பதையும் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறையிலே இறந்துபோன மாணவர் ஆஸ்துமாவினால் இறந்திருக்கிறார் என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்கள் டாக்டரும் மற்றவர்களும். அவருக்கு ஆஸ்துமா நோய் இருந்ததால்தான் அவர் திருமணம்கூட செய்து கொள்ளவில்லை. அவருடைய இளைய சகோதரர் திருமணம் செய்திருக்கிறார். அவருக்கு ஆஸ்துமா நோய் அதிகமாக இருந்ததால் தனியாக இருந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளும்படி சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர் சிறையில் தொழிலாளர்களுடன் இருப்பேன் என்று கட்டாயமாகச் சொல்லியதால் தொழிலாளர்களிடையே சிறையில் வைக்கப்பட்டார்.

சம்பவத்தன்று அந்த மாணவர் ஆஸ்துமா நோயினால் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார். உடனே சிறை டாக்டர் நல்ல மருந்து கொடுத்திருக்கிறார். இரவு முழுவதும் சிகிச்சை அளிக்கப் பட்டிருக்கிறது. இருப்பினும் காலை ஐந்து மணிக்கு இறந்து விட்டார். அவர் இறந்துவிட்டது குறித்து வருத்தப்படுகிறேன்.



1972 மார்ச் 3] [திரு. செ. மாதவன்]

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஏ. சுப்பிரமணியம், திரு. சுப்பையா, திரு. நஞ்சப்பா, திரு. சின்னதுரை ஆகியோரும் மாணவர் இறந்துபோனது குறித்த முழு விபரத்தையும், அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை முறையினையும் தெரிந்து, திருப்தி யடைந்திருக்கிறார்கள். எனவே, இறந்துபோன மாணவருக்கு நல்ல முறையிலே மருத்துவம் செய்யப்பட்டதா, போலீசார் அவரை கொடுமைப்படுத்தினரா, என்ற சந்தேகம் ஏற்படுவதற்கு அவசியமே இல்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட சந்கேங்களை எழுப்பி, மக்க ளிடத்திலே ஒரு தவறான எண்ணத்தைக் கற்பிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சிறையில் இறந்துபோன மாணவர் குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவர் முறைப்படி விசாரணை செய்து வருகிறார். தொழிலாளர்களையும் சந்தித்து அது சம்பந்தமாக விசாரணை செய்வார். சிறையிலே இறந்துபோன மாணவர் யாராக இருந்தாலும் வருத்தப்பட வேண்டிய விஷயம்தான். அவர் தி.மு. கழக மாணவர் சங்கத்தைச் சேர்ந்தவர் என்று கையெழுத்திட்டு, கடிதம் கூட அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அவர் அந்தக் கட்சியைச் சேர்ந்தவரா, அல்லது இந்தக் கட்சியைச் சேர்ந்தவரா என்று விவாதிப்பது பொருத்தமுடையதல்ல. இறந்தவருக்காக அனுதாபப்பட வேண்டும். நான் அதற்காக வருந்துகிறேன். போலீசார் மீதும் எந்தவித தவறும் கிடையாது. சிறையிலும் அவருக்கு தீங்கிழைக்கப்படவில்லை. இவ்வளவும் தெரிந்த பின்பும் நம் முன்னாலே உள்ள இந்தப் பிரச்சினையில் நாமே தவறு காண்பது பொருத்தமுடையதாகாது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் அந்த மாணவருக்கு சரியான முறையில் மருத்துவம் அளிக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புவதாகச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இங்கே, சென்னையிலே இருக்கக்கூடிய ஒரு பெரிய டாக்டரிடத்திலே அந்த மாணவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை முறை பற்றியும், அவருக்கு கொடுக்கப்பட்ட மருந்து பற்றியும் கேட்டேன். அந்த டாக்டரும், அது ஆஸ்துமா நோய்க்கு கொடுக்கக்கூடிய மருந்துதான், அது நல்ல மருந்துதான் என்று சொன்னார்கள்.

[திரு. செ. மாதவன்] [1972 மார்ச் 3

இது எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி. அதற்காக நான் வருந்துகிறேன். இந்தப் பிரச்சினையில், யார் மீதும் தவறு இல்லை. இது பற்றி முழு விசாரணை செய்யும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்காது; தயக்கம் காட்டாது என்பதை தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். இப்பொழுது இந்த பிரச்சினைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்ட தலைவர்களுக்கு, இது சம்பந்தமாக ஐயப்பாடுகள் தீர்ந்திருக்கும் என்று கருதுகிறேன். மேற்கொண்டு, தொழில் தகராறு பற்றி தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள்.

***மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை இங்கே எடுத்தவைத்த கட்சித் தலைவர்கள் சில பிரச்சினைகளைக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட சில பிரச்சினைகள் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு மாறுபட்டதாக இருந்தாலும் அதற்கும் பதில் சொல்ல நாங்கள் கடமைப்பட்டு இருக்கிறோம். இந்த அரசு தொழிலாளர்கள் பிரச்சினையைக் கவனிக்கவில்லை; தொழிலாளர்களுக்கு விரோதமாகச் செயல்படுகிறது என்ற முறையிலே டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசினார்கள். தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்க்க இந்த அரசு தவறி விட்டது என்றெல்லாம் கூடச் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக ஒன்றை மட்டும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அரசாங்கத்தைப் போல் இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் தொழிலாளர் நலனில் அக்கறை காட்டவில்லை என்று திட்டவட்டமாகக் கூறுகிறேன். எனவே, தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்த அரசாங்கம் நடந்து வருகிறது என்று சொல்வார்களேயானால், அது கட்சிப் பிரதி கட்சி விவாதத்திற்குத் தான் பயன்படுமே தவிர, உண்மை நிலைமையைப் புரிந்தவர்கள் அப்படிக் கூற முற்பட மாட்டார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விழைகிறேன்.



1972 மார்ச் 3] [திரு. என். வி. நடராசன்]

நமது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் 50 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் பெரிதும் கஷ்டப்படுவதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன், வேலையில்லாமல் இருப்பவர்கள் ஏழாயிரம் பேர்கள் தான் என்று. மீதிப் பேர்கள் வேலையிருந்தும் வேலை செய்ய விருப்பம் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் வேலையில்லாதவர்களுக்கு ஆதரவாக, வேலைக்குச் செல்லவில்லை. ஆகவே, வேலை இல்லாதவர் ஏழாயிரம் பேர்கள் தான் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மூடப்பட்டுள்ள கோவை மில்கள் பற்றியும், அவற்றைத் திறப்பதற்கான அவசியம் பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும் டில்லிக்குச் சென்று என்னென்ன செய்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். நமது வற்புறுத்தலினால் மத்திய அமைச்சர் மாண்புமிகு சுப்பிரமணியம் அவர்கள் கூட முயற்சி செய்திருக்கிறார். அவர் இது குறித்து மத்திய நிதி அமைச்சர் அவர்களுக்கு சொல்லியிருப்பதாகவும், மேலும் இதில் காலதாமதம் செய்யக் கூடாது என்று வலியுறுத்தியிருப்பதாகவும் தெரிகிறது. இவ்வளவுக்குப் பிறகும் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. தொழிலாளர் நலனில் இந்த அரசு எப்போதும் கண்ணுங் கருத்துமாகவே இருந்து வந்திருக்கிறது. தொழிற் சங்கத் தலைவர்களை பலமுறை சந்தித்திருக்கிறோம். அதன் பயனாக கடந்த 18—2—1972 அன்றும், 19—2—1972 அன்றும் தொழிலாளர் பிரதிநிதிகளும், தொழிலதிபர் பிரதிநிதிகளும் நமது முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

அவர்கள் 19 கோரிக்கைகளை முன் வைத்தனர். அந்த 19 கோரிக்கைகளில் 17 கோரிக்கைகளைப் பற்றி விவாதிக்கப் பட்டிருக்கிறது. 'லக்ஷ்மி கார்ட்டு சேர்மன்' திரு. இராமசாமி நாயுடு அவர்கள் இது நல்ல முடிவாக இருப்பினும், தொழிலாளர்களைக் கலந்து தன் முடிவைத் தெரிவிப்பதாகச் சொல்லிவிட்டுப் போனார்கள். ஆனால் இதுவரையில் ஒன்றும் தெரியவில்லை. சட்டமன்ற உறுப்பினர் திரு. எ. சுப்பிரமணியம் அவர்கள் கூட இது நல்ல முடிவு என்றார், தொழிலாளர்களைச் சந்தித்து அவர்களது எண்ணங்களைத் தெரிந்து முடிவு

சொல்வதாகவும் கூறிச் சென்றார்கள். அவர்கள் கொடுத்த 19 கோரிக்கைகள் என்ன என்பதையும், ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் தன்மையினையும் இங்கு விளக்கிட விரும்புகிறேன்.

கோவையில் மூடப்பட்ட பஞ்சாலைகளை அரசு திறக்க நடவடிக்கை எடுக்கவும், அரசு மேற்படி பஞ்சாலைகளைத் திறந்து நடத்தும் வரை ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் நிவாரணமாக ரூ. 100 அளிப்பது. இது முதலாவது கோரிக்கை. சோமசுந்தரா மில்லை மத்திய அரசின் நிதி உதவிக்கு காத்திராமல் மாநில அரசு ஏற்று நடத்தும். ஆனால் இதுபற்றி மத்திய அரசின் அனுமதி பெறவேண்டும். காளிஸ்வரா மில், கோவை ஸ்பின்னிங் மற்றும் வீவிங் மில் ஆகிய பஞ்சாலைகளையும் மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் மாநில அரசு ஏற்று நடத்தும் என்று உறுதிமொழி அளிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாலைகளை மூடியதால் பாதிக்கப்பட்டத் தொழிலாளர்களின் நிவாரணத்திற்கு ரூ. 3 லட்சம் உதவித் தொகையாக அளிக்கப்படும் என்றும் முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது தொழிலாளர் மீது இந்த அரசுக்குள்ள அக்கறையினை குறிக்கவில்லையா என்பதை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சிந்திக்க வேண்டுகிறேன்.

ஊதிய உயர்வும், பஞ்சப்படி உயர்வும் அளிப்பது இரண்டாவது, மூன்றாவது கோரிக்கைகளாகும். தொழில் தகராறு சட்டப்படி ஒரு விசாரணைக் கோர்ட்டின் முடிவுக்கு இப்பிரச்சினை விடப்பட்டு, அதன் முடிவு குறிப்பிட்ட காலத்தில் அறிவிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

நான்காவது கோரிக்கையாக, தற்காலிக தொழிலாளர்களுக்கு வேலைக்குத் தக்க ஊதியம் அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

வேலைக்குத் தேவையான எல்லா நிரந்தரமற்ற தொழிலாளர்களுக்கும், தற்காலிக தொழிலாளர்களுக்கும் வேலைக்குத் தகுந்த கூலி வழங்கப்படும். அதனால் எந்த வேலை முறையிலாவது இழப்பு ஏற்படுமென்று கருதினால் மூன்று மாதத்திற்கு தொடர்ந்து அந்தப் பகுதியை (ஷிப்ட்) நடத்த வேண்டுமென்றும், அந்த மூன்று மாதத்திற்கும் கூலி குறைக்கப்படாமல் தொழிலாளர்



களுக்கு கொடுக்கப்படும் என்று, இதற்கிடையில் இப்பிரச்சினையைப் பற்றி தொழிலாளர் நல ஆணையர் விசாரித்து முடிவு கூறுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

தொழிலாளர் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு அளித்தல் என்பது ஐந்தாவது கோரிக்கை.

தொழிலாளர்களின் வாரிசுகள் வேலைக்குத் தகுதி உள்ளவராக இருந்தால் வேலை அளிப்பதில் முதல் சலுகை கொடுக்கப்படும் என்று உறுதி கூறப்பட்டது.

குறைந்தபட்ச போனஸ் 8.33 சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்பது 6-வது கோரிக்கை.

குறைந்தபட்ச போனஸ் 8.33 சதவிகிதமாக இருக்க வேண்டும் என்று ஏற்கெனவே டில்லியில் நடைபெற்ற முத்தரப்பு மாநாட்டில் நாம் தெரிவித்திருக்கிறோம். மற்ற மாநில அமைச்சர்கள் நமது இக்கருத்தினைப் பாராட்டியிருக்கிறார்கள். மத்திய அரசிடமிருந்து அதற்கான சட்டம் இன்னும் வரவில்லை. விரைவிலே சட்டம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சட்டம் வந்தவுடன் அமல் நடத்தப்படும்

கோரிக்கை எண் 7—கிராஜுட்டி (பணிக்கொடை) ஒரு வருட சர்வீசுக்கு ஒரு மாதம் ஊதிய விகிதத்தில் அளிப்பது என்பதாகும்.

இப்பொழுது 15 நாள் ஊதிய விகிதத்தில் அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால் தமிழக அரசு ஒரு மாதம் ஊதிய விகிதத்தில் அளிக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. இதுகுறித்து மத்திய அரசின் சட்டம் எதிர்பார்க்கப்படுகிறது.

கோரிக்கை எண் 8—பெண் தொழிலாளர்களுக்குப் போதிய வேலைவாய்ப்பு அளித்தல்.

பெண் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவதைப் பாதுகாக்க, மாற்று வேலை கொடுப்பது, கோன் வைண்டிங் பிரிவில் பயிற்சி அளிப்பது. தங்கள் விருப்பப்படி வேலையை விட்டு ஓய்வு பெற திட்டம், குறிப்பிட்ட காலத்திற்கு வேலை உறுதி அளிப்பது போன்ற பிரச்சினைகளை கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[திரு. என். வி. நடராசன்] [1972 மார்ச் 3]

கோரிக்கை என் 9—மேஸ்திரிகள் சம்பளத்தை மாற்றியமைத்தல்.

இப் பிரச்சினை குறித்து விசாரணைக் கோர்ட்டு முடிவுக்கு விடப்படும்.

கோரிக்கை என் 10—வைப்பு நிதி, தொழிலாளர்கள் நல ஈட்டுறுதி, கூட்டுறவு ஸ்டோர் இவைகளின் நிலுவைத் தொகையை நிர்வாகத்தினரிடமிருந்து அரசு வசூல் செய்தல்.

வைப்பு நிதி, தொழிலாளர் நல ஈட்டுறுதி, கூட்டுறவு ஸ்டோர் இவைகளின் பாக்கித் தொகையை வசூல் செய்ய துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கோரிக்கை என் 11—படி அரிசித் திட்டம்.

நியாய விலையில் அரிசி விற்க ஏற்பாடு செய்யப்படும். கையிருப்பிற்கு தக்கவாறு அளவு அதிகரிக்கப்படும்.

கோரிக்கை என் 12—தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட காலத்திற்கு உதவிப் படி கொடுப்பது.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் நிர்வாகத்தினர் மாதிரி நிலை ஆணைச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி நடப்பார்கள். ஆனால் விசாரணையைத் தொழிலாளர்கள் வேண்டுமென்றே கால தாமதம் செய்யக் கூடாது என்றும் கூறப்பட்டது.

கோரிக்கை என் 13—இரண்டாவது பஞ்சாலை சம்பளக் குழு சிபாரிசுகளை அமல்படுத்துவதினால் ஏற்படும் சிக்கல்களை சரிசெய்தல்.

தொழிலாளர் ஆணையர் இப்பிரச்சனையை விசாரித்து, குறிப்பிட்ட காலத்திற்குள் தனது முடிவினை அறிவிப்பார்.

கோரிக்கை என் 14—கோவையிலுள்ள ஈட்டுறுதித் திட்ட மருத்துவ மனையில் போதுமான படுக்கை வசதியின்மை முதலிய குறைகளைத் தீர்ப்பது.

இதுபற்றி முடிவு செய்ய தொழிலாளர்களின் பிரதிநிதிகள் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படும்.

கோரிக்கை, என் 15—கோவையில் வைப்பு நிதி அலுவலகம் திறப்பது—இந்தப் பிரச்சினை மாநில அரசுக்கு உட்பட்டது அல்ல. மத்திய அரசின் அனுமதி கிடைக்க வேண்டியிருக்கிறது. இதுபற்றி



[1972 மார்ச் 3] [திரு. என். வி. நடராசன்]

ஏற்கெனவே மத்திய அரசிற்கு ஒரு குறிப்பு அனுப்பப்பட்டது. அதை மத்திய அரசு ஏற்கவில்லை. இது பற்றி மீண்டும் மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பப்படும். மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இதை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம்.

கோரிக்கை என் 16—இயந்திரங்களின் வேகத்தை அதிகரிப்பதால் வேலைப்பளு அதிகரிப்பு—தொழிலாளர் ஆணையர் இப்பிரச்சினை குறித்து விசாரித்து தனது முடிவினை குறிப்பிட்ட காலத்திற்குள் அறிவிப்பார்.

கோரிக்கை என் 17—தொழிலாளர் ஆலோசனை வாரியம் ஈட்டுறுதித் திட்டம்—வைப்பு நிதித் திட்டம் முதலிய ஆலோசனைக் குழுக்களில் பிரதிநிதித்துவம் அளித்தல். தொழிற்சங்கங்கள் இதுபற்றி ஆலோசனைகள் கூறினால் அவைகளை அரசு பரிசீலிக்கலாம்.

கோரிக்கை என் 18—தொழிலாளருக்குப் போதிய தொழிற் தகராறுகளை விரைவில் தீர்த்து வைத்தல்—இப்பொழுது நடைமுறையில் காணும் இடர்பாடுகளை மத்திய அரசிற்குத் தெரிவித்து அதுபற்றி மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படும்.

கோரிக்கை என் 19- தொழிலாளர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்தல்—இது இளம் சமுதாயத்தினரை மனதில் வைத்துக்கொண்டு பரிசீலிக்க வேண்டிய பிரச்சினை. இதைப்பற்றியும் யோசிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் தொழிலாளர்கள் தலைவர்கள் வேலைநிறுத்த முடிவை எடுத்திருக்கிறார்கள். தற்பொழுது அரசாங்க அலுவலகங்கள், மத்திய அரசு அலுவலகங்கள் முன்னரும் தொழிலாளர்கள் மறியல் செய்து வருகின்றனர். இவற்றை எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நாங்கள் சொல்ல கொண்டே அவர்கள் எங்கே பார்த்தாலும் தொழிலாளர் பிரச்சினை என்பதாகச் சொன்னார்கள். எதனால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன? எல்லோரும் உட்கார்ந்து

பேசலாம். தொழிலாளர்களுடைய நியாயமான பிரச்சினைகளை எல்லாம் உடனடியாக இந்த அரசு ஏற்றுக்கொண்டு செயல்பட்டே வருகிறது. ஆனால் எந்த எந்தப் பிரச்சினைகளில் ஒரு சுமுகமான தீர்வு காணப்படவில்லை, ஏன் காணப்படவில்லை என்றால், அவை அரசியல் பிரச்சினையாக மாற்றப்பட்டு இருப்பதுதான். அங்கேதான் குழப்பம். தமிழ் மாநிலத்தை எடுத்துக்கொண்டால் மற்ற மாநிலத்தவர்கள் எல்லாம் போற்றக்கூடிய அளவில் தொழிலாளர்கள் பிரச்சினை இந்த தொழிலாளர் நல அரசினால் நல்ல முறையில் கவனிக்கப்பட்டே வந்துகொண்டிருக்கின்றன. எதுவும் தீர்க்கப்படவில்லை என்பது இல்லை. தீர்க்கப்படாமல் ஒன்றிரண்டு இருப்பதற்குக் காரணம் அரசியல் ரீதியாக அவை மாற்றப் பட்டிருப்பதுதான். அதற்கு இந்த அரசுமீது குற்றம் சாட்டுவது நியாயமாகாது.

கோவை பஞ்சாலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம் இனிதே முடிவு பெறவேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது. ஆகவே முதல்வர் சார்பிலேயே கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு---வேலைக்குத் திரும்பட்டும். அவர்களுடைய பிரச்சினைகளை இந்த அரசு நல்ல முறையில் எல்லோரையும் கலந்துபேசி தீர்த்து வைக்கும். தொழிலாளர்களுக்கு ஆதரவாக இந்த அரசு என்றைக்கும் செயல்படும். ஆனால் தொழிலாளர்களது தலைவர்கள் திறந்த மனத்தோடு, தூய்மையான எண்ணத்தோடு இந்த அரசுக்கு ஆதரவு தரத் தயாராய் இருக்கிறார்களா? பிரச்சினைகள் சிக்கலாக்கப்படுவதற்குக் காரணம் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தது அல்ல; எனவே இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங் களுக்கு அவசியம் இல்லை என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். மருதாசலம்:** வேலைநிறுத்தம்பற்றி முடிவு எடுத்த போதே மூடப்பட்ட பஞ்சாலைகளை உடனடியாகத் திறக்க வேண்டும் என்பதற்கு—மாநில அரசும் அவற்றை எடுத்து நடத்துவதாகச் சொல்லியிருக்கிறது. மத்திய அரசும் மூடப்பட்ட பஞ்சாலைகளை எடுத்து நடத்துவதாகச் சொல்லியிருக்கிறது. ஆனால் இப்போதுள்ள பிரச்சினை எல்லாம் "அவ்வாறு எப்போது எடுத்து நடத்தப்படும்?" என்று அறிவிக்க வேண்டும் என்பது தான்.





**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிபட்டவனையும், அடித்தவனையும் ஒரே மதிரியாக வைத்து சமாதானம் சொல்கிறமாதிரி பேசுகிறார். மூடப்பட்ட மில்களை எடுத்து நடத்தத் தயாராய் இருக்கிறோம் என்பதாக இந்த அரசைப் பொறுத்தவரையில் முதல்வர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அப்படி எடுத்து நடத்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டியது மத்திய அரசாங்கம். இதுபற்றி நாங்கள் பலமுறை வற்புறுத்தி வந்திருந்தும்கூட இதுவரை அவர்கள் அதற்கான அனுமதியை அளித்திருக்கிறார்களா என்றால் இல்லை. அப்படி இருக்க, மத்திய அரசும் சொல்லுகிறது மாநில அரசும் சொல்லுகிறது என்பதாகப் பொதுவாகப் பேசுவது சரியல்ல. மத்திய அரசிடம் இருந்து நாளைக்கே உத்தரவு வரட்டும்—உடனே இந்த அரசு அவற்றைத் திறக்கத் தயாராக இருக்கிறது என்கிற உறுதி மொழியை இப்பவும் நான் அளிக்கத் தயாராய் இருக்கிறேன். அதைத்தவிர இன்னும் ஒரு மாதத்தில் திறப்பதாக நாங்கள் உறுதி அளித்து--மத்திய அரசு ஒரு மாதத்தில் அதற்கான அனுமதியை அளிக்காவிட்டால்—கொடுத்த உறுதிமொழிப்படி மில்லைத் திறக்கவில்லை என்பதற்காக மற்றுமொரு கிளைப் போராட்டம் ஏற்படக்கூடும். ஆகவே, மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் மூடிக் கிடக்கும் அந்த மில்களை உடனடியாகத் திறப்பதற்கு நாங்கள் தயாராய் இருக்கிறோம்.

**திரு. கே. என். குமாரசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது 17 கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொண்டதை செயல் கமிட்டி தலைவர்களும் ஒப்புக் கொண்டு, தொழிலாளர்களிடத்தில் கேட்டுச் சொல்வதாகப் போனார்கள்—அரசின் முடிவு நியாயமானது என்பதை ஒப்புக் கொண்டார்கள் என்று சொன்னார். அதே நேரத்தில் இந்தக் கோரிக்கைகள் சம்பந்தமாக செயல் கமிட்டியினர் பேசியபோது, "மூடப்பட்ட மில்களைத் திறப்பது சம்பந்தமாக தேதியை முடிவு பண்ணுங்கள். அரசாங்கம் கொடுக்கிற 3 லட்சம் உதவித் தொகைகூட வேண்டியதில்லை. தேதியை நிர்ணயம் பண்ணுங்கள் அல்லது திறக்கப்படும்வரை இந்த உதவித் தொகையை கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்" என்று வற்புறுத்தினார்கள். அதை அரசாங்கம் யோசிப்பதாகச் சொன்னார்கள். ஒன்றும் செய்யவில்லை

ஏற்றுக்கொள்ளப்பட்டதாக 17 கோரிக்கைகளைச் சொன்னார்கள். கோவையில் நிலவும் விலைவாசிப் புள்ளிக்கு ஏற்ப பஞ்சப்படி கொடுக்கவேண்டும் என்பது தொழிலாளர்களுடைய ஒரு கோரிக்கை. மாநில அரசே இதைக் கொண்டு வரலாம். மத்திய அரசை அணுகத் தேவையில்லை. இடைக்கால சம்பள உயர்வை மாநில அரசே ஆலை முதலாளிகளை வற்புறுத்தி கொடுக்கச் செய்யலாம். ஒரு ரூபாய் சம்பள உயர்வை அதிகப்படுத்தவே மில் முதலாளிகள் மறுக்கிறார்கள்.

பொதுவாக தொழிலாளர்களுடைய பல்வேறு கோரிக்கைகளை அரசாங்கம் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டதே தவிர செயல் அளவில் எதையும் வற்புறுத்த முன்வரவில்லை. அட்ஜூடிகேஷனுக்கு விடுகிறோம். இதை நீதிபதி விசாரணைக்கு அனுப்புகிறோம் என்பதாகச் சொல்லி அரசாங்கம் தன்னுடைய நேரடிப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறபடியால்தான் தொழிலாளர்களுக்கு நம்பிக்கை இல்லை. படி அரிசித் திட்டமும் கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். இவை பற்றி எல்லாம் அரசாங்கத்திற்கும் தெரியும். அமைச்சர்களுக்கும் தெரியும். குறிப்பிட்ட காலத்திற்குள் மூடப்பட்ட மில்களைத் திறப்பதாக இந்த அரசு உறுதி அளிக்க வேண்டும். மில் முதலாளிகளை வற்புறுத்தி இடைக்கால சம்பளக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளச் செய்வதில் காலதாமதம் காட்டக் கூடாது என்பதுதான் செயல் கமிட்டியின் கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு என். கே. பழனிசாமி:** மூடப்பட்ட மில்களைத் திறப்பதற்கு மத்திய அரசுதான் அனுமதி அளிக்க வேண்டும். இந்த விஷயம் பூராவும் மத்திய அரசின் கையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அடுத்து 17 கோரிக்கைகளை ஒப்புக் கொண்டதாகச் சொன்னார்கள். ஆயினும் பேச்சு வார்த்தை முடிவுறுவதற்குக் காரணம் ஊதிய உயர்வா— அட்ஜூடிகேஷனுக்கு விடுவது. பிராவிடெண்ட் பண்டா— கமிஷனுக்கு விடுவது என்பதாக சர்க்கார் நேரடிப் பொறுப்பேற்காது தட்டிக் கழிக்கிற அளவில் தான் அந்தக் கோரிக்கைகளை ஒப்புக் கொண்டார்கள். முதலாளிகளை நேரிடையாக சர்க்கார் நிர்ப்பந்தப்படுத்தி இந்தக் கோரிக்கைகளை செயல்படுத்த முன்வராத காரணத்தினால்தான் அந்தப் பேச்சு வார்த்தைகள் முறிந்தன.





இப்போது மத்திய சர்க்காரின் தீர்ப்புக்கு அதிகமாக சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ரூ 10 அதிகமாகக் கொடுக்கும்படி சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கு இந்தச் சர்க்கார் சிபாரிசு செய்திருக்கிற மாதிரி, பஞ்சாலைத் தொழிலாளர்கள் விஷயத்தில் இந்த சர்க்கார் செய்ய முன்வரவில்லை. அதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, இது பற்றி நானும் தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறேன் என்றாலும் என் கட்சித் தலைவர் பெரிய காரணத்தினால் முன்பு பேச முடியவில்லை. பாராளுமன்ற அங்கத்தினர்கள் இந்தியப் பிரதமரைச் சந்தித்து மகஜர் கொடுத்தார்களே, அப்போது இந்தத் தேதிக்குள்ளாக என்பதாக ஏதாவது காலவரையறை நிர்ணயிக்கப்பட்டதா? மூடப்பட்ட மில்கள் இத்தனை மாதத்திற்குள்ளாகத் திறக்கப்படும் என்பதாக தேதி நிர்ணயம் செய்து சொன்னால் நலமாக இருக்கும்.

சிறையில் இறந்த மாணவன் சம்பந்தமாக நீதி விசாரணை வேண்டுமென்ற எண்ணம் மக்களிடத்திலே இருக்கிறது. சிறைச் சாலையில் என்னதான் நடக்கிறது? ஏன் திடீர் திடீர் என்று சாகிறார்கள் என்பதை தெரிந்துகொள்வதற்கு வசதியேற்படும். மாணவர் உலகத்திற்கும் திருப்தி ஏற்படும். இதையும் சற்று ஆலோசித்துச் சொல்வார்களானால் அவர்கள் சொல்கிற பதிலை நாம் ஏற்க முடியும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவது அந்த ஆலைகள் எல்லாம் எப்போது திறக்கப்படும்? அந்த ஆறு ஆலைகளும் இந்த மாதமே திறக்கப்படுமா? அல்லது அடுத்த மாதம் திறக்கப்படுமா? எந்தத் தேதியில் திறக்கப்படும். இந்த மாதத்தில் இல்லாவிட்டால் அடுத்த மாதத்திலாவது திறக்கப்படுமா? எந்தத் தேதி என்பதை அரசு அறுதியிட்டுச் சொல்ல முடியுமா என்பதுதான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படி அறுதியிட்டுச் சொல்கிற அதிகாரம் மாநில அரசாங்கத்திற்கு இருக்கிறதா, அல்லது மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறதா என்பதை விஷயம் தெரிந்த திரு. தங்கமணி அவர்களே சொல்ல வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே. மத்திய அரசும் மாநில அரசும் கலந்துகொண்டு சொல்லுங்கள். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இது மத்திய அரசின் பொறுப்பா, மாநில அரசின் பொறுப்பா என்பதை அவர்கள் ஆராய வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மூடப்பட்ட மில்களை எடுத்து நடத்துவதற்கான சம்மதம் அளிப்பது மத்திய அரசா, மாநில அரசா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, 'சோமசுந்தரா மில்லை நாங்களே திறப்போம்' என்று அறிவிக்க முடிகின்றபோது. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் இப்போதும் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள், அல்லது தவறாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சோமசுந்தரா மில்லை நாங்கள் திறக்கப் போவதாகச் சொன்னபோது, அதாவது அவர்கள் தர வேண்டிய 51 சதவிகிதத் தொகை இல்லாமலேயே நாங்கள் திறக்கிறோம் என்று சொன்னோம். அதாவது மொத்தப் பணத்தையும், நாங்களே போடுவதாக இருக்கிறோம் என்று சொன்னோம். அதற்கும் இன்னும் மத்திய அரசிலிருந்து சம்மதம் வரவில்லை. இதற்கும் சம்மதம் இன்னும் வரவில்லை. இப்பொழுது சொல்லுங்கள், இதற்கு சம்மதம் அளிப்பது மத்திய அரசா? அல்லது மாநில அரசா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மத்திய அரசின் சம்மதத்தின் அடிப்படையில் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். அரசியலமைப்புச் சட்டம் தெரிந்தவராக இருக்கிறீர்கள். எனக்குத் தெரியாததால் தான் கேட்கிறேன். நீங்கள் சொல்லுங்கள். மத்திய அரசாங்கம் ஒப்புதல் அளிப்பதா, மாநில அரசாங்கம் ஒப்புதல் அளிப்பதா என்பதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லிவிட்டு. நான் பதில் அளிக்கிறேன்.

I do not want to be diverted

இன்றைக்கு சம்பள



போர்டு சிபாரிசுகளை தென்னிந்திய மில் முதலாளிகள் அமல்படுத்த வேண்டும் என்று தென்னிந்திய மில் முதலாளிகளை வற்புறுத்த மாட்டேன் என்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் இன்றைக்கு சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு 10 ரூபாய் இடைக்கால நிவாரணம் கொடுக்கலாம் என்று இந்த அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. மில் முதலாளிகளை அழைத்துப் பேசி அரசு ஒரு நல்ல முடிவு எடுத்தால், தொழிலாளர் போராட்டம் நிற்பதற்கும். சர்வ சங்கங்களும் ஒத்துக்கொள்வதற்கான வாய்ப்பும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது, இந்த ஆலைகளைத் திறப்பது சம்பந்தமாக, இதைத் தனியாக, இந்தச் சபையில் பேசுவது மாதிரியாக சம்பந்தப்பட்ட எல்லோரையும் சேர்த்து வைத்துப் பேசினால் உதவிகரமாக இருக்கும். ஜூலை மாதம் ஆலைகளைத் திறக்க முடியும். இரண்டு மாதத்தில் ஆலைகளைத் திறக்க முடியும், திறப்போம் என்று வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இதைச் செய்யவேண்டும். தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் ஆலைகளை யார் திறப்பது என்ற விவகாரத்திற்குப் போகவில்லை. பல சமயங்களிலே தனிப்பட்ட முதலாளிகள் தொழிலாளர்களின் பிராவிடெண்ட் பண்ட்டுக்கான பங்கைச் செலுத்தவில்லையானால், அவர்களைச் சிறையில் வைக்க மாநில அரசாங்கங்களுக்கு உரிமை இருக்கிறது.

மத்திய அரசு என்கிற நிலை வருகிறபோது, மத்திய அரசோடு பேசி, சம்பந்தப்பட்ட மத்திய அரசு அமைச்சர்களும் மாநில அரசு அமைச்சர்களும் கலந்துபேசி, மூன்று வாரத்திற்குள்ளாக நடவடிக்கை எடுத்து. மூடப்பட்ட மில்கள் எப்போது திறக்கப் படும், எந்தத் தேதியில் திறக்கப்படும் என்பதைச் சொல்ல வேண்டும். மாநில அரசு மத்திய அரசைக் காண்பிக்க, மத்திய அரசு மாநில அரசுகளைக் காண்பிக்க என்கிற நிலை வரக்கூடாது. இது யாருடைய பொறுப்பு. மாநில அரசினுடையதா, மத்திய அரசினுடையதா என்பதை தொழிலாளர்களின் மத்தியில் சொன்னால், 'நாங்கள் ஏமாற்றுகிறோம்' என்கிற குற்றச்சாட்டு எங்கள் பேரில் ஏற்படுகிறது. மாநில அரசு அதிகாரபூர்வமாக இதற்கு தேதியை நாங்கள் நிச்சயிக்கிறோம் என்ற அளவில் சொன்னால் போதும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, எந்தக் கணத்தில், 'ஒப்புதல் தந்துவிட்டோம்' என்ற உத்தரவு கிடைத்தாலும் அதற்கான தேதியைக் கொடுக்கலாம். எந்த நேரத்திலும் ஒப்புதல் கிடைக்கலாம். அதற்குத்தான் ஒவ்வொரு விநாடியும் காத்திருக்கிறோம். ஏற்கெனவே பலமுறை டெல்லிக்குச் சென்று, தொடர்புடைய அமைச்சர்களிடத்தில் பேசியிருக்கிறோம். நானே இதைக்குறித்துப் பேசியிருக்கிறேன். 'நீங்கள் செல்லுங்கள், மூன்று மணி நேரத்தில் அதற்கான உத்தரவு அனுப்பி விடுகிறோம்' என்று சம்பந்தப்பட்ட அமைச்சர் சொல்லியும், உத்தரவு கிடைக்கப் பெறாமல் திரும்பி வந்திருக்கிறோம். இதுகுறித்துக் கடிதப் போக்குவரத்து மூலமாகவும் கேட்டு வருகிறோம். தந்தி அடித்திருக்கிறோம். தொலைபேசியில் சம்பந்தப்பட்டவர்களுடன் விவரம் கேட்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக தொழிற் சங்கத் தலைவர்களிடத்திலும் பேசியிருக்கிறோம். நாள்தோறும் இதற்கான உத்தரவை எதிர்நோக்கியிருக்கிறோம். மாநில அரசு தன்னுடைய பொறுப்பை தட்டிக் கழிக்கவில்லை. மத்திய அரசிலிருந்து எந்த நேரத்திலும் உத்தரவு வரலாம் என்று எதிர்நோக்கியிருக்கிறோம். பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் 3 லட்சம் ரூபாய் அளிக்கிறோம் என்று சொன்னோம். இந்தியாவில் பிற மாநிலங்களை எடுத்துக் கொண்டால், பிற மாநிலங்களில் நூற்றுக்கணக்கான தொழிற் சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் 22 மில்கள்தான் மூடப்பட்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இரண்டு லட்சம், மூன்று லட்சம் என்று தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த மாநிலத்தில் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது? தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (கரவொலி)

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, முழுமையான விவரங்களை மாநில அரசிடம் மத்திய அரசு கேட்டு, அந்த விவரங்கள் கொடுக்கப்படவில்லை என்கிற கருத்து சொல்லப் படுகிறதே, அது உண்மையா? இதுபற்றி முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, எல்லா விவரங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன. சந்தேகத்திற்கு இடம் கிடையாது. ஒன்றிரண்டு கோர்ட் விவகாரம் இருக்கிறது.



கோர்ட் விவகாரம் உள்ளவை நீங்கலாக மூன்று மில்களை எடுப்ப தற்கான அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. இரண்டு மில்களை மாநில அரசு எடுத்து, அதற்கான முழுப்பணத்தையும், முழுப் பொறுப்பையும் தமிழ்நாடு அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியும், கடிதம் எழுதியும், தந்தி அனுப்பியும், அதற்கான பதில் மத்திய அரசிலிருந்து இன்னும் வரவில்லை.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, எல்லா தொழிற்சங்கத் தலைவர்களையும் மாண்புமிகு எதிர்தரப்பு உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இங்குள்ள நிலைமைகளை நீங்கள் அருள்கூர்ந்து தொழிலாளர்களுககுத் தெரிவிக்க வேண்டும். அரசாங்கம் செய்துவரும் உதவிகளைக்கூட மறைத்து விட்டால், அது சமுதாயத்திற்கும், மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாக அமைந்துவிடும். நடைபெற்ற உண்மைகளை தொழிலாளர்களிடத்தில் எடுத்துக்கூறினால், அவர்கள் ஆறுதல் கொள்வார்கள், யார் தவறு செய்கிறார்கள் என்கிற உண்மை நிலவரம் தெரியவரும் என்பதைச் சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர்கள் விளக்கம் அளித்தார்கள். இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை ஒரு பொது விவாதம் போல் நடத்தியிருக்கிறார்கள். இதற்கும் மேலாக, இந்தத் தீர்மானம் கொண்டுவந்ததற்கான அவசியமே இல்லை. நிதிநிலை அறிக்கைமீது நடக்கும் இந்த 7 நாள் விவாதத்திலே பேசும்போதுகூட இதைப்பற்றிச் சொல்லலாம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

## (4) அறிவிப்பு

### பேரவை அலுவல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1-3-1972-ம் நாள் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி 10-3-1972 வரை பேரவையின் நிகழ்ச்சி விபரம் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அச்சிட்டு அனுப்பியுள்ளவாறு நடைபெறும்.

அடுத்து, 1972-73-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் துவங்கும்.

## (5) 1972-73-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்

*திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, 1972-73 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது எனது கருத்துக்களை இந்த மன்றத்திலே கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட்டை, சமர்ப்பித்தது ஒரு கவிதையைப் படிப்பது போலவே இருந்தது. அதிலே காணக்கூடிய கருத்துக்கள் நாம் எல்லாம் எதிர்நோக்கியிருக்கின்ற சம தர்மப் பாதையிலே செல்கிறதா என்று பார்க்கும்போது இல்லையென்று நிச்சயமாகச் சொல்லமுடியும். கிட்டத்தட்ட இரண்டரைக் கோடி அளவுக்கு உபரி பட்ஜெட்டாக காணப்படுகிறது. 1967-ஆம் ஆண்டிலிருந்து திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவியேற்றதற்குப் பின்னால் வருவாயை வரி மூலமாக கிட்டத்தட்ட 202 கோடியே 72 லட்சம் ரூபாய்க்குப் போட்டு பெருக்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அன்று 1967-க்கு முன்னாலே எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கும்பொழுது இந்த அரசு பொதுமக்கள்மீது வரியைப் போட்டு வருவாயைப் பெருக்குவது சமதர்மப் பாதைக்கு உகந்ததாக இருக்கிறதா என்று பேசியிருக்கிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1966-67-ஆம் ஆண்டு பட்ஜெட் பொது விவாதத்தின்போது இப்பொழுது அமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் குறிப்பிட்டதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். "சம தர்ம சமுதாய அடிப்படையானது வரி அல்லாத முறையிலே வருமானத்தைப் பெருக்குவதிலே அமைந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். வரியற்ற முறை நம் மாநிலத்திலே எந்த முறையிலே அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரமே இந்த ஆண்டில் காணப்படவில்லை என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். வரியை மட்டும் போட்டு அரசாங்கம் சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்த முடியும் என்பதை வலியுறுத்துகிற அதுதான் அரசாங்கத்தின் திட்டமா என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்" என்று பேசியிருக்கிறார்கள் 1966-67-ஆம் ஆண்டிலே வருவாய்



200 கோடிக்குக் குறைவாகக் காணப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 20 கோடிக்கு மட்டும் வரிப்போடப்பட்டபொழுதே இந்தக் குற்றச்சாட்டை அவர்கள் அப்பொழுது சாட்டியிருக்கிறார்கள். வரியில்லாத முறையிலே வருமானத்தைப் பெருக்குவதிலேதான் சமதர்ம சமுதாயம் அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள் அப்பொழுது. ஆகவே அந்தக் கருத்துக்கு மாறுபட்ட முறையிலே வரியின் மூலமாக இன்றைக்கு எத்தனை வரிகளைப் போட்டு நான்காண்டுக் காலமாக, இந்த ஆட்சி வந்த பிறகு 202 கோடியே 72 லட்சம் ரூபாய் அளவுக்கு வரிப்போட்டு இருக்கிறார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபொழுது பேசியதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் 1966-67-ஆம் ஆண்டிலே குறிப்பிட்ட கருத்து. "இந்த வரவு-செலவுத் திட்டத்திலே வரி இல்லையென்று கூறி மகிழ்ச்சி அடைவதற்கு எந்தவிதமான முகாந்திரமும் கிடையாது. சென்னை அரசாங்கத்தினுடைய வருவாய் இந்த ஆண்டு ஏறத்தாழ 24 கோடி ரூபாய் அதிகம் ஆகியிருக்கிறது. இதை வரவு-செலவுத் திட்டம் நமக்குக் குறிப்பிடுகிறது. ஆனால் இந்த 24 கோடி ரூபாய் வருமானம் சோஷலிசம் செயல்பட்ட காரணத்தால் ஏற்பட்டதா? அல்லது தனியார் வசம் இருந்த தொழிற்சாலைகள் எல்லாம் பொதுத் துறைக்கு மாற்றப்பட்டு, அந்த ஜனநாயக சோஷலிச எழுச்சியின் காரணமாகக் கிடைத்த வருமானமா? பெரும் பண முதலாளிகளுடைய தொழில்கள் எல்லாம் தேசியமயமாக்கப்பட்டு அதன் காரணமாக சோஷலிச ரீதியில் உருவாக்கப்பட்டுள்ள வருமானமா?" என்ற அந்தக் கேள்விக்குறிகளை நான் இந்த மன்றத்திலே இன்று எழுப்பக் கடமைப்பட்டிருக்கிறேன். 1971-72-ஆம் ஆண்டு வரிமூலம் கிடைத்த வருவாயை எல்லாம் ஜனநாயக சோஷலிச எழுச்சியின் காரணமாகக் கிடைத்த வருவாய் என்று சொல்லமுடியாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அது மட்டுமல்ல. இன்னொன்றும் அவர்கள் தொடர்ந்து குறிப்பிட்டார்கள். "எங்களுக்குள்ள ஏமாற்றம் எல்லாம் போடப்பட்டிருக்கிற இவ்வளவு வரிகளில் ஒன்றிரண்டு வரிகளை

[திரு. எ. சுவாமிதாஸ்] [1972 மார்ச் 3

வன்முறையிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள், இதை மறுக்க முடியாது. அண்மையில் பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சி எடுத்துக்காட்டாகும். ஜனநாயகத்தில் கறுப்புக்கொடி காட்டுவது, ஆர்ப்பாட்டம் செய்வது என்பது இயல்பான செயல்களாகும். அதற்குக்கூட அரசாங்கம் பாதுகாப்புக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் கறுப்புக்கொடி காட்டக்கூடியவர்களை அடித்து நொறுக்க வேண்டும் என்று குண்டர்களைக் கொண்டுவந்து மாணவர்களை அடித்து நொறுக்கி, மண்டையை உடைத்து அனுப்பியிருக்கிறார்கள். இத்தகைய நிலைகளைச் சிந்தித்துப் பார்க்க இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது.

இன்னொரு குற்றச்சாட்டு. இப்பொழுது எங்கு பார்த்தாலும் ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. அரசாங்கத்தின் செயல்களை விசாரணை செய்ய வேண்டும். இந்த மாநில நிதிபதியாகயிருந்தாலும் அல்லது வெளி மாநில நிதிபதியாகயிருந்தாலும் சரி விசாரணை செய்ய வேண்டும். விசாரணை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை பொதுவாக மக்கள் மத்தியிலே காணப்படுகிறது. நான் கூறும் ஒரு கருத்து என்னவென்றால், இந்த அரசாங்கத்தின்மீது பல குற்றச்சாட்டுகள், குறிப்பாக எங்கு பார்த்தாலும் லஞ்ச ஊழல் காணப்படுகிறது என்ற குற்றச்சாட்டு கூறப்படுகிறது. லஞ்ச ஊழல்கள் என்று சொன்னவுடனே ஆளும் தரப்பில் உள்ளவர்கள் கேட்கக்கூடும், "குறிப்பிட்டு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்" என்று. நான் சொல்லுகிறேன், எந்தக் காரியத்தை இன்றைக்கு நாம் நடத்த வேண்டுமென்றாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டுதான் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுடைய ஆதரவு இல்லாமல் எந்தக் காரியத்தையும் நடத்த முடியவில்லை. இன்றைக்கு இருக்கும் அரசு பொதுவாக ஜனநாயக அரசு என்று சொல்ல முடியாது. ஜனநாயக அரசு என்று சொல்ல வேண்டுமானால் Government of the people, by the people and for the people என்று இருக்க வேண்டும். ஆனால் இன்றைக்குள்ள சூழ்நிலையில், it is the Government of the D.M.K. by the D.M.K. and for the D.M.K. என்ற அடிப்படையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. எதிர் வரிசையிலுள்ள என்னைப் போன்றவர்கள் எந்த சிபாரிசையும் சொல்ல முடியாது. அந்த நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறோம்.



1972 மார்ச் 3] [திரு. எ. சுவாமிதாஸ்]

பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக்கொண்டால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பஞ்சாயத்து உறுப்பினர்களும் இருப்பார்கள், எதிர் வரிசையிலுள்ள உறுப்பினர்களும் இருப்பார்கள். ஆனால் அங்கிருக்கும் சேர்மன் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று இருந்தால் எதிர்க் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களின் பஞ்சாயத்துக்களுக்கு எந்தவிதமான வேலையும் செய்வதில்லை. அந்த நிலையில் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்தக் கட்சியைச் சேர்ந்த கட்சியாளர்களுக்காகத்தான் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்ற நிலையிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை மாற வேண்டும்.

இன்னொன்று, நாங்கள் அமைச்சர்களிடத்தில் சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்று சொன்னால் எல்லாம் முதலமைச்சருடைய கருத்துப்படித்தான் நாங்கள் செய்ய முடியும், ஆகவே, முதலமைச்சரைச் சென்று பாருங்கள் என்று சொல்கிறார்கள்.

அது மட்டுமல்ல, அண்மையில் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் ஒரு தேர்வு நடந்தது. குரூப் 2 சர்வீசிற்கு பல மாணவர்கள் தேர்வு எழுதினார்கள். நான் சொல்வது உண்மையாகவும் இருக்கலாம் அல்லது எனக்குக் கிடைத்த தகவல்கள் தவறாகவும் இருக்கலாம். ஆனால் அதை ஊன்றிக் கவனித்து ஆராய்ந்து தேவைப்பட்டால் விசாரணை செய்து நல்ல முடிவு காண வேண்டுமென்ற பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்பு என்னைப் போன்றவர்களுடையது அல்ல. ஆகவே, அதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எம்.ஏ. பட்டதாரிகளெல்லாம் தேர்வில் கலந்து கொண்டார்கள். அவர்கள் நன்கு பரீட்சை எழுதினார்கள். ஹானர்ஸ் படித்த, எம்.ஏ. படித்த பட்டதாரிகள் எழுதினார்கள். என்னிடத்தில் அவர்கள் நிச்சயமாக, இண்டர்வியூ கார்டு வரும் என்று குறிப்பிட்டார்கள். அப்படிக் குறிப்பிட்ட பலருக்கு அப்படி வரவில்லை. பிற்பாடு விசாரித்ததில் ஏதோ நடந்துவிட்டதாக அவர்கள் சந்தேகப்படுகிறார்கள். அரசுத் தரப்பிலேதான் செலக்ஷன் நடந்தது. பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் நடத்தப்படவில்லை என்ற குறைபாட்டைச் சொல்கிறார்கள். அதில் உண்மையிருக்கிறதா இல்லையா என்று பார்க்க நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி** : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். திரு. சுவாமிதாஸ் அவர்கள் பேசும்பொழுது எம்.பி.எஸ்.சி.யில் அவர்கள் நன்கு பரீட்சை எழுதினார்கள், ஆனாலும் தேர்ச்சி பெறவில்லை, அரசாங்கம் ஏதோ செய்துவிட்டது என்ற முறையில் கூறினார்கள். எம்.பி.எஸ்.சி. ஒரு அட்டானமஸ் பாடி. அப்படியிருக்கும்பொழுது அரசாங்கம் எப்படி தேர்வு முடிவுகளைப்பற்றி மாற்றம் செய்ய முடியும்? இது வேண்டுமென்றே சொல்லப்பட்ட குற்றச்சாட்டு. அட்டானமஸ் பாடியில் பரீட்சை எழுதிய அவர்களை அரசாங்கம் என்ன செய்ய முடியும் என்று சொல்ல வேண்டும். எந்த அமைச்சர் அல்லது அரசாங்கம் எப்படித் தலையிட்டது என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

**திரு. கோவை செழியன்** : பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் சார்.

MR. DEPUTY SPEAKER : I have not given my decision on the point of order. அதற்குள் எழுந்திருக்கிறீர்களே.

**திரு. எ. சுவாமிதாஸ்** : நான் அதற்காகத்தான் சொன்னேன், பலரால் பேசப்படுகிறது என்று. அரசு தரப்பிலே விசாரணை செய்தால் உண்மை நன்கு தெரியும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : எல்லாம் பரவலாகப் பேசப்படுகிறது, விசாரணை செய்யுங்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தால் ஒரு நீதிபதியை மவுண்ட்ரோட்டில் உட்கார வைத்து யார் யாருடைய புகார்கள் இருக்கின்றன, கொண்டு வாருங்கள் என்று கடை வைப்பதா? குற்றச்சாட்டுகள் இருந்தால் ஒழுங்காகச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பத்திரிக்கைச் செய்திகளையே ஆதாரமாகக் கொண்டு பேசக்கூடாது என்று சொல்லும் பொழுது பரவலாகப் பேசப்படுகிறது என்று பேசக்கூடாது. பொதுவாக நீதிமன்றங்கள்கூட இப்படிப்பட்ட கூற்றுக்களை ஏற்றுக்கொள்வது இல்லை.

**திரு. எ. சுவாமிதாஸ்** : அந்தத் தேர்விலே எழுதியவர்களிடம் இப்படிப்பட்ட எண்ணம் இருக்கிறது. அவர்கள் எழுதிய விடைத்தாள்களையெல்லாம் பார்த்து சரியாக மார்க் போடப்



பட்டிருக்கிறதா, அவர்கள் கூறுவதில் உண்மை இருக்கிறதா இல்லையா என்று கணக்கெடுத்து வெளியிட வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவரவர்களே, எம்.பி.எஸ்.சி. ஒரு அட்டானமஸ் பாடி என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அங்கு மார்க்குகளைச் சரியாகப் போடுகிறார்களா என்று பார்க்கும் வேலை அரசாங்கத்திற்கு இல்லை. அங்கே பலவிதமான தேர்வுகள் நடக்கின்றன. கனம் அங்கத்தினர் அவர்கள் எந்தத் தேர்வைப் பற்றிக் குறிப்பிடுகிறார் என்று தெரியவில்லை. கிளாஸ் 1, கிளாஸ் 2, கிளாஸ் 3 என்று நடக்கின்றன. குரூப் 1, குரூப் 2, குரூப் 3 என்று நடக்கின்றன. எதைப்பற்றிச் சொல்கிறார் என்று தெரியவில்லை. அங்கிருக்கும் தேர்வுத் தாள்களைச் சரியா தப்பா என்று பார்க்கும் வேலை அரசாங்கத்திற்கு இல்லை. அப்படி சொல்லும் அளவில் போனால் இன்னும் மோசமான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக்கப் படுவோம். அந்த விடைத்தாள்களைக் கண்ணால் பார்க்கும் உரிமை கூட எங்களுக்கு இல்லை.

**திரு. எ. சுவாமிதாஸ்** : நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது அதில் அரசு தலையிடாமல் இருந்தாலே போதும் என்றுதான். தலையிடவில்லையென்றால் மகிழ்ச்சி.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : அரசு தலையிடாமல் இருந்தால் போதும் என்று சொல்லி ஏதோ இதுவரை தலையிட்டது போன்ற குற்றச் சாட்டைக் கிளப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். தலையிடாமல் இருந்தால் போதும் என்று சொன்னார்கள். இதைச் சொன்னார்கள், இதைத் செய்திருக்கிறார்கள் என்று குற்றச் சாட்டுக்களைக் கூறுவார்களேயானால் பதில் சொல்லலாமே தவிர இனிமேல் தலையிடாமல் இருந்தால் போதும் என்று சொன்னால், நாங்கள் தினமும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் தலையிட்டு அவர்கள் வேலைக்கு குந்தகம் ஏற்படுத்துவது போன்ற நிலையைச் சொல்ல வேண்டாம்.

இன்னொன்று. எம்.பி.எஸ்.சி.யில் ஒரு லிஸ்ட் கொடுத்தால் அதை அரசாங்கம் திருத்துவதாகயிருந்தால் அது சரியல்ல என்று சொல்லித் திருத்துவதற்குச் சரியான காரணம் காட்டி இந்த அவையின் மேஜையின்மீது வைக்க வேண்டுமென்று சட்டம்

இருக்கிறது. திருத்தவில்லை, அப்படி திருத்துவதாக இருந்தால் மேஜைமீது வைக்க வேண்டும். இப்பொழுது தனி அட்டானமஸ் பாடியாக உள்ள எம்.பி.எஸ்.சி.யின்மீது குற்றச்சாட்டுகள் கூறுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எ. சுவாமிதாஸ் :** அடுத்தப்படியாக, இன்னொரு குற்றச்சாட்டைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் முன்பு குறிப்பிட்டேன். கழகத் தோழர்கள் அரசு நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்று பேசப்படுவது மட்டுமல்ல. அதற்கு ஆதாரமாக அரசு நிர்வாகத்தில் அவர்கள் தலையிடுகிறார்கள் என்பது உண்மையாகும். அதற்கு ஆதாரமாகச் சொல்லப்போனால் இன்றைக்கிருக்கின்ற வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு வருவதற்கு முன்பு அவர்களுடைய பொருளாதார நிலை எப்படியிருந்தது. இந்த அரசு பதவி ஏற்றபிறகு இப்பொழுது அவர்களுடைய பொருளாதார நிலை எப்படி இருக்கிறது. இத்தகைய பொருளாதார நிலையை அடைய அவர்கள் ஆற்றும் பணி என்ன? தொழில்கள் என்னென்ன? இந்த வருவாய் எப்படி வந்தது என்பதைப்பற்றி நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கேட்டால், எங்கள் பகுதியிலே சொல்வார்கள், அவர்கள் தொழில் என்ன? என்று கேட்டால் ஆள்மேல்க்ருஷி என்று சொல்வார்கள். அதாவது மக்கள் மேல் விவசாயம் செய்வார்கள் என்று சொல்வார்கள். அந்த நிலை நாட்டில் இருக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி காண வேண்டும். அரசின் நிர்வாகத்திலே கீழே உள்ள தோழர்கள் தலையிடாமல் இருக்குமாறு பார்க்க இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. அவர்கள் முன்பிருந்த நிலைமை, அவர்கள் ஆற்றும் தொழில். இந்தத் தொழிலிலேயிருந்து இந்தக் குறிப்பிட்ட கால அளவில் அவ்வளவு வருமானம் வர முடியுமா என்று விசாரணை செய்ய வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, வட்டச் செயலாளர்களின் முன்னாள் அந்தஸ்து என்ன, பொருளாதாரம் என்ன, இன்றைக்குள்ள அந்தஸ்து என்ன. பொருளாதாரம் என்ன என்றெல்லாம் சிலபேர்கள் தங்களை மறந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்: அது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் சட்டசபையிலே பேசுகின்ற காரணத்தால் நீதிமன்றத்திற்கு யாரும்





செல்ல முடியாது என்ற தைரியம் ஒன்றை மட்டும் வைத்துக் கொண்டு எதையும் பேசக்கூடாது. இதே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட வட்டச் செயலாளர் பற்றி ஒரு பொதுக் கூட்டத்தில் பெயர் சொல்லிக் குறிப்பிட்டு ஆதாரத்தோடு விளக்கத் துணிவு படைத்தவர்களாக இருக்கிறார்களா?

**திரு. எ. சுவாமிதாஸ் :** பொதுமேடைகளில் நாங்கள் பேசினால் பேசுகின்ற குறிப்புகளெல்லாம் மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குக் கிடைத்து இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கிடைத்து, வழக்குப் போட்டால் வழக்குமன்றத்திற்கு வந்து கேவலம், மன்னிப்புக் கேட்டுக்கொண்டு போகிறார்கள். நான் அப்படி பேசவில்லை என்று அப்படிப்பேசிய பலரின்மீது வழக்குபோட்டு அவர்களில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டவர்களின் பட்டியல் என்னிடத்தில் இருக்கிறது. வேண்டுமானால் இந்தச் சபையிலே கேட்டால் வைக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த மாதிரிக் குற்றச்சாட்டு வருகின்ற நேரத்திலே அதைப் பற்றி விசாரிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்தது. இப்படிக் குற்றச்சாட்டு சொல்லும்போது ஆதாரம் இருக்கிறதா. நாங்கள் ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளைச் சொல்லி ஒருசிலர் மன்னிப்புக் கோரியிருக்கிறார்கள் என்று கூறி நாங்கள் குற்றச்சாட்டையே எடுத்துக் கூறக்கூடாது என்ற கருத்தை முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். இன்று அரசாங்கத்திலே இருக்கின்றவர்கள் ஒழுங்காக இருக்கிறார்கள் என்று இந்த அரசு கருதுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இன்று அரசாங்கத்திலே இருக்கின்றவர்கள் ஒழுங்காக இருக்கிறார்களா இல்லையா என்பதைப் பற்றிப் பேசும்போது சட்டசபையிலே இருக்கும் உறுப்பினர்களைப் பற்றிப் பேசினால் பாதிக்கப்படுகின்ற உறுப்பினர்கள் பதில் சொல்லக்கூடும். வெளியிலே இருப்பவர்கள் தவறு செய்தார்கள் என்று கூறுகிறார்கள். யார் என்ன தவறு செய்தார்கள் என்று இங்கே சொன்னால்கூட அதன் பேரில் வெளியிலே இருப்பவர்கள் நடவடிக்கை எடுக்க முடியாது,

நிரபராதி என்று நிரூபிக்க முடியாது. சட்டமன்ற முறைகளில் அதற்கு வழிவகை கிடையாது. ஆகவேதான் பொது மேடைகளில் அதைப் பற்றி எடுத்துச் சொல்லலாம், அப்படி வெளியே சொல்லப்படுபவைகளை வைத்து வழக்குத் தொடர்ந்தால் நீதிமன்றத்திலே 'நான் சொல்லவில்லை, அப்படி எழுதவில்லை; துணை ஆசிரியர் எழுதினார், இன்னொரு ஆசிரியர் எழுதினார். யாரோ எழுதினார்; அப்படிக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை' என்று கூறித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. பொதுவான முறையில் எல்லாக் கட்சிகளுக்கும் நாணயம் தேவை, நேர்மை தேவை, இதிலே இரண்டு கருத்துகளுக்கு நான் இடம் வைக்கவில்லை. ஒவ்வொரு கட்சியிலும் சாதாரண மட்டத்திலே இருந்தவர்கள் இன்றைக்கு எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறார்கள், அவர்களுக்கு எத்தனை வீடுகள் இருக்கின்றன என்பதை எல்லாம் எல்லாக் கட்சிக்காரர்களும் பார்க்க வேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நீதி மன்றங்களில் அமைச்சரவையில் இருப்பவர்களைப் பற்றியோ, கட்சி மட்டத்தில் இருப்பவர்களைப் பற்றியோ கருத்துத் தெரிவித்தால் அதைப் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** குறிப்பிட்டு எதைச் சொன்னாலும் அதைப் பற்றி அரசாங்கம் விசாரிக்கத் தயாராக இருக்கிறது. பொதுவில் பேச வேண்டாமென்றுதான் சொல்லுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த அவை விசாரணை மன்றமாக மாற முடியாது. நாட்டின் நிர்வாகத்தைப் பற்றிய பல விஷயங்களை இந்த மன்றத்திலே பேசலாம். பொதுவான குற்றச்சாட்டுகளாகப் பேசுவது நல்லதல்ல. ஆதாரத்தோடு பேசுவது நல்லது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** முதலமைச்சர் அவர்கள், குற்றச்சாட்டுகளைச் சொல்லிவிட்டு மன்னிப்புக் கடிதம் கொடுத்தவர்களின் பட்டியலே இருக்கிறது என்று சொன்னார்கள். யார் அப்படி மன்னிப்புக் கடிதம் கொடுத்தார்கள் என்ற பட்டியலை இந்தச் சட்டசபையிலேயே வெளியிட்டால் நல்லது.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவ்வாறு தவறாகப் பேசிய ஒரு அம்மையார் மன்னிப்புக் கடிதம் கொடுத்தார்கள். தாங்கள் அல்ல. காங்கிரஸ் கட்சியிலுள்ள ஒருவர். ரமணிபாயோ, கிருஷ்ணாபாயோ தெரியவில்லை. இப்போது அந்தப் பெயர்கள் ஞாபகத்தில் இல்லை. பதில் அளிக்கும்போது பட்டியலைக் கொண்டு வந்து படிக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இப்படி மறைமுகமாகப் பேச வேண்டியதில்லை . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ரமணிபாய் மீது தொடுக்கப்பட்ட வழக்கு யாரோ லஞ்சம் வாங்கினார்கள் என்று சொன்னதற்காகத் தொடுக்கப்பட்ட வழக்கு அல்ல. போலீஸ் கமிஷனரைப் பற்றி, நிர்வாகத்தைப் பற்றிப் பேசியதற்காகத் தொடுக்கப்பட்ட வழக்கு. இதை வைத்துக்கொண்டு ஏதோ மன்னிப்புக் கடிதம் கொடுத்தார்கள் என்று மக்கள் மத்தியில் பேசிக் கொண்டிருப்பது சரியல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மன்னிப்புக் கடிதம் கொடுத்தவர் யார் என்ற பெயரைத் தாங்களே தெளிவாகத் தெரிவித்ததற்காக நன்றி.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மன்னிப்புக் கடிதம் கொடுத்தது நிர்வாகத்தைப் பற்றிப் பேசியதற்காகவா அல்லது ஊழல்களைப் பற்றிப் பேசியதற்காகவா என்ற எல்லா விவரங்களையும் முதலமைச்சர் அவர்கள் விவரமாக இந்தச் சபையிலே சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஊழலோ, லஞ்சமோ, அதைப் பற்றிச் சொல்லவில்லை. தவறான கருத்தை வெளியிலே சொல்லி வழக்குப் போட்ட பிறகு நீதி மன்றத்தில் மன்னிப்புக் கடிதம் கொடுத்தார்கள் என்றுதான் சொன்னேன்.

**திரு. எ. சுவாமிதாஸ் :** 1947-ல் இருந்தே விசாரணை நடத்த முதலமைச்சர் அவர்கள் தயாரா என்ற கேள்விக் குறி இப்போது எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த விசாரணையை நடத்தினால் இரண்டு தரப்புக்கும் நல்லது. அன்று ஆண்டு கொண்டிருந்தவர்களுக்கும் நல்லது. இன்று ஆண்டு கொண்டிருப்பவர்களுக்கும் நல்லது.

[திரு. எ. சுவாமிதாஸ்] [1972 மார்ச் 3

ரைஸ் மில் லைசென்ஸ் வாங்குவதற்கு பப்ளிக் ஹெல்த் ஆபீசரிடமிருந்து அனுமதி பெறவேண்டும். கன்னியாகுமரி பப்ளிக் ஹெல்த் ஆபீசர் இம்மாதிரி ரைஸ் மில் வைத்திருப்பவர்களிடமிருந்து கிட்டத்தட்ட இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் பணம் பறித்ததாகச் சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டாம்.

**திரு. எ. சுவாமிதாஸ்:** அதைப்பற்றி விசாரணை நடத்த வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதிகாரி ஒருவர் லஞ்சம் வாங்கினர் என்று சொல்லுகிறார் என்று கருதுகிறேன். டி.எச்.ஓ.வுக்கு லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரம் கிடையாது. கலெக்டருக்குத்தான் அந்த அதிகாரம், பெல்ட் ஏரியாவுக்கு மட்டுந்தான். அங்கிருந்து சிபாரிசு செய்து அரசாங்கத்திற்கு வந்த பிறகு அரசாங்கந்தான் அனுமதி கொடுத்து வருகிறது. எந்த அதிகாரி தவறு செய்தார் என்று மன்றத்தில் சொல்லாவிட்டாலும் கூட எழுதிக் கொடுத்தால் நல்லது. அதுவும் இரண்டு லட்சம் ரூபாய் சம்பாதித்த அதிகாரியைச் சும்மா விடக்கூடாது. யார் அந்த அதிகாரி என்று எழுதிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எ. சுவாமிதாஸ்:** எழுதிக் கொடுக்கிறேன். இந்த பட்ஜெட்டில் தங்களுடைய ஈட்டுப்படி எல்லாம் உயரும், சலுகைகள் கிடைக்கும் என்று என்.ஜி.ஓக்கள் எதிர்பார்த்தார்கள். சேலத்தில் நடந்த மாநாட்டில் முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்ததாக பத்திரிகையில் படித்தேன். இப்போது அவர்கள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். ஏதோ வீட்டு வாடகைப்படி ஓரளவுக்கு திட்டமிட்டபடி கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா செலவையும் இதர வீட்டு வாடகையைப் பார்க்கும்போது சென்னை நகரத்தைப் போலவே மற்ற நகரங்களிலும் அதிகமாகத்தான் இருக்கிறது. சென்னையில் கூட சில பொருள்களை மலிவாக வாங்கலாம். நாகர்கோயில், கோவை போன்ற நகரங்களில் அவ்வாறு வாங்க முடியாது. ஆகவே, வீட்டு வாடகைப் படியை எல்லோருக்கும் ஒரே மாதிரியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு மருத்து



1972 மார்ச் 3] [திரு. எ. சுவாமிதாஸ்]

படியும் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும். நாம் நிறைய வரி போட்டிருப்பதால் வருவாயும் அதிகமாக இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு கிடைக்கும் அளவு அலவன்ஸ் கொடுப்பதிலே கஷ்டம் ஒன்றும் இருக்க முடியாது.

அந்தரங்க ஃபைல் சிஸ்டம் ஒழிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறார்கள். பதவி உயர்வு கொடுக்கும்போது சீனியாரிடியை வைத்துக் கொடுக்க வேண்டும். தகுதி படைத்திருந்தால், படிப்பும் இருக்குமானல் சீனியாரிடிபடி பதவி உயர்வு கொடுக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு ஊதியக் குழுவின் பரிந்துரைகள் பொருத்தமாக இல்லை. பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு இன்னொரு துறையில் கொடுக்கப்படுகின்ற அடிப்படையில் கூட சம்பளம் கொடுக்கப்படவில்லை. அதை ஆராய்ந்து கொடுக்க கமிஷனை நியமித்திருக்கிறார்கள். அதற்குத் தேவையில்லை. இந்த பட்ஜெட்டில் கூட அவர்களுக்கு எந்த மாதிரி ஊதியம் கொடுப்போம் என்று தெரிவித்திருக்கலாம்.

இந்த பட்ஜெட் உரையில் முக்கியமாகப் பேசப்பட்டிருப்பது மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி பற்றியதாகும். முதலமைச்சர் அவர்கள் இதைப் பற்றி வற்புறுத்திப் பேசியிருக்கிறார்கள். பல அதிகாரங்கள் இருந்தால் நல்ல முறையில் ஆட்சியை நடத்த முடியும் என்று கூறியிருக்கிறார்கள். மாநில சுயாட்சி கேட்கிற குரல் 'அடைந்தால் திராவிட நாடு' இல்லையேல் 'சுடுகாடு' என்ற ஒலி கிளப்பப்பட்ட அதே துப்பாக்கிக் குழாயிலிருந்து வெளிவருவதால் அதில் பிரிவினை மனப்பான்மை இருக்கிறதோ என்ற ஐயப்பாடு எழுகிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் அவர்கள் அதிகாரத்தை அதிகமாகக் கேட்கிறோமே தவிர, வேறல்ல என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அதற்கு மட்டற்ற மகிழ்ச்சி.

இன்றைய ஆட்சியாளர்கள் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று முன்னால் குரல் கொடுத்தவர்கள். இப்போது தமிழகத்திலே வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்ந்துகொண்டிருக்கிறது என்ற நிலைதான் இருக்கிறது. கன்னியாகுமரி, திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களுக்குச் சரியான பிரதிநிதித்துவம் கொடுக்கவில்லை. பதினான்கு அமைச்சர்கள் உள்ள அவையில் மூன்று அமைச்சர்கள்தான் இருக்

[திரு. எ. சுவாமிதாஸ்] [1972 மார்ச் 3

கிறார்கள், எந்தப் பெரிய வேலைத் திட்டங்களும் அந்தப் பகுதிகளில் தொடங்கப்படவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் "மாவட்ட" சுயாட்சி கேட்டால் என்ன என்ற எண்ணம் எனக்கு ஏற்படுகிறது. அந்த மாவட்ட கலெக்டருக்கும் வளர்ச்சி மன்றத்திற்கும் அதிகாரமே இல்லை. எதற்கெடுத்தாலும் சென்னையை நாடித்தான் வர வேண்டும். ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று சொன்னாலும் இங்குதான் அனுமதி பெறவேண்டும். மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கு ஒருவித அதிகாரமும் கிடையாது. அதிகாரம் பூராவும் இங்கே குவிந்து கிடக்கிறது.

ஆகவே, பிற மாநிலங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவாவது தங்கள் அதிகாரங்களைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் கூடுதல் அதிகாரங்கள் கொடுத்து ஒரு வழி காட்ட வேண்டும். அப்படி வழி காட்டினால்தான் இந்த மாநில சுயாட்சிக் குரல் எழுப்புவதற்கு பொருத்தமாக இருக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அங்குள்ள ஏராளமான பள்ளிக் கூடங்கள் எல்லாம் ஓலைக் கட்டடங்களில்தான் இருக்கின்றன. அவைகளுக்கு நல்ல கட்டடங்கள் கட்டப்படவில்லை. பல காலமாக இதைப் பற்றிச் சொல்லி வருகிறோம். இந்த மன்றத்தில். இந்த அரசாங்கம் மட்டுமல்ல. முன்பிருந்த அரசாங்கத்தினிடம் கூட இதைப் பற்றி நாங்கள் வாதாடி யிருக்கிறோம். ஆயினும் கட்டடங்கள் அவற்றிற்கு கட்டப்படவில்லை. பல பள்ளிக்கூடங்களும் ஓலைக் கட்டடங்களில்தான் இருக்கின்றன. மழை பெய்தால் ஒழுகக் கூடிய அக்கட்டடங்களை கொஞ்சம் கொஞ்சமாகவாவது மாற்றி அமைப்பதற்கு வழி வகை காண வேண்டும்.

அதே போல் பஞ்சாயத்துப் பிரிவினை. இதை அரசு முக்கியமாக ஊன்றிக் கவனிக்க வேண்டும். சில கிராமங்களில் 500 ஜனத்தொகை கொண்டதாகயிருக்கும். சில 5,000 ஜனத்தொகை கொண்டதாக இருக்கும். 500 ஜனத்தொகை கொண்ட பஞ்சாயத்து அமைப்பு வருவாய் அடிப்படையில் அமைக்கப்பட



1972 மார்ச் 3] [திரு. எ. சுவாமிதாஸ்]

வில்லை. எவை எவை கிராமப் பஞ்சாயத்துக்களாக இருக்க அருகதை உள்ளனவோ அவை நகரப் பஞ்சாயத்துக்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. நகரப் பஞ்சாயத்தாக இருக்க வேண்டியவை கிராமப் பஞ்சாயத்துகளாக மாற்றப் பட்டிருக்கின்றன. இப்படி ஒரே குழப்படியாக இருக்கிறது. அதன் காரணமாக சில பஞ்சாயத்துக்களுக்கு மின்சாரக் கட்டணம் செலுத்தக் கூடிய அளவிற்குக் கூட வருவாய் இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. இது பற்றி எல்லாப் பஞ்சாயத்துக்களும் தீர்மானங்கள் போட்டிருக்கின்றன. அவர்கள் நகரப் பஞ்சாயத்துக் களுக்கும் மாச்சிங் கிரான்ட் வேண்டுமென்று கேட்கிறார்கள். காரணம் அங்கு பணியாற்றுகிற வேலையாட்களுக்கு சம்பளம் கொடுக்கக் கூட அவர்களுக்கு வருவாய் இல்லை. ஆகவே இதை மாற்றியமைக்கிற காலம் வரையில் அந்தப் பஞ்சாயத்துக்கள் சரிவர இயங்க எல்லாப் பஞ்சாயத்துக்களுக்குமே அரசாங்கம் மாச்சிங் கிரான்ட் வழங்குவதற்கு அனுமதி நல்க வேண்டும்.

அடுத்தபடியாக, குடிநீர் திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் எங்கு பார்த்தாலும் தண்ணீர் இருந்தாலும் கூட குடிக்க நல்ல தண்ணீர் கிடையாது. குடிப்பதற்கு நல்ல தண்ணீர் வேண்டு மென்ற காரணத்தினால் தக்கலை நகரத்திற்கும், குளச்சல் நகரத்திற்கும் அதைச் சுற்றியுள்ள கிராமப் பஞ்சாயத்துக் களுக்கும் மாம்பழத் துறை ஆற்றில் ஒரு அணை கட்டி நீர் கொண்டு செல்ல வசதி இருக்கிறது. அத்திட்டம் பல ஆண்டுகளாக அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசு முற்பட வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம் முழுக்க முழுக்க ஒரு விவசாய மாவட்டமாகும். நெற்பயிர், பழ வகைகள், ரப்பர், தேயிலை போன்ற எல்லா விதமான பயிர்களையும் கொண்ட அந்த மாவட்டத்திற்கு ஒரு விவசாயக் கல்லூரி தேவை, தேவை என்று பன்முறை இந்த மன்றத்தில் எல்லா உறுப்பினர்களாலும் வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ரப்பர் தொழிற்சாலை வந்துவிடும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அந்த ரப்பர் தொழிற்சாலை இப்போது இராமநாதபுரம்

மாவட்டத்திற்கு மாற்றப்பட்டு விட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலைகள் வரவேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. அங்கு ரப்பர் தொழிற்சாலை சரிவர இயங்குமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதற்கான மூலப்பொருள் கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைக்கிறது. அங்கிருந்து மூலப் பொருளை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வாங்கிக் கொண்டு வந்தால்தான் அங்கு இத்தொழிற்சாலை இயங்க முடியும். இதையும் ஊன்றிக் கவனித்து அந்த ரப்பர் தொழிற்சாலையை கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் மீன்பிடித் துறைமுகம். மீன்பிடித் துறைமுகம் குளச்சலில் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக டிரான்ஸ்போர்ட் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறி முடித்துக்கொள்கிறேன். டிரான்ஸ்போர்ட் இலாகாவை எடுத்துக்கொண்டால் கன்னியாகுமரி யூனிட்டில் உள்ளவர்களுக்கு ஒருவிதமான சர்பளம், பயணப்படி, பஞ்சப்படி என்றும் மற்ற யூனிட்களில் உள்ளவர்களுக்கு ஒருவிதமாகவும் வழங்கப்படுகிறது. மின்னல் விரைவு வண்டி நாகர்கோவிலிலிருந்து சென்னைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. நாகர்கோவிலிலிருந்து நான்கு மணிக்கு புறப்பட்டால் ட்ரைவர் 230 மைல்கள் ஒரேயியாக அந்த வண்டியை ஓட்ட வேண்டுமென்று ஆணை இருக்கிறது. அவர் நாகர்கோவிலில் இருந்து திருச்சி வரையில் ஓட்ட வேண்டும். பின்னர் திருச்சியில் இருந்து வேறு ஒரு ட்ரைவர் விழுப்புரம் வரையில், 100 மைல் வந்தால் போதும். திருச்சியில் வண்டியை எடுக்கிற ட்ரைவர் சென்னை யூனிட்டைச் சேர்ந்தவர். நாகர்கோவிலில் இருந்து வருகிற ட்ரைவர் 230 மைல்கள் ஒரேயடியாக ஓட்ட வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள், ஆனால் சென்னை யூனிட்டைச் சேர்ந்தவர் 100 மைல் ஓட்டினால் போதும் என்று ஆணை இருக்கிறது. இந்த வேறுபாட்டை அகற்ற வேண்டும்.

அடுத்தபடியாக. கன்னியாகுமரி மாவட்டத்தில் பஸ் பாடிகள் கட்டும் ஒரு தொழிலகம் இருக்கிறது. இராணித் தோட்டத்தில், அங்கு கட்டுகின்ற பாடிக்கும் இங்கு க்ரோம்பேட்டில் கட்டுகிற



பாடிக்கும் ஆகக்கூடிய செலவைப் பார்த்தால் பாடி ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபாய் வரையில் வேறுபாடு இருக்கிறது. இந்த வேறுபாட்டின் காரணத்தினால்தான் சொல்கிறேன். இராணித் தோட்டத்தில் உள்ள தொழிற்சாலையில் அதிகப்படியான பாடிகள் கட்டினால் அரசாங்கத்திற்கு நிறைய லாபம் வரும் என்று. இதை ஊன்றிக் கவனித்து அத் தொழிற்சாலையை விரிவுபடுத்தி அங்குள்ள தொழிலாளர்களுக்கு அதிகப்படியான வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
(மணியடிக்கப்பட்டது.)

ஆக, இப்படி பல பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றையெல்லாம் கவனித்து அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, பொது வாழ்க்கையில் நீண்ட காலம் இருக்கிறவன் என்ற முறையில் மிகமிகப் பெருமையோடு இந்த நிதிநிலை அறிக்கை பற்றி நான் பேச முன்வருகிறேன்.

காங்கிரஸ் கட்சி சார்பில் விவாதத்தைத் துவக்கி வைத்த நண்பர் அவர்கள் பல பிரச்சினைகள் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் வரிக் கொள்கை பற்றி எடுத்துச் சொன்ன நேரத்தில் அவர்கள் தங்கள் சொந்தக் கொள்கையைச் சொல்கிறார்களா அல்லது ஒரு அரசியல் கட்சியின் கொள்கையைச் சொல்கிறார்களா என்று எனக்குப் புரியவில்லை.

இன்றைய தினம் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களால் தரப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கை கடந்த ஆண்டு பற்றாக்குறை 15.87 கோடி என்ற நிலையிலிருந்து மாறி 1.74 கோடி உபரி என்ற சூழ்நிலையில் கடந்த ஆண்டு வரவு-செலவு முடிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு தரும் கடன் 45 கோடி, திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் 53 கோடியாக அதாவது எட்டு கோடி கூடுதலாக நாம் செலுத்தப்பட வேண்டிய நிலையில் மாநில மூலதனச் செலவை நாமே சரிக்கட்ட வேண்டிய சூழ்நிலையில் பெரும் செலவு எதையும் குறைக்காமல் ரிசர்வ் வங்கியிடம் ஏற்பட்டுள்ள அதிக பற்று பற்றியும் கவனத்தில் கொண்டு மத்திய அரசிடமிருந்து

[திரு. இராம. அரங்கண்ணல்] [1972 மார்ச் 3

உதவி கிட்டாத சூழ்நிலையில் இந்தியாவிலேயே நெல் உற்பத்தியில் முதல் இடம் பெற்றிருப்பது தமிழ் நாடு என்ற புகழாரத்தை இந்திய அரசு சூட்டுகின்ற நிலையில் வேளாண்மைக்காக கூட்டுறவுத் துறை வாயிலாக 1966–67-ல் 31 கோடிதான் செலவிடப்பட்டிருக்கிறது என்ற நிலைமை மாறி இன்றைய தினம் 61 கோடி ரூபாய் அதாவது இரண்டு மடங்கு அதிகமாகச் செலவழிக்கப் படுகிறது என்ற சூழ்நிலையில் நீண்ட கால வசதிக் கடன் விவசாயிகளுக்கு 66–67-ல் 3 கோடி தரப்பட்டது என்று சொன்னால் இன்றைய தினம் பத்து மடங்கு அதிகமாக 30 கோடி ரூபாய் நீண்ட கால வசதிக் கடன்கள் கொடுக்கப்படுகிறது என்ற நிலைமையில் பாசன வசதிக்கு என்று 1966-67-ல் 7 கோடிதான் அளிக்கப்பட்டது. இப்போது இரண்டு மடங்கு அதிகமாகி அதாவது 14 கோடி ரூபாய் ஆக அதிகமாக ஆகியிருக்கிற ஏற்பாட்டினையும் தந்து, எல்லாக் கிராமங்களுக்கும் இந்த ஆண்டுக்குள்ளே மின்வசதி கிடைக்கும் என்ற பூரிப்பான செய்தியையும் அளித்து. சாலைப் போக்குவரத்திற்கு முன்பு இருந்ததை விட இப்போது இரண்டு மடங்கு செலவு அதிகமாக்கப் பட்டிருக்கிறது என்ற தகவலையும் அளித்து, 1,500 பேர்கள் வாழ்கிற எல்லாக் கிராமங்களையும், தமிழ் நாட்டில் இருக்கிற எல்லாக் குக்கிராமங்களையும் மூக்கிய சாலைகளோடு இணைக்கும் திட்டத்தோடு மக்களின் நல்வாழ்வுக்கு என்று 1966–67-ல் 16 கோடி ரூபாய் செலவழித்தார்கள் என்ற நிலைமை மாறி இப்போது 34 கோடி ரூபாய் செலவிடப் போகிறோம் என்ற இரண்டு மடங்கு இனிப்பான செய்தியையும் சொல்லி கல்விக்காக என்று 1967—68-ல் 53 கோடி ரூபாய் தான் செலவிடப்பட்டது. ஆனால் இப்போது 90 கோடி ரூபாய், அதாவது கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகமாகச் செலவழிக்கப் போகிறோம் என்ற செய்தியோடு ஹரிஜன நலத் துறையைப் பொறுத்த வரையில் 1966—67-ல் 3 கோடி ரூபாய்தான் செலவிடப்பட்டது, ஆனால் வருகிற ஆண்டில் 9 கோடி ரூபாய், அதாவது மூன்று மடங்கு அதிகமாக செலவழிக்க இருக்கிறோம் என்ற தகவலையும் அளித்து. அதே நேரத்தில், பிற்பட்டோர் நலனுக்கு என்று 1966-67-ல் ரூ. 90 லட்சம்தான் செலவிடப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு ரூ. 5 கோடி—கிட்டத்தட்ட 5 மடங்கு அதிகமாகச் செலவழிக்கப் போகிறோம் என்ற செய்தியையும் சொல்லி, கைத்தறி நெசவாளர்களுக்கு என்று 1966-67-ல் ரூ. 1½ கோடிதான் செல



1972 மார்ச் 3] [திரு. இராம. அரங்கண்ணல்]

விடப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு ரூ. 2½ கோடி—ஒரு மடங்கு அதிகமாகச் செலவழிக்கப் போகிறோம் என்று தெரிவித்து, அது மட்டுமின்றி, அரசு அலுவலாளர்களுக்கு ரூ. 23 கோடி அதிகமாக ஊதியம் வழங்கப்பட்டு இருக்கிறதோடு மட்டுமின்றி, இந்த நிதி நிலை அறிக்கையின் வாயிலாக மேலும் ரூ. 1.82 கோடி வாடகை ஈட்டுத் தொகையாக அறிவிக்கப்பட இருக்கிறது என்ற இனிமையான செய்தியோடு இவ்வளவு ஏற்பாடுகள் செய்த பின்னரும், புதிய வரிகள் இல்லாமல், ரூ. 2.49 கோடி உபரியாக ஒரு நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்று எண்ணிப் பார்க்கிற நேரத்தில் இந்த நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த எங்களுடைய தலைவரையும், அவரைத் தலைவராகக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருமையையும், அந்த முன்னேற்ற கழகத்திலே சாதாரண தொண்டர்களாக இருக்கிறோமே என்ற பூரிப்பையும் நான் பெறுகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வரிகள் எந்த அளவிற்கு வளர்ந்திருக்கின்றன என்று திரு. சுவாமிதாஸ் அவர்கள் இங்கே சொன்னார்கள். அவர்கள் வரிகளைப் பற்றிச் சொன்னார்களா அல்லது எதைச் சொன்னார்கள் என்று எனக்குப் புரியவில்லை. முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகுதான் 'டைரக்ட் டாக்சேஷன்' என்றத் துறையில் சலுகைகள் அளிக்கப் பட்டிருக்கின்றன. 'டைரக்ட் டாக்சேஷன்' தான் எப்போதும் பொதுமக்களை நேரடியாக பாதிப்பதாகும். அந்த வரிகளில், குறிப்பாக, புஞ்சை நிலத்திற்கு நாங்கள் வரி விலக்கு தந்து இருக்கிறோம். புஞ்சை நிலத்திற்கு வரியில்லை என்று சொல்லியிருக்கிறோம். அது மட்டுமல்ல. யார் தாங்கக்கூடியவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் மீது மட்டும் நாம் அதிகமாக வரிகள் போட்டோம். அப்படிப் போட்டு, அங்கே சேருகிற பணத்தை அரசாங்க கஜானாவிற்கு கொண்டு வந்து அதன் மூலம் பெரும் பணியாற்றுகிறோம் என்பதை நாட்டிலே உள்ளவர்கள் அனைவரும் உணர்ந்து இருக்கிறார்கள். இந்த ஆண்டு இரண்டு இனங்களில் வரி என்று காண்பிக்கப்பட்டு இருந்தாலும், அதனால் யாரும் பாதிக்கப்படமாட்டார்கள். சுகம் தேடுகிறவர்களுக்குத்தான் அந்த பாதிப்பு அதிகமாக இருக்கும். பொறுப்பு அதிகமாக இருக்கும்.

பல விதமாகப் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசானது ஓவர் டிராப்ட் வாங்கிவிட்டது. கண்டிராக்டர்களுக்கு பணம் கொடுக்க முடியவில்லை. இப்படியெல்லாம் பேசப்பட்ட சூழ்நிலையில், இவ்வளவு வசதிகள் ஏராளமான சலுகைகள் வழங்கப்பட்டு, எல்லாத் துறைகளிலும் 2 மடங்கு, 3 மடங்கு, 5 மடங்கு, 10 மடங்கு என்று அதிகமாக தொகைகளை ஒதுக்கித் தந்த பிறகும் கிட்டத்தட்ட ரூ. 3 கோடி உபரியாக ஒரு நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், நாட்டிலுள்ள பொருளாதார நிபுணர்கள், நாட்டிலுள்ள வளர்ச்சியை சரியாக அளவுகோல் போட்டு கணக்கெடுத்துப் பார்ப்பவர்கள் நிச்சயமாக பாராட்டாமல் இருக்க முடியாது. இவ்வளவு உன்னதமான நிதி நிலை அறிக்கையை, உபரி நிதி நிலை அறிக்கையை, வரி இல்லாத நிதிநிலை அறிக்கையை, மக்களுடைய வாழ்வில் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ள நிதி நிலை அறிக்கையை மட்டும் சமர்ப்பித்து விடாமல், நம்முடைய தலைவரவர்கள் சமுதாய சம்பந்தமாகவும், திராவிட முன்னேற்றக் கழகம் எந்தப் பொருளாதார கொள்கையை தன்னகத்தே கொண்டு வளர்ந்து வருகிறதோ அதையும் வெளிப்படுத்துகிற வகையிலும், அவர்கள் வெளியிட்டு இருக்கிற சீர்திருத்தங்கள் அமைந்திருக்கின்றன. [illegible] விரும்பும் யாரும் இதை வரவேற்காமல் இருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

நிலத் துறையைப் பொறுத்தவரையில் அவர்கள் கொண்டு வந்திருக்கிற திட்டங்கள், அதிலும் குறிப்பாக வீட்டு மனைகளை விவசாயிகளுக்கு சொந்தமாக்கப்படும் என்று அவர்கள் சொல்லியிருப்பதும், அறக்கட்டளைகள் சொத்தெல்லாம் பொதுவாக எடுக்கப்படும் என்று அவர்கள் அறிவித்திருப்பதும், கடன் நிவாரணம் தந்து இருப்பதும், அவைகள் மட்டுமின்றி, இந்த ஆண்டிலேயே பஸ்களை தேசியவுடைமையாக்கியிருப்பதும் இவைகள் எல்லாம் சமதர்ம திட்டங்கள் என்று யாரும் சொல்லாமல் இருக்க முடியாது. நிச்சயமாக மரியாதைக்குரிய காமராஜர் போன்ற தலைவர்கள் அந்தத் திட்டங்களையெல்லாம் ஒரு கணநேரம் எண்ணிப்பார்ப்பார்களேயானால், இவைகளைப் பற்றியெல்லாம்





கடந்த 40 ஆண்டு காலமாக சொல்லிவந்தோமே, ஆனால் செய்ய முடியவில்லையே, முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இன்றையதினம் செய்கிறார்களே என்று மனமார பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆனால் முன்னேற்றக் கழக அரசு இதைச் செய்கிறது என்ற காரணத்தாலோ என்னவோ, அல்லது சரிந்து போய்க் கொண்டிருக்கிற தன்னுடைய கட்சியை நிலைநாட்டவேண்டுமென்ற கருத்தினாலோ என்னவோ, அவர்கள் இன்றையதினம் திராவிட முன்னேற்றக்கழகம் செய்து வரும் திட்டங்களைப் பற்றி விளக்குவதற்குப் பதிலாக, திசை திருப்புகிற வழியில் அந்த பெரிய மனிதர் இன்றைய தினம் ஈடுபட்டு இருக்கிறார்கள். பஸ்களை தேசியமயமாக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் செய்யவில்லை. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் பஸ் பிரபுக்களின் கொட்டம் அடக்கப்பட்டிருக்கிறதா, தமிழ் நாட்டைத் தவிர. அதைபோல் நில சீர்திருத்தத்தைப் பற்றியும்.....

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** குஜராத் மாநிலத்தில் பஸ்கள் முழுமையாக தேசியமயமாக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** குஜராத்திலே ஆக்கப்பட்டிருக்கிறது என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். அங்கே எந்த நிலையில் ஆக்கப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியும். ஆனால் தமிழ் நாடு அளவுக்கு நாங்கள் செய்த அளவுக்கு செய்யவில்லையே, செய்ய முடிந்ததா? சோஷலிசம், ஆவடி சோசலிஸம், மாடல் சோசலிஸம் என்று பேச முடிந்ததே தவிர, 25 ஆண்டுகாலம் அரசு கட்டிலில் இருந்தீர்களே செய்ய முடிந்ததா? நிலப்பிரபுக்களின் வசம் இருக்கிற நிலத்தையெல்லாம் எடுக்கப் போகிறோம் என்று சொல்லி சட்டம் போட்டார்கள். அதைச் சரிவர செய்ய முடிந்ததா? அவர்கள் 600 ஏக்கர் வரை வைத்துக்கொண்டிருந்தார்கள் இந்த ஆட்சி காலத்தில் தான், இந்த சோசலிச மாற்றத்தை நிலைநாட்ட முடிந்தது. என்னைப்பொறுத்தவரையில் சொல்லிக்கொள்வேன், இன்றையதினம் முன்னேற்ற கழக ஆட்சி வந்ததற்குப் பின்னாலேதான் பஸ் அதிபர்களின் ஆணவத்தையும், நிலப்

பிரபுக்களின் கொட்டத்தையும் அடக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. சாதாரண மக்கள் பல வசதிகளை பெறக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பெரிய மாறுதலை, சமதர்மத்தை நிலைநாட்டும் வகையில் செய்து இருக்கும் ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான் என்பதிலே நான் பெருமைப்படுகிறேன்.

ஊழல். ஊழல் என்று பேசுகிறார்கள். அங்கே ஊழல், இங்கே ஊழல் என்று பேசுகிறார்கள். இந்த ஆண்டு மட்டும் பேசவில்லை. கடந்த ஆண்டு நடந்த தேர்தலின் போது—10 மாதங்களுக்கு முன்பே—பெருமதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள், தனியாக அல்ல, பெருமதிப்பிற்குரிய இராஜாஜியையும் சேர்த்துக்கொண்டு, அவர் மட்டுமல்ல. அவர்களுக்கு அனுசரணையாக இருக்கும். எல்லாப் பத்திரிகைகளையும் வைத்துக்கொண்டு, அங்கே ஊழல், இங்கே ஊழல், இந்த வட்டத்தில் ஊழல், அந்த மாவட்டத்தில் ஊழல் என்று பேசிக்கொண்டிருந்தார்கள். அதை மக்களும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். கேட்டுக்கொண்டிருந்த மக்கள் என்ன செய்தார்கள்? தாங்கள் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றினோம் என்று கருதி, திராவிட முன்னேற்றக் கழகத்தை நம்பி, அதை மதித்து முன்னைவிட அதிகமான உறுப்பினர்களை இந்த மன்றத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அதற்குப் பிறகும் இப்போது மற்ற பிரச்னைகளைப் பற்றிப் பேசாமல் ஊழல், ஊழல் என்றே பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் கேட்க ஆசைப்படுகிறேன், சொல்லவும் ஆசைப்படுகிறேன். ஊழல் என்ற வாசகம், இதே மாமன்றத்திலே அநேகமாக இதே இடத்திலே நின்று 1950-ல் திரு. பிரகாசம் அவர்கள் உங்கள் மீது குற்றச் சாட்டை வீசினார்கள். அவைகளை எடுத்துப் பார்த்தாலே, நமக்குச் சொல்வதற்குக் கூட வாய் கூசுகிறது. பெரியவர் குமாரசாமி ராஜா அவர்கள் மந்திரி சபையில் இருந்த எல்லா மந்திரிகளைப் பற்றியும் அன்றையதினம் திரு. பிரகாசம் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அவர்களிலே சிலர் இறந்துவிட்ட காரணத்தாலும், சில பேர் பெரிய இடத்தில் இருக்கிற காரணத்தாலும், அவைகளைப் பற்றி விளக்க விரும்பவில்லை.



ஆனால் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் இந்திரா காங்கிரஸ் கட்சியின் பெரிய தலைவர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே அவர்கள் கூட மந்திரியாக இருந்தார்கள், அவர்களைப் பற்றிக்கூட சொல்லியிருக்கிறார்கள், திரு. பிரகாசம் அவர்கள். திரிபுரசுந்தரி பஸ், அந்த பஸ்ஸின் பெயரைச் சொன்னாலே புரியும் என்று நினைக்கிறேன். செங்கற்பட்டில் ஓடும் பஸ் என்றும், அந்த பஸ்ஸுக்கு எப்படி பர்மிட் கொடுக்கப்பட்டது என்பதையும் திரு. பிரகாசம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னொருவர் ஸ்டீல் பர்மிட் எப்படி கொடுக்கப்பட்டது என்பதைப் பற்றியும். சிமிண்ட் பர்மிட் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்பதைப்பற்றியும், குண்டூரில் ஒரு மார்க்கெட் காண்டிராக்ட் விட என்ன முறை பின்பற்றப் பட்டது என்பதைப் பற்றியும், இன்னொருவர், ரேடியம் ஊசி ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு சப்ளை செய்தது எப்படி என்பதைப் பற்றியும் விளக்கமாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். 1950 டிசம்பர் 14-ம் நாள் இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர்கள் அனைவரும் தயவுசெய்து அந்தப் பழைய ஏடுகளை படித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி பேசப்பட்டது மட்டுமல்ல, அப்படி பேசப்பட்ட நேரங்களில் அவர்கள் தந்த பதிலை நான் வாசிக்க விரும்பவில்லை.

"கோடிக்கணக்கான திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் நடந்துவிட்ட தவறுகளை அவர்கள் சுட்டிக்காட்டுவதை வைத்துக்கொண்டு. எங்கே பார்த்தாலும் லஞ்சம்; லஞ்சம் இல்லாத இடம் எங்கே என்று பேசுவது சரியாகாது. அப்படிச் சொல்லுவதனாலே என்ன பிரயோசனம் ஏற்படப் போகிறது என்று கேட்க விரும்புகிறேன். இதுவரையில் லஞ்சம் வாங்காமல் உழைக்கின்றவர்களுக்கும் 'எங்கேயும் லஞ்சம்! நாமும் ஏன் வாங்கக்கூடாது என்றுதான் நினைக்கத் தோன்றும். எந்த இடத்தில் லஞ்சம் வாங்கப் பட்டது என்று குறிப்பாகச் சொன்னால் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வசதியாக இருக்கும்" என்று நான் சொல்லவில்லை, 1957-58-ல் பட்ஜெட் உரைக்கு பதிலளித்த, பெருமைக்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், முதல்வர் காமராஜர் அவர்கள் சார்பில் வெளியிட்டிருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் பேசும் நேரத்தில் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஊழல், லஞ்சம் என்று சொன்னால் எங்கே யார் என்று குறிப்பிட்டுக் காட்டினால், நிச்சயமாக அவற்றைக் களைவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். பிரகாசம் அவர்கள் குற்றச்சாட்டுக்களைச் சாட்டிய நேரத்தில், அப்பொழுது பிரதமராக இருந்த திரு. குமாரசாமி ராஜா அவர்களுக்கு முதலிலே எழுதி, காரணங்களோடு, இந்த இந்த இடத்தில், இந்த இந்த எம்.எல்.ஏ., எம்.எல்.சி., மந்திரி இப்படி இப்படிச் செய்தார் என்று எழுதி அனுப்பினார்கள். அதன் பேரில் நடவடிக்கை எடுக்கத் தவறியதன் பேரில், அவைமுன் கொண்டு வந்தார்கள். அதே போல ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பிரதமராக இருந்த நேரத்தில் புகார்கள் எழுப்பப்பட்டன. பொறுப்பான ஒரு அமைச்சர்மீது குற்றஞ்சாட்டப்பட்டு, அந்த அமைச்சரை வேறொரு இடத்தில் போகச் சொன்னார்கள் என்பதும் சிலருக்கு நினைவிருக்கலாம்.

திரு. காமராஜர் அவர்கள் மரியாதைக்கு உரியவர்கள். அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் கவலையில்லை. எங்கள் முதல்வர் சொன்னார்கள், அவர்கள் மரியாதைக்கு உரியவர்கள், வயதிலே மூத்தவர், அனுபவசாலி, அவர்களுடைய வார்த்தைகளுக்கு நான் மதிப்புக் கொடுக்கிறேன் என்றும், அவர்கள் எங்கே குற்றம், யார் தவறு செய்தார்கள் என்று எனக்கு எழுதியனுப்பினால், நான் விசாரிக்கத் தயாராக இருக்கிறேன் என்றும் சொன்னார்கள். அப்படி எங்கள் முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இப்பொழுதும் தெரிவிக்க விரும்புகிறேன். சட்ட மன்ற உறுப்பினர்கள், யார் மீதாவது குற்றங்களைக் கண்டால் நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு எழுதியனுப்பினால் அதை விசாரிக்காமல் இருக்கமாட்டார்கள். உண்மையைக் கண்டறிந்து, நண்பர்களானாலும் பரிகாரத்தைக் காணத் தயங்கமாட்டார்கள் என்று முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமின்றி, இன்னொரு சினம் இந்தியாவிலேயே இல்லாத புதுமையை நாம் செய்திருக்கிறோம். நம்முடைய மன்றத்தைப் பொறுத்தவரையில் முடிவுக்கு வந்திருக்கிறோம். அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் எம்.எல்.ஏ., எம்.எல்.சி.கள், அமைச்சர்கள் ஒவ்வொரு ஆண்டும் தங்கள் தங்களுடைய





சொத்து விவரத்தை, வருமான விவரத்தை சட்ட மன்றத்திலே வைக்கவேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறோம். இந்தியாவிலேயே எந்த மாநில சட்ட மன்றத்திலும் அப்படிப்பட்ட முடிவு ஒன்று எடுக்கப்படவில்லை. பாராளுமன்றத்திலும் அப்படிப்பட்ட முடிவு எடுக்கப்படவில்லை, வேறு எங்கும் அப்படிச் செய்திருப்பது கிடையாது. நம் மன்றத்திலே முடிவு எடுத்து, விவரங்களை எல்லோருடைய பார்வைக்கும் வைக்கப்படுகிறது. அதில் யாருக்காவது சந்தேகம் இருந்தால், அதை முதல் அமைச்சருக்கு எழுதி அனுப்பினால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அன்றும் சொன்னோம், இன்றும் சொல்கிறோம், அதன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். நியாயமான முறையில், மக்களை ஏமாற்றாமல், மக்களை வதைக்காமல், நல்ல நிர்வாகத்தை நிறுவ வேண்டும் என்பதே எங்களுடைய கருத்தாக இருக்கிறது. சொல்கிறார்கள், 'அவன் வளர்ந்துவிட்டான், இவன் வளர்ந்துவிட்டான், வட்டச் செயலாளர் வளர்ந்து விட்டார், மாவட்டச் செயலாளர் வளர்ந்து விட்டார்' என்றெல்லாம் சொல்கிறார்களே, இப்படிச் சொல்கிறவர்கள் தங்களையும் எண்ணிப்பார்த்துச் சொல்ல வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். குற்றம் சாட்டும் போது, பெருந்தலைவர்களிலிருந்து சாதாரணத் தலைவர்கள் வரையில், இப்படிச் சாட்டும் நேரத்தில், இதன் காரணமாக நல்ல அரசியலை உருவாக்க முடியுமா என்பதையும் எண்ணிப் பார்த்துப் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு பெரிய குற்றச்சாட்டு, 'முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள். போலீசாரை மிரட்டுகிறார்கள்; அரசாங்கத் தலைமை அலுவலகங்கள் முன்னேற்றக் கழகத் தலைமையகங்களாக இருக்கின்றன' என்று இப்படியெல்லாம் பேசப்படுகிறது. மாவட்டத் தலைவர்களை வட்டச் செயலாளர்கள் உத்தரவு இடுகிறார்கள் என்கிறார்கள். நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆட்சி நிறுவப்பட்ட போது, அருகாமையில் உள்ள மைதானத்தில், அதிகாரிகளையும் அலுவலகர்களையும் கூட்டிவைத்துக் கொண்டு, எங்களையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா தெளிவாகச் சொன்னார்கள். எந்த அதிகாரியாவது முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சொல்

கிறார்கள் என்ற காரணத்திற்காக நியாயத்தை மறந்து செயல்படுகிறார்களோ அந்த அதிகாரிகளை, நான் மதிக்கவும் மாட்டேன், ஏற்கவும் மாட்டேன் என்று எடுத்துச் சொன்னார்கள்.

அடுத்தபடியாக போலீஸ் அதிகாரிகளைக் கூட்டிவைத்துக் கொண்டு ஏதாவது அரசியல் குறுக்கிட்டு வந்தால், அதற்கு நீங்கள் தலை வணங்கவேண்டாம், நியாயம் எதுவோ அதையே செய்யுங்கள் என்று அன்று அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதே வழியில் அவருக்குப் பின்னால் வந்திருக்கும் கலைஞர் அவர்களும் அதே முறையைக் கையாண்டு, அதே அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். கலெக்டர்கள் மாநாடு கூடிய நேரத்திலும், போலீஸ் அதிகாரிகள் மாநாடு கூடிய நேரத்திலும், அவர்கள் வெளியிட்டிருக்கும் அறிவிப்புகள் அத்தனையிலும், யார் தலையிட்டாலும், எந்த அரசியல்வாதி தலையிட்டாலும், எனக்கு வேண்டியவன் சொன்னாலும் அதற்கு இடம் கொடாமல், நியாயத்தின் பால் நின்று செயலாற்றுங்கள் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இது எல்லாப் பத்திரிக்கைகளிலும் வந்திருக்கிறது. யாரும் பார்க்க முடியும். எங்காவது, யாராவது செய்து ஒன்றிரண்டு தவறுகள் இருக்கலாம். அந்தத் தகவல்களை அவர்களுக்கு எழுதியனுப்பினால், அதன் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சட்ட மன்றத்திலே அதை எடுத்துப் பேச நமக்கு உரிமை இருக்கிறது, அந்த வாய்ப்பு, வசதி நமக்கு இருக்கிறது. ஆனால் பொதுவாக, ஒரு புழுதியைக் கிளப்பி விடுவது என்பது சரியாகாது. 'தெரியுமா, எப்படி இருந்தவன். எப்படி வளர்ந்து விட்டிருக்கிறான்' என்கிறார்கள். மக்கள் வளர வேண்டும் என்றுதான் நாம் காரியங்கள் செய்கிறோம். ஆனால் வளருவது எந்த வகையில் வளர்ந்திருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். பொதுவான குற்றச்சாட்டை வீசுவது என்பது ஒரு நல்ல அரசியலை உருவாக்க உதவும் என்று நான் கருதவில்லை.

மேடைகளில் பேசுவதோடு மட்டுமல்ல. மூன்று தினங்களுக்கு முன்பு பச்சையப்பன் கல்லூரியில் ஒரு பெரிய அரசியல் வாதி பேசியிருக்கிறார்கள். சொல்வது மாணவர்களை அரசியலுக்கு இழுக்கக் கூடாது என்று. ஆனால் பெருந்தலைவர் பச்சையப்பன் கல்லூரியில் என்ன பேசியிருக்கிறார்கள். ஆரம்பத்திலிருந்து, கடைசி வரையில் அரசியல்தான். என்ன அரசியல்? என்



நீங்களெல்லாம் சும்மா இருக்கிறீர்கள்; சும்மா இருக்கக்கூடாது. நீங்கள் சும்மா இருப்பதால்தான் முன்னேற்றக் கழகம் வளர்ந்து கொண்டிருக்கிறது. நீங்கள் அடிக்கடி போராட்டம் நடத்த வேண்டும்.' இப்படிப் பேசியிருக்கிறார். இது எரிச்சலைத் தூண்டுவதல்லாமல் என்ன? இது மக்களிடையே எரிச்சலை வளர்க்காதா? இதைப் பேசும் பெருந்தலைவர், எண்ணிப் பார்க்க வேண்டும். இதனால் தமிழ் நாட்டுக்கு நன்மை பயக்குமா என்று.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் பற்றிப் பேசுகிறார்கள். இன்றைய தினம் கூட முதல் அமைச்சர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சரவர்களும் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். எந்த எந்த இடங்களில், எந்த எந்த அளவுக்கு ஆலைகள் மற்ற மற்ற மாநிலங்களில் மூடப்பட்டிருக்கின்றன என்பது பற்றிச் சுருக்கமாகச் சொன்னார்கள். நான் விவரத்தைத் தரலாம் என்று நினைக்கிறேன். ஆந்திர மாநிலத்தில் இன்றைய தினம் மூடப்பட்டிருந்த ஆலைகள் 647; அவற்றில் இது வரையில் திறக்கப் பட்டுள்ளவை 88. மைசூர் மாநிலத்தில் மூடிக் கிடந்தவை 872, அவற்றில் இன்று வரை திறக்கப்பட்டிருப்பவை 268. மேற்கு வங்கத்தில் மூடப்பட்டவை 531. திறக்கப்பட்டிருப்பவை 195, கேரளத்தில் மூடப்பட்டவை 293. திறக்கப்பட்டவை 19; சுதந்தரா அரசு இருக்கும் ஒரிசாவில் மூடப்பட்டவை 66, திறக்கப் பட்டவை 7; தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், மூடப் பட்டவை 22. திறக்கப்பட்டிருப்பவை கிட்டத்தட்ட 16. இந்த நிலையில் என்ன பேசுகிறார்கள். சட்டம் கெட்டு விட்டது, ஒழுங்கு கெட்டு விட்டது. தொழிலாளர்களுக்குப் பராமரிப்புத் தரவில்லை. இப்படிப் பொதுவான குற்றச்சாட்டுகளை வீசுவதில் என்ன லாபம்? மத்திய சர்க்காரைத் தலையிடுங்கள் என்பது. இங்கே ஒரு கட்சி அரசு இருக்கிறது. அங்கே வேற்றுக் கட்சி அரசு. இங்கே அரசைக் கவிழ்த்து விடலாம் என்று சொல்வது என்ன நியாயம்? ஒன்றாக இருந்தபோது, உங்களிடம் போலீஸ் இருந்தால், அங்கே எங்களிடம் ராணுவம் இருக்கிறது என்றார்கள். இப்பொழுது அந்தப் பேச்சை பேச முடியாது. அங்கே ஸி.பி.ஐ. இருக்கிறது. அவன் வீட்டைச் சோதனை செய்தார்கள்.

இவன் வீட்டைச் சோதனை செய்தார்கள் என்றெல்லாம் பேசிக் கொண்டிருப்பது சரியாகாது. உண்மை என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுவும் அங்கே இருப்பதைக் காட்டி இங்கே மிரட்டுவது; இங்கே இருப்பதை வெளியே எடுத்துச் சொல்லாத தவறான கருத்துக்களைச் சொல்வது, இதனால் என்ன லாபம் வந்து விட முடியும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(திரு. செ. கந்தப்பன் தலைமை)

முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் தொழிலாளர் நலப் பிரச்சினையில் நம்முடைய அரசு அதிகமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்கிறது என்பதை மற்றவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. என்னைப் போன்றவர்களுக்கே கூட கொஞ்சம் வருத்தம். நானும் தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபட்டவன். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் முதலமைச்சரே எழுந்து எல்லாவற்றையும் கேட்டுப் பேசுகிறார். பல முறைகள் இருக்கின்றனவே; இவைகளை எல்லாம் தாண்டி வரக்கூடாதா? என்று எனக்கு எண்ணம். ஆனால் முதலமைச்சர் அவர்களே என்னிடத்தில் சொன்னார். 'இது தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட அரசு. அவர்கள் நெருங்கும்போது நானே நேரடியாகப் பேசும் ஏற்பாட்டை விருப்பத்தை அதில் செயல்பட்டு வருகிறேன்' என்று சொன்னார்கள். இந்த உணர்வினை அரசியல் காரணமாக பலர் பேசினார்கள். முதல்வர் உள்ளத்தில் உள்ள இந்த உணர்வினை—தொழிலாளர்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்று நாங்கள் நினைக்கின்ற இந்த உணர்வினை, தொழிலாளர்களை எங்களுடைய சகோதரர்களாகக் கருதும் இந்த உணர்வினை, உள்ளத்தை தயவுசெய்து தவறாகக் கருதவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் ஆக்கிக்கொள்ளலாம். எனக்குத் தெரியும். நான் ஒரு காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் தொடர்பு வைத்திருந்தவன். அண்ணன் மணலி அவர்களுக்குத் தெரியும். கம்யூனிஸ்ட் கட்சி தத்துவமே அதிருப்தியை பெருக்கிக் கொண்டிருப்பது. அதிருப்தியை முடிவுக்கு கொண்டுவரக் கூடாது என்ற 'ப்ராலிடேரியட்' கட்சி. இப்போது வளர்ந்து வரும் ஜனநாயக





நாடுகளில் அந்தத் தத்துவம் செல்லுபடியாகவில்லை. செல்லுபடியாகாத அந்தப் பழைய தத்துவத்தை வைத்துக்கொண்டு, தமிழ் நாட்டில் மத்திய தர மக்கள், நடுத்தர மக்கள், அவர்களுக்குப் பின்னால் தொழிலாளர்களாக இருக்கின்ற 8 சதவிகித தொழிலாளர்களை வைத்துக்கொண்டு, அதிருப்தியைக் கிளப்பி ஒரு கட்சி ஆட்சியைக் கவிழ்த்து விடலாம் என்று மரியாதைக்குரிய கம்யூனிஸ்ட் தோழர்கள் நினைக்கமாட்டார்கள். ஏனென்றால், அவர்களுடைய கட்சி எதை எதைச் சொல்லி வந்ததோ அவைகளையெல்லாம் சோஷலிச சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ள முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் செய்து வருகிறோம் என்பதால் அவர்களுக்கு மகிழ்ச்சி. அவர்களைத் தாண்டிவிட்டு ஏதாவது செய்யலாமா? இது தான் இன்றைய அரசியலாக இருக்கிறது. வாஸ்தவம். இது அரசியல் அல்ல. இப்படிப்பட்ட பண்பாட்டை வளர்க்கும் காரணத்தால், வளர்த்துக்கொண்ட காரணத்தால்தான், அப்படி வளர்த்துக் கொண்ட கட்சிகள் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன என்பதைத் தமிழ் நாட்டு மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் ஏழை எளியோர், விவசாயப் பெருங்குடி மக்கள், பாட்டாளி மக்கள் தங்களுக்கென்று ஒரு அரசு, தங்களைச் சேர்ந்தவர்கள் நடத்தும் அரசு, தங்களுடன் பழகுகிறவர்கள் நடத்தும் அரசு என்ற உணர்வினைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மற்றவர்கள் மறந்துவிடக் கூடாது. அப்படி என்ன தான் சொன்னாலும், எந்தக் காரணத்தைக் காட்டி முன்னேற்றக் கழகத்தைக் கண்டிக்கலாம் என்று கருதினாலும், மக்கள் மத்தியில், மக்கள் இதயத்துடன் எங்களுக்கு ஏற்பட்டுள்ள உறவினை எந்த சக்தியாலும் அழித்து விட முடியாது, இன்னும் பன்னெடுங்காலம் வரை என்பதைத் தெளிவாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கடைசியாக மாநில சுயாட்சி பற்றி எங்களுடைய தலைவர் பேசுகிற காலத்தில் திசை திருப்பும் காரியம் தான் மறுபடி நடைபெறுகிறது. எண்ணிப் பார்க்க வேண்டும். இதே சென்னை 'பிரசிடென்சி' என்று அழைக்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது, வெள்ளைக்காரன் காலத்தில் வெள்ளைக்காரன் காலத்திலேயே 'பிரசிடென்சி' என்பது "ப்ராவின்ஸ்' ஆக மாறியது. பிறகு 'ப்ராவின்ஸ்' என்பது 'ஸ்டேட்' ஆயிற்று. எப்படி வந்தது

அந்த அர்த்தம். அரசியல் நிர்ணயச் சட்டம் நிறைவேற்றப்பட்ட காலத்தில் 'ப்ராவின்ஸ்' மாறி, அந்தந்த 'ப்ராவின்ஸ்' ஸ்டேட் ராஜ்யங்கள் அழைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. 'ஸ்டேட்ஸ்' என்றால் பூரண அதிகாரங்களுடன் இருப்பதற்கு பெயர் தான் 'ஸ்டேட்'. இந்தக் காரணத்தால் இன்று ஸ்டேட்டுகளுக்கு கூடுதலான 'ஆட்டானமி' இருக்குமிடத்திற்கு பெயர் ஸ்டேட். 'யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்கா' என்று இருப்பது போல் 'யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் இந்தியா என்று இருக்கலாம் என்று அரசியல் நிர்ணயச் சட்டம் நிறைவேற்றப்பட்ட காலத்தில் பேச்சு வந்தது. ஆனால் அங்கே இருந்தவர்கள் சொன்னார்கள், 'நாம் ஒரு 'பெடரல் ஸ்டேட்' கூட்டுச் சர்க்கார் அமைக்கிறோம்' என்று சொன்னார்கள். ஆனால் அமைக்கப்பட்டது கூட்டு சர்க்கார் என்ற பெயரில் 'யூனிட்டரி கவர்ன்மெண்ட்' 'இந்தியன் யூனியன். ஃபெடரேஷன் என்று சொல்ல வேண்டும்.' 'ஃபெடரல் ரிபப்ளிக்' என்று சொல்லுவோம். யூனியன் என்று அழைப்போம் என்று சொன்னார்கள். யூனியன் என்றால் என்ன? ஃபெடரல் என்றால் என்ன?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ராஜமன்னார் கமிட்டி அறிக்கையில் இது 'பெடரல் ஸ்டேட்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தைத் தாங்கள் ஒத்துக் கொள்கிறீர்களா. அல்லது அதற்கு மாறுபட்ட கருத்தைத் தாங்கள் சொல்கிறீர்களா?

திரு. இராம. அரங்கண்ணல்: ராஜமன்னார் கமிட்டி கருத்துக்களைப் பற்றி நாங்கள் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். அவைகளைப் பற்றி சில கருத்துகள் தவறாக இல்லையா என்ற எண்ணம் கூட பலருக்கு ஏற்படலாம். ஆனால் நான் சொல்வது அரசியல் நிர்ணய சபை இதை எழுப்பிய நேரத்தில், இது 'ஃபெடரலா? யூனிட்டரியா?' நாம் அதை அன்றைய தினம் நிர்ணயம் செய்யவில்லை. அமெரிக்கன் கான்ஸ்டிட்யூஷனிலிருந்து கொஞ்சம், இங்கிலாந்து கான்ஸ்டிட்யூஷனிலிருந்து கொஞ்சம் —கவர்னர் வருவது: நாம் எழுந்து நிற்பது, படிப்பது பிரசிடெண்ட் ஊர்வலம் இவை அப்புறம் 'ஃபிரெஞ்ச் கான்ஸ்டிட்யூஷனிலிருந்து கொஞ்சம், ஆஸ்டிரேலியன் கான்ஸ்டிட்யூஷனிலிருந்து கொஞ்சம். 'கனேடியன்' கான்ஸ்டிட்யூஷனிலிருந்து கொஞ்சம், ஏன், ரஷ்யன் கான்ஸ்டிட்யூஷனிலிருந்து கொஞ்சம் சேர்த்து செய்தோம். இதை நான் சொல்லவில்லை. அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் சொன்னது.



அன்றைய தினம் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டம் இன்று காலம் அதிகம் மாறுபடுகிறது. கருத்துகளும் இன்றைய தினம் மாறுபட்டு வந்திருக்கிறது. முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரை நாங்கள் செய்திருப்பது, அந்த உணர்வு, 'ரீ—திங்கிங்' மறுபரிசிலனை வேண்டும் என்பது தான். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் பரவ வேண்டும் என்று வாதிக்கப்படும் காலத்தில் 'ரெசிடுவரி பவர்ஸ்' மாநிலங்களுக்கு என்ன உரிமை. மத்திய அரசு எப்படி எப்படி இருக்கலாம் என்று விவாதிக்கப்பட்ட நேரத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த மரியாதைக்குரிய டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களும், ஓ. வி. அளகேசன். பாரதியும் மற்ற உறுப்பினர்கள் அங்கே பலமாக வாதாடினார்கள். 'கன்கரெண்ட் லிஸ்ட்' பக்கம் அதிக உரிமைகளைக் கொண்டுபோய் விடாதீர்கள்; அதனால் ஆபத்து வரும்' என்று பலமுறை முன்பே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இன்றைய தினம் அந்த உரிமைகள் நமக்கு தேவை என்ற காரணத்தால் தான் வலியுறுத்துகிறோம். இங்கே ஒரு 'ஹெல்த் டிபார்ட்மெண்ட்'. இங்கே ஒரு 'பி டபிள்யூ டி'. அங்கே ஒரு இங்கே ஒரு 'ஃபுட் டிபார்ட்மெண்ட்' அங்கே ஒரு 'ஃபுட் டிபார்ட்மெண்ட்'. இங்கே ஒரு 'பி டபிள்யு டி அங்கே ஒரு 'பி டபிள்யு டிபார்ட்மெண்ட்'. இப்படிப்பட்ட இரட்டையாட்சியாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கே 'டிஃபென்ஸ்' இருக்கட்டும். 'ஃபைனான்ஸ்' கூட இருக்கட்டும். பிரச்சினையில்லை. ஆனால் ஒவ்வொன்றுக்கும் உத்தரவு அங்கேயிருந்து வர வேண்டும்.

'ஐலண்ட் கிரவுண்ட்' விவகாரத்தையே எடுத்துக் கொள்ளுங்களேன். ஐலண்ட் கிரவுண்ட் எப்படிப்பட்ட மைதானம்? அதிலே இன்றைய தினம் கட்டடங்கள் எழும்பிக் கொண்டிருக்கின்றன. நேற்றைய முன் தினம் மத்திய அரசு செயலர் வந்திருந்தார். 'இப்படிச் செய்யலாமா?' என்று

[திரு. இராம. அரங்கண்ணல்] [1972 மார்ச் 3]

கேட்டேன். "எனக்கே பிடிக்கவில்லை. என்ன செய்வது? காண்ட்ராக்டர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள், வேலை நடக்கிறது" என்று சொன்னார்.

அது மட்டுமல்ல. மரீனா பீச்சில் கலங்கரை விளக்கம் கட்டுகிறார்கள். அதுகூடப் பொருத்தம் தானா? வேறு இடமில்லையா என்று கேட்டேன். வேறு இடத்தில் கட்ட வேண்டும் என்று நாங்கள் கருதினோம். ஆனால் ஒரு சின்ன பிரச்சினை 6 கிரவுண்ட் நிலம் இதைப் பிரச்சினையாக கருத வேண்டாம் என்று முதலமைச்சர் கருதுகிறார், என்று சொன்னேன். இதைப் பெரிதாகக் கருதுகிறார்கள். சென்னை மாநகரை எடுத்துக் கொள்ளுங்கள். மாநில சர்க்காருக்கு இருக்கும் கட்டடங்கள் கொஞ்சம். ஆனால் மத்திய சர்க்காருக்கு இருக்கும் இடம், கட்டடங்கள் ஏராளமாக இருக்கின்றன. உள்ளபடியே இடம் ஏராளமாக இருக்கிறது. அதைக் கேட்கவில்லை. ஆனால் சிறு சிறு காரியங்கள், மக்கள் நல்வாழ்வுடன் இருக்கும் பிரச்சினைகளில் இவைகளில் அதிகாரங்களை அங்கேயே வைத்துக் கொண்டுள்ள சூழ்நிலை உருவாகிக் கொண்டு போகுமேயானால், நிலை என்ன என்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒருவர் சொன்னார். இதே மன்றத்தில் 'முன்னேற்றத் திட்டங்களில் மத்திய சர்க்கார் நமக்குப் பாகுபாடு செய்து விட்டார்கள். அவர்கள் நம்மை வேறுவிதமாகக் கருதுகிறார்கள். நம் ராஜ்யத்தில், மற்ற ராஜ்யங்களில் ஏற்பட்டிருக்கின்ற முன்னேற்றம் அதனைத் தான் ஏற்படவில்லை என்று உணருவோமேயானால்—அப்படி உணருகிற நேரம் வருமேயானால்—அப்போது நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து நாட்டைப் பிரிக்க வேண்டுமென்ற இயக்கத்தைக் கிளப்பலாம்"—இப்படிச் சொன்னவர், இதே மன்றத்திலே பேசியவர் இன்றைய திட்ட அமைச்சராக இருக்கும் திருவாளர் சி. சுப்ரமணியம் அவர்கள். மத்திய அரசைத் தூண்டுகிற கருத்தில் நாம் எல்லோருமே சேர்ந்து பிரிவினை எண்ணத்தைக் கிளப்பலாம் என்ற நிலையில் தெளிவாக சொல்லிக் கொள்ள ஆசைப்பட்டு. யாராவது பிரிவினை வாதத்தை கிளப்புவார்களேயானால், அதற்கு முன்னேற்றக் கழகம் நிச்சயமாக விரோதியாகத் தான் இருக்கும்.



1972 மார்ச் 3] [திரு. இராம. அரங்கண்ணல்]

ஏக இந்தியா, ஒன்று சேர்ந்த இந்தியாவாக இருக்க வேண்டும் என்ற கொள்கையிலே எங்களுக்குத் திட நம்பிக்கை இருக்கிறது. அதன் உறுதிப்பாட்டிற்கு ஊறு விளைவிக்கும் எண்ணம் எங்களில் யாருக்கும் கிடையாது. ஆனால், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்றுதான் நாங்கள் கேட்கிறோம். அதற்காகத்தான் மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறோம். அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதற்காக ஏன் மாநில சுயாட்சி என்ற பெயரில் போராட்டம் நடத்த வேண்டுமென்று திரு. சுவாமிநாதன் அவர்கள் கேட்டார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லி கொள்ள ஆசைப்படுகிறேன். நீங்களே, மத்தியிலிருந்து அதிக அதிகாரங்களைப் பெற்றுத் தருவதாக இருந்தால், மாநில சுயாட்சியைப் பெற்றுத் தருவதாக இருந்தால் நாங்கள் இந்தப் பிரச்சினையை விட்டுவிடுகிறோம். வேண்டுமானால் ஓராண்டுக் காலத்திற்கு இந்தப் பிரச்சினையை எழுப்பாமல் சும்மா இருக்கிறோம். ஆனால் உங்களால் அதைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.

மாநில அரசுக்கு அதிக அதிகாரம் வேண்டும்; மாநில சுயாட்சி வேண்டும்; மாநில சுய நிர்ணய உரிமை வேண்டும். அதன் மூலம் மக்கள் தேவைகள் தடையின்றி நிறைவேற்றப்பட வேண்டும்; மாநிலத்தின் வளம் பெருகிட வேண்டும்; மக்கள் உணர்வுகளுக்கேற்பச் செயல்பட வேண்டும் என்பவை இந்த நிதி நிலை அறிக்கையில் சிறப்பாக விளக்கப்பட்டிருக்கின்றன. அவை மட்டுமல்லாமல். பொருளாதார மேதைகளாலும் பாராட்டத் தக்க வகையில் வரவு-செலவுத் திட்டத்தில் உபரி காட்டியும், புதிய வரியினங்கள் போடாமல் ஏற்றமிகு முறையிலே எல்லோராலும் பாராட்டுகின்ற வகையிலும் முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை முரசமாகக் கொட்டும் வகையிலும். முன்னேற்றக் கழகத்தின் பொருளாதாரத் திட்டங்களைச் செவ்வையாக விளக்குகின்ற வகையிலும் தயாரித்து அளிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, பாராட்டி அமர்கின்றேன். வணக்கம்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது எனக்குப் பேசுவதற்குக் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பினை. சிறந்த முறையிலே தயாரித்து அளிக்கப்

பட்டிருக்கும் இந்த நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்தினைக் கூறுவதற்குக் கிடைத்தவொரு வாய்ப்பாக நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை ஒரு விவசாயினுடைய அறிக்கை என்று பாராட்ட வேண்டிய வகையில் அமைந்திருக்கிறது என்பதை நான் முதலில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயிகள் பெருமைப்படக்கூடிய இந்த அறிக்கையிலே, விவசாயிகளுக்கு வேண்டிய பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல் நம்முடைய முன்னேற்றக் கருத்துக்களையெல்லாம் இதிலே புகுத்தி, சிறந்த முறையிலே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு இருக்கிறது என்பதை எடுத்துக் கூறுவதிலே நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். அதே நேரத்தில் இந்த அறிக்கையிலே காணப்படாத சில விஷயங்களையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்:

முக்கியமாகக் கைத்தறியைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.. கைத்தறித் தொழில் இப்பொழுது ஒரு இக்கட்டான நிலையில் இருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் நூல் விலை. அது பருத்தி, சில்க், ஆர்ட் சில்க் எந்த நூலானாலும்--முன்னைவிட அதிகமாக ஏறிவிட்டது. முன்னைவிட 20 மடங்கு, 30 மடங்கு அதிகமாகி இருக்கிறது. இன்னொரு காரணம் கைத்தறித் தொழிலாளர்களுக்கு இப்போது இருக்கும் 'ரா மெட்டீரியல்ஸ்' தட்டுப்பாட்டைப்போல் இதற்குமுன் எப்போதுமே இருந்ததில்லை. ரா மெட்டீரியல்ஸ் தட்டுப்பாட்டினாலும் இதரப் பொருள்களின் விலை ஏற்றத்தினாலும் கைத்தறித் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, அருப்புக்கோட்டைப் பகுதி கைத்தறித் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு மாஸ்டர் வீவிங் முறை புகுத்தப்பட்டது ஒரு காரணம் என்று சொன்னாலும் கோஆப்பரேட்டிவ் திட்டத்தின் கீழ் இயங்கிவரும் தறிகளில் பணியாற்றும் தொழிலாளர்களும் இந்த விலை ஏற்றத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தக் குறையைப் போக்கும் வகையில் என்னுடைய ஒரு கருத்தினை இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது நாம் உணவுப் பொருள்கள் விலையேற்றத்தைக் கட்டுப்





படுத்தும் வகையில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அமைத்திருக்கிறோம். அதைப்போன்று ரா மெட்டீரியல்ஸ் ஒரு கார்ப்பரேஷன் மூலம் வாங்கப்பட்டு, எப்போதுமே நியாயமான விலையில் ராமெட்டீரியல்ஸ் கிடைக்கும் வகையில் கைத்தறித் தொழிலாளர்களுக்கும் விநியோகம் செய்யவேண்டும். அதற்காக 'ரா மெட்டீரியல்ஸ் கார்ப்பரேஷன் ஃபார் ஹாண்ட்லூம்ஸ்' என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த நிறுவனத்தின் மூலம் பருத்தி, பட்டு, செயற்கைப் பட்டு நூல்களையும், இதர ரா மெட்டீரியல்களையும் வாங்கி, கைத்தறித் தொழிலாளர்களுக்கு நியாயமான விலைக்கு விற்றுவந்தால், அது அந்தக் கைத்தறித் தொழிலாளர் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் ஒரு பெரிய பாதுகாப்பாகும். கைத்தறித் தொழிலாளர்களுக்கு வேறு எந்தப் பாதுகாப்பைச் செய்யாவிட்டாலும் கூட, இந்த ஒரு பாதுகாப்பையாவது அளிக்கவேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்களின் விலை ஏற்றத்தினாலும், ரா மெட்டீரியல்ஸ் தட்டுப்பாட்டினாலும் கைத்தறித் தொழிலாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் கைத்தறித் துணிகள் ஏற்றுமதியும் வெகுவாகக் குறைந்திருக்கின்றது. கட்டுப்பாட்டு விலையில் தேவையானப் பொருட்கள் கிடைக்கச் செய்தால் வேலை இல்லாத் திண்டாட்டமும் நீங்கும். கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியும் பெருகும். நம்முடைய நாட்டிலிருந்து பெருமளவு கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாகத் தமிழகத்திலிருந்து மட்டும் 25 அல்லது 26 கோடி ரூபாய் அளவுக்குக் கைத்தறித் துணிகள் ஏற்றுமதியாகின்றன.

எனவே, கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இந்தச் சமுதாயத்தைக் காப்பாற்ற நான் கூறிய இந்த யோசனையை இந்த அரசாங்கம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன். அருப்புக்கோட்டைப் பகுதி கைத்தறித் தொழிலாளர்களின் நிலைமையைப் பார்ப்போமானால், இதற்கு முன்னால் கைத்தறித் தொழிலாளர்களுக்குக் கஞ்சித் தொட்டி ஏற்படுத்தப்பட்டிருந்த காலத்தை நினைவுபடுத்துவது போல் இருக்கிறது. எனவே, அந்தப் பகுதி மக்களுக்குத் தக்க நிவாரணம் அளிக்கும் வகையில்

அரசு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டால் நலமாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்திற்குப் பதிலாக உடனடியாக காவிரி-வைகை இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றினால் நல்லது என்று கருதுகிறேன். கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் இல்லாவிட்டாலும் காவிரி-வைகை இணைப்புத் திட்டத்தின் மூலம் அதிக நன்மைகளைப் பெற முடியும். அதன் பின் கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தை மத்திய அரசை இடைவிடாது வற்புறுத்தியேனும், நிறைவேற்றினால் நமது மாநிலத்தின் நன்மைகள் மேலும் பெருகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தண்ணீர்ப் பற்றாக் குறையைப் போக்க. இந்தக் கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்றும் என்றும் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர்கள், என்.ஜி.ஓ.-க்கள் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது 2,500 ரூபாய்க்குக் குறைந்த வருமானமுடையவர் குழந்தைகளுக்கு கல்லூரியில் படிப்பதற்கு வசதியாக, அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் அளிக்கப் படுகிறது. ஆசிரியர், என்.ஜி.ஓவினர் வருமானம் சற்று அதிகமாக இருப்பதால் அவர்களின் குழந்தைகளுக்கு இந்தக் கல்விச் சலுகை கிடைக்காமல் இருக்கிறது. எனவே, அவர்களின் குழந்தைகள் பெரும்பாலோருக்குக் கல்லூரிகளில் படிக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுவதாகச் சொல்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்கும் ஸ்காலர்ஷிப் கிடைக்கும் வகையில், அவர்களது வருமான உச்சவரம்பைக் கொஞ்சம் தளர்த்தும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய இந்தக் கோரிக்கையையும் அரசு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு முக்கியமானப் பிரச்சினை முதியோர் பென்ஷனைப் பற்றியதாகும். வயோதிகக் காலத்தில், அவர்களுக்கு உதவும் வகையில் நமது அரசாங்கம் முதியோர் பென்ஷன் கொடுக்கிறது. அது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இத்தனை பேர்களுக்குத்தான்—500 அல்லது 1,000 பேர்—என்ற முறையில்





கொடுக்கப்படுகிறது. அதனால் முதியோர் பென்ஷன் கொடுக்கப்பட வேண்டிய பலருக்கு, கிடைக்காமல் போகிறது. எனவே, தகுதி படைத்த எல்லோருக்கும் முதியோர் பென்ஷன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது ஒரு வருடம் இரண்டு வருடம் காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. அப்படிக் காத்து இருக்கின்றவர்கள்—முன்னே பென்ஷன் வாங்கிக்கொண்டிருப்பவர்கள் எப்போது இறப்பார்கள் என்று நினைக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. முதியோர் பென்ஷன் வாங்குவதற்குத் தகுதியிருப்பதாக அறிவிக்கப்பட்டும் உடனடியாக இவர்களுக்குக் கொடுக்காத காரணத்தினால் இரண்டு வருடம் கழிந்து இவர்கள் பென்ஷன் வாங்குவதற்குள் இறந்தே போய்விடுகிற நிலைமையும் ஏற்படுகிறது. அரசுக்கு இதன்மூலம் அதிகச் செலவு ஏற்பட்டுவிடப்போவதில்லை. ஆகவே இதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு முதியோர் பென்ஷன் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் என்று நிர்ணயிக்கப்பட்ட எல்லோருக்கும் உடனடியாகப் பென்ஷன் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப்போல முன்பு ஜில்லா போர்டுகள் நடத்தி பின்னர், பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்ட மருந்தகங்களை அரசாங்கமே ஏற்றுக்கொள்வது என்ற அடிப்படையில் 200க்கும் மேற்பட்ட மருந்தகங்களை அரசாங்கம் படிப்படியாக ஏற்க இருப்பதை நான் வரவேற்கிறேன். அதைப் போலவே முனிசிபாலிட்டிகளால் நடத்தப்படுகிற பல ஹைஸ்கூல்கள் நிதிப் பற்றாக்குறை காரணமாக சரியான முறையில் நடத்தப்படாமல் இருக்கின்றன. நிதி நெருக்கடி காரணமாக சரியான முறையில் தங்களால் நடத்த முடியவில்லை, அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கோருகிற முனிசிபாலிட்டிகளின் பொறுப்பில் உள்ள

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஹைஸ்கூல்களையும் அரசாங்கமே ஏற்று நடத்த முன்வரவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பினை நல்கிய தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1972-73-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை ஆதரித்துப் பேசுகின்ற வகையில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே முன்னாலே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் "இந்த நிதிநிலை அறிக்கை ஒரு அழகான கவிதை நடையில் உருவாக்கப்பட்டிருக்கிறது", என்று சொன்னார்கள். இது வெறும் கவிதை நடையில் உருவாக்கப்பட்ட அறிக்கை மட்டுமல்ல—தமிழகத்தில் உள்ளவர்கள் என்றென்றும் இதை நினைத்துப் பார்க்கக்கூடிய அளவில்—மாக்னகார்டா போன்று—ஒரு உரிமைச் சாசனமாக விளங்குகிறது என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"வெற்றிமாலை நியாயத்தின் கழுத்தில் விழுந்தே தீரும்", என்றும் "உரிமை முழக்கம் தொடக்கத்திலே அலட்சியப்படுத்தப் பட்டாலும் ஒருநாள் அதற்கான உயர்ந்த மரியாதை கிடைத்தே தீரும்", என்றும் நம்முடைய நிதிநிலை அறிக்கையை கவிதை நடையிலே ஆரம்பித்த டாக்டர் கலைஞர் அவர்கள் பின்னால் பற்பல அழகான திட்டங்கள் பலவற்றை எடுத்துச் சொல்லி தமிழகத்தின் உன்னத எதிர்காலத்தை உருவாக்கித்தர முன் வந்திருக்கிறார்கள்.

இதிலே குறிப்பாக நாம் எல்லாம் பாராட்டக்கூடிய வகையில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே நடந்து முடிந்த போராட்டத்திலே நம்முடைய பிரதமர் எடுத்துக் கொண்ட நிலையைப் பாராட்டியும்—அந்தப் போர்க் களத்திலே உயிர் துறந்த ஆயிரக்கணக்கான தமிழக வீரர்களுக்கு வணக்கம் செலுத்தியும் தம் உரையை ஆரம்பித்திருக்கிறார்கள். இது ஒரு நல்ல ஆரம்பமாகும், இங்கே இதுவரை பேசியவர்கள் எவரும் இந்த பட்ஜெட்டிலே குறைகள் கண்டு எடுத்துச் சொல்ல முடியவில்லை.

நம்முடைய பட்ஜெட்டிலே 1972-73-ஆம் ஆண்டின் வரவு ரூ. 397.27 கோடியாக இருக்கும் என்றும், செலவு ரூ. 394.78 கோடியாக இருக்கும் என்றும் இவ்வாண்டு நமக்கு ரூ. 2.49 கோடி உபரியாக இருக்கக்கூடிய பட்ஜெட்டை நமக்கு அமைத்துக் தந்திருக்கிறார்கள்.





1972-73-ல் மத்திய அரசிடம் இருந்து நமக்குக் கிடைக்கும் கடன் தொகை ரூ. 45.80 கோடியாகும் என்றால் நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகை—வட்டி எல்லாம் சேர்த்து ரூ. 53.38 ஆக இருக்கின்ற காரணத்தினால் நம்முடைய மாநில நிதியில் இருந்து இவ்வாண்டு நாம் ரூ. 8 கோடி திருப்பித்தர வேண்டிய பரிதாபகரமான நிலைமையில் இருக்கிறோம் என்பதை நமது முதல் அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், மத்திய அரசு என்பது என்ன வட்டிக் கடையா? இதைச் சொன்னால் பலபேர்களுக்குக் கோபம் வருகிறது. வட்டிவிகிதத்தைக் குறைத்து, கடன் தவணை கால அளவை மாநில அரசு கேட்பது போல நீட்டித்துக்கொடுக்கக் கூடாதா? தமிழர்களின் நலன்களில் கொஞ்சம் மத்திய அரசு அதிக அக்கறை காட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

உழவர்கள் இந்த நாட்டின் முதுகெலும்பாகும். அந்த உழவர்களுக்கு இந்த பட்ஜெட்டில் பல சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கடன்பெறும் வசதி அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது. பூச்சிக்கொல்லி மருந்துகள், வீரிய விதைகள் போன்றவை அளிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறை மூலமாக அவர்களுக்குக் கடன் உதவி அளிக்க 61 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

1972-73-இல் கால்நடை மருத்துவங்கள் நிறைய ஆரம்பிக்கப் படும் என்பதாகவும் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த நேரத்திலே கிளினிக்கல் சென்டர்களை மீண்டும் திறக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். பாசன வசதிகளைப் பொறுத்தவரையிலும் நிறைய பாண்டு ஸ்கீம் தொடங்கவேண்டும். கிணறுகளில் தண்ணீர் வற்றாத நிலையை உண்டாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாலைத் தொடர்புகள், மின் தொடர்புகள் விவசாயத்திற்கு முக்கியத்துவம் தருகிற வகையில் அமையவேண்டும். பொதுவாக விவசாயிகளைப் பொறுத்த அளவில் இந்த பட்ஜெட் மிகவும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஒரு குடும்பத்திற்கு 60 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று முன்பு இருந்த உச்சவரம்பை 40 ஸ்டாண்டர்ட் ஏக்கராகக் கொண்டுவந்திருக்கிறார்கள். நான் எதிர்தரப்பில் இருக்கிறவர்களைக் கேட்கிறேன்—இது ஒரு சீர்திருத்தமான புரட்சி

பட்ஜெட் இல்லையா? கடன் நிவாரணம் குத்தகைதார் பாதுகாப்பு, டிரஸ்டுகள் ஒழிப்பு—தொழிலாளர்களுக்கான குடியிருப்பு ஆகிய இவைகள் எல்லாம் புரட்சியின் சிகரமாக அமைந்திருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இருந்தும், இந்த பட்ஜெட்டைக் குறை கூறுகிறார்கள் என்றால் அதில் உள்நோக்கம் இருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன்.

நான் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால் ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கோவை—பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பற்றிக் காலையில் அனைவரும் பேசினார்கள். உண்மையில் வேறு யாருக்கும் அந்த தொழிலாளர்களிடத்தில் இருக்கிற அக்கறையைவிட அதிகமாக திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு இருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆனால் அகில இந்தியாவில் இல்லாத தமிழகத்தில் மட்டும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஸ்டிரைக்கில் ஈடுபட வேண்டிய அவசியம் என்ன என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களது 19 கோரிக்கைகளில் ஏறத்தாழ 17 கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. 2 கோரிக்கைகள் பற்றி மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டியதாக இருக்கிறது என்பதாக. அதற்குப் பின்னரும் நான் எல்லோரையும் சொல்லவில்லை—சில தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களைத் தூண்டிவிடுகிற பணியில் இறங்கியிருக்கிறார்கள் என்றால் இதன் கருத்து என்ன?

இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிற பஞ்சாலைகள் வடநாட்டில் உள்ள பஞ்சாலைகளோடு போட்டியிட முடியாமல், வடநாட்டில் ஏராளமாகப் பருத்தி சாதகமாகிறது. கோடிக்கணக்கில் முதலீடு செய்து வடநாட்டில் நவீன பருத்தி ஆலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களோடு தமிழகத்துப் பஞ்சாலைகள் போட்டியிட முடியாத நிலை இருப்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் பம்பாய், அகமதாபாத்தில் உள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குத் தரக்கூடிய அளவில் தமிழகத்தில் உள்ள பஞ்சாலைகளில் ஊதியம் தருவதாக அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மேலும்



அவர்களுக்கு அளிக்கக்கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் அகில இந்திய அடிப்படையில் அமைந்துள்ள கட்சியினர்கள் வடமாநிலங்களில் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய ஊதிய உயர்வுக்காகப் போராடாது—தென்னகத்தில் மட்டும் போராட்டத்தைத் துவக்கியிருப்பதன் காரணம் என்ன? இன்றைக்கு வங்காள தேசத்திற்கு அதிகமான துணிகள் தேவைப்படுகின்றன. தென்னகத்தில் இருக்கிற மில்கள் போட்டிக்கு வந்துவிடக்கூடாது என்கிற சுயநலத்தில் வடநாட்டு மில் முதலாளிகளுக்கு உதவியாகத்தான் இங்கேயுள்ளவர்கள் அண்டர் க்ரவுண்டு ஒர்க்காக இந்தப் போராட்ட வேலைகளில் ஈடுபடுகிறார்களோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. ஏறத்தாழ இருபத்திரண்டாயிரம் தொழிலாளர்களை ஈ.எஸ்.ஐ. லீவு கொடுத்துவிட்டு அரைச் சம்பளத்தில் போங்கள் என்று தொழிற் சங்கத் தலைவர்கள் சொல்கிறார்கள் என்றால் இதற்கு என்ன பொருள் என்று கேட்கிறேன்.

மகாராஷ்டிராவில் உள்ள சர்க்கரை ஆலைகளில் ஏராளமான லாபம் இருக்கிறது. அங்கே தொழிற்சங்கத் தலைவர்கள்—அதுவும் அகில இந்திய ரீதியில் இயங்குகின்ற தொழிற்சங்கத் தலைவர்கள் எவ்விதப் போராட்டமும் ஏற்படுத்தவில்லை. தென்னகத்தில் மட்டும் ஏற்படுத்த என்ன காரணம்?

அதிலே உள்நோக்கம் இருக்கிறதென்பதைச் சொல்லும்போது தயவு செய்து வருத்தப்படாதீர்கள். இந்த நேரத்திலே மத்திய அரசிலே அமைச்சர்களாக இருக்கின்றவர்கள் அடிக்கடி தென்னகம் வருகிறார்கள். தொழிலாளர்களின் மத்தியில், 'நாங்கள் எல்லாவற்றையும் ஒத்துக்கொண்டோம், எல்லாவற்றையும் செய்துவிட்டோம். தமிழக அரசுதான் எதையும் செய்யவில்லை' என்று அடிக்கடி எதாவது ஒன்றை உரைத்து விட்டுப் போய் விடுகிறார்கள். நான் நமது முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். வட நாட்டிலே இருந்து வருகின்ற அமைச்சர்கள் இங்கே வந்து எதாவது உரைக்க வேண்டாம் என்று; மத்திய அரசையும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் என்கிற அமைப்பு உருவானது விவசாயிகளுக்கு உதவியாக இருந்தது. அதேபோல், காட்டன்

[திரு. கோவை செழியன்] [1972 மார்ச் 3

கார்ப்பொரேஷனும் ஏற்படுத்தி, விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும். அதில் லாபம் கிடைத்தால் அதை அரசாங்கமே எடுத்துக்கொள்ளட்டும்

அடுத்தபடியாக, இன்றைக்கு மதிப்பிற்குரிய வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் (திரு. கே டி கே தங்கமணி—குறுக்கீடு) அதாவது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஓடோடிச் சென்று மத்திய அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக இருக்கும் திரு. கே. டி. கே. தங்கமணி பட்ஜெட் உரையைப் படித்துவிட்டு, பத்திரிகைக்காரர்களுக்கு ஒரு செய்தியை, அதாவது 25-வது சட்ட திருத்தத்தின்படி ஒரு தொழிற்சாலையுமே எடுக்கவில்லையே என்று சொல்லியிருக்கிறார். நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், சென்ற சனிக்கிழமையன்று கேரள மாநிலத்தின் பட்ஜெட் வந்திருக்கிறது. அது செய்திப் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. கேரள அரசாங்கம் திரு. அச்சுதமேனன் அவர்கள் தலைமையில் இயங்கக் கூடியது. அதிலே தேடித் தேடிப் பார்த்தேன், எத்தனை தொழிற்சாலைகளை அரசுடைமையாக்கிறார்கள் என்று. அதில் ஒன்றுமே புரியவில்லை. நண்பர் திரு. தங்கமணி அவர்கள் பேசும் போது அந்தச் சாதனைப் பட்டியலைச் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, மாநில அரசுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லும்போது அதற்கு விரோதமாகப் பேசுகிறார்கள். ஆனால் மாநில அரசுக்கு உரிமை வேண்டுமென்று சொல்கின்ற கட்சியைச் சேர்ந்தவர்களை விட இந்த நேரத்தில் அவர்கள் காங்கிரஸ்காரர்கள் எவ்வளவோ தேவலைபோல் தோன்றுகிறது. கேரள மாநிலத்தின் நிதியமைச்சர் திரு. கே. டி. ஜார்ஜ் அவர்கள் இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர் அவர் பட்ஜெட்டைச் சமர்ப்பித்து விட்டு சில விஷயங்களைக் கூறியிருக்கிறார்கள். அது 'இந்து' பத்திரிகையில் சனிக்கிழமை வந்திருக்கிறது.

"If Kerala's problems were not viewed with sympathy and understanding and ban on overdrafts were imposed, it may lead to a state of financial crisis and strike at the very roots of national solidarity".



1972 மார்ச் 3] [திரு. கோவை செழியன்]

என்று சொல்லியிருக்கிறார்கள். 'இந்திய ஒற்றுமையை அடித்து நொறுக்கி விடுவோம், ஜாக்கிரதை' என்று இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கேரள சட்டசபையில் பேசியிருக்கிறார்கள். இந்த உணர்வு மற்ற கட்சிக்காரர்களுக்கு வர வேண்டும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில், தங்கள் கட்சியை விட்டு விலகிப் போனவர்களை 'துரோகிகள்', என்று கூறி ஒதுக்குவது வழக்கம். ஆனால் இந்தியாவிலே அவர்கள் கட்சியை விட்டு அப்படி விலகிப் போனவர்கள் பலர் ஆளும் கட்சியில் அமைச்சர்களாக இருக்கிறார்கள். உதாரணமாக, மோகன் குமாரமங்கலம், கணேஷ் போன்றவர்கள் இன்றைக்கு அமைச்சர்களாக இருக்கிறார்கள். அவர்களை 'துரோகிகள்' என்று சொல்லவில்லை. ஆனால் அவர்களையெல்லாம், அவர்கள் சொல்வதையெல்லாம் இவர்கள் ஓடோடிச் சென்று பாராட்டுவது எதற்கு? எந்த அவசியத்தின் மீது பாராட்டுகிறார்கள்.

அதேபோல் பழைய காங்கிரஸ் கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த பட்ஜெட்டைப் பார்த்துவிட்டு, 'இதில் ஒரு முன்னேற்றமும் இல்லை' என்றார். மற்றொருவர் 'இது விஷமம் உள்ள பட்ஜெட்' என்றார். இந்த பட்ஜெட்டில் ஏழை எளிய மக்களுக்கா வரி போடப் பட்டிருக்கிறது. பல் முதலாளிகளுக்கும், குதிரைப் பந்தயக் காரர்களுக்கும்தான் வரி போடப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்தப் பட்ஜெட்டில் விற்பனை வரிதான் அதிகமாக இருக்கிறது. இது மறைமுகமான வரியாக இருக்கிறது. இது ஏழை எளிய மக்களை அதிகமாகப் பாதிக்கும். 100 கோடிக்கு மேல் இருக்கிறது. நான் பட்ஜெட் உரையின் மீது பேசும்போது விளக்கமாகப் பேசுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறக்காமல் இதற்கு பதிலளிக்க வேண்டும்.

**திரு கோவை செழியன்.** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த வரியைப் பற்றிச் சொன்னார்கள். இந்த வரி எங்கள் அரசாலேயே இப்போது போடப்பட்டதா? என்பதை கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மாநில சுயாட்சியைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். இந்தியாவுக்கு பெடரல் ஆட்சிதான் தருவோம், இந்தியாவுக்கு அதுதான் ஏற்றது என்று. இன்றைக்கு அல்ல—இன்றைக்கு அதைப் பேசினால் பாவம் என்கிறார்கள், மாநிலத்திற்கு அதிகாரம் வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் இன்றைக்கு இது பயங்கரக் கரு என்று மிரட்சியாகப் பேசுகிறார்கள்—அன்றைக்கே வெள்ளைக்காரர்கள் கூறினார்கள். திரு. அட்லி துரை அவர்கள் லண்டன் பார்லிமெண்டில், பேசும் போது, மத்திய அரசாங்கத்திற்கு பாதுகாப்பு, அயல்நாட்டுக் கொள்கை, தபால்-தந்திப் போக்குவரத்து போன்றவற்றை வைத்துக்கொண்டு, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரப் போகிறோம் என்று பேசினார்கள். எல்லோரும் குறிப்பாக காந்தி அடிகள், நேரு ஆகியோரும் ஒத்துக்கொண்டார்கள். ஜனாப் ஜின்னா அவர்களும் அதை ஒத்துக்கொண்டார். அதைத்தான் காலஞ் சென்ற மௌலானா அபுல் கலாம் ஆசாத் India Wins Freedom என்ற புத்தகத்தில் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். ஜனாப் ஜின்னா அவர்கள் ஒத்துக்கொண்ட தத்துவத்தை திரு. வல்லபாய் பட்டேல் அவர்கள்தான் எதிர்த்தார்கள். ஏனெனில், அவர் ஹோம் மினிஸ்டராக இருந்தார். அதிகாரம் தன்னை விட்டுப் போய் விடுமே என்று எண்ணி, அதை எதிர்த்தார். பாகிஸ்தான் பிரிவதை ஒத்துக் கொண்டாலும் ஒத்துக் கொள்வேனே தவிர, இப்படிப் பட்ட அதிகார மாற்றத்தை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று கூறி அதை எதிர்த்தார். ஆகவே, மாநிலத்திற்கு அதிக அதிகாரம் என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் புதிதாகக் கற்பனை செய்து சொல்கிறது என்று கருத வேண்டாம். இது ஏற்கனவே இருக்கக்கூடிய ஒன்றுதான். இதைப் பார்த்து, அவர்கள் இப்படி மிரட்சி அடைவானேன் என்று என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இன்றைக்கு ஆளும் நிலைமையிலேயே இந்திய அரசாங்கத்தில் பிரதம மந்திரியாக இருக்கக்கூடிய திருமதி இந்திரா காந்தி யம்மையார் அவர்கள் அண்மையில் விஜயவாடாவில் பேசும் போது, மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தைப் பின் பற்றக்கூடிய அரசாங்கமாக இருக்கவேண்டும். மாநில முதலமைச் சர்கள் எல்லாம் மத்திய அரசின் பிரதம மந்திரியின் பேச்சைக்



கேட்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும், என்று பேசியிருக்கிறார். தன் பேச்சைக் கேட்காத மாநிலங்களின் முதலமைச்சர்களைத் தூக்கியெறிந்துவிட்டு கவர்னரின் காலடியிலே வைத்து விடுகிறார். பிடிக்காத சட்டசபைகளைக் கலைத்துவிட்டு கவர்னரின் காலடியிலே வைத்துவிடுகிறார். இன்றைக்கு போகிற போக்கைப் பார்த்தால் எங்கே போய் நிற்குமோ தெரியாது. திருமதி இந்திராவின் பேச்சைக் கேட்காத ஆந்திர முதலமைச்சர் திரு. பிரமானந்த ரெட்டி அவர்கள் பதவியிலிருந்து தூக்கி யெறியப்பட்டார். மைசூரில் தன்னுடைய குரலுக்கு செவி சாய்க்கவில்லையென்ற காரணத்தால் அங்கே இருக்கிற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சிலரை விலைக்கு வாங்கி, வீரேந்திர பட்டீலை முதலமைச்சர் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டார். ஒரு மாநிலத்தில் உள்ள முதலமைச்சரை பதவியிலிருந்து தூக்கி யெறிந்து விடுகிற நிலைமை, பயமுறுத்தல், மிரட்டல் எல்லாம் இங்கே தமிழகத்திலே பலிக்காது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அண்ணல் மகாத்மா காந்தி அவர்கள் இந்த நாட்டுக்கு சுதந்திரம் வாங்கித் தந்தார். அந்த சுதந்திரத்தை திருமதி இந்திரா காந்தியம்மையார் அவர்கள் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களை, சுதந்திரப் போராட்ட காலத்தில் கஷ்டப்பட்டு சுதந்திரத்திற்காக உழைத்தவர்களையெல்லாம் முதலமைச்சர் பதவியிலிருந்து விலக்குகிறார்கள் என்றால் இதற்கு என்ன பொருள்? தன் சொல்லைக் கேட்காதவர்களை விலக்குவது, தன் சொற்களைக் கேட்கின்ற பொம்மைகளைத்தான் பதவியில் வைத்துக் கொள்வேன் என்றால், அது எந்தத் திட்டத்தில் வருகிறது, அதற்கு என்ன பொருள் என்று எனக்குப் புரியவில்லை.

எனக்கு இன்னமும் பல சந்தேகங்கள் வருகின்றன. நான் இந்தக் கேள்வியை நம்முடைய சட்ட மன்றத்தின் மூலமாக இந்தியத் தலைமையமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்திரா காங்கிரஸ் கட்சி வலுவான கட்சியாக இருந்தாலும் கம்யூனிஸ்டுகளோடு கூட்டுச் சேர்ந்தார்களே என்ன காரணம்? வலிமை மிக்க கட்சியாக இருந்தும் வலிமை மிக்க கட்சித் தலைவர்களையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக பின்னுக்குத்

[திரு. கோவை செழியன்] [1972 மார்ச் 3

தள்ளிக் கொண்டு வருகிறார்களே என்ன காரணம்? கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து தூக்கியெறியப்பட்டவர்களையெல்லாம் வரவேற்றுப் பதவி தந்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்களே என்ன காரணம்?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, நேற்று வரை அவர்கள் பாராட்டியவர்களை இன்று இப்படிப் பேசுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது, உறவு முறிந்துவிட்டது என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் தனிப்பட்டவர்களைப்பற்றிப் பேசக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** நாட்டினுடைய நிலைமை என்னை இவ்வாறு பேசச் செய்கிறது; இந்திரா காங்கிரஸ் கட்சியும் உடைந்துவிடும் என்று டாங்கே சொன்னாரே அதற்கு என்ன காரணம்? பெற்ற சுதந்திரமும் பேணும் ஜனநாயகமும் எங்கே பறிபோய்விடுமோ என்ற அச்சம் இந்திய நாட்டிலே உள்ள ஒவ்வொரு பிரஜையையும் இன்றைக்குக் கவ்விக்கொண்டு இருக்கிறது. இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சுதந்திரமாக இயங்கவேண்டும், யாருடைய பின்னணியிலும் அவர்கள் இயங்கக் கூடாது, தங்களுடைய சொந்தக் காலிலேயே அவர்கள் நிற்க வேண்டும், பரிபாலனத்தை நடத்தவேண்டும். தொழிலாளர்கள் பிரச்னையாக இருந்தாலும், வேறு எந்தப் பிரச்னையாக இருந்தாலும் எந்த கட்சிக்கும் நாங்கள் குறைந்தவர்களல்ல. எந்த அகில இந்தியக் கட்சியும் சந்தேகிக்க முடியாத அளவுக்கு நாங்கள் கொள்கைகளை வைத்துக்கொண்டிருக்கிறோம்.

சமீப காலமாக சில கட்சிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு மாநில சுயாட்சி கேட்கிற கழகத்தின்மீது பாய்வானேன்? எங்களோடு சேர்ந்து இருக்கிற நண்பர்களையும்தான் நான் கேட்கிறேன். இதையெல்லாம் பார்க்கும்பொழுது ரஷ்யாவிலே ஸ்டாலின், குருஷ்சேவ் காலத்திலே வாழ்ந்த தலைவர்களுடைய நினைவு எனக்கு வருகிறது. இந்தச் சட்டமன்றத்திலே சுதந்திராக் கட்சியின் சார்பிலே டாக்டர் ஹாண்டே அவர்கள் இருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் தலைசிறந்த தலைவராக நாங்கள் இன்றைக்கும் காமராஜை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அவர்கூட அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத்தான் வரமுடிந்ததே தவிர இந்தியத் தலைமையமைச்சராக வரமுடிய



1972 மார்ச் 3] [திரு. கோவை செழியன்]

வில்லை. மதிப்பு மிக்கவர் என்று நாங்கள் ஏற்றுக்கொள்கிற ராஜாஜி அவர்களும் இருக்கிறார்கள். அகில இந்தியக் கட்சித் தலைவராக இருந்தவரும், கடைசி கவர்னர் ஜெனரலாக இருந்தவரும் இவர்களில் ஒருவரும் பிரதமராக வரமுடியவில்லையே என்ன காரணம்? உத்திரப்பிரதேசத்துக்காரர் தான் வரமுடியும்?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உறவு முறிந்த பின்னால் இவ்வளவு பேசுகிறார்களே என்ன காரணம்? இதற்கு முன்னாலே இந்திரா காந்தி அவர்கள்தான் திறமைசாலி, அவர்கள்தான் ஆள வேண்டும் என்று சொன்னவர்கள் இப்பொழுது திடீரென்று மாற்றிக் கொள்வானேன்? உறவு முறிந்ததாலா?

**திரு. கோவை செழியன்:** இன்றைக்கும் உறவு இருக்கிற காரணத்தினால்தான் நாங்கள் அன்போடும் பாசத்தோடும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். காமராஜ் போன்றவர்களும், ராஜாஜி போன்றவர்களும் பிரதமராக வரமுடியவில்லையே என்ன காரணம்? தலைவர் மூலம் நான் கே. டி. கே. தங்கமணி அவர்களைக் கேட்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு வேளை ஆளக்கூடிய வகையிலே டெல்லியிலே வந்துவிட்டால் டாங்கே அவர்கள் தான் பிரதமராக வரமுடியுமே தவிர திரு. தங்கமணி அவர்கள் வர முடியாது. நான் தங்கமணி அவர்களையும், டாக்டர் ஹாண்டே அவர்களையும் கேட்கிறேன், சிந்தியுங்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மேடைப் பேச்சுபோல் போகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹாண்டே அவர்களையும் தங்கமணி அவர்களையும் நேரிடையாக அவர்கள் கேள்வி கேட்கக் கூடாது, பேரவைத் தலைவர் மூலமாகத்தான் கேட்டுக்கொள்ள வேண்டும்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் நிதிநிலை அறிக்கையில் நடைபெற்ற விவாதத்தில் பல வேண்டப்படாத விஷயங்கள் எழுப்பட்டிருக்கின்றன என்பதை நான் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அது தேவையில்லை. நிதிநிலை அறிக்கை

[திரு. மணலி சி. கந்தசாமி] [1972 மார்ச் 3

சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறபோது தமிழ்நாட்டின் சூழ்நிலையை ஆளுங்கட்சியை சேர்ந்த நண்பர்கள் கொஞ்சம் மனதிலே வைத்துக்கொள்ளவேண்டும். நிதிநிலை அறிக்கை மிகவும் பாராட்டத்தக்க விதத்தில் அமைந்திருக்கிறது என்பதுதான் என்னுடைய கருத்து, என்னுடைய கருத்து மட்டுமல்ல, ' இங்கு இருக்கிற தலைவர்களையும் கேட்டேன், நல்ல அறிக்கை என்றுதான் சொன்னார்கள்.

நாடு எந்தச் சூழ்நிலையிலே போகிறது, ஆங்கிலத்திலே பேக்ரவுண்ட் என்று சொல்வார்களே, புறநிலை, அது எப்படி இருக்கிறது? என்ன என்ன நடந்திருக்கின்றன? தூண்டி விடுகிறார்கள் என்று சொல்வதில் பயனில்லை—அவர்களுக்கு மிகப் பெரியபொறுப்பு இருக்கிறது. ஆளுங்கட்சியில் மிகப்பெரிய ஆளுங்கட்சியாக 184 பேர்களைக் கொண்டிருக்கிற கட்சியாக இருக்கக்கூடிய ஆளுங்கட்சி, செல்வாக்கு உள்ள ஆளுங்கட்சி தமிழ் நாட்டிலே நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நேரத்திலே மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு பேசவேண்டும். வீணாக இங்கு இருக்கிற ஒற்றுமையைக் குலைக்கக்கூடிய வகையில் ஏன் பேசவேண்டும்? இங்கு ஏன் ஸ்டாலின் வரவேண்டும்? குருஷ்சேவ் வரவேண்டும்? டாங்கே வருவாரா? தங்கமணி வருவாரா? என்று பேசுவது சரியல்ல. நம்முடைய ராஜ்யம் இருக்கிறது. ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டு இருக்கிற சூழ்நிலையைத் தவிர்த்திருக்கவேண்டும், தவிர்த்திருக்க முடியும். மாணவர்கள் மத்தியிலே சலசலப்பு உண்டா இல்லையா? பச்சையப்பா காலேஜில், லா காலேஜில், திருப்பத்தூரில், அண்ணாமலையில், மண்டபத்தில் அடிதடி இப்படி நடந்துகொண்டிருக்கிறது. உங்களுடைய கட்சி இருக்கிறது. எங்களுடைய கட்சியைவிட உங்களுக்கு பொறுப்பு இருக்கிறது. வருங்காலத்திலே சிறந்த முறையிலே பயன் படக்கூடிய முறையில் செயல்பட வேண்டும். உங்களுடைய வட்டச் செயலாளர்கள் இருக்கிறார்கள், நாட்டில் உள்ள, நடந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே உங்களுடைய தலைமை என்ன செய்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். விஷயங்களை அனுசரணையோடு பார்த்து யார் யாரோடு கலந்து பேசுவது எப்படிப் பிரச்னைகளைத் தீர்ப்பது என்றுதான் பார்க்க



1972 மார்ச் 3] [மணலி திரு. சி. கந்தசாமி]

வேண்டுமே தவிர, இந்த நேரத்திலே நான் இவ்வளவு, நீ இவ்வளவு என்று மார்க் போடக்கூடிய விதத்திலே பேசுவது *சரியல்ல. மதுரையிலே இன்றைக்கு வேலைநிறுத்தம், கோயம்புத்தூரிலே வேலைநிறுத்தம் பல நாட்களாக, இப்படித் தமிழகத்திலே பல இடங்களிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தூண்டிவிடுகிற நிலைமை இருக்கலாம், அது ஒரு பகுதி, சிரிக்கக் கூடாது. எண்ணெய் இல்லாவிட்டால், திரி இல்லாவிட்டால் விளக்கை நீங்கள் தூண்டிவிடமுடியுமா? குழப்ப உணர்ச்சியோடு இப்படித் தூண்டுபவர்கள் என்பது ஒருபுறம் இருக்கட்டும். இன்றைக்கு யார்யார் என்னென்ன நோக்கத்தோடு செயல்படுகிறார்கள் என்பதை நான் நன்றாகப்புரிந்து கொண்டிருக்கிறேன். தீய சக்திகள் குறுக்கிடக்கூடாது என்பதில் உங்களைவிட நான் கண்டிப்பாக இருக்கிறேன். உங்கள் கட்சி, ஆளும் கட்சி, பெரியவர் வளர்த்த கட்சி சீரும் சிறப்புமாக வளர வேண்டிய கட்சி எப்படி நடைபெறுகிறது என்பதை நெஞ்சில் கைவைத்துப் பார்த்துச் சொல்ல விரும்புகிறேன். இதை கோர்ட்டாக மாற்ற நான் விரும்பவில்லை.* நீங்கள் இதையெல்லாம் சிந்தித்துப் பாருங்கள் என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

'அடுத்தபடியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபத்தில் என்ன நடந்தது? அமைச்சரவர்கள் இருக்கும் ஜில்லா, மற்ற விஷயங்கள் வேண்டாம், எப்படி ஆரம்பித்தார்கள் என்பதுகூட அல்ல; ஒரு கட்சியைச் சேர்ந்தவர், ஜில்லாக் கமிட்டியைச் சேர்ந்தவர், அவரை மேடையிலே பிடித்து வைத்து அப்படிச் செய்திருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவிலே கூட நிலப் பிரபுக்கள் அப்படிச் செய்யவில்லை. தஞ்சாவூர் ஜில்லாவிலே நிலப்பிரபுக்களிடம் நான் வீரப் போராட்டம் நடத்தியிருக்கிறேன். நினைத்தால் என்னைக் கொளுத்தியிருப்பார்கள். வருங்காலத்திற்குப் பயந்தார்கள். (ஹியர் ஹியர்.)

ஹியர் ஹியர் என்று சொல்வதற்காகச் சொல்லவில்லை. இது ஒரு துர்ப்பாக்கியமான நிலையாகப் போய்விட்டது. எதையாவது பேசினால் அதைப் பயன்படுத்திக்கொள்ளத் தயாராகயிருக்கிறார்கள். நான் அவர்களை பயன்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. இங்கே நாவலர் அவர்கள் இருக்கிறார்கள், பேராசிரியர் இருக்கிறார். சண்முகம், மாதவன் இருக்கிறார்கள்.

தானும் அவர்களோடு வருகிறேன், விசாரிப்போம். கோர்ட்டுக்குப் போக வேண்டாம். தவறு நடந்திருந்தால் ஒருவருக்கொருவர் மன்னித்துக்கொள்வோம் என்ற விதத்தில் நடப்போம். "அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்" என்ற திருக்குறளைப் பார்க்கிறோம். நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஆளுங்கட்சியின் போக்கைப்பற்றி சிந்திக்க வேண்டுமென்று நியாயமாகச் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியதைப் பாராட்டுகிறேன். ஆனால் இங்கிருப்பவர்கள் ஆளுங் கட்சிக் கூட்டம் என்பது தவறு. மாணவர்களுக்குள்ளாகக் குழப்பம். திராவிட முன்னேற்றக் கழக மாணவர்களுக்கும் அல்லது வேறு கட்சி மாணவர்களுக்கும் சண்டை. இதில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் அடிக்கப்பட்டதாகப் புகார். நான் முந்தாநாள்கூட விசாரித்தேன். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களை, எழுதிக் கொடுங்கள். யார் அடித்தது என்று என்றுகூடச் சொன்னேன். ஆனால் போலீசில் புகார்கூட இல்லை என்றுதான் எனக்குள்ள வருத்தம். கட்சித் தகராறுகளுக்குள் கொண்டுபோகாமல் நடந்த நடவடிக்கை எடுக்கலாம். திராவிட முன்னேற்றக் கழக மேடை என்று எடுத்துச் சொல்வது தவறு, மேடை அல்ல மாணவர்கள் கூட்டம். அடித்தது தவறு என்று வாதாடும்பொழுது எல்லாவற்றையும் சேர்த்துப் பரிசீலிக்க வேண்டும். அதேசமயத்தில் திராவிட முன்னேற்றக் கழக மாணவர்கள் கூட்டம் போடும்பொழுது இன்னொரு மாணவர்களைத் தாண்டிவிட்டு அடிப்பதும் தவறு என்பதையும் விளக்கியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மண்டபம் நிகழ்ச்சிபற்றிய சில விவரங்களைப்பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டதால் நான் தலையிட வேண்டியிருக்கிறது. இந்தச் சம்பவம் ஏற்பட்டவுடனே அந்த அடிபட்ட எங்கள் கட்சித் தலைவர் டி.ஐ.ஜி.-க்குப் போன் பண்ணினார், எஸ்.பி.-க்குப் போன் பண்ணிச் சொல்லியிருக்கிறார், கலெக்டருக்குப் போன் பண்ணிச் சொல்லியிருக்கிறார். தூரத்திலிருந்த எங்களுக்கும் தகவல்கொடுத்தார் நாங்கள் 24 மணி நேரத்திற்குள்ளாகப் போய்விட்டோம். ஆனால் அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறார் என்று நாங்கள் கம்ப்ளெயின்ட்





கொடுக்கவில்லை என்பதற்காக பாராமுகமாக ஒரு அரசு இருந்தால் எப்படிப் பாதுகாப்பு இருக்கும். யார் அடித்தவர்கள் என்பது அங்குள்ள போலீசாருக்கு விரைவில் தெரிந்திருக்கும். அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் பக்கத்து ஊரில் There was complete inaction here and overaction in the other place. அது உண்மைதானே? எஸ்.பியிடத்தில் நான் சொல்லியிருக்கிறேன். அவரே கம்ப்ளெயின்ட் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறதா? எழுத்து மூலம் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறதா? முக்கால் மணி நேரம் என்னை வைத்துக்கொண்டிருந்தார்கள். நாங்களும் சொல்லியிருக்கிறோம். அதற்கு விசாரணை செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, அதற்குக் காரணம் என்ன? இப்படி ஒரு குறிப்பிட்ட கட்சித் தலைவர் அடிபடும்பொழுது அதற்கு ஃபார்மல் கம்ப்ளெயின்ட் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அப்படிக் கொடுத்தாலும் டிலெய்ட் கம்ப்ளெயின்ட் என்று சொல்வார்கள். இப்படி சட்டப் பிரச்னையாகப் பார்ப்பது என்றால் எப்படி உறவு சரியாக இருக்கும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எழுதிக்கொடுக்கச் சொல்லிக் கேட்டார்கள். ஏன் கொடுக்க மறுக்கிறார்கள்? யார்மேல் நடவடிக்கை எடுப்பது? கே. டி. கே. தங்கமணி அவர்களே நான் எழுதிக்கொடுக்கச் சொல்லுகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையில் கொடுக்காததற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. எழுதிக்கொடுக்காமல் இருப்பது ஏதோ ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிடும் யார் யாரை அடித்தாலும் தவறுதான்.

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப்பிறகு நான் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரது நேரத்தைக் கெடுக்கிறீர்களே.

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** அந்த 4 பேரால் தாக்கப்பட்ட பின்னர், 50 பேர் சேர்த்துகொண்டு பின்னால் தாக்கியிருக்கிறார்கள். 4 பேர்களை 50 பேர் இரவு பத்து மணிக்குமேல் 12 மணிக்குள்ளாகத் தாக்கியிருக்கிறார்கள் என்பதையும் சேர்த்துச் சொல்லியிருந்தால்

[திரு. ப. ஆர். பெருமாள்] [1972 மார்ச் 3

நன்றாகயிருந்திருக்கும். இவர்கள் தாக்கிவிட்டதால் அவர்கள் அதிகாரபூர்வமாக ரிப்போர்ட் கொடுக்கவில்லை என்பது என் கருத்து.

**மணலி திரு. சி. கந்தசாமி:** நான் உள் விவகாரங்களில் செல்ல விரும்பவில்லை. அமைச்சர் வரட்டும், விசாரிப்போம் என்று சொன்னேன். இப்படி ஒரு விவகாரமாகப் போகக்கூடாது. மாணவர்கள் பிரச்னை என்றாலும் பிராயச்சித்தம் உண்டு. திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லும்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாணவர்களும் இருக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த மாணவர்களும் இருக்கிறார்கள். எனவே கட்சி அடிப்படையிலே மாணவர்கள் இயங்குகிறார்கள். நான் சொல்வது நல்லெண்ணத்தோடுதான் கூறுகிறேன். இப்படிப் பட்ட பிரச்னைகளை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும், முடித்துக்கொள்ள வேண்டும். யாரையும் குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** முன்பு ஒருமுறை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களோடு பேசிக்கொண்டிருந்தேன். இராம நாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மிகுந்த நல்ல உறவு ஏற்படுத்தத்தயாராக இருக்கிறோம். ஆனால் அதே சமயத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் திராவிட முன்னேற்றக்கழக மாணவர் தலைவரையும், ஆசிரியர்களையும், ஆசிரியையை, ஒரு பெண்குலத்தைக் கேலி செய்யும் அளவில் நோட்டீஸ் போட்டு எவ்வளவு மோசமான முறையிலே வெளி யிட்டார்கள் என்பதையும் மணலி கந்தசாமி அவர்கள் கேட்டுத் தெரிந்துகொண்டு அந்த அநாகரீகமான செயலுக்கு உடந்தையாக இருக்கலாமா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மணலி திரு. சி. கந்தசாமி:** எனக்குத் தெரிந்த விவரங்கள் என்று எதையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, விசாரிக்க வேண்டும் என்று சொல்கிறேன். விசாரிக்க இரண்டு பேரும் போவோம் என்பதை அடிப்படையாகச் சொன்னேன். விஷயம் யாருக்கு ஆதாயமாக இருக்கிறது என்பதைப் பார்க்க



1972 மார்ச் 3] [மணலி திரு. சி. கந்தசாமி]

மறுக்கிறார்கள். இந்த நிலைமை இப்படியே போக வேண்டுமா? படுத்துக் கிடந்தவர்களெல்லாம் இன்றைக்கு எழுந்திருக்கிறார்களே ஏன்? எவர்களைப்பற்றியும் நான் சொல்லவில்லை. இன்றைக்குப் பேசுவதற்கு இடம் கொடுக்கக் கூடிய விதத்திலே இன்றைய போக்கு ஏன் போகிறது என்ற கேள்வியே தவிர நான் எங்கேயும் தீர்ப்புக் கூறவில்லை. எங்கள் கட்சி பூரணம் என்றோ அல்லது உங்கள் கட்சிதான் தப்பு செய்தது என்றோ சொல்லவில்லை. இப்படிப்பட்ட சம்பவங்கள் மனக்கசப்பை ஊட்டும். இவைகளை ஊக்குவிக்கும் விதத்திலே இருக்கக்கூடாது. இந்த பட்ஜெட் கொண்டுவரக்கூடிய சூழ்நிலையில் இப்படிப்பட்ட சம்பவங்கள், இப்படிப்பட்ட நிலைமைகளை ஏற்படுத்தி இருக்கிறதே என்ற அடிப்படையில்தான் சொன்னேன்.

அடுத்தப்படியாக, இந்த பட்ஜெட் கொண்டுவரும் சமயத்தில் முக்கியமான பிரச்னைகள், நல்ல விஷயங்கள் இருக்கின்றன. அதன் பிரதிபலிப்பு அடுத்த வருஷம் தெரியும். இன்றைக்கு வேலை நிறுத்தங்கள், வாழ்க்கைப் போராட்டங்கள் போன்ற பல்வேறு விஷயங்கள், விலைவாசி உயர்வு. விலைவாசி இறக்கத்தைப்பற்றி நம்மால் மட்டும் செய்ய முடியாது. அது அகில இந்தியப் பிரச்னை என்பது எனக்குத் தெரியும். என்றாலும் அதற்கு நாம் ஆரம்பம் செய்தாக வேண்டுமென்ற அடிப்படையில் சொல்கிறேன். இது வரையில் இதைத் தணிப்பதற்கு எதுவும் செய்ய முடியாமல் இருக்கிறோம். இதைப்பற்றிச் சிந்தித்து எல்லாக் கட்சிகளும் சேர்ந்து கட்டுப்பாடான நடவடிக்கை எடுக்கும் விதத்தில் செய்திருந்தால் நன்றாக இருக்கும். யாரோ கவிதை என்று பேசிக்கொண்டிருந்தார்கள். இப்படிப் பாடப்பட்ட கவிதைக்கு 400 கோடி ரூபாய் விலை. இதுவரையில் எந்தப் பாட்டுக்கும் கிடைக்க முடியாத விலை இதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இது வேடிக்கைப் பேச்சாகப் போகக்கூடாது, தயவு செய்து இன்றைக்கு நான் கேட்டுக்கொள்வது ஏதோ வியாபார ரீதியாக நான் நினைக்கவில்லை.

ஒரு குறிப்பிட்ட குறிக்கோள்—பிற்போக்கு சக்திகள், வகுப்புவாத சக்திகளை விடக்கூடாது என்பதற்காகத்தான் கூட்டணி. இன்றைக்கும் அது பொருந்தும், நாளைக்கும்

[மணலி திரு. சி. கந்தசாமி] [1972 மார்ச் 3

பொருந்தும். அந்த கூட்டணி வேறு உருவத்தில், வெவ்வேறு பாதைகளைப் பேசிக்கொண்டு தலைதூக்குவதைப் பார்க்கிறோம். எச்சரிக்கையோடு இருந்து, வேண்டுமென்ற அடிப்படையில் நெருக்கடியான நிலைமை உருவாவதைத் தடுக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

உங்களுடைய தலைமை விசித்திரமானது. கட்சித் தலைவர் இங்கே முதலமைச்சராக இருக்கிறார். நாவலர் அவர்கள் கட்சிக்குக் காரியதரிசி, இங்கே அமைச்சராக இருக்கிறார், கட்சிப் பெருந்தலைவர்கள் இங்கே அமைச்சர்களாக இருக்கிறார்கள். கொஞ்சம் யோசித்துப் பொறுப்புணர்ச்சியோடு செய்யவேண்டுமென்பதற்காகத்தான் பிழையாக இதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்திரா காங்கிரஸ் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டால் எங்கள் கட்சியிலே இருப்பவர்களை கூட போட்டுக் குழப்புகிறார்கள். இந்திரா காங்கிரசாக இருக்கட்டும், வேறு எந்தக் கட்சியாக இருக்கட்டும், எங்கள் கட்சியாகவே இருக்கட்டும், தவறு செய்தால் தவறு என்றுதான் சொல்ல வேண்டும். அந்த அம்மையார் இரு திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்தார்கள், நாங்களும் ஆதரித்தோம், நீங்களும் ஆதரித்தீர்கள். உங்களுடைய பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் அதற்கு ஓட்டுப் போடவில்லையா? விசேஷமாக இந்திரா காங்கிரசுக்கு வரிந்து கட்டிக்கொண்டு பேசவில்லை. திரு. மோகன் குமாரமங்கலம் எங்களுடைய பழைய தோழர். நான் காரியதரிசியாக இருக்கும்போது நடவடிக்கை எடுத்து அவரை வெளியே அனுப்பினோம். அட்ஹாக் கமிட்டி என்ற பதவியை அவர் ஒப்புக் கொண்டு கட்சிக்கு காரியதரிசியாகச் சேர்ந்தார். அதை ஒப்புக்கொள்ளாது கட்சியிலிருந்து விலக்கியதாக அறிவித்தோம். விஷயத்தைப் புரிந்துகொண்டு சொல்ல வேண்டும். நாங்கள் தயவு தாட்சண்யம் பார்க்கக்கூடிய ஆட்கள் இல்லை. எங்கள் கட்சியைப் பொறுத்தவரை கண்டிப்பு உண்டு. திரு. கே. ஆர். கணேஷ் அவர்கள் மாமாவைத் தோழராக இருந்த போது கொஞ்சம் ஒப்புக்கொண்டிருந்தார். அதற்குப் பிறகு அவருக்கும் லட்சியத்திற்கும் சம்பந்தம் இல்லாது போயிற்று. இந்திரா காங்கிரஸ் கட்சி என்று சொல்லும்போது நீங்கள் ஆதரிக்கின்ற நல்ல திட்டங்களை நாங்களும் ஆதரிக்கிறோம்.



1972 மார்ச் 3] [திரு. மணலி சி. கந்தசாமி]

பாண்டிச்சேரியில் இந்திரா காங்கிரசை எதிர்த்து உங்களுடன்தான் தோழமையாக இருக்கிறோம். அரங்கண்ணல் அவர்கள் பேசும் போது கம்யூனிஸ்டு கட்சி மீது அதிருப்தியைக் குறிப்பிட்டுப் பேசினார்கள். மனிதனுக்கு மனிதன் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி கிடையாது. அதிருப்தி வளர்ந்து கொண்டேதான் இருக்கும். கம்யூனிச சித்தாந்தம் வெற்றி பெற்றால் கூட பரிபூரணத்துவம் ஏற்பட்டு விடும் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. பரிபூரணத்துவம் ஏற்பட்டு விட்டால் மனிதகுலம் அழிந்துவிடும். பின்னர் அது தேவகுலமாகிவிடும். தத்துவப் பிரச்சினையைக் கிளப்பி விட்டு நேரத்தை விரயமாக்குவது சரியல்ல.

அடுத்தபடியாக, பட்ஜெட்டுக்கு வருகிறேன். தமிழ் மாநிலத்திற்கு 400 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. பெருமைப்படுகிறேன். இன்றைய தினம் முதல் முறையாக—எனக்குத் தெரிந்த வரையில் 2½ கோடி ரூபாய் அளவுக்கு சர்ப்ளஸ் பட்ஜெட்டாகக் கொடுத்திருக்கிறார்கள். இது பெருமைப் படத்தக்கது. உபரி பட்ஜெட்டாக இருப்பதால் மொத்தமாக இந்தியாவில் அதிகமாக நோட்டு அடிப்பது குறையும். இந்தியா பூராவும், மத்திய சர்க்காரும் பற்றாக்குறை பட்ஜெட்டைப் போட்டால் நோட்டு அடிப்பதன் மூலம் நாணய மதிப்பு குறையும். உபரி பட்ஜெட்டைத் தயாரித்ததன் மூலம் நல்லதொரு காரியத்தை தமிழ் நாட்டுக்கு மாத்திரமல்லாமல், இந்திய நாட்டுக்கே செய்திருக்கிறார்கள்.

இதிலே இன்னொன்று சாதாரண மக்கள் மீது வரி இல்லை. இது குறிப்பிடத்தக்க அம்சம். ஆனால் திருஷ்டிபரிகாரம் மாதிரி ஒன்று இருக்கிறது. 2½ கோடி ரூபாய்க்கு உபரி வரி என்றால் 10, 20 கோடி ரூபாய் அதையும் விடக் கூடுதலாகத்தான் கடைசியில் வரும். இதிலே போய் 1½ ரூபாய், 2½ ரூபாய் என்று ஏன் வரி விதிக்க வேண்டும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** பஞ்சாயத்து யூனியன்கள் பல்வேறு விதமான சாலைகளை அமைப்பதற்கும், சிறு மருத்துவ மனைகளை நடத்துவதற்கும் வசதி இல்லை என்று குறைப் படுகிறார்கள். அப்படி பஞ்சாயத்து யூனியன் போடுகிற செஸ் வரி அதிகமானால் அந்த அளவுக்கு அரசாங்கம் தன்னுடைய வருமானத்தில் இருந்து ஈடுகட்டும் தொகையாகத் தரவேண்டும். இப்போது 1½ ரூபாய் கொடுத்து வருகிறோம். அவர்கள் ஒரு

ரூபாய்தான் போட்டிருக்கிறீர்கள். 2½ ரூபாய் என்று சொல்லும் போது அவர்கள் 2 ரூபாய் அளித்தால் அதற்கான சட்டுத் தொகையைப் பெற்று திட்டத்தை நிறைவேற்ற வாய்ப்பளிப்பதற்காகத்தான் இது போடப்பட்டிருக்கிறது.

**மணலி திரு. சி. கந்தசாமி:** அதைப் புரிந்து கொண்டுதான் பேசுகிறேன். இதற்காக இதை இந்த பட்ஜெட்டில் புகுத்த வேண்டிய அவசியமில்லை. இருக்கின்ற நிதியிலிருந்து அந்த ரூபாயைக் கொடுத்து விடலாம்.

சேல்ஸ்டாக்ஸ் மூலம் பொதுமக்கள் கொடுக்கக் கூடிய வரிப் பணம் 113 கோடி ரூபாய் அளவுக்கு வருகிறது. இது பெருமைப் படத்தக்கது. மக்களுடைய வரிப் பணத்தைக் கொண்டு சாதாரண மக்களுடைய முன்னேற்றத்திற்காக காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத்தான் காட்டுகிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏற்படக்கூடிய பலவீதமான சீர்திருத்தங்கள் காரணமாக மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்து அதிகப்படியான சேல்ஸ்டாக்ஸ் வருமானம் வருவது நல்லது. இன்றைக்கு அதிகாரிகளும், நிர்வாகமும் ஜனங்கள் கொடுக்கக் கூடிய 113 கோடி ரூபாய் என்ற உணர்வோடு செயல்பட வேண்டும். இது அல்லாமல் கள்ளத்தனப் போட்டியுள்ள எக்ஸைஸ் வரி மூலமாக 35 கோடி ரூபாய் வசூலிக்கலாம். இந்த பட்ஜெட்டில் சரிபாதி சாதாரண மக்கள் கொடுக்கக் கூடிய பணம். எந்த அளவுக்கு அது அவர்களுக்குப் பயன்படுகிறது, அவர்களுடைய கஷ்டத்தைத் துடைக்க செயல்படுகிறது என்பதை நிச்சயமாகக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் பார்க்கும்போது வருமானம் பெருகி யிருப்பதைப் பார்க்கும் அந்நேரம் ஏற்படுகிற இன்கம்டாக்ஸ், எஸ்டேட் ட்யூட்டி, அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ் ஆகியவற்றின் மூலம் நமக்குக் கிடைக்கக் கூடியது 42 கோடி ரூபாய் அளவுக்குத்தான். பணக்காரர்கள் தமிழக அரசுக்கு 42 கோடி ரூபாய் அளவுக்குத்தான் கொடுக்கிறார்கள். ஏழை மக்கள், விவசாய மக்கள், தொழிலாளர்கள்தான் 200 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட பணத்தைத் தருகிறார்கள். ஜனநாயகத் தன்மை கொண்ட அரசு ஜனநாயகத் தன்மையோடு செயல்படுகின்ற விதத்தில் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது என்பதைத் தீர்க்கமாகப் பார்க்கிறேன்.



தொழிலாளர்களின் அதிருப்தியைப் பற்றிப் பேசுவதிலே மத்திய சர்க்காரைக் குற்றம் சாட்டவில்லை என்று யாரும் கருத வேண்டாம். மத்திய சர்க்காருக்குப் பொறுப்பு உண்டு. இதற்காக மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராட வேண்டுமென்றால் தோளோடு தோள் நிற்கத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தொழிலாளர்கள் நடத்தும் எல்லாப் போராட்டத்திலும் தமிழ்நாடு சர்க்கார் அலட்சியமாக இருக்கிறதென்றும், கவனம் செலுத்தவில்லை என்றும் மேடையில் பேசி குற்றஞ்சாட்டப்படுகிறது. இந்த முறையில் திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள். மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் உடனடியாக இந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று தொழிலாளர்கள் வேண்டுகோளை வைப்பார்களானால் அது இன்னும் சற்றுத் தெளிவாக மத்திய சர்க்காரை இதிலே கவனம் செலுத்த வைக்கும்.

**மணலி திரு. சி. கந்தசாமி:** சில பேர் அப்படிப்பட்ட எண்ணத்தில் இருக்கலாம். யதார்த்தமாக தொழிலாளர்களை அவர்களிடமிருந்து பிரிக்க, அவர்கள் வலையில் விழாமல் இருக்கச் செய்வதற்கு உங்கள் சார்பில் இருந்து செயல்பட வேண்டும். நல்லெண்ணத்தோடு நாங்கள் சொல்லுகிறோம். இதனால் தமிழ் நாட்டில் பொதுவாக உற்பத்தி பாதிக்கப்படுகிறது. பல நாட்கள் வேலை நடக்காமல் இருக்கிறது என்றால் தொழிலாளர்கள் வாழ்க்கை பாதிக்கப்படுவதோடுகூட உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. பந்த விற்பனையாகாமல் இருக்கிறது என்று தந்தியடிக்கிறார்கள். சுற்றிச் சுற்றி தமிழ் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் நிலைமை ஏற்படும். இது உங்களுடைய பிரச்சினை மாத்திரமல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதை ஒரு பொதுப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் உங்கள் முயற்சி இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக விலைவாசிப் பிரச்சினை. அன்றைய தினம் உணவு அமைச்சர் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தேன். தஞ்சை ஜில்லாவில் ஒரு தனி கார்ப்பரேஷன் வைக்கப் போவதாகச் சொன்னார்கள். ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா நம் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருப்பதால் இதை

[திரு. மணலி சி. கந்தசாமி] [1972 மார்ச் 3

ஏற்படுத்தப் போகிறார்களா என்பதைப் பற்றியெல்லாம் விளக்கமாகச் சொல்ல வேண்டும். நம் ஸ்டேட் கார்ப்பரேஷன் அதற்குப் போட்டியாகச் செயல்படப் போகிறதா? அமைப்பை ஒப்புக்கொள்கிறேன். இன்று இந்த ஸ்டேட் கார்ப்பரேஷனுக்கு 52 ஏஜென்டுகளைப் போட்டிருக்கிறார்கள். தமிழக மக்களின் நலனை முன்னணியில் வைத்து அவர்கள் இது வரையில் வியாபாரம் செய்தவர்கள் அல்ல. அவர்கள் ஏகபோகக் காரர்கள். அதைத் தவிர்க்க வேண்டும். கூட்டுறவு செக்டார் இருக்கிறது. பூராவையும் உங்கள் ஏஜென்டுகளாக வைத்துக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** உறுப்பினர் அவர்கள் சொல்வது எனக்குச் சரியாகக் காதில் விழவில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் என்று துவங்கியிருக்கிறோம். இந்திய அரசால் நடத்தப்படும் ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவிற்கு இது போட்டி அல்ல. சில பத்திரிகைகளில் பார்த்தேன். மாநில சுயாட்சி கேட்க போட்டியாக அமைக்கப்பட்டுள்ள ஒரு அமைப்பு என்று ஒரு பத்திரிகையில் விஷமத்தனமாக எழுதியிருந்தார்கள். இது அப்படி ஒரு போட்டி அல்ல. நமக்குத் தேவையானவற்றை நாமே வாங்கி வைத்துக்கொண்டு விநியோகம் செய்வது. ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவையும் வாங்கச் சொல்லியிருக்கிறோம். நீங்கள் ஏன் இதில் புகுந்தீர்கள் என்றால் அதற்கு ஒரு சிறிய விளக்கம். தஞ்சை மாவட்டத்தில் ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா வாங்க வேண்டுமென்று சென்றபோது பல சிக்கல்கள் வந்து, வாங்கும்போது பல தொல்லைகள் இருக்கின்றன என்று அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் சொல்கிறார்கள், அப்போது அரசாங்கமே போய் ஏஜென்டுகளை வைத்து வாங்க வேண்டியிருக்கிறது. அப்போது பல குறைபாடுகள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்காக அரசாங்கம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் என்று உத்தியோகஸ்தர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்துச் செய்யலாம் என்று முதல் கட்டத்தைத் துவக்கி வைத்திருக்கிறோம். இதில் வெற்றி காண்போம் என்ற நம்பிக்கை இருக்கிறது. வெற்றி கண்ட பிறகு பரவலாக்குவது என்ற எண்ணம் இருக்கிறதே தவிர ஏதோ குறிப்பிட்ட 52 பேர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதல்ல. பத்திரிகையில் பார்த்தேன். ஒரு தலைவர்



1972 மார்ச் 3] [திரு. ப. உ. சண்முகம்]

பேசியிருப்பதாக. அது பற்றிய விவரம் தெரியாது. என்ன விவரம் என்று சொன்னால் நான் பதில் சொல்வதற்கு உதவியாக இருக்கும்?

மணலி திரு. சி. கந்தசாமி: உதவி செய்வதற்காக என்று நான் சொல்லவேயில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** வெளியில் ஒரு தலைவர் அப்படிச் சொன்னதாகத்தான் சொன்னேன்.

மணலி திரு. சி. கந்தசாமி: இந்த 52 ஏஜென்டுகள் தமிழ் நாட்டில் வியாபாரத்தில் நீதி நிலவ பாடுபட்ட வியாபாரிகள் அல்ல.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** யார் நியமித்தார்கள்? என்ன ஏஜென்டுகள் என்று புரியவில்லை.

மணலி திரு. சி. கந்தசாமி: கொள்முதல் ஏஜென்ட்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தமிழ்நாடு முழுவதிலும் நமக்கு ஏஜென்ட்கள் இருக்கிறார்கள். ஏஜென்ட்கள் என்று சொன்னால் வாங்கி வைத்து, அரசாங்கக் கணக்கில் இருப்பில் வைத்துக்கொள்ள ஏற்கனவே இருந்தது. 52 வியாபாரிகளை சேர்க்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. அப்படிப்பட்ட எண்ணம் கிடையாது. அவர்கள் சொல்வது ஹல்லிங் ஏஜென்ட்ஸ் என்று கருதுகிறேன். ஹல்லிங் ஏஜென்ட்களை வைத்திருக்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பத்தாண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டிருந்த கூலியை, அதைக் கூலியை மாற்றியமைக்க வேண்டுமென்று மில் முதலாளிகள் எல்லாம் அரசாங்கத்தைக் கேட்டார்கள். முதல் அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று சொல்லி அதைப் பற்றி அரசாங்கம் புதிதாக இப்போது மாற்றியமைத்து ஒரு புதிய விகிதாச்சாரத்தை அறிவித்திருக்கிறோம். குறிப்பிட்ட 52 பேர்கள் மட்டுமல்ல, யார் வேண்டுமானாலும் ஹல்லிங் ஏஜென்ட்களாக வந்தால் அரசாங்கம் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளும். ஏற்கனவே கொடுக்க வேண்டிய பாக்கியை அரசாங்கத்திற்கு கொடுத்து விட்டிருக்க வேண்டும். பாக்கியை வைத்துக் கொண்டு, நெல்லைத்

[திரு. ப. உ. சண்முகம்] [1972 மார்ச் 3

தவறாக விற்றிருந்தால் அப்படிப்பட்டவர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள் என்ற ஒரே ஒரு விதி மட்டும் இருக்கிறதே தவிர அதற்குரிய டெப்பாஸிட்டைக் கட்டினால் யார் வேண்டுமானாலும் ஏஜெண்டாக வரலாம். அதற்கு எந்தவிதமான தடையும் விதிக்கவில்லை அரசாங்கம்.

மணலி திரு. சி. கந்தசாமி: ஏன் தமிழ்நாடு கோவாப்பரேட்டிவ் செக்டார். அந்த ஸ்தாபனங்கள் அவர்கள் விஸ்தாரமாக இன்றைய தினம் கட்டிடத் துறையைக் கட்டிக்கொண்டு போவதில் அர்த்தம் இருக்கிறது. அவர்களிடமே இதை விட்டுவிடுவதில் என்ன ஆட்சேபனை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பொருளை வாங்கி சேமித்து வைக்க இந்த முறையை வைத்திருக்கின்றோமே தவிர வேறு அல்ல. இந்த ஏஜெண்ட்களுக்கும் இந்தக் கார்ப்பரேஷனுக்கும் சம்பந்தம்கூட இல்லை. இது தனி. கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகள் அவர்களிடம் இருக்கின்றன. விநியோகிக்க அதைப் பயன்படுத்தலாமே தவிர வாங்கி வைக்க ஒரு கார்ப்பரேஷன் என்று வைத்திருக்கிறோம். உணவு இலாகாவின் கீழ் அந்தக் கார்ப்பரேஷன் நடப்பது சரியா இல்லை என்று பிற்பாடு உறுப்பினர் அவர்கள் குற்றஞ்சாட்டி சொன்னால், முதல் அமைச்சர் அவர்கள் விரும்பினால் அதை மாற்றலாம். இப்போது கொடுப்பதற்கு இல்லை.

மணலி திரு. சி. கந்தசாமி: இந்த அமைச்சரவைப் பெருமைப் படுத்தக்கூடிய ஆளாக இருப்பது மாண்புமிகு திரு. சண்முகம் அவர்கள்தான். விலைவாசியைக் கட்டுப்படுத்துவதில் அவர்கள் வெற்றி பெற்று விட்டால் அது அவர்கள் இன்றுள்ள ஆட்சிக்கு செய்யும் மாபெரும் உதவியாகும். முக்கிய பண்டங்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதில் அவர்கள் வெற்றி பெற்று விட்டால் இந்த மந்திரிசபைக்கு, இந்த ஆட்சிக்கு. இந்தக் கட்சிக்கு அவர் சேவை மாதிரி வேறு யாருடைய சேவையும் இருக்க முடியாது என்றளவில்தான் இந்தப் பிரச்சினையை நான் பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பெரியவர் அவர்கள் நல்ல எண்ணத்தோடுதான் பார்த்துக் கூறியிருப்பார்கள் என்ற எண்ணத்தில் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதில் வெற்றி



1972 மார்ச் 3] [திரு. ப. உ. சண்முகம்]

பெற முயற்சிக்கிறோம். இந்த ஹல்லிங் ஏஜென்ட்களுக்கும் கார்ப்பரேஷனுக்கும் சம்பந்தம் இல்லை. தஞ்சை மாவட்டத்தில் உள்ள மாடர்ன் ரைஸ் மில்லை எடுத்து இந்தக் கார்ப்பரேஷனை வைத்து அறைக்கலாமா என்றுகூட பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. இந்த ஏஜென்ட்களுக்கும் கார்ப்பரேஷனுக்கும் சம்பந்தம் இல்லை. நெல் வாங்க ஏற்பாடு செய்திருக்கிறோம். மற்றப் பொருள்களை கால வேகத்தில் வாங்கி விலைவாசியைக் கட்டுப்படுத்த முயற்சி எடுத்துக் கொள்வோம். இதில் உறுப்பினர்களின் ஒத்துழைப்பு இருக்கும் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம்.

மணலி திரு. சி. கந்தசாமி: பல ராட்சஸ மில்கள் இருக்கின்றன. ட்ரையர்ஸ் இருக்கின்றன. தமிழ்நாட்டின் பணம் இன்று விரயமாகிறது. எப்படி அந்தக் கார்ப்பரேஷனும் இந்தக் கார்ப்பரேஷனும் ஒன்று இணைந்து செயல்படப் போகிறது என்று கேட்கிறேன். எங்கள் தாலுகாவில் மூன்று ட்ரையர்ஸ் இருக்கின்றன. ஒரு கோடி ரூபாய் பெறும். திருவாரூரில் ஒரு ராட்சஸ மில் இருக்கிறது. பல கோடி ரூபாய் பெறும். நான் குறைபாடு சொல்வதற்காகச் சொல்லவில்லை. எனக்கு, கொழுக்கட்டைதான் வேகவேண்டும்.

நவீன முறைகளைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டும். ஆனால் சில விஷயங்களை அனுபவ வாயிலாகப் பார்க்க வேண்டும். ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிப்பது என்பது நம் நாட்டிற்குப் பொருந்தாது. ஒரு இடத்தில் நாற்று விடுவார்கள், ஒரு இடத்தில் நட்டுக் கொண்டிருப்பார்கள், ஒரு இடத்தில் அறுவடை செய்துகொண்டிருப்பார்கள், இப்படிப் பல்வேறு நிலைகளில் இருக்கக்கூடிய நிலை இருப்பதினால் ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிப்பது சரியல்ல. அதைப் பல விவசாயிகள் வெறுக்கிறார்கள். பவர் ஸ்ப்ரேயர்ஸை அதிகப்படுத்தி ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிற்கும் நாலைந்து வழங்கலாம். அவற்றை ரிப்பேர் செய்வதற்கு கூட்டுறவுத் துறையில் ஏற்பாடு செய்யலாம். இப்படியெல்லாம் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

[மணலி திரு. சி. கந்தசாமி] [1972 மார்ச் 3

அடுத்தபடியாக, வாட்டர் டிஸ்ப்யூட்ஸ். விஸ்தாரமாக இரிகேஷன் பெஸிலிட்டீஸ் கொண்டுவர கங்கை—காவேரி இணைப்பு எல்லாம் வேண்டுமென்று கூறுகிறார்கள். அப்படிக் கூறுகிறார்களே தவிர, மைசூர் தமிழ் நாடு இணைப்பிற்கே சங்கடமாக இருக்கிறது. யதார்த்தத்தைப் ஃபேஸ் செய்யும் பிரச்சினை. இதில் மத்திய சர்க்காரை எதிர்க்க வேண்டுமே தவிர மைசூர் அரசு மீது கோபம் இல்லை. திருமதி இந்திரா காந்தி அவர்கள் அரசியலை அடிப்படையாக வைத்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க மறுக்கிறார்கள் அல்லது ஒத்திப் போடுகிறார்கள் என்றால் பாதிக்கப்படுவது நாம். இதில் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து போராடலாம். அதற்கு நாங்கள் தயார். இதில் ஒரு நிலையை எடுங்கள். அப்படியில்லையென்றால் தஞ்சாவூர் ஜில்லா பாதிக்கப் படும். அவர்கள் அணைக்கட்டுக்களைக் கட்டியாகிவிட்டது என்றால் பின் நாம் என்ன சொல்வது? இந்த விஷயத்தில் ஒரு அரசியல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான விண்ணப்பம், சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனால் தெரியும், ஹைகோர்ட்டுக்குப் போனால் தெரியும் என்றில்லாது எல்லாக் கட்சிகளும் சேர்ந்துகொண்டு சொல்லிவிட வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் நடவடிக்கைகள் எடுப்போம் என்று சொன்னால் தான் பதில் வரும்.

அடுத்தபடியாக, டெயில் எண்டுகளில் உள்ள வடிகால்களைச் செப்பனிட வேண்டும். தண்ணீர் கடலில் சென்று வீணாகாமல் பம்பிங் ஸ்கீம் மூலம் தண்ணீரைப் பயன்படுத்தினால் இன்னும் அதிகப்படியாக பத்து லட்சம் டன் உணவு தானியங்களை நாம் உற்பத்தி செய்ய முடியும்.

அடுத்தபடியாக கல்வித் திட்டம் சம்பந்தமாகச் சொல்ல விரும்புகிறேன். கல்விக்காகத் திட்டத்திட்ட ரூ. 89 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். இது மிகப்பெரிய சாதனை. தமிழ் நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு, தமிழ் நாட்டு மக்களின் பகுத்தறிவு வளர்ச்சிக்கு அவை எந்த அளவிற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது, எந்த அளவுக்கு கட்சிக் களங்களாகக் கல்லூரிகள் மாற்றப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கிற நேரத்தில், கல்வியைச் சீரமைப்பதற்கு மிக யதார்த்தமாக எல்லோருடைய அபிப்பிராயங்களையும் மாண்புமிகு நாவலர் அவர்கள் கேட்டு,



1972 மார்ச் 3] [மணலி திரு. சி. கந்தசாமி]

அதுபற்றி ஆலோசித்து சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பி.ஏ., பி.டி., படித்த வாத்தியார்கள் இப்போது உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இதையெல்லாம் யோசனை செய்யவேண்டும். இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் இந்த 89 கோடி ரூபாய் பணம் நாட்டிலே கல்வி வளர்வதற்குச் சரியான முறையில் உபயோகிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய சீர்திருத்தங்களைப்பற்றி ரொம்பவும் மனதார, உளப்பூர்வமாக வரவேற்று வாழ்த்துகிறேன். அதிலே ஒன்றும் சந்தேகமில்லை. அது தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு, உங்கள் ஆட்சியின் வளர்ச்சிக்கு கட்சியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவப் போகிறது. இப்போது கொண்டு வரப்போகும் ரிபார்ம்ஸ் காரணமாக வரப்போகிற காலத்தில் விவசாயிகளின் வாங்கும் சக்தி, கலாசாரம், பண்பாடு வளர்ச்சியடையப் போகிறது. குறிப்பாக, இப்போது 15 ஏக்கர் என்று வைத்து இருக்கிறீர்கள். பேமிலிக்கு 60-ஐ 40 ஆக்கி இருக்கிறீர்கள். அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏற்கெனவே . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏற்கெனவே நாம் போட்ட சட்டத்தில் 5 பேர் கொண்டது ஒரு குடும்பம், ஒரு ஆளுக்கு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைத்துப் பார்த்தால் 75 ஏக்கர் ஒரு குடும்பத்திற்கு இருக்கலாம். அதை அதிக பட்சம் 60 ஏக்கர் என்று வைத்து இருந்தோம். அந்த அதிக பட்சம் 60 ஏக்கர் என்று இருந்ததை இப்போது 40 என்று குறைத்து இருக்கிறோம்.

மணலி திரு. சி. கந்தசாமி: விளக்கத்திற்கு நன்றி. எங்களுக்குத் தெரியும், நாங்கள் திருப்தியடையாத ஜென்மங்கள். இப்போது 40 என்று குறைத்து இருப்பதை, 25 என்று குறைத்து கொண்டு வர வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். டிரஸ்ட் சம்பந்தமாக முன்பே ஒரு புரட்சிகரமான மாறுதலை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று ஒப்புக் கொள்கிறேன். அது பெரிய அளவிற்குப் பயனளித்து இருக்கிறது. பல லட்சக் கணக்கான விவசாயிகள் உங்களைப் பாராட்டப் போகிறார்கள். இது மிகவும் சமதர்ம சமுதாயத்தை அமைக்க வழி வகுக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தவறான பாதையில் இழுத்து விடுகிறார்.

திரு. மணலி சி. கந்தசாமி: சும்மா இரு அம்மா!

அடுத்தபடியாக பாக்கி கட்டும்படியாக இருக்கிற குடியானவர்களுக்கு அபயம் அளிக்கின்ற வகையில், இந்த நடப்புப் பசலிக்கு அவர்கள் நில உடைமையாளர்களுக்குத் தரவேண்டிய குத்தகையை பாக்கியின்றி தந்திருப்பார்களானால், அவர்கள் செலுத்த வேண்டிய பழைய குத்தகை நிலுவை அனைத்தும் ரத்து செய்யப்படும் என்று சொல்லியிருப்பது உண்மையிலேயே மிகவும் வரவேற்க வேண்டியதொன்றாகும். பல்லாயிரக்கணக்கான குடியானவர்கள் இன்றைய தினம் இதனால் பலனடைந்து விடுவார்கள். அவர்கள் வாழ்வில் புத்துணர்ச்சி ஏற்பட இருக்கிறது. இந்தப் பிரச்சினையின் நிலைமையை உணர்ந்து இந்த முடிவு எடுத்ததற்கு என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது டெட் ரிலீப் சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள். 1938-ம் ஆண்டு விவசாய நிவாரணச் சட்டத்தின் அடிப்படையில் கொண்டு வந்திருப்பதை வரவேற்கிறேன். ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் என்னென்னவோ செய்தார்கள். அவர் பல்வேறு விஷயங்கள் செய்திருந்தாலும், ஒரு நல்லது செய்திருக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் இன்னும் பலபேர் அவர் போட்டோவை மாட்டிக்கொண்டு மரியாதை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தச் சட்டம் கொண்டு வந்ததால்தான் அந்த விவசாயிகள் இன்று பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லக்கூடிய அடிப்படையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே, இந்தச் சட்டத்தையும் நல்ல முறையில் உருவாக்கிக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக நான் கொடுக்கும் வேண்டுகோள். தயவு செய்து நிர்வாகத்தில் தலையிடாதீர்கள். நிர்வாகத்தில் தலையீடு என்று நான் சொல்கிறபோது, அதை நிரூபிக்க முடியுமா என்று கேட்காதீர்கள். அப்படி வேண்டுமென்று சொன்னால், ஒவ்வொரு மந்திரியிடத்திலும் போய் தனியாகப் பேச வேண்டியிருக்கும். இங்கே அதைத் தெரிவிக்க நான் விரும்பவில்லை. உங்கள் கட்சி,





உங்கள் ஆட்சி நல்ல முறையில் இருக்கிறது என்று நான் சொல்கிறேன். நிர்வாகத்தில் தலையீட்டைக் குறைத்துக் கொண்டால், இன்னும் நல்ல முறையில் ஆட்சி நடக்கும், மக்களுடைய பேராதரவு கிட்டும். உங்களில் அரசியல் பண்பாடு கொண்டவர்கள், நல்லவர்கள் இருக்கிறார்கள். ஆனால் சிலர் குறுகிய நோக்கோடு,—இன்றையதினம் நீங்கள் ஆட்சியில் இருக்கிறீர்கள்—ஆகவே, அதைப் பயன்படுத்திக் கொள்ள முற்படுகிறார்கள். அப்படிச் சிலர் இருக்கிறார்கள் என்பதை மனதாரப் புரிந்து கொண்டு, உங்களுடைய தலைமை அதைத் திருத்தியமைத்து, எந்தெந்த விஷயத்தில் சரியான பாதையில் சென்றால், நம்முடைய காமராஜர் அவர்களாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, இன்றைக்கு ஏற்பட்டு இருக்கும் இந்த ஆட்சியை யாரும் கவிழ்க்க முடியாது, எப்போதும் நிலைத்து இருக்கும் என்று என் முதற்கருத்தைக் கூறிக்கொண்டு, சபாநாயகர் அவர்களே இவ்வளவு நேரம் பொறுமையாக இருந்து என் பேச்சைக் கேட்டதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மார்ச்சு திங்கள் முதலாம் நாள் இந்த மாமன்றம் வரலாற்றிலே சிறப்பான இடத்தைப் பெற்று இருக்கிறது என்பதை யாரும் மறுத்திட இயலாது. நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நாட்டிலே வாழ்கின்ற ஏழைகள், விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளிகள் ஆகியவர்கள் அத்தனைபேரும் பாராட்டத்தக்க அளவுக்கும், நமது மாண்புமிகு பெரியவர் மணலி அவர்கள்கூட பாராட்டக்கூடிய அளவுக்கும், இங்கே நல்லதொரு திட்டத்தை, வரவு செலவுத் திட்டத்தை, மீதம் கொண்ட வரவு செலவுத் திட்டத்தை இங்கே சமர்ப்பித்து இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நாம் அத்தனைபேரும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கும்போதும், நாம் படிக்கும்போதும், நாட்டு மக்களுக்கு நல்லது செய்கின்ற நல்ல அமைச்சர்கள் இருக்கின்ற இந்த மாமன்றத்திலே வீற்றிருக்கிறோம் என்ற பெருமையும் நமக்கு ஏற்படுகிறது.

[திரு. கு. காமாட்சி] [1972 மார்ச் 3

இந்த வரவு செலவுத் திட்டம் இப்படி இருக்கும் என்று நினைத்து இருந்தால், நமது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் கூட வெளி நடப்பு செய்வதை ஒத்தி வைத்து இருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். இங்கே நமது மணலி அவர்கள் மிக அருமையாகப் பாராட்டினார்கள். மிகப் பெருமைப்படத்தக்க அளவுக்கு நமக்கெல்லாம் அறிவுரைகூடச் சொன்னார்கள் என்று நான் கருதுவேன். நான் இன்னும் கூட அவர்களைக் கேட்டுக் கொள்வேன். அவர்கள், அவர்களுடைய கட்சியிலே இருக்கும் தலைவருக்கு ஆசிரியராக மாறவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், மாண்புமிகு மணலி அவர்கள் மிக அருமையாகப் பாராட்டினார்கள், ஒவ்வொரு அங்கமாக எடுத்து வைத்து இங்கே பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில், வெளியே இருக்கிற கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் இது ஒரு ஏமாற்றமான பட்ஜெட் என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்ல, இது ஒரு மொழிக் கவர்ச்சியான பட்ஜெட் என்று சொல்கிறார்கள். இதிலே பாராட்டக்கூடிய அளவுக்கு எதுவுமே இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஆசிரியராக இருந்து— எங்களுக்கு அறிவுரை பகர்ந்து இருக்கும் மணலி அவர்களே— அங்கேயும் அறிவுரை பகரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மிகச் சிறந்த முறையில் நமது முதல்வர் அவர்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தை இங்கே சமர்ப்பித்து இருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் நிவாரணச் சட்டம், சாகுபடியாளர்களுக்குக் குத்தகை பாக்கி ரத்து செய்வதற்கான வழி, அறக் கட்டளை நிலங்களை எடுத்துக் கொள்கின்ற முயற்சி ஆகியவற்றைக் குறித்து இந்த வரவு-செலவுத் திட்டத்தை வாசிக்கும்போது நமக்கேற்பட்ட உணர்வைவிட அவர்களுக்கு இருந்திருக்கக் கூடும் என்று நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த ஐந்தாண்டுக் காலத்தில் புரிந்த சாதனைகளை, தமிழ்நாடு என்று ஆனதிலிருந்து தியாகிகளுக்கு மானியம் கொடுப்பது வரையில், நன்றாக விளங்கும் வகையில் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கும் பாங்கினை யாரும் மறந்திருக்க முடியாது. வேளாண்மையில் செய்த சாதனைகளையும், செய்யவிருக்கிற



1972 மார்ச் 3] [திரு. கு. காமாட்சி]

சாதனைகளையும் இந்த நாடு அறியும். 59 லட்சம் ஏக்கராவாக இருந்த விளைச்சல் நிலம் இன்றைக்கு, 72-73-ல் 66 லட்சமாக மாறியிருக்கிறது என்பதை வேளாங்குடி மக்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதேபோல், பயிறு வகையில் 11 லட்சம் ஏக்கராவாக இருந்தது, இன்றைக்கு 14 லட்சம் ஏக்கராவாக உயர்ந்திருக்கிறது. இந்த வகையில் வேளாண்மைக்கு ஆதரவு அளித்து, போதிய அளவில் புதிய முறைகளையும், கருவிகளையும், விஞ்ஞான முறைகளையும் விவசாயிகளுக்குக் கிடைக்கத்தக்க ஏற்பாடுகளை செய்திருக்கிறது. கடன் வசதி உழவர் பெரு மக்களுக்கு நிறையக் கிடைக்கும் அளவுக்கு இந்தத் திட்டத்தில் இடமிருக்கிறது. கடன் வசதியை குத்தகைதாரர்களுக்கும் கிடைக்கும் அளவில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், கிணறு வெட்ட, இன்னும் வேறு வேறு காரியங்களைச் செய்ய, நில உடைமைக்காரர்களுடைய அனுமதியின்றி இவர்கள் எதும் செய்ய முடியவில்லை. அவர்களுடைய அனுமதி பெற வேண்டும்; அதன் பிறகே கடன் பெற முடியும். நீண்ட காலக் கடன்கள் குத்தகைதாரர்களுக்கும் கிடைக்கும் அளவில் இந்தத் திட்டத்திலே வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கங்கை—காவிரி இணைப்புச் செய்வதில், எத்தகைய அக்கறை கொண்டு இருக்கிறார்கள் என்பதையும். இந்திய நாட்டின் ஒற்றுமையையும் மனதில் வைத்து, நம் முதல்வர் அவர்கள் அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

பால் வழங்கு திட்டம் சம்பந்தப்பட்ட வரையில், மாதவரத்தில் அதிகமாக வழங்கினாலும், அது போதாது என்று மற்றொரு திட்டம் 55 லட்சம் செலவில் துவங்க இருக்கிறது. இதைப் பார்க்கும்போது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது.

கிராமங்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதில் சீரோடும் சிறப்போடும் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது, இதைப் பார்க்கும்போது மகிழாமல் இருக்க முடியாது. ஒவ்வொரு கிராமமும் ஒரு நகரமாக வேண்டும், அப்படி மாறும் என்று நான் கடந்த கூட்டத் தொடரில் சொன்னேன். அந்த நிலை வருவதை நாம் இன்று பார்க்கிறோம். எல்லாக் கிராமங்களிலும் மின் ஒளி

இருக்கிறது, குடி தண்ணீர் வசதியும் ஏற்படும் நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன, இணைப்புச் சாலைகளை எப்படியும் கிராமங்களுக்கு அமைத்தே தீருவோம் என்ற வகையில் அப்படிப் பட்ட திட்டத்தின் வாயிலாக 1,500 மக்களுக்கு மேற்கொண்ட ஒவ்வொரு கிராமமும் முக்கிய சாலையில் இணைக்கப்பட வேண்டும், சிறு கிராமங்கள் அதிலே இணைக்கப்பட வேண்டும் என்கிற திட்டம் அருமையான திட்டம் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுக்காக ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப் படும் மருந்தகங்களை அரசே ஏற்று நடத்துவதற்கான நல்லதொரு திட்டத்தை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பார்க்கிறோம். அதற்கு முன்னோடியாக, 45 மருந்தகங்களை முதல் கட்டமாக ஏற்று நடத்த இருப்பதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கல்விக்காக, மணலி அவர்கள் பெருமைப்படுகிற அளவில் ரூ. 90 கோடி செலவழிக்கிறோம். வெளி நாடுகளிலிருக்கும் அறிஞர் பெருமக்களை அழைத்து வந்து, அவர்களுடைய அறிவுத்திறனை நாட்டிற்குப் பயன்படுத்தும் அளவில் ஒரு திட்டத்தை முதல்வர் ஆராய்ந்து கையாண்டிருக்கிறார்கள் என்பதையும் பார்க்கும் போது உண்மையிலே பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல், யாருமே செய்தறியாத, செய்ய முடியாத அளவில், பிற்பட்ட சமுதாயத்திற்கு ரூ. 91 லட்சம் செலவழிக்கிறார்கள் என்ற நிலை மாறி, இன்றைக்கு 72—73-ல் ரூ. 4,68,00,000 அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைக் கண்டும் நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

என்.ஜி.ஓ.-க்களுக்கு வீட்டு வாடகை அதிகப்படுத்தியிருக்கிறது;

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம்;

இப்படி எல்லாவகையிலும் சிறந்த நல்லதொரு பட்ஜெட்டை இந்த மன்றத்திலே சமர்ப்பித்திருக்கிறதை நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.



எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னார்கள், ரூ. 202 கோடிக்கு வரி என்று. வரி விதித்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், யாரிடத்திலிருந்து விதித்திருக்கிறது, யாரிடத்தி லிருந்து வரி வாங்கப்படுகிறது என்பதை அவர்கள் சொல்லவில்லை. வரியை எடுத்துவிட வேண்டும் என்றால், எந்த வரியை என்பதையும் சொல்லவில்லை. நகர்ப்புறத்தில் உள்ள வீட்டுக்கு போட்டிருக்கும் வரியை எடுக்கலாமா ? பஸ் முதலாளிகளுக்குப் போட்டிருக்கும் வரியை எடுக்கச் சொல்கிறார்களா ? புரியவில்லை. சரியான வகையில் அவர்கள் சொல்லவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சிபாரிசு செய்கிறார்கள், கழகக்காரர்கள் சிபாரிசு இல்லாமல் எதுவுமே நடக்காது என்கிற குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். நான் கேட்கிறேன். உங்கள் காலத்தில், உங்களவர்கள் அரசு நடத்திய போது நாங்கள் சொல்லுவதை என்றைக்காவது ஏற்று இருக்கிறதா உங்கள் அரசு ? அதையும் நிதானித்துப் பார்க்கவேண்டும். நாங்கள் விவசாயிகள். அறுவடை செய்து பழக்கம், வயலிலே. மனித அறுவடை செய்வது பற்றி ஏதோ நம் அருமை நண்பர் சுவாமிதாஸ் குறிப்பிட்டார்கள். மனித அறுவடை செய்கிறோம் என்றார்கள். அது என்ன என்றே புரியவில்லை. ஒரு வேளை அவர்களுக்குப் பழக்கமானது என்கிற காரணத்தால் சொன்னார்களோ என்னவோ ? மனித அறுவடை என்ன என்பதை நண்பர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அளவில் நல்ல முறையில், மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்ததோடு அல்லாமல், வேதனையோடும் சொல்லியிருக்கிறார்கள், இவ்வளவு நல்ல முறையில் பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறேன், உருமல் களும், ஏளனப் பேச்சுக்களும் வேண்டாம் என்றும் சொன்னார்கள். இந்த அவையில், தலைவர் அவர்களே, உங்கள் மூலம் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட உருமல்களும், எகத்தாளங்களும், கிண்டலும், கேலிப் பேச்சும் நமக்கொன்றும் புதுமையானதல்ல. நமக்கு மிகப் பழக்கமானதுதான். யார் யாரோ, எப்படி எப்படியோ பேசியதற்கெல்லாம் பிறகுதான் நாம் இங்கே வந்த உட்கார்ந்து கொண்டிருக்கிறோம், வேறல்ல

என்பதைத் தங்கள் மூலம் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். 57-க்கு முன்பு உறுமினார்கள். 15 பேர்களாக வந்து உட்கார்ந்தோம்; அதன் பிறகு 62-ல் உறுமினார்கள், 50 பேர்களாக வந்தோம். அதற்கும் பிறகும் அன்றைக்கு 138 பேர்களாக இருந்தோம். அதன் பிறகும் உறுமல்களுக்கும் பொருமல்களுக்கும் இடையிலே இன்றைக்கு 183 பேர்களாக உட்கார்ந்து கொண்டிருக்கிறோம் இந்தச் சட்டமன்றத்திலே என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். முதுகளத்தூர் சிங்கம் முத்துராமலிங்கத் தேவருடைய உறுமலைவிடவா இவர்கள் உறுமல்? தலையையே கேட்டாரே. அந்தச் சிங்கத்தின் குட்டிகளெல்லாம் இன்றைக்கு நம்முடைய பக்கத்தில் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தாராளமாக எந்த நடவடிக்கையானாலும், தைரியமாக எடுங்கள்; உரிமைக்குக் குரல் கொடுங்கள், உறவுக்குக் கை கொடுங்கள், உங்களுக்காக உயிரைக் கொடுக்க ஆயிரம் ஆயிரம் பேர்கள் தயாராக இருக்கிறோம் என்பதை இந்தச் சட்டமன்றத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்னால் பார்ப்பதோடு, பக்கத்திலே பாருங்கள், பின்னாலே பாருங்கள், உங்கள் சொல்லை நிறைவேற்ற லட்சம் லட்சம் பேர்கள் காத்திருக்கிறார்கள் தமிழகத்தில் என்பதை உங்கள் மூலம் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் முதல்வர் பாதையில் இன்றும் என்றும் தொடர்ந்து செல்லக் காத்திருக்கிறோம். தொடர்ந்து உங்கள் வழியில் செல்லுங்கள் என்று உற்சாகம் ஊட்டக் காத்திருக்கிறோம் என்று சொல்லி, என்னுடைய தொகுதி பற்றி சில வார்த்தைகள் சொல்ல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று நேரம் ஆகிவிட்டது. நாளைக்குத் தொடர்ந்து பேசுங்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பிறகு பேரவை ஒத்திவைக்கப்பட்டது.





## 6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

39. Notification issued with G.O. R. No. 2263, Revenue, dated the 15th December 1971, in regard to exemption from liability to entertainments tax to the benefit film shows held in aid of National Defence Fund in the City of Madras and in the districts on 19th December 1971. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

40. Notification issued with Roc. No. 10296/71E-5, dated the 17th April 1971, in regard to extension of section 286 and relevant provisions relating to vital statistics under the Tamil Nadu District Municipalities Act, 1920, within the jurisdiction of the Avanashi Town Panchayat of Coimbatore district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

### B. *Reports, notifications and other papers.*

* 43. Annual Plan 1972–73 (Narrative Notes on Programmes) (English and Tamil).

* 44. An Economic Classification of the Tamil Nadu Government Budgetary Transactions, 1972–73.

* 45. Detailed Budget Estimates of Revenue for the year 1972-73.

* 46. New Schemes (Tamil).

* 47. Budget Memorandum 1972–73 (English and Tamil).

* 48. Notice of Demands for Grants during the year 1972–73 (English and Tamil).

§ 49. Appendices to the Budget Speech (English and Tamil).

* 50. Annual Financial Statement (Budget) of the Government of Tamil Nadu (English and Tamil).

§ 51. The Budget Speech of the Hon. Chief Minister (English and Tamil).

52. Report of the Panchayat Education Finance Enquiry Committee in pursuance of the Assurance No. 29 of 1971.

---

* Laid on the Table of the House on 1st March 1972.

§ Circulated among the Members on 1st March 1972.

# தமிழ்நாடு சட்டப் பேரவை

---

**சனிக்கிழமை, 1972 மார்ச் 4.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 296, 297 ஆகிய இரண்டும் இணைத்து எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

### விளையாட்டு அரங்குகள்

*** 296 வினா—திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் விளையாட்டு அரங்குகள் ( Stadium ) உள்ளன?

(இ) எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் விளையாட்டு அரங்குகள் கட்டுவதற்கான திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) சென்னை, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் விளையாட்டு அரங்குகள் உள்ளன.

(இ) ஆம்.

*** 297 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டங்கள்தோறும் விளையாட்டுத் திடல்கள் அமைத்திட அரசு ஏதேனும் உதவி புரிந்து வருகின்றதா?

(இ) ஆம் எனில், விபரம் யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு மாவட்ட விளையாட்டுக் குழுவுக்கும் விளையாட்டு அரங்கு கட்ட மானியமாக அரசு ரூபாய் ஒரு லட்சம் வரை உதவி புரிந்து வருகிறது.

**திரு. மா. பா. சாரதி** : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள இந்த விளையாட்டு அரங்கம் காவல்துறையினருக்குத்தான் பயன்படுகிறதே தவிர, பொது மக்களுக்கு அவ்வளவாகப் பயன்படுவதில்லை. ஆகையால் காவல்துறையினருக்கென்று தனியாக ஓர் இடத்தை ஒதுக்கிவைத்து, இந்த விளையாட்டு அரங்கு பொது மக்களுக்குச் சரியானபடி பயன்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், வேலூரில் காவல் துறையினருக்கென்று தனியாக விளையாட்டு மைதானம் இருக்கிறது. ஆனால், மாவட்ட விளையாட்டுக் குழுவினர் சார்பாக வேலூரில் விளையாட்டு அரங்கு கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஒரு லட்ச ரூபாய் தரப்பட்டிருக்கிறது. எந்தவிதமாக அது பொது மக்களுக்குப் பயன்படுவதாக அமையவேண்டும் என்பது குறித்து விளையாட்டுக் குழுவினர் தீர்மானம் நிறைவேற்றி மத்திய குழுவிற்கு அனுப்பினால் அதற்கு மேல் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. மா பா. சாரதி** : வேலூரில் காவல் துறையினருக்கென்று தனியாக விளையாட்டு அரங்கம் இருந்தும் அங்கே செல்லாமல், பொது விளையாட்டு அரங்கிலேயே 'பரேட்' நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால் பொது மக்கள் விளையாடுவதற்கு வசதியில்லாமலிருப்பதால், காவல் துறையினருக்குரிய இடத்தில் அவர்களுடைய 'பரேட்' முதலியவற்றை வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்துவிட்டு. பொது விளையாட்டு அரங்கை அவர்கள் விட்டுவிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, விளையாட்டு அரங்கத்தைப் பராமரிக்கிற பணி மாவட்ட விளையாட்டுக் குழுவினருக்கு அமைகிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று அது சரியாக எப்படிப் பயன் படுத்தப்பட வேண்டும் என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பை மாவட்ட விளையாட்டுக் குழுவினர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்





ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் விளையாட்டுக் குழுவிற்குத் தெரிவித்து அவர்கள் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்களானால் அதன்படி மேற்கொண்டு பணிகளை ஆற்ற வாய்ப்பு ஏற்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : நாகர் கோவிலில் இப்பொழுது ஒரு விளையாட்டு அரங்கம் அமைந்திருக்கிறது. அது ஒரு குளத்திற்குள்ளே அமைந்திருக்கிற காரணத்தினால், அதிலிருந்து தண்ணீர் வடிந்து செல்லப் போதிய வசதி இல்லை. இப்பொழுது அரசாங்கம் கொடுத்திருக்கிற பணமும் குறைவாக இருக்கிறது. ஆகையால், தண்ணீர் வடிவதற்கு ஏற்பாடு செய்வதற்கு அதிகமாகப் பணம் ஒதுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, ஒரு விளையாட்டு அரங்கம் கட்ட அரசாங்கத்தின் சார்பாக ஒரு லட்ச ரூபாய் நாம் மானியமாகத் தருகிறோம். மத்திய அரசு ஐம்பதாயிரம் ரூபாய் மானியமாகத் தருகிறார்கள். பிறவற்றை அந்தந்த மாவட்ட விளையாட்டுக் குழுவினர் திரட்டிக்கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவருடைய துணையோடு மாவட்ட விளையாட்டுக் குழுவினர் அதற்கான நிதிகளை ஆங்காங்கு திரட்டிக்கொண்டு, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அவரவர்களுடைய விருப்பத்திற்கேற்ப திட்டங்களை அமைத்துக்கொண்டு விளையாட்டு, அரங்குகள் அமைக்கிறார்கள். நாகர்கோவிலில் அமைக்கப்படும் விளையாட்டு அரங்கிற்கு ரூ. 959.000 செலவில் திட்டமிட்டு அது கிட்டத்தட்ட கட்டி முடிகிற தருவாயில் இருக்கிறது என்ற செய்தி வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று அங்கே தண்ணீர் வடியாமல் இருக்குமானால் அதற்கான தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். ஆகவே, அதுபற்றிய நிலைமை எதுவாக இருந்தாலும் விளையாட்டுக் குழுவினர்தான் மேற்கொண்டு பணியாற்ற வேண்டும். அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அந்தக் குழுவில் உள்ள மற்றவர்களும் சேர்ந்து பணியாற்றித் தக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. என். கிட்டப்பா** : விளையாட்டுத்திடல் அமைப்பதற்கு ஐ.நா. நிறுவனத்திடமிருந்து ஏதாவது நிதி உதவி கிடைக்கிறதா என்பதையும் ஒவ்வொரு நகராட்சிப் பகுதியிலும் இம்மாதிரியான விளையாட்டுத் திடல்களை அமைக்க அரசு ஆலோசிக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே இதற்கு ஐ.நா. விடமிருந்து எந்தவித உதவியும் வரவில்லை. முதலில் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு விளையாட்டு அரங்கம் சிறப்பாகவும் செம்மையாகவும் அமையவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் அந்தப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களிலும் விளையாட்டு அரங்குகள் அமைக்கப்படுகின்றன. அவை அமைக்கப் பட்டதற்குப் பிறகு, நகராட்சிப் பகுதிகளிலும் அமைப்பது பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. இரா. இராமலிங்கம் :** நிதிப் பற்றுக்குறையுள்ள நகர மன்றப் பகுதிகளில் இப்படிப்பட்ட விளையாட்டு அரங்குகள் கட்ட முன்வருமானால் அரசு மானியம் வழங்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இது மத்திய விளையாட்டுக் குழுவினால் ஒருவிதமாக நிதி சேர்க்கப்பட்டு, அந்த விளையாட்டுக் குழுவினர் தான் மாவட்ட விளையாட்டுக் குழுக்களுக்கு நிதி வழங்கி வருகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அமைக்கப்படும் விளையாட்டு அரங்கிற்கு ஒரு லட்ச ரூபாய் தான் நிதி அளிக்கப்படுகின்றது. பல இடங்களில் பத்து லட்சம், பதினொரு லட்சம் ரூபாய்க்கும், கோயம்புத்தூரில் 25 லட்சம் ரூபாய்க்கும் திட்டம் போட்டிருக்கிறார்கள் என்றாலும், 24 லட்சத்தை அவர்கள் தான் திரட்டிக் கொள்ள வேண்டும். அந்த வகையில் மாவட்ட தலைநகரங்களில் விளையாட்டு அரங்குகள் அமைக்கப்படுவதற்கே நிதி கொடுப்பதற்குப் போதுமான வசதி இல்லாமல், ஆண்டொன்றுக்கு இரண்டு மாவட்டங்கள், மூன்று மாவட்டங்கள் என்ற ரீதியில்தான் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, நகர மன்றங்களில் அமைக்க இருக்கின்ற விளையாட்டு அரங்கிற்கு அந்தந்த மாவட்ட விளையாட்டுக் குழு நிதி திரட்டி அவர்களால் ஏதேனும் உதவி செய்ய முடியுமா என்று மாவட்ட விளையாட்டுக் குழுவிற்கு அவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட நகரங்களில் உள்ளவர்களும் குழு அமைத்து நிதி திரட்டி விளையாட்டு அரங்கு அமைத்துக்கொள்ள முயற்சி செய்து கொள்ளலாம்

**திரு. ஏ. எம். இராஜா :** கோவை மாவட்டத்தில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டும் வேலை துவக்கப்பட்டு, ஆனால், என்ன



காரணத்தினாலோ வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த வேலை எப்பொழுது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, எந்த ஆண்டில் முடிக்கப் படும் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கோவை நகரில் விளையாட்டு அரங்கு கட்ட 25 லட்ச ரூபாய்க்குத் திட்டம் போட்டு, அது அரசாங்கத்தின் அனுமதிக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. ஆனால், எட்டு லட்ச ரூபாய் அளவுக்குத் திட்டம் அமைத்து, அந்த அரங்கம் கட்டி முடிக்கப்பட்ட பிறகு, நிதி வசதிகள் ஏற்பட ஏற்பட அதை விரிவுபடுத்திக்கொள்ளலாம என்ற ஆலோசனையை கோவை மாவட்ட விளையாட்டுக் குழுவினருக்கு அரசு தெரிவித்திருக்கிறது. அதற்கு முன்னேற் பாடான சில பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். ஓரளவுக்குத் தொகை திரட்டியிருக்கிறார்கள். முழுவதும் திரட்டிவிட முடியும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியிருக்கிறார் என்றாலும், அவ்வளவு பெருந்தொகையைத் திரட்ட இப்பொழுது முயல வேண்டாம், எட்டு லட்ச ரூபாய் செலவில் கட்டி முடித்து, பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. அதனால், முறைப்படியான காரியங்களை துவங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவார்கள்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** தலைவரவர்களே, அலுவலகங் களில் பணிபுரியும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விசேஷ சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சிறந்த விளையாட்டு வீரர்களை அகில இந்திய அளவிலும், வேறு பல குழுக்களிலும் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படித் தேர்ந் தெடுக்கப்படுவர்களுக்கு உடை வசதிகளும், உபகாரச் சம்பளமும் மாநில, மத்திய விளையாட்டுக் குழுக்களிலிருந்து கொடுக்கப்படு கின்றன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் உள்ள ஸ்டேடியத்தில் பல பகுதிகளி லிருந்து வந்து விளையாடுகிறார்கள். அதனால் அப்படி அங்கு வந்து விளையாடுபவர்களிடமும், அங்கே வேறு பல நிகழ்ச்சிகள் நடத்துகிறவர்களிடமும் ஏதாவது கட்டணம் வசூலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, பொதுமக்களுக்குப் பயன்படும் வகையிலே, எல்லோரும் விளையாடுவதற்கு வசதியாகத்தான் ஸ்டேடியங்கள் அமைக்கப்படுகின்றன. அங்கே கட்டணம் வசூலிக்கத் தொடங்கினால் அங்கு வந்து விளையாடுபவர்களின் எண்ணிக்கைக் குறைந்துபோவது மட்டுமல்லாமல், விளையாட்டின் தரம் கூட குறைந்து போகும் சூழ்நிலை ஏற்படலாம். ஆனால் அகில இந்திய அளவிலும் மற்றும் பெரிய 'மாச்சு'களும் நடத்தப்படும்போது, பொதுமக்களிடமிருந்து ஓரளவு கட்டணம் வசூலித்து, அதை அந்தந்த மாவட்ட விளையாட்டுக் குழுவின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

**திரு. ஆ. கு. சுப்பையா** : தலைவர் அவர்களே, எந்தெந்த மாவட்டங்களில் விளையாட்டு அரங்குகள் கட்டுவதற்கு அரசு உத்தேசித்திருக்கிறது? தஞ்சை மாவட்டத்தில் ஒரு விளையாட்டு அரங்கத்தை நிறுவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, திருச்சி, நீலகிரி, சேலம், மதுரை, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் விளையாட்டு அரங்குகள் கட்டுவதற்கு அரசாங்கம் ஒரு திட்டம் வகுத்துள்ளது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் போதிய இடவசதி கிடைக்காமல் இருப்பதினால் இன்னும் அங்கு விளையாட்டு அரங்கம் கட்டுவது பற்றி முடிவு செய்யப்படவில்லை. ஏற்ற இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், அங்கும் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether there is any proposal to construct a stadium in Dharmapuri district, especially in Hosur taluk where the climatic conditions are congenial and are equal to Bangalore?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரியில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு அந்த மாவட்டக் குழுவினர் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனால் இப்போது விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் இடம் பள்ளிக்கு இடைஞ்சலாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. எனவே வேறு இடத்தை



தேர்ந்தெடுக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்கிடையில் முன்சொன்ன இடத்திலே கட்டலாமா என்பதற்கு பள்ளி இயக்குநரோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். எனவே, எந்த இடத்தில் கட்டலாம் என்று முடிவுசெய்யப்பட்டவுடன் உடனடியாக அதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. நா. வீராசாமி** : தலைவரவர்களே, இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து அமைக்கப்படுகின்ற விளையாட்டு மைதானங்களில் கால் பந்து, ஹாக்கி, கிரிக்கெட் போன்ற விளையாட்டுகள் தான் விளையாடப்படுகின்றன. அங்கே டென்னிஸ் விளையாடுவதற்கும், தமிழகத்தின் தலைசிறந்த விளையாட்டாகிய சடுகுடு விளையாடுவதற்கும் வசதி கிடையாது. இந்த விளையாட்டுகளும் நடைபெறுவதற்கு ஏற்ற வகையில் புதிதாக அமைக்கப்படும் விளையாட்டு அரங்கங்கள் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, பொதுவாக எல்லோரும் கால்பந்தும், ஹாக்கியும், கிரிக்கெட்டும் தான் விளையாடுகிறார்கள். டென்னிஸ் விளையாட்டு மிக உயர்ந்த விளையாட்டு. அதாவது வசதி படைத்தவர்களால் விளையாடப்படும் விளையாட்டு. அதற்கு பெரிய மைதானங்கள் தேவையில்லை. அந்த விளையாட்டுக்காக ஆங்காங்கே கிளப்புகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சடுகுடு விளையாடுவதற்கு ஒரு குறிப்பிட்ட இடம் தான் வேண்டும் என்பதல்ல. எந்த இடத்தில் வேண்டுமானாலும் விளையாடலாம். இந்த விளையாட்டுகளுக்கும் அவ்வப்போது மாச்சுகள் நடத்துகிறார்கள். ஆனால் இந்த விளையாட்டுக்களுக்காக விளையாட்டு அரங்கங்கள் அமைப்பது தேவையானதாகத் தெரியவில்லை.

**திரு. எம். தேவராசன்** : தலைவரவர்களே, விளையாட்டுப் போட்டிகளில் இன்றைய நிலையில் தமிழ்நாட்டு வீரர்கள் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது திறமை குறைந்தவர்களாகத் தெரிகிறார்கள். எனவே, தமிழ்நாட்டு வீரர்களின் திறமையை உயர்த்த தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, பொதுவாக அப்படி சொல்வதற்கில்லை. நமது வீரர்களும் சில

[1972 மார்ச் 4

விளையாட்டுகளில் நல்ல திறமைசாலிகளாகத்தான் இருக்கிறார்கள். இப்போது கிரிக்கெட் விளையாட்டில் சிறந்த வீரராகத் திகழ்கின்ற வெங்கடராகவன் என்பவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்தான். மற்ற விளையாட்டுக்களிலும் திறமையானவர்கள் நமது மாநிலத்தில் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு சில குறிப்பிட்ட விளையாட்டில் திறமைசாலிகள் இருக்கிறார்கள். எல்லா விளையாட்டுக்களிலும் எல்லோரும் திறமையானவராக இருக்க முடியாது. அந்தந்த விளையாட்டில் திறமை மிக்கவர்களுக்கு, அதிலே மேலும் ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் அவர்களுக்கு சில சலுகைகளும், வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட விளையாட்டு வீரர்கள் இந்தியாவிலும், ஆசியாவிலும், உலக அரங்கிலும் சிறந்து விளங்குகிறார்கள். விளையாட்டுத் திறமையை வளர்ப்பதற்காகத்தான் ஆங்காங்கே விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்படுகின்றன.

**திரு. ஏ. சி. நரசிம்மன்** : தலைவரவர்களே, சில தனியார் நிறுவனங்களில், ஸ்டேட் பாங்க் போன்ற நிறுவனங்களில் நல்ல விளையாட்டு வீரர்களுக்கு உயர்ந்த பதவிகள் கொடுத்து ஊக்குவிக்கிறார்கள். அத்தகையத் திட்டம் தமிழக அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆங்காங்குள்ள மாவட்ட விளையாட்டுக் குழுக்களும், மத்திய விளையாட்டுக் குழுவும் செயல்பட்டு வருகின்றன. பள்ளி மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப், சம்பளச் சலுகை முதலியவை கொடுக்கப்படுகின்றன. சில தனியார் நிறுவனங்களிலும், பெரிய பெரிய தொழிற்சாலைகளிலும் பணிபுரியும் விளையாட்டு வீரர்களுக்கு, அதிக வேலை கொடுக்காமல் அவர்கள் ஈடுபடும் விளையாட்டுக்களில் திறமை காட்டும்படி செய்து, சம்பளத்துடன் கூடிய விடுமுறையும் அளித்து, தகுந்த ஊதியமும் கொடுக்கப்படுகிறது. அரசாங்கம் அப்படிப்பட்ட நிறுவனங்களில் தகுந்த வசதி செய்துகொடுக்கும்படி கேட்டுக்கொண்டது. சில பல நிறுவனங்கள் அதை ஏற்று, ஒத்துழைக்கிறார்கள். அரசாங்க அலுவலகங்களில் பணிபுரிபவர்களுக்கு, விளையாட்டுக்குச் செல்லக் கூடிய நாட்களில், பணிபுரிவதாகவே கருதி விடுப்பு அளிக்கப்படுகிறது.



1972 மார்ச் 4]

**திரு. எ. சுவாமிதாஸ்** : தலைவரவர்களே, அந்தந்த மாவட்டங்களில் உள்ள விளையாட்டு அரங்கங்கள் விளையாட்டுக் குழுவின் ஆதிக்கத்தில் உள்ளனவா அல்லது நகர மன்றங்களின் ஆதிக்கத்தில் உள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, விளையாட்டு அரங்கங்கள் மாவட்ட விளையாட்டுக்குழுவின் பராமரிப்பில் இருக்கின்றன. அந்தக் குழுவில் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மாவட்டக் குழுவின் தலைவர் மத்தியக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார். மத்திய குழு அரசாங்கத்திடம் நிதி பெற்று, மாவட்டக் குழுக்களுக்கு கொடுக்கிறது. மாவட்டக் குழுவின் தேவைகளை வலியுறுத்தினால், அதற்கு வேண்டிய பொறுப்பை மத்தியக் குழு பரிசீலிக்கிறது. ஆக, அரசு உதவி செய்தபோதிலும், பராமரிப்புப் பணியையும், நிர்வகிக்கும் பொறுப்பையும் மாவட்டக் குழுக்களே செய்துவருகின்றன.

**திரு. மா. பா. சாரதி** : தலைவரவர்களே நம்முடைய பழம் பெரும் விளையாட்டுகளாகிய சிலம்பம், குத்துச்சண்டை, மல் யுத்தம் போன்ற வீர விளையாட்டுகளுக்கும் விளையாட்டு அரங்கங்களில் வசதி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, சில இடங்களில் இம்மாதிரி விளையாட்டுக்களுக்கும் வசதி செய்திருக்கிறார்கள். ஆனால், அது அந்தந்த மாவட்டக் குழுவின் வசதியையும், இடவசதியையும் பொறுத்தது.

## கிளை நூலகங்கள்

* 298 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிளை நூலகங்களில் உள்ள சந்தாதாரர்கள் முக்கியத்துவம் வாய்ந்த நூல்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று படிக்க முடியாமல் நூலகத்திலேயே படிக்க வேண்டுமென அரசு சுற்றறிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்நூல்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று படிக்க ஏற்பாடு செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இப்பொருள், அந்தந்த நூலக ஆணைக்குழுவின் அதிகார வரம்பிற்குள் உள்ளதால், அரசு இதைப்பற்றி சுற்றறிக்கை ஏதும் அனுப்ப உத்தேசம் இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, நடமாடும் நூலகங்கள் எந்தெந்த மாவட்டங்களில் இயங்கி வருகின்றன என்பதையும் அவை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, முழு விபரக் குறிப்பும் இப்போது இல்லை. ஆனால் சென்னை நகரிலும், கோவையிலும் நடமாடும் நூலகங்கள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. வேறு சில மாவட்டங்களிலும் இருக்கின்றன. எல்லா இடங்களிலும் நடமாடும் நூலகங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ஆர். கிருஷ்ணன் :** சேலம் மாவட்டத்தில் இருந்து தர்மபுரி தனி மாவட்டமாகப் பிரிந்த பிறகு இன்னும் அந்த மாவட்டத்திற்கு என்று தனியாக நூலக ஆணைக்குழு செயல்படவில்லை. தர்மபுரிக்கு என்று தனி நூலக ஆணைக்குழுவை உடனடியாக ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சேலம், தர்மபுரி இரண்டும் ஒன்றாக இருந்தபோது ஒரு நூலக ஆணைக்குழு இருந்தது. தர்மபுரி தனி மாவட்டமாக ஆனபிறகு தர்மபுரிக்கென்று ஒரு தனி நூலக ஆணைக்குழு அமைக்கப்படுவதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** இந்தக் கிளை நூலகங்களில் எல்லாம் ஒவ்வொரு ஆண்டும் வெளியான புத்தகங்கள் அனைத்தும் வாங்கப்படவேண்டும் என்கிறபோது அதற்கான நிதிவசதி இல்லை என்பதாக மத்திய ஆணைக்குழு தெரிவிக்கிறது. இந்த நிதி வசதியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு குறைந்தபட்சம் 25 ஆயிரத்திற்கு மேல் வருமானம் உள்ள கோயில்கள் இருக்கும் ஊர்களில் எல்லாம் நூலகங்கள் அமைக்க எதிர்காலத்தில் ஒரு திட்டத்தை அரசாங்கம் தயாரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே இப்போது மாவட்ட நூலகக் குழுக்களுக்கு எல்லாம் போதுமான நிதிவசதி இல்லை என்பது உண்மைதான். நூலகங்களின் எண்ணிக்கை அதிகப்பட்டிருப்பதனால் நிர்வாகச் செலவுகள் அதிகரித்துள்ளன. எல்லாப் புத்தகங்களையும் வாங்க போதுமான நிதிவசதி இல்லை. நிதி வசதியைப் பெருக்கவேண்டும் என்பதற்காக அண்மையில் கொடைக்கானலில் கூடிய நூலக ஆணைக்குழுத் தலைவர்கள் மகாநாட்டில் கூட—இப்போது லைப்ரரி செஸ் என்று 3 பைசா வசூலிக்கப்படுகிறது—அரசாங்கம் 3 பைசா கொடுக்கிறது—இதற்கு மாற்றாக செஸ் 5 பைசா என்று வசூலித்தால் அரசும் ஈட்டுமானியமாக 5 பைசா உயர்த்தும்—ஆகவே 5 பைசா அளவுக்கு செஸ்ஸை உயர்த்தவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். அரசு அதற்கான நடவடிக்கையும் எடுத்து வருகிறது.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் நூலகக் குழுவின் சார்பாக 2 ஆண்டுகாலமாக புதிய நூலகங்கள் திறக்கப்படவேண்டும் என்று தீர்மானம் போட்டு வந்திருக்கிறார்கள். போதுமான நிதிவசதி இல்லை என்ற காரணத்தினால் அது இரண்டாண்டாக ஒத்திவைக்கப்பட்டு வந்திருக்கிறது. கிராம, ஊராட்சிகளில் இடவசதியும்' வேறுபல வசதிகளும் செய்துதர பலர் முன்வந்திருக்கிற காரணத்தினால் இவ்வாண்டாவது வடாற்காடு மாவட்டத்தில் புதிய நூலகங்கள் திறக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நிதிவசதி இல்லாத காரணத்தினால்தான் அந்த முயற்சி ஒத்திவைக்கப்பட்டது. நிதிவசதி பெருகுகிற நேரத்தில் அந்த முயற்சி வெற்றிபெறும்.

**திரு. எஸ். வடிவேல் :** இப்போது நூலகங்கள் நகர்ப்புறங்களில் இருக்கின்றன. அவை கிராம மக்களுக்கும் பயன்படுகிற வகையில் கிராமப்புறங்களிலும் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எல்லா நூலகங்களும் நகர்பபுறங்களிலேயே இருக்கின்றன என்று சொல்வதற்கில்லை. கிராமப்புறங்களிலும் வைக்கப்படுகின்றன. நூலகங்கள் இல்லாத கிராமங்களில் சென்று கொடுத்து—வாங்கி வருகிற வழங்கு நூலகங்களும் வைக்கப்படுகின்றன. இதைத்தவிர இயங்கு நூலகங்கள் என்று அங்கங்கே சென்று வருகிற அமைப்பும் இப்போது இருந்து வருகிறது.

## அகதிகளுக்கு வேலை வாய்ப்புகள்

* 299 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பர்மா, இலங்கையில் இருந்து வந்த தமிழர்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தில் முதல் இடம் அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** வேலை வாய்ப்பு அளிக்கும்போது இம்மாநிலத்துக்கு வரும அகதிகளுக்கு முதல் இடம் அளிப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஏற்கெனவேயுள்ள ஆணைகளின் கீழ், வேலை வாய்ப்பிற்கான முன்னுரிமைப் பட்டியலில் உள்ள 3-வது இனத்தில் இவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இனம் 1-இல் இராணுவப் பணி புரிந்த வேட்பாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, இலங்கை, பர்மாவில் இருந்து வருகிற தமிழர்களுக்கு ஏதாவது நஷ்டஈடு தரப்படுகிறதா ? அந்த நஷ்டஈட்டுத் தொகையைக் கொண்டு அரசாங்கம் புதிய தொழில்களைத் துவக்க முன்வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நஷ்டஈடு கொடுப்பதாக ஒத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது கொடுப்பதகாத் தெரியவில்லை.

**திரு. க. நாகராஜன் :** தலைவர் அவர்களே, 1964 இல் ஏற்பட்ட சிரிமாவோ—சாஸ்திரி ஒப்பந்தத்திற்குப் பின் வந்தவர்களுக்கே அகதிகளுக்கான சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அதற்கு முன் அகதிகளாக வந்தவர்களுக்கும் இந்தச் சலுகை விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அதற்கு முன் வந்தவர்கள் அகதிகளாகக் கருதப்படுவதில்லை. அரசியல் சூழ்நிலை காரணமாக இந்த ஒப்பந்த அடிப்படையில் வருகிறவர்கள் தான் அகதிகளாகக் கருதப்படுகிறார்கள்.

DR. H. V. HANDE : Sir, are the Government aware of the fact that there are a number of repatriates from Ceylon who have been rehabilitated in the neighbouring States like the Mysore State





because they are not able to get employment with which they are accustomed, namely, rubber plantations? Recently, when I had been to a place called, Suriliyar, in the Mysore State, I saw 300 families belonging to the Ramanathapuram district who speak mostly Tamil. An officer from the Madras, who belongs to the Central Government went there and told them, "You can go back to Tamil Nadu ". Has this matter been brought to the notice of the Government and whether it is possible for this Government to pull up that officer and also find out whether it is possible, in conjunction with the Central Government, to give employment to those people who are practically on the roads in Suriliyar in the Mysore State?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கிற திட்டமே மத்திய அரசாங்கத்தினுடையதாக நடத்தப்படுகிறது. அவர்கள் வகுத்துத் தருகிற அடிப்படையில் தான் மாநில அரசாங்கம் செயல்படுகிறது. மைசூரில் உள்ள 300 குடும்பங்களுக்கு எவ்வித வசதியும் அளிக்கப்படவில்லை என்றால் அவர்கள் அந்த அரசாங்கத்தின் மூலம் மத்திய அரசுக்குத் தெரிவிக்கலாம். தமிழர்கள் என்பதால் அவர்கள் இந்த அரசாங்கத்திற்கு முறையிட்டுக் கொண்டால் நாமும் அதை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி அவர்களுக்கு அங்கே வேலை வாய்ப்புத்தர மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த ஆண்டு சிலோனில் இருந்து 50 ஆயிரம் பேர்கள் இந்தியாவுக்கு வருவார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் கொழும்பில் இருந்து கப்பல் நிறைய வந்துகொண்டிருக்கிறார்கள். மண்டபத்தில் நிறையக் கட்டடம் இருப்பதனால் அங்கே தங்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. அங்கிருந்து அவர்களுக்கு வேலை உத்தரவாதம் அளித்து அனுப்ப ஏற்பாடுகள் என்ன, என்ன செய்யப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** வருகிறவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டங்கள் பல இருக்கின்றன. கப்பல்களில் வருகிறவர்கள் இங்கே வந்தவுடன் தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்ல விரும்பினால் அங்கே அனுப்பிவைக்கும் ஏற்பாடும் இருக்கிறது. அந்த இடத்திற்கும் போக விரும்பாதவர்களுக்கு பல மில்களில் வேலை கொடுக்கப்படுகிறது. கடன்

கொடுத்து புதிய தொழில்கள் துவங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது இங்கே வந்த பிறகுதான் அவர்கள் தகுதிகளைப் பார்த்து அங்கங்கே அனுப்பி வைக்கிறோம். இலங்கைக்கே ஒரு இயக்குநரை அனுப்பி—அங்கேயே யார் யாருக்கு என்ன என்ன தகுதி இருக்கிறது. யார் யாருக்கு என்ன என்ன வேலைகளை அளிக்கலாம் என்பது முன்கூட்டியே ஆராயப்பட்டு—இங்கே அனுப்பினால் அதிக தாமதமின்றி உடனடியாக அந்த அந்த வேலைகளில் அவர்களை அமர்த்த வசதியாக இருக்கும் என்பதும் யோசிக்கப்பட்டு வருகிறது. இன்னமும் இதுபற்றி ஒரு முடிவு ஏற்படவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சம்பத்திலே அமைச்சர் அவர்கள் பர்மாவுக்குச் சென்றிருந்தார்கள். பர்மா அரசாங்கத்தோடு இதுபற்றி ஏதாவது பேச்சுவார்த்தை நடந்ததா? அதன் விவரங்கள் என்ன என்று அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டபடி பர்மாவில் இருந்து 3½ லட்சம் பேர் இந்திய நாட்டுக்கு வர வேண்டியிருக்கிறது. ஏறத்தாழ 1½ லட்சம் பேர்கள் வந்துவிட்டார்கள். பாக்கிப் பேர்கள் வருவதற்கும் போக்குவரத்துக் கப்பலை அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறது. இதில் உள்ள சங்கடம் என்னவென்றால் கப்பல் வரும் என்பதாக அங்குள்ளவர்கள்—பர்மா அரசாங்கத்திற்கு அந்நிய மக்கள் கட்ட வேண்டிய வரி—மின்சாரக் கட்டணம் ஆகியவற்றைக் கட்டிவிட்டு இருக்கும்போது கப்பல் போவது தாமதப்பட்டுவிடுகிறது. இடைக்காலத்தில் அவர்கள் வசிக்க வீடின்றி ரேஷன் இன்றி கஷ்டப்படுகிறார்கள். கப்பல் வந்தவுடன் அதற்கான ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம் என்று இருக்கிறபோது—கப்பல் வந்திருக்கிறது என்கிற செய்தியானது அவர்களுக்கு கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தில் இந்த ஏற்பாடுகளைச் செய்துவிட்டு கிளம்ப முடியாது போகிறது. அங்குள்ள அதிகாரிகளிடம் இதுபற்றிய சிக்கல்களை எடுத்துச்சொல்லி முறைப்படி இவற்றை நீக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். இவர்களைத் தவிர இந்தியர்களா, பர்மியர்களா என்று இன்னமும் தீர்மானிக்காமல் 2½ லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அதுபற்றியும் நிர்ணயிக்கப்பட்டவுடன்—அவர்களும் இங்கே வந்துசேர வசதியேற்படும்.





**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவர் அவர்களே, இந்த விஷயத்திலே, பெரும்பாலானவர்கள் தமிழ்மொழி பேசக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அகில இந்திய ரீதியில் ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தாலும், பல்வேறு மாநிலங்களில் அகதிகளின் புனர்வாழ்வுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட அகதிகள் தமிழ்மொழி பேசக்கூடிய காரணத்தினால், தம்முடைய அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தி மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி அவர்களுடைய குறைகளைப் போக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேரளத்தில் ஒருவகையில் கவனித்து வருகிறார்கள். மத்திய அரசாங்கத்திடம் தமிழ் பேசுகின்றவர்களைப்பற்றிய குறைகளை முதலமைச்சர் அவர்கள் பட்டியலிட்டு எடுத்துச்சொல்லி மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துவார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, இதுகுறித்து அடிக்கடி முதலமைச்சர் மூலமாகவும், இலாகா மூலமாகவும் மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறோம்.

• • • •

பர்மியர்கள் தங்கள் குறைகளை எடுத்துச்சொல்லி, மனுக்களை அனுப்புகிறார்கள். தமிழர்கள் இரண்டுங்கெட்டான் நிலையில்தான் இருக்கிறார்கள். இந்தியாவுக்குத் திரும்பிவிட வேண்டுமென்கிற இந்தியர்கள் மிகவும் மோசமாக நடத்தப்படுகிறார்கள்.

இலங்கையிலிருந்து வருகிறவர்கள் பிரச்சினை வேறு. அவர்கள் வாராவாரம் வந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இலங்கையிலிருந்து திரும்பி வருகிறவர்களை எல்லா மாநிலங்களுக்கும் அனுப்புகிறார்கள். தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அவர்களை தமிழகத்திற்கு அனுப்புகிறார்கள். நாம் அவர்களுக்கு தமிழகத்திலே வாழ்வு அளித்துக்கொண்டு வருகிறோம்.

அ[illegible]வர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லையென்பதைப்பற்றிச் சொன்னார்கள். அதைக் குறித்து நாம் ஒன்றும் செய்ய முடியாது. வேண்டுமானால், நாம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பலாம். அவர்களிடமிருந்து புகார்கள் நமக்கு வந்தால், அதை நிச்சயமாக மத்திய அரசாங்கத்திற்கு எழுதலாம்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1972 மார்ச் 4

**திரு. எம். தேவராசன் :** தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து அகதிகளாக வரும் தமிழர்களை நீலகிரி மாவட்டத்தில் சேரம்பாடி என்கிற இடத்தில் குடியமர்த்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது? அப்படி குடியமர்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, எத்தனை பேர் என்கிற புள்ளிவிவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. பொதுவாக இலங்கையிலிருந்து வருகிறவர்கள் ரப்பர் பயிரிடுதலில் அதிக அக்கறை செலுத்துவதால், நீலகிரியில் ரப்பர் மரங்களைப் பயிரிடுவதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசாங்கத்திடம் இருக்கிறது. சிலர் சென்னை போன்ற நகரங்களிலேயே இருக்க விரும்புகிறார்கள். சிலர் நீலகிரிக்குச் சென்று அங்கே வேலை செய்ய விரும்பவில்லை. சிலர்தான் நீலகிரியில் இருக்கிற ரப்பர் தோட்டத்தில் விரும்பி வேலை செய்ய ஒத்துக்கொண்டனர். அப்படிப்பட்டவர்களை அங்கே அனுப்பி வைத்திருக்கிறோம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, 1967-ல் சாஸ்திரி—சிரிமாவோ பண்டாரநாயகா ஒப்பந்தத்தில், 1967-க்கு முன் தாயகம் திரும்பியவர்களை அகதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 1967-க்குப் பின் வருபவர்களைத்தான் அகதிகள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தற்போது பங்களா தேசத்திலிருந்து வந்தவர்கள் எந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அகதிகளாக வந்திருக்கிறார்கள் ? இந்தியப் பேரரசு 1967-க்கு முன்னர் வெளிநாடுகளிலிருந்து இந்த நாட்டுக்கு வந்தவர்களையும் அகதிகளாக ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, பங்களா தேஷ் அகதிகளின் தன்மை வேறு. இலங்கை, பர்மா அகதிகளின் தன்மை வேறு. பின்னது இரண்டு நாட்டின் அரசுகளும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் வருவது. முன்னது அப்படி இல்லை. பங்களா தேஷ் அகதிகள் பற்றி எந்த ஒப்பந்தத்தையும் இந்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி எந்த ஒப்பந்தமும் ஏற்படவில்லை. இலங்கை—பர்மாவிலிருந்து அகதிகளாக வருகிறவர்கள் நிரந்தரமாக இங்கேயே இருக்கக்கூடியவர்கள், மீண்டும் திரும்பி அங்கே செல்ல முடியாது. பங்களா தேஷிலிருந்து வந்தவர்கள் தங்களுடைய உயிரையும், உடைமைகளையும் காப்பாற்றிக்கொள்ள தற்காலிகமாக



வந்தவர்கள். அவர்கள் தற்போது திரும்பிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். பங்களா தேஷ் பிரச்சினை தற்காலிகமானது ; இலங்கை—பர்மா அகதிகள் பிரச்சினை நிலையான ஒரு ஏற்பாடு.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அகதிகள் பிரச்சினையைப்பற்றி விளக்கமான காரணங்களைக் கூறிப் பேசினார்கள். மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொல்லிய கூற்று, அதாவது கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறதென்றால், வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழர்களின் கண்ணீர்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கடல்நீர் உப்பாகத்தான் இருக்கிறது. நீங்கள் கேட்க வேண்டியதைக் கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. கே. ஏ. வகாப் :** 1967-க்கு முன் நம் நாட்டுக்குத் திரும்பியவர்களை அகதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார்கள். இதை மத்திய அரசுக்கு மீண்டும் எடுத்துச்சொல்லி, அகதிகளுக்கான உதவிகளை அவர்களுக்குப் பெற்றுத் தர இந்த அரசு முயற்சிக்குமா ? மேலும், அகதிகளுக்குத் தரப்படும் உதவித் தொகையானது சரியான முறையில் கொடுக்காமல், 5 ஆயிரம் ரூபாயை தவணை முறைகளாகக் கொடுத்து வருகிறார்கள். தவணை முறையில் இல்லாமல் மொத்தமாகக் கொடுத்தால், அவர்கள் ஏதாவது தொழில் செய்ய உதவிகரமாக இருக்கும். ஆகவே, உதவித் தொகையை ஒரு மொத்தமாக வாங்கித்தர இந்த அரசு முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, தமிழர்கள் உலகத்தின் பல பகுதிகளில் பரவியிருப்பது தமிழர்களுக்குப் பெருமை அளிப்பதாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மிகவும் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இருநாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலமாக அகதிகள் வெளிநாடுகளிலிருந்து தம்முடைய தாய்நாட்டுக்கு திரும்பி வருகிறார்கள். மத்திய அரசாங்கம் அளிக்கும் நிதியைப்பொறுத்துத்தான் இவர்களுக்கு உதவி அளிக்க முடியும். அந்த அளவினைக் கூட்டவோ, குறைக்கவோ முடியாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, பங்களா தேஷிலிருந்து வந்த அகதிகளுக்கு மத்திய அரசாங்கம் செலவழிக்கும் ஒருநாள் தொகைகூட பர்மா—இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்குச் செலவிடப்படவில்லை. இலங்கை—பர்மா அகதிகளுக்குச் செலவிடப்படுவது மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் அந்த உதவித் தொகையை அதிகரிக்க மத்திய அரசாங்கத்திடம் இந்த அரசு போராடுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, நாங்கள் வற்புறுத்துகிறோம். கனம் உறுப்பினர் அவர்களும் வற்புறுத்தினால் நிச்சயமாக அதிகமாகக் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்விக்கான துணை வினாக்கள் முடிவுற்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது * என்று குறிப்பிட்டார்கள். இது வெளி நாட்டு உறவைப் பற்றிய விஷயம். ஆகவே, இவற்றைச் சட்ட சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். அதேபோல் பத்திரிகையாளர்களும் இதைப் பிரசுரிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விற்பனை வரி.

* 300 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பலகட்ட விற்பனை வரியினை ஒரு முனையில் வசூலித்திட செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, வியாபாரிகள் பொருட்களின் விலைகளை உயர்த்துவதற்கு பலகட்ட விற்பனை வரியை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு விலைகளை ஏற்றிவிடுகிறார்கள். இதனால் பொதுமக்கள் மிகவும் நஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இதை முன்னிட்டாவது ஒருமுனை விற்பனை வரி கொண்டு வர அரசு ஆலோசிக்குமா ?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



**மாண்புமிகு திரு. ப. உ சண்முகம் :** தலைவர் அவர்களே, பல கட்ட விற்பனை வரி, ஒருமுனை விற்பனை வரி போன்றவற்றிற்கும், விலைவாசிகளைக் கூட்டுவதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

* 301 வினா—**திரு. எம். முத்தையா :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ரேடியோ மீது விதிக்கப்படும் விற்பனை வரியை குறைக்க வேண்டுமென்று ரேடியோ தயாரிப்பாளர்கள் ஏதேனும் வேண்டுகோள் விடுத்துள்ளார்களா ;

(இ) ஆம் எனில், அது பற்றி அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) கோரிக்கை அரசால் பரிசீலிக்கப்பட்டு ரேடியோமீது விதிக்கப்படும் விற்பனை வரியை குறைக்க இயலாமை தெரிவிக்கப்பட்டது.

*Court for Valliyur*

* 302 Q.—**THIRU T. GANAPATHY :** Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to locate a District Munsif-*cum*-Sub-Divisional Magistrate Court at Valliyur in Nanguneri taluk?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், புதிதாக டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட்டுகள் அமைப்பதற்காகவும், எந்தெந்த இடங்களில் எந்த ஜூரிஸ்டிக்ஷன் இருக்க எந்த அளவிற்கு அவர்களுடைய வேண்டுமென்பதற்காகவும் வரதராஜன் தலைமையிலே ஒரு குழு ஓராண்டுக்காலமாக இருக்கிறதே. அந்தக் குழு தனது சிபாரிசுகளைக் கொடுத்திருக்கிறதா ? அப்படி வந்து விட்டால் அதிலே இந்த வள்ளியூர் போன்ற இடங்களும் சேர்க்கப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசாங்கத்திற்கு அறிக்கை இன்னும் வரவில்லை.

ஆக்குகின்ற முறையில் கிராம அதிகாரிகளிடம் கொடுக்கலாமா ? ஊராட்சித் தலைவர்களிடம் கொடுக்கலாமா ? ஹான்ரரி மெஜிஸ்திரேட் இருக்கிறார்களே அவர்களிடம் கொடுக்கலாமா என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்துத் திருமணங்களைப் பதிவு செய்யும் நோக்கம் இருக்கிறது. என்று தெரிவித்தார்கள். ஜாதி மத பேதம் இல்லாமல் தமிழ் நாட்டிலே இருக்கிற அத்தனை திருமணங்களையும் பதிவுசெய்யும் சட்டம் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தந்த மதத்திற்கு என்று தனியாகச் சட்டங்கள் இருக்கின்றன. எந்த மதத்தினைச் சேர்ந்தவரும் பதிவுசெய்யும் அலுவலகத்தில் பதிவுசெய்துகொள்ளலாம் என்று சட்டம் இருக்கிறது. இந்து திருமணச் சட்டத்திலே பதிவுத் திருமணங்கள் செய்து கொள்வதற்கான வாய்ப்புக்களை, உருவாக்குவதற்காகச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்து மதத்தில் நடைபெறும் திருமணங்களைப் பொறுத்த வரையில் பதிவுசெய்துவிட்டு திருமணம் செய்துகொள்ளமுடியாது, திருமணம் செய்துவிட்டு பதிவு செய்துகொள்ளலாம். பதிவுசெய்து கொள்ளும் வாய்ப்புக்கள் கிராமங்களில் உள்ளவர்களுக்கும் கிடைக்கக்கூடிய வகையில் பதிவு செய்யும் அதிகாரத்தை பரவலாக்கலாமா என்பதைப் பரிசீலித்து வருகிறோம்.

* 304 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுயமரியாதைத் திருமண முறைகளை வகுத்து அதனை அச்சிட்டு பத்திரப்பதிவு அலுவலகங்களின் மூலம் மக்களுக்கு வழங்கிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. எஸ். வடிவேல் :** ஊராட்சி மன்றங்களுக்கு அந்தப் பதிவுத் திருமண அதிகாரங்களைக் கொடுத்தால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தக் கேள்வியும் அதனோடு தொடர்புடையதுதான், கேட்கலாம்.





**திரு. ஏ. பாலையா :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சலில் முன்சிப் கோர்ட்டும். இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டும் அமைக்கவேண்டுமென்று ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா ? அரசு அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது நெல்லையைப்பற்றிய கேள்வி.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, போளூரிலிருந்து வழக்குகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வள்ளியூருக்கும் போளூருக்கும் என்ன சம்பந்தம்? மூலக்கேள்வி வள்ளியூரைப்பற்றியது.

## திருமணங்கள் பதிவு.

* 303 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமணங்களைப் பதிவு செய்து கொள்ளும் அதிகாரம் கிராம முன்சீப் அல்லது ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்து திருமணங்களைப் பதிவு செய்து கொள்வதற்கான அதிகாரங்களை திருமணப்பதிவாளர்கள் (Marriage Registrars) நியமித்து அவர்களுக்கு வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, திருமணப் பதிவு முறையின் பலன்கள் எல்லாத் தரப்பு மக்களுக்கும் கிடைக்கக்கூடிய நோக்கத்தின் அடிப்படையில் எப்படி ஜனன—மரண பதிவுக்குறிப்புகள் கிராம முன்சீப்களால் பதிவு செய்யப்படுகிறதோ அதைப்போன்று இதனையும் பதிவுசெய்ய ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது இருக்கிற விதிமுறைகளின்படி ஆங்காங்கு இருக்கிற பதிவாளர்கள் இந்து திருமணச்சட்டத்தின்கீழ் பணியாற்றுகின்றவர்கள் பதிவு செய்யலாம் என்று இருக்கிறது. இன்னும் அதிகமான அளவிற்கு

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதைக் கருத்துக்களை எல்லா மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் மலிவுப் பதிப்பாக அவற்றை அச்சிட்டு வெளியிடவோ அல்லது பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் பயன் படும் வகையில் தமிழக அரசின் தமிழரசு இதழில் வெளியிடவோ அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதைத் திருமணம்பற்றிய கருத்துக்களை இனிமேல்தான் தமிழ்நாட்டு மக்களுக்கு விளக்கிக் கூறவேண்டிய அவசியமிருக் கிறது என்று நினைக்கவில்லை. தமிழர்கள் எங்கெங்கு வாழ் கிறார்களோ அங்கெல்லாம் சுயமரியாதைத் திருமணங்கள் நடை பெற்று வருகின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்படிப்பட்ட சுயமரியாதைத் திருமணங்களுக்கு ஆகிற செலவு சாதாரணமாக நடைபெறும் திருமணங்கள், ஐயர் வைத்து நடைபெறும் திருமணங்களுக்கு ஆகும் செலவைவிட பத்து மடங்கு அதிகமாக ஆகிறது என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் சுயமரியாதைத் திருமணத்தை எதிர்க்கிறார்கள் என்பதுதான் பொருளாகிறது, அவர்கள் அப்படிக் கூறுவதிலே வேறு பொருள் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

### நிலவள வங்கிகளில் நியமன உறுப்பினர்கள்

* 305 வினா—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நிலவள வங்கிகளில் சம்பந்தப்பட்ட சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களை நியமன உறுப்பினர்களாக நிய மிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, நிலவள வங்கிகளில் எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் இவர்களை உறுப்பினராக நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பொது மக்களோடு தொடர்பு கொண்டவர்கள், அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்தவர்கள் என்பதால் அவர்களை நியமித்தால் விவசாயி களுக்கு இருக்கக்கூடிய கடன்களைப் புரிந்துகொண்டு அவர்கள் செயல்பட வாய்ப்பு உண்டாகுமே, அந்த வாய்ப்பை அரசாங்கம் உண்டாக்கித் தருமா?



**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, அரசாங்கம்தான் அவர்களை நியமிக்கவேண்டுமென்ற அவசியமில்லை. நிலவள வங்கியாக இருந்தாலும் கூட்டுறவுத் துறையிலுள்ள வேறு எந்தச் சங்கமாக இருந்தாலும் கட்டணத்தைச் செலுத்தி யார் வேண்டுமானாலும் உறுப்பினராகச் சேரலாம். பத்து ரூபாய் கட்டணம் கட்டி உறுப்பினராக யார் வேண்டுமானாலும் சேர்ந்து கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இப்பொழுது நியமனம் செய்கிறார்களே, அது என்ன அடிப்படையிலே செய்யப்படுகிறது. இப்பொழுது நியமனம் செய்யப்படுகிற முறைகளை மாற்றி வேறு முறைகளைக் கையாள அரசிடம் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அரசு எந்த ஒரு உறுப்பினரையும் நியமனம் செய்யவில்லை. இதுவரையிலும் இல்லை. இனிமேலும் அப்படிச் செய்யப்போவதில்லை. எம்.எல்.ஏ. எம்.பி.க்களையும் நியமனம் செய்யவில்லை, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களையும் நியமனம் செய்யவில்லை. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களையும் நியமனம் செய்யவில்லை. உறுப்பினராக யாரையும் அரசாங்கம் நியமனம் செய்யவில்லை. கட்டணத்தைச் செலுத்தி யாரும் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** டைரக்டர்களாக நியமனம் செய்யப்படுகிறார்களே—கேள்வியில் எம்.எல்.ஏ.க்கள் என்று சொல்லி இருக்கிறது—நான் அதைக் கேட்கவில்லை, இப்பொழுதுள்ள விதிமுறைகளை மாற்றி வேறு முறைகளைக் கொண்டுவர உத்தேசம் உண்டா என்று கேட்டேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கேள்வியில் 'nominated members' என்றுதான் இருக்கிறது. தமிழிலும் அப்படித்தான் இருக்கிறது. டைரக்டர் பற்றிக் கேள்வி இல்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : 'Members' may be a printer's devil. The Hon. Minister can understand it. It can only mean 'Directors'. I would like to know whether the Government would give up the practice of nominating any Director, so that it may be a cent per cent democratic organisation?

THE HON. THIRU SI. PA. ADITANAR : I do not know whether it is a printer's devil. It is for the Hon. Speaker to see whether it is a printer's devil or not.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The Hon. Minister has not answered my question.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவர் அவர்களே, இந்த நிலவள வங்கிகளில் டைரக்டர்களாக அரசாங்கம் நியமிப்பதற்கு ஏதாவது விதிமுறை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இந்த வினா உறுப்பினர்களைக் குறித்தது. உறுப்பினர்களை நியமிப்பதற்கு அதிகாரம் வேண்டுமா, வேண்டாமா என்பது சட்டப் பிரச்னை. சட்ட மன்ற உறுப்பினர்கள், பொது மக்கள், பெரியவர்கள், சிறியவர்கள்—பதினெட்டு வயதிற்கு மேல் ஆகி யிருக்கவேண்டும்—இவர்கள் எல்லாம் பத்து ரூபாய் கட்டணம் செலுத்தி உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, கோவாப்ரேடிவ் லேண்ட் டெவலப்மெண்ட் பாங்கிலே மெம்பர் நாமினேட் செய்வதற்கு அதிகாரம் இருக்கிறதா? மன்னிக்கவும்—மெம்பர்ஸ் இல்லை—டைரக்டர்களை நியமனம் செய்வதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களே முதலில் மெம்பர்ஸ் என்று கேட்டார்கள், பிறகு இரண்டாவதாக டைரக்டர்கள் நியமனம் செய்யப் படுகிறார்களா என்று கேட்கிறார்கள். எந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள் என்று தெரியவில்லை. பிரச்னை மெம்பர்களைப் பற்றியது. மெம்பர்களை நியமிப்பதற்குச் சட்டம் கொண்டுவர முடியும். ஆனால் அவ்வாறு சட்டம் கொண்டுவருவதாக இல்லை. எல்லோரும் சேர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கக்கூடிய வகையிலேதான் இப்பொழுது இருக்கிறது.

MR. SPEAKER : The latter overrides the former.



THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, may I know whether it is a fact that the Government have a nominated Director in the Co-operative Land Development Bank?

THE HON. THIRU SI. PA. ADITANAR : There are eight different kinds of banks in the co-operative sector. What the hon. Member asks is [illegible] Director in a Bank. There are Banks like the State Co-operative Bank, the Land Development Bank and Primary Banks. To which Bank the hon. Member refers?

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, may I seek a clarification from the Hon. Minister? Which are the Banks where there are nominated Directors?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, the Government have power to nominate Directors under Section 27 (2) of the Act and under the bye-laws. The hon. Member can put a specific question. There is no hurry and she can write and send the question to the Hon. Speaker and if admitted, I will answer it.

ஒட்டப்பிடாரத்துக்கு நிலவள வங்கி

* 306 வினா—திரு. எம். [illegible] : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் [illegible] விடையளிப்பாரா— [illegible] வங்கி திறக்கும் [illegible]

[illegible]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** [illegible]

[illegible] அது எப்பொழுது [illegible] கூறுவார்களா?

**திரு. எம். [illegible] :** [illegible]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** [illegible] 1971-72 பட்ஜெட்டில் [illegible]

**திரு. சோ. அழகர்சாமி :** [illegible] இந்த நிலவள வங்கி [illegible] கடன்கள் [illegible]

நில அபிவிருத்திக்காக ஒரு விவசாயிக்கு ஒரேயொரு தடவை கொடுக்கப்பட்டு, 20 வருஷங்களில், 7, 8 வருஷங்களில் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மட்டத்திலும் ஒரு வங்கி திறப்பதனால் லாபகரமாக நடப்பதற்கும், தொடர்ந்து வேலை இருப்பதற்கும் வாய்ப்பில்லாமல் போய் விடுமே, எனவே வட்டத்திற்கு ஒரு வங்கியிருந்தால் போதும் என்ற நிலையைச் சொல்கிறீர்களே, அதை அரசு மறு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, கோவில்பட்டியைப் பொறுத்த வரையிலும் வட்டத்திற்கு ஒரு வங்கி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதில் டைரக்டராக இருக்கிறார்களோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் ஒட்டப் பிடாரத்தில் அவர்கள் கேட்பது தனி கிளை வங்கி. ஒரு வங்கிக்கு கிளைகள் இருக்கும். சென்ட்ரல் பேங்குக்கு 30 கிளைகள் கூட இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒட்டப்பிடாரமா, ஒட்டப் பிடாரமா?

**திரு. சொ. காவேரிமணியம் :** பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டத்திலுள்ள நிலவள வங்கிகளில் சமீபத்தில் சுமார் 6 மாத காலமாகக் கடன் விண்ணப்பங்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஒட்டப்பிடாரம் பற்றிய கேள்வி. வினாக்கள் 307, 308, 309 ஆகியவை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி தள்ளி வைக்கப்படுகின்றன.

### சத்தியமங்கலம் காடுகளிலிருந்து சந்தன மரங்கள்

* 310 வினா **திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திம்பம், சத்தியமங்கலம் பகுதியில் உள்ள காடுகளில் உள்ள சந்தன மரங்களை மைசூர் மாநிலத்திற்குக் கடத்திச் சென்றதாக யார் மீதேனும் இந்தாண்டு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இல்லை.



**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, திம்பம் போன்ற பகுதிகளில் இப்படிப்பட்ட ஏராளமான திருட்டுகள் நடப்பதாகப் பொது மக்களிடமிருந்து புகார்கள் சொல்லப்படுகின்றன. அங்கே சரியாகப் பாதுகாப்பு அமைக்கப்படவில்லை என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, நல்ல முறையில் பாதுகாப்பை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இந்தாண்டு ஏதாவது வழக்கு தொடரப்பட்டிருக்கிறதா என்ற கேள்விக்குத் தான் இல்லை என்று சொன்னேன். சென்ற ஆண்டு 3 வழக்குகள் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் இருக்கின்றன.

### சிங்கோனா தோட்டத் தொழிலாளர்கள்

* 311 வினா **திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக்குச் சொந்தமான சிங்கோனா தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளரின் குறைகள் குறித்து, நீலமலை தோட்டத் தொழிலாளர் சங்கத்திலிருந்து 26—1—1971 தேதியிட்ட விண்ணப்பமொன்று அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், வால்பாறையில் அரசாங்கத்திற்குச் சொந்தமாகவிருக்கும் சிங்கோனா பிளாண்டேஷனையும், நீலகிரியிலிருக்கும் பிளாண்டேஷனையும் சேர்ந்த தொழிலாளர்கள் தொழிலாளர் நல கோரிக்கைகளை வைத்து அது சம்பந்தமாக அமைச்சர் பேச்சு வார்த்தை நடத்தி ஓரளவு முடிவு செய்திருக்கிறார்கள். அந்த விவரம் அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, 26—1—1971-ல் அரசுக்கு வந்ததா என்று கேட்டதற்கு வரவில்லை என்று சொன்னேன். 26—9—1971 இல் சிங்கோனா டைரக்டருக்கு

விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். அதில் பல்வேறு கோரிக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் சில கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, சம்பள உயர்வு, 5—7—1967-ல் ஒரு தடவையும், 2—9—1971 இல் ஒரு தடவையும் 1—1—1960-ல் ஒரு சம்பள விகிதத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். இன்னும் கோரிக்கைகள் இருக்கின்றன. [illegible] பரிசீலிக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி: [illegible] இருக்கும் சிற்சில கோரிக்கைகளில் உள்ள நியாயமில் குறைகளை அரசாங்கம் [illegible] தொழிலாளர்களின் காண முடியவில்லை [illegible] ஒரு முடிவு முதலாளிகளின் [illegible] குறைந்த கூலிக்குப் [illegible] தெரியுமா? அதைப்பற்றி [illegible] அரசாங்கத்திற்குத் எடுத்திருக்கிறதா? [illegible] முயற்சி

மாண்புமிகு திரு. [illegible] இராமன்: [illegible] தெளிவாகச் சொன்னேன். [illegible] நான் 3 தடவை [illegible] 3 தடவையும் சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது [illegible] consideration of the Government. It is under the

திருமதி த. த. அனந்தநாயகி: [illegible] அரசாங்கத் இருக்கிறது [illegible] நடத்தினால் [illegible] முறையும். [illegible] செல்ல அவைகளைக் [illegible] பார்க்க குறைவில் தொழிலாளர்களுக்கு [illegible] அந்தச் சம்பள உயர்வு [illegible]?

மாண்புமிகு திரு. [illegible] இராமன்: [illegible] இந்தப் பிரச்னையைப் [illegible] வரையில் அவர்கள் [illegible] கருதுகிறேன்.



## Tamil Nadu Transport Department

* 312 Q.—Thiru E. S. THYAGARAJAN: Will the Hon. the Minister for Transport be pleased to state the number of posts of Joint Directors in the State Transport Department that were sanctioned after nationalising the routes of 75 miles and the number that have been filled up till now?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையில் [illegible] இணை இயக்குநர் பதவிகள் நான்கு அனுமதிக்கப்பட்டு [illegible] நிரப்பப்பட்டுள்ளன.

DR. H. V. HANDE: Sir, may I know from the Hon. Minister whether there is any programme on behalf of the Government to see to it that most of the transport organisations run efficiently. After the recent bifurcation into four zones, whether any improvement has been noticed and whether the Government have got any schemes to improve their efficiency and if so, the details?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர்களே, இவை ஏற்கனவே உள்ள அரசுப் போக்குவரத்துத் துறையை 4 பிரிவுகளாக தமிழ்நாடு [illegible] நிர்வாக வசதிக்காக இதைத் [illegible] பற்றிய [illegible] யாக்கும் [illegible] மூன்று பகுதிகளிலேயுள்ள [illegible] கார்பொரேஷன்களாக ஆக்கி [illegible] உண்டாக்குகிறோம் எடுத்துக்கொண்டிருக்கிறோம் [illegible] நிலையாக நடத்திய பிறகு [illegible] அரசாங்கப் போக்குவரத்து [illegible] உருவாக்கப்பட்டிருக்கும் [illegible] வாய்ப்புகள் [illegible] பரிசீலிக்கப்படும்.

* 313 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the State Government has asked the Special Officer (Comprehensive Bus Study) Directorate of Technical Education, Madras, to submit a report for the improvement of the efficiency of the Tamil Nadu Transport Department:

(b) if so, whether the Special Officer has submitted the report: and

(c) the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) சென்னை மாநகரப் பேருந்துப் பணிகளைத் திறம்பட நடத்துவதற்கு ஆய்வொன்று மேற்கொண்டு, அது பற்றிய அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறு அத்தனி அதிகாரியை அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது;

(இ) இல்லை; அத் தனி அதிகாரி ஆய்வை மேற்கொண்டிருக்கிறார்.

(உ) வினாவுக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Sir, may I know from the Hon. Minister, what prompted the Government to appoint the Special Officer with regard to Comprehensive Bus Study. Also whether there is any programme with the Government to see to it that at least a particular organisation like the Pallava Transport Corporation is streamlined on the basis on which the Special Officer was appointed?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பல பேருந்துகள் அனுமதிக்கத்தக்க அளவுக்கு மேலாக அதிகப் பயணிகளை ஏற்றிக்கொண்டு ஓடுவதாகவும் அதே நேரத்தில் பல பேருந்துகள் பாதி அளவை நிறைந்து [illegible] அதிகமாகக் காலியாகச் செல்வதாகவும், இதைப் போலவே வழித்தடங்களில் சில பகுதிகள் நெரிசல் மிகுந்தவையாகவும் அதே வழித்தடங்களின் சில பகுதிகளில் மிகக் குறைந்த பயணிகள் பயணம் செய்வதாகவும் தெரிவதாலும், ஒரே நாளில் சில நேரங்களில் பேருந்துகளில் பயணிகள் கூட்டம் மிகுதியாகவும், சில நேரங்களில் பேருந்துகள் வெறிச்சோடிக் கிடப்பதாகவும் இப்படிப் பலமுறைகளில் நிலைமைகள் சென்னை மாநகரத்தில் இருப்பதால் தனி அதிகாரி நியமிக்கப்பட்டு எப்படி பயணிகளின் பயணத்தின் பொழுது நிலைமைகள் இருக்கின்றன என்று ஆராய்ந்து அதை வைத்து அதற்கேற்ப வழித்தடங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று ஒரு விரிவான சீரமைப்புத் திட்டம் [illegible] அமைக்க வேண்டுமென்பதற்காக இந்தத் தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் [illegible] சோதித்து வருகிறார். மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை கிடைத்தால் சென்னை மாநகரத்தில் பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் மூலம் அமல்படுத்தப் படவிருக்கின்றன.

DR. H. V. HANDE : Without waiting for this report, may I know from the Hon. Minister whether immediate steps have





been taken to see that the buses which are used by State Transport are not spoiled? We are told many buses get spoiled since they are overcrowded. Of course I can understand the difficulty of the State Transport. Unless there is overcrowding they cannot take all passengers. What I say is, has a via-media, compromise formula been evolved which will give long-range satisfaction to passengers and long-term utility for the buses? May I know whether any steps have been taken in that direction, without waiting for this officer's report?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The intention behind this comprehensive study is exactly the same as envisaged by the hon. Member and we have asked for a interim report so that it can help as in rationalising bus routes step by step I expect that the interim report will be received within a month.

THIRU K. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether any recommendation has been made to allow devolution of powers to regional officers because there is a growing feeling that powers conferred on regional officers for efficient operation is not sufficient? Was any step taken in that regard?

THE HON. THIRU S. RAMACHANDRAN : In the State Transport Department already devolution of powers has been made so that the Regional Joint Director can function efficiently and take decisions. In fact with the same spirit, new corporations are formed so that they can take decisions on the spot and try to run the organisation in an efficient manner.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** போக்குவரத்துத் துறையிலே ஸ்டேட் [illegible] கார்ப்பரேஷன் என்றும் இரண்டு வகைகளாக [illegible] இப்படி இரு வகைகளாகப் பிரிந்து [illegible] குழப்பத்தில் இருக்கிறார்கள். [illegible] இருப்பதா அல்லது கார்ப்பரேஷனில் இருப்பதா என்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள். [illegible] கிடையாது என்பதை அரசு [illegible]? கார்ப்பரேஷனில் தனியார் பங்கு [illegible]?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரை [illegible] இணைக்கின்ற நிலை இருப்பதால் அரசுத் துறையின் மூலம்தான் நிர்வகிக்க முடியும் என்ற காரணத்தால் விரைவுப் பேருந்துகளை மட்டும் அரசே

வைத்துக் கொள்வது என்றும், மாவட்ட, நகர வழித் தடங்களைப் பொறுத்தவரை ஆய்ந்து இப்போது உருவாக்கப்பட்டிருக்கிற போக்குவரத்துக் கழகங்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும் கொள்கை அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் பணியாளர்கள் பகுதியில் எந்தவிதமான குழப்பமும் இது வரையில் இல்லை. இனியும் ஏற்படாது [illegible] உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Is there any share for private people?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை தனியாருக்கு எந்தவிதமான ஷேர்களும் கிடையாது. அரசாங்கமே முழுக்க மேற்கொண்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** தனி அதிகாரிகள் பொறுப்பைப் போல் நிர்வாகத் துறையில் போக்குவரத்துக் கழகங்களில் ஐ.ஏ.எஸ். அல்லாத டெக்னிகல் பர்சனல் [illegible] ஒதுக்கீடு இருக்கிறதா? இனிமேல் அவ்வாறு போட அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இப்போது நிறுவப்பட்டுள்ள சேரன், சோழன் போக்குவரத்துக் கழகங்களில் தொழில் நுட்ப வல்லுநர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். பாண்டியனில் நியமிக்கப்பட்டிருக்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரி தொழில் நுணுக்கப் படிப்பு மேற்கொண்டவர். யார் வேலைகளைத் திறமையாகச் செய்வார்கள் என்று பார்த்துத்தான் நியமிக்கிறோம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : While the Hon. Minister answered my question he stated only for those which are running beyond 75 miles express buses, they come under State undertaking. Now I find within the city buses are being run by State Transport undertaking. Is there any intention to form a different corporation for the city routes alone or will they be continued under the State Transport undertaking?

THE HON. THIRU S. RAMACHANDRAN : City routes are already under Pallava Corporation and they are not run by State Transport Undertaking. Some buses which go to North Arcot and South Arcot limits, are still pending with Transport Department and will be subsequently attached to suitable corporations in future.





THIRUMATHI T. N. ANANDANAYAKI : I find that the Pallava Transport Corporation's buses are being painted in a sort of technicolour. We need not change the colour. It can continue to be red so that we may save money instead of painting them now and then with different paints.

THE HON. THIRU S. RAMACHANDRAN : As far as colour of the bus is concerned, I think it is 'red'. I am not colour-blind.

**திரு. ஜெ. ஜெயபால் :** [illegible] கார்ப்பரேஷன்களை [illegible] பணம் கட்ட அமைத்து [illegible] இந்த இராகாவுக்கு வேண்டும் [illegible] தவிர்க்க அரசாங்கம் மேலும் [illegible] என்ன நடவடிக்கை [illegible]?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** [illegible] கனம் உறுப்பினர் [illegible] போக்கு அவர்கள் [illegible] முறையில் இயங்கி வரத்துக் கழ[illegible] எந்த விதத்திலும் வருகின்ற[illegible] நஷ்டம் வராது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I am sorry that Hon. Minister for Transport is blind to colour of the buses. I have seen some buses plying under 'Pallava Pokkuvarathu Kazhagam' with sea-blue colour. The Hon. Minister's statement is not correct. I hope [illegible] colour.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அவர்கள் [illegible] பளத் தில்' இருந் [illegible] என்று கருதுகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I challenge.

MR. SPEAKER : What is wrong in having blue colour?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The Hon. Minister should give correct answer.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** [illegible] பேட்டை [illegible] பயன்படுத்தும் ஒர்க்ஷாப் [illegible] இருக்கின்றன. சென்னை இரண்டு [illegible] கள்தான் இருக்க மாதக் [illegible] அதிகச் செலவாகும் வேண்டி [illegible]. ஆகவே, தனியே என்ற [illegible] எந்த [illegible] இல்லை.

MR. SPEAKER: Do you want to suggest any new colour?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I just want to tell the Hon. Minister that the change of colour is not necessary. We will be only incurring extra expenses. I have seen some buses plying with the colour 'blue' and with the name 'Pallava Pokkuvarathu Kazhagam'. But the Hon. Minister has said that the colour has not been changed. I have seen otherwise. Will he verify the fact again?

## அர்ச்சனைகளுக்கு சீரான கட்டணங்கள்

* 314 வினா—திரு. என். இட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழகத் திருக்கோவில்களில் அர்ச்சனை டிக்கட்டுகளின் கட்டணத் தொகையை எல்லாக் கோவில்களிலும் ஒரே விதமாக நிர்ணயிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை.

## பழனியில் பஞ்சாமிர்தம் விற்பனை நிலையம்

* 315 வினா—திரு. என். இட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பழனியில் பஞ்சாமிர்தம் தயாரித்து விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை அறநிலையத்துறை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை.

திரு. என். இட்டப்பா: பழனியாண்டவனுக்கு அபிஷேகம் செய்யும் பஞ்சாமிர்தத்தில் பழனியாண்டவர் சிலையில் இருக்கும் மருந்துச் சரக்கு சேருவதாகப் பக்தர்கள் மிக நம்பிக்கையோடு கூறுகிறார்கள். இதை ஆராய்ந்து அறிய குழு ஒன்று நியமித்து அப்படியிருக்குமானால் அரசாங்க மருத்துவ மனைகளில் அதைப் பயன்படுத்துவது பற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தற்போது ஆலயத்தின் சார்பில் பஞ்சாமிர்தம் தயார் செய்யப்பட்டு வருகிறது. தரிசிக்க வருகிற பொதுமக்கள் இதை வாங்கிப் பாராட்டுகிறார்கள்.



திரு அ. பெ. சண்முகசுந்தரம்: பழனியில் விபூதி நிறைய விற்கப்படுகிறது. விபூதி தயாரிக்க அறநிலைய இலாகா முன் வருமா?

MR. SPEAKER: This is about "panchamirtham".

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: விபூதியின்மேல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அக்கறை காட்டியதற்காக நன்றி.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஹிந்து ரிலிஜியஸ் என்டோமென்ட்ஸ் டிப்பார்ட்மென்ட் மூலம் இந்தப் பஞ்சாமிர்தத்திற்கு என்று தனிப்பட்ட முறையில் ஒரு டிப்போ ஆரம்பித்தால் அங்கு ஏற்கனவே உள்ள பஞ்சாமிர்த வியாபாரிகள் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தினால் அவர்களிடமிருந்து கோரிக்கை ஏதாவது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தற்போது அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் வரவில்லை. ஆனால் கொஞ்ச நாட்களுக்கு முன்னால் பழனி ஆலயத்தின் சார்பில் அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்று யோசனை செய்தபோது அங்குள்ள வியாபாரிகளும் அதில் பணியாற்றுகிற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் ஆட்சேபனை தெரிவித்த காரணத்தினால் நிறுத்தி வைத்தார்கள். தற்போது அப்படிப்பட்ட வேண்டுகோள் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்தப் பஞ்சாமிர்தத்தின் மேல் பல பக்தர்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டு, அதை உண்டால் உடல் நலம் பெறும் என்று. ஆகவே சப்-ஸ்டாண்டர்ட் பஞ்சாமிர்தத்தை அவர்கள் தயார் செய்யாமல் இருப்பதற்கு அறநிலைய பாதுகாப்பு இலாக்கா ஏதாவது ஏற்பாடு செய்யுமா? அவர்கள் தயாரிக்கிற பஞ்சாமிர்தம் சரியான வகையில் தயாரிக்கப்படுகிறதா என்பதில் அறநிலையப் பாதுகாப்பு இலாக்கா தக்க கவனம் செலுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பஞ்சாமிர்தம் உண்பதால் உடல் நலம் தேறும் என்று அம்மையார் அவர்கள் கூறுகிறார்கள். இப்போது வெளியார் தயாரிக்கும் பஞ்சாமிர்தம் சாப்பிட்டு உடல் நலம் தேறியிருக்கிறது என்று நினைக்கிறேன்.

திரு. சொ. காவேரிமணியம் : [illegible] பில் பஞ்சாயத்[illegible] [illegible] இருக்கிறது என்று சொன் [illegible] நிலையங்கள் [illegible] குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படிப்பட்ட செயற் குறிப்பு எதுவும் இல்லை.

புலவர் சி. பழனிசாமி : [illegible] ரசங்கள், பஞ்சாயத்[illegible] [illegible] பழ முன்பு தயாரித்து [illegible] [illegible] ஆண்டுகளுக்கு [illegible] [illegible]ப்பட்டதால் தொழிற்சாலைக்குப் [illegible] [illegible] வகையில் ஒரு [illegible] வழங்கிக்கிற ஒரு [illegible] தொழிற்சாலையோ [illegible] அல்லது [illegible] சார்பில் [illegible] பாதுகாப்பு [illegible]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : [illegible] சில பழங்கள் [illegible] [illegible] தேன் [illegible] [illegible] கற்கண்டு, பல [illegible] [illegible]கின்றன. [illegible] [illegible] [illegible] [illegible] பாதுகாப்பு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பஞ்சாயத்[illegible] [illegible] [illegible] தவே. [illegible] [illegible] [illegible] [illegible]பட்டு அளவில் கற்கண்டு, பழங்கள், [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] போன்றவை சேர்க்கப்படுகிறது [illegible] [illegible] [illegible] [illegible] அக்கறை [illegible] ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : [illegible] தேர்விக்கு நேரம் அதிகம் அனுமதிக்கப் [illegible] [illegible]கள் வாய் ஊறும் என்று கருதுகிறேன் (சிரிப்பு).





மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—[illegible] [illegible] * [illegible] இடப்பட்டிருந்தால் அவ்வுறுப்பினரால் [illegible] என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) பி.டி. (B.T.) ஆசிரியர்கள் மேற்கொள்ள இருக்கும் உண்ணாவிரதம் குறித்து

MR. SPEAKER : Thiru K. Subbu, M.L.A., has given notice of an adjournment Motion under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules to discuss a matter of urgent public importance, namely.—

"The serious situation arising out of the proposed hunger strike in front of the Secretariat by the B.T. Teachers of Tamil Nadu following the Statewide mass casual leave applied by them already on 25th February 1972 on the question of injustice done to them by the Second Pay Commission."

Thirumathi T. N. Anandanayaki has also given notice of an Adjournment Motion under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules regarding the same subject, namely,—

"That the Graduate Teachers of Tamil Nadu applied mass casual leave throughout Tamil Nadu on 25th February 1972 and further announced to undertake relay hunger fast before the Secretariat on March 6th, 7th and 8th to draw the attention of the Government to redress their grievances."

திரு. க. சுப்பு : [illegible] பட்டதாரி ஆசிரியர்கள் அவர்களுக்கு [illegible] [illegible] அளிக்கப்பட்டிருக்கக்கூடிய [illegible] [illegible] எதிர்த்து அதை [illegible] [illegible]கிறார்கள். [illegible] கல்வி [illegible] [illegible] போகும்போது வாக்குறுதிகள் கொடுக்க[illegible] [illegible]கிறது. இந்த நிலைமையில் அவர்கள் [illegible] [illegible] எதிர்த்து 25-ம் தேதி [illegible] தமிழகம் பூராவிலும் அவர்கள்

[திரு. க. சுப்பு] [1972 மார்ச் 4

குறிப்பிட்டபடி 'மாஸ் காஷுவல் லீவ்' எடுத்திருக்கிறார்கள். அந்தப் போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது. அதற்குப் பின்னால் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஏதாவது அறிவிப்பு கிடைக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். அதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாக ஒரு அறிவிப்பு வந்திருக்கிறதே தவிர அவர்கள் கோரிக்கை நிறைவேறுவதில் ஒரு நம்பிக்கை கூட பிறக்கவில்லை யென்ற அடிப்படையில் ஏற்கனவே அவர்கள் நடத்திய 25-ம் தேதியப் போராட்டம் வெற்றி பெற்ற நிலையில் மீண்டும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த அவர்கள் இந்த மன்றத்தின் முன்னால் போராட்டம் நடத்த அவர்கள் திட்டமிட்டு அறிவித்திருக்கிறார்கள்.

அவர்கள் 25-ம் தேதி போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி இருக்கிறார்கள். அவர்களது போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே போனால்—இப்போது மாணவர்கள் இதில் இறங்காமல் இருக்கிறார்கள். வேறு பல கோரிக்கைகளுக்காகத்தான் மாணவர்கள் இப்போது போராடுகிறார்கள். ஆசிரியர்களின் நலன்களைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் மாணவர்கள் அக்கறை அல்லது ஆதரவு தெரிவித்து இதுவரையில் போராட்டம் நடத்தவில்லை. அப்படிப்பட்டதொரு போராட்டம் வெடித்துவிடுமானால் நிலைமை மேலும் சிக்கலாகிவிடும். இப்போது ஆசிரியர்களிடையே ஒரு கொந்தளிப்பான நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களின் இந்தப் போராட்டத்தை எப்படியாவது உடைக்க வேண்டும் என்று சில தீய சக்திகள் முனைந்திருக்கின்றன. ஆசிரியர்களிடையே ஏற்கெனவே மனக் கொதிப்பு இருக்கிறது. அவர்கள் இந்த மன்றத்தின் முன்னால், இந்தத் தலைமைச் செயலகத்தின் முன்னால் போராட்டம் நடத்துவது என்று வந்தால் அது தமிழகம் பூராவிலும் பரவி விடக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

ஆகவே அரசு இதில் தலையிட்டு அவர்களது நியாயமான கோரிக்கைகளை—ஏற்கனவே அவர்களது கோரிக்கைகள் நியாயமானவை என்று ஏற்றுக் கொண்ட பிறகு கமிஷன் அமைப்பது என்பது அவசியமில்லை. அவர்களது கோரிக்கைகள் நியாயமானவை அல்ல என்று சொல்லிவிட்டால் பிறகு யோசிக்கலாம். ஆனால் அவர்களது கோரிக்கைகள் நியாயமானவை என்று ஒப்புக் கொண்டுள்ளார். நாவலர் அவர்கள் திருச்சியில் நிருபர் கூட்டமொன்றில் பேசுகையில். அவர்களது கோரிக்கைகள் நியாய



1972 மார்ச் 4] [திரு. க. சுப்பு] .

ஒன்றுகும்.
மானவை என்பது அனைவரும் ஒப்புக்கொண்டுள்ள என்பது
அந் நிலையில் அதற்காக ஒரு கமிஷன் போடுவது தலைமைச்
பிரச்னையைத் தள்ளிப்போடக்கூடிய ஒரு தந்திரமாகும் அந்தக்
செயலாளர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள என்ற
குழு உருப்படியான யோசனைகளைச் சொல்லிவிடுவார்கள் ஆசிரியர்களின்
நினைப்பு யாருக்கும் கிடையாது. ஆகவே, அவர்களது
மனக்கசப்பை மேலும் மேலும் வளர்க்காதீர்கள். அவர்கள்
ஒத்துழைப்பு வேண்டுமென்ற அடிப்படையில் இடம்
கோரிக்கைகளைக் கவனிக்க வேண்டும். சிக்கல்கள் வளர பிரச்னையாகும்.
கொடுக்கக் கூடாது. இது ஒரு சமுதாயப் தவிர,
இதை ஒரு சமுதாயப் பிரச்சினையாகக் கருத வேண்டுமே
ஆசிரியர் பிரச்சினையாக மட்டும் கருதக் கூடாது.
இந்தச்
ஆகவே, இதன் அவசர அவசியத்தை உணர்ந்து இது
சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதித்தால் இந்தச்
சம்பந்தமான பல விவரங்களைச் சொல்ல முடியும். ஆகவே இதுபற்றி விவாதிக்க
சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டதாரி
**திருமதி த. ந. அனந்தநாயகி**: தலைவர் அவர்களே, வற்புறுத்த
ஆசிரியர்கள் இன்று அந்தளவிற்கு கோரிக்கைகளை இல்லை
வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது அரசுக்கு நல்லபெயர் சாதாரண
என்பதை ஆணித்தரமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். போராட்டங்களை
மாக, தொழிலாளர்கள்தான் இப்படிப்பட்ட சூழ்நிலையில்
நடத்தி கோரிக்கைகளைக் கொண்டு வரவேண்டிய இன்று
இருப்பார்கள். நம் தமிழக அரசில் ஆசிரியர்கள் கூட ஒரு
தொழிலாளர்கள் மாதிரி போராட்டம் நடத்த வேண்டிய சமுதாயத்
நிலைக்கு வந்திருப்பது மிக வருந்தத்தக்கது. அது நான்
திற்கு மிக மிகக் கேடு விளைவிக்கக்கூடியதாகும் என்பதை
உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இருந்தால்தான் அவர்
குறிப்பாக, ஆசிரியர்கள் திருப்தியாக ஒழுக்கத்தை எதிர்
களின் பராமரிப்பில் மாணவர்கள் மத்தியில் எதிர்பார்க்க முடியும்.
பார்க்க முடியும். நல்ல பழக்கவழக்கங்களை அவசர அவசரமாக
நல்ல கல்வித் தரத்தை எதிர்பார்க்க முடியும். குதித்தார்கள்.
இரண்டாம் ஊதியக் குழுவை அமைத்து தேர்தலில் கூறி
சலுகைகளை எல்லாம் அள்ளித் தெளித்து விடுவதாகக்

இரண்டாவது ஊதியக் குழு அமைத்து அதன் மூலம் நாங்கள் தாராளமாகத் தந்துவிட்டோம் என்று அவசரமாக முடிவு தெரிவித்துத் தேர்தல் நடத்தினார்கள்.

இரண்டாவது ஊதியக் குழுவினால் ஏற்பட்ட அநாமலீஸ் பற்றி பல இடங்களில் அதில் கொஞ்சம் கூடக் கவனம் செலுத்தப் படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற முறை நாங்கள் இதுபற்றிக் கேட்டபோது முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள், அதற்கு என்று ஒரு தனி அதிகாரி இருக்கிறார், ராகவன் அவர்கள் அதைக் கவனித்துக் கொள்வார்கள் என்று. இப்போது அதற்காக ஒரு கமிட்டி அமைக்க இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதற்குப் பின்னால் அந்த அநாமலீஸ்களைக் களையப் போகிறோம் என்று சொல் கிறார்கள். இவற்றைப் பார்க்கும்போது பிரச்சனையைத் தீர்ப்பதில் இவர்களுக்கு அக்கறை இல்லை. பிரச்னையைத் தள்ளிப் போடுவதில் தான் அக்கறை செலுத்துகிறார்கள்.

பல பேர்கள் தங்கள் அதிருப்தியைத் தெரியப்படுத்தியிருக் கிறார்கள், இந்த அநாமலீஸ் பற்றி. ஒரு துறை அல்ல, பல துறை களிலிருந்து குறைபாடுகள் வந்துள்ளன என்பதை இங்கு சுட்டிக் காட்டியிருக்கிறோம். குறிப்பாக பட்டதாரி ஆசிரியர்கள் என்று வரும்போது அவர்கள் கல்லூரிகளில் வேலை செய்தால் ஒருவிதச் சம்பளம், அவர்கள் பள்ளிக்கூடங்களில் வேலை செய்தால் ஒருவிதச் சம்பளம் என்ற நிலை இருப்பதைப் பார்க்கும்போது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அவர்களது கோரிக்கைகள் நியாய மானவை என்று சொல்லிவிட்ட பிறகு ஒரு கமிட்டி அமைக் கிறோம், அநாமலீஸ் பற்றி விசாரிக்க என்று சொல்வது அவர் களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும். அப்படி அவர்களுக்கு ஒரு ஏமாற்றத்தை அளிப்பது நியாயம் அல்ல.

ஆகவே, இப் பிரச்சனையை மேலும் தள்ளிப்போடாமல்— ஆசிரியர்கள் பிரச்னை என்பது சமுதாய அச்சாணிப் பிரச்னை அது. சமுதாயத்தில் அச்சாணி அவர்கள். ஆகவே இப் பிரச்சினையில் அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிடில் அவர்கள் உண்ணாவிரதம் இருப்பது, கோட்டையை நோக்கி வருவது என்றால் அது சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கும். ஆகவே இப் பிரச்னையைத் தள்ளிப் போடாது அவசரமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதற்கா





அரசாங்கத்தின் கவனத்தை இதில் இழுக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இதுபற்றித் தீவிரமாக நாம் விவாதித்து அரசு ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அம்மையார் அவர்களும் இங்கே பட்டதாரி ஆசிரியர்களின் கோரிக்கைகளைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று சொல்லி ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அரசால் அமைக்கப்பட்ட இரண்டாவது ஊதியக் குழு இது பற்றி ஆராய்ந்து ஒரு வித ஊதியத்தை அவர்களுக்கு நிர்ண யித்துத் தந்தார்கள். அந்தக் குழுவினர் பல்வேறு சூழ்நிலை களை யெல்லாம் ஆராய்ந்து. பல்வேறு கோரிக்கைகளையும் ஆராய்ந்து, அப்படிப்பட்ட ஒரு ஊதியத்தை அவர்களுக்கு நிர்ணயம் செய்து, பி.டி. ஆசிரியர்களுக்கும், மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டது போல் ஊதிய உயர்வைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு, பி.டி. பட்டதாரி ஆசிரியர்கள், மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அவர்களை விடக் குறைவாக இருப் பவர்களுக்குக் அதிகமாகக் கொடுத்து இருப்பதாகச் சுட்டிக் காட்டி. அந்த அளவுக்கு அவர்களுக்குத் தரவேண்டுமென்று குறிப் பிட்டார்கள். மற்ற துறைகளிலே இருப்பவர்களுக்கு எந்த அளவுக்கு வசதி, வாய்ப்புகள் தரப்பட்டிருக்கின்றனவோ, ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறதோ. அந்த அளவுக்கு இவர்களுக்கும் தரப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்களைவிடக் குறைவாக உள்ள இன்ஜினீயர்கள், மற்ற துறையில் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்தை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அவர்களுடைய ஊதியம் குறைவாக இருக் கிறது, அந்த அளவுக்குத் தர வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்கள்.

கல்லூரிகளில் இருக்கிற ட்யூட்டர்/டிமான்ஸ்டிரேட்டர்களுக்கு ஈடாக பி.டி. ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். 1—4—1966 வரையில் கல்லூரிகளில் இருக்கும் ட்யூட்டர்களுக்கும், பி.டி. ஆசிரியர்களுக்கும் ஒரே சம்பள விகிதம்

கொடுக்கப்பட்ட இடத்தில், இப்போது சம்பளம், படி எல்லாவற்றையும் சேர்த்து ரூ. 290 கொடுக்கப்படுகிறது. மற்ற துறைகளில் பணிபுரிவோர்களுக்கு வழங்கப்பட்ட அதே அடிப்படையில் பார்த்தால், இங்கே கூட ரூ. 52 கூடுதலாக வருகிறது. அவர்கள் சுட்டிக்காட்டுவது இன்ஜினியர்களுக்குக் கொடுப்பதுபோல் எங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்பதாகும். நாம் இப்போது ஒன்றும் குறைவாகக் கொடுத்து விடவில்லை.

வேறு பல மாநிலங்களில் கொடுக்கப்படும் விகிதங்களை எடுத்துக் கொண்டால், கேரளாவை எடுத்துக் கொண்டால், பி.டி. ஆசிரியர்களுக்கு ரூ. 238 தான் கொடுக்கப்படுகிறது. ஆந்திராவில் ரூ. 217 தான் கொடுக்கப்படுகிறது, இன்னும் குறைவாக மகாராஷ்டிரத்தில் ரூ. 214 தான் கொடுக்கப்படுகிறது. தமிழகத்தில் இவ்வளவு கொடுப்பதால் போதும் என்று நான் கூறுவதற்காக நான் இதைச் சொல்லவில்லை. கொடுத்து இருப்பது ரூ. 290 மேலும் வேண்டுமென்று சொன்னால், அதிலே சில பல சங்கடங்கள் வருகின்றன. அதற்குப் பிறகு அதற்கு முடிவே இருக்க முடியாது என்ற காரணத்தால்தான், தலைமைச் செயலாளரைத் தலைமையாக கொண்டு அமைந்துள்ள குழு இதை ஆராயும், அந்தக் குழுவினிடத்தில் அவர்கள் தங்கள் குறைகளைச் சொல்லலாம் என்று கூறினேன்.

அந்தக் குழு இருக்கிற அனுமலீஸ் எல்லாம் சீர்திருத்தி, தக்க முறையில் இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் தேடும் என்று அரசு நம்புகிறது. பட்டதாரி ஆசிரியர்களும் இதை ஏற்றுக் கொள்ளலாம்.

ஆகவே அவர்களை நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் கட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டிய நீங்கள், இப்படி உண்ணாவிரதம், கிளர்ச்சிகள் போன்றவற்றில் ஈடுபடக் கூடாது என்பது தான். அது விரும்பத்தக்கதல்ல என்று கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றவர்களும் எப்படி நியாயமான கோரிக்கைகளுக்கு என்று ஒன்று சேர்கிறார்களோ, அந்த அளவுக்கு இதிலும் ஒன்று சேர்ந்து தீர்க்கப் பார்க்கிறோம். ஆசிரியர்கள் மாணவர்களிடையே கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் கற்பிக்க வேண்டியவர்கள்



அவர்கள் இப்படிப்பட்ட உணர்ச்சிப்பூர்வமான போராட்டத்தில் மூலமாகத்தான் பிரச்னைகளுக்குப் பரிகாரம் தேடுவதற்கு முடியும் என்ற முடிவுக்கு வருவார்களானால் அது நாட்டிற்குப் பெரும் கேடு விளைவிக்கும், சமுதாயத்திற்குப் பெரும் கேடு விளைவிக்கும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து தீரவேண்டும். எந்தப் போராட்டமாக இருந்தாலும் கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தே தீரும். உலகப் போர் 18-ம் நூற்றாண்டில் ஆரம்பித்தது. 19-ம் நூற்றாண்டில் முடிந்தது. 1939-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது உலகப்போர் 1941-ல் முடிந்தது. ஆசிரியர்கள் உண்ணாவிரதப் போராட்டம் முதலியவற்றைச் செய்வதன் காரணமாக அது கல்வித் துறையை மிகவும் பாதிக்கும். போராட்டத்தின் முடிவுகள் எப்படிப் போய் முடிந்தாலும், அதனால் ஏற்பட்ட தழும்புகள், விளைவுகள் எதிர்காலத்தில் எத்தனை ஆயிரம் பேர் கூடிச் சேர்ந்தாலும் நல்லதொரு நிலைமையை ஏற்படுத்த முடியாது என்பதைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் இந்த அவையின் மூலம் அவர்களை விரும்பி வேண்டி கேட்டுக் கொள்வதெல்லாம், இப்படிப்பட்ட நிலைமைகளில் இறங்காமல், அரசு கொடுத்திருக்கிற நம்பிக்கையின் பேரில், அந்தக் குழு நல்லதொரு தீர்ப்பை அளிக்கும் என்பதை கருத்தில் கொண்டு, அந்தக் குழு அளிக்கின்ற தீர்ப்புக்கேற்ப இந்த மன்றம் ஏற்பாடுகளைச் செய்யும் என்ற அடிப்படையில், அந்தப் போராட்டத்தை அவர்கள் கைவிட்டு, அதன் மூலம் நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களும் அந்தக் குழுவினிடத்தில் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லி, பரிகாரம் தேடிக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்தத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுவதால், இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## (ஆ) பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. ஜேம்ஸ் அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் :—

'That the attack on the students of the St. Xavier's College, Palayamcottah, within the College premises by outsiders in the presence of the Police on 15th February 1972 following the attempted black flag demonstration by those students against the Minister for Health.'

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, 15—2—1972 அன்று மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் கல்லூரியில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்தக் கல்லூரியில் இருக்கும் கல்லூரி யூனியன் அங்கத்தினர்களில், 35 பேர்களில் 28 அங்கத்தினர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே, அமைச்சரவர்கள் மாணவர்களின் எதிர்ப்பை மதித்து, அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டாம் என்று தீர்மானித்து, கலந்து கொள்ள மறுத்துவிட்டார்கள். ஆக, அந்த நிகழ்ச்சி நடைபெறவில்லை. இருந்தாலும், ஒரு வேளை அமைச்சரவர்கள் அங்கே வருவார்களோ என்று எண்ணி, அப்படி அமைச்சர் வருவதை எதிர்க்கின்ற மாணவர்கள், அமைச்சரவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்ட வேண்டும் என்று முடிவு செய்து, போலீஸ் இலாகாவிற்கும் அதுபற்றி அறிவிப்புக் கொடுத்துவிட்டு, கல்லூரி நிர்வாகத்தினருக்கும் அறிவிப்புக் கொடுத்து விட்டு, கருப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். அப்படி ஏற்பாடு செய்து கல்லூரி விளாகத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அமைச்சர் வருவதாக இருந்து வரவில்லை என்ற காரணத்தால், அந்தச் செய்தியை அறிந்ததும், தமிழ்ப் படை என்ற ஒரு வகுப்பினர் அந்தக் கல்லூரி விளாகத்திற்கு வந்து, அங்கே நுழைந்து, கருப்புக் கொடி காட்ட முனைந்தவர்களை தாக்கியிருக்கிறார்கள். ஆக அந்த நிகழ்ச்சி நடை பெறும் போதே அங்கே போலீஸ்காரர்களும் நின்று கொண்டு இருந்திருக்கிறார்கள். போலீஸ்காரர்களும் அந்த நிகழ்ச்சி நடைபெறாமல் தடுக்காமல், மாணவர்களுக்கு எந்தவித பாதுகாப்பும் கொடுக்காமல் இருந்திருக்கிறார்கள். பின்பு தாக்கப்பட்ட மாணவர்கள்





பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த மருத்துவ நிலையத்தில் அனுமதிக்கப்பட்டார்கள். அன்று மாலையில், அந்த மாணவர்களைத் தாக்க வருகிறார்கள் என்கிற செய்தியை அந்த மாணவர்களும், ஆஸ்பத்திரி நிர்வாகிகளும் அறிந்து, மாணவர்களை ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேற்றி இருக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சி சென்ற மாதம் 15-ம் தேதி நடந்திருக்கிறது. நான் கூட அப்பொழுது வேறு காரியமாகப் பாளையங்கோட்டைக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது கல்லூரியில் பார்த்தேன் ; பாளையங்கோட்டை மருத்துவ நிலையத்திலும் பார்த்தேன். நானே நேரிடையாகப் போய் விசாரித்து இந்த நிலைமைகளை அறிந்து வந்தேன், என்பதை மாண்புமிகு முதல் அமைச்சரவர்களுக்குத் தெரிவிக்கிறேன். ஆக, இந்த நிலை பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் கல்லூரியில் மட்டுமின்றி, தமிழ் நாடு பூராவும் நடைபெறுகிறது ; திராவிட முன்னேற்றக் கழகத் தொழிலாளர்கள், மாணவர்கள், மத்திய அரசாங்கத்தவர்கள் யாராக இருந்தாலும். தாங்கள் விரும்பாதவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டலாம் என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்திராத மற்ற தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றவர்களுக்கு அப்படிப் பட்ட உரிமை மறுக்கப்படுகிறது என்கிற நிலைதான் இருக்கிறது. இதை பல்வேறு நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தால், இங்கே ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறதா இல்லையா என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய நிலைதான் ஏற்படுகிறது என்பதை தலைவர் அவர்களே தங்கள் மூலம் முதல் அமைச்சரவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆக இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்த விஷயத்தை விவாதிக்க, இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பாளையங்கோட்டையிலுள்ள செயின்ட் சேவியர் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் மூலம் விவாதிக்க வேண்டும் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். மாணவர் பேரவையில் 15—2—1972 அன்று நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். மாண்புமிகு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 4

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். மாணவர்களிடத்தில் மாச்சரியம் ஏற்பட்டிருந்தால், அந்த மாச்சரியத்தை அதிகமாக வளர்க்க வேண்டாம் என்ற வகையில் அமைச்சரவர்கள் அந்த நிகழ்ச்சியை ரத்து செய்து விட்டார்கள். அதற்குப் பிறகு கல்லூரிக்கு எதிரே மாணவர்களிடையே சச்சரவு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் லத்தி சார்ஜ், தடியடி ஒன்றும் நடைபெறவில்லை. கருப்புக் கொடி காட்டும் முயற்சியும் தடுத்து நிறுத்தப்படவில்லை. பல இடங்களில் கருப்புக் கொடி காட்டுகிறார்கள். கருப்புக் கொடி காட்டும் அளவுக்கு வெறுப்புணர்ச்சி இருந்தால், அந்த முயற்சிகளுக்கு இடம் தந்து கொண்டுதான் இருக்கிறோம்.

ராஜபாளையத்தில் கூட கருப்புக் கொடி காட்ட வேண்டும் என்றவர்களுக்கு இடம் ஒதுக்கிக் கொடுத்து இருந்தோம். அப்படி இருந்தும், அமைச்சர் மாதவன் வரும்போது, அவர்களுடைய காரை கழியாலும், தடியாலும் அடித்து காரை சேதப்படுத்தும் அளவுக்கு நடந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகும், விளக்கை அணைக்காமல் கருப்புக் கொடி காட்ட அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். அதன் பிறகு முதல் அமைச்சரவர்களும், நாங்களும் வருகிறபோது கருப்புக் கொடி காட்டி இருக்கிறார்கள். கொடிகள் கட்ட குச்சிகளே போதும். இருந்தாலும், அவைகள் தடிகளிலும், தடிக்கம்புகளிலும் இருந்தன. கொடிக்கு குச்சியே போதும் என்று அவர்கள் இல்லை. இருந்தாலும்கூட, கறுப்புக் கொடிகள் காட்ட அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். அண்மையில் திருப்புவனத்திற்கு நான் போன போது கூட, கறுப்புக் கொடி காட்ட ஏற்பாடு செய்தார்கள். வெறுப்புணர்ச்சியைக் காட்டும் அளவுக்கு கறுப்புக் கொடி காட்ட அனுமதிக்கப் படவில்லை என்பதில்லை. அனுமதி வழங்கப்படுகிறது, வன்முறையைக் கையாளாத வரையில். பாளையங்கோட்டையில் அதற்குப் பிறகும் போலீசார் தடியடி, லத்தி சார்ஜ் நடைபெறவில்லை. இருசாராருக்கும் இடையே சச்சரவு ஏற்படும் என்கிற சூழ்நிலையில் அமைச்சர் போகாமல், போலீசார் தலையிட்டு ஓரளவுக்கு அமைதி ஏற்பட்டிருக்கிறது. மாணவர்கள் கலைந்து செல்லவும் வழிவகை செய்திருக்கிறார்கள். பெரும் நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறவில்லை என்று போலீஸ் தரப்பினர் அறிவித்திருக்கிறார்கள். இப்பொழுது அங்கே அமைதி நிலவுகிறது.



[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தடியடி போன்ற வேறு நிலைகள் அங்கே ஏற்படவில்லை. அங்கே அமைதி நிலவுகிறது, என்று கருதுவதால். இந்தத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : ஒரு கிளாரிபிகேஷன் சார். என் ஒத்தி வைப்புத் தீர்மானத்திலும் நான் லத்தி சார்ஜ் நடந்ததாகக் கூறவில்லை. நான் கூறியது ப்ளாக் ஃப்ளாக் டெமான்ஸ்ட்ரேஷன் செய்யவிருந்த மாணவர்களை வெளியார் வந்து தாக்கியிருக்கிறார்கள் என்பது. அந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மேலும் நடைபெறாமல் இருக்க வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, தமிழர் படை என்று ஏதோ பாளையங்கோட்டையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி மதுரையில் இருக்கிற தாகத்தான் தெரியும். அதையும் கூட வேண்டாம் என்று தான் சொல்லியிருக்கிறது. திருநெல்வேலியில் அப்படிப்பட்ட படை இல்லை. சமாதானத்தை மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு, விபரீத விளைவுகள் ஏற்படாமல் போலீசாரே தடுத்து நிறுத்தி, அமைதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதுதான் போலீஸ் தரப்பினர் கொடுத்திருக்கும் செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத். தீர்மானத்திற்கு அவசியம் இல்லை. ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## (இ) திருப்பூர் பனியன் தொழிற்சாலை தொழிலாளர் வேலை நிறுத்தமும் அதன் விளைவுகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து, திரு. பொன்னப்ப நாடார். திரு. க. சுப்பு, திரு ஜே ஜேம்ஸ் திரு வா மை அப்துல் ஜப்பார், திரு. என். கே. பழனிசாமி ஆகியோர் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

'About 8,000 workers of Banian Factories in Tiruppur went on strike since 7th February 1972 to press their demands. Due to continued strike the production has seriously suffered resulting in heavy loss besides the workers losing their wages for a number of days continuously adding labour unrest in Tamil Nadu.'

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த அவசர முக்கியமான பிரச்னை பற்றி இந்த மன்றத்தின் நேரத்தை ஒதுக்கி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கோருவதற்காக இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

எட்டாயிரத்திற்கும் மேலான தொழிலாளர்கள் திருப்பூர் பகுதியில் 7-2-1972 முதல் தங்கள் கோரிக்கையை அடிப்படையாக வைத்து வேலைநிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதில் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. பலரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் பொதுவாக தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒரு 'லேபர் அன்ரெஸ்ட்' அமைதியின்மை நிலவும் தன்மையைப் பார்க்கிறோம். கோவை ஜில்லாவில் நடக்கின்ற இந்தப் போராட்டமானது தமிழகம் முழுவதற்குமான ஒரு போராட்டமாகத் திகழ்வதற்கான ஒரு சூழ்நிலை உருவாகிக் கொண்டு இருக்கிறது. ஆகையால், இந்த மாதிரி தொழிலாளர் கொள்கையை அதிகமாகக் கவனிக்கிறோம் என்று பறைசாற்றிக் கொள்ளும் நமது அரசாங்கம் இதற்கு என்ன செய்ய வேண்டுமென்று விவாதிப்பது நமது கடமையாக இருக்குமென்று கருதுகிறேன். தொழிலாளர் நலன் பாதிக்கப்பட்டிருக்கிறது. பலரும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் தொழிலாளர் அரசு என்று கூறிக்கொள்ளும் இந்த அரசு இப்பிரச்னைக்குத் தீர்வு காண என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை விவாதிப்பது பொருத்தமாக இருக்கும். குறிப்பாக இந்த நிகழ்ச்சிகளில் அரசியல் கலக்காமல் தொழில் துறையில் இருப்பவர்கள், லேபர் யூனியன் மட்டும் ஈடுபட்டிருக்கிறார்கள். அதில் எந்த வித அரசியலும் இல்லை. ஆகையால் இந்தப் பிரச்னையை உடனடியாக விவாதிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு இதன் மூலமாக முதலமைச்சர் அவர்கள் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிச்சாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே சர்க்கார், முதலாளிகள்—தொழிலாளிகள் தகராறில் தலையிட்டு ஊதிய உயர்வுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் தற்போது ஊதிய உயர்வு கொடுக்கமாட்டேன் என்று சொல்லி ஹைகோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். ஏற்கெனவே 'மினிமம் வேஜஸ் கமிட்டி' அந்த ஊதிய உயர்வு சரி என்று சொல்லி இருக்கிறது. அப்படி இருந்தும் சர்க்கார் ஊதிய உயர்வை





அமுலாக்காமல் தவறியது. அது தான் காரணம். ஆகையினால் உடனடியாக முதலாளிகளையும் தொழிலாளர்களையும் கூப்பிட்டு ஏற்கனவே ஒப்புக் கொண்ட ஊதிய உயர்வை அமுலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். சர்க்கார் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, ஊதிய உயர்வு கோரியும், வேலைப் பளுவை நிர்ணயிக்கக் கோரியும் திருப்பூரில் உள்ள சுமார் 600 பனியன் தொழிற் சாலைகளைச் சேர்ந்த 7,000 தொழிலாளர்கள் 7—2—1972 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அச்சு. பனியன் பொதுத் தொழிலாளர் சங்கம் திருப்பூர் (சி.ஐ.டி.யூ) பனியன் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (தி.மு.க) பனியன் தொழிற்சாலைகள் தொழிலாளர் சங்கம், திருப்பூர் (ஏ.ஐ.டி.யூ.சி) ஆகிய சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதற் கொண்டு ஊதிய உயர்வு பற்றியும் வேலைப் பளுவை மாற்றி அமைப்பது பற்றியும் நடைபெற்று வந்த பேச்சு வார்த்தைகளின் பயனாக 31—1—1972-ம் நாளன்று கோவை தொழிலாளர் நல அதிகாரி அவர்களால் கொடுக்கப்பட்ட யோசனை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

எனவே, 7—2—1972-ம் நாள் முதல் வேலை நிறுத்தம் தொடங்கப் பட்டது. மீண்டும் 14—2—1972-ம் நாளன்று கோவைத் தொழிலாளர் நல அதிகாரி அவர்களால், தற்போது பெற்றுவரும் ஊதியத்தில் தற்காலிகமாக 10 சதவிகிதம் உயர்த்தித் தருவதற்கும் வேலைப்பளு பற்றிய பிரச்னையை நடுவர் தீர்ப்பிற்கோ தொழில் கோர்ட்டுக்கோ விட்டு விடலாம் என்றும் யோசனை கூறப்பட்டது. இந்த இடைக் கால உடன்பாட்டிற்கான யோசனையை நிர்வாகத்தினர் ஒத்துக் கொண்ட போதிலும், தொழிற் சங்கங்களின் சார்பில் மேற்படி யோசனை ஒத்துக் கொள்ளப்படாமல் தற்காலிக ஊதிய உயர்வு 25 சதவிகிதமாக உயர்த்தித் தரப்பட வேண்டும் என்று கோரப் பட்டது. வேலை நிறுத்த நிலைமையை ஒட்டி, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் கோவை தொழிலாளர் நலத் துணை ஆணையாளரையும், தொழிலாளர் நல அதிகாரியையும்

17—2—1972-ம் நாள் கலந்து வேலைப்பளு பற்றி ஆராய்ந்து அதை மாற்றியமைப்பதற்கான யோசனைகளைக் கூறுமாறு கேட்டுக் கொண்டார். வேலைப்பளு பற்றி ஆராய்ந்த பின்னர், கோவைத் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர், தொழிலாளர் நல அதிகாரி ஆகியோர் 21—2—1972-ம் நாள் மீண்டும் கூடி தொழில் தகராறு தீர்வதற்கான பல்வேறு யோசனைகளைக் கூறினார்கள். அதாவது, தற்போது பெற்றுவரும் ஊதியத்தில் தற்காலிகமாக 15 சதவிகிதம் உயர்த்தித் தருவது என்றும், ஊதியத்தையும், வேலைப் பளுவையும் இணைத்து நிர்ணயிப்பது சம்பந்தமான பிரச்சினையை நடுவர் தீர்ப்பிற்கோ அல்லது தொழிற் கோர்ட்டுக்கோ விட்டு விடலாம் என்றும் கூறப்பட்டது. ஆனால், இந்த யோசனைகளைத் தொழிற் சங்கங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆதலால் வேலை நிறுத்தம் நீடிக்கிறது.

இங்கே பேசிய உறுப்பினர்கள் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறினார்கள். ஒன்றுமே தர முடியாது என்று சொன்ன முதலாளிகளை இப்போது 15 சதவிகிதம் தர வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் கேட்பது 25 சதவிகிதம் தந்தால்தான் ஏற்றுக் கொள்வோம் என்று. நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர் போராட்டம் என்றால், நாம் கேட்கும் கோரிக்கைகள் அத்தனையும் உடனடியாக நிறைவேறும் என்று எதிர்பார்ப்பது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உதவி புரியாது. கேட்கும் கோரிக்கைகளில் எந்த அளவுக்கு வெற்றி கிடைக்கிறதோ அதை ஏற்றுக் கொண்டு, பிறகு விட்ட இடத்திலிருந்து சமயம் கிடைக்கும் போது போராடுவது என்பது ஏற்கனவே தொழிற் சங்க பாரம்பரியமாக இருந்து வந்தது. இப்போது அந்த வழிவகை குறைந்து வருகிறது என்பதை தொழிலாளர் தலைவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன். இப்போராட்டத்தில் ஐந்து தொழிற் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. என்னிடத்தில் சிலர் வந்து 'இந்த அளவுக்கு இருந்தால் போதும். நாங்கள் ஏற்றுக் கொள்வோம்; ஆனால் பிற சங்கங்கள் நிர்ப்பந்திக்குமே' என்று சொல்லுகிறார்கள். இப்படித் தொழிற் சங்கங்கள் ஒன்றுக்கொன்று போட்டி காரணமாக அரசாங்கத்தின் நியாயமான முடிவுக்கு ஆதரவு தராமல் வேலை நிறுத்த நிலைமை உண்டாக்கப்பட்டு வருகிறது.



இன்னொன்றையும் சொல்லிக் கொள்ளுவேன். திருப்பூருக்கு நம் முதல்வர் அவர்கள் இந்த மன்ற உறுப்பினர் திரு துரைசாமியின் திருமணத்திற்குப் போகிறார். இன்று பத்திரிக்கையில் பார்த்தேன். "முதலமைச்சர் அங்கு வரும்போது துக்க நாள் கொண்டாடுவதற்குப் போராட்டக் குழு தீர்மானித்திருக்கிறது" என்று. இது எங்கே கொண்டு போய் விடும். 'இது அரசியல் அல்ல. தொழிற் சங்கப் பிரச்னை' என்றார்கள். அதிலும் தொழிலாளர் தலைவர், இந்த மன்ற உறுப்பினர் துரைசாமி வீட்டுத் திருமணத்திற்குப் போகும்போதுதானா துக்க நாள் கொண்டாட நாள் கிடைத்தது? வேறு நாள் கிடைக்கவில்லையா? இதை யோசிக்கும்படி தொழிற்சங்கத் தலைவர்களை வேண்டுகிறேன். தொழிலாளர்களுக்கும் இந்த மன்றத்திற்கும் சொல்லிக் கொள்ளுவேன். அரசு இப் பிரச்னையில் இன்னும் கலந்து ஆலோசிக்கத் தயாராயிருக்கிறது. வேலை நிறுத்தத்தை ஒத்தி வைக்கச் சொல்லவில்லை. போராட்டத்தில் விபரீத நிலைமையைக் கைவிட்டு அரசுடன் கலந்து பேச விரும்பினால் நல்லதோர் முடிவு காணத் தயாராயிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. பேசியதை விட அதிகமாக நிறைவேற்ற வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள். இங்கு பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், 'தொழிலாளர் அரசு என்று பறைசாற்றிக் கொள்ளுகிறீர்கள். என்ன செய்தீர்கள்'? என்று கேட்டார்கள். நாங்கள் பறை சாற்றுவது வெறும் பறை அல்ல; செய்ததை நாட்டில் சொல்கிறோம். அது உங்களுக்குக் கஷ்டமாக இருந்தால் அதற்கு நாங்கள் குற்றவாளிகள் அல்ல. ஆகவே, பனியன் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இன்னும் எந்த அளவுக்கு அரசு துணை செய்ய முடியுமோ அதைச் செய்ய அரசு தயாராக இருக்கிறது. தொழிலாளர் தலைவர்களும் கிடைத்த வெற்றியை பயன்படுத்தி பிறகு சந்தர்ப்பம் வாய்க்கும் போது, விட்ட இடத்திலிருந்து மறுபடியும் கோரிக்கைகளை வலியுறுத்தலாம். இந்தியாவிலேயே தொழிற் சங்கத்தை முதன் முதலில் தொடங்கிய தமிழ்ப் பெரியார் திரு.வி.க., சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் போன்ற தலைவர்கள் கூட அந்த நாளில் வைத்த கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்ற வேண்டுமென்று போராட

வில்லை. எடுத்துக் காட்டாக 14 கோரிக்கைகளைக் கேட்டால், 10 கிடைத்தது என்றால் அதுவரை நிறைவேற்றிக் கொண்டு இடைக் காலம் விட்டு, பின் விட்ட இடத்திலிருந்து போராடினார்கள். அந்தத் தன்மையை தொழிற் சங்கத் தலைவர்கள் அருள் கூர்ந்து பின்பற்ற வேண்டும். ஆகவே, 5-ம் தேதி திருமணத்தில் துக்க நாள் கொண்டாடும் அவல நிலையிலிருந்து தொழிலாளர்களை விடுவிப்பதற்கு தொழிற்சங்கத் தலைவர்கள் முன்வர வேண்டும்.

ஆகவே அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறது இப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு என்று தெரிவித்து, மேலும் நியாயமான அளவு துணை நிற்க அரசு தயாராக இருக்கிறது என்று கூறி, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, 1972-73-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம் ;

## (3) 1972-73-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி

**திரு. கு. காமாட்சி :** பேரவைத் தலைவரவர்களே, தொடர்ந்து பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி. இந்தப் பேரவையிலே நமது முதலமைச்சர் அவர்கள் நல்லதொரு மிச்சம் கொண்ட வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த போது இங்கே பல உறுப்பினர்கள் ஆதரித்துப் பேசினார்கள். அதிலே குறிப்பாக நமது மதிப்புக்குரிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த பெரியவர் மணலி அவர்கள் இந்த பட்ஜெட்டை வரவேற்றார்கள். வாழ்த்தினார்கள். பாராட்டினார்கள். ஆனால் அதே நேரத்தில் அதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தமிழ் நாட்டுக் கிளைச் செயலாளர் தோழர் கல்யாணசுந்தரம் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே 'இது ஒரு ஏமாற்றம் தரும் பட்ஜெட். இந்த





பட்ஜெட்டில் மொழிக் கவர்ச்சிதான் இருக்கிறது ; கொள்கைக் கவர்ச்சி இல்லை' என்றெல்லாம் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை

அது மட்டுமல்ல. விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க வேண்டும் என்பதிலே இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை இந்த பட்ஜெட் மிகத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. நமது உணவு அமைச்சர் அவர்கள்கூட நேற்று பேசுகின்றபோது தமிழ் நாடு வாணிபக் கழகம் ஒன்றை ஏற்படுத்தி, உணவுப் பொருள்களின் விலையேற்றத்தைக் கட்டுப் படுத்துவதாகச் சொன்னார்கள்.

இதைப்பற்றி திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும், உற்பத்தியைப் பெருக்கவும், நியாய விலையில் பொருள்கள் கிடைக்கவும் உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. அதைச் செய்வதற்குப் பதிலாக, அதற்கு மாறாக தமிழ் நாடு வாணிபக் கழகம் என்று ஒன்றை ஏற்படுத்தி, உணவுப் பொருள் விநியோகத்தை 51 கொள்ளை லாபக்காரர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள் என்று தன் அறிக்கையில் கூறியிருக் கின்றார்கள். ஆனால் இங்கே சட்டமன்றத்திலே அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த பட்ஜெட்டை ஆதரித்தும், பாராட்டியும் பேசியிருக்கிறார்கள். எதற்காக இப்படிச் செய்கிறார்கள் என்பது புரியவில்லை. இங்கே, சட்ட மன்றத்திலே ஒன்றைச் சொல்கிறார்கள். வெளியே அதற்கு மாறாக, எதிர்த்துப் பேசி வருகிறார்கள். வார்த்தை அலங்கார பட்ஜெட் என்றும். ஏமாற்றம் தரும் பட்ஜெட் என்றும் பேசுகிறார்கள்.

அடுத்து, விலை ஏற்றம் அதிகமாகிக் கொண்டே போகிறது. . .

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, கல்யாண சுந்தரம் அவர்களின் அறிக்கையைப் பற்றி இங்கே குறிப்பிட்டார் கள். அவர் கூறியிருப்பது இந்த தமிழ் நாடு வாணிபக் கழகம் எதற்கு? ஏற்கெனவே மத்திய அரசில் 'ஃபுட் கார்ப்பரேஷன்' இருக்கிறதே. அதற்குப் பின்னால் இங்கே ஒரு கார்ப்பரேஷனை அமைத்து, அதை 51 வியாபாரிகளிடம் ஏன் ஒப்படைக்க வேண்டும்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 4

என்றுதான் தன் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அமைச்சருடைய கருத்துக்களைப்பற்றி அவர் எதுவும் சொல்லவில்லை என்பதைக் கனம் உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி: அந்த அறிக்கைக்கு அமைச்சரவர்கள் மறுப்புத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நியமனம் செய்யப்படக்கூடிய 51 பேரையும் எப்படி எப்படி இந்த அரசு நியமிக்கும் என்பதை விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி நியமிக்கப்படும் 51 பேரும் கொள்ளை லாபக்காரர்கள் என்றால், இந்த அரசாங்கத்தைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்க ஆசைப் படுகிறேன்.

அரிசி விலை ஏறிவிட்டது என்று சொல்கிறார்கள். ஐந்தாண்டு காலத்திற்கு முன்பு அரிசி என்ன விலை, இப்பொழுது அரிசி என்ன விலை என்பதைப் எண்ணிப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்போது எங்கு பார்த்தாலும் அரிசி கிடைக்கிறது; தாராளமாகக் கிடைக்கிறது. ஒரு சில இடங்களில் வேண்டுமானால் விலை சற்று ஏறி இருக்கலாம். ஆனால் ஐந்தாண்டு காலத்திற்கு முன்பு இருந்த விலையை விட குறைவாகத்தான் இருக்கிறது. என் பகுதியிலே அரிசி ரூ. 1.40, 1.50-க்குக் கிடைக்கிறது அங்கே அரிசியின் ரகத்தைச் சொன்னால் புரியாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் பெயரைச் சொன்னால் கட்டைச் சம்பா அரிசி கிடைக்கும். அதற்கு அடுத்த ரகம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் பெயரைச் சொன்னால் ரூ. 1.70க்கு கிடைக்கும். திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரைச் சொன்னால் அழகான கிச்சடிச் சம்பா அரிசி கிடைக்கும். இப்படி எங்கு பார்த்தாலும் இப்போது அரிசி தாராளமாகக் கிடைக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது.

தேர்தல் காலத்தில் நாங்கள் அளித்த வாக்குறுதியினை படிப் படியாக நிறைவேற்றி வருகிறோம். பஸ் நிறுவனத்தை தேசிய மயமாக்குவோம் என்று தேர்தல் காலத்திலே வாக்குறுதி கொடுத்தோம். அதை காற்றில் பறக்க விடாமல் நிறைவேற்றி வருகிறோம். அப்போதுகூடத்தான் டி.வி.எஸ். நிறுவனம் இருந்தது. ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு டி.வி.எஸ். நிறுவனத்தை, நாங்கள் அளித்த வாக்குறுதிக்கு ஏற்றபடி தேசியமயமாக்கி இருக்கிறோம்.



1972 மார்ச் 4] [திரு. கு. காமாட்சி]

தொழிலாளர் குறைபாடுகளை இந்த அரசு எவ்வளவோ நல்ல முறைகளில் அணுகியிருக்கிறது. மூடிக் கிடந்த மில்களைத் திறப்பதற்காக நமது தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும், நமது முதலமைச்சர் அவர்களும் எத்தகைய அரிய முயற்சிகளை எடுத்துக் கொண்டார்கள் என்பதை நன்கறிவோம். ஆனால் இதற்கு முந்தைய அரசில் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினால் துப்பாக்கிச் சத்தம் தான் கேட்கும். துப்பாக்கிப் பிரயோகத்தினால் போராட்டங்களை அடக்கி வந்தார்கள். இன்று அந்த நிலை மாறி, இந்த அரசு எவ்வளவு நிதானமாக நடந்து கொள்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் போக்குவரத்து வசதி நல்ல முறையில் செய்து கொடுத்திருக்கிறார்கள். என் தொகுதியில் திருவரம்பூர்-தஞ்சை சாலையில் பெரிய, பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. எனவே, போக்குவரத்துக்கு வசதியாக இரண்டு பெரிய பாலங்கள் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். அதற்கிணங்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போன்று அரியமங்கலம் பகுதியிலும், சுற்றுப்புற கிராமங்களிலும் நல்ல குடி தண்ணீர் வசதி இல்லாமல் இருந்தது. இந்தக் குறையையும் போக்கி, இந்த அரசு நல்ல குடிநீர் கிடைக்க வசதி செய்து கொடுத்திருக்கிறது. அதற்காகவும் நான் இந்த அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மணிகண்ட பகுதியில் நல்ல வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதோடு எல்லாக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகளும் போடப்பட்டிருக்கின்றன. அதற்காகவும் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கட்டளை வாய்க்கால் சீரமைப்புச் செய்யப்படுவதற்கு திட்டத்தில் எடுத்திருக்கிறார்கள். காட்டளையை மறு பரிசீலனைத் திட்டத்தில் எடுத்திருக்கிறார்கள் அதேபோல், கிளி அதற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், கிளி வாய்க்கால், உய்யக் கொண்டான் கட்டளை, உயர்மட்டக் கட்டளை கால்வாய்களையும் மறுபரிசீலனைத் திட்டத்தில் எடுத்துக் கொண்டு சீரமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கு. காமாட்சி] [1972 மார்ச் 4

அடுத்தபடியாக, பி.எச்.இ. காலனியும், என்.ஏ.பி. தொழிலாளர் காலனியும் நல்ல வளர்ச்சி பெறாமல் இருக்கின்றன. இந்த இரு பகுதிகளையும் டவுன்ஷிப்பாக எடுத்து, வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில் வறட்சியானப் பகுதிகளாகிய வேங்கூர், சோழமா தேவி, நவல்பட்டு, காத்தலூர் பழங்கனாங்குடி, எலந்தம்பட்டி ஆகிய கிராமங்களுக்கு நல்ல குடி தண்ணீர் வசதி செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பகுதிகளுக்கு அங்குள்ள துப்பாக்கித் தொழிற்சாலைக்குத் தண்ணீர் செல்லும் நீர்த் தேக்கத்திலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூத்தப்பார்-நடராஜபுரம் சாலையையும், தோகமலை-ஆலந்தூர் சாலையையும் அரசே ஏற்று பணிகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மணிகண்ட பகுதியில் பெரிய தொழிற்சாலைகள் எதுவும் இல்லை. எனவே, அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில், அங்கு ஏதாவது ஒரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருச்சி நகரம் தமிழகத்திற்கு மையமாக, நடு நாயகமாக இருக்கிறது. தலைமைச் செயலகம் அங்கே இருப்பதற்கு வசதியான ஒரு நல்ல இடமாக இருக்கிறது. எனவே, திருச்சி நகரத்தை ஒரு மாநகராமாக்கி, ஒரு பல்கலைக் கழகமும் அமைத்து இதர தேவையான வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கே. பி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் களே, இந்த 1972-73-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்லா மென்று ஆசைப்படுகிறேன்.

தமிழ் நாட்டிலே மதுவிலக்கை ரத்து செய்ததால் அரசுக்கு அதன் மூலமாக 35 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. அதனால் இந்த நிதிநிலை அறிக்கையில் புதிதாக வரி எதுவும் போட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. வரிகளைக் குறைத்து வசதிகள் அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.



1972 மார்ச் 4] [திரு. கே. பி. கோபால்]

அடுத்து யுத்த நெருக்கடியின்போது இந்த அரசாங்கம் படியரிசித் திட்டத்தைக் கைவிட்டுவிட்டது. படியரிசித் திட்டத்தைக் கைவிட்டதால் அரசுக்கு நான்கு கோடி ரூபாய் மீதம் ஏற்படுகிறது. மேலும் துரித பஸ் கட்டணம், சினிமாக் கட்டணம் ஆகியவைகளின் வரி உயர்வால் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் வரி போட்டாகிவிட்டது. எனவே, யுத்த நெருக்கடி காரணமாகப் போடப்பட்ட இந்த வரிகள் வாபஸ் பெறப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. வாபஸ் பெறப்பட வில்லை.

1972-73-ஆம் ஆண்டில் சுமார் 400 கோடிக்கு வருமானம் கிடைக் கும் என்று கூறப்பட்டிருக்கிறது. எனவே என்.ஜி.ஓ. க்கள் தாங்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும் என்று எதிர் பார்த்தார்கள். மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட காரணத்தினால் மற்ற மாநிலங்களைப் போல என்.ஜி.ஓ. க்களுக்குக் கிடைக்கிற பஞ்சப்படி உயர்வு கிடைக்கக்கூடும் என்றும் மருத்துவப்படி கிடைக்கும் என்றும் எதிர்பார்த்தார்கள். ஆனால் நமது மாநில என்.ஜி.ஓ. க்கள் தங்களுக்கு எவ்வித சலுகையும் அளிக்கப் படாதது குறித்து மிகுந்த ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள் என் பதாக நடுநிலைப் பத்திரிகையான அலை ஓசையில் தலையங்கம் எழுதியிருக்கிறது.

வருங்கால சமுதாயத்தை நல்ல முறையில் அமைத்துத் தருகிற சிற்பிகளாகிய ஆசிரியர்களின் நிலை சரியான முறையில் கவனிக்கப் படவில்லை. அவர்கள் பெரிதும் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதை இன்று காலையில் நடந்த ஒத்திவைப்புப் பிரேரணைகளின் மீதான விவாதத்தின்போது பலர் எடுத்துக் கூறினார்கள். ஆசிரியர் களது குறைகளை நிவர்த்தி செய்ய நிதிநிலை அறிக்கையில் தக்க ஏற்பாடு செய்யப்படவில்லை. பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று விட்டிருப்பது மிகவும் வருந்தத் தக்கதாகும். இது பற்றி மேலவை உறுப்பினர்களான திரு. அறிவுடைநம்பி, திரு. ஈஸ்வரமூர்த்தி, திரு. சந்தோஷம், திரு. முத்துசாமி ஆகியோர் முதல் அமைச் சரைக் காணச் சென்றபோது கூட இவர்களைச் சந்திக்காது— அவர் களது நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முன்வராத நிலை காரணத்தினால் அவர்களுடையே போராட்டம் துவங்கும் நிலை உருவாகியிருக்கிறது.

[திரு. கே. பி. கோபால்] [1972 மார்ச் 4]

நமது அரசுக்கு இவ்வளவு அதிகமான வருமானம் வருகின்ற காரணத்தினால் மாணவர்கள் இவ்வாண்டு தங்களுக்கு பி.ஏ. படிப்புக்கு இலவசக் கல்வி வசதி அளிக்கப்படும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அந்த வசதி அளிக்கப்படாததோடு கூட பி.யூ.சி.க்கு அளிக்கப்பட்ட வசதியை தங்களது சாதனையாக கழக அரசு கூறிக் கொண்டிருக்கிறது. உண்மையில் 1966-ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி தீர்மானத்தின்படி 1967-இல் மேலவை எதிர்க் கட்சித் தலைவர் திரு. ராஜாராம் அவர்கள் கொண்டு வந்த தனிநபர் மசோதா நிறைவேற்றப்பட்டு அந்த அடிப்படையில்தான் புகுமுக வகுப்புக்கு இலவசக் கல்வித் திட்டம் வந்ததே தவிர—அதை கழக அரசின் சாதனையாகக் கூறிக்கொள்வது வேதனையாக இருக்கிறது.

விவசாய வருமான வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது. பூச்சிக் கொல்லி மருந்துகள், உரங்கள் ஆகியவற்றின் விலைகள் எல்லாம் அதிகரித்திருக்கிறது. ஆனால் விவசாயிகள் உற்பத்தி செய்கிற விளைபொருள்களுக்கு நியாயமான விலை கொடுக்கப்படவில்லை. அவர்கள் செலுத்திவரும் மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும் என்று எதிர்பார்த்தார்கள். அதற்குமாறாக முன்பு 1½ ரூபாயாக இருந்த பஞ்சாயத்து செஸ்ஸை 2½ ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள்.

இன்னும் மதம் மாறிய கிறிஸ்துவர்கள், நாவிதர்கள் சலவைத் தொழிலாளர்கள் போன்றோர்கள் தங்களை மிகவும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்று கோரி வந்தார்கள் ஆனால் அவர்களும் ஏமாற்றமடைந்தோர் பட்டியலில் தான் இடம் பெற்றிருக்கிறார்கள்.

கைத்தறியாளர்களுடைய நிலைமையைப்பற்றி அருப்புக்கோட்டை உறுப்பினர் திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் குறிப்பிட்டார்கள். நூல்கள் விலை ஏறியிருக்கிறது. நியாயமான விலையில் நூல் கிடைக்கவில்லை. அவர்களுக்கு நியாயமான—மலிவு விலையில் நூல் கிடைப்பதற்கு எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை என்பது வேதனை அளிக்கக் கூடியதாகும்.

தினமணிப் பத்திரிகையில் மற்ற மாநிலங்களில் போடப்பட்டுள்ள மோட்டார் வாகன வரியைவிட நம் மாநிலத்தில் அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது என்பதாகத் தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அந்த வரியை மேலும் 10%



1972 மார்ச் 4] [திரு. கே. பி. கோபால்]

அதிகப்படுத்த உத்தேசித்திருப்பது சரியல்ல இந்துப் பத்திரிகை தன் தலையங்கங்களில் செலவினங்களைக் குறைத்து—சிக்கனத்தைக் கையாள்வதன் மூலம் இந்த வரி உயர்வைத் தவிர்த்திருக்கலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

செலவினங்கள் என்ற முறையில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பற்றி நல்லமுறையில் பிரச்சாரம் செய்யப்படுகிறது. கிராமங்கள் தோறும் விழாக்களும் கவர்ச்சிகரமான வாசகங்கள் அடங்கிய போஸ்டர்கள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே குடும்பக்கட்டுப்பாடு திட்டத்திற்கு தரகர்கள் என்று இனி வேண்டியதில்லை. அவர்களுக்கு ஆகும் செலவை மிச்சப்படுத்தலாம். அதனால் தரகர்களால் ஏற்படும் பல தீங்குகளும் நீங்கும்.

நாங்கள் வரி உயர்வு எந்த இனத்தில் இருக்கலாம் என்று எதிர்பார்த்தோமோ அந்த இனத்தில் இல்லை. உதாரணமாக மதுபானங்களைப் பொறுத்த வரையில் கேரளாவைக் காட்டிலும் இங்கே குறைவான வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக கேரளாவில் இருந்து இங்கே கள்ளத்தனமாகக் கொண்டுவரப்பட்டதுபோக—இங்கே இருந்து மதுபானங்கள் கள்ளத்தனமாக கேரளாவுக்குக் கடத்தும் நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. நான் இரண்டு தினங்களுக்கு முன்பு மாலைமுரசுப் பத்திரிகையில் பார்த்தேன். அதுபற்றி குறிப்பு நிதிநிலை அறிக்கையில் எதுவும் இங்கே இல்லை என்றாலும் மது உற்பத்தி லிட்டருக்கு 25 ரூபாய் என்று இருப்பதை ரூபாய் 14 ஆகக் குறைக்கப்போவதாகவும், பீர் உற்பத்தி ரூ. 1 என்று இருப்பதை 75 பைசாவாகக் குறைக்கப் போவதாகவும் அந்தப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்தது. வசதி படைத்தவர்கள் தான் மதுபானங்களை அருந்துகிறார்கள். அவர்களுக்கு ஏன் இந்தச் சலுகை என்று புரியவில்லை.

இந்த ஆண்டு சுமார் 400 கோடி வருமானம் எதிர்பார்க்கப்பட்டும் புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எதுவும் இந்தத் திட்டத்தில் இடம் பெறவில்லை. குறிப்பாக எனது தொகுதியில் வறட்டாறு, கல்லாறு திட்டம் நிறைவேற்றப்பட்டாக வேண்டும். அதோடு 18 ஆம் நம்பர் கால்வாய் என்பதாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே நிறைவேற்றப்பட இருந்தது. வேறுபல திட்டங்கள் காரணமாகவும்—பெரிய மின்சாரத் திட்டங்களை எடுத்துக்கொண்ட காரணத்தினாலும் அது நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக பெரியாரில்

[திரு. கே. பி. கோபால்] [1972 மார்ச் 4

இருந்து—கூடலூர், கம்பம், உத்தமபாளையம், கோம்பை வழியாக இந்த 18 ஆம் நம்பர் கால்வாய் வந்து மறுபடியும் பெரியாரிலேயே கலக்கின்ற ஒன்றாகும். இதன்காரணமாக 20 ஆயிரம் புஞ்சை ஏக்கரா நஞ்சையாக மாறக்கூடிய வசதி ஏற்படும். ஆகவே, அதையும் இந்த நேரத்தில் பரிசீலிக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 20 கோடிக்கு அதிகமாக வருமானம் கிடைத்திருக்கின்றது. காவல்துறை சீரமைப்புக்குழு அமைத்து இந்த அரசின் சாதனைப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறது. இதிலே காவல்துறை சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகள் நிதிநிலையை அனுசரித்துப் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 20 கோடிக்கு வருமானம் அதிகரித்திருந்தும் காவல்துறைக்கு சென்ற ஆண்டைக்காட்டிலும் குறைவாக நிதி ஒதுக்கி அவர்களுடைய நியாயமான வசதிகள் கூட கவனிக்கப் படாதது மிகவும் வருந்த வேண்டிய ஒன்றாகும். காவல்துறை சீரமைப்பு குழுவின் பரிந்துரைகளில் ஊராட்சி ஒன்றியங்களை சர்க்கிளாக பிறிப்பது ஒன்றாகும். அந்த அடிப்படையில் கம்பத்தை ஒரு சர்க்கிளாகவும், உத்தமபாளையத்தை ஒரு சர்க்கிளாகவும் மாற்ற வேண்டுமென்று சென்ற ஆண்டு காவல்துறை மானியத்தின் மீது குறிப்பிட்டிருந்தேன். அதுவும் ஏற்கப்படாத நிலை கண்டு வருந்துகிறேன்.

தமிழக அரசு ஏற்றுக்கொண்டுள்ள அரசு போக்குவரத்துத் துறை நஷ்டத்தில் சென்ற ஆண்டு ஓடினாலும் நெடுந்தூர துரித பஸ்களின் மூலம் லாபம் கிடைக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அந்தமுறையில் சென்னையில் இருந்து போடிநாயக்கனூர் வழியாக தேவிகுளத்திற்கும், சென்னையில் இருந்து திண்டுக்கல், கம்பம் வழியாக கோட்டயத்திற்கும், மதுரையில் இருந்து கம்பம் வழியாக திருவனந்தபுரத்திற்கும், மதுரையில் இருந்து போடிநாயக்கனூர் வழியாக எர்ணாகுளத்திற்கும் நெடுந்தூர பஸ்கள்விட வேண்டும். இது அதிக வருமானம் கொடுப்பதாக இருக்கும்.

இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் 1966-67-இல் நிதி ஒதுக்கீடு எவ்வளவு, 1972-73-இல் எவ்வளவு நிதி ஒதுக்கீடு உயர்ந்திருக்கிறது பாருங்கள் என்பதாக எடுத்துச் சொன்னார்கள்.



1972 மார்ச் 4] [திரு. கே. பி. கோபால்]

ஆனால் 1966-67 இல் இருந்த வருமானம் என்ன? இப்போது 1972-73 இல் உள்ள வருமானம் என்ன? அந்த வருமானத்திற்கு ஏற்ற வகையில் 1966-67 இல் எத்தனை சதவிகிதம் ஒவ்வொரு இனத்திற்கும் ஒதுக்கப்பட்டது, இந்த ஆண்டு வருமானத்தில் எத்தனை சதவிகிதம் ஒவ்வொரு இனத்திற்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துக்காட்டியிருந்தால் அதை மகிழ்ச்சியுடன் வரவேற்று இருப்போம்.

1966-67-ல் அரசுக்குக் கிடைத்தது சுமார் 194 கோடி ரூபாய். இப்போது எதிர்பார்க்கும் வருமானம் 397 கோடி ரூபாய். எனவே, நிதி ஒதுக்கீடு செய்வது, இதற்கு முந்தைய வருமானத்தில் இத்தனை சதவீதம் இருந்தது. இப்போது இத்தனை சதவீதம் ஒதுக்கியிருக்கிறோம் என்று குறிப்பிட்டால் அது வரவேற்கக் கூடிய மகிழ்ச்சிகரமானதாக இருக்கும்.

1964-65-ல் இந்த மாநிலத்தின் வருமானம் குறைவாக இருந்தது; 1965-66-ல் வருமானம் குறைவாக இருந்தது. அப்படி இருந்தும், தொழிற்சாலைகளை அமைப்பதற்காக அந்த ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகையைக் காட்டிலும், 1972-73-ல் நிதி குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1964-65-ல் தொழிற்சாலைகளுக்காக ஒதுக்கப்பட்டது சுமார் 6 கோடியே 30 லட்சம் ரூபாய். 1965-66-ல் தொழிற்சாலைகளுக்காக ஒதுக்கப்பட்டது 6 கோடியே 56 லட்சம் ரூபாய் ஆகும். ஆனால் இப்போது தொழிற்சாலைகளுக்காக 1972-73-ல் ஒதுக்கப்பட்ட தொகை 4 கோடியே 83 லட்சம் ரூபாய்தான். இதிலிருந்து தொழில்வளர்ச்சிக்காக பாடுபட்டது யார் என்பது தெரியவரும்.

அடுத்தபடியாக, இந்த ஆட்சியினர் செய்த சாதனைகளைச் சொல்லும்போது, 'கிராமங்கள்தோறும் மின்னொளி' அமைத்து விட்டோம் என்கிறார்கள். மின்னொளி வழங்குவதற்காக மின் சாரத்தை உற்பத்தி செய்யவேண்டியது அவசியமாகும். மின் சாரத்தை உற்பத்தி செய்தால்தான் அதை விநியோகம் செய்ய முடியும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 1951-லே 156 மெகவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. 1966-லே 1,070 மெகவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் 1970-ல் 1,220 மெகவாட் மின் சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. 1967 லிருந்து 1970 வரையுள்ள காலத்தில் இந்த ஆட்சி நடைபெற்ற காலத்தில் ஏன்பு

[திரு. கே. பி. கோபால்] [1972 மார்ச் 4

இருந்ததைவிட 150 மெகவாட் அளவுதான் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கவனத்தில் கொள்ளவேண்டும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மின்சார உற்பத்தி செய்யாமல் இருந்திருந்தால் இப்போது இவ்வளவு கிராமங்களுக்கு மின்னொளி வழங்கியிருக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. எப்படிப்பார்த்தாலும், 1967-க்கு முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சிதான் மின்சார உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது என்பதை நான் மிகப் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முன்பு எட்டு அமைச்சர்கள் இருந்து தமிழகத்தை நல்ல முறையில் ஆட்சிசெய்தார்கள். ஆனால் இப்பொழுதோ பதினான்கு அமைச்சர்கள் இருக்கிறார்கள். இதுவும் போதாது என்று பல வாரியங்களும், பல குழுக்களும் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் அவசியமா? இது சிக்கன வகையா ? மேலும் அரசாங்க விளம்பரங்களை சிக்கன வகையில் தமிழக அரசு பத்திரிகைக்குக் கொடுத்தால், சிக்கனத்திற்கு சிக்கனமுமாகும். அதே சமயத்தில் பத்திரிகையின் விற்பனையும் அதிகரிக்கும். மேலும் அதிகமாக விற்பனையாகக்கூடிய ஆங்கிலப் பத்திரிகைகள் இரண்டுக்கும், தமிழ்ப் பத்திரிகை இரண்டுக்கும் என்கிற அளவில் அரசாங்க விளம்பரங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, சமீபத்தில் பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டத்தின் அடிப்படையில் உளுந்தூர்பேட்டையில் பிச்சைக்காரர் விடுதி திறப்பு விழாவுக்கு இங்கே, சென்னையில் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. மேலும், குடிசைமாற்று வாரியத்தின் அடிக்கல் நாட்டுவிழா, கட்டிடத் திறப்பு விழா போன்றவைகளுக்கெல்லாம் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பது சரியாகுமா? இவையெல்லாம் சிக்கன நடவடிக்கையா ? மேலும் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு சுமார் 1 கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு பல இடங்களில் இன்னும் மறுவாழ்வு அளிக்கவில்லை. அவர்கள் நகரங்களிலும், கோயில், புண்ணியஸ்தலங்கள் போன்ற இடங்களில்தான் திரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க இந்த அரசு தவறிவிட்டது என்பதைக் கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



1972 மார்ச் 4]

* **திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே அளித்திருக்கிற 1972-73-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தை நெஞ்சார, மனமார வரவேற்று, நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கழக அரசு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அமைந்து, இப்பொழுது ஆறுவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. சமதர்ம சமுதாயத்தை அமைக்க இந்த வரவு-செலவுத் திட்டம் சிறந்த பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. யாரால், யாருக்காக இந்த ஆட்சி உருவாயிற்று என்றால், அடிமட்டத்தில் இருக்கிற மக்களைக் கைதூக்கிவிடுவதற்கும், மிகச் சிறப்பான வகையில் சமுதாயத்திலே உள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றி, சமதர்ம சமுதாயத்தைக் காண்பதற்காகவும் இந்த ஆட்சி ஏற்பட்டது. சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கான சிறப்பான அம்சங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றிருப்பதைக் கண்டு நாம் மனமார பாராட்டியாக வேண்டும்.

அறிஞர் அண்ணா ஒருமுறை சொன்னது என் நினைவுக்கு வருகிறது. நம்மைப்பற்றி மாற்றார், " இதுகள் " என்று ஏகடியமாகக் கூறியபோது, அண்ணா அவர்கள் நம்மை ஒரு மண்பாண்டத்தில் இருக்கிற தயிருக்கு ஒப்பிட்டுக் காட்டி, பாண்டத்தில் இருக்கிற தயிரைக் கடைந்தால் வெண்ணெய் வரும், வெண்ணெயிலிருந்து நெய் வரும். அந்த நெய்யை சோற்றுடன் கலந்து உண்டால் நல்ல சுவை தரும்; ஆனால் 'ஷோ கேஸி'-லே இருக்கிற பன்னீரை எடுத்துப்போய் எவ்வளவு நேரம் கடைந்தாலும், எவ்வளவு பாடுபட்டாலும், அந்தப் பன்னீரிலிருந்து வெண்ணெய் வராது, நெய் கிடைக்காது என்று கூறியுள்ளார். நம்மைப்போன்ற ஏழை எளியவர்களிடமிருந்துதான் இப்படிப்பட்ட திட்டங்கள் பிறக்கின்றன என்று அவர் கூறியுள்ளார். சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கான திட்டங்களை நாடு இன்றைக்கு மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி எதிர்க் கட்சிக்காரர்கள் பலவிதமாக பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுக்கிறார்கள். ஒருவர், " இந்த நிதிநிலை அறிக்கை அலங்காரப் பேச்சாக இருக்கிறது, இது மேடைப் பேச்சாக இருக்கிறது"

என்று தன் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். வேறொருவர் இதில் ஒன்றும் இல்லை என்கிறார். இன்றைக்குச் சொல்ல வேண்டிய கருத்துக்களை நமது கலைஞர் சுவைக்கச் சுவைக்கச் சொல்லியிருக்கிறார். இதிலே கூடவா அவர்களுக்கு வயிற்றெரிச்சல்? நமக்குக் கூந்தல் இருக்கிறது, அள்ளிமுடிக்கிறோம்,—அவர்களைப்பற்றி—என்ன சொல்ல வேண்டுமென்றே தெரியவில்லை. அவர்களுக்கு இருக்கிறதே, எனக்கு இல்லையே என்று குறைப்பட்டுக்கொண்டால் என்ன செய்வது?

எதிர்க்கட்சி நண்பர் அவர்கள் எனக்கு முன்னால் பேசிய போது, 200 கோடியாக இருந்த வரிகள் இன்றைக்கு 400 கோடியாக உயர்ந்து இருக்கிறதே என்று பேசினார். நான் ஒரே ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். இதிலே புதிய இனத்திலே வரி ஏதாவது உண்டா? இந்த ஐந்தாண்டுக் காலத்திலே புதிய இனத்திலே வரிபோட்டிருக்கிறோமா? 'எங்கள் ஆட்சி வந்தால் வரியைக் குறைப்போம் என்று பேசினார்களே, இப்பொழுது வரியைக் குறைக்கவில்லையே' என்று நண்பர் ஒருவர் பேசினார். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போடவேண்டிய அளவுக்கு வரிகள் போடப்பட்டு விட்டதால், அதைக் குறைக்க வேண்டும் என்று உறுப்பினர் கேட்டுக்கொண்டார். காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் வேண்டிய அளவுக்கு வரிகள் போடப்பட்டுவிட்டன என்று ஒத்துக் கொண்டதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய கட்சியிலே இருக்கிற சிவாஜி கணேசன் கட்டபொம்மனாக வேடம் போட்டு, மேடையிலே வந்து, "வானம் பொழியுது, பூமி விளையுது, உனக்கேன் வரி கட்ட வேண்டும்" என்று நாடகமாக நடித்துக் கொண்டிருந்த நேரத்தில் அவர்கள் எல்லாம் கைதட்டிக் கொண்டிருந்தார்கள். இந்த அரசாங்கம் வந்த பிறகுதான் புஞ்சை நிலத்திற்கு வரி நீக்கம் செய்திருக்கிறோம். மாநகராட்சிகளில் சைகிள் வரி போன்றவற்றை நீக்கியிருக்கிறோம்.

இந்த அரசாங்கம் வரி போட்டிருப்பது உண்மைதான். யாருக்கு வரி போடப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். குதிரைப் பந்தயக்காரர்களுக்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. பொழுதுபோக்குக்காரர்களுக்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஒரு ஐந்து சதவீதம் உயர்த்தியிருக்கிறோம். இது தவறா? இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 50 லட்சம் ரூபாய் கிடைக்கிறது. இந்த வரியின் மூலமாக வருகின்ற வருமானத்தை நல்ல வழிகளில் செலவழிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. நாட்டிலே இருக்கிற பிச்சைக்காரர்கள், காய்ந்துபோய் இருப்பவர்கள் இவர்களுக்கெல்லாம் புனர்வாழ்வு அளிப்பதற்காகவும், பிச்சைக்காரர் விடுதிகளை விரிவுபடுத்துவதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட காலத்தில் சுகமாக வாழ்ந்தோம் என்று பிச்சைக்காரர்கள் மனம் பூரிக்கக் வரையில் இருக்க வகை செய்யப்பட்டுள்ளது. பிச்சைக்காரர் என்று யாரும் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த வரி போடப்பட்டிருக்கிறது.



இன்றையதினம் இந்த வரவு-செலவுத் திட்டம் பல்வேறு சமதர்ம சமுதாயக் கொள்கைகளைச் சொல்கிற நேரத்தில், நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த வரிபோடுவதைப் பற்றி முன்பு என்ன சொல்லப்பட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். வெளியிலே கருத்து உபதேசம் செய்து வருகின்ற 'அரசியல் பீஷ்மர்' என்று கருதப்படுகின்றவர், 'சக்கரவர்த்தி' என்று அழைக்கப்படுபவர் இதே சட்டமன்றத்திலே என்ன கூறியிருக்கிறார் தெரியுமா? வரி ஏன் போடப்படுகிறது என்பதற்கு மிகச் சிறந்த விளக்கம் தெரிவித்துள்ளார். "அரசாங்கம் ஒரு எருமை மாதிரி. மக்கள் என்பவர் குடியானவர்கள். எருமை பாலைக் கொடுக்கிறபோதுதான் குடியானவர் அதனைச் சுவைக்க முடியும். பாலைக்குடிக்கும் குடியானவன் எருமைக்குப் புல் கொடுக்காமல் இருந்தால் பால் எப்படிக் கிடைக்கும்? எருமைக்குப் புல் கொடுத்தால்தான் அது பாலைக் கொடுக்க முடியும். ஆகவே. வரியை அரசாங்கத்திற்குக் கொடுத்தால்தான் நன்மை கிடைக்க முடியும்." என்று இதே பீஷ்மர்தான் அன்றையதினம் சொல்லியிருக்கிறார். ஆகவே, இன்றைக்கு யாரிடத்திலிருந்து வரியைப் பெறுவது என்பதை உள்ளடக்கிப் பார்த்தால், அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கு வரியைக் குறைத்து, வரி கொடுக்கக் கூடியவர்களுக்குத்தான் வரி போடப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு கடன் நிவாரணச் சட்டம் வருகிறது. இதன் மூலம் கடன்பட்ட ஏழை எளியவர்களுக்கு நிவாரணம் கிடைக்கிறது. கைத்தறி நெசவாளர்ப் பெருமக்களுக்கு பலன் ஏற்பட

[திரு. கா. வேழவேந்தன்] [1972 மார்ச் 4

இருக்கிறது. "செய்யுந் தொழிலனைத்தும் சீர்தூக்கிப் பார்க்குங்கால் நெய்யுந் தொழிற்கு நிகரில்லை" என்று சொல்லக்கூடிய நெசவுத் தொழிலை மேற்கொண்டிருக்கிற நெசவாளர்ப் பெருமக்களுக்கு ஒரு நல்ல பலன் கிடைக்க இருக்கிறது.

அடுத்தபடியாக, நீண்டகாலமாக தொழிலாளர் வர்க்கம் கேட்டுக் கொண்டு வந்த, அதாவது தாங்களும் நிர்வாகத்தில் பங்கு பெற வேண்டும், தாங்களும் டைரக்டர்களாக வர வேண்டும், பங்கு மூலதனத்தில் தாங்களும் பங்குகள் பெற வேண்டும் என்கிற கோரிக்கைகளை அடிப்படையாக வைத்து திட்டம் வகுக்க ஆவன செய்ய வேண்டுமென்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது பாராட்டக்கூடிய அம்சமாகும்.

அடுத்து, இங்கே என்.ஜி.ஓ. க்களைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். மதுவிலக்கினால் நமக்கு 30 கோடி ரூபாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற ஆண்டில் என்.ஜி.ஓ. க்களுக்காக 23 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு ஒன்றேமுக்கால் கோடி ரூபாய் வீட்டு வாடகையாக உயர்த்திக்கொடுக்கப்பட இருக்கிறது. போன ஆண்டு அப்படிக் கொடுத்த காரணத்தினாலேதான் நாம் தென்னை மரத்திலும் பனைமரத்திலும் குடுவைகளைக் கட்டக்கூடிய நிலைக்கு ஆளானோம்.

மொத்தத்தில் இந்த வரவு-செலவுத் திட்டத்தை எல்லோரும் வரவேற்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பண வீக்கத்தைத் தடுப்பதற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்திலே திட்டம் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். விலைவாசியேற்றத்தைத் தடுப்பதற்குத் திட்டமில்லை என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் படித்தவர்கள், வழக்கறிஞர் நான் அதிகமாக அவருக்குச் சொல்லவேண்டியதில்லை பண வீக்கம் என்பது நம்முடைய தமிழ் நாட்டில் மட்டிலும் அல்ல, இந்தியா பூராவிலும் உள்ள ஒன்று. இன்ஃப்ளேஷன் என்பது தமிழ்நாட்டிலேதான் இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது, அகில இந்தியாவிலும் இருக்கிறது. இந்தியா முழுமையும் உடம்பு என்றால் அதிலே தமிழ்நாடு கணுக்கால்தான். உடல் முழுதும் வீக்கம் ஏற்பட்டிருக்கின்ற நிலையில் காலில் உள்ள வீக்கத்தை மட்டும் நாம் போக்கிவிட முடியாது. விலைவாசியேற்றத்தைத்



1972 மார்ச் 4] [திரு. கா. வேழவேந்தன்]

தடுக்கக்கூடிய முறையிலேதான் அரசு அரிசியை மட்டுமல்ல, எல்லாப் பொருட்களையும் நியாயவிலையிலே பெற்று கொள்ளை லாபக்காரர்களின் கொடுமைக்கு இலக்காகாமல் நியாய விலையிலே பொதுமக்களுக்குக் கொடுக்கக்கூடிய வகையிலேதான் இன்றைக்கு வாணிபக் கழகத்தின் மூலமாக அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறது. இதன்மூலம் விலைவாசியேற்றத்திற்குச் சரியான கழுவாய் தேடப்பட்டிருக்கிறது. இன்னும் பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றியாக வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோம்.

வேலையில்லாத் திண்டாட்டம்பற்றிச் சொன்னார்கள். அதனைப் போக்குவதற்கு வழிவகைகள் பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கின்றன. தூத்துக்குடி நாப்தா தொழிற்சாலைத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், சேலம் உருக்காலைத் திட்டம் நிறைவேற்றப் பட்டுவிடுமானால் வேலைவாய்ப்புகள் பெருகி வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். அதற்கான போராட்டங்களை வேண்டுமானால் பெருந்தலைவர்கள் தொடங்கலாம். நம்முடைய கலைஞர் அவர்கள் சொன்னார்கள். கங்கை, காவிரி இணைப்புத் திட்டத்தின் மூலமாக கங்கையை கோதாவரியுடன் சேர்த்து கிருஷ்ணாவுடன் இணைந்து காவிரியுடன் கலந்தால் இந்தியா முழுமையும் ஒரு பசுமையான கம்பளம்போல் காட்சியளிக்கும். அப்படிப்பட்ட நிலையில் இந்தியாவைப்போல் வேறு எந்த நாடும் இருக்க முடியாது, என்ற நமது கற்பனை, கனவு நிறைவேறும். இப்படிப்பட்ட காரணங்களுக்காக அவர்கள் போராட்டங்களைத் துவக்கலாம்.

திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தின் பல்லாயிரக்கணக்கான தொண்டர்களில் ஒருவரான நான் சில கோரிக்கைகளைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய கழக ஆட்சி ஏற்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. எந்த சமுதாயக்காரியங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நினைத்தோமோ, அந்தக் காரியங்கள் நிறைவேறிவருகின்றன. இந்த நேரத்திலே நான் ஒன்றிரண்டு கோரிக்கைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்த தேர்தலுக்குள்ளாக நாம் பெயருக்குப் பின்னால் இருக்கிற 'சாதி' என்னும் வால் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். எப்படி பெண்களின் பெயர்கள் வழங்கப்படுகின்றனவோ அதைப்போன்று எப்படி பெண்கள் அன்னம்மாள், தங்கம்மாள் என்று மட்டுமே அழைக்கப்படுகிறார்களோ அதேபோன்று எல்லோரும் அழைக்கப்படக்கூடிய வகையிலே நாம் விதிமுறைகளை கண்டிப்பாகக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கா. வேழவேந்தன்] [1972 மார்ச் 4

அரிசனங்களுக்குக் குடியிருப்புகளுக்காகக் கொடுக்கப்படுகிற நிலங்களைப் பொறுத்தவரையில் நிலஆர்ஜிதம் செய்து கொடுக்கிற நேரத்தில் சேரிகள் என்று தனியாகப் பிரித்து அவற்றிற்குப் பக்கத்திலேதான் கொடுக்கப்படுகிறது, அப்படியில்லாமல் எப்படி சென்னை நகரம், மதுரை, திருச்சி போன்ற நகரங்கள் காஸ்மா பாலிட்டன் சூழ்நிலையில் அமைந்திருக்கின்றனவோ அதைப் போன்று உருவாகுமாறு அரிசனங்களுக்கு ஊர்ப் பகுதியிலேயே நிலம் வழங்குவதற்கு நாம் துணிச்சலை பெற்றாகவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை நாம் இப்பொழுதே எடுத்துக்கொள்ள வேண்டும்.

பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதி ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. கோயில்களுக்குத் தேவைக்கதிகமான சொத்துக்கள் இருக்கின்றன. பல நல்ல திட்டங்களை நிறைவேற்ற, 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சொத்துக்களை எடுத்து அந்தத் திட்டங்களை—அனாதை விடுதி, மருத்துவ மனை—போன்றவற்றை நிறைவேற்றுவதற்கு நம்முடைய அரசு, பாலாபிஷேகம், தேனபிஷேகம் என்ற வகையில் போவதைத் தவிர்ப்பதற்கு ஆன துணிச்சலையும் நாம் பெற்றாக வேண்டும்.

என்னுடைய தொகுதியைப்பற்றி நான் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். என்னுடைய பகுதியில் ஒரு சாயத் தொழிற்சாலை அமைத்துத் தந்திட வேண்டும். பெரியபாளையம் மேம்பாலத் திட்டத்தைப் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் வந்து பார்த்தார்கள், அதற்கு 21 லட்சம் ரூபாய்ச் செலவில் திட்டமிருக்கிறது, அதனை இந்த ஆண்டு நிறைவேற்ற கனிவோடு அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இறுதியாக இந்த வரவு-சலவுத் திட்டம் ஏமாற்றம் தரும் திட்டமென்று சொல்கிறார்கள், ஆம் ஒப்புக்கொள்கிறேன். ஏமாற்றம் தருவதுதான், ஆனால் யாருக்கு? குபேரர்களுக்கு, வட்டி வேந்தர்களுக்கு லேவாதேவிக்காரர்களுக்கு ஏமாற்றம்தரும் வரவு-செலவுத் திட்டம்தான், ஆனால் இந்த ஏமாற்றத்தை அவர்கள் தாங்கிக்கொண்டுதான் தீரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு இந்த வரவு-செலவுத் திட்டத்தை லட்சோபலட்சம் தமிழ்மக்களின் சார்பிலே நெஞ்சார, மனமார வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



1972 மார்ச் 4]

THIRU B. VENKATASWAMY: Sir, I thank the Hon. Deputy Speaker for giving me an opportunity to speak on the Tamil Nadu Budget for the year 1972–73.

There is not any concrete scheme in the Budget so as to check up the soaring prices in Tamil Nadu specifically. Everywhere there is dissatisfaction in Tamil Nadu that the rates of essential articles have been increased day-by-day. That is the day-to-day problem which the Government should have given more importance. I want to suggest to this Government to appoint a Committee to check up the soaring prices because it is a great problem and it is a problem of every man—those who are living in Tamil Nadu.

Secondly, regarding employment opportunities there is no concrete scheme in the Budget so as to give more appointment opportunities to the educated as well as unskilled labourers in the State.

Regarding agricultural side, the rates of pesticides and fertilisers have been increased abundantly. The rates of foodgrains are in the same level. The rates of agricultural labourers are also increasing day-by-day. The Government must think of giving some subsidy to the ryots and concessions to the ryots so as to bring down the production cost and also to minimise the rates of foodgrains. To solve the problem of soaring rates of foodgrains I suggest that some scientific methods should be introduced so as to bring down the cost of production in the agricultural side.

Regarding animal husbandry we came to understand that low variety of bulls have been imported from other nations. Due to them the quality of our stock of animals is also going down. So this should be checked. If you want to check it, we must have to import bulls and when we get them from other nations, they should be paid for and got. Otherwise the bulls which are being donated by other nations are giving the lowest stock of animals. So, this is a great problem of our Tamil Nadu which should be solved. We must see that our animal husbandry stock is improved efficiently. Improved varieties like Jersey, Friesian and Reddene should be purchased from other nations.

There are some schemes regarding improvement of milk production, poultry, etc. Regarding milk production I would like to suggest that there is a scheme from the Centre for which about

Rs. 8.8 crores has been given from the Dairy Development Project (India). A scheme has been drawn in Hosur Cattle Farm to augment the milk production with the aid of Dairy Development Project (India). Dr. Korean who is the President of the Indian Council of Dairy Production has come to Hosur and has studied the implementation of the scheme in Hosur in the entire area just like Anand in Gujarat. I suggest that the scheme should be implemented in the Hosur cattle Farm. We are having an ideal climate and place and everything there. By the implementation of that scheme there, the area can improve like an industrial area and the income of the ryots also will be increased.

Regarding horticulture and other sections there is no extension service properly given. After scrapping of prohibition there is a great demand for arrack and other things. Bangalore blue variety of vine is coming very nicely in our State, so that we can have a package scheme regarding Bangalore blue variety of vine which can grow very well in Dharmapuri district. So, such a package scheme may be taken up and implemented in Dharmapuri District so as to augment the income of agriculturists.

Regarding my constituency and the Dharmapuri district, I want to stress some points. As regards irrigation projects, there are some anicut schemes pending with this Government as well as with the Government of India. The Doddehalla Project had been sanctioned two years ago but no action has been taken so far to implement it. I understand that it is pending with the Planning Commission. I request the Government to get their sanction and implement it immediately.

Our district is a backward area and I do not know why this Government are neglecting it. This Government talks of socialism and social justice. A backward area like the Hosur taluk or the Dharmapuri district must be given first preference as otherwise there is no use in talking of socialism and social justice. This area has not been properly developed for the last so many years. I think there must be a Minister from that area and then only that area will improve. Whenever M.L.As. or other representatives of that district make representations, the Government must sympathetically consider them and there should not be any yardstick fixed with regard to them. For instance, with regard to the construction of anicuts, the officials say that to



produce a tonne of grains, they could spend only Rs. 3,000. If such a yardstick is fixed definitely a backward area like the Dharma-puri district will not come up. So, I request that this kind of yard-stick should be relaxed in areas like the Dharmapuri district.

Regarding desilting of ranks, proper provision has not been made in this Budget. For the last so many years the tanks have been completely silted up. As we cannot construct more tanks, there is no other go than to desilt the existing tanks especially in our taluk and the Dharmapuri district. Before desilting, the tanks could supply water for six months or even one year. Now it could supply water for only one month. So this aspect of the matter has to be very seriously considered, and the desilting schemes should be implemented immediately. I know there is not much amount left at our disposal to implement the scheme which is costly. So I request the Hon. Minister for Irrigation to take up the matter with the Central Government and get more money for this scheme.

Regarding Animal Husbandry, I have already mentioned about the Indian Dairy Corporation and I request that the sum of Rs. 8.8 crores allotted should be properly utilised in the Dharma-puri district also. There is no package scheme for agriculture and this scheme is based on agriculture. Every person will be benefitted out of the Indian Dairy Corporation and I request this Government to introduce it in the Dharmapuri district.

Regarding poultry, there is no proper scheme for the develop-ment of poultry units. Only in Tamil Nadu loans have not been properly given to improve poultry in the rural areas. In the Mysore State the co-operative societies are giving loans to raise poultry farms. So I request the Hon. Minister for Co-operation to consider this aspect of the matter and give loans to co-operative societies so as to raise poultry units in our area and also augment the rural income.

As regards tree-planting, if we go along the road, we do not see any trees at all. If trees are cut off indiscriminately, there will be soil erosion and consequently the fertiltiy of the soil will go down. I had discussed this aspect of the matter with a top official and he had stated that it was most essential that the trees should be planted on the road-side and that he had written about it to the Government. So, it is most important that trees should be planted in every road to prevent soil erosion.

[திரு. ஆலடி அருணா] [1972 மார்ச் 4

Finally, I want to point out that our area is a Telugu and Kannada-speaking area and people there are used to give petitions in Telugu and Kannada but they are not getting replies from the officers in Telugu and Kannada. The local officers know only Tamil. As our people there are recognised as a minority by the Linguistic Minorities Commission, I request this Government to issue orders to those officers to give their replies in Telugu and Kannada. Then only the people there can understand them and know what this Government are going to do for them. With these words, I conclude my speech.

**திரு. ஆலடி அருணா:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கின்ற நிதி நிலை அறிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

இந்த மாநில அரசுக்கு இருக்கின்ற அதிகாரங்கள், உரிமைகள், நிதிக்குவியல்கள் இவைகளை வைத்துக்கொண்டு இந்த நாட்டிலே இருக்கும் ஏழைகளை வாழ வைக்க, இல்லாதோர் வாழ்விலே நிம்மதியை உண்டாக்க, பாட்டாளிகளின் வாழ்வில் புதிய திருப்பம் ஏற்பட, உழவர் பெருங்குடி மக்கள் நல்லமுறையில் வாழ, அவர்களின் தரத்தை உயர்த்த இந்த மாநில அரசு சமதர்மத்தின் அடிப்படையில் எந்தச் சட்டங்களைக் கூர்மைப்படுத்த முடியுமோ, எந்தத் திட்டங்களைத் தீவிரப்படுத்த முடியுமோ அந்த அடிப்படையில் உருவாக்குவதற்கும், செயல்படுத்துவதற்கும் இந்த நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை நல்லவர்களும், நடுநிலையாளர்களும் தெளிவாகத் தெரிந்திருப்பார்கள் என்று நான் மனதார நம்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை வெளியானவுடன் தமிழகத்திலுள்ள தரமான பத்திரிகைகள் என்று எண்ணிக்கொண்டிருக்கும் பத்திரிகைகள் பல இந்த அறிக்கையை ஆதரித்துத் தலையங்கம் தீட்டியிருக்கின்றன. வழக்கமாகப் புத்தி சொல்லும் அந்தப் பத்திரிகைகள் புதிதாக இருக்கின்றதான் நிதிநிலை அறிக்கையை மனதாரப் பாராட்டி வரவேற்றிருக்கின்றன. எனக்குக் கூட அந்தப் பாராட்டுதலைப் பார்த்த நேரத்தில் இத்தகைய நிதிநிலை அறிக்கை தேர்தல் நேரத்தில் வந்திருக்கக்கூடாதா. அப்படி வந்திருந்தால் இதைவிடப் பயனுள்ள காட்சியாக அமைந்திருக்குமே என்று



1972 மார்ச் 4] [திரு. ஆலடி அருணா]

எண்ணியது உண்டு. ஆனால் இந்த நேரத்திலேயே தீவிரத் திட்டங்களைத் தரும் முதல்வரவர்கள் தேர்தல் நேரத்தில் இதைவிடத் தீவிரமாகத் தருவார் என்று எண்ணி என்மனத்தைச் சமாதானப் படுத்தினேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பலர் பாராட்டுகிறார்கள், பலர் வரவேற்கிறார்கள். ஏழை எளிய பாட்டாளி மக்களுக்குரிய அறிக்கை, உன்னதமான அறிக்கை, வாழ்க்கைக்கு உறுதுணையாக இருக்கும் அறிக்கை என்று ஒருமுகமாகப் பாராட்டுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில், எதிர்க்கட்சியிலே இருக்கும் நண்பர்கள் இந்த அறிக்கைக்கு வழக்கம்போல் தங்கள் கண்டனக் கணைகளை வீசுவதைத் தங்கள் வழக்கமான வாடிக்கையான தொழிலாக வைத்திருக்கிறார்கள். இந்த அறிக்கையை தாக்கிப் பேசுகிறார்களே, இதிலேயே குறை காணுகிறார்களே என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் அவர்களைத் தவறாகக் கணிக்கவில்லை. ஆனால் இதிலே நமக்கிருக்கின்ற தெளிவெல்லாம் அவர்களுக்கு விளக்க வேண்டுமென்பதற்காக, அவர்களுக்கு உண்மை நிலை தெரிய வேண்டுமென்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் ஒவ்வொரு பிரச்னையையும் அணுகும் நோக்கிலே. அது விவசாயிகள் பிரச்னையானாலும், சரி, தொழிலாளர்களின் பிரச்னையானாலும் சரி, கைத்தறியாளர்களின் பிரச்னையானாலும் சரி, தொழில் தகராறு பிரச்னையானாலும் சரி, எந்தப் பிரச்னையானாலும் கடந்த சர்க்கார் எதைச் சாதித்திருக்கிறது, எவ்வளவு சாதித்திருக்கிறது. இந்த அரசு, திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற பிறகு எதைச் சாதித்து இருக்கிறது, எவ்வளவு சாதித்திருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு டிராக்டர்கள் கொடுப்பதற்காக 20 ஆண்டு காலம் அருமை காங்கிரஸ் நண்பர்கள் ஆட்சியில் 76 லட்சம் ரூபாய்தான் செலவு செய்யப்பட்டது. ஆனால் ஐந்தே ஆண்டுகளில் இந்த அரசாங்கம் 129 லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறது. காங்கிரஸ் நண்பர்கள் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் மத்திய காலக் கடனாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 1966-67 ல் 31 கோடி ரூபாய்தான் கொடுத்தது. ஆனால் இந்த அரசாங்கம் 1972-73-ம் ஆண்டில் 61 கோடி ரூபாய் கொடுக்க வழிவகை செய்திருக்கிறது. 1966-67-ல் சிறு விவசாயிகளுக்கு

[திரு. ஆலடி அருணா] [1972 மார்ச் 4

ஏழை விவசாயிகளுக்கு, உழவுத் தொழிலை நம்பி இருக்கின்ற விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடனாகப் பழைய அரசாங்கம் கொடுத்தது 3 கோடி ரூபாய்தான்; ஆனால் இந்த அரசாங்கம் இன்றையதினம் 30 கோடி ரூபாய் நீண்ட காலக் கடனுக்காக ஏற்பாடு செய்திருக்கிறது. இப்படி விவசாயிகளுக்கு மட்டுமல்ல; வீட்டு வசதியை எடுத்துக் கொண்டால் அவர்கள் காலத்தில் வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டது 1957-லிருந்து 1967 வரை அவர்களுடைய கதை முடிந்த கட்டம் வரை கட்டப்பட்ட டெனமென்ட்ஸ் எண்ணிக்கை 4,164. இந்த அரசாங்கம் ஐந்தே ஆண்டுகளில் கட்டிய டெனமென்ட்ஸ் எண்ணிக்கை 7,037. அதுமட்டுமல்லாமல் எரியாத வீடுகள் 2,247 கட்டியிருக்கிறோம்.

அதே அடிப்படையிலே 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற லட்சியத்தை அடைந்தே தீர வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த ஆண்டு இந்த அரசாங்கம் எடுத்த தீவிர முயற்சியின் பயனாக இன்றைய தினம் தமிழகத்தில் மட்டும் 50,000-க்கு மேற்பட்ட கிராமங்களில் மின் விளக்குகளைப் பார்க்கும்போது இவைகள் எல்லாம் ஏழை மக்களுக்குச் செய்யப்பட்ட நன்மை அல்லாது வேறு என்ன? இவை எல்லாம் வாழ்க்கையில் அடிமட்டத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மறுமலர்ச்சி காண செய்யப்பட்ட நடவடிக்கைகள் அல்லாது வேறு என்ன? இவ்வளவும் எல்லாம் செய்தும் உள்ளேயும் சரி, வெளியேயும் சரி, எதிர் முகாமைச் சேர்ந்தவர்கள் 'என்ன சாதித்து விட்டீர்கள்? என்ன முன்னேற்றத்தைக் கண்டுவிட்டீர்கள்? என்ன மறுமலர்ச்சியை ஏற்படுத்திவிட்டீர்கள்?' என்று மேடைக்கு மேடை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தெரிவிப்பதற்காகவும், விளக்குவதற்காகவும், ஏற்பட்டு உணர்வதற்காகவும்தான் நாங்கள் ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் 1967 வரை நடந்தது என்ன, அதற்குப் பிறகு என்ன நடக்கிறது என்பதைப் பகுத்துக் காட்டியிருக்கிறார்கள். பிரித்துக் காட்டி இருக்கிறார்கள், விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். என்றாலும், அவர்கள் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

நாட்டில் இருக்கின்ற மகிழ்ச்சியெல்லாம், இவர்களுக்குப் புரிகிறதோ புரியவில்லையோ, விளங்குகிறதோ விளங்கவில்லையோ, நாட்டில் இருக்கும் மக்கள் விளங்கிக் கொண்டார்கள். புரிந்து



1972 மார்ச் 4] [திரு. ஆலடி. அருணா]

கொண்டார்கள். புரிந்து கொண்டார்கள் என்பதுதான் தேர்தல் முடிவுகள் நமக்கு ஒவ்வொரு கட்டத்திலும் தெளிவாகக் காட்டுகிறது.

இந்த அரசாங்கத்திற்கு ஏழைகள் மீதும், சோஷலிசத்தின் மீதும் எவ்வளவு அழுத்தமான பற்றுதல் இருக்கிறது என்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் திட்டவட்டமான சில முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. உங்களுக்கெல்லாம் தெரியும், இந்தியத் துணைக்கண்டத்தில் நிலச் சீர்திருத்தத்தைத் தீவிரப்படுத்த வேண்டும். உச்சவரம்புக்கு ஒரு நல்ல முறை காண வேண்டும் என்று மத்திய அரசு மாநிலங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. எந்தக் கட்சிக்காரர்கள் ஆளும் பொறுப்பில் மத்திய அரசில் இருக்கிறார்களோ அவர்கள் கட்சியின் ஆளுகின்ற மாநிலங்களிலேயே இந்த லட்சியங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்றால், இல்லை. ஆனால் இங்கே மத்திய அரசின் யோசனைக்கு ஏற்ப நல்ல முறையில் இவைகள் செயல்படுத்தப்படுவதற்காக தீவிரப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். இன்றையதினம் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் விதிகளிலிருந்து எப்படி சலுகைகள் ஒவ்வொரு மாநிலத்திலும் அளிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தைப் பார்க்க வேண்டும்.

ஆந்திரத்தில் ஒரு குடும்பத்துக்கு 27 ஏக்கர் முதல் 324 ஏக்கர் வரை வைத்துக்கொள்ளலாம்; பீகாரில் 20 ஏக்கர் முதல் 60 ஏக்கர் வரை வைத்துக்கொள்ளலாம்; குஜராத்தில் 19 ஏக்கர் முதல் 132 ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம்; மகாராஷ்டிராவில் 18 ஏக்கர் முதல் 126 ஏக்கர் வரை வைத்துக்கொள்ளலாம்; மத்திய பிரதேசத்தில் 20 ஏக்கர் முதல் 75 ஏக்கர் வரை வைத்துக்கொள்ளலாம். மைசூரில் 27 ஏக்கர் முதல் 216 ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம்; ஒரிசாவில் 20 ஏக்கர் முதல் 80 ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம்; ராஜஸ்தானில் 22 ஏக்கர் முதல் 33 ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம்; தமிழ்நாட்டில் 15 ஏக்கர் முதல் 40 ஏக்கர் வரைதான் வைத்துக் கொள்ளலாம்; உத்தரப் பிரதேசத்தில் 40 ஏக்கர் முதல் 80 ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம்; மேற்கு வங்காளத்தில் 12 ஏக்கர் முதல் 17 ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம்; அரியானா, பஞ்சாபில் 30 ஏக்கர் முதல் 60 ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம்.

இந்தியத் துணைக்கண்டத்திலே ஒவ்வொரு மாநிலத்திலும் முதலாளிகளுக்குச் சாதகமாகத்தான் பெரும்பாலும் உச்ச வரம்பை நிர்ணயித்திருக்கிறார்கள். தமிழக அரசு ஒன்றுதான் நியாயமான அடிப்படையில் இந்த உச்சவரம்பை நிர்ணயித்திருக்கிறது. அதை நிர்ணயித்ததோடு மட்டுமல்லாமல் கொடுக்கப்பட்டிருந்த விதிவிலக்குகளை எல்லாம் ரத்து செய்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் தீவிரமான முடிவுகளை எடுக்கும் நிலையில் 1959-க்குப் பிறகு அமைக்கப்பட்ட டிரஸ்டுகளை ரத்து செய்யும் அளவுக்கான ஒரு மிகவும் சிறப்புமிக்க முடிவை முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். 1961-ம் ஆண்டு உச்ச வரம்புச் சட்டத்தின் அமல் ஏற்பட்டபோது மிராசுகள், நிலக்கிழார்கள், சட்டத்தின் சந்துபொந்துகளில் நுழைந்து கொண்டு நீதிமன்றங்களை ஏமாற்றிக் கொண்டிருந்த நிலையை மாற்றி அவர்களை வெளியே கொண்டு வரும் எண்ணத்தோடு எடுத்த முடிவுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சோஷலிசத்தின் சிற்பி என்றும், வீரர் என்றும், மூர்த்தி என்றும் மேடைக்கு மேடை அர்ச்சித்தால் போதுமா? அந்தத் திட்டங்களைக் கொண்டு வருகின்ற நேரத்தில் வரவேற்க வேண்டாமா? இவ்வளவு தீவிரமான சட்டங்களைக் கொண்டு வருகிறோம்; நியாயமான சட்டங்களைக் கொண்டு வருகிறோம்; கூர்மையான சட்டங்களைக் கொண்டு வருகிறோம்; மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கோடு தீவிரமான சட்டங்களை, புரட்சிகரமான சட்டங்களைக் கொண்டு வருகிறோம். இவ்வாறு சட்டங்களைக் கொண்டு வருகிறபோது அவர்கள் இவற்றை வரவேற்க வேண்டாமா?

மாநிலத்திற்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கிறோம். முதலமைச்சர் அவர்கள் மாநில சுயாட்சியைப் பற்றி மிகத் தெளிவாக அறிக்கையின் பிற்பகுதியில் சொல்லியிருக்கிறார்கள். இதைக் கூடச் சிலரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இதைப் பற்றித் தவறாக விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கொள்கையின் அடிப்படையில் அகில இந்தியத் தலைவர்களாக இருப்பவர்கள் கூட மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் சுயாட்சி என்று சொல்வதை எதிர்க்கிறார்கள். ரோஜா மலரை எந்தப் பெயர் கொண்டு அழைத்தால் என்ன?



அதிகமான அதிகாரங்கள் வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்ளுகின்றவர்கள் இந்தப் பிரச்சினையிலாவது ஆதரவைத் தெரிவித்தால் என்ன? ஏன் தயக்கமாக இருக்க வேண்டும்? இந்த மாநிலத்திற்கு அதிகமான அதிகாரங்கள் இருக்கக்கூடாது; இருக்கின்ற அதிகாரங்களே போதும் என்று சொல்லக்கூடிய தைரியம் இந்தத் தமிழ்நாட்டில் எந்த ஓர் அரசியல் கட்சிக்கும் நிச்சயமாகக் கிடையாது. அவர்களுக்கு இருக்கின்ற காழ்ப்பு, அரிப்பை வேண்டுமானால் சில இடங்களில் காட்டிக் கொள்ளுகிறார்களே தவிர வேறல்ல.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தின்:** கனம் தலைவர் அவர்களே. கனம் நண்பர் அவர்கள் பேசும்போது எந்தக் கட்சிக்கும் அந்தத் துணிவு இல்லையென்று குறிப்பிட்டார்கள். முஸ்லிம் லீக் அதை அழுத்தந்திருத்தமாக ஆதரித்திருக்கிறது என்று கூறிக் கொள்ளுகிறேன்.

**திரு. ஆலடி அருணா:** அதிகமாக அதிகாரங்கள் வேண்டுமென்பதை எதிர்த்தவர்களைப்பற்றித்தான் நான் சொன்னேனே தவிர ஆதரிப்பவர்களைப் பற்றிச் சொல்லவில்லை.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்லும்போது அதற்கான விளக்கங்களை அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. கூட்டாட்சியில் மாநிலங்களுக்குத்தான் எல்லாப் பொறுப்புகளும் இருக்கின்றன. விலைவாசி ஏற்றமா? மத்திய சர்க்காரைக் கேட்பதில்லை, இங்கே தான் கேட்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டமா? மத்திய சர்க்காரைக் கேட்பதில்லை, மாநில சர்க்காரைத்தான் கேட்கிறார்கள். கோவையில் ஆலைகள் அடைத்துக் கிடக்கின்றனவா? அதற்கும் இங்கேதான் கேட்கிறார்கள். எந்தப் பிரச்சினையானாலும் அதற்கு மத்திய சர்க்கார் தாழ்வாரத்தில் நின்றுகொண்டு கதவைத் தட்டுகிறார்கள். அந்த அளவுக்கு இந்தச் சர்க்காரை நிர்ப்பந்திக்கிறார்கள். ஆனால் இந்தச் சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறதா என்றால் அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு அதிகாரம் இல்லை. நம்முடைய மத்திய சர்க்கார் ஒரு விசித்திரமான சர்க்கார். அந்தச் சர்க்காருக்கு மக்கள் கிடையாது. நிலப்பரப்பு கிடையாது.

Government without people, without territory but with supreme sovereignty.

அதிகாரங்கள் அதிகமாக இருப்பது அந்தச் சர்க்காரின் கையில்.

கோவையில் இருக்கும் மூடப்பட்ட ஆலைகளைத் திறக்கும் உரிமை மத்திய சர்க்காரின் கையில். ஆனால் அந்த ஆலைகள் திறக்கப் படாத காரணத்தால் தத்தளித்துத் தவிக்க வேண்டியது இந்த மாநில சர்க்கார். யாரோ காதலிக்க யாரோ பிள்ளையை வைத்துக் கொண்டு வேதனைப்படுகின்ற நிலை. எவ்வளவு பரிதாபமான நிலை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மத்தியில் இருக்கும் ஆட்சியைப் பற்றி என்ன குறை வேண்டுமானாலும் கூறலாம் என்று கூறிக்கொண்டிருப்பது சரியல்ல. பாராளுமன்றத்தில் தமிழ் நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். நம்மைப் போலவே அவர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டு அதிகாரத்தில் இருக்கிறார்கள். ஆகவே, பொறுப்புணர்ச்சி யோடு பேசினால் உசிதமாக இருக்கும்.

திரு. ஆலடி அருணா: திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்குப் புதிதாகக் காதல் ஏற்பட்டிருக்கிறது, நான் பொறுப்புணர்ச்சி யோடுதான் பேசுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: காதல் யாருக்கு ஏற்பட்டது என்பது ஊரில் யாருக்கும் தெரியாதது அல்ல.

திரு. ஆலடி அருணா: ஆகவே, அந்த கெட்ட நோக்கத்தோடும் நான் மத்திய அரசை விமர்சிக்கவில்லை. மாநில சுயாட்சி கேட்பதற்கு, அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்பதற்கு உள்நோக்கம் கற்பிக்கிறார்கள். மத்திய அரசு அட்மினிஸ்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் என்ற ஒன்றை நியமித்தது. அக்குழு சென்டர் ஸ்டேட்ஸ் ரிலேஷன்ஷிப் பற்றி தனியாகப் பரிசீலித்து ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளது. நாம் அதிகமான அதிகாரங்கள் கேட்கிறோம் அவர்கள் கேட்பது, நாம் ஒற்றுமைக்கு எதிராக இருக்கிறோம் அவர்கள் எண்ணுகின்றது. அதை ஒதுக்கி வைத்துவிட்டு அவர்கள் கூறியுள்ள சிர்திருத்தங்களையாவது ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா. மத்திய அரசு மாநில அரசுகளின் தன்மையைக் கருதி அவைகளைச் செயல்படுத்த முன்வந்திருக் கிறதா என்று நீங்கள் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக் கிறீர்கள் We have however made recommendation to delegate more financial and administrative functions and powers to the States with the twin objective of making relations between Centre and





States smoother and introducing efficiency and economy in the administration of the Union and State Governments.

என்று ஹனுமந்தய்யா அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட அந்த நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழு தெளிவாகக் கூறியுள்ளது. 1969-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தாகி விட்டது. அதை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா? இதைவிடத் தெளிவாக ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார்கள். Moreover in the context of differing ideologies and differing programmes of political parties in power in the various States and the Centre, the same approach towards programmes cannot necessarily be adopted throughout the whole country. We therefore feel that without prejudice to the unit, integrity and security of the country, the fullest possible discretion should be given to the States to order their policies and measures according to their ideologies and programmes within the resources available to them in the areas falling within the State list.

என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் அவர்கள் அமைத்த கமிட்டி அது. அந்த நியாயத்தையாவது மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா? இவற்றை ஏற்றுவிட்டால் நமது மாநிலச் சுயாட்சிக் கொள்கையை நிறைவேற்றிக் கொண்டதாக நான் ஏற்றுக்கொண்டதாக யாரும் கருதவேண்டாம். அவர்கள் கூறியுள்ளதைக்கூட நிறைவேற்றாமல் ஆதிக்கவெறி பிடித்தவர்களாக இருக்கிறார்கள். எனவே அப்பேர்ப்பட்ட ஆதிக்கத்தை எதிர்த்து ஒவ்வொரு மாநிலமும் போராடியாக வேண்டும்.

மத்திய அரசு பலமுள்ளதாக இருக்க வேண்டும், அதில் மாறுபட்ட கருத்து இல்லை. யாரிடமிருந்து மீட்பதற்கு? பாகிஸ்தானிடமிருந்து மீட்பதற்கு. ஏனைய எதிரிகளிடமிருந்து மீட்பதற்கு. ஆனால் மாநிலங்களின் உரிமைகளை நசுக்குவதற்கு, மாநிலங்களின் நலன்களைக் கெடுப்பதற்கு ஒரு மத்திய அரசுக்கு எந்த அதிகாரங்களையும் கொடுக்க மானமுள்ள எந்தத் தமிழனும் அதற்குச் சம்மதிக்க மாட்டான் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். எனவே, தமிழர்களின் உணர்வையும், வலிமையையும், இந்த நாட்டின் நிலையையும் பிரதி பலிக்கின்ற வகையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையினை அளித்திருக்கிறார்கள். அதற்கு

இந்தத் தமிழ்ச் சமுதாயம் என்றென்றும் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது எனக் கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. கே. என். குமாரசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை முதல் அமைச்சர் அவர்கள் இங்கு சமர்பித்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அந்த அடிப்படையில் அதிலுள்ள தன்மை நிலைகளைப் பற்றிச் சில வார்த்தைகள் இங்கு சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாய அபிவிருத்தி என்பதில் விவசாயிகளுக்கு அரசாங்கம் எந்தளவிற்கு பாசன வசதிகள் நல்கியிருக்கிறது என்று சொன்னால்—நாட்டின் எதிர்காலமே விவசாய அபிவிருத்தி என்பதன் அடிப்படையில் இருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். விவசாயத் துறையில் மிக, மிக முக்கியமானது பாசன வசதிகள். மிக பாசன வசதிகள் செய்வதற்கான வகையில் அத்துறைக்கு மிகக் குறைவான நிதி ஒதுக்கீடுதான் இங்கு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் 60 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அது திட்டத்தட்ட இரண்டரை லட்சம் ஏக்கர்களுக்கு பாசனவசதி அளிக்கும் என்று நாம் நம்பியிருந்தோம். ஆனால் ஒரு வருஷம் விட்டு ஒரு வருஷம் தண்ணீர் கிடைத்து வருகிற சூழ்நிலைதான் அதில் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், கேரள அரசோடு நம் அரசு எடுத்துக் கொள்கிற நடவடிக்கைகள் எந்தளவிற்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னால் கேரள அரசோடு நம் அரசு சரியானவண்ணம் முடிவு காணாமல் காலதாமதம் ஏற்படுத்திக் கொண்டு வருவதுதான் காரணம். அந்தப்பகுதி விவசாயிகளுக்கு ஒரு வருடம் விட்டு மறு வருடம் தான் தண்ணீர் கிடைக்கக்கூடிய அளவிற்கு நிலைமை மாறியிருக்கிறது. இன்றைன்று, இந்த பட்ஜெட்டில் முதல் அமைச்சர் அவர்கள் கங்கை காவேரி இணைப்பு சம்பந்தமாக ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். கங்கையையும் காவேரியையும் இணைப்பதற்கு எவ்வளவு காலம் ஆகுமோ சொல்ல முடியாது. பூர்வாங்கமாக மத்திய அரசாங்கம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம் என்ற நிலையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது வருகிற வரையில் நாம்



காத்துக் கொண்டிருக்க முடியாது. பாசன வசதியற்ற பிரதேசங்கள் மிகவும் சீர்கேட்டை அடைந்து கொண்டிருக்கின்றன என்பது அரசுக்கு நன்கு தெரியும். ஆகவே அவை சம்பந்தமாக அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்வதோடு கூட கேரள அரசோடு நமக்கிருக்கிற சிக்கல்களைத் தீர்க்க உயர்மட்டக் குழு ஒன்றை—அதிகாரிகள் மட்டும் போதாது, அரசியல் தலைவர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து கேரள அரசோடு பேச்சு வார்த்தைகள் நடத்தி கேரளாவில் வீணாகப் போகிற தண்ணீரை தமிழ் நாட்டிற்குக் கொடுப்பதற்கான வாய்ப்பை அரசாங்கம் உருவாக்குமானால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண முடியும்.

குடி நீர் பிரச்சினையைப் பொறுத்து சிறுவாணித் தண்ணீரை கோவை நகரத்திற்குக் கொடுக்க வேண்டுமென்பதில் கேரள அரசுக்கும் நம் அரசுக்கும் இடையே தகராறு இருந்து கொண்டிருக்கிறது. பேச்சுவார்த்தைகள் முடியவில்லை. அங்குள்ள அரசியல் தலைவர்கள் கோவைக்கு வந்து மேடையில் பேசுகிறார்கள். சிறுவாணி தண்ணீரைக் கொடுப்பது சம்பந்தமாக கேரள அரசிடம் சிக்கல் இல்லை, தமிழ் நாடு அரசுதான் அதற்குத் தயாராகயில்லை, கேரள அரசு கொடுப்பதற்குத் தயாராகயிருக்கிறது என்று இங்கு பொது மேடைகளில் பேசிவிட்டுப் போகிறார்கள். கேரள அரசுக்கும் நம் அரசுக்கும் இருக்கிற சிக்கல் என்னவென்று எங்களைப் போன்றவர்களுக்குப் புரியவில்லை. ஆனால் பிரச்சினை மட்டும் தீருகிற மாதிரியில்லை. இழுத்துக் கொண்டே போகிறது.

பாண்டியாறு-புன்னப்புழா திட்டம் பற்றியும் அரசாங்கம் சென்ற ஆண்டு அறிக்கை மூலம் சொல்லிக் கொண்டு வந்தார்கள். அமைச்சர் அவர்களும் பாண்டியாறு-புன்னப்புழா நீர்தேக்கத் திட்டத்தை அமுலாக்கித் தருவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதாக அறிவிப்புகள் வெளி வந்தன. இப்போது அவை என்னவாயிற்று என்று புரியவில்லை. பாண்டியாறு-புன்னப் புழா திட்டத்தின்படி மின்சாரத்தை மட்டும் எடுத்துக் கொண்டு அந்தத் தண்ணீரை கேரளா உபயோகப்படுத்துகிற அளவிற்குத் தான் அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. இதைப் பார்க்கும்போது நீர்பிடிப்புகள் அதிகமாக இருக்கிற பகுதிகளில் அதிகப்படியான விவசாய நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்திருக்குமானால், இந்த

அறிக்கையில் அதுபற்றி குறிப்பிட்டிருக்குமானால், விவசாயத் துறையில் ஒரு முன்னேற்றகரமான நிலை ஏற்பட முடியும்.

விவசாயிகளுக்கு அவர்களது விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பது இல்லை. பெரிய முதலாளிகளின் கையில் இருக்கக் கூடிய பொருள்களுக்கு, அவர்களின் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் விலைகள் ஏறும்போது விவசாயிகளின் விளை பொருள்களுக்கு மட்டும் நியாயமான விலை கிடைப்பதில்லை. ஒரு பம்ப் செட்டின் விலை இரண்டாயிரம் ரூபாயாகிறது. விவசாயிகள் பம்ப் செட்கள் வாங்கி வைக்கக்கூடிய அளவிற்கு அவர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. அவர்களின் உற்பத்திப் பொருள்களின் விலை மிக மிகக் குறைந்து தான் இருக்கிறது. ஆகவே இதுகுறித்து தீவிரமான நடவடிக்கைகள் எடுப்பதற்காக அரசாங்கம் நிபுணர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை வைத்து விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கக்கூடிய அளவிற்கு, கட்டுபடியான விலை கிடைக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும்.

இன்று விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகின்றன. மத்திய அரசு, மாநில அரசு என்று பேசிக் கொண்டிருக்க முடியாது. விலைவாசி உயர்வினால் இன்று மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லாப் பகுதி மக்களும், தொழிலாளர்கள் மட்டுமல்ல, எல்லாப் பகுதி மக்களும் விலைவாசி உயர்வு காரணமாக கோரிக்கைகளை வைத்து நியாயம் வழங்கவேண்டும் என்று போராட்டங்கள் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். விலைவாசிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். விலைவாசிகளின் உயர்வைக் கட்டுப்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தாததால்தான் இப்படிப்பட்ட நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது.

விவசாயிகளுக்கு சலுகைகள் அளிப்பதாகவும், கூட்டுறவு வங்கிகள் மூலம் நீண்ட காலக் கடன், குறுகிய காலக் கடன் இவைகள் விவசாயிகளுக்குக் கொடுப்பதாகவும் இதில் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கடன்களைப் பெற்று அவற்றைத் திருப்பிக் கட்டுவதில் விவசாயிகளின் நிலை மிக மிக மோசமான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறது.



மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டது. சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டு முதல் அமைச்சர் அவர்கள் மின்சாரக் கட்டணத்தை ஏற்றுவதாக இல்லை என்ற உறுதிமொழியை விவசாயிகளுக்கு அளித்தார்கள். ஆனால் சென்ற ஆண்டே அது ஏற்றப்பட்டது. ஏன் என்று கேட்க விவசாயிகள் ஒற்றுமையாக இல்லை என்ற காரணத்தினால் அந்த மின்சாரக் கட்டணத்தை மீண்டும் உயர்த்தி விட்டார்கள். முதல் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதி மறுபடியும் மீறப் படுகிற நிலையில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி விட்டார்கள்.

அதே நேரத்தில் இன்னொன்றும் சொன்னார்கள் முதல் அமைச்சர் அவர்கள். கோவை மாவட்டத்தில் ஆழமான கிணறுகள், அதாவது ஒரு குறிப்பிட்ட ஆழத்திற்கு மேல் உள்ள கிணறுகளில் உள்ள பம்பு செட்டுகளுக்கு மின்சாரக் கட்டணம் ஏற்றவில்லை என்று சொன்னார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். சொன்ன வாக்குறுதி கூட இப்போது இங்கே நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னால் அது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் அதனால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். முதலமைச்சர் சொன்ன வாக்குறுதியைக் கருத்தில் கொண்டு, 76 அடிக்கு மேல் ஆழம் உள்ள கிணறுகளில் போட்டு இருக்கும் பம்பு செட்டுகளுக்கு, மின்சார அமைச்சர் தாமாகவே முன்வந்து சலுகை அளித்திருக்கலாம். அதைச் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

நகர்ப்புறச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு கட்ட வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால் நகர்ப்புறச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் ஒன்றும் சொல்லவில்லை. நகரத்தில் இருப்பவர்கள் ஏராளமான வீடுகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் அரசாங்கம் ஒரு தீர்மானமான விதிகள் அமைத்து எடுத்துக் கொள்ளலாம்.

இங்கே உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். இந்த சிந்தாமணி சென்னையில் இருக்கிறதே (குறுக்கீடு . . . காமதேனு) ஆமாம். காமதேனு. அதற்கு மாத வாடகை ரூ 25,000 என்று சொல்லப்பட்டது. இது மக்களுடைய பணம். இந்த உச்சவரம்பு சட்டத்தின் மூலம் அத்தகைய கட்டடங்களை அரசாங்கம் ஆர்ஜிதம்

செய்து கொள்ளலாம். இப்போது 25-வது திருத்தச் சட்டம் கூட பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட முற்போக்கான காரியத்தைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குத்தகைதாரர்களுக்கு கடன் வஜா கொண்டு வந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். குத்தகைக்காரர்கள் இந்த ஆண்டு பாக்கியை கொடுத்திருப்பார்களேயானால், அவர்கள் மற்ற பாக்கியை கொடுக்க வேண்டியதில்லை என்று கொண்டு வந்திருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

நில உச்சவரம்பு ஒரு குடும்பத்திற்கு 60 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இருந்ததை இப்போது இந்த நிதிநிலை அறிக்கை மூலம் 40 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறைத்திருப்பது பாராட்டத்தக்கதாகும். ஆனால் முன்னாலேயே செய்து இருந்தால், இந்த நிலச் சீர்திருத்தத்தால் அதிக நிலம் கைக்கு வந்திருக்கும். 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று சொன்னவுடனேயே தனித்தனியாக ஒவ்வொரு ஆள் பேரிலும், 12 வயது பையன் பேரில் கூட எழுதி வைத்து விட்டார்கள். இந்த நிலச்சீர்திருத்தத்தால் அதிக நிலம் கிடைக்காது. அந்த அளவுக்கு கட்டங்கள் மூலம் மறைக்கப்பட்டுவிட்டது என்பதும் அரசுக்குத் தெரியும். இருந்தாலும் இப்போது கொண்டுவந்திருக்கும்படியான இந்த சீர்திருத்தம் வரவேற்கத்தக்கதாகும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

வறட்சிப் பகுதிகளில் உள்ளவர்கள் பல ஆண்டுக்காலமாகவே கடன் வஜா வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். 6-7 வருடங்களுக்கு முன்னாலே வாங்கிய கடனைக்கூட திருப்பித்தர முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களிலும், டி.டி.ஸி. மீட்டிங்குகளிலும் தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பி இருக்கிறோம். அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் தருகிற வகையில் சர்க்கார் கடன்களை வஜா செய்வதற்கான உத்தரவுகளைப் போட்டால், அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் நிச்சயமாக இதை வரவேற்பார்கள்.

தொழிலாளர்கள் பிரச்னையில் இந்த அரசாங்கம் கவனம் அதிகமாகச் செலுத்தவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. காரணம் என்னவென்றால், தொழிலாளர்கள் பிரச்னை ஆரம்பமாகும்போதே அரசாங்கம் முன் கை எடுத்து அந்தப் பிரச்னையை





புரிந்து கொள்ளவேண்டும். ஆனால் தொழிலாளர்கள் பிரச்னை ஆரம்பிக்கப்பட்டு அது ஒரு ரூபம் எடுத்த பிறகுதான் அரசாங்கம் அதற்கு தீர்வு காண்பது சம்பந்தமாக அக்கறை காட்டுகிறது. கோவையில் நடக்கும் போராட்டம் என்ன? திருப்பூரில் நடக்கும் போராட்டம் என்ன? ரூ. 16 நூல் விலை விற்றபோது அந்தத் தொழிலாளிக்கு என்ன சம்பளமோ அதே சம்பளம் தான் இன்று ரூ. 44 நூல் விலை இருக்கிறபோதும் கொடுக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் அதிகப்படியான வேலைகள் செய்துகொண்டிருக்கிறார்கள். வேலை நிர்ப்பந்தம் காரணமாகத்தான் அவர்கள் போராட்டம் தொடங்க வேண்டியிருக்கிறது. இன்று அவர்கள் மில்களில் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலாளிகள் லாபம் இல்லை என்று சொல்லி அவர்களை இப்போது பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் கொடுக்கிற சம்பளப்பட்டியலை விட இங்கேயிருப்பவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று பத்திரிகைகளில் போட்டு வருகிறார்கள். அதாவது, அன்ஸ்கில்டுக்கு ரூ. 315 என்றும், ஸ்கில்டுக்கு ரூ. 335 என்றும் போட்டிருக்கிறார்கள். சென்னையில் அதிகமாகக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்தச் சம்பளம் வருமானால் அந்தத் தொழிலாளி போராடவேண்டிய அவசியமே இருக்காது. அங்கே ஸ்கில்டுக்கே ரூ. 275-க்குமேல் சம்பள உயர்வு இல்லை. நான் ஏன் இதைச் சொல்கிறேன்? பல பேர் இந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு, இவ்வளவு சம்பளம் இந்தத் தொழிலாளர்கள் பெறுகிறார்கள், கோவையில் அவர்கள் போராடுவது அபாக்கியம் என்று சொல்கிறார்கள். பம்பாயில், அஹமதாபாத்தில், கல்கத்தாவில் கொடுக்கும் சம்பளத்தை விட அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால் இந்தப் பிரச்னையே வராது. சென்னையில் இருக்கும் புள்ளியைக் காட்டிலும் கோவையில் புள்ளி அதிகமாக இருக்கிறது. கோவையில் இருக்கும் புள்ளியின் அடிப்படையில், விலைவாசியின் அடிப்படையில் சம்பளம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இதை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு தீர்த்துவிட முடியும். இதுகூட 10 வருடகாலமாக சொல்லப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட பிரச்னைகளை தொழிற்சங்கத் தலைவர்கள் கூறுகிற போது, அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதன் பேரில் நிலைமையை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலாளிகள் கூப்பாடு போடுகிறார்கள் என்று சொன்னால் பிரச்னை

திராது. மூடப்பட்ட ஆலைகள் மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கிறது என்று சொன்னால், அந்தத் தொழிலாளர்கள் நிலைமை மத்திய அரசுக்கு. . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவரவர்களே, வேஜ் போர்டு ரெகமெண்டேஷன் எப்போது வந்தது? வேஜ் போர்டு ரெகமெண்டேஷன் எத்தனை ஆண்டுக்கொரு முறை மாற்றியமைப்பது வழக்கம்? கொள்கை ரீதியில் மாற்றவேண்டுமென்று சொன்னால், தமிழ் நாட்டில் மட்டும் இந்தக் கிளர்ச்சி நடத்துவானேன்? அகில இந்தியக் கட்சி என்று சொல்லிக் கொள்கிறவர்கள் ஏன் இங்கே மட்டும் போராட்டம் ஆரம்பிக்கிறீர்கள்? அகில இந்தியப் பிரச்னையாக இதை வைத்துப் போராடுவதில் யாருக்கும் ஆட்சேபனையில்லை. தமிழ்நாட்டில் மட்டும் இதைத் தொடங்கியதற்குக் காரணம் என்ன?

**திரு. கோவை செழியன்** : ஒரு பர்சனல் எக்ஸ்பிளனேஷன். தலைவரவர்களே, நான் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். தமிழகத்திலே குறிப்பாக கோவையில் இருக்கும் தொழிலாளர்கள் அதிகச் சம்பளம் கேட்கிறார்கள். வடநாட்டில் இருக்கும் தொழிலாளர்களை விட அதிகமாக இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. அந்த அளவுக்கு சம்பளம் இங்கே அதிகமாகப் பெறுவதை நான் வரவேற்கிறேன். ஆனால், அங்கே அங்கே செய்யாத போராட்டத்தை இங்கே மட்டும் செய்யவேண்டிய காரணம் என்ன என்றுதான் பேசினேனே தவிர சம்பளம் அதிகம், போராட்டம் தேவையில்லை என்று பேசவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி** : தலைவரவர்களே, வேஜ் போர்டு சம்பந்தமாக அமைச்சரவர்கள் சொன்னார்கள் 5 ஆண்டுக்கு ஒரு முறைதான் வேஜ் போர்டு வருகிறது. செகண்ட் வேஜ் போர்டில் தொழிலாளர்களுக்கு என்ன சம்பளம் கொடுத்தார்கள்? ரூ. 2 தான் அவர்களுக்குக் கிடைத்தது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : வேஜ் போர்டு எத்தனை ஆண்டுக்கொருமுறை அமைக்கப்படுகிறது என்ற பிரச்னைக்குப் போகவில்லை. வேஜ் போர்டு ரெகமெண்டேஷனை மாற்றியமைக்க வேண்டுமென்று சொன்னால், அது கொள்கைப் பிரச்னை என்று



சொன்னால், அகில இந்திய அடிப்படையில் கட்சி வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்களே, அவர்கள் அகில இந்திய அடிப்படையில் ஒரு போராட்டத்தைத் துவக்காமல், தமிழ் நாட்டில் மட்டும் அரசியல் காரணங்களுக்கு ஒரு போராட்டம் செய்கிற மர்மம் என்ன? பம்பாய், கல்கத்தா, அகமதாபாத், லக்னோ, குஜராத் போன்ற இடங்களில் இதைச் செய்யாமல், இங்கே மட்டும் செய்வது ஏன் என்றுதான் கேட்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி** : தமிழ்நாட்டில் உணர்ச்சிபூர்வமான தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : உணர்ச்சிபூர்வமான தொழிலாளர்கள் என்று சொல்கிறீர்கள். அகில இந்திய ரீதியில் தமிழ்நாட்டில் தலைவர்கள் இருக்கிறபோது, கொள்கை ரீதியில் ஒரு போராட்டத்தை அகில இந்திய ரீதியில் துவக்காமல், தமிழ் நாட்டில் மட்டும் அரசியல் காரணமாக செய்யும் சதிவேலைமாதிரி தான் இருக்கிறது என்று சொல்வேனே தவிர வேறு இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி** : அரசியல்பூர்வமான சதிவேலை என்று சொல்வது, திராவிட முன்னேற்றக் கழகமும் இதிலே சேர்ந்து சதிவேலை செய்வதாக அமைச்சர் அவர்கள் சொல்வதிலிருந்து தோன்றுகிறது. இந்தப் போராட்டக் கமிட்டியில் திராவிட முன்னேற்றக் கழகமும் ஒரு மெம்பராக இருக்கிறது. அப்படியானால் அந்தப் போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து இருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு இல்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அகில இந்திய ரீதியில் ஒரு போராட்டத்தை நடத்துவதை விட்டு விட்டு, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகத் தான் இங்கே தொடங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்வேன். கொள்கை ரீதியில் போராட்டம் என்று சொன்னால், அதை அகில இந்திய ரீதியில் ஒரு பிரச்னையாக்காமல், தமிழ்நாட்டில் மட்டும் பிரச்னையாக்கியிருக்கிறீர்களே என்று தான் கேட்கிறேன். வேஜ் போர்டு மாற்றியமைக்கப்படவேண்டுமென்று சொன்னால், நீங்கள் முதலில் அகில இந்திய ரீதியில் போராட்டத்தைத் தொடங்குங்கள். முதலாளிகள் பக்கம் நான் பேசவில்லை. தொழிலாளிக்கு அதிக கூலி கிடைக்கவேண்டுமென்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அகில இந்திய ரீதியில் தொடங்க வேண்டிய

(திரு. ப. உ. சண்முகம்) [1972 மார்ச் 4

ஒரு போராட்டத்தை தமிழ் நாட்டில் மட்டும் செய்வதற்கு காரணம் என்ன ?

**திரு. கே. டி. கே. தங்கமணி** . குஜராத்திலும், கான்பூரிலும், லக்னோவிலும் ஏற்கனவே மாற்றியமைக்கப்பட்டுவிட்டது. டெல்லியிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தமும் முடிவாகிவிட்டது. தமிழகத்தில் மட்டும்தான் வேஜ் போர்ட் சிபாரிசுகளை அமுலாக்க, எந்தவிதமான நிர்ப்பந்தமும் முதலாளிகளைச் செய்யாமல் இருக்கும் நிலை இருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி** : அமைச்சர் சந்தேகிக்க வேண்டிய அவசியம் இல்லை. இன்றைக்கு தமிழகம் முழுவதும் சம்பள உயர்வு கொடுக்கப்படவேண்டும் என்று மாநில அரசாங்கத்தையும், மத்திய சர்க்காரையும் சேர்த்துக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அகில இந்திய தொழிற்சங்கங்களும் சம்பள உயர்வு வேண்டும் என்று எல்லோரும் இன்று சேர்ந்து நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அது இங்கு மட்டும் என்பதில்லை. முதலாளிகள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். ஆனால் அவர்கள் இணங்குவதில்லை. தொழிலாளிகள் கோரிக்கைகள் வைப்பது நியாயம் இல்லை என்று சொல்லமுடியாது. நியாயமான முறையில் கேட்பதைக் கொடுக்கமுடியும். அவர்களுக்கு சக்தியிருக்கிறது. அரசாங்கம் முன்நின்று அந்த முதலாளிகளிடத்தில் அவற்றைப் பெற வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 2, 3 மாத காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாக, இன்றைக்கு நாடு பூராவும் போராட்டம் நடக்க இருக்கிறது. இந்த நிலையிலும் அரசாங்கத்தின் கொள்கை காலதாமதம் செய்வதாகத்தான் இருக்கிறது. இந்தக் கோரிக்கைகளை அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். முதலாளிகளும் நியாயம் என்று சொல்லுகிறார்கள். ஆனாலும் இதில் உடன்பாடு காண அரசு தவறியதன் காரணமாக இப்பொழுது 18 நாட்களாக ஸ்ட்ரைக் நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதி வறண்ட தொகுதியாக இருப்பதால், மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் திட்டமிட்டு, மக்களுக்கு உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.



1972 மார்ச் 4]

* **திரு. ஏ. சி. நரசிம்மன்** : மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த இந்த நிதிநிலை அறிக்கையில் 2½ கோடி அதிக வருமானம் வரும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு, அதிக வருமானம் என்று சொன்னவுடனேயே, எனக்கு முன்பு பேசிய சில உறுப்பினர்கள், உபரி வருமானம் தான் வருகிறதே, மேற்கொண்டு ஏன் சில வரிகளைப் போட்டார்கள் என்று கேட்டார்கள். வரி போடும் பழியை ஏன் ஏற்றுக்கொள்கிறீர்கள் என்றும் கேட்டார்கள். ஆனால் போடப்படும் வரிகள் யாருக்குப் போட்டிருக்கின்றன என்பதை உணரவேண்டும். போட்டிருக்கும் வரி மோட்டார் வாகனத்தின் மீது 10% உபரி வரி என்று இருக்கிறது. இது எந்தவிதத்தில் பொது மக்களைப் பாதிக்கும்? பஸ் கட்டணத்தை ஏற்றமுடியுமா ? சென்ற செப்டம்பரிலே பஸ் கட்டணங்களை ஏற்றியபோது, பஸ் முதலாளிகள் என்ன சொன்னார்கள்? கட்டண உயர்வு தேவையில்லை. இப்பொழுது உள்ள நிலையில் லாபகரமாகவே நடத்த முடியும். ஆனாலும், அரசு ஏற்றியிருக்கிறது, ஆகவே, நாங்களும் ஏற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஏதோ பஸ் கட்டணங்களை ஏற்றுவதுபோல் பேசினார்கள். அது ஒன்றும் இல்லை. அவர்களுக்கு அதிகமாக வரும் வருமானத்திலிருந்து 10%, அதிக லாபத்திலிருந்துதான் பெறுகிறோம். அதனால் பொது மக்களுக்கு தொல்லையில்லை. பஸ் கட்டணங்களை உயர்த்தாமலும் நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். இந்த வரியினால் பொது மக்களில் யாரும் பாதிக்கப்படமாட்டார்கள்.

அடுத்தபடியாக, குதிரைப் பந்தயத்தின்மீது வரி போட்டிருக்கிறது. குதிரைப் பந்தயத்தின்மீது போடுவதால் எந்தவகையிலும் பொது மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள். காரணம், அதிகமான லாபத்தை குதிரைப் பந்தய சங்கம் அடைகிறது. இதுபற்றி விவரமாக சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் குதிரைப் பந்தயச் சங்கமானது ஒரு சிலருடைய குடும்ப சொத்தைப்போல் நடக்கிறது. ஒரு சிலருடைய

[திரு. ஏ. சி. நரசிம்மன்] [1972 மார்ச்

ஆதிக்கத்தின்கீழ் நடைபெறுகிறது. ஆகவே, அப்படிப்பட்
ஆதிக்கத்தைக் குறைக்கவேண்டும். குதிரை சொந்
காரர்களெல்லாம் அந்தச் சங்கத்தில் அங்கத்தினர்கள். அ
கிளப் மெம்பர்ஸ் என்று ஆகிறார்கள். குதிரை சங்கமே அ
களுக்கு கடன் கொடுக்கிறது குதிரை வாங்கவும். குதிரை
வாங்கவும் வழிவகை செய்கிறார்கள். ஒரு அங்கத்தினரே
குதிரைகளை வாங்குகிறார்கள். தன்னோடு 4, 5 பார்ட்னர்கள்
சேர்த்துக் கொள்ளுகிறார்கள். அவர்களும் பினாமி பார்ட்னர்கள்
ஒரே மெம்பர் 40, 50 பேர்களை கிளப்பில் அங்கத்தினர்களாக
சேர்த்துவிடுகிறார். அவர்களைக் கையாளாக வைத்துக் கொண்
விடுகிறார்கள். இப்படி பினாமிகளை வைத்துக் கொண்டு இருப்ப
தால், எப்பொழுது யாரை ஸ்டுவர்ட் ஆகக் கொண்டு வரலா
என்று தீர்மானித்துக் கொள்கிறார்கள்.

அந்த வகையில்தான் அந்தக் கிளப் நடக்கிறது. அ
நடக்கும் தவறுகள் ஏராளம். பத்திரிகைகளில் வருகிறது.
குதிரை வெற்றி பெற்றது என்று வந்தது. அது யாருக்குச் சொ
தம்? அங்கே இருக்கும் சிப் ஸ்டுவர்டுக்குச் சொந்தம். அந்த
குதிரை வெற்றி பெற்றிருக்கிறது. வெற்றி பெற்ற குதிரையை மெடி
கல் செக்-அப்புக்கு அனுப்புகிறார்கள். மெடிகல் இன்வெஸ்டிகேஷனி
குதிரைக்கு மருந்து கொடுக்கப்பட்டிருப்பதாகவும், அதனாலே
அது ஜெயித்திருப்பதாகவும் கண்டுபிடிக்கப்படுகிறது. பிறகு
நாட்களுக்குப் பிறகு அது செல்லாது என்று சொல்லி, வே
குதிரைக்கு வெற்றி கொடுக்கப்பட்டது. இதுவும் பத்திரிகையில்
வந்திருக்கிறது. இதில் சம்பந்தப்பட்டவர் சிப் ஸ்டுவர்ட் அவரே
இப்படி மருந்து கொடுத்துக் குதிரையை வெற்றிபெறச் செய்
திருக்கிறார் என்றால், மற்ற ஸ்டுவர்டுகளைப்பற்றிச் சொ
வேண்டுமா ?

இதில் பெரிய பெரிய முதலாளிகள் இருக்கிறார்கள். மற்ற
வர்களை விலைக்கு வாங்கி தன் குதிரையை வெற்றிபெறச் செய்
விடுகிறார்கள். எந்த ஜாக்கியை ஸ்பெஷல் செய்தால் தான்
வெற்றிபெறலாம் என்று செய்கிறார்கள். அப்படியெல்லாம் அதிலே
நடந்து கொண்டிருக்கிறது.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். அதுவும் பத்திரிகை
யில் வந்திருக்கிறது. ... வெக்கிலே முதலிலே



1971 மார்ச் 4] [திரு. ஏ. சி. நரசிம்மன்]

29 டிக்கட்டுக்கள் என்று போட்டார்கள். பிறகு அதை அடித்துத் திருத்திவிட்டு 33 டிக்கெட்டுகள் என்று சொல்லி, கடைசியில் 4 டிக்கெட்டுகள் வெற்றி பெற்றன என்று சொன்னார்கள்.

**திரு. என். கணபதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குதிரைப் பந்தயம் பற்றி விளக்கமாகச் சொல்லுகிறார்கள். அது சொந்த அனுபவத்தின் பேரிலேயா அல்லது கேள்வி ஞானத்திலா ?

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** பத்திரிகையில் வந்ததை வைத்துச் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பத்திரிகையில் வந்ததைவைத்து மட்டும் இவ்வளவு சொல்லமுடியுமா ? சொல்ல முடியாது.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** இந்து பத்திரிகையிலேயே வந்திருக்கிறது. 29 என்று போட்டு விட்டு, பிறகு 33 என்று போட்டார்கள். கடைசியில் 4 டிக்கெட்டு என்று போட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 'லெக்' எல்லாம் எல்லோருக்கும் புரியாது.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** இப்படிச் செய்யும்போது, சந்தேகம் வருகிறது. நியாயமான சந்தேகத்தின் பேரில் கையும் களவுமாகப் பிடித்திருக்கிறார்கள்.

இன்னொன்று. தனலா பந்தயம் என்று ஒன்று இருக்கிறது. ஒரே டிக்கெட்டில், ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசையாக வெற்றிபெறும் குதிரைகளை பஞ்ச் செய்து டிக்கெட்டு வாங்க வேண்டும். அப்படி அந்த தனலா பந்தயம் முடிந்த பிறகு அவைகளைக் குறிப்பிட்டு 4 டிக்கெட்டுகளை அடித்துக் கொண்டார்கள். அந்த ஒவ்வொரு டிக்கட்டுக்கும் ரூ. 6,000 விதம் வாங்கிக் கொண்டார்கள். இப்படியெல்லாம் பொது மக்களுடைய பணம் வீணாக ஒரு சிலருடைய லாபத்திற்காக பயன் படுத்தப்படுகிறது.

எனவே இந்தப் பந்தயச் சங்கத்தை அரசே ஏற்று நடத்ினால்—இப்போது ரூ. 50 லட்சம் தான் வரும் என்று சொல்லுகிறார்கள்—இந்த 50 லட்சம் ரூபாயை நாம் பிச்சைக்காரர்களுக்கு பயன்படுத்தி இருக்கிறோம். ஆனால் இந்த பந்தயச் சங்கத்தை அரசே

[திரு. ஏ. சி. நரசிம்மன்] [1972 மார்ச் 4

ஆஃப் சயன்டிபிக் அண்ட் இன்டஸ்ட்ரியல் ரிசர்ச்', சி.எஸ்.ஐ.ஆர்., என்ற நிறுவனம் இருக்கிறது. அங்கேகூட இந்திய அறிவாளிகள் சில பேரை கொண்டு வந்தார்கள். 600 பேருக்கு இரண்டாண்டுக் காலம் கழித்து நோட்டீஸ் கொடுத்து விட்டார்கள். 'நீங்கள் செய்தது போதும்; இனிமேல் உங்கள் சேவை தேவையில்லை' என்று 'டெர்மினேஷன் நோட்டீஸ்' கொடுத்து விட்டார்கள். வெளிநாடுகளிலிருந்து வந்த பலருடைய ஆராய்ச்சி தேவையாக இருக்கும்போது, இரண்டாண்டு போதும் என்று அனுப்பிவிட்டால் இன்றைக்கு அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விடுவார்கள். அவர்களுடைய அறிவுத் திறன் தமிழகத்திற்கு கிடைக்காமற்போய்விடும். அந்த நிலைமை இல்லாமல் அவர்களை நிரந்தரமாக வைத்துக் கொண்டு எந்த அளவுக்கு ஆராய்ச்சி நடத்துகிறார்களோ அந்த அளவுக்கு ஊக்கம் கொடுத்து பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கால்நடைப் பராமரிப்பு பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் அதிகமான 'கீ வில்லேஜ் சென்டர்'களை பராமரிக்க வேண்டும். அதன் மூலமாகத்தான் 'ஆர்ட்டிபிஷியல் இன்செமினேஷன் சென்டர்ஸ்' பராமரிக்க முடியும். இதனால் நல்ல இனப் பசுக்கள், காளைகள் உற்பத்தி செய்யமுடியும். 'ஜர்சி புல்ஸ்' அதிகம் கொண்டு வரவேண்டும். தமிழ் நாட்டில் அவை குறைவாக இருக்கின்றன. அதேநேரத்தில் "ரெட் டேன்" என்ற ஒரு இனம் இருக்கிறது. அந்த இனம் தமிழ்நாட்டு தட்பவெப்பநிலைக்கு பயன்படும் என்று சொல்லுகிறார்கள். அதை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். அதன் கன்றுகள், ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் நல்ல பயன் தரும் என்று சொல்லுகிறார்கள். அதை ஆராய வேண்டும் என்று கூறிக் கொண்டு, கடைசியில் என்னுடைய தொகுதியைப் பற்றி சிலவற்றை கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆரணி-செய்யாறு ரோடில், வின்னமங்கலம் அருகே செய்யாறு செல்கிறது. அந்த இடத்தில் ஒரு மேம்பாலம் கட்ட வேண்டுமென்று ஏற்கெனவே பலமுறை வற்புறுத்தி அதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. 12 லட்சத்திற்கு திட்டம் போட்டிருக்கிறார்கள். சி.ஆர்.எஃப்' ல் போட்டிருக்கிறது. அதை துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆரணியில் ஒரு கல்லூரி அமைக்கவிருக்கிறார்கள். விரைவில் அந்தக்



72 மார்ச் 4]

கமிட்டிக்கு அதிகாரம் கொடுத்து, அந்தக் கல்லூரி அமைப்பதற்கு வேண்டிய அதிகாரங்களை ஏற்படுத்தி உத்தரவுகள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த 1972-73-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை பற்றி எங்கள் கட்சித் தலைவர் மணலி அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதுகுறித்து மேலும் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு மாஜி மந்திரி வேழவேந்தன் அவர்கள் கூட, இது அருமையான தமிழில் இருக்கிறது என்றும், எதிர்க் கட்சியினர் சுவைக்க வேண்டும் என்றும் கூறினர். நாங்கள் இதை அனுபவித்தோம். தேன் தமிழைச் சுவைக்கிறோம். அதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. அது எப்படிப்பட்ட தமிழில் இருக்கிறது என்றால், அறப்பணித் துறை அமைச்சர் பாணியில் சொன்னால், பழனி பஞ்சாமிர்தத்தை விட இனிமையாக இருக்கிறது. அதைப்போலவே முத்தமிழும் நர்த்தனமிட முழங்கிய ஆளும் அருணனின் பேச்சையும் ரசித்தோம். நிதிநிலை அறிக்கையின் சுவையான தமிழைப் பற்றி எந்தவித வேறுபாடும் இல்லை. நல்ல தமிழில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு வேறுபாடு, அமெரிக்காக்காரர்கள் வியட்நாமில் குண்டுபோடும்போது இனிய மிட்டாய் போல் ஒன்றை விமானத்திலிருந்து போடுகிறார்கள். அதை எடுத்துச் சாப்பிட்ட குழந்தைகள் இறந்து விடுகின்றன. காரணம் அந்த மிட்டாயின் மேலே இனிப்பும் உள்ளே நஞ்சும் இருக்கிறது. இனிப்பாக இருப்பவை எல்லாமே நல்லவை என்று ஏற்க முடியாது, எதிர்க்கட்சியில் இருக்கும் எங்களால்.

இந்த நிதிநிலை அறிக்கையில் எங்கள் தலைவர் எடுத்துக் குறிப்பிட்டது போல சிறப்பு அம்சங்களும் வந்திருக்கின்றன. பற்றாக்குறை என்றால் அது மோசம் என்று சொல்வதும், உபரி பட்ஜெட் என்றால் அது சிறந்த பட்ஜெட் என்றும் யாரும் சொல்ல மாட்டார்கள். இதை பொருளாதார நிபுணர்களும் ஒப்புக் கொண்ட உண்மை. எந்த வழியில் செலவு செய்யப்படுகின்றது; யாரிடத்திலிருந்து திரட்டப்படுகின்றது; அது எந்த வழியில்

[திரு. ஏ. சி. நரசிம்மன்] [1972 மார்ச் 4

ஏற்று நடத்தினால், குறைந்த பட்சம் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் வரும் என்று நான் அறுதியிட்டுச் சொல்ல முடியும். அந்த அளவு ஒரு நல்ல தொகை பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு பயன்படுத்த முடியும். எனவே அதை அரசு ஏற்று நடத்த வேண்டும். அதனால் பல பெரும் புள்ளிகள் மேலும் பணக்காரர்கள் ஆவதை தடுக்க முடியும். ஏழைகள் ஏமாற்றம் பெறுவதை நாம் தடுக்க முடியும். இப்போது ஏழைகள் பலர் ஏமாந்து விடுகிறார்கள்.

இந்த வரியை விதிக்கும்போது நான் இந்த நேரத்தில் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சில பெரும் பணக்காரர்கள் அங்கே விளையாடுகிறார்கள்; வரி ஏய்ப்பு நடைபெறுகிறது. எப்படி என்றால், சில பெரும் பணக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 100 ரூபாய் என்று புக்கியிடம் சொல்லுவார்கள். 100 என்றால் அவர்களுக்கு எவ்வளவு தெரியுமா? 1,000 ரூபாய். இப்போது 20 சதவிகிதம் என்றால் 200 ரூபாய் போய்விடும். இதைத் தடுப்பதற்கு அங்கே சில கண்காணிப்பாளர்களை நாம் அமர்த்தியிருக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : இப்போது விற்பனை வரி அதிகாரிகள் நேரடியாக அங்கே சென்று அரசாங்கத்திற்கு உண்டான கட்டணத்தை வசூலிக்கிறார்கள். நம் அதிகாரிகள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் பாஷையில் 100 ரூபாய் என்றால் 1,000 என்ற ரகசியம் அந்த இலாகாவை ஏற்றுக்கொண்டுள்ள எனக்குக் கூட தெரியாது. உறுப்பினர் அவர்களே அப்படி ஆடியிருக்கிறாரோ என்னவோ எனக்குத் தெரியாது. அப்படி யாராவது ஆடியிருப்பார்களானால், வரி ஏமாற்றுவதற்காக செய்திருப்பார்களானால், உறுப்பினர் தகவல் கொடுத்தால்—யார் அந்த 'புக்கீஸ்' என்று—அவர்களுடைய லைசென்ஸை 'கான்சல்' செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரமிருக்கிறது. அந்த 'கண்ட்ரோலை' அரசாங்கம் வைத்திருக்கிறது. அப்படிச் செய்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்** : இதில் நான் தகவல் கொடுக்கத் தயார். ஆனால் அதை நிரூபிக்கவேண்டுமென்று பின்னால் சொன்னால் அது கடினமாக இருக்கும். ஏனென்றால் இது பரஸ்பரம் ஒருவருக்கொருவர் செய்து கொண்ட ஒப்பந்தமாக இருக்கிறது.



1972 மார்ச் 4]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : அங்கத்தினருக்கு ரேஸ் கிளப்புடன் உள்ள நெருங்கிய தொடர்பை நான் கெடுத்து விட மாட்டேன். ஆனால் புக்கீஸ் யார் தவறு செய்கிறார்கள் என்று சொன்னால், அதிகாரிகளை வைத்து கண்காணித்து நடவடிக்கை எடுக்கிறேன். அப்படிச் செய்தால் நிச்சயம் லைசென்ஸை ரத்து செய்யலாம்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்** : மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கத்திற்கு நன்றி. அந்தத் தகவலை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிவைக்கிறேன்.

இதை அரசே ஏற்று நடத்தினால் 2 கோடி ரூபாய் வரும். பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுக்குப் பயன்படுத்தலாம்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்களுக்கு கொடுக்கக் கூடிய அதிகாரம் அதிகமாக கொடுத்திருக்கிறதே என்றால், இது வரி விதிப்பு ஆகாது. ஏனெனில் இரண்டரை ரூபாய் அதிக லெவி 'சர்சார்ஜ்' போடுவதற்கு வன் அனுமதி கொடுத்திருக்கிறோம் என்றால், அதை முழுக்க போட்ட சில பஞ்சாயத்து யூனியன்களுக்கேகூட நிதிப் பற்றுக்குறை இருக்கிறது. எனவே இந்த அதிக வரி விதிப்பு கொடுத்ததன் காரணமாக நிலைநில்லைம உயரும்; எந்த அளவுக்கு சர்சார்ஜ் அதிகமாக்குகிறார்களோ அந்த அளவுக்கு சர்க்காரில் நாம் 'மாட்சிங் கிராண்ட்' கொடுக்கவேண்டும். அதனால் நிதிநிலைமை உயரத்தான் பயன்படுகிறதே தவிர, அதை வரி விதிப்பாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த பட்ஜெட்டில் ஒரு சிறந்த அம்சம் தமிழ் நாடு உயர் கல்வி உதவித் தொகை திட்டம். அதைப் பற்றி ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில் தமிழ் நாட்டைச் சேர்ந்த சில பல அறிஞர்கள் வெளிநாடுகளில் இருக்கிறார்கள். அவர்கள் சேவை தமிழ்நாட்டுக்கு கண்டிப்பாகத் தேவை. அவர்களுக்கு உதவித் தொகை கொடுத்து கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் வைத்து ஆராய்ச்சி செய்யவேண்டிய நிலையில் இருக்கிறோம். அப்படிப்பட்ட அறிவாளிகளைக் கொண்டு வந்து பயன்படுத்தும்போது '6 மாதம் முதல் ஓராண்டு வரை' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதை நான் மத்திய சர்க்கார் 'கவுன்சில் நிறுவனத்தோடு ஒப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செலவழிக்கப்படுகிறது என்பதைப் பார்க்கவேண்டும். ஏற்கனவே மதுவிலக்கை ரத்து செய்ததால் அதிகமான பணம் கிடைத்திருக்கிறது. மதுவினால் வரி கொடுக்கக் கூடியவர்கள் யார் என்று கேட்டால் ஏழை சாதாரண மக்கள்தான். தானும் கஷ்டப்பட்டு அந்த வரியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தத் தொழிற்சாலை வைத்துக்கொண்டிருக்கும் வடபாதி மங்கலம் தியாகராச முதலியார், ஏ. எல். சீனிவாசன் போன்ற அவர்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படவில்லை; மாறாக அதிக லாபம் சம்பாதிக்கிறார்கள். பட்ஜெட்டில் விதிக்கப்பட்ட வரி ஏழைகளைத் தாக்குகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு மேலும் வளர்ச்சி திட்டங்கள் எந்த அளவுக்கு வரையப்பட்டிருக்கின்றன? இதைத்தான் பார்க்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஏ. எல். சீனிவாசன் மீது வரி இல்லை என்று சொன்னார். அவர் எதைச் சொல்கிறார் என்று புரியவில்லை. அவர் இன்னும் தொழிற்சாலையே அமைக்கவில்லை. தொழிற்சாலை அமைப்பதற்கு முன்பே வரி போட வேண்டுமென்று விரும்புகிறாரா என்று எனக்குப் புரியவில்லை.

**திரு. க. சுப்பு:** யாருக்கும் வரிச் சலுகை கொடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொருட்களின் மீது தான் வரி போடப்படுவதாகச் சொன்னார்கள். ஒயினுக்கு வரி போட்டிருக்கிறீர்கள். பிராந்திக்கு வரி போட்டிருக்கிறீர்கள். இந்த வரிகளெல்லாம் யார் தலைமேல் போய் விழுகிறது என்பதைப் பார்க்க வேண்டாமா? இம்மாதிரி மதுபானங்கள் தயாரிப்பவர்கள் மீதா வரி விழுகிறது? இல்லையே. அந்த மதுபானங்களை அருந்துபவர்கள் மீதுதான் வரிச்சுமை விழுகிறது. யார் மது அருந்துகிறார்கள்? இன்று மதுவிலக்கை ரத்து செய்ததினால், ஏழை எளியவர்களெல்லாம் மது அருந்துகிறார்கள். எனவே இந்த வரியினால் அந்த ஏழை எளிய மக்கள்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

அடுத்தபடியாக, கல்வியை எடுத்துக்கொள்வோம். கல்விக்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 89.85 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 1967-68-ம் ஆண்டில் கல்விக்காக 53.56 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வளவு அதிகமான தொகையை கல்விக்காக ஒதுக்கி என்ன



பயன் ஏற்படப் போகிறது? இதனால் பயனடைபவர்கள் தனியார் பள்ளி, தனியார் கல்லூரி, தனியார் விடுதி நடத்துபவர்களுக்குத் தான் போய்ச் சேருகிறது. அவர்கள்தான் பயனடைகிறார்கள். இந்தப் பணத்தினால் அவர்கள்தான் உப்பிக் கொண்டிருக்கிறார்கள். கல்வி நிறுவனங்கள் நல்ல முறையிலே நடைபெறக் கூடிய வகையில், தவறு செய்யும் கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால், கல்லூரிகளை நாம் கேட்க முடியாது; யுனிவர்சிட்டிதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்; ஏனென்றால் அது அட்டானமஸ் பாடி என்று சொல்கிறார்கள்.

மாணவர்களுக்கு சலுகை அளித்து, கல்வியின் தரத்தை உயர்த்தவே இவ்வளவு அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். மாணவர்களுக்குச் சலுகை அளித்தால், அந்தச் சலுகையை விட அதிகமாக தனியார் கல்லூரிகளிலே அவர்களிடமிருந்து வசூல் செய்துவிடுகிறார்கள். மாணவர்கள் அவர்கள் கேட்கும் பணத்தைக் கொடுக்காவிட்டால் கல்லூரிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. மாணவர்களுக்கு இந்த நிலையென்றால் ஆசிரியர்களுக்கும் அந்த நிலைதான். ஆசிரியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைச் சரியாகக் கொடுப்பதில்லை. அரசாங்கம் சலுகை செய்து என்ன பயன்? இம்மாதிரி தவறுகள் நடைபெறுகின்றனவே. நடவடிக்கை எடுக்கக் கூடாதா என்றால், அட்டானமஸ் பாடியாக இருப்பதால் அரசாங்கம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. யுனிவர்சிட்டிதான் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

தனியார் நிறுவனங்களிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பணி பாதுகாப்பு இல்லை. அவர்களை நினைத்தால் பணிக்கு அமர்த்திக் கொள்கிறார்கள்; நினைத்தால் நீக்கி விடுகிறார்கள். இப்படி அல்லல்படும் ஆசிரியர்களுக்கு என்ன பணி பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது? ஆசிரியர்கள் மீது அக்கறை காட்டும் அரசாக இருந்தால் இந்த அவல நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டாமா?

ஆசிரியர்களுக்கு 200 ரூபாய் சம்பளம் என்றால் 15 ரூபாய் பஞ்சப்படி கொடுக்கப்படுகிறது. ஆனால், நூற்றுக்கு 12 ரூபாய் மெயின்டனன்ஸ் கிராண்டாக அந்த நிறுவனத்திற்கு கொடுக்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது இப்போது ஒரு ஆசிரியருக்கு

ரூ. 200 என்றால், பள்ளி நிர்வாகிக்கு ரூ. 24 மெயின்டனன்ஸ் கிராண்ட் கொடுக்கப்படுகிறது. இரண்டாவது சம்பளக் குழுவுக்கு முன்னால் ஆசிரியர்கள் சம்பளத்தை விட பஞ்சப்படி அதிகமாக வாங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது பஞ்சப்படியை ரூ. 15 என்று ஆக்கி, அது குறைக்கப்பட்டு சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் அவர்கள் வாங்கிய சம்பளத்தில் அதிக வித்தியாசமில்லை. ஆனால் முன்னால் ஒரு நிர்வாகிக்கு கொடுக்கப்பட்ட கிராண்ட் ரூ. 12 தான். இப்பொழுது கொடுக்கப்படுவது ரூ. 24. ஆக இந்த வகையிலும் தனியார் நிறுவனங்களுக்குத் தான் லாபமாக இருக்கிறது. இப்படி தனியார்கள் லாபமடைந்தாலும், அந்த ஆசிரியர்களின் பணிக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. அவர்கள் வேலைக்கு உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும்.

கைத்தறித் தொழிலாளர்கள் நலனைப் பாதுகாக்க குழு அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களின் குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்த நடவடிக்கையை மேற்கொண்டால் நல்லது. ஆனால் குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் அவர்களுடைய தொழிலுக்கு உத்தரவாதமும் இருக்க வேண்டும். ஏனென்றால் இப்படிப் பல தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டும் அமுலாக்கப்படாமலே இருந்து வருகிறது; தொழிலுக்கும் பாதுகாப்பு இல்லை என்பதைக் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். எனவே இதை எப்படி செயல்படுத்தப் போகிறார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் பகுதியிலுள்ள கைத்தறித் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நூல் விலை ஏற்றத்தால் வேலை இல்லாமலும், கூலி இல்லாமலும் இன்று அவர்கள் பிச்சை எடுக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் பிச்சைக்காரர்களாக மாறுகின்ற நிலையிருக்கும்போது, இங்கே பிச்சைக்காரர் மறுவாழ்வைப்பற்றி பேசுகிறார்கள். இப்போது இருக்கின்ற நிலையில் கைத்தறித் தொழிலாளர்கள் பிரச்சனையைப் பற்றி எதாவது கேட்டால், அவர்களுக்கு இப்போது கிடைக்கக்கூடிய ஊதியமும் கிடைக்காமல் போய்விடும். ஏனென்றால் ஆசிரியர்கள் பணிக்குப் பாதுகாப்பு இல்லாததுபோல் கைத்தறி நெசவாளர் பணிக்கும் பாதுகாப்பு கிடையாது.



அடிப்படைக் கோரிக்கைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களை பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? உரிமையைக் கேட்கும் தொழிலாளி வேலையிலிருந்து நீக்கப்படுவதும், வேறு சில நடவடிக்கைகளுக்கும் தானே ஆளாகவேண்டியிருக்கிறது. பல்வேறு தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்கள் நிறைவேற்றியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் தொழிலாளர்களால் அந்தச் சட்டங்களின் பலனை அனுபவிக்க முடிகிறதா என்று கேட்டால், தொழிற்சங்கத் தலைவர் சிங்காரவேலர் சொன்னதைப் போல நடக்க வேண்டும் என்று தொழிலாளர் நல அமைச்சர் உபதேசம் செய்கிறார்.

அடுத்து, அறக்கட்டளைகள் பெயரில் உள்ள நிலங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். 1959-ம் ஆண்டுக்குப் பின்னால் கோவில் நிர்வாகிகளோ, கோவில் அறக்கட்டளையின் பெயரில் பதிவு செய்யப்பட்ட நிலங்களையெல்லாம் எடுத்துக்கொள்ளப் போவதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு முன்னால் உள்ள நிலங்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இதற்கு முன்னாலும் நில உச்சவரம்பு குறித்து ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தினால் மிச்சம் ஏதாவது உண்டா என்றால் இல்லை. கேட்டால் அப்போது இருந்த சட்டம் நாணிக் கோணி தலைகுனியும்படி சொத்துக்களை மறைத்துவிட்டதாகச் சொன்னார்கள். இப்போது கூட பினாமி முறையிலே நிலங்களைப் பிரித்து வைத்திருக்கிறார்கள். அந்த நிலங்களையும் கைப்பற்றிக்கொள்ளவேண்டும். இதிலும் சட்டம் நாணிக்கோணி விடுகின்ற நிலை ஏற்படுமானால் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவது யார் அமைச்சரோ அதற்கென்று ஒரு சட்டத்தையோ கொண்டுவர வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நிலக் குத்தகைதாரர்களுக்கு பாக்கியை திருப்பிச் செலுத்துவதற்கு நான்கு தவணைகளில் செலுத்தலாம் என்ற சலுகை 1968-ல் கொடுக்கப்பட்டது. அதைப் பயன்படுத்தி குத்தகையைச் செலுத்தினால் எஞ்சிய பாக்கிகள் ரத்துச் செய்யப்படும் என்றும் கூறப்பட்டிருந்தது. ஆனால் ஏற்கனவே குத்தகை பாக்கிக்காக வெளியேற்றப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகளுக்கு எவ்வித விமோசனமும் இல்லை;

திரும்பவும் அவர்களுக்கு நிலத்தை ஒப்படைக்கும் நடவடிக்கைக்கு உத்தரவாதம் இல்லை. அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கும் என்ற உறுதிமொழி கொடுக்கப்படவில்லை. ஏற்கெனவே குத்தகைதாரர்களில் பெரும்பாலோர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இன்னும் வெளியேற்றிக்கொண்டே இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் அரசாங்கத்திற்கு அதுபற்றி எவ்விதத் தகவலும் இல்லை. கனம் உறுப்பினர் அவர்கள், எங்கே, எத்தனைபேர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அதுபற்றி பரிசீலனை செய்யப்படும். ஏற்கனவே அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு கோர்ட் அமைப்பதாகக்கூட இருந்தது. பின்னால் முதலமைச்சர் அவர்கள் இப்படி ஒரு சலுகையைக் கொடுப்போம் என்று சொன்னார்கள். அதன்படி இந்தச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. யாரையாவது வெளியேற்றியிருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு**: குத்தகைதாரர்கள் வெளியேற்றப்பட்டிருந்தாலும், அல்லது வெளியேற்றப்பட்டாலும், அவர்கள் மீண்டும் அந்த நிலத்தில் குடியேற்றப்படுவார்கள் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்தால் விவசாயிகள் எல்லாம் மிக்க மகிழ்ச்சியடைவார்கள்.

1938-ம் ஆண்டுச் சட்டத்தின் அடிப்படையில் விவசாயிகளுக்கு கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவரப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தினால் விவசாயிகளுக்கு எதிர்பார்க்கின்ற பலன் கிடைக்குமா என்றால் நிச்சயமாக இருக்காது. ஏனென்றால் இன்று விவசாயிகள் கூட்டுறவுத் துறையிலே மாட்டிக்கொண்டு, திண்டாடுகிறார்கள். 1938-ம் ஆண்டு சட்டம் வந்த போது அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் இல்லை. அதாவது ஆதித்தனார் அவர்கள் இருந்தார்கள். ஆனால் கூட்டுறவுத் துறை அமைச்சராக இல்லை. அப்போது இப்படிக் கூட்டுறவுத் துறை செயல்படவில்லை. அந்தச் சட்டம் வரும்போது தனியார் கடன்கள் அதிகமாக இருந்தன. ஆனால் இப்போது விவசாயிகள் அகப்பட்டிருப்பதோ கூட்டுறவுத் துறை கடனில், அரசாங்கக் கடனில். அதனால்தான் சொல்கிறேன். கூட்டுறவுத் துறை, அரசாங்கக் கடன்களிலிருந்தும் நிவாரணம் இல்லையென்றால்



இந்தச் சட்டத்தினால் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்காதென்று.

விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்கு என்று கடன் கொடுக்கிறார்கள். கிணறு வெட்டி, தண்ணீர் வரவில்லை என்றால் அந்த விவசாயி என்ன செய்ய முடியும்? தண்ணீர் வரவில்லை என்று கொடுத்த கடனை வசூலிக்காமல் விட்டுவிடுகிறார்களா என்றால் இல்லை. வறண்ட பகுதிகளில், இராமநாதபுரம் போன்ற இடங்களில் பல கிணறுகளில் தண்ணீர் கிடைக்காமல் போய்விடுகிறது. விளைபொருட்களை பெருக்க பசுமைப் புரட்சி செய்வதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அந்தப் பசுமைப் புரட்சியிலே ஈடுபடுகின்ற விவசாயி இப்படிப்பட்ட கஷ்டங்களுக்கு ஆளானால் பசுமைப் புரட்சி எப்படி வளர்ச்சியடைய முடியும்? என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அந்த நேரத்தில் ஒரு எஞ்சினியர் ஒரு பாலத்தைக் கட்டுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அந்தப் பாலம் புயல் மழையால் இடிந்துவிட்டால், அந்த எஞ்சினியரிடமோ, சம்பந்தப்பட்ட நபர்களிடமோ அதற்கான பணம் வசூல் செய்யப்படுகிறதா? இல்லையே. அல்லது அந்தப் பகுதி ஊராட்சி ஒன்றியத் தலைவரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. அதே மாதிரி உண்மையிலேயே கிணறு வெட்டி, அதில் தண்ணீர் கிடைக்காமல் போனால் அதற்காக அளிக்கப்பட்ட கடனை உணவு உற்பத்தியைப் பெருக்கும் தேசியத் திருப்பணியில் ஈடுபட்டிருப்பவன் என்ற அடிப்படையில் அந்த விவசாயியிடமிருந்து வசூலிக்காமல் விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் அதற்கு மாறாக, தண்ணீர் இல்லாமல் விவசாயமும் செய்யமுடியாமல், அல்லது விளைச்சலுக்குப் போதிய தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் விவசாயியிடம் கடனை வசூலிப்பதிலே கெடுபிடி காட்டுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: தலைவரவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் விளைச்சல் இல்லாமல் இருந்தால் அந்தப் பகுதிக்கு ரெமிஷன் கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. போதிய விளைச்சல் இல்லை என்பதற்கான 'அனாவாரி சர்டிபிகேட்' வாங்கிக் கொடுத்தால் மூன்று ஆண்டு காலத்திற்கு கடன் வசூலிப்பது

நிறுத்தி வைக்கப்படுகிறது. எங்காவது அப்படி சர்ட்டிபிகேட் கொடுத்தும் வசூலிக்கிறார்கள் என்று சொன்னால், அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** இதுபற்றி ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், ஆர்.டி.ஓ.வுக்கும் தெரிவித்திருக்கிறேன். அவர்கள் கடன் வசூலிப்பதை நிறுத்தவில்லை. இதுபற்றி அமைச்சர் அவர்களிடத்திலே கூட தெரியப்படுத்தியிருக்கிறேன். கலெக்டரிடத்திலே சொன்னால் எனக்கு அதிகாரம் இல்லை என்று சொல்கிறார். அமைச்சர்கள் வரும்போது ஏதோ வாய்மொழியாகச் சொல்லிவிட்டால் அதை எப்படி உத்தரவாக ஏற்றுக் கொள்ள முடியும் என்று சொல்கிறார்கள். பசுமைப் புரட்சி நடத்தி வரும் இந்த அரசாங்கம் விவசாயிகளிடத்திலே கெடுபிடி காட்டவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதற்கும் சட்டம் போட்டிருக்கிறோம், சட்டம் போட்டிருக்கிறோம் என்று சொன்னால் போதாது, அதைச் செயலிலே காட்ட வேண்டும். விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட கடனை வசூல் செய்வதில் நியாயமான நிதானம் காட்டவேண்டுமென்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எங்செங்கே கெடுபிடி காட்டப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் விளக்கமாகச் சொல்ல வேண்டும். மழை இல்லாமல் எந்த ஒரு ஊரிலும் விளைச்சல் குறைவாக இருக்குமானால், அதாவது 6 அணா வருமானத்திற்கும் குறைவாக இருக்குமானால் வரிவஜா அளிக்கப்படுகிறது. கடன்கள் வசூலிக்கப்படுவது மூன்றாண்டு காலத்திற்குத் தள்ளிப்போடப்படுகிறது. அதற்கு அனாவாரி சர்ட்டிபிகேட் முன்சீப், தாசில்தார், ஆர்.டி.ஓ. கொடுக்க வேண்டும். அதை கனம் அங்கத்தினரே செய்யவேண்டுமென்றில்லை. அந்த சர்ட்டிபிகேட்டுக்கான மனுவை கூட்டுறவுச் சங்கங்களிலே கொடுத்துவிட்டால் போதும். அவர்கள் அதை ரெவின்யூ அதிகாரிகளுக்கு அனுப்பிவிடுவார்கள். அதற்கு சட்டத்திலே வகை செய்யப்பட்டிருக்கிறது. எந்த ஊரிலாவது அப்படி சர்ட்டிபிகேட் கொடுத்தும் கடன் வசூலில் அல்லது வரி





வசூலில் கெடுபிடி காட்டப்படுவதாகச் சொன்னால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு ஊரிலிருந்து இதுமாதிரி ஒரு குற்றச்சாட்டு வந்து, அது பற்றி கலெக்டரிடத்தில் விசாரித்ததில், அப்படி நடைபெறவில்லை என்று சொன்னார்கள். அனாவாரி சர்டிபிகேட் அனுப்பப்பட்டால் கடனைத் தள்ளி வைப்பதில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லையே. இந்த அனாவாரி சர்டிபிகேட்டை வாங்குவதற்கு விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதாக அடுத்து சொல்லக்கூடும். அதற்குக் கூட நாங்கள் என்ன செய்திருக்கிறோம்? அவர்கள் போய் வாங்க வேண்டியதில்லை. சென்டிரல் பாங்குக்கு 30 கிளைகளுக்கு மேல் இருக்கின்றன. சென்டிரல் பாங்குக்கு ஒரு சின்ன தாளில் 'இந்த ஆண்டு விளைவு இல்லை' என்று எழுதினால் போதும். சென்டிரல் பாங்கு அதிகாரிகளே கலெக்டரை அணுகி இந்த அனாவாரி சர்டிபிகேட்டை பெற்று அனுப்ப வேண்டும் என்பதற்கான ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த அனாவாரி சர்டிபிகேட்டை ரிசர்வ் அவர்கள் வாங்கி எங்களுக்கு அனுப்பியவுடன் நாங்கள் ரிசர்வ் வங்கிக்கு அனுப்பி—அவர்களிடம் இருந்து பணத்தைப்பெற்று இந்த வங்கிக்கு அனுப்பிவிடுகிறோம். விவசாயிகளிடம் இருந்து 3 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தப் பணத்தை வாங்கிக்கொள்ள முடியும். இதில் எங்களுக்கு என்ன நஷ்டம்?

**திரு. க. சுப்பு :** கூட்டுறவு அமைச்சர் நஷ்டப்படவேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை. அரசாங்கம் நஷ்டப்பட்டால் நாமே நஷ்டப்படுவதாகத்தான் கருதுகிறோம். கூட்டுறவுக் கடன் ஒவ்வொரு ஆண்டும் தள்ளிவைக்கப்பட்டுத்தான் வருகின்றன. யார் யாருக்கு தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரங்கள் எல்லாம் என்னிடத்தில் இருக்கின்றன. நான் அதை மட்டும் சொல்லவில்லை. இராமநாதபுரம் டி.டி.ஸி. கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். ரெவின்யூ போர்டு மெம்பர் ஒரு நாளைக்கு 2 தாலுக்கா சுற்றுப்பயணம் செய்கிறார். டி.பி.-யில் உட்கார்ந்துகொண்டு பசுமையான இடத்தைப் பார்த்துவிட்டு . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நான் சொன்னதற்கும் ரெவின்யூ போர்டுக்கும் சம்பந்தம் இடையாது. ரெவின்யூ போர்டில் இருந்து யாரும் வந்து பார்க்க வேண்டியதும் இடையாது. பார்ப்பதற்கும் அவர்களுக்கு எந்தவிதமான

அதிகாரமும் கிடையாது. விவசாயிகளுக்குத் தேவை ஒரு தாள்—இந்த ஆண்டு விளைச்சல் இல்லை என்பதாக எழுதி சென்டிரல் பாங்கில் கொடுத்துவிட்டால் போதும். அனுவாரி சர்டிபிகேட்டை வாங்கி அனுப்ப வேண்டிய பொறுப்பே சென்டிரல் பாங்கு அதிகாரிகளைச் சார்ந்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு திரு. சுப்பு அவர்கள் வேறு விஷயத்திற்குப் போகலாம்.

**திரு. க. சுப்பு :** அதுபற்றிய ப்ரொஸீஜர்களை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து விட்டார்கள். அவை எங்களுக்கும் தெரியாதது அல்ல. நான் வற்புறுத்த விரும்புவது எல்லாம் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் அரசாங்கக் கடன், கூட்டுறவுத் துறை கடன் இவற்றை எல்லாம் எடுத்துக்கொள்வது சமுதாய தர்மம் என்றே வலியுறுத்த விரும்புகிறேன்.

தொழில் துறையை எடுத்துக்கொண்டால் மாநில அரசு சொல்வதை மத்திய அரசு ஏற்றுக் கொள்வதில்லை ஆயினும் மாநில அரசைக் குற்றம் சொல்கிறார்களே தவிர மத்திய அரசை நாங்கள் குற்றம் சாட்டுவதில்லையே என்கிறார்கள். மத்திய அரசை குற்றம் சாட்டுவதில்லை என்று கருதுவது சரியல்ல. மத்திய அரசு இந்த அரசாங்கத்தின் வேண்டுகோளை தொழில் துறையில் புறக்கணிக்கிறது என்றால் மாநில அரசாங்கமே இந்த அவையில் ஒரு தீர்மானம் கொண்டு வரலாம். நாங்கள் எல்லோரும் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். தொழிலாளர் போராட்டத்திற்கு நல்லதொரு தீர்வைக் காண்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மத்திய அரசின் அனுமதியின்றி செய்யக்கூடிய எத்தனையோ பல காரியங்கள் இருக்கின்றன. கேரளாவில் மாநில அரசாங்கமே க்ராஜுடி சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதுபோல இங்கே இந்த அரசு கொண்டுவர நினைத்தால் கொண்டுவர முடியாதா? கோவில் நிலங்களை எடுத்துக் கொள்ளுங்கள். கேரள அரசாங்கம் பத்மநாப ஸ்வாமி கோவில் நிலங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு கோவிலுக்கு வழிபாட்டுச் செலவுக்கு பணமாகக் கொடுத்து



விடுவது என்று தீர்மானித்திருப்பது போல இங்கே இந்த அரசாங்கம் நினைத்தால் செய்ய முடியாதா? 60 ஸ்டாண்டர்ட் ஏக்கரை 40 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைப்பதன் மூலம் பெரிய அளவில் பயன் விளையப் போவதில்லை. ஆண்டான்—அடிமை என்று இருந்து வருகிற உறவு முறையில் மாற்றம் அடிப்படையில் வேண்டும்—நிலக்காரன்—குத்தகைக்காரன் என்கிற நிலை மாறி உழுது உழைப்பவனே நிலக்காரனாக இருக்கும் நிலையை உண்டாக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தமட்டில்—இந்திய உப கண்டத்திலேயே மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நாம் தான் முன்னணியில் நிற்கிறோம் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளலாம். பல விதி விலக்குகளை எல்லாம் நீக்குவது சம்பந்தமாக இந்திய அரசாங்கத்தினால் கூட்டப்பட்ட நிலச் சீர்திருத்தக் குழுவில் விவாதித்தபோது அவர்களே தயக்கம் காட்டினார்கள். அத்தகைய தயக்கம் எதுவும் இன்றி நாம் துணிந்து பல விதிவிலக்குகளை ரத்து செய்திருக்கிறோம். கேரளாவில் எடுத்துக் கொண்டதைப் போல கோவில் நிலங்களை எல்லாம் ஏன் இங்கேயும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்றார்கள். காலப் போக்கில் அதுபோல இங்கேயும் வரக்கூடும். வராது என்று சொல்ல மாட்டேன். ஆனால் கேரளாவில் உள்ள பத்மநாபஸ்வாமி, குருவாயூரப்பன் கோவில்களுக்கு எல்லாம் இன்றைக்கு தமிழ் நாட்டில் இருந்துதான் அரிசி அனுப்ப வேண்டியிருக்கிறது. நிலக்காரர்கள் கொடுப்பதில்லை. அங்கே இருக்கிற பக்தர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க முன்பு மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்கள்தான் முதன் முதலாக கேரளாவில் உள்ள அந்த 2 ஆலயங்களுக்கும் அரிசி அனுப்பி வைக்க சம்மதித்தார்கள். அப்படிப்பட்ட ஒரு அவல நிலை தமிழ்நாட்டுக் கோயில்களுக்கு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும். இந்துக் கோயில்களுக்கு இருக்கின்ற நிலங்களைப் போல், கிறிஸ்தவக் கோயில்களுக்கு இருக்கின்ற நிலங்கள், முஸ்லிம் கோயிலான மசூதிகளுக்கு இருக்கின்ற நிலங்கள் ஆகிய எல்லாவற்றையும் சேர்த்து எடுப்பது என்பதில் சிக்கல் இருக்கிறது. இவற்றை ஆராயாமல் எடுத்துவிட்டால் பிரச்சினைகள் சிக்கலாகி விடும். ஆகவே, இவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்தத் திட்டம் காலப்போக்கில் சுமுகமாகத் தீர்ந்துவிடும். நிலச்

சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில், இந்த மாநில அரசு, வேறு எந்த மாநிலத்திற்கும் சளைத்தது அல்ல, விவசாயச் சீர்திருத்தச் சட்டம் நல்ல முறையிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இங்கே செய்திருக்கிறோம் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். இந்தச் சீர்திருத்தச் சட்டத்தை கனம் உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பாராட்டுவார்கள் என்று எதிர் பார்த்தேன். இந்த மாநில அரசுக்குக் கிடைக்கும் பெருமையில் கனம் சுப்பு அவர்களுக்கும் பெருமை உண்டு என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, நிச்சயமாக அந்தப் பெருமை இந்த மாநிலத்திற்கு உண்டு, எங்களுக்கும் உண்டு. கட்டுக் குத்தகைக்காரர் நிலச் சொந்தக்காரராகி விடமுடியாது. உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும். பணத்தை இருபதாண்டுக் காலத்தில் திருப்பிக் கொடுக்கக்கூடிய முறையிலே நிலம் உழுபவனுக்கே சொந்தம் என்ற முறையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில் அதிலே பணி யாற்றக்கூடிய அலுவலர்களின் அவல நிலை சொல்ல முடியாதவை. பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டில் 1,500 பேர் ஹெல்த் இன்ஸ்பெக்டர்களாக இருக்கிறார்கள். அவர்கள் 1966-ம் வருஷத் திலேயிருந்து வேலை பார்த்து வருகிறார்கள். அவர்களுக்கு வருஷா வருஷம் இன்க்ரிமெண்ட் இல்லை, அவர்களுடைய சர்வீஸை ரெகுலரைஸ் பண்ணவில்லை, அவர்களுக்கு சீனியாரிடி லிஸ்ட் இல்லை. அங்கு ஏற்படக்கூடிய காலி இடங்களை நிரப்புவதற்குக் கூட அந்த டிபார்ட்மெண்டார் தயாராக இல்லை. அரசாங்க உத்தரவுக்கு மாறாக டிபார்ட்மெண்டில் செயல்படுகிறார்கள். ஆகவே, பப்ளிக் ஹெல்த் துறையில் தனிக் கவனம் செலுத்த வேண்டு மென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

**திரு. சொ. காவேரிமணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் 1972-73-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்ததை வரவேற்று, நானும் ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விழைகிறேன்.





'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்று சொல்லக்கூடிய விதத்திலே, தமிழகத்திலுள்ளவர்களின் நெஞ்சை அள்ளக்கூடிய வகையிலே, ஏறத்தாழ நாலரை கோடி மக்களைத் திருப்திப்படுத்தக் கூடிய வகையிலே, அந்த மக்களின் நல்லெண்ணங்களை மதிக்கக் கூடிய வகையிலே, சிறந்த வகையிலே இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களின் நல்லெண்ணம், மாற்று குறையாமல், மற்றக் கட்சிக்காரர்கள் எல்லாம் பாராட்டத்தக்க அளவில் இந்த அறிக்கை அமைந்திருக்கிறது. மாற்றுக் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய திரு. மணலி அவர்கள், 'இந்த நிதிநிலை அறிக்கை சிறந்த முறையில் அமைந்திருக்கிறது' என்று சொன்னார்கள், பாராட்டினார்கள். நண்பர் திரு. சுப்பு அவர்கள் வெகு வேகமாக உயர்ந்த கருத்துக்களைச் சொல்லிக்கொண்டே போனார். அவர் ஒரு வழக்கறிஞர், மிகத் திறமையாகப் பேசக்கூடிய சக்தி அவரிடம் இருக்கின்ற காரணத்தால் சில குறைகளைச் சுட்டிக்காட்டி சுவையான கருத்தில் சொல்லியிருக்கிறார் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

ஏறத்தாழ இருபத்தெட்டு பக்கங்களைக் கொண்ட இந்த நிதி நிலை அறிக்கையில் ஒவ்வொரு வரியையும் துருவித் துருவிப் பார்த்தால், நாட்டின் முதுகெலும்பாக உள்ள விவசாயப் பெருங் குடி மக்களுக்கு உதவி செய்ய வேண்டும், தொழிலாளர் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற வகையில்தான் திட்டம் தீட்டப் பட்டிருக்கிறது, அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், இந்த அரசு நாட்டிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எந்த எந்தத் துறையில் செயல்படுகிறது என்பதை முன்னால் பேசிய உறுப்பினர் சுட்டிக்காட்டினார்கள். பசுமைப் புரட்சி வேண்டுமென்று ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்டங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் முக்கியமான பணிகளைச் செய்து வருகிறோம். விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன் வழங்குதல், தரமுள்ள பொறுக்கு விதைகள் அளித்தல், பூச்சிகொல்லி மருந்துகள் தெளித்தல் போன்ற சிறப் பான திட்டங்களை இந்த அரசு செய்து வருகிறது. இன்னும் கூட்டுறவுத் துறை மூலமாகவும், நிலவள வங்கி மூலமாகவும் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து, விவசாயத் துறையை

முன்னேற்றி, விவசாயிகளுக்குப் பல நன்மைகளைச் செய்து வருகிறது. விவசாயப் பெருங்குடி மக்களை வாழவைக்க வேண்டுமென்று பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சிறந்த முறையில் சொல்ல வேண்டுமானால், விவசாயப் பெருங்குடி மக்களை உள்ளடக்கித்தான் பல திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ நான்கைந்து ஆண்டுகள் கொடுக்கக்கூடிய குத்தகைத் தவணைக் கடன்கள் விதியைத் தளர்த்தும் வகையில், விவசாயப் பெருங்குடி மக்கள் உள்ளக் கிளர்ச்சியடையக்கூடிய வகையில், சிறந்த திட்டங்களை டாக்டர் கலைஞர் அவர்கள் தந்து இருக்கிறார்கள். இந்த ஆண்டு பசலிக்கு சரியாக கொடுத்துவிட்டிருந்தால் ஏற்கெனவே இருக்கக்கூடிய குத்தகை பாக்கிகளையெல்லாம் ரத்து செய்யக்கூடிய அளவிற்கு திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. மேலும் 60 ஸ்டாண்டர்டு எக்கர் என்கிற எண்ணிக்கையைக் குறைத்து 40 ஸ்டாண்டர்டு எக்கர் என்று குறைக்கப்பட்டிருக்கிறது. இது விவசாயத் துறை சம்பந்தப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்துவிட மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

•

அடுத்து அறக்கட்டளைகள் பற்றி இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. 1950-க்குப் பின்னால் உருவாக்கப்பட்ட அறக்கட்டளைகளுக்கு இந்த மன்றத்தில் உருவாக்கப்பட்ட சட்டங்கள் மூலமாக, உச்ச வரம்பு, விதி விலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது அந்த விதி விலக்குகள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. இதை இந்த மன்றத்தில் உள்ள நண்பர்கள் பாராட்டிப் பேசினார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானம் எல்லோராலும் வரவேற்கப்பட வேண்டியது. பண முதலாளிகள், திமிங்கலங்கள் எல்லாம் சட்டத்தின் சந்துகளில் புகுந்து கொண்டு ஏமாற்றலாம் என்று இருப்பவர்களுக்கு ஒரு சவுக்கடிபோல் இந்தத் திட்டம் அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட திட்டம் கொண்டு வந்ததற்காக டாக்டர் அவர்களுக்கு எத்தனை கோடி வணக்கங்கள் செலுத்தினாலும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆட்சியின் பொறுப்புகள் எந்த எந்த முறையில் அமைந்திருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். கிராமத்தில் இருக்கும் ஆட்சிப் பொறுப்பு, ஊராட்சி ஒன்றியங்கள்





மூலமாகவும், மற்றும் சில அமைப்புகளின் மூலமாகவும் நடைபெறுகிறது. ஆனால் பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டிய அளவிற்குத்தான் நிதி நிலை வசதி பெற்றிருக்கிறது. மற்ற வசதிகளை அளிக்க முடியாத நிலையில் இருக்கிறது. ரோடு வசதி, மருத்துவ வசதி போன்றவற்றைச் செய்ய முடிவது இல்லை. ஊராட்சி ஒன்றியங்கள் நிதி வசதியின்மையால் பல முக்கிய திட்டங்களை நிறைவேற்ற இயலாமல் இருக்கின்றன. ஆகவே, அவற்றின் கஷ்டங்களை உணர்ந்து, 1,500 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு பேருந்துகள் செல்லக்கூடிய வகையில், நல்ல ரஸ்தாக்களையும், இணைப்புச் சாலைகளையும் அரசே போடுவதற்கான திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபோல் மருந்தகங்கள் எவ்வாறு செயல்பட்டு வருகின்றன, பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதைக் கண்டறிந்து தேவைகளையொட்டி அரசாங்கமே மேற்கொள்ளும் வகையில் திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக் காட்டியிருக்கிறோம். இதற்கு முன்னோடியாக 45 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள மருந்தகங்களை எடுத்துக் கொள்வது என்று டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை மனமாரப் பாராட்டுகிறேன். நாட்டின் முதுகெலும்பாய் விளங்கக்கூடிய உழவர் பெருமக்களை, தொழிலாளர் பெருமக்களை உயர்த்த பல திட்டங்கள் அமைந்திருக்கின்றன. யாராலும் செய்ய முடியாத அளவுக்கு, கடந்த 25 ஆண்டுகளில் செய்ய முடியாத அளவுக்கு சிறந்த திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கை மூலம் ஏற்படுத்த இருக்கிறோம்.

அடுத்தபடியாக, தொழிலாளர் பெருமக்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்வது, மூலதனத்தில் பங்கு கொள்வது போன்ற இப்படிப்பட்ட திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கையாக இது அமைந்திருக்கிறது. இதனை எல்லோரும் பாராட்டுவார்கள். மாற்றுக் கட்சிக்காரர்கள், எவ்வளவுதான் நன்மைகளைச் செய்தாலும் பாராட்ட மாட்டார்கள் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சொல்லி விட்டு முடித்துவிடுவார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். இந்த நிதிநிலை அறிக்கையில் இருக்கிற சிறந்த திட்டங்களை மக்கள் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறார்கள். இன்னொன்றையும் நான் கூறி விட்டு முடித்துக் கொள்ளலாம் என நினைக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையின் துவக்கத்தில், நியாயமானது வெற்றிபெறும், உண்மையானது நிலைத்து நிற்கும், உண்மையான குரலுக்கு தமிழகம் மட்டுமல்ல, உலகத்திலுள்ள அத்தனை நாடுகளும் ஆதரவு தரும், வெற்றி மாலை நியாயத்தின் கழுத்திலே விழுந்தே தீரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கேட்கக்கூடிய இடம் எந்த இடமாக இருந்தாலும், கேட்கக்கூடிய கோரிக்கை எதுவாக இருந்தாலும், நியாய உணர்வு இருந்தால் நியாயம் வெற்றி பெற்றுத்தான் தீரும். நியாயமானது வெற்றி பெறும், உண்மையானது நிலைத்து நிற்கும் என்று ஆரம்பத்திலே குறிப்பிட்டுவிட்டு கடைசியிலே தமிழகத்தின், ஏறத்தாழ நாலரைக் கோடித் தமிழ் மக்களின் உரிமைக் குரலை, சுயாட்சியை வலியுறுத்துகிறது இந்த அறிக்கை.

நம்முடைய நண்பர்கள் சிலர் கேட்கலாம், இது நிதிநிலை அறிக்கையாயிற்றே, இதிலே ஏன் மாநில சுயாட்சி இடம் பெற்றது என்று கேட்கலாம். நாங்கள் மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வோம். ஒரு காலத்திலே நாங்கள் திராவிட நாடு கேட்டோம், மறுக்கவில்லை. மிக வேகமாகக் கேட்டோம், உணர்வாகக் கேட்டோம். அடைந்தே தீருவோம் திராவிட நாடு, இல்லாவிட்டால் சுடுகாடு என்று வீரத்தோடும், தேவையென்ற உணர்வோடும்தான் கேட்டோம். ஆனால் பின்னால் பேரறிஞர் அண்ணா அவர்களின் கட்டளைக்கிணங்க அது தேவையில்லை, இந்த நாட்டுக்குச் சுயாட்சி பெறுவதன் மூலமும், அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலமாகவும் செய்வோம் என்று தெரிவித்ததற்கு இணங்க நாங்கள் சுயாட்சி கேட்கிறோம். நாங்கள் கேட்கிற சுயாட்சி பிரிவினையல்ல, தேவையற்ற போக்கு அல்ல, உரிமைக் குரல், நியாயத்தின் உணர்வு என்பதை எடுத்துச் சொல்லி, சுயாட்சி நாங்கள் கேட்பதில் எந்தவிதமான வேறுபாடும் இல்லை என்பதைச் சொல்லிக்கொண்டு முடிக்கிறேன், வணக்கம்.

* **திரு. ஜே. எஸ். இராசு :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் வைத்திருக்கிற நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கைமீது பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக சிண்டிகேட் பகுதியிலே இருக்கிறவர்கள் இதை





ஒரு காவியம் என்று ஒப்புக் கொண்டதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் அகப்பாட்டும் புறப்பாட்டும் பாடுவதில் திறமை வாய்ந்தவர். அத்தகைய திறமை வாய்ந்த அவர்கள் அகத்திற்கும் புறத்திற்கும் அடிப்படையாக இருக்கும் பொருள் பாட்டை நல்ல தமிழில் வடித்திருக்கிறார்கள். இதிலே இருக்கிற பிரச்சினை என்னவென்றால் கலைஞரின் இந்தக் காவியத்திற்குப் பொருள் கொள்வதில் மாறுபாடுகள் இருக்கலாம், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் கொள்கின்ற பொருளுக்கும் எதிர்த்தரப்பில் இருக்கின்றவர்கள் கொள்கின்ற பொருளுக்கும் வேறுபாடு நிச்சயமாக இருக்கலாம். எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமானால், 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்சவரம்பை 40 ஏக்கராகக் குறைத்திருக்கின்ற விஷயத்தை ஆளுங்கட்சித் தரப்பிலுள்ளவர்கள் கைதட்டி வரவேற்று மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எதிர்த்தரப்பில் உள்ளவர்களில் சிலர் அதை கையொலி எழுப்பி ஏற்காமல் இருந்தனர். எனவே காவியத்திலேயும் அதிலிருக்கிற பொருளிலேயும் அவர்கள் வேறுபாடு கண்டிருப்பதை அறியலாம்.

அரண்மனைப் பத்திரிகைகள் எனப்படும் மிகப்பெரிய ஆங்கில ஏடுகள், கதைகள், கட்டுரைகள். செய்திகள் இவற்றைத் தவிர தங்கநிகா, குவெய்த் போன்ற சிறு நாடுகளின் நிலைமைகளைக் கூறிக்கொண்டிருக்கின்ற பத்திரிகைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டாமல் இருக்கலாம். சில ஏடுகள் எதிர்த்தும் எழுதியிருக்கலாம். ஆனால் நாட்டு மக்களுடைய நல்ல இதயத்திலே இடம் பெற்றிருக்கும் பத்திரிகைகள் இதை முற்போக்கான அறிக்கை, தீவிரமான அறிக்கை. சோஷலிச சமுதாயத்தை உருவாக்குகின்ற அறிக்கை என்று பாராட்டியிருப்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

எதிர்த்தரப்பிலே உட்கார்ந்திருக்கிற முற்போக்கு எண்ணம் கொண்ட உறுப்பினர் பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் நேற்று நல்ல முறையிலே பாராட்டினார்கள். நல்ல கொள்கைகள், பண்பட்ட கொள்கைகள் திராவிட முன்னேற்றக் கழகத்திடம் இருக்கின்றன. அதை நடத்திச் செல்கிறது இந்த அரசு. கடன் நிவாரணச் சட்டம், டிரஸ்ட் நிலங்களை கையகப்படுத்தி நிலமற்ற

[திரு. ஜே. எஸ். இராசு] [1972 மார்ச் 4

ஏழைகளுக்குத் தருவது போன்ற கொள்கைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருப்பதால் அதற்கு வருங்காலத்தில் நல்ல வளர்ச்சி, நல்ல மலர்ச்சி இருக்கும் என்பதை அவர்கள் மனந்திறந்து பாராட்டினார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே உள்ள கருத்துக்கள் நிச்சயமாகத் தமிழ்நாட்டு மக்களின் ஆசைகளை நிறைவேற்றுவதாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அறிக்கையிலே இருக்கிற வாசகங்கள், மக்களின் முகத்திலே புன்னகையையும், இதயத்திலே மகிழ்ச்சியையும் ஏற்படுத்தத்தக்க நிலையிலே இருக்கின்றன.

ஒரு அரசாங்கத்தை அல்லது ஒரு ஆளுங்கட்சி தருகின்ற நிதிநிலை அறிக்கையை உலக நாடுகள் எப்படி விமர்சிக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். மக்கள் தேவைகளை, பொறுப்பேற்றிருக்கிற அரசு நிறைவேற்றித் தருகிறதா? என்ன என்ன திட்டங்கள் தீட்டியிருக்கிறது, என்ன திட்டங்களைத் தீட்டப் போகிறது என்பதையெல்லாம் பார்த்துத்தான் ஒரு அரசாங்கத்தை, ஒரு அறிக்கையை விமர்சனம் செய்வார்கள். அது மட்டுமல்ல, வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, குஜராத்தில் இப்படி வளர்ச்சி, மகாராஷ்டிரத்தில் இவ்வளவு நேர்த்தி, கேரளத்தில் இத்தகைய சாதனை, மைசூரில் இவ்வளவு மகத்துவம் என்று கம்பேர் அண்ட் காண்ட்ராஸ்ட் என்று சொல்வார்களே அந்த முறையிலே ஒரு அறிக்கையை அல்லது ஒரு அரசாங்கத்தை விமரிசிக்கலாம்.

அதை விட்டுவிட்டு சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளியிலே இருக்கிற பெருந்தலைவர் உட்பட 200 கோடி ரூபாய்க்கு இந்த அரசு அதிகமாக வரி போட்டிருக்கிறது, ஆனால் நான்காண்டுக் காலமாக எதுவுமே செய்யவில்லை என்று சுற்றுப்பயணம் செய்கிறவர்கள் பேசுகிறார்கள். ஒன்றுமே செய்யவில்லை என்றால் 200 கோடி எங்கே போயிற்று? சில பத்திரிகைகளிலே அமைச்சர்களின் பாக்கெட்டிலே சென்றதா என்று எழுதுகிறார்கள். இந்த அளவுக்கு காட்டிலே இப்பேச்சினை உற்சாகப்படுத்த பெருந்தலைவர்கள் இருப்பது வருந்தத்தக்கதாகும். 1967-ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்த கட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு எதுவுமே செய்யவில்லையென்றால் வரிகளை



1972 மார்ச் 4] [திரு. ஜே. எஸ். இராசு]

எங்கோ கொண்டு சென்று விட்டார்கள் என்பது உண்மையானால் எப்படி 138 உறுப்பினர்களாக இருந்தவர்கள் 183 உறுப்பினர்களாக தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்? பொது மக்கள் என்ன விவரம் தெரியாதவர்களா? அரசியல் சூழ்நிலையைக் கவனிக்காதவர்களா? பொதுமக்களின் தரம் அவ்வளவு குறைந்துவிட்டதா? ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லிவருகிற தலைவர்கள் சுற்றுப்பயணம் செய்கிறார்கள்.

பல்வேறு வேலைகள், நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன, பால வேலைகள் நடைபெற்றிருக்கின்றன, பாதைகள் போடப்பட்டிருக்கின்றன, ஏரி, குளங்கள் தூர் வாரப் பெற்றிருக்கின்றன. புதிய பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் செய்யப்பட்டு இருக்கின்றனவா இல்லையா? சான்றாக கூவத்தைப்பற்றிப் பேசுவதற்குக் கூட அஞ்சிய காலம் ஒன்று இருந்தது. அப்படிப்பட்ட கூவத்தைச் சீர்திருத்தும் பணியில் கடந்த இரண்டு வருட காலத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் அன்றாடம் தினப்படி வருவாயைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்களா இல்லையா? ஆகவே, திட்டங்கள் நிச்சயமாக நிறைவேற்றப்படுகின்றன பொதுமக்களுக்கு, தாழ்த்தப் பட்ட மக்களுக்கு, ஏழைகளுக்குத் திட்டங்கள் செல்கின்றனவா என்பதுதான் இங்கே கவனிக்கப்படவேண்டிய உண்மையாக இருக்கவேண்டும். அவ்வாறு கவனித்தால் நிச்சயம் நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை நாடு அறியும்.

மாநில சுயாட்சிபற்றி கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு இளைஞன் தனக்குத் திருமணம் ஆகவேண்டும் என்று சொன்னாலும், தான் குடும்பம் நடத்த வேண்டுமென்று சொன்னாலும் பொருள் ஒன்றுதான். மாநில சுயாட்சிக்கு எப்பெயர் வைத்து அழைத்தாலும் கோரிக்கையின் நியாயத்தைத்தான் ஆராய வேண்டும். நேற்றையதினம் தங்கமணி அவர்கள், புதிய தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டும். புதிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டுமென்று பேசும்பொழுது, முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி இல்லாமல் இவைகள் நடைபெறுமா என்று கேட்டார்கள். அதற்குத் தெளிவான பதில் தேவை என்று சொன்னார்கள். அதற்கு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள். கலைஞர் அவர்களின் கருத்தை

ஒப்புக்கொண்டார்களே தவிர, மத்திய அரசாங்கத்தின் அனுமதியின்றி எந்தக் காரியத்தையும் செய்ய முடியும் என்று சொல்லவில்லை. நான் விவரத்திற்காக ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். நம்முடைய விளைபொருள்கள், குறிப்பாக மிளகாய் போன்றவை ஏராளமாகத் தமிழ்நாட்டில் விளைகிறது. அதை வேண்டுமளவிற்கு, தேவைப்படும் நாடுகளுக்கு சப்ளை செய்வதற்கான அதிகாரம் நமக்கிருக்கிறதா? மத்திய அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் வேண்டுமென்ற அளவிற்கு அனுப்ப முடியுமா? அனுப்பலாம், மத்திய சர்க்காரின் அனுமதியோடு. ஆனால் இவ்வளவுதான் அனுப்ப வேண்டுமென்று மத்திய அரசு சொன்னால், அதைத்தான் நம்மால் அனுப்ப முடியுமே தவிர நம்முடைய விளைபொருள்களை வேண்டும் அளவிற்கு தேவைப்படும் நாடுகளுக்கு அனுப்ப முடியாது.

அதுமட்டுமல்ல. தீவுத்திடலில் மத்திய அரசு கட்டடம் கட்டுகின்ற பிரச்னை எழுந்து, அதைத் தமிழக அரசு கடுமையாக எதிர்த்தது. இன்றைக்கு விட்டு தந்திருப்பதாகத் தகவல் வருகிறது. நம்முடைய நாட்டில், நம்முடைய தலைநகரில் இருக்கின்ற இவ்வளவு பெரிய கிரவுண்டில், மத்திய சர்க்கார் தனக்கு நியாயம் என்று கருதி, மாநில அரசின் எதிர்ப்பை அசட்டை செய்தால் அது உசிதமாக இருக்குமா என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் கூட முன்பு இதை எதிர்த்தார்கள். தீவுத்திடல் நகரத்தின் சுவாசப்பை போன்றது. இன்றைக்கு சென்னை நகரத்தில் கிட்டத்தட்ட 25 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்குத் திடீரென்று ஒரு அபத்து, தீ விபத்து என்றாலோ அல்லது பெரிய விழா நடத்துவது என்றாலோ மக்கள் கூடுவதற்குக்கூட இடம் தேவைப்படும்.

ஆகவே, இதுபோன்ற பிரச்னைகளையெல்லாம் கவனிப்பதற்கு, மாநில உரிமைகளைக் காப்பதற்கு நமக்கு நல்ல அதிகாரம் வேண்டுமென்பதிலே எந்தவிதக் கவலும் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதைக் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமோ, மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மட்டுமோ, அல்லது டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மட்டுமோ கேட்கவில்லை. ஏற்கெனவே திருவாங்கூர்-கொச்சியில் முதலமைச்சராயிருந்த நேசவன் என்பவர் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்று 1954-55-லே சொல்லியிருக்கிறார்கள்.





அனுமந்தையாவைப்பற்றிப் பலர் சொன்னார்கள். அவர்கள் கூட மத்திய சர்க்கார் மாநிலங்களை பிச்சைக்காரர்கள்போல் நடத்துகிறது, இன்னும் சொல்லப்போனால் அமெரிக்க அரசாங்கம் இந்தியாவிற்கும், பிற நாடுகளுக்கும் கடன் தருகிறோம், மான்யம் தருகிறோம், இனாம் தருகிறோம் என்று சொல்லி தன்னுடைய செல்வாக்கை வேறு நாடுகளில் எப்படி வளர்த்துக்கொண்டதோ அதே எண்ணத்தில், தன்மையில், தரத்தில் மத்திய அரசு இங்கே மாநில அரசுகளுக்குப் பிச்சை தருவதைப்போல் தந்து தன் ஆதிக்கத்திற்கு, விருப்பத்திற்குக் கொண்டு வரப் பார்க்கிறது என்று அனுமந்தையா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, மூதறிஞர் ராஜாஜி அவர்களும் இந்தியாவிலிருக்கும் பிற மாநிலங்களிலுள்ள கட்சிக்காரர்களும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்பதை வலியுறுத்தி வருகிறார்கள். திரு. சஞ்சீவிரெட்டி கூட டெல்லி வெகுதூரம் என்று கூறினார்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க மாநில அரசாங்கம் எவ்வளவுதான் செய்தாலும், பெருகிவரும் அந்தப் பிரச்னையை ஒரு மாநில அரசாங்கம் மட்டுமே தீர்த்துவிட முடியாது என்பது தெள்ளத் தெளிவான உண்மை. பொதுமக்கள் விடிந்தெழுந்தால் மாநில அரசாங்கத்தை, மாநில அமைச்சரவையிடம்தான் பிரச்னைகளைக் கவனியுங்கள் என்று வேண்டுகோள் விடுக்கிறார்களே தவிர நிச்சயமாக மத்திய அரசிடம் அல்ல. இப்படி எந்தப் பிரச்னையானாலும் அவைகளைத் தீர்ப்பதற்கு அதிகமான அதிகாரம் இருந்தால்தான் நாம் நல்ல முறைகளில் காரியத்தைச் சாதிக்க முடியும். சிலர் புத்திசாலித்தனம் என்று கருதி, இருக்கின்ற அதிகாரம் போதாதா? மேற்கொண்டும் மாநிலத்திற்கு அதிக அதிகாரம் எதற்கு என்ற வாதத்தைக் கிளப்புகிறார்கள். நான் மனம் திறந்து கேட்கிறேன். இருக்கும் அதிகாரத்தை மாநில அரசாங்கம் எந்த நேரத்திலாவது பயன்படுத்தத் தவறியிருக்கிறதா? மக்கள் நல்வாழ்விற்காக 'வெல்பேர் ஸ்டேட்' அமைக்க, மக்களை சோஷலிசப் பாதையில் அழைத்துச் செல்ல மாநில அரசாங்கம் இருக்கின்ற எந்த அதிகாரத்தையாவது பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டிருக்கிறதா? எந்த அதிகாரத்தையாவது தன்னுடைய சக்தி வேண்டாமென்று ஒதுக்கியிருக்கிறதா?

[திரு. அ. ப. சண்முகசுந்தரம்] [1972 மார்ச்

தேவைக் குறைவோ அங்கே குறைவாக விதித்திருக்கிறார்கள். நேற்று நம்முடைய மன்றத்திலே வைக்கப்பட்டிருந்த Panchayat Education Finance Enquiry Committee அறிக்கையிலே நான் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தைப்பற்றியும் விவரமாகப் பார்த்துக் கொண்டு வந்தேன். அதிலே பெரும்பாலும், முக்கால் வாசி ஊராட்சி ஒன்றியங்களிலே ஒரு ரூபாய்க்கும் குறைவாக அந்த லோகல் செஸ் சர்சார்ஜ் போடப்பட்டிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் 1½ ரூபாய் போடப்பட்டிருக்கிறது. மற்றஇடங்களில் 1 ரூபாய், 8 அணா என்றுகூடப் போட்டிருக்கிறார்கள். விவசாய மக்களுக்கு ஆங்காங்கு இணைப்புகள் தருவதற்கு, குடிநீர் வசதியைப் பெருக்குவதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகப்படியான நிதி வசதி தேவை என்பதால் 1½ ரூபாயை 2½ ரூபாயாக ஆக்கினோம். அதிலே சில ஊராட்சி ஒன்றியங்களில் பண வசதி அதிகமாக இருக்கிறது. சிலவற்றில் குறைவாக இருக்கிறது. எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 2½ ரூபாய் அவசியமில்லை. எங்கெங்கு வசதி குறைவாக இருக்கிறதோ அங்கே அதிகமாகவும், எங்கே வசதிகள் அதிகமாக இருக்கிறதோ அவர்கள் தேவைக்குப் போதுமான அளவிற்கும் போட்டுவிடலாம்.

அந்த அளவுக்கு ஊராட்சி ஒன்றியங்களின் நிதிவசதியை அதிகப்படுத்தித் தரவேண்டும். கிராமத்திலுள்ள விவசாயிகள் வரவேற்கத் தகுந்த திட்டமாக அமைந்திருக்கிறது. நான் மட்டும் இதைச் சொல்லவில்லை. விவசாயிகளைப் பொறுத்தவரை, கிராம வளர்ச்சியைப் பொறுத்தவரை இந்த வரவு-செலவுத் திட்டம் வரவேற்கத்தக்கது என்று எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் கல்யாணசுந்தரம் அவர்கள் வரவேற்றிருக்கிறார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த வரவு-செலவுத் திட்டம் விவசாயிகளுக்கு மிகுந்த நன்மையைத் தரக்கூடிய திட்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள்.

கிராமங்களுக்கு அடிப்படைத் தேவை குடிதண்ணீர் வசதி, மின் விளக்கு, இணைப்புச் சாலைகள். நம்முடைய அரசு மின் விளக்கை அமைத்துத் தருவதில் மிக வேகமாகச் செயல்பட்டு வருகிறது. அதைப் பொறுத்தவரை பெரும்பகுதி முடித்துவிட்டோம். குடிதண்ணீர் வசதியும், இணைப்புச் சாலைகளும் செய்ய வேண்டியதிருக்கிறது. இதற்கு நம்முடைய அரசு பல காரியங்



1972 மார்ச் 4] [திரு. அ. ப. சண்முகசுந்தரம்]

களைச்செய்து வருகிறது. இணைப்புச் சாலைகளைப் பொறுத்தவரை அரசு ஒருதடவை போட்டுக் கொடுத்துவிட்டால்கூட பின்னர் ஊராட்சி மன்றங்களால் அவற்றைப் பராமரிக்கக்கூடிய அளவுக்கு நிதிவசதி இல்லை. ஆகவே, கிராம இணைப்புச் சாலைகளின் பராமரிப்பை ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்குச் செய்யவேண்டிய பணிகள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. தற்போது கரும்பு சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ஆலைக்காரர்கள் 80 ரூபாய் கொடுக்கிறார்கள். அதை 90 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். கரும்பு சாகுபடி செய்ய நிறையச் செலவாகிறது. தனிப்பட்ட முதலாளிகளிடம் இருக்கும் சர்க்கரை ஆலைகளை வற்புறுத்த நம்முடைய சர்க்காருக்கு அதிகாரம் இல்லை. கூட்டுறவு ஆலைகளைப் பொறுத்து பிரச்சினை இல்லை. அந்தத் தனிப்பட்டவர்களுடைய ஆலைகளை அரசுடைமையாக்க வேண்டும்.

இன்னொரு நல்ல திட்டத்தையும் செய்தாக வேண்டும். மார்க்கெட்டிங் கமிட்டி எல்லா இடங்களிலும் ஏற்படுத்தியிருக்கிறோம். அங்கே கொண்டு போய் விவசாயிகள் விளைவிக்கக்கூடிய பருத்தி, நிலக்கடலை போன்றவற்றை வைக்கிறார்கள். அந்தப் பொருள்களை விற்ற பிறகுதான் பணம் கொடுக்கப்படுகிறது. தற்போது கோவையிலுள்ள நூல் ஆலைகளில் வேலை இல்லாமல் இருப்பதால் பருத்தி விலை குறைந்துவிட்டது. பருத்தியை மார்க்கெட்டிங் கமிட்டியில் குறைந்த விலைக்கு விற்க முடியாது. விவசாயிகளுக்கோ பணம் உடனடியாகத் தேவைப்படுகிறது. ஆகவே, மார்க்கெட்டிங் கமிட்டியில் விவசாயிகள் வைத்திருக்கும் பொருள்களுக்கு ஈடாக அதன்பேரில் கடன் கொடுக்க தற்போது அனுமதி இல்லை. நம்முடைய அரசு விவசாயிகளுக்கு அந்த விளைபொருள்களின் பேரில் கடன் கொடுக்க ஆணை பிறப்பிக்க வேண்டும். அப்படிக் கடன் கொடுத்தால் விவசாயிகள் லேவாதேவிக்காரர்களிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படாது. நூற்றுக்கு ஒம்பது ரூபாய் என்ற விகிதத்தில் கடன் கொடுக்க வழிவகை செய்து கொடுக்கவேண்டுமென்று நம்முடைய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியில் உள்ள பயிர்க் கட்டுப்பாடு பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு தண்ணீர் விடப்பட்டது. அங்கு அதிகமான மழை பெய்ததன் காரணமாகப் புஞ்சைப் பயிர்கள் அழிந்து போய்விட்டன. மிளகாய்ச் செடி போன்றவைகள் காய்ந்து, அழிந்து போய்விட்டன. பருத்திச் செடி, நிலக்கடலை வெள்ளாமை எல்லாம் அழிந்து போய்விட்டன. அங்கிருக்கும் விவசாயிகள் நஞ்சை வெள்ளாமை தவிர வேறு செய்யமுடியவில்லை. நஞ்சை வெள்ளாமை செய்தவர்களுக்குத் தண்டத்தீர்வை விதிக்கப்படுகிறது. நம்முடைய தமிழ்நாட்டில் வேறு எங்குமே இப்படி தண்டத் தீர்வை விதிக்கப்படுவதில்லை. பரம்பிக்குளம்—ஆளியாறு பகுதியில் மட்டும் இது விதிக்கப்பட்டு அந்த விவசாயிகள் பெரும் கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். நம்முடைய அமைச்சரிடம் ஒவ்வொரு வருஷமும் சென்று தண்டத் தீர்வையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வருகிறோம். ஒத்தி வைத்திருக்கிறார்கள், ஆனால் இன்னும் ரத்து செய்யப்படவில்லை. 60, 70 லட்சம் ரூபாய் அளவுக்கு இருக்கிறது. அதை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று நம்முடைய அரசைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பயிர்க் கட்டுப்பாடு இருக்கும் காரணத்தால் விவசாயிகள் மிகுந்த தொல்லைக்கு ஆளாகிறார்கள். இந்தப் பயிர்க் கட்டுப்பாட்டை முழுக்க முழுக்க எடுத்துவிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பொள்ளாச்சி அரசினர் மருத்துவமனை பழைய கட்டடத்தில் இருக்கிறது. அது இந்த வருடம் பெய்த பலத்த மழையின் காரணமாக விழுந்துவிட்டது. ஓலைக் கூரைகள் போட்டு நோயாளிகளைப் படுக்கையில் போட்டிருக்கிறார்கள். அதிலே நோயாளிகளுக்கு எந்தவிதமான வசதியும் இல்லை. உடனடியாக புதிதாக அந்த மருத்துவமனைக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக 14 லட்சம் ரூபாயில் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அங்கிருக்கும் பொதுமக்களிடமிருந்தும், பஞ்சாயத்துக்களிடமிருந்தும் 2½ லட்ச ரூபாய் அளவுக்கு நன்கொடையாக வசூல் செய்து வைத்திருக்கிறோம். ஆகவே, உடனடியாக அங்கு மருத்துவமனைக் கட்டடம் கட்ட வழிவகை செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



பொள்ளாச்சிப் பகுதியில் நல்லாறு அணைக்கட்டுத் திட்டம் இருக்கிறது. அது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கிறது. ஸ்மால் மைனர் இரிகேஷன் கீழ் அது வருகிறது. அதை முடித்துக் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்ற நல்ல திட்டங்களை நம்முடைய விவசாயிகளுக்காக நிறைவேற்றித் தர திட்டமிட்டிருப்பதற்காக என்னுடைய நன்றியை முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 6—3—1972 திங்கட்கிழமை அன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

**பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.**

## 4. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

41. Notification issued with G.O. Ms. No. 2247, Agriculture, dated the 10th August 1971, in regard to regulation of trade in respect of paddy in Kanyakumari district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

42. Notification issued with G.O. P. No. 873, Revenue, dated the 25th March 1971 in regard to an amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

43. Notification issued with Roc. No. 135750/71-E5, dated the 5th October 1971, in regard to extension of certain provisions relating to Building Regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920, in the entire area of Kurumbalur Town Panchayat of Tiruchirappalli district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

### B. *Reports, notifications and other papers.*

' Nil '.

தமிழ்நாடு சட்டப் பேரவை

**திங்கட்கிழமை, 1972 மார்ச் 6.**

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### குடிநீர் வழங்கு திட்டங்கள்

*211 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானியிலிருந்து, சித்தோடு, பெருந்துறை, சென்னிமலை ஆகிய ஊர்களுக்குக் குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(இ) இதுகுறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:**

(அ) & (இ): காவிரி ஆற்று நீரைக் கொண்டு பெருந்துறை, சித்தோடு, சென்னிமலை மற்றும் ஏனைய பத்து ஊராட்சிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பாதி முடிவடைந்துவிட்டது. எல்லா வகையிலும் இத்திட்டம் முடிவடையும் வரை இதுவரை முடிந்துள்ள பணிகளைக் கொண்டு, சித்தோடு, கருமாண்டி, செல்லிப்பாளையம், பெருந்துறை, சென்னிமலை ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு அரசாங்கம் மொத்தம் எவ்வளவு தொகை ஒதுக்கி யிருக்கிறது என்பதை அறியலாமா?

[1972 மார்ச் 6

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ரூ. 42.45 லட்சம் செலவில் நிறைவேற்றவேண்டுமென்று இருந்த அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதாக முதலமைச்சரவர்கள் கூறினார்கள். காவிரியாற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதன்மூலமாக அதன் பாசனப் பகுதிகள் பாதிக்கப்படாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவைகள் பாதிக்கப்படாத அளவுக்குத்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

* 212 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி குடிநீர்த் திட்டம் பூர்த்தியடைந்து விட்டதா?

(இ) ஆம் எனில், அதற்கான மொத்தச் செலவு என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:**

(அ) ஆம். பூர்த்தியடைந்துவிட்டது.

(இ) இத்திட்டத்திற்காக 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 18,22,661.

**திரு. தொ. ப. சீனிவாசன்:** தலைவர் அவர்களே, களம்பூர் பகுதியில் குடி தண்ணீர் வசதி இல்லாமல், ரெயின் கார்டு அளித்து குடி தண்ணீர் அளிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதுகுறித்து குடிநீர் வாரியத்திலிருந்து மனுச்செய்து, குடிநீர்த் திட்டத்திற்காக 12 கோடி ரூபாய் கட்டியும் இதுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, அரசு இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மூலக் கேள்வி, 'வந்தவாசி குடிநீர்த் திட்டம்' பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைத் தனிக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு வசதியாக இருக்கும்.



1972 மார்ச் 6]

## புதை வடிகால் திட்டங்கள்

* 213 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970-71-ம் ஆண்டிற்குப் பிறகு தமிழகத்தில் புதிதாக நிறைவேற்றப்படவிருக்கும் பாதாள சாக்கடைத் திட்டங்கள் எவையெவை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கீழ்க்கண்ட மூன்று பாதாள சாக்கடைத் திட்டங்கள் 1971-72-ம் ஆண்டில் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கடன் உதவியைக் கொண்டு நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

1. திருவொற்றியூர்;
2. திருநெல்வேலி;
3. தூத்துக்குடி.

கீழ்க்கண்ட சாக்கடைத் திட்டங்கள் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

1. காஞ்சீபுரம்;
2. மதுரை;
3. திருச்சி;
4. கோயம்புத்தூர்.

**திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, சேலம் நகரத்திற்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நீண்ட காலமாகக் கேட்கப்பட்டு வருகிறது. நம்முடைய தமிழக அரசு சேலம் நகரத்திற்குப் பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சி எடுத்திருக்கிறதா? அந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்பொழுது எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளையும் நிறைவேற்றப்பட்டு வருகின்ற திட்டங்களையும் பற்றித்தான் நான் இங்கே எடுத்துச் சொன்னேன். சேலத்தைப்பற்றித் தனியாக அவர்கள் முயற்சிகள் எடுத்துக் கொள்வார்களானால் அதை அரசு பரிசீலித்துக் கவனிக்கும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சென்ற ஆண்டில் இணைக்கப்பட்டுள்ள மதுரைத் திட்டத்திற்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் எவ்வளவு?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: மதுரை கழிவு நீர் அகற்றுத் திட்டத்திற்கு மொத்தச் செலவாக ரூ. 109 லட்சம் இதிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1969-70, 1970-71 ஆகிய இரண்டு ஆண்டுகளில் எல்.ஐ.சி. கடன் மூலமாக பத்து லட்சம் ரூபாய் அதற்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு கேட்டுள்ள எல்.ஐ.சி. கடன் 25 லட்ச ரூபாய் ஆகும். இவையெல்லாம் வந்த பிறகு அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி**: கோவைக்கு எத்தனை லட்ச ரூபாய் பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக வழங்கப்பட்டிருக்கிறது? அதுவும் சிங்காநல்லூர் நகராட்சிப் பகுதி அதிக ஜன நெருக்கடியுள்ள பகுதியாக இருப்பதால் இந்தத் திட்டத்தை அங்கு விஸ்தரிக்க அரசுக்கு ஆலோசனை உண்டா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: சிங்காநல்லூர் தனி நகராட்சியாக இருக்கிறது. இந்தத் திட்டம் கோவையைப் பற்றியது. ஐந்து ஆண்டுகளில் முடிவுற வேண்டுமென்று 80 லட்ச ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

THIRU K. M. SUBRAMANIAM: In view of the fact that the original plan for the City of Madras thought about a provision of drainage for about six lakhs of population only and as there is a substantial increase of population and since everywhere there is overflow of dranage water, is there any suggestion for substantial improvement of the drainage system in the City of Madras, and if so, at what cost ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: இந்த மூலக் கேள்வியின் தொடர்பில் அதற்குப் பதில் அளிப்பதற்கு வசதி இல்லை.

**திரு. எஸ். ஆறுமுகம்**: சேலம் நகராட்சி மன்றமும், சேலம் பொது மக்களும் நீண்டகாலமாகக் கோரிவந்த சேலம் பாதாள சாக்கடைத் திட்டம் மூன்று ரூபாய் அளவில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டம் முன்பிருந்த அரசால் கைவிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது நம்முடைய அரசு கைவிடப்பட்ட அந்தத் திட்டத்தை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவதற்கு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: இப்படிப்பட்ட ஒரு திட்டம் ஏற்கெனவே வகுக்கப்பட்டு, கைவிடப்பட்டிருப்பதைப் பற்றி சேலத்திலிருந்து எனக்கு விவரங்கள் இல்லை. ஆனால்,



இப்பொழுது சேலம் நகராட்சி மன்றம் அதுபோன்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புமானால், அதுபற்றி அரசு யோசிக்க முடியும்.

**திரு. இரா. இராமலிங்கம்**: தலைவர் அவர்களே, தூத்துக்குடி பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தூத்துக்குடி நகர மன்றத்திற்கு அரசு ஏதேனும் மானியம் வழங்கியிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: நகராட்சி மன்றத்தினுடைய தீர்மானத்தையும் அதனுடைய நிதி நிலை அறிக்கையினையும் குடிநீர்—கழிவு நீர் வாரியம் கேட்டுள்ளது; வந்தபிறகு யோசிக்கப்பட வேண்டிய விஷயம்.

**திரு. கே. எ. வகாப்**: இப்பொழுது குடிநீர்த் திட்டம் வழங்கப்பட்டிருக்கிற ஊர்களுக்கெல்லாம் வடிகால் திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா? அப்படி அளிப்பதுதான் அந்த ஊர்களுக்கு வசதியாக இருக்கும். ஆகவே, அத்தகைய முன்னுரிமை அளிக்க அரசு ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: இதை இருகூறாகக் கவனிக்க வேண்டும். குடிநீர் வழங்கப்பட்ட இடங்களுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது, ஏற்கெனவே இருக்கின்ற வசதிகளை அதிகரித்துக் கொடுப்பதாகும். குடிநீர்த் திட்டமே இல்லாத இடங்களில் அதையாவது நிறைவேற்றுங்கள் என்று கோரிக்கை இருக்கிறது. இரண்டையும் தனித்தனியாகத்தான் கவனிக்க வேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்**: முதல்தர முனிசிபாலிடிகளுக்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை துரிதமாக அரசு மேற்கொள்ளுமா? அப்படியானால் நாகர்கோவில் போன்ற முதல்தர முனிசிபல் நகரங்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: இந்தக் குடிநீர் வழங்கு திட்டங்கள் விரைவாகவும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றப்படுவதற்காகத்தான் குடிநீர் வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலைகளின் தொடர்பாக நாகர்கோயிலும் இடம்பெறக் கூடும்.

## Workers of Water Supply and Drainage Board

*214 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a large number of workers in the Tamil Nadu Water-Supply and Drainage Board are still under the category of work charged establishment ; and

(b) the steps that are being taken to bring them under regular 'Service'?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம். 1971-ஆம் ஆண்டு ஜூலையில் உள்ள நிலவரப்படி, சுமார் 1,160 பணியாளர்கள் பொதுப் [illegible] பணிகள் துறை [illegible] பணியாளர் அமைப்பில் இன்னும் இருந்து வருகின்றார்கள்.

(இ) தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியத்தின் விதிமுறைகள் வகுக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட்ட பிறகுதான், அவர்களுடைய பணிகளை முறைப்படுத்துவது குறித்த கேள்வி ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஏற்கனவே பொதுப்பணித் துறையில் [illegible] தொழிலாளர்கள் இப்போது இந்த [illegible] அமைக்கப்பட்ட காரணத்தினால் [illegible] பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் அமைச்சர் அவர்கள் சொன்னபடி 1,160 பேர்கள் [illegible] இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். [illegible] நிரந்தரமாக்கப் படுவார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஏற்கனவே பொதுப்பணித் துறையில் இருந்தவர்கள் 1,160 பேர்கள் இதில் இணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். அதில் 400 பேர்கள்தான் முன்பு எடுத்த முடிவின்படி ஐந்து ஆண்டுகளுக்கு மேல் சர்வீஸ் உள்ளவர்களுக்கு நாம் நிரந்தரமான வேலைவாய்ப்பைத் தர வேண்டுமென்ற அளவில் 400 பேர்கள்தான் அதில் இடம் பெறுகிறார்கள். இருப்பினும் இவர்கள் அனைத்தையும்





ஆலோசித்து, விரைவில் முடிவு எடுக்கத்தக்க வகையில் இந்த ரூல்ஸ் அன்ட் ரெகுலேஷன்ஸ் விரைவில் முடிவுறும் என்று நம்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த போர்ட் துரிதமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலையாட்கள் சம்பந்தமாக ஏன் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது? அதற்கு ஒரு காலவரையறை நிர்ணயிக்க அரசாங்கம் வேண்டிய ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர்கள் நிரந்தரமாக்கப்படவேண்டும் என்பது ஒரு முக்கியமான விஷயம். அதில் ஐந்து ஆண்டு கால சர்வீஸ் இருந்தவர்களைத்தான் நிரந்தரமாக்க வேண்டும் என்று ஏற்கனவே பொதுப்பணித் துறையில் அரசாங்கம் ஒரு முடிவு எடுத்திருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய வேண்டும். இதிலும் அதே முடிவின் தொடர்பைச் செயல்படுத்துவதற்காக அதன் ரூல்ஸ் அன்ட் ரெகுலேஷன்ஸ் முடிவுறவேண்டும். அதை விரைவில் முடித்துத் தரவேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது.

## காவல் துறையில் மாவட்ட அளவில் குழுக்கள்

*215 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொதுமக்களின் புகார்களைக் கவனிக்க போலீஸ் துறையில் மாவட்டந்தோறும் ஒரு குழு அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாவட்டந்தோறும் பொது மக்கள் தருகிற புகார்களைக் கவனிப்பதற்கும் போலீஸ் துறையில் அவர்கள் செய்கிற சில தவறுகளைக் களைவதற்கும் மாவட்டந் தோறும் குழு அமைத்தால் சிறப்பாகயிருக்குமே. எனவே, இதை அரசு மறுபரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போதுள்ள நிலைமைகளே ஒழுங்காகச் செயல்பட்டுவருகிறது. ஆகவே மறுபரிசீலனை செய்வதற்கு அவசியமில்லை.

திரு. சொ. காவேரிமணியம்: டி.டி.ஸி. மீட்டிங் நடக்கும் போது உயர்தர அதிகாரிகள் மாவட்டரீதியாகக் கலந்துகொள்கிறார்கள். அதில் போலீஸ் துறை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் கலந்துகொண்டால் இம்மாதிரியான குறைகளைச் சொல்ல வாய்ப்பாகயிருக்கும். இதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாவட்ட வளர்ச்சிக் குழுவில் மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகள் கலந்து கொள்வது தான் பொருத்தம் என்று கருதுகிறேன்.

**திரு. எம். தேவராசன்.** பொது மக்களிடமிருந்து வருகிற புகார்களை கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகள் சிலசமயங்களில் கவனிப்பதில்லை. எனவே மாவட்ட கண்காணிப்பாளர்கள் தலைமையில் மாதமொருமுறை பொதுமக்களின் குறைகளை ஆராயும் நாள் என்று வைத்து பொதுமக்களின் குறைகளைப் போக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்போதே போலீஸ் ஜில்லா சூப்பரின்டென்டென்ட் அவர்கள் தலைமையிடத்தில் இருக்கும்போது அவர்களே குறைகளைக் கேட்டுவருகிறார்கள். அதுதான் இப்போது வழக்கமாக இருந்து வருகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இப்போது மாவட்ட அபிவிருத்தி கவுன்ஸில் கூட்டங்களில் மாவட்ட போலீஸ் அதிகாரிகள், மதுரையைப் பொறுத்தவரையில் பங்கெடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லை. ஆகவே எல்லாயிடங்களிலும் அவர்கள் பங்கு எடுத்துக்கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதிகாரிகள் பங்கெடுத்துக் கொள்வதில்லை என்று சொன்னார்கள். அதைக் கவனிக்கவேண்டும். சில வளர்ச்சிமன்றக் குழுக்களில் உறுப்பினர்களே பங்கெடுத்துக் கொள்வதில்லை என்று நான் கேள்விப்பட்டேன். நான் தங்களைச் சொல்லவில்லை பொதுவாகச் சொல்கிறேன். ஆகவே, அதையும் உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். சட்டசபையைப் பார்க்கும்போது உறுப்பினர்கள் எவ்வளவு அக்கறையோடு மக்கள் பிரதிநிதிகளுடைய வேலையைச் செய்கிறார்கள் என்பது விளங்கும்.



## அரசு அச்சகத்தில் மிகுநேர வேலை

* 316 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அரசினர் அச்சகத்தில் தொழிலாளர்கள் Over Time " வேலை செய்வது தற்போது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** இல்லை. சென்னை அரசினர் அச்சகத்தில் தொழிலாளர்கள் மிகு நேர வேலை செய்வது தற்போது நிறுத்தி வைக்கப்படவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சென்னையில் இருக்கக்கூடிய இந்த அரசினர் அச்சகத்தை விரிவுபடுத்தவேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கைகள் வந்துகொண்டே இருக்கின்றன. அந்நிலையில் இன்று பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு ஓவர் டைம் கொடுப்பதற்குப் பதிலாக புதிதாக ஊழியர்களை இணைத்து வேலை செய்வது உதவியாக இருக்குமல்லவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை இப்போது பரிசிலனையில் இருந்துவருகிறது. அதற்கான முயற்சியும் எடுக்கப்பட்டு வருகிறது.

## *Huts damaged in Udumalpet*

* 317 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that 400 huts in Udumalpet were washed away due to heavy floods on 27—10—1971; and

(b) if so, the relief measures taken by the Government?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:**

(அ) பெருத்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் 26-10-1971 அன்று இரவு உடுமலைப்பேட்டை தாலுகாவிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் 161 குடிசைகள் சேதமடைந்தன.

(இ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகையாக மொத்தம் ரூ. 4,850 வழங்கப்பட்டது.

[1979 மார்ச் 6

## கோவை மத்திய சிறையில் தண்ணீர் தட்டுப்பாடு

* 318 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மத்திய சிறைச்சாலையில் தண்ணீர் தட்டுப்பாட்டினை போக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கோவை மத்திய சிறைக்குத் தேவைப்படும் குடிதண்ணீரை நகராட்சியிடமிருந்து லாரிகள் மூலமாகப் பெறப்படுகிறது. குளிப்பதற்கும் சுத்தம் செய்வதற்கும் சிறைச்சாலையின் தோட்டத்தில் இருக்கும் கிணற்றிலிருந்து தண்ணீர் சிறைச்சாலைக்கு குழாய்மூலம் செலுத்தப்படுகிறது. அங்கு ஒரு குழாய்க் கிணறு தோண்டுவதற்கும் அரசாங்கம் சமீபத்தில் உத்தரவிட்டுள்ளது. மற்றுமொரு குழாய்க் கிணறு தோண்டுவது பற்றியும் அரசாங்கம் பரிசிலித்து வருகிறது.

## வண்ணம் மாறும் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி

* 319 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வண்ணம் மாறும் சென்னை கைத்தறித் துணிகளை (Bleading Madras) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது நிறுத்தப்பட்டு விட்டதா?

(இ) ஆமெனில், அதற்குரிய காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:**

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

## கைத்தறித் துணிகளுக்கு சாயமிடுதல்

* 320 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடத்தில் கைத்தறித் துணிகளுக்கு சாயம் ஏற்றும் அச்சுத் தொழில்களின் திறமையை அதிகரிக்க பயிற்சிக்கூடம் ஒன்று ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இல்லை.



1979 மார்ச் 6]

**திரு. கே. என். குமாரசாமி:** திருப்பூரானது கைத்தறி துணிகளிலும், கதர் துணிகளிலும் சாயம் ஏற்றுவதில் மிகவு பிரசித்திபெற்ற இடமாகும். ஆகவே அங்கு திறமையான ஊழியர்களை உண்டாக்குவதற்கு ஒரு பயிற்சிக்கூடம் ஏற்படுத்து வதின்மூலம் கைத்தறித் துறையில் இப்படிப்பட்டதொரு சூழ்நிலை அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுமே, அதைச் செய்ய அரசாங்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போது காஞ்சீபுரம் மதுரை, கும்பகோணம் ஆகிய மூன்று இடங்களில் இதுபோன் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இப்போதைக்கு அங்கு திறப்பதா யில்லை.

## பிசாட்டூர் கால்வாயின் குறுக்கே சிறுபாலம்

* 321 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பொது பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக் விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், தாராட்சி கிராமத்திற்கு வடக்கே செல்லும் பிசாட்டூர் பொதுப்பணித் துறைக் கால்வாயின் மீது சிறு பாலம் கட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனை யிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இதன் செய குறிப்பு தலைமைப் அதிகாரிகளின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன்:** இது பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முன்னால் ஆண்ட வர்கள் காலத்தில் அந்தப் பொதுப்பணித்துறை கால்வாயின் மேல் பாலம் கட்டாமல் கிராமம் வேறாகவும் அவர்களுக்குரிய நிலங்கள் வேறாகவும் இப்படி இரண்டாக அந்தக் கால்வாயினா பிரிக்கப்பட்டு அங்குள்ள மக்கள் ஏரு வண்டிகளைக் கொண் போக முடியாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். அமைச்ச அவர்கள் அந்த அதை நேராகப் பார்த்திருப்பதால் தயவுசெய்து நடவடிக்கைகள் எடுத்து இந்த ஆண்டே அதை அமல்படுத் அதை நிறைவேற்றிக் கொடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஆரணியாற்றின் குறுக்கே தாராட்சிக் கிராமத்திற்கு அருகே ஒரு மரப்பாலம் கட்ட ப்ரப்போஸல் இருக்கிறது. இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

[1972 மார்ச் 6

## திருக்கனங்கூரில் கால்வாய் மீது சிறு அணை

* 322 வினா—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள திருக்கனங்கூர் கிராமத்திலுள்ள ஏரியின் வாய்க்காலுக்கு சிறிய அணை கட்ட வேண்டும் என்று அந்த கிராம மக்கள் அரசாங்கத்தை கோரியுள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## மேம்பாலங்கள்.

* 323 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் புதியதாகக் கட்டப்பட்டு வரும் மேம்பாலத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) இதற்கு நகரசபை ஏதேனும் பங்குத் தொகை கொடுத்துள்ளதா?

(உ) ஆம் எனில், எவ்வளவு?

(எ) இந்த வேலை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) 1971-72-ல் ரூ. 5.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) & (உ) செலவில் 25 சதவிகிதம் நகராட்சி ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் நிதி பற்றாக்குறையினால், அதை ஏற்க இயலாது என்று அது தெரிவித்திருக்கிறது. அரசினிடம் கடனைக் கோருமாறு தலைமைப் பொறியாளர் நகராட்சியினைக் கேட்டிருக்கிறார்.

(எ) இந்த வேலை 1972-ம் வருட இறுதிக்குள் முடிவடையும்



1972 மார்ச் 6]

**திரு. கே. டி. கே. தங்கமணி:** திருநெல்வேலியில் அந்த லெவல் கிராஸிங்கில் இருக்கக்கூடிய அந்தப் பாலம் பற்றி இது என்று நான் கருதுகிறேன். நீண்ட காலமாக அந்தப் பாலம் கட்டி முடிக்கப்படாமல் இருப்பதால் போக்குவரத்திற்கு மிக இடைஞ்சலாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் அந்த மேம்பாலத்தை கட்டி முடிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** 1972 இறுதிக்குள் முடிந்துவிடும். அதைத் துவக்கிய நேரத்தில் சிலர் ஹைகோர்ட்டில் ரிட் பெட்டிஷன் தாக்கல் செய்தார்கள். பிறகு சிவில் ஸூட் ஒன்று தாக்கல் செய்தார்கள். இதனால் காலதாமதம் ஏற்பட்டது. இப்போது அதைத் துரிதமாக முடிக்க அரசாங்கம் எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக இது முடிந்துவிடும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த மேம்பாலம் கட்டுவதில் அதிகக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது பஸ் போக்குவரத்திற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆதலால் இப்போது போட்டிருக்கிற பைபாஸ்-யைத் தவிர்த்து வேறொரு பைபாஸை அமைக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க முன் வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நகராட்சிமன்றத் தலைவரையும், உயர் அதிகாரிகளையும் கலந்தாலோசித்து இப்போது போடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் போக்குவரத்தைச் சமாளிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தையும் நம் அதிகாரிகள் கவனிப்பார்கள்.

* 324 வினா—திரு. கே. எ. வஹாப்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் அருகே ரயில்வே பாதையின் குறுக்கே போடப்பட்டுள்ள சாலை மேம்பால வேலைக்கான எஸ்டிமேட் தொகை எவ்வளவு?

(இ) இதற்கான மொத்தச் செலவு என்ன?

[1972 மார்ச் 6

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) மதிப்பீட்டுத் தொகை ரூ. 26,20,920.

(இ) அக்டோபர் 1971 முடிய செலவான தொகை ரூ. 27,91,319.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, இவ்வளவு செலவிடப்பட்டு கட்டப்பட்ட அந்தப் பாலத்தில் கார்கள், பஸ்கள் செல்கிற போது ஓரங்கள் சரியாக அமைக்கப்படாததால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் இருக்கிறது. ஆகவே, அதன் ஓரங்களில் தடுப்புச் சுவர்களோ, தடுப்புக் கற்களோ ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்த மதிப்பீட்டில் அப்படிச் செய்யவேண்டுமென்று போடவில்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல் பல கருத்துக்கள் வந்திருப்பதால். அதைப் பரிசீலிக்க அதிகாரிகள் கோரப்பட்டிருக்கிறார்கள். இப்போதே மதிப்பீட்டுத் தொகையை விட அதிகமாகச் செலவாகியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்து கவனத்தில் கொள்ளப்படும்.

ஜவ்வாது மலையிலுள்ள சந்தன மரங்கள்.

* 325 வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜவ்வாது மலையில் சந்தன மரங்களைப் பாதுகாக்க வேண்டி, வன குத்தகைகளை சில ஆண்டுகளுக்குத் தள்ளி வைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இல்லை.

**திரு. தொ. ப. சீனிவாசன்:** தலைவரவர்களே, ஜவ்வாது மலையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ள அந்தப் பகுதியில் 2 மாதங்களுக்கு முன்பு புதிய அம்பாசிடர் கார்களில் சந்தனக் கட்டைகளை ஓரளவு பதுக்கி கடத்திச் சென்றபோது, வனத் துறையைச் சார்ந்தவர்கள் 2-3 கார்களை துரத்திப் பிடித்திருக்கிறார்கள், தப்பித்துச் சென்ற கார்களும் பிடிபட்டன. மேலும் அத்தகைய விலையுயர்ந்த மரங்கள் திருட்டுப் போகாமல் இருப்பதற்காக வனத்துறை எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமா?



1972 மார்ச் 6]

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, குறிப்பிட்ட புகார் பற்றிச் சொல்கிறார்கள். அதுபற்றிய புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லை. அந்தப் பகுதியில் விறகு, மூங்கில் போன்றவற்றை வெட்டுவதற்குத்தான் ஏலம் விடப்படுகிறது. அதனால் அரசாங்கத்திற்கு 3-4 லட்சம் ரூபாய் லாபம் வருகிறது. சந்தன மரங்கள் மட்டும் தனியாகப் போடப்படுகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Because of such pilferage of sandalwood trees, would the Government stop giving the lease of cutting sandalwood trees to private contractors and will the Government do it by themselves?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, அப்படி உத்தேசம் ஒன்றுமில்லை.

* 326 வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சந்தன மரங்கள் அதிகமாக உள்ள ஜவ்வாது மலை அடிவாரத்திலுள்ள ஆலங்காயம் அல்லது ஆண்டியப்பனூரில் சந்தனத் தைலம், சந்தனத் தூள் இவைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், சந்தன மரங்கள் பாதுகாக்கப்படவேண்டும். தமிழ்நாட்டில் முதுமலைக்காடுகள் போன்ற இடத்தில் சந்தன மரங்கள் உற்பத்தியாகின்றன. இன்றைக்கு மைசூரில் சந்தனப் பௌடர், சந்தன எண்ணை ஆகியவற்றை உற்பத்தி செய்து பல பகுதிகளுக்கு அனுப்புகிறார்கள். நமது நாட்டில் இப்படி சந்தன மரங்கள் விளைச்சல் இருக்கக்கூடிய நேரத்தில், நாமும் அப்படிச் செய்வது நல்லது அல்லவா? அதற்கு பைலட் ஸ்கீம் போட்டாவது அரசு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, 300 டன் எடையுள்ள சந்தனக் கட்டையைக் கொண்டு ஒரு தொழிற்சாலையை அமைக்கலாம் என்ற குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, மைசூரில் விளைகிற சந்தனக் கட்டைகள், மரங்கள் ஆகியவற்றுக்கு வெளிநாட்டில் நல்ல மார்க்கெட் இருப்பது தெரியும். இப்போது அமைக்க இருக்கின்ற அந்த தொழிற்சாலையை வடஆற்காடு மாவட்டத்திலேயே, வேலூருக்கு அருகாமையிலேயே உள்ள இடங்களில் அமைக்க அரசு ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, எந்த இடம் என்பது முக்கியமல்ல. வனங்களில் அமைக்கப் போவதாகக் குறிப்பு இருக்கிறது. முதலில் அமைக்கமுடியுமா என்று பார்க்கவேண்டும். இப்போது இந்தியாவில் தேவைக்கு அதிகமாக உற்பத்தி இருப்பதாகக் கூறுகிறார்கள். ரூ. 1½ கோடி வருமானம் வருகிறது. 16 தொழிற்சாலைகளுக்குப் போதுமான அளவு கட்டைகள் இல்லை என்று தான் சொல்கிறார்கள். அமைக்க முடியுமா என்ற சாத்தியக்கூற்றைப் பார்க்கவேண்டும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, 300 டன் சந்தனக் கட்டைகள் கொண்ட தொழிற்சாலை ஒன்றை அமைக்க குறிப்பு இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அது தனியார் துறையிலா, அல்லது பொதுத்துறையிலா ஆரம்பிக்கப்பட இருக்கிறது? எவ்வளவு பணச் செலவில் அத்திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, அரசுத் துறையில், சுமார் ரூ. 30 லட்சம் செலவாகும் என்று கருதப்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: A great majority of sandalwood trees are found in the forests of Denkanikotta and Housr Taluks. In Kuppam town in Chittoor district where sandalwood trees do not grow, they are having a big sandalwood factory and supply oil to many places in the country. May I know whether the Government will think of starting a sandalwood oil factory and sandalwood powder factory at Hosur, considering the large availability of sandalwood trees there?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, அதைப் பற்றிப் பரிசீலிக்கப்படும். அதற்குப் பிறகு பார்க்கலாம்.



**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, சந்தனப் பவுடருக்கு பெண்கள் மத்தியில் அதிகக் கிராக்கியிருக்கிறது. அதையாவது சீக்கிரம் ஆரம்பிக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, இப்போது தேவையை விட உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்று கருதப்படுகிறது.

## பேருந்து பயணக் கட்டணம்

*327. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் துறை பேருந்துகளுக்கும் நாட்டுடைமையாக்கப்பட்ட அரசு பேருந்துகளுக்கும் பிரயாண கட்டண விகிதத்தில் உள்ள வேறுபாடுகளைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 22—6—1971 நாளுக்கு முன்பு, சாதாரணப் பேருந்தின் பயணக் கட்டணம் கிலோமீட்டர் ஒன்றுக்கு 3 காசுக்கு மேற்படாத வகையில் முடிவு செய்யப்பட்டிருந்தது. சில மாவட்டங்களில் உள்ள தனியார் பேருந்து உரிமையாளர்களும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறையினரும், கிலோ மீட்டர் ஒன்றுக்கு 2½ காசு வீதம் கட்டணம் வசூலித்து வந்தனர். கட்டண வீதங்கள் ஒரே மாதிரியாக இருப்பதற்காக, 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 43 (1) (  ) பிரிவின் கீழ், உள்துறையின் 22—6—1971 நாளிட்ட 1674-வது எண் அரசு ஆணையில் பயணக் கட்டணம் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3 காசு என்று இருக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது. கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3 காசுக்குக் குறைவாகப் பயணக் கட்டணம் வசூலித்த தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கிருந்த விருப்ப உரிமை எடுத்துவிடப்பட்டது. தனியார் பேருந்து உரிமையாளர்கள், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையினர் ஆகிய இருவரின் பேருந்துப் பயணக் கட்டணங்கள், 1—10—1971 நாளிலிருந்து கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3 காசு என்ற ஒரே மாதிரியான வீதத்தில் இருக்குமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, சில மாவட்டங்களில் நமது அரசுப் பேருந்துகளில் வசூலிக்கப்படும் கட்டண விகிதத்தைவிட அதிகமான அளவுக்கு தனியார்ப் பேருந்துகளில் வசூலிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா? அதை உடனடியாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, சமீப அரசின் ஆணைப்படி தனியார்ப் பேருந்துகளும், அரசுப் பேருந்துகளும் ஒரே கட்டணத்தைத்தான் வசூலிக்கவேண்டுமென்று விதியிருக்கிறது. ஆகையால், குறிப்பிட்ட பேருந்து நிறுவனங்கள் எதாவது அதிகமான கட்டணத்தை வசூலித்தால் அதை அரசுக்குத் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, தனியார்துறைப் பேருந்துகளை நடத்தக்கூடியவர்கள் 3 பைசாவுக்குக் குறைவாக வசூல் செய்யக்கூடாது என்று நாம் உத்தரவு பிறப்பித்திருக்கிறபடியால், அவர்கள் கட்டணம் வசூல் செய்வதற்காகக் கொடுக்கப்படும் ரசீது தொகை கூடிய தொகைக்கும், வசூல் செய்யும் தொகை குறைவாகவும் இருக்கிறது. இது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அந்தக் கட்டணத்திற்கும் குறைவாக அவர்கள் வசூல் செய்கிறேன் என்று சொல்கிறபோது, அரசாங்கம் 3 பைசா வசூல் செய்யவேண்டுமென்று சொல்வது பொதுமக்களுக்கு அதிகமான செலவை நாம் சுமத்துவது போல் இல்லையா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, குறிப்பிட்ட புகார்கள் அந்த முறையிலே இருக்குமானால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். ஏற்கனவே இருந்த அரசு உத்தரவின்படி 3 பைசா வரை வசூல் செய்யலாம் என்று விதி வைத்து இருந்தாலும், அதிலே என்ன நிலைமை ஏற்பட்டது என்றால், சில தனியார் பேருந்துகள் அவர்கள் இஷ்டம் போன போக்கில் கட்டணத்தை வசூல் செய்ய ஆரம்பித்தார்கள். குறைவாக வசூல் செய்ய ஆரம்பித்தார்கள். அப்படி வசூல் செய்யக்கூடாது என்று அரசாங்கம் தெரிவித்திருந்தது. ஆனால் சேலத்திலுள்ள என். எஸ். மோட்டார் சர்வீஸ் என்பவர்கள் வேண்டுமென்றே குறைவாக வசூல் செய்த காரணத்தால் அது உயர்நீதி மன்றம் வரை சென்று உயர்நீதி மன்றத்தில், அதிக பட்சம் 3 பைசா என்று இருக்கிற காரணத்தால் அவர்கள்





1 பைசா கூட வசூலிக்கலாம் என்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்ட காரணத்தால், அந்தத் தொழிலில் ஒரு அன்ஹெல்தி காம்படிஷன் ஏற்பட்ட காரணத்தால், எல்லோரும் ஒரே மாதிரியாக 3 பைசா ஒரு கிலோமீட்டருக்கு வசூல் செய்யவேண்டுமென்ற விதி தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, ஒரு கிலோ மீட்டருக்கு 3 பைசா வசூலிப்பது என்று திருத்தியமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதே போல் அகில இந்தியாவிலும் எல்லா மாநிலங்களிலும் 3 பைசா வசூலிக்கப்படுகிறதா? அப்படியில்லையென்றால் வேறு மாநிலங்களில் வசூலிக்கப்படுகிற கட்டண விகிதங்கள் எப்படி உருவாக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, வேறு மாநிலங்களில் வசூலிக்கப்படுகிற கட்டண விகிதங்களைப் பற்றிய குறிப்பு என்னிடம் தற்போது இல்லை. இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் தான் கட்டணம் குறைவாக இருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், இரண்டரை பைசா விகிதத்தில் கட்டணம் வசூலித்தபோதே தனி நபர்கள் லாபத்தில் ஓட்டிக் கொண்டு இருந்தார்கள். அரசாங்கம் தாங்களே கட்டணத்தை மூன்று பைசா என்று செய்து, தனி நபர்களையும் அதிகப்படுத்தச் செய்தார்கள். தனியார்கள் குறைந்த கட்டணத்தில் ஓட்ட முடியும் என்றால் ஏன் சர்க்காரால் அந்த வகையில் ஓட்ட முடியவில்லை என்பது புரியவில்லை. ஆகவே, எல்லாவற்றையும் 2½ பைசாவாகவே அமைக்க சர்க்கார் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தனியார்கள் எல்லோரும் 2½ பைசாவிலேயேதான் ஓட்டினார்கள் என்பது சரியில்லை. இந்த விதி வருவதற்கு முன்னாலேயே சிலர் மூன்று பைசா வசூலித்துக் கொண்டிருந்தார்கள். 2½ பைசா கட்டுபடியாகவில்லை என்றுதான் தனியார்களும் இந்த முறையைக் கையாண்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, மூன்று பைசா என்பது இந்தியாவிலேயே குறைவான கட்டணம் என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பஸ்

முதலாளிகளுக்கு அதிக லாபம் வருகிறது என்கிற கருத்தினையும் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் வரியும் உயர்த்தப் பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தனியார் பஸ்களில், எக்ஸ்பிரஸ் பஸ்ஸாக ஓடுபவை 3 பைசாவிற்கு மேல் வசூலிக்கிறார்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா?

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** விரைவுப் பேருந்துகளைப் பொருத்தவரையில் 50 சதவிகிதம் கூடுதலாக வசூலிக்கலாம் என்று விதி போட்டிருக்கிறோம். அவர்கள் தரும் வசதிகளைப் பொருத்து, கட்டணத்தை உயர்த்த அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

அரசுப் போக்குவரத்துத் துறையிலுள்ள பழைய பேருந்துகள்.

*328 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துக்குச் சொந்தமான பழுதான பழைய பஸ்கள் ஏலம் மூலம் விற்கப்படுகின்றனவா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** சமீப காலம் வரை, பழைய பஸ்கள், ஏலம் மூலம் விற்கப்பட்டன. கடைசி ஏலம் 22—9—1970 இல் விடப்பட்டது. அதன் பிறகு பழைய பஸ்கள் ஏலத்தில் விடப்படவில்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, தமிழக அரசு பழைய பேருந்துகளை ஏலத்தில் வி[illegible] இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தமிழக அரசு பழைய பேருந்துக்களை ஏலத்தில் விடுவதில்லை என்று முதல் அமைச்சரோடு நடத்திய கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், ஏலத்தில் விடப்பட்ட பஸ்ஸின் விலை என்ன என்பதை அறிவிப்பாரா?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** ஏலத்தில் விடுவதில்லை என்று முடிவு எடுத்திருப்பதாகச் சொன்னேன். தனிக் கேள்வி போட்டால், முந்தைய ஆண்டுகளில் என்ன விலைக்கு விடப்பட்டது என்பதைச் சொல்லலாம்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, ஏலத்தில் விடுவதில்லை என்றால், நம்முடைய ஓர்க்ஷாப்பில் எப்படிச் செய்யப்படுகிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அதற்காகத் தனிப் பிரிவு அமைத்து அந்தப் பிரிவினர் பேருந்துகளைச் செப்பனிட்டு, செம்மைப்படுத்தி, அவற்றை இயங்க வைத்திருக்கிறார்கள். அப்படி இதுவரையில் 27 பேருந்துக்கள் அவர்களால் செப்பனிடப்பட்டு நல்ல முறையில் ஓட்டக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பழுதான பஸ்களை செப்பனிட்டு திரும்பவும் ஓட்டுவதாகச் சொன்னார்கள். அப்படிச் செய்யப்படும் வண்டிகள் எத்தனை ஆண்டுகளானதாக இருக்க வேண்டும் என்று வரையறை இருக்கிறதா? டாக்சிகளுக்கு 10 வருஷம் என்று சொல்கிறார்கள். பஸ்களை திரும்பத் திரும்ப ரிப்பேர் செய்து ஓட்டுவது என்பதற்கு ஏதாவது டைம் லிமிட் இருக்கிறதா? அமைச்சர் அந்த விவரத்தைத் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தொழில் நுட்ப ரீதியாக Technical aspects என்று சொல்வது போல, அவை தகுதியாக இருக்கின்றனவா, இயங்க முடியுமா என்பதைப் பார்த்து, அதன் மேல் பழுது பார்த்து விடப்படுகின்றன. இனி இயங்கவே முடியாது என்கிற பேருந்துகளை, ரிப்பேருக்கு ஆகும் செலவு அதிகமாக இருக்கும் என்று இருப்பவற்றை, அதிலிருந்து பொருள்களைப் பிரித்து எடுத்து உபயோகப்படுத்தப் படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பழுதான பஸ்கள் 27 ரிப்பேர் செய்து ஓட்டுவதாகச் சொன்னார்கள். அவற்றில் உள்ள என்ஜின்களை உபயோகித்து, ட்ரெயிலர் பஸ்களாக ஓட்ட முடியுமா என்பதைப் பார்த்து, அப்படி ட்ரெயிலர் பஸ்கள் ஓட்டுவதற்கான திட்டம் இருந்தால், இதுவரையில் அப்படி பழுதான பஸ்கள் எத்தனை என்பதை அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** ட்ரெயிலர் பஸ்ஸாக ஓட்டப்படுகிறது. எத்தனை என்ற விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்த கண்டெம்ட் பஸ் சம்பந்தமாக ஏலம் போடுவதற்காக ஒரு கமிட்டி இருந்ததே, அந்தக் கமிட்டியின் சிபாரிசின் அடிப்படையில் 22—1—1972 அன்று ஏலம் விடப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** நான் 22—9—1970 என்று சொன்னேன். அந்த சிபாரிசின்படித்தான் ஏலம் நடைபெற்றிருக்கும். இப்பொழுது ஏலம் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கண்டெம்ட் பஸ்களை ஏலத்தில் விடுவார்களா ? அதற்கு ஏதாவது குழு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** எதையும் ஏலத்தில் விடுவதாக இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, பழுது பார்க்கப்பட்டு மறுபடியும் ரோட்டிலே விடப்படுவதாகச் சொன்னார்கள். பழுது பார்த்த செலவு என்ன என்பதைத் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இப்பொழுது ஓடும் பஸ்களில் அதிகமாக எத்தனை ஆண்டுகள் ஒரு பஸ் ஓடுகிறது என்பதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, பேருந்துகளைப் பொறுத்தவரையில், லேலண்டு 2½ லட்சம் மைல்களும், பென்ஸ் 2¼ லட்சம் மைல்களும் ஓட வேண்டும் என்றும், குறைந்தது ஆறு ஆண்டுகள் ஓட வேண்டும் என்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. எத்தனை என்பதற்கான விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, இப்பொழுது பழுது அடைந்த பஸ்களை, சிலவற்றை கல்லூரிகள், பாடசாலைகள் இவற்றிற்கு, ஊருக்கு வெகு தூரத்தில் இருப்பவற்றிற்கு





மாணவர்கள் வசதிக்காக விடுவதற்கு, கல்லூரிகள், பாடசாலைகள் இவற்றிற்கு இலவசமாக அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இப்பொழுது சுய தேவையைப் பூர்த்தி செய்யவே பஸ்கள் தேவைப்படுகின்றன.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, ஒரு புதுப் பஸ் எவ்வளவு லட்சம் மைல்கள் ஓடவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், அரசாங்க பஸ்கள் பல, நடு ரோட்டுக்களில் நின்று விடுகின்றன. சரியான கண்காணிப்பும் கிடையாது. ஒரு ஜில்லாவிலே தலைமை அதிகாரி யாராவது ஒருவரிடம் பொறுப்புக் கட்டி விட ஏற்பாடு செய்வார்களா ? சாமான்கள் முழுதும் டெக்னிகல் சைடில் பார்த்து, பஸ்களை சரியான நிலையில் வைக்க முடியுமா என்பதைப் பார்த்து அப்படி ஒரு அமைப்பை கொண்டு வர அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சரியாகக் கொண்டு வரத்தான் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. படிப்படியாக நல்ல முறையில் முன்னேறி வருகிறது. மாவட்டத்தில் யாராவது ஒருவரிடம் ஒப்படைக்கலாம் என்றார்கள். யாரைப் போடுவது என்பதுதான் பிரச்சினை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: When the private operators are granted Stage Carriage Permits they are asked to put up the latest model buses of 1970, 1971 and 1972, whereas the Government is running old model buses. Would the Government replace all such old model buses with new models ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அரசாங்கப் போக்குவரத்துக் கழகத்தில் [illegible] அநேகம் புதிய பஸ்கள் இருக்கின்றன. தனியார் புதிய பஸ்கள் விடுவதற்கு அரசாங்கம் உத்தரவு இடுகிறது என்று சொன்னார்கள். அதுதான் தனியார் பஸ்கள் ஒழுங்காக ஓடும் ரகசியமோ என்னவோ.

## கோவில்களில் குளிர் சாதன வசதி

* 329 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டிலுள்ள எந்த ஆலயத்திற்காவது தற்போது குளு குளு வசதி செய்யப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தமிழ் நாட்டில் கீழ்க்கண்ட ஆலயங்களில் குளிர்ந்த காற்று இருக்கும் பொருட்டு வசதிகள் செய்யப்பட்டுள்ளன :—

1. ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம், மதுரை.
2. ஸ்ரீ சுப்ரமணியசுவாமி ஆலயம், திருத்தணி.
3. ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் & அகிலாண்டேஸ்வரி ஆலயம், திருவானைக்கா, திருச்சி.
4. ஸ்ரீ சுப்ரமணியசுவாமி ஆலயம், திருச்செந்தூர்.
5. ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம், சென்னை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, இந்தக் குறிப்பிட்ட ஆலயங்களில், அங்குள்ள பக்தர்களுக்காக இந்த குளு குளு அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறதா அல்லது அர்ச்சகர்களின் வசதிக்காக இந்த வசதி செய்யப்பட்டிருக்கிறதா என்ற விபரத்தை அறிய விரும்புகிறேன். அதோடு வேறு கோயில்களிலுள்ள பக்தர்கள் இந்த வசதி அங்கு இல்லாததால், புகார் செய்வார்களே. ஆகையால் மற்ற கோயில்களிலும் இந்த வசதியை செய்ய அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அது [illegible]. மற்ற கோயில்களில் குளு குளு வசதி செய்து கொள்வதிலே அரசுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. நிதி வசதிக்கு ஏற்ப அவர்களே அமைத்துக் கொள்ளலாம். குளு குளு வசதி அர்ச்சகர்களின் வசதிக்காகவோ அல்லது குறிப்பிட்ட பக்தர்களின் வசதிக்காகவோ செய்யப்படவில்லை. வழிபடும் மக்களின் நலனைக் கருதி, கோயில் நிதி வசதிக்கேற்ப செய்யப்பட்டுள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இன்றைக்கு மருத்துவ மனைகளில் ஆப்பரேஷன் தியேட்டர்களில் கூட குளு குளு வசதி செய்யப்படாமல் இருக்கும்போது கோயில்களில் செய்யப் படுகிறது. ஆகவே, மருத்துவமனைகளில் ஆப்பரேஷன் தியேட்டர்களிலாவது ஏர்கண்டிஷன் செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, மருத்துவ மனைகளில் குளு குளு வசதி செய்வதைப் பற்றி அறநிலையங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** புழுக்கம், இறுக்கம் நிறைந்த கோயில்களுக்குச் செல்லும் பக்தர்கள், அதன் காரணமாக மருத்துவமனைகளுக்குச் சென்றுவிடக் கூடாதே என்பதற்காக கோயில்களில் குளு குளு வசதி செய்யப்படுகின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, குளு குளு வசதி எல்லாக் கோயில்களிலும் இல்லை; குறிப்பிட்ட ஒரு சில கோயில்களில்தான் இருக்கிறது. புழுக்கமும் நெருக்கமும் நிறைந்த வேறு பல கோயில்களிலும் இந்த வசதி செய்யப்பட வில்லை. அப்படிச் செய்யாதது நியாயமானதாக இல்லை. எனவே, கோயில்களிலே ஏற்றத்தாழ்வு காட்டாது எல்லாக் கோயில் களிலும் குளு குளு வசதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, கோயில் களில் ஏழை பணக்காரர் என்ற வேறுபாடு கிடையாது. ஆனால் கோயில்களின் நிதிநிலை அவ்வாறு இருக்கிறது. எனவே, எல்லாக் கோயில்களிலும் ஒரே சீரான முறையை கொண்டு வருவதற்கு [illegible] அவர்களின் ஆதரவு நிச்சயமாகக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

**திரு. எஸ். வடிவேலு :** தலைவரவர்களே, ஒவ்வொரு கோயிலிலும் குளு குளு வசதி செய்வதற்கு எவ்வளவு செலவாகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, ஒவ்வொரு கோயிலுக்கும் எவ்வளவு செலவாகிறது என்ற குறிப்பு என்னிடம் இல்லை. சுமார் 30 ஆயிரம் அல்லது 40 ஆயிரம் ரூபாய் அதற்குச் செலவாகலாம்.

**திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** தலைவரவர்களே, திருச்சி யிலுள்ள ஸ்ரீரங்கம் கோயிலுக்கும், மலைக்கோட்டை கோயிலுக்கும் ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள். ஆகவே அந்த இரண்டு கோயில்களிலும் குளு குளு வசதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கோயில்களில் குளு குளு வசதி செய்வது அங்கே உள்ள அறங்காவலர்களைப் பொறுத்தது.

ஆகவே, அறங்காவலர்கள் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தால், அரசு அதை அனுமதிக்கும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, கோயில்களில் குளு குளு வசதி செய்ய பக்தர்களிடமிருந்து கோரிக்கை வருகிறதா அல்லது கடவுள்களிடமிருந்து கோரிக்கை வருகிறதா என்பதை அரசாங்கம் அறிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர்களும் ஒரு அறங்காவலராக இருக்கிறார்கள். எனவே, கோரிக்கை கடவுள் மூலமாக வருகிறதா அல்லது பக்தர்கள் மூலமாக வருகிறதா என்பது அவருக்குத் தெரியும்.

**திரு. சொ. காவேரிமணியம் :** தலைவரவர்களே. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் குளு குளு வசதி செய்திருப்பதாகச் சொன்னார்கள். அதேமாதிரி திருப்பரங்குன்றத்தில் உள்ள கோயிலிலும். ஏராளமான பக்தர்கள் வருவதாலும், அதிகமான வருமானம் கிடைப்பதாலும் குளு குளு வசதி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அங்குள்ள அறங்காவலர்கள் சேர்ந்து அதற்கு ஒரு முடிவு செய்வார்களே யானால் அரசு அதற்கு அனுமதி வழங்கும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் அறங்காவலர்களாக இருக்கிறார்களே, அப்படிப்பட்டவர்களை நியமிக்கும் கொள்கையை அரசு மாற்றி அமைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள்தான் அறங்காவலர்களாக நியமிக்கப் படுகிறார்கள். அவர்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்படுவதற்கு முன்பு, முறைப்படி சில கேள்விகள் கேட்டு, அதற்குப் பின்னால் அவர்களிடமிருந்து விண்ணப்பமும் பெற்றுதான் நியமிக்கப் படுகிறார்கள். அந்த விண்ணப்பங்களிலும், அவர்கள் கடவுள் பக்தி உள்ளவர்களாக இருப்பதாகத்தான் எழுதிக் கொடுக்கிறார்கள்.



**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, அறங்காவலர்களாக வருவதற்கு விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு ஊதியமும், 'ஹானரோரியமும்' கிடைக்கும் என்றுதான் விண்ணப்பிக்கிறார்கள். எனவே, அதற்குக் கட்டுப்பாடு இருக்க வேண்டியது அவசியம் என்பதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அறங்காவலர்களுக்கு எந்தவிதமான ஊதியமோ அல்லது வேறு விதமான சலுகைகளோ கொடுக்கப்படுவதில்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, கோயில்களில் ஏர் கண்டிஷன் செய்யப்படுவதற்கு ஆகும் செலவு, கோயில் நிதியிலிருந்து செய்யப்படுகிறதா அல்லது அறநிலையப் பாதுகாப்பு இலாகா மூலமாகச் செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, கோயில் நிதியிலிருந்துதான் பணம் செலவு செய்யப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, அறங்காவலராக வருபவர்களை, ஒரு குழு அமைத்து, அவர்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டா இல்லையா என்பதை விசாரிக்கச் செய்ய வேண்டும். ஏனென்றால் அறங்காவலராக வருபவர்கள் கடவுள் நம்பிக்கை உண்டென்று பொய் சொல்லிவிட்டு வந்து விடுகிறார்கள். எனவே, அவர்களுடைய பழக்க வழக்கங்கள், அவர்களுடைய பூர்வாங்க சரித்திரம் இவைகளை ஆராய அரசாங்கம் ஒரு குழுவினை அமைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அறங்காவலராக வருபவர்கள், அறத்தைக் காப்பவர்களாக வருகிறார்களே தவிர, கடவுளைக் காப்பவர்களாக வரவில்லை. எனவே அவர்கள் அறத்தைக் காப்பவர்களா இல்லையா என்பதை மட்டும் தெரிந்துகொண்டால் போதுமானது.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, அதிக நிதி வசதி உள்ள கோயில்களில்தான் குளு குளு வசதி செய்யப் படுகிறது. கோயில்களிலே வேறுபாடு காட்டாது எல்லாக் கோயில்களிலும் குளு குளு வசதி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, இக் கேள்விக்கு ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் பதிலளித்து விட்டார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சார், ரிலிஜியஸ் எண்டோமெண்ட்டிலிருந்து இந்த குளு குளு வசதி செய்யப்படுவதற்கு அரசாங்கம் உத்தரவிடுகிறதா? அரசாங்கம் அதற்கு ஏதாவது உதவி செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, அறக் கட்டளைகளுடைய வருமானத்தைப் பொறுத்து இந்த குளு குளு வசதி செய்யப்படுகிறது. அரசாங்கத்தின் நிதியிலிருந்து இந்த வசதி செய்வதற்கான உத்தரவு எதுவும் இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is it not a fact that this air-conditioning equipment is installed because the huge crowd of worshippers who come there, are not able to bear heat and perspiration and that it is not intended to help priests or Gods—God does not demand any comfort for himself?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, பக்தர்களுடையத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில்தான் இந்த நடவடிக்கை ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, அறங்காவலர்கள் தெய்வபக்தி இல்லாதவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அப்படி தெய்வபக்தி இல்லாதவர்களை அறங்காவலர்களாக நியமித்தால் அவர்களுக்குப் பக்தி உண்டாகிவிடுகிறதா. ஆகவே, அப்படிப்பட்டவர்களை அரசாங்கம் அறங்காவலராக நியமிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, தெய்வ பக்தி உள்ளவர்களைத்தான் அறங்காவலர்களாக நியமிக்கிறோம். தெய்வபக்தி இல்லாதவர்களை நியமிப்பதில்லை.

**திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் குளு குளு வசதி செய்ய அனுமதிக்க பக்தர்கள் அங்கே ஒலி-ஒளி காட்சி அமைக்க எதிர்ப்புத் தெரிவிப்பது என் என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, பக்தர்கள் யாரும் அதை எதிர்க்கவில்லை. சில அரசியல்வாதிகள்தான் பக்தர்கள் என்ற முறையிலே அதை எதிர்க்கின்றார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, பக்தர்கள் எதிர்க்கவில்லை; அரசியல்வாதிகள் அதை எதிர்க்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்தப் பிரச்சினையை வைத்து அரசியல் வளர்க்கும் நிலை எந்தக் கட்சியினருக்கும் இல்லை என்றே நினைக்கிறேன். காங்கிரஸ் கட்சிக்கும் அந்த எண்ணம் இல்லை. உண்மையான பக்தர்களில் சிலர் ஒலி-ஒளி காட்சி அமைப்பினால் நேரடியாகச் சென்று வழிபடும் முறையில் உள்ள புனிதம் கெட்டு விடுமோ என்ற காரணத்தினால்தான் எதிர்க்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அது தெரியும். ஆனால் மேலவையில் திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் மதுரையில்தான் ஒலி-ஒளி காட்சி அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். யாரோ ஒரு சிலர் வேண்டாமென்றால் உடனே அத் திட்டத்தை விட்டுவிடுவதா? அதைப் பொருட்படுத்தாமல் மதுரையில்தான் அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவரும் காங்கிரஸ்காரர்தான். வேறு சில பெரியவர்களும் அங்குதான் அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதற்கிடையில் பலர் ஒலி-ஒளி காட்சியினால் கோயிலின் புனிதத் தன்மை கெட்டுவிடும் என்று டெல்லிக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதனால் மத்திய அமைச்சர் டாக்டர் கரண்சிங் அவர்கள் அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிட்டார்கள். அதற்குப் பதிலாக சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாமல்லபுரத்தில் அமைக்கலாம் என்றும் சொன்னார்கள். வேறு வழியின்றி நாங்களும் அந்த முடிவை ஒத்துக்கொண்டோம். ஒலி-ஒளி காட்சி அங்குதான் அமைக்கப்பட வேண்டுமென்று மதுரை மாநகராட்சிகூடத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. திரு. ராஜாராம் நாயுடு அவர்களும் மற்றும் பல பெரியவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மீண்டும் மத்திய அரசை வற்புறுத்தினோம். ஆனால் மத்திய அரசினர் இனி அங்கு அமைக்க முடியாது என்று திட்டவட்டமாகச் சொல்லி விட்டார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இப்போது மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் ஒலி-ஒளி காட்சி

அமைக்கப்படாவிட்டாலும் மதுரை திருமலை நாயக்கர் மகாலில் அமைக்கலாம் என்று சொல்லப்பட்டு வருகிறது. திருமலை நாயக்கர் மகாலில் கல்வெட்டு ஒரே ஒரு சின்னத்தைத் தவிர வேறு முக்கியமான ஒன்றும் இல்லை. எனவே, அங்கு அமைக்காமல், மீனாட்சி அம்மன் கோயிலிலேயே அமைக்க வேண்டும். ஏனென்றால், ஆண்டவனின் திருவிளையாடல்களை எல்லாம் விளக்கிக் காட்டுவதற்கு அதுதான் சிறந்த இடமாக இருக்குமென்று கருதுகிறேன். எனவே, அரசாங்கம் இத்திட்டத்தை மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒலி—ஒளியின் மூலமாக ஆண்டவனுடைய திருவிளையாடல்களை எடுத்துச் சொல்ல வேண்டும் என்பது இந்த அரசாங்கத்தின் நோக்கம் அல்ல. மதுரை பாண்டிய மன்னர்களின் புகழ்பெரும் சிறப்புக்களை அதன் மூலம் எடுத்துக்காட்டலாம் என்று கூறினோம். ஆனால் சிலர் ஆஸ்திகர்கள் சங்கம் என்ற பெயரால் மத்திய அரசாங்கத்திற்குக் கடிதங்கள் எழுதினார்கள். மத்தியில் அந்தத் துறையின் அமைச்சராக உள்ள திரு. கரண்சிங் அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது 'இப்படிப்பட்ட கொள்கைகளுக்கிடையே மதுரையில் அதை அமைப்பானேன். மகாபலிபுரத்திலேயே அமைத்துவிடலாம்' என்று சொன்னார்கள். மதுரையில் அமைப்பதே சிறந்தது என்று நான் கருதினாலும் அவர் சொன்னதற்குப் பிறகு மகாபலிபுரத்திலேயே அமைத்துவிடலாம் என்ற கருத்தைத் தெரிவித்தேன். அதற்குப் பிறகுதான் மேலவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. [illegible] அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் இன்னும் மதுரை முத்து போன்றவர்களும் மதுரையிலேயே அமைப்பதுதான் சாலச் சிறந்தது என்று சொன்னார்கள். உடன் நாங்களும் இதை மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்குப் பலமுறை எடுத்துச் சொல்லியாகிவிட்டது. மாநில அரசாங்கத்தின் கோரிக்கைகள் மத்திய அரசாங்கத்திலே எவ்வளவு தூரம் எடுபடுகின்றன என்பதை உறுப்பினர்கள் கவனித்து வருகிறார்கள்.

**திரு. நா. வீராசாமி:** தெய்வ பக்தி உள்ளவர்களைத்தான் அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும் என்றார்கள். தெய்வ பக்தி



உள்ளவர்கள் என்றால் பட்டை நாமம் போடுவதில் இருக்கிறதா? உள்ளத்தில் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாமம் அவர்களுக்குப் போட்டுக் கொள்வதைப் பற்றிப் பரவாயில்லை—பிறருக்குப் போடாமல் இருந்தால் சரி.

THIRU K. M. SUBRAMANIAM: Is it not a fact that sinners have become saints after some time. It is old history that being a sinner should not be against appointment of trustees so long as they turn themselves into saints. Many sinners have become saints and saints have become sinners in this country.

(No reply)

**திரு. எம். தேவராசன்:** தலைவர் அவர்களே, பல கோயில்களில் புதியதாக அறங்காவலர்களை நியமித்து வருவதால் அங்கு நடைபெற்று வந்த ஆறுகால பூஜை ஐந்து கால பூஜையாகி விட்டதா? இருபது வருஷங்களாக ஓடாது இருந்த திருவாரூர் தேர் யார் காலத்தில் ஓடியது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** நிர்வாகத்தைச் சீர்படுத்துகின்ற வகையில் அறங்காவலர்களை நாம் நியமிக்கிறோம். எங்கும் புதியதாக அறங்காவலர்களை நியமித்திருப்பதன் மூலம் ஆறுகால பூஜை ஐந்து கால பூஜையாகக் குறைந்து விடவில்லை. இருபது ஆண்டுகளாக ஓடாத திருவாரூர் தேர் நம்முடைய கலைஞர் ஆட்சியில்தான் ஓட ஆரம்பித்திருக்கிறது.

### வக்காரமாரியில் தருமபுர மடத்து நிலங்கள்

* 330 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுக்கா மணல் மேட்டிற்கு அருகிலுள்ள வக்காரமாரி கிராமத்தில் தருமபுரம் மடத்திற்குச் சொந்தமான நிலம் தற்போது எவ்வளவு?

(இ) அந்த நிலம் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்யப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

[1972 மார்ச் 6

**திரு. என். கிட்டப்பா :** மாயூரம் தாலுக்கா மணல் மேட்டுக்கு அருகிலுள்ள [illegible] தருமபுரம் ஆதீனத்திற்குச் சொந்தமானது ஆகும். அங்கு ஏராளமான விவசாயிகள் மிக அதிகமான தொல்லைக்கு ஆட்படுத்தப்பட்டு வருவதைப் போக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் கிராமத்தில் உள்ள நிலங்கள் [illegible] அல்ல. திரிபுவனம் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களாகும். அவை முன்பு கூட்டுறவுத் துறையில் சாகுபடி செய்ய ஒப்படைக்கப்பட்டிருந்தது. தற்போது கோயில் நிர்வாகத்தினாலேயே சாகுபடி செய்யப்படுகிறது.

**திரு. எஸ். வடிவேல் :** தருமபுரம் ஆதீனத்திற்கு எவ்வளவு நிலம் இருக்கிறது? அமைச்சரிடத்தில் அந்த விவரம் இருந்தால் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அது பற்றிய விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** [illegible] கோயில்களுக்கும், மடங்களுக்கும் எங்கெங்கு எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்கிற ரெக்கார்டுகளே சரியாக இல்லை. உடனடியாக இதற்கென்று ஒரு குழுவை அமைத்து எந்த எந்தக் கோயில்களுக்கு எங்கெங்கு எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து அந்த நிலங்களை மீட்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஆதீனங்களைப் பற்றி எனக்குத் தெரியாது. கோயில் நிலங்கள் எங்கிருந்தாலும் அவற்றைத் தேடிக் கண்டுபிடிக்க ஒரு தனி அதிகாரி ஒருவரை போட்டிருக்கிறோம். அவர் அந்தப் பணியைச் செய்து வருகிறார்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தருமபுரம் ஆதீனத்திற்கு எவ்வளவு நிலம் இருக்கிறது என்று தெரியாது என்றார்கள். தருமபுரம் ஆதீனத்திற்கு தஞ்சை, நெல்லை போன்ற மாவட்டங்களில் மிக உயர்தரமான நஞ்சை நிலம் இருக்கிறது



1972 மார்ச் 6]

என்பதும், அவற்றைப் பயிரிட்டு வருகிற விவசாயிகள் பலவிதமான தொல்லைகளுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, எங்கெங்கே அந்த ஆதீனத்திற்கு நிலங்கள் இருக்கின்றன என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை என்று குறிப்பிட்டேன். அந்த நிலங்களில் பயிரிடுகின்ற விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்வது சரியானது அல்ல. தக்க பல சட்டங்கள் மூலம் பயிரிடுகிற விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் பாதுகாப்பு அளித்திருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சொத்துக்களைக் கண்டுபிடித்து ரெக்கார்டுகளை ஏற்படுத்த தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். அவர்களது வேலை எப்போது முடியும்? மேலும் கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கிற போது 'சில சதவிகிதம் பெண்களுக்கு' என்று ஒதுக்கித் தருவார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அம்மையார் அவர்கள் ஒரு கோயிலுக்கு அறங்காவலாக சமீபகாலம் வரை இருந்தார்கள். கொஞ்ச நாட்கள் முன்புதான் அவர் பதவிக் காலம் முடிந்தது. மீண்டும் விண்ணப்பம் செய்தால் அதைப் பரிசீலிக்கலாம். அடுத்து, தனி அதிகாரி வேலை எப்போது முடியும் என்று கேட்டார்கள். பல சின்னஞ்சிறு கிராமங்களில் கூட கோயில்களுக்கு நிலம் இருப்பதை அவர்கள் தொடர்ந்து கண்டுபிடித்து தெரிவித்து வருகிறார்கள். அவரது வேலை 6 மாத காலத்திற்குள் முடியும் என்று எதிர்பார்க்கிறோம். தேவைப்பட்டால் நீட்டிக்கலாம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தருமபுரம் ஆதீனம் போன்றவற்றுக்கு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்த நிலங்களை எல்லாம் அரசு நாட்டுடைமை ஆக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** நல்ல புரட்சிகரமான திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குக் காலம் கனிய வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அமைச்சர் அவர்கள் மிக்க கருணையோடு நான் விண்ணப்பம் போட்டால் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். 67 வரை நான் அறங்காவலராக இருந்தேன். நீங்கள் வந்த பிறகு உங்களுக்கு வேண்டியவர்களை எல்லாம் போட்டு வருகிறீர்கள். நாங்கள் விண்ணப்பித்துக் கொண்டும் அவை கவனிக்கப்படவில்லை. அதைப் பற்றியும் நான் கவலைப்படவில்லை. நான் சொன்னது எல்லாம் பெண்களுக்கு என்று சீட் ரிசர்வ் செய்யப்படுவதுபோல அறங்காவலர்கள் பதவிக்கும் பெண்களுக்கு என்று சில சதவிகித ஸ்தானங்கள் ஒதுக்கப்படுமா என்பதுதான். அந்த இடங்களிலும் உங்கள் கட்சிக்காரர்களையே போட்டுக் கொள்ளுங்கள். எனக்கு வேண்டுமென்று நான் கேட்கவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் மனக்குறையோடு கூறுகிறார்கள். அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆயினும் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை நாங்களும் உணர்ந்துதான் தகுதி உள்ளவர்களாக இருந்தால் ஆங்காங்கு நியமிக்கிறோம்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, என்னுடைய மூலக் கேள்வியில் குறிப்பிட்டிருக்கிற ஊரில் அதாவது மணல்மேட்டிற்கு அருகிலுள்ள வக்காரமாரி கிராமத்தில் உள்ள ஏறத்தாழ 100 விவசாயிகள் கருப்பு பட்டிற்குச் சொந்தமான நிலங்களில் விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களை வெளியேற்றிவிட பெருமுயற்சியை நிர்வாகத்தினர் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களை வெளியேற்ற வேண்டாமென்று ஒரு அறிவுரை புகட்டுவதற்கு நமது அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, அப்படி விவசாயிகளை வெளியேற்றிவிட வேண்டுமென்று பெருமுயற்சி நடப்பது அரசுக்குத் தெரியாது. அந்த விவசாயிகள் விதிமுறைக்குட்பட்டிருந்தால், அவர்களுக்காக குத்தகை பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் மூலமாக நிச்சயமாக அவர்களைக் காப்பாற்ற முடியும்.



**திரு. இ. பொன்னுமலை:** தலைவர் அவர்களே, அறங்காவலராக நியமிக்கப்பட்ட பெண் உறுப்பினர்கள் கோவில் நிலங்களில் எத்தனை ஏக்கர் நிலங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் தெரியவில்லை. அம்மையார் அவர்கள் ஒரு கோயிலில் அறங்காவலராக இருந்ததால், அது பற்றி அவரிடம் கேட்டால் தெரியும்.

**திரு. எம். முத்தையா:** தலைவர் அவர்களே, ஆதீனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு உச்சவரம்பு கொண்டுவரப் பட்டிருக்கிறதா? அல்லது இனிமேலாவது கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, கோயில் நிலங்கள் இதில் சேர்க்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பட்டு இருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) அவையுரிமைப் பிரச்சினை

**திரு. சுப்பு கைதாகி விடுதலையான முறை குறித்து தவறான தகவலை சிறைக் கண்காணிப்பாளர் அளித்ததாகக் கூறப்பட்டது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேரவையின் 184-வது விதியின்கீழ் அவையுரிமை மீறல் பற்றிய கீழ்க்கண்ட முன்னறிக்கையைக் கொடுத்துள்ளார்கள்.

a matter of breach of privilege

"The members of the Tamil Nadu Legislative Assembly have been informed that the Superintendent, Central Jail, Madras, had intimated that I was arrested on 25th November 1971, and released on police bail on 29th November 1971. I would like to submit that the information regarding my arrest and release are contrary to the facts and deliberately misleading the House.

I was informed by the Police authorities that I was arrested only for picketing the Post Office. But the information furnished

to the Hon. Speaker discloses that I was arrested for defying the ban order. On 25th November 1971 itself I went to jail refusing to come out on bail. Subsequently on 29th November 1971 I was released stating that the action against me had been dropped. But in the information furnished to the Hon. Speaker it has been stated that I was released on Police-bail. This is contrary to the facts and constitutes *prima facie* a breach of privilege".

இது குறித்து சென்னை மையச் சிறைக் கண்காணிப்பாளரிடம் விளக்கம் கேட்டிருப்பதாகவும், அது வந்தவுடன் விதிப்படி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் 18—12—71 அன்று இப் பேரவையில் நான் அறிவித்தேன்.

சென்னை மையச் சிறைக் கண்காணிப்பாளரிடமிருந்தும் காவல் துறை ஆணையாளரிடமிருந்தும் விளக்கங்கள் பெறப்பட்டுள்ளன.

25—11—1971 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கைது செய்யப்பட்டதாகக் காவல் துறை ஆணையரிடமிருந்து அன்றே தகவல் கிடைத்தது. 26—11—1971 அன்று இது எல்லா மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் பேரவைத் துறை செய்தித்தாள் எண் 75 மூலம் அறிவிக்கப்பட்டது. பின்னர் 26—11—1971 அன்று திரு. சுப்பு அவர்கள் சென்னை மையச் சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைக் கண்காணிப்பாளரிடமிருந்து தகவல் கிடைத்தது. மீண்டும் திரு. சுப்பு அவர்கள் காவல் பிணையத்தின் பேரில் (Police bail) 29—11—1971 அன்று விடுவிக்கப்பட்டதாகச் சென்னை மையச் சிறைக் கண்காணிப்பாளரிடமிருந்து கிடைத்த தகவல் 2—12—1971 தேதியிட்ட பேரவைத் துறை செய்தித்தாள் எண் 76 மூலம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் தம் அவையுரிமை பற்றிய அறிக்கையில், எந்தவித பிணையமும் இல்லாமல்தான் தாம் விடுதலை செய்யப்பட்டதாகவும், காவல் பிணையின்மீது அவர் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது ஒரு தவறான தகவல் என்றும், எனவே இது அவை உரிமை மீறிய செயலென்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்துச் சென்னை மையச் சிறைக் கண்காணிப்பாளரும், காவல் துறை ஆணையரும் கொடுத்துள்ள விளக்கங்களிலிருந்து, காவல் துறை ஆணையர் கொடுத்த செய்தி அவர் கூறியதன் கருத்தை



மையச் சிறைக் கண்காணிப்பாளர் சரியானபடி அறிந்து கொள்ளாததனால்தான் இந்தத் தவறு ஏற்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. மையச் சிறைக் கண்காணிப்பாளர் தாம் கொடுக்கும் தகவல் சரியானதுதான் என்று கருதித்தான் அச் செய்தியை அளித்திருக்கிறார் என்பதும், அது தவறான செய்தி என்று தெரிந்தும் வேண்டுமென்றே கொடுக்கப்பட்ட ஒன்று அல்ல என்பதும் இவ்விளக்கங்களினால் தெரிய வருகிறது.

தவறான தகவலைப் பேரவைக்குக் கொடுப்பது எப்படி, எப்போது அவை உரிமையை மீறிய செயலாகும் என்பது குறித்து இப்பேரவையிலும், நாடாளுமன்றத்திலும் பல முறைகள் விளக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற நடைமுறைகள் குறித்து "Sir Erskine May" அவர்கள் எழுதியுள்ள புத்தகத்திலும், "The Commons may treat the making of a deliberately misleading statement as a contempt" என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

எனவே, இங்கு சென்னை மையச் சிறைக் கண்காணிப்பாளர் தாம் கொடுக்கும் தகவல் தவறானது என்று அவருக்குத் தெரிந்திருந்தும் இப் பேரவைக்குத் தவறான தகவல் கொடுக்க வேண்டுமென்றே அவர் அத்தவறான தகவலைக் கொடுத்தார் என்று கூறுவதற்கான எந்தவிதமான ஆதாரமும் இல்லாத காரணத்தினால் இதில் அவையுரிமை மீறல் எதுவும் இல்லை என்று நான் தீர்ப்பளிக்கிறேன்.

ஆயினும், இப்படிப்பட்ட தகவல்கள் கொடுக்கும்போது அரசு அதிகாரிகளும், மற்றவர்களும் மிகுந்த கண்காணிப்புடனும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் என்றும், இத்தகைய தவறு எதுவும் இனி ஏற்படாமல் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### பல்வேறு பொருள்கள் குறித்து உறுப்பினர்கள் கொடுத்துள்ள தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டுவர முன்னறிவிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். கடந்த பிப்ரவரித் திங்களில் நடந்த பல நிகழ்ச்சிகளைப் பற்றியும், இன்னும் பல்வேறு

பொருள் பற்றியும் தீர்மானங்கள் இருக்கின்றன யார் யார், எந்த எந்தப் பொருள் பற்றித் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் படித்து விடுகிறேன்.

*List of Adjournment Motions.*

| Serial number and name of the member. | Subject. |
|---|---|
| 1. Thiru K. T. K. Thangamani<br>Thiru Manali C. Kandasamy | Manhandling of Communist Leader Thiru Mangalasamy on 19—2—1972 at Mandapam. |
| 2. Thiru Manali C. Kandasamy | Proposed strike by workers of Sugar Industry. |
| 3. Thiru A. K. Subbiah<br>Thiru S. Vadivelu | Plight of the agriculturists in Tamil Nadu due to the compulsory collection of loans. |
| 4. Thiru A. K. Subbiah | Eviction of tenants from their lands due to non-payment of dues in Thanjavur District. |
| 5. Thiru R. Ponnappa Nadar | Trespass by unruly elements into the Southern Railway Employees Union and attack on Thiru Mahalingam, a labour leader of the Railway Workers Union on 23-2-72. |
| 6 Thiru S. Alagarswamy | Proposed closure of match factories. |
| 7. Thiru R. Ponnappa Nadar<br>Thirumathi T. N. Anandanayaki. | Assault on student congress leaders Thiru V. Dhandayuthapani and Thiru Kudanthai Ramalingam after the Presidency College Union Elections. |



| Serial number and name of the member. | Subject. |
|---|---|
| 8. Thiru K. T. K. Thangamani | Death in the Police lock-up at Namakkal, Salem District on 26-2-1972 of a prisoner by name Chinnappan and the consequent unrest in that area. |
| 9. Thiru N. Marudachalam | Strike by 10,000 workers of Ayyarpadi Tea Estate in Coimbatore for the past one week. |
| 10. Thiru A. Pauliah<br>Thiru J. James | Death of Thiru Velappan of Perungodu village in the lock-up at Eranial Police Station in Kanyakumari District. |
| 11. Thiru S. Alagarswamy | Increase in the price of yarn and non-availability of yarn in Koilpatti Taluk in Tirunelveli District and the consequent unemployment of weavers in that taluk. |
| 12. Thiru. N. V. Guruswamy | Crisis due to non-availability of yarn to thousands of weavers in Sakkampatti, T. Subbulapuram in Andipatti. |
| 13. Thiru S. Vadivel | Assault and seizure of Rs. 27 from the Road Inspector of Highways Department on 4-2-1972 at Gudalore by two Sub-Inspectors while the former was taking salary for disbursement to Government employees. |

| Serial number and name of the member. | Subject. |
|---|---|
| 14 Thiru N. Marudhachalam | Failure to take action by the Pothanur Police Sub Inspector in a murder case in Kuruchi village in Coimbatore District. |
| 15. Thiru K. T. K. Thangamani | Police lathi charges on the Textile Workers' Procession on 1-3-1972 in Gudiyatham, North Arcot District. |
| 16. Thiru J. James | Bus accident at Thallapuram near Chingleput on the night of 3-3-1972. |

இந்தத் தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பல நிகழ்ச்சிகள் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள், நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தின் மீதும், மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின் போதும் நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீதான விவாதத்தின் போதும் விரிவாகப் பேசுவதற்குப் போதுமான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லையென்று கருதி, இவற்றைக் கொண்டு வருவதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (4) அறிவிப்பு

### பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 4-3-1972-ம் நாள் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவிற்கிணங்க 1972–73-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பிற்காக ஒதுக்கப்பட்ட முதல் நான்கு நாட்களின் விவரம் ஏற்கனவே உறுப்பினர்களுக்கு அச்சிட்டு அனுப்பியுள்ளவாறு நடைபெறும்.



## (5) 1972–73 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972–73 ஆம் ஆண்டிற்கான இந்த நிதிநிலை அறிக்கையைக் கோடை காலத்திலே வருகின்ற தென்றலென மக்கள் வரவேற்கின்ற நிலையிலே நானும் இதனை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை ஒரு காவியத்தின் நயமும், ஒரு கவிதையினுடைய இனிமையும் பொருந்தியதாக இருக்கிறதென்று பாராட்டுகிறேன். இதைப் பற்றிக் கூற வேண்டுமானால் இது ஒரு முள்ளில்லாத ரோஜா. முள்ளில்லாத ரோஜா என்றால் அதிலே முள் இருக்கிறது. ஆனால் அந்த முள், வரி என்று சொல்லப்படுகிற முள், செடியினுடைய பகுதியில் இருக்கிறது. செடியை மேய வருகின்ற ஆடுகளுக்குத்தான் அதனால் தொந்தரவு. அதேபோன்று அதனால் பணக்காரர்களுக்குத்தான் தொந்தரவு தவிர, கன்னிபோல் அதைப் பறிக்க வருகிற ஏழை மக்களுக்குத் தொந்தரவு ஆகாது என்ற காரணத்தினால் கவிதைப் பாணியிலே பார்க்கிறபோது இது ஒரு முள்ளில்லாத ரோஜா என்று கூறுவதில் நான் பெருமைப்படுகிறேன்.

எப்படி பால் பொங்கினால் வீட்டுக்கு நல்லதோ அதேபோன்று பட்ஜெட் பொங்கினால் நாட்டுக்கு நல்லது என்பதை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற பட்ஜெட் மூலமாக நாம் காண வேண்டியவர்களாக இருக்கிறோம். எப்படிப் பால் பொங்குவது வீட்டுக்கு நல்ல சகுனமாக இருக்கிறதோ அதைப் போன்றுதான் பட்ஜெட்டிலேயும் ஏறத்தாழ இரண்டரைக் கோடி பொங்கி உபரியாக இருக்கிறது என்ற நிலைமையிலே நான் இதனை வரவேற்கவும் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே தமிழகமானது இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலமும் இல்லாத அளவுக்கு முதன்மையாக எல்லைப் பாதுகாப்பில் நம்முடைய தமிழகமானது இருக்கிறது. அதைப் போன்று தேசப் பாதுகாப்பு நிதிக்காக நிதி திரட்டுவதிலும் முதன்மையாக இருக்கிறது என்பது நாம் அறிந்தது. இந்த காரியம் நடந்திருக்கிறது. எல்லையிலே போர்

[திரு. கே. எ. வகாப்] [1972 மார்ச் 6

புரிந்த நம்முடைய தமிழ் நாட்டு மறவர்கள், வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்கள் எங்கள் வீரத் தோள்கள் என்று வீரத்தோடு போர் புரிந்து தாயகத்தைக் காக்கவும் சுதந்திர பங்களா தேசத்தை அடையவும் நம்முடைய தமிழகத்திற்குப் பெரிய பங்கு உண்டு என்று எடுத்துக் காட்டினார்களோ அதைப் போல் தேசியப் பாதுகாப்பு நிதி திரட்டுவதிலும் நமக்குப் பெரிய பொறுப்பு உண்டு என்று கருதித் தான் நம்முடைய கலைஞர் அவர்கள் அறிவித்து இருந்தார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலமும் இல்லாத அளவுக்கு அதிகமான தொகை தருவதாக அறிவித்திருந்தார்கள். பத்து கோடி ரூபாய் தருகிறோம் என்று சொன்னார்கள். இப்போது 3 கோடியே 50 லட்சம் ரூபாய் வரையிலும் திரட்டப்பட்டிருக்கிறது என்பதிலே நாம் எல்லாம் பெருமைப்படுகிறோம்.

ஆனால் அதே நேரத்திலே மக்களிடத்திலே இருக்கிற குறைபாடுகளைச் சொல்ல இந்த நேரத்திலே நான் கடமைப் பட்டிருக்கிறேன். தேசியப் பாதுகாப்பு நிதி வசூலிப்பதிலே நெருக்கடி நிலைமைகள் ஏற்படுவதை அரசு அறியும், மக்களும் அறிந்து இருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் விவசாயிகளுக்கு வரியிலே 25 விழுக்காடு தேசப் பாதுகாப்பு நிதிக்கு வசூலிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்ல வசூலிப்பதை ஒரு சாதாரண கோட்டைப் புத்தகத்திலே மணியக்காரர் குறித்துக் கொள்கிற நிலைமை இருப்பதால் அந்தக் கணக்குகள் எல்லாம் சரியான முறையிலே அரசாங்கத்திற்கு வந்து சேருகிறதா என்ற கவலை மக்களிடம் இருக்கிறது. இந்த வசூலை இந்த அளவோடு நிறுத்திக் கொள்வதோடு விவசாயிகளுக்கும் வணிகர்களுக்கும் ஏற்படுகிற தொல்லைகளை நிறுத்தலாம். இவ்வளவு அதிகமான தொகை கொடுக்கக் கொடுப்பதிலே நமக்குப் பெருமை, நாட்டிலே நமக்குப் பாதுகாப்பு பற்றி இருக்கிற உணர்ச்சியை யாரும் சந்தேகிக்க முடியாது. மக்களுடைய அல்லல்கள், நிதிநிலைமைகள், பொருளாதார நிலைமைகள் அவர்களுடைய துன்பங்கள் இவற்றையெல்லாம் அறிந்து இந்த நிதி திரட்டுவதை இந்த அளவிலே நிறுத்த வேண்டும். அதைப்பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.



1972 மார்ச் 6] [திரு. கே. எ. வகாப்]

(திரு. செ. கந்தப்பன் தலைமை)

அது மட்டுமல்ல. இந்த பட்ஜெட்டிலே கூறப்பட்டிருக்கிற நல்ல கருத்துக்கள், இந்திய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பரவலாகப் பேசுகிறார்களே. இந்திய ஒருமைப்பாட்டிற்கு சிறந்த வழியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். எப்படிக் கன்னியாகுமரியிலிருந்து இமயமலை வரை ஒரே நாடாக இருக்கிறதோ அதைப்போன்று கங்கை—காவிரி இணைப்பு மூலம் ஒரே நாடாக இருப்பதற்கு சிறந்த அம்சமாக இருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல கருத்துக்களைக் கூறியிருக்கும் அவர்கள் அதற்கான முயற்சிகளிலே ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த நதிகளை இணைப்பதன் மூலம் சோமபிலா நதியின் தண்ணீர் தென்கோடிக்குக் கிடைக்கக்கூடிய வகையிலே மட்டுமல்ல, இதனால் கன்னியாகுமரியிலிருந்து கடல் வழியாக அல்ல, நதி வழியாக கங்கைக்குச் செல்லக்கூடிய போக்குவரத்து வசதி ஏற்பட்டு நாட்டிலே வாணிபம் மேலும் பெருகும் என்று அடிப்படையிலே அதற்கான நடவடிக்கைகளைத் தமிழகத்திலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம முன்னேற்றத்தைப் பற்றி விரிவாகக் கூறப்படுகிறது. கிராமங்கள் இந்த நாட்டினுடைய இதயங்கள் போன்றவை. கிராமங்கள் இந்த நாட்டினுடைய இதயங்கள் சரியாக இருந்தால்தான் நாடு என்ற இதயங்களிலே இரத்த ஓட்டம் சரியாக இருக்க முடியும். கிராம மனிதனின் உடல் நல்ல முறையிலே இருக்க, சாக்கடை முன்னேற்றம், சாலை வசதிகள், குடிநீர் வசதிகள், ரூபாய் 300 கோடி ரூபாய் ஆகுமே வசதிகள் இவற்றிற் கெல்லாம் 300 கோடி ரூபாய் நம்முடைய தைரிய என்றாலும் பொறுத்துக் கொண்டாலும் நம்முடைய ஏற்படுத்தி முள்ள முதலமைச்சர் அவர்கள் அதற்கான வழியை இருக்கிறார்கள். என்ன பாடுபட்டாவது இந்த இதயங்களை நல்ல முறையிலே நாம் கொண்டுசென்ற முறையிலேதான் வாகன வரியை அதிகப்படுத்தி கிராம முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதற்கு முன்வந்திருக்கிறார்கள். நாட்டு மக்களுடைய முன்னேற்றம் கிராம முன்னேற்றத்திலேதான் இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்த நேரத்திலே ஒரே ஒரு வரியைப் பற்றி மட்டும் சொல்லாமல் இருக்க முடியாது. விவசாயிகள் செலுத்துகிற லோக்கல் செஸ் (சர் சார்ஜ்) வரியை ஒரு ரூபாய் அதிகப்படுத்தி இருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்.

ஏழை விவசாயிகள் ஏற்கனவே தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் பல துன்பங்களுக்கு ஆளாக வேண்டிய நிலைமை இருப்பதால் இந்த வரியைப் போடாமல் வாகன வரி என்ற அளவிலே மோட்டார் மன்னர்கள், ஆலையதிபர்கள், குதிரைப் பந்தயங்கள் இவற்றிற்கு வரியைப் போட்டு இந்த வரியை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேளாண் செல்வ வரியை விவசாயிகள் தலையில் சுமத்தாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது பலவகைப் பேசப்படுகின்ற நாட்டிலே தொழிலாளர்களுடைய ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் இவற்றைப் பற்றித்தான். நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு— எப்படி மனிதன் உடலில் உள்ள ஒவ்வொரு அவயமும் வேலை செய்தால்தான் உடல் சரியான முறையிலே இயங்குகிறதோ— அதே போன்று நாட்டினுடைய அங்கமாக இருக்கின்ற தொழிலாளர் மக்களும் முதலாளிகளும் இரண்டிற்கும் இடையிலே இருக்கிற மக்களும் சரியாக இருக்க வேண்டும். தொழிலாளர்கள் தங்களுடைய அக்கறை பற்றித் தெரிவித்திருக்கிறார்கள், முதலாளிகள் அவர்களுடைய வசதிகள் பற்றிச் சொல்கிறார்கள். இரண்டிற்கும் இடையிலே மக்கள் இன்னலைப் பாதிக்கப்படுகிறார்கள். எனவே முதலாளிக்கு வேண்டிய நியாயமான வசதிகளைக் கொடுத்து, தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியத்தைக் கிடைக்கச் செய்து இரண்டும் ஏக சக்தியாக இருந்து நாட்டினுடைய முன்னேற்றத்திற்குக் கருதுகோள் விளையாக அளவிலே அவர்களும் தங்களுடைய போராட்டங்களை நடத்த வேண்டுமென்ற உணர்வு வேண்டியிருக்கிறது. யாரோ சிலருடைய அரசியல் ஆதாயங்களுக்காக அவர்கள் தொழிலாளர்களைப் பயன்படுத்திக் கொண்டு, ஆசிரியர்களைப் பயன்படுத்திக் கொண்டு, மாணவர்களைப் பயன்படுத்திக்கொண்டு நாட்டிலே குழப்பம் ஏற்படுத்த முயற்சி செய்கிறார்கள். தொழிலாளர்களுடைய கோரிக்கை கவனிக்கப்பட வேண்டியதுதான்.

தொழிலாளர்களெல்லாம் ஏக சக்தியாக இருக்க வேண்டும். அவர்களின் சக்தி புலியின் சக்தியாக ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் இரண்டுபட்ட கருத்து இருக்க முடியாது. ஆனால் அந்தச் சக்தியை அவர்கள் பயன்படுத்தும் முறை புலியின்



சக்தியாகயிருந்தாலும் பசுவைப் போல் பால் கொடுத்துப் பாதுகாக்கும் முறையிலே தங்கள் சக்தியைப் பயன்படுத்த வேண்டுமென்று தொழிலாளப் பெருங்குடி மக்களை நான் இந்த நேரத்திலே இந்த அவையின் மூலமாகவும் சபாநாயகரவர்கள் மூலமாகவும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நாட்டின் அக்கறையிலே அவர்களுக்கும் அக்கறையிருக்க வேண்டும் என்றாலும் எங்கள் கோரிக்கைகளிலே ஒருசில கோரிக்கைகள் வெற்றி பெற்றாலும் அதையும் தங்களுடைய வெற்றியாகக் கருதிப் போராட்டத்தைக் கைவிட்டு நாட்டின் உற்பத்தியிலே அக்கறை காட்ட வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளை விடுத்துக்கொள்கின்றேன்.

அது மட்டுமல்ல, இந்த அரசு ஏழை எளியவர்கள், பஞ்சைப் பராரிகளுக்கு, நாட்டிலே ஒடுக்கி அடக்கப்பட்ட பின்தங்கியவர்கள் என்று சொல்லப்படுபவர்களுக்கும், அரிசனங்களுக்கும் மிகவும் ஆதரவு தருகின்ற அரசு என்பதற்கு எடுத்துக்காட்டாக அரிசனங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, பின்தங்கியவர்கள் என்று சொல்லப்படுகின்ற, இந்த நாட்டிலே உள்ள பெருவாரியான சமுதாய மக்களுக்கு மிகப் பெருமளவிலே நிதி ஒதுக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். முன்பெல்லாம் 90 லட்சமாக இருந்தது இன்று 4.68 கோடியாக உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது என்னைப் போன்றவர்கள் இறும்பூதெய்தி மகிழ்ச்சியடைந்து தமிழக அரசை மனப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்குச் சமுதாயத்திலே ஒதுக்கப்பட்டிருக்கிறவர்களுக்கு அவர்களின் பொருளாதாரத்தைக் கொண்டு, கல்வியைக் கொண்டு முன்னுக்குத் தள்ளப்பட வேண்டும். அதை இந்த அரசு நல்ல முறையிலே செய்யும் என்ற நம்பிக்கை உண்டு. அதன் காரணமாகத்தான் பல கோடி ரூபாய்களை, ஏறத்தாழ 4 பங்கு அதிகமாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது என்பது குறித்து உண்மையிலேயே நன்றியையும் மகிழ்ச்சியையும் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட பின்தங்கியவர்களில் ஒரு சமுதாயமாக இருக்கும் முஸ்லீம்களைப் பற்றி இன்னும் கனிவோடு இந்த அரசில் அவர்களுக்கு இப்பொழுது நல்ல பல சலுகைகள் அளிக்கப்படுகிறது என்பதை மறுக்கவில்லை. ஆனால் இன்னும் முஸ்லீம்கள்

பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். அதை மனத்திற் கொண்டு உத்தியோகத் துறை கல்வித் துறை போன்றவற்றில் கனிவோடு கவனிக்க வேண்டும். அது மட்டுமல்ல, வேறு எந்தவிதமான பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் அவர்களையும் உங்களுடைய கனிவான இதயத்திலே ஒரு பகுதியிலே கொண்டு ஆதரிக்கும்படியாகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். அந்த நிலச் சீர்திருத்தத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறோம். இன்றைக்கு பணக்காரர்களையெல்லாம் ஏழைகளாக்குவது என்பது அல்ல திட்டம். ஏழைகளெல்லாம் வசதி படைத்தவர்களாக ஆக வேண்டுமென்பதற்காக 40-க்கு உச்சவரம்பைக் குறைத்திருப்பதை வரவேற்கிறேன். ஆனால் அதிலே சில கருத்துக்களை இந்த நேரத்தில் கூற ஆசைப்படுகிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு இடையே குறுக்கிட்டுப் பதில் சொல்லும் பொழுது சொன்னார்கள். அறக்கட்டளைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற அந்த விலக்குகளெல்லாம் ஒரு பகுதி தவிர மற்றவைகளெல்லாம் இன்று சட்டத்திலே அந்தாவது விதிவிலக்கு நீக்கப்படும் என்று சொன்னார்கள். நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் இந்த மதரஸாக்கள் என்பது நடைபெறுகின்றன. நாங்கள் மார்க்கக் கல்வியைப் போதிக்கிறோம். அதிலே வேறுநாட்டு மொழியிலே அரபு போதிக்கப்பட்டாலும்கூட மக்களுக்கு இறை நம்பிக்கையை, ஒழுக்கத்தை ஏற்படுத்துகிறோம். அந்த பள்ளிகூடங்கள் 'மதரஸா' என்றும், அவர்களுக்கு உதவ வக்ப் வாரியம் என்றும் இருக்கிறது. முஸ்லிம்களின் அறநிலையங்களின் சார்பில் உதவியை இந்துமத சங்கங்களுக்கும், பள்ளிவாசல்களுக்கும் அளித்துள்ளனர். அதற்கு அளிக்கப்பட்டிருக்கின்ற நிலங்களெல்லாம் மானியங்களெல்லாம் மிகச் சிறிய அளவிலே இருக்கின்ற காரணத்தினால் அந்த வக்பு சொத்துக்களைப் பறிக்க சட்டம் கொண்டு வராமல் பாதுகாத்துக் கொடுக்க வேண்டுகின்றேன்.

முஸ்லீம் தொழுகை இடங்களுக்கு பள்ளிவாசல் என்றுதான் பெயரே வைத்திருக்கிறது. கல்வி பயில்கின்ற பள்ளிக்கூடத்தின் பெயரைப்போல் பள்ளிவாசல் என்பதும் ஒழுக்கத்தைப்





பாதுகாக்கின்ற இடம் இறை வணக்கத்தைச் செய்யுமிடத்தைப் பள்ளிவாசல் என்று வைத்திருக்கிறோம். ஆகவே கல்வியை வளர்த்து, இறை நம்பிக்கையை வளர்த்து நாட்டுமக்களிடத்திலே அந்த ஒற்றுமையுணர்ச்சியை வளர்க்க பள்ளிவாசல்கள், மதரஸா போன்றவைகளுக்கு [illegible] வக்ப் போர்ட் சொத்துக்களின் உரிமைகளைப் பறித்துவிடாமல் காத்துக் கொடுக்கும்படி அமைச்சர் பெருமக்களை நான் மிகவும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கின்றேன்.

அது மட்டுமல்ல, [illegible] அந்த குத்தகை கொடுக்க வேண்டியவர்களுக்கெல்லாம் [illegible] விலக்கு அளிக்கப்பட்டு ஏழை குத்தகைதாரர்களுக்கு அவர்களுக்கெல்லாம் நிம்மதி [illegible] செய்திருப்பதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் விவசாயிகளிலே நிம்மதி ஏற்படும் [illegible] 4 ஏக்கர், 5 ஏக்கர் கூட [illegible] இருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வைத்திருப்பவர்கள் இருக்கிறார்கள். [illegible] உள்ள விவசாயிகளில் வேண்டுமானால் [illegible] பட்டத்தில் [illegible] செய்பவர்கள். அவர்களது சிலர் வெளிநாடுகளில் தொழில் [illegible] பெண்களும், மற்றும் விதவை குடும்பத்தில் [illegible] இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களாகவும் [illegible] இருக்கிறார்கள். அந்த விவசாயிகளுக்கு இந்த [illegible] அளிக்கும்பொழுது [illegible] பாதுகாப்பு அளிக்கப்பட பாதிக்கும் [illegible] சிறு விவசாயிகளுக்கு வேண்டும். [illegible] துறை சொல்லும் விஷயங்கள் தங்கள் [illegible] சிறு நில உடமையாளர்களுக்குப் இருக்கின்றன. [illegible] அவர்கள் கட்ட வேண்டிய நில பாதுகாப்பு [illegible] முறையில் அரசு ஆலோசிக்க [illegible] விரும்பிக் கேட்டுக் வேண்டுகோள் [illegible] வேண்டி கொள்கிறேன்.

[illegible] அளிக்கும் திட்டமிருக்கிறது. [illegible] பெரும் பணம் பெறவிருப்பது [illegible] என்றும் அதிகமாகப் பெற [illegible] அவர்கள் கூடச் சொன்னார்கள். [illegible] வேண்டுமானால் அவர்களுடைய அதை [illegible] அந்தந்தத் துறைகளிலே வரி ஆலோசனையையும் [illegible]

போடலாம் என்று பார்த்து அவைகளை வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே கடைசியாக மாநில சுயாட்சி பற்றி குறிப்பிட விரும்புகிறேன். சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் இல்லாமல் ஒருபால் தாழ்ந்திருக்கிறது. வடக்கே அதாவது மத்தியில் அரசாங்கம் உயர்ந்திருக்கிறது. அதைச் சமமாக ஆக்கப்பட வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சரவர்கள் அழகாக விளக்கியிருக்கிறார்கள். மாநில உரிமைகளை, பிரிவினை படாத முறையில் சுயாட்சியைப் பெற்று மக்களுக்கு நல்வாழ்வளிக்கவும், இங்கேயிருப்பவர்கள் சாதாரண முனிசிபாலிட்டி, பஞ்சாயத்து போர்டுகள் போலல்லாமல் பல கோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற உரிமையோடு உரிமைகளைப் பெறக்கூடிய மாநில சுயாட்சியை வரவேற்று இந்த வாய்ப்பை அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

*திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாற்றுத் தலைவரவர்களே, 1972—73-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய சில வார்த்தைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் 'It is a radical Budget' என்று சொல்லலாம். இது ஒரு முற்போக்கான நிதிநிலை அறிக்கையாக இன்றைக்குத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டதைப்போல் "சமதர்மம் என்றால் வெறும் பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; சமுதாய நிலைமையிலும் மாற்றங்கள் பூத்துக் குலுங்கிட வேண்டும்" என்கின்ற அளவில் இந்த அறிக்கை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இன்றைக்கு நம்முடைய தமிழகத்திலே ஏற்பட்டிருக்கும் பல்வேறு மாற்றங்களைப் பார்க்கும் நோக்கில் இந்த நிதிநிலை அறிக்கை எவ்வளவு முற்போக்கானது என்பதை நாம் நிச்சயமாக உணர முடியும்.

நில உச்சவரம்பை 15 ஏக்கராகவும், குடும்பத்திற்கு 60 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்றிருந்ததை 40 ஏக்கர் என்பதாக





மாற்றியமைத்தும், பின்தங்கியோர் நலக்குழுவும், குடிசை மாற்று வாரியமும், பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கான இல்லங்களை அமைத்திருப்பதும் இப்படிப்பட்ட பல்வேறு மாற்றங்கள் செய்திருப்பது நம்முடைய கழக ஆட்சியிலே என்பதை நான் தெளிவாகக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அதைப் போலவே இன்றைக்கு 1972—73 ஆம் ஆண்டில் அரிசன வகுப்பு மக்களுக்காக 8.41 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும் நம்முடைய கழக ஆட்சியிலேதான் என்பதைத் தெளிவாக நான் எடுத்துச் சொல்லி விட்டு, இப்படிப்பட்ட பல்வேறு மாற்றங்களெல்லாம் சமுதாயத்திலே கண்திட விரும்பும் இந்த அரசு உண்மையிலேயே சமதர்ம சமுதாயத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி பல்வேறு பத்திரிகைகளெல்லாம் வரவேற்று எழுதியிருப்பதைப் பார்க்கிறோம். குறிப்பாக, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை இந்த நிதிநிலை அறிக்கையை மிகவும் நல்ல முறையில் வரவேற்று எழுதியிருக்கிறது. அந்தப் பத்திரிகை நம்முடைய பத்திரிகை அல்ல, அல்லது கழக அரசு சார்புடைய பத்திரிகை அல்ல. அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'Surplus budgets are a rar these days and the Tamil Nadu Chief Minister, Mr. Karunanitl deserves kudos for presenting a surplus budget for the State for 1972–73.'

என்கின்ற அளவிற்கு இந்த உபரி நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்ததற்காக நம்முடைய முதல்வரவர்களை அந்தப் பத்திரிகையின் தலையங்கம் வெகுவாகப் பாராட்டி வரவேற்கின்றது என்றால் எந்த அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கை மிகவும் சிறப்புடையதாக இருக்கிறது என்பதைப்பற்றி நான் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன்.

அந்த அளவுக்கு இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கை தமிழகத்தில் எல்லாத் தரப்பு மக்களாலும் வரவேற்கப்படக் கூடிய நிலையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

குறிப்பாக, நிதிநிலை அறிக்கை என்று சொன்னால் என்ன வரிகள் வருமோ என்று மக்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களுடைய பயத்தை நீக்குகின்ற முறையில் சாதாரண ஏழை, பாட்டாளி மக்களுடைய வாழ்க்கைக்கு வழி வகுக்கும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் போடப்பட்டிருக்கும் வரிகள் சாமானியர்களைத் தாக்காது. வரிகளே இல்லாத பட்ஜெட்டைச் சமர்ப்பிக்கிறேன் என்று சொன்னவர்கள் எல்லாம் என்ன ஆனார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இங்கிலாந்து நாட்டில் 1874-ம் ஆண்டு பிரதமர் கிளாட்ஸ்டன் (Gladstone) தேர்தலில் போட்டியிட்டபோது 'நான் வரியே இல்லாமல் ஆட்சி நடத்துவேன், மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால்' என்று சொன்னார். அந்த நாட்டு மக்கள் அரசியல் தெளிவு படைத்தவர்கள். வரியே இல்லாமல் நாட்டை ஆள முடியாது என்பதை உணர்ந்து அந்தத் தேர்தலில் அவரைத் தோற்கடித்திருக்கிறார்கள். வரியே இல்லாமல் நாட்டை ஆள முடியாது; அதிக நெருக்கடி தாங்கக் கூடியவர்கள் மீது வரி விதிப்பதுதான் அரசியலில் சிறந்த பண்பாக இருக்க முடியும். அந்த வகையில் இந்த பட்ஜெட் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

இதிலே பல்வேறு நல்ல அம்சங்கள் இருப்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, மீண்டும் ஒரு பால் பண்ணையைத் தமிழகத்தில் நிறுவ முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது. அது மக்களுக்கெல்லாம் உதவி புரியக் கூடிய திட்டமாக அமையும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் கூட அதிக அளவில் பால் உற்பத்தி ஆகிறது. ஆனால் அதைக் கொண்டு வருவதற்குப் போதிய வசதிகள் இல்லை. அந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுகிறேன்.

ஊராட்சி மருந்தகங்களில் 200-க்கு மேற்பட்டவற்றை அரசு ஏற்றுக்கொள்ள முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதிவசதி அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். உணவுப் பொருள் வாங்கி வழங்கும் கழகம் (சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்) மூலம் உணவுப் பொருள்களை வாங்கி வைத்து தேவையான நேரத்தில் கொடுத்து உதவ முன்வந்திருப்பது



விலைவாசியை ஓரளவு கட்டுப்படுத்த உதவும். உழவர் பெருங்குடி மக்களுக்காக கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது பாராட்டுக்குரியது. குறிப்பாக இன்று விவசாயிகள் பல்வேறு துறைகளில் கடன் பெறுகிறார்கள். அதன் மூலம் தொல்லைகளுக்கு உள்ளாகிறார்கள். கூட்டுறவுத் துறையிடமிருந்து கடன் பெறுகிறார்கள். [illegible] மிருந்து கடன் பெறுகி கடன் பெறுகிறார்கள். [illegible] கடன் பெறுகிறார்கள். றார்கள். மற்றும் பல்வேறு [illegible] முறையில் கடன் பெற வழி இதற்குப் பதிலாக [illegible] கேட்டுக் கொள்கிறேன். வகைகளைக் [illegible] பற்றி ஆராய்வதற்காக [illegible] நிறைகளை ஆராய்ந்து [illegible] கேட்டுக் கொள் நிவர்த்திக்க [illegible] கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் முக்கியமாகக் குறிப்பிட்டிருப்பது மாநில சுயாட்சி பற்றிக் குறிப்பிட்டிருப்பதாகும். மாநில சுயாட்சி பெற்றால்தான் மாநிலத்தில் இருக்கின்ற மக்களுக்கெல்லாம் நல்ல முறையில் [illegible] முறையில் முன்னேற்றம் கண்டிட [illegible] அனைவரும் இன்றைக்கு [illegible] மாநில சுயாட்சி என்பது ஒத்துக் கொள்ளப்பட்டு [illegible] மட்டுமல்லாமல் எல்லா தமிழகத்தின் [illegible] கோரிக்கையாக [illegible] கோரிக்கையாகவும் இருந்து வருவதைப் மாநிலங்களை [illegible] சட்ட மன்றத்தில் கூட பார்த்துக் கொண்டிருக்கிறோம். [illegible] தமிழக முதல்வர் எதிர்க் கட்சி [illegible] போல் நீங்களும் தைரியம் அளிக்க [illegible] குறிப்பிட்டிருக்கிறார்கள். பெற்ற [illegible] காங்கிரஸ் கட்சியைச் மாநில [illegible] அந்த அளவுக்கு சேர்ந்தவர்கள் [illegible] மாநில சுயாட்சிக் கோரிக்கை [illegible] மாநிலங்கள் எல்லாம் கோரிக்கையை [illegible] எதற்கெடுத்தாலும் எப்போதும் மத்திய அரசாங்கத்தை நோக்கி [illegible] இருப்பதால்தான் மாநிலங்களுடைய நிதி [illegible] என்பதை மிகத் தெளிவாக அரசியல் உரிமை [illegible] மேலவை எதிர்க் கட்சித் தலைவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். [illegible] அவர்கள் கூட [illegible] எந்தெந்த நேரத்தில் பாதிக்கப்படுகிறது மாநிலங்களுடைய உரிமை எந்தெந்த

என்று சொல்லும்போது, நிதியை ஒதுக்குகின்ற நேரத்திலும், திட்டங்களைத் தீட்டுகின்ற நேரத்திலும், முன்னேற்றத்திற்கான காரியங்களைச் செய்கின்ற நேரத்திலும் மாநிலத்தின் மாநில உரிமை பறிக்கப்படுகிறது என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூடப் பலமுறை சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். 'மாநிலங்கள் கம்பவுண்டர் போன்ற நிலைமையில் இருக்கின்றன. மத்திய அரசாங்கம் டாக்டர் நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றது. டாக்டர் எழுதிக் கொடுக்கின்ற மருந்தை எடுத்துக் கொடுக்கும் கம்பவுண்டர்களாகத் தான் மாநிலங்கள் இருக்கின்றன' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை மாற வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் வழியில் வந்த நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பதை வற்புறுத்திச் சொல்லி வருகிறார்கள். அதைப் பிரிவினை வாதம் என்று திரித்துக் கூறினால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், நாங்கள் பிரிவினை கோருகிறோம் என்று யாராவது சொன்னால் நாங்கள் வழக்குப் போடுவோம் என்று கலைஞர் அவர்கள் மிகத் தெளிவோடு சொல்லி இருக்கிறார்கள். இந்த நோக்கத்தில் எந்தவித மாசையும் கற்பிக்க வேண்டாமென்று மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் நம்முடைய மாநில சுயாட்சிக் கோரிக்கை தேவையான ஒன்றாகும். மாநிலங்கள் அதிக அதிகாரம் பெற்று அதிக வருவாயைப் பெற்றால்தான் மாநிலத்தின் நிலையை நல்ல முறையில் உயர்த்த முடியும். இறுதியாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967–68-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்ட சில வரிகளை இந்த மாமன்றத்தின் முன் படிக்க விரும்புகிறேன்.

“மாநிலங்களின் வளர்ச்சிக்காக வாதாடுவது நாட்டு ஒற்றுமையைக் கெடுத்துவிடும் என்று கிலியூட்டும் பேச்சு கிளப்பிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. மாநில-மத்திய அரசுத்



தொடர்புகள் பற்றிய விதிகளும், முறைகளும் உருவாக்கப்பட்ட போது இருந்துவந்த நிலைமைகள் வெகுவாக இன்று மாறி விட்டிருக்கின்றன. இந்திய அரசியல் சட்டம் தீட்டப்பட்ட போது எதிர்பார்த்திருக்கவே முடியாத பல நிகழ்ச்சிகளும் நினைப்புகளும் தோன்றிவிட்டன. இந்திய அரசியல் சட்டத்தின் விதிகளின்படி ஏற்கனவே பெருமளவு அதிகாரம் மத்திய அரசிடம் குவிந்து விட்டிருக்கிறது. இத்துடன் அரசியல் சட்டம் தீட்டப் பட்டபோது எதிர்பார்த்திராத புதிய துறை ஒன்றின் மூலம், மத்திய அரசின் மேலதிகார நிலை மேலும் வளர்ந்து, மாநில நிலையை மிகவும் கவலைக்குரியதாக்கி இருக்கிறது. அந்தத் துறைதான், திட்டமிடும் துறை. இதற்கான நிதி திரட்டும் முறை, பங்கிடும் வகை, நிதியைச் செலவிடும் விதம் ஆகிய அனைத்திலும் மத்திய அரசு பெற்றுள்ள அதிகாரம், மாநில அரசினை 'கையேந்தும்' நிலைக்குக் கொண்டு வந்து விட்டிருப்பதனை உணராதார் இல்லை. கட்சிக் கட்டுப்பாடு காரணமாகச் சிலர் இது குறித்துப் பேசத் தயங்கிடினும், முற்றிலும் பொருளாதார நோக்குடன் இந்தப் பிரச்சினையைக் கவனிப்போர், எந்தக் கட்சியினர் எனினும் கருத்துத் தெரிவித்துள்ளனர்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நல்ல கொள்கையை, எல்லோரையும் வாழ வைக்கும் கொள்கையை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாற்றுக் கட்சியில் இருப்பவர்கள் நிச்சயமாக இதைப் பற்றித் தீவிரமாகச் சிந்திப்பார்கள் என்று கருதுகிறேன். இறுதியாக, நம்முடைய கழக ஆட்சிக்கும், காங்கிரஸ் ஆட்சிக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்பவர்களுக்கு ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்லி உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தோனேஷியாவிலுள்ள ஒரு விவசாயியைப் பார்த்து ஒரு பத்திரிகை நிருபர் கேட்டாராம்—'நீங்கள் சுகர்னோவின் ஆட்சிக்கும் இப்போது இருக்கின்ற சுகர்தோவின் ஆட்சிக்கும் இடையே என்ன வித்தியாசத்தைக் காண்கிறீர்கள்?' என்று. அந்த விவசாயி குறிப்பாகச் சொன்னாராம்—'நாங்கள் சுகர்னோவின் ஆட்சிக்கும், சுகர்தோவின் ஆட்சிக்கும் இடையே ஒரே ஒரு வித்தியாசத்தைத் தான் பார்க்கிறோம். விவசாயிகள் இன்றைக்கு அதிகமான அளவுக்கு உரத்தைப் பெறுகின்ற சூழ்நிலை இருக்கிறது' என்று

[திரு. தோப்பூர் திருவேங்கடம்] [1972 மார்ச் 6

சொன்னேனும். அதைப் போலவே காங்கிரஸ் ஆட்சிக்கும் கழக ஆட்சிக்கு இடையே இருக்கின்ற வித்தியாசம் உழவர்கள் இன்று தேவையான அளவுக்கு [illegible] பெறுகிறார்கள். அவ்வாறு தேவையான உரத்தை [illegible] பெருக்கக்கூடிய நல்ல சூழ்நிலை இப்போது இருக்கிறது. [illegible] விவசாயத் துறையில் நல்ல முன்னேற்றத்தைக் [illegible] கழக ஆட்சியில்தான் என்பது [illegible]. இப்படி எல்லா தரப்பு மக்களின் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு இந்த பட்ஜெட்டைத் தயாரித்திருப்பதைப் பார்த்து வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. பாலையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கக்கூடிய 1972-73ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் பற்றி [illegible] போன்ற பத்திரிக்கைகள் மிகவும் பாராட்டி எழுதியிருப்பதாக ஆளும் கட்சியை சார்ந்த [illegible] சொன்னார்கள், இதைப் போல் இந்தியன் [illegible] தென் இந்திய வர்த்தகச் சபைத் தலைவர் [illegible] ஷெரீபாக இருக்கும் திரு. [illegible] இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டியிருக்கிறார்கள். [illegible] செட்டியார் அவர்கள் [illegible] தமிழகத்தின் முதல் அமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் அவரை மிகவும் [illegible] பாராட்டியிருக்கிறார்கள். அதே போல் ஆந்திர வர்த்தகச் சபைத் தலைவர் அவர்களும் இந்த நிதிநிலை அறிக்கையினை மிகவும் [illegible] பாராட்டியிருக்கிறார்கள் என்று [illegible]. ஆந்திரா [illegible] வர்த்தகச் சங்க தலைவர் அவர்களும் [illegible] ஷெரீபாக இருக்கிறவரும், [illegible] என்பது இன்றையதினம் இந்த நாட்டில் [illegible] கோடானுகோடி மக்களுக்கும் தெரியும். [illegible] தமிழகத்தைப் பொறுத்தவரையில் [illegible] பொறுத்த வரையிலும் [illegible] முதலாளிகளாக [illegible] பெரிய [illegible] என்று தெரியும். [illegible] நமக்கு [illegible] இந்த நிதிநிலை அறிக்கையினைப் பாராட்டுகிறார்கள் என்றால் இந்த அரசு அந்தக் கோடீஸ்வரர்



1972 மார்ச் 6] [திரு. ஏ. பாலையா]

களுடைய, முதலாளிகளுடைய, கருத்தை அறிந்து இந்த நிதிநிலை அறிக்கையினைத் தயாரித்திருக்கிறதா அல்லது இந்த அரசு அவர்களது கொள்கையினை ஏற்று நிதிநிலை அறிக்கையினைத் தயாரித்திருக்கிறதா என்ற ஒரு ஐயப்பாடு நமக்கு எழுகிறது.

அதே நேரத்தில் இந்த நாட்டிலுள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம், மக்களின் நலன்களைப் பேணுகிற, மக்களின் நலன்களில் கண்ணுங்கருத்துமாகச் செயல்படுகிற தலைவர்கள் எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தவிதமான விசேஷத் தன்மையும் இல்லை, மக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய எந்தவிதமான திட்டங்களும் இதில் இல்லை என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். இந்த இரண்டு கருத்துக்களையும் நாம் எடுத்துப் பார்க்கிற நேரத்தில் இந்த நிதிநிலை அறிக்கை பெரிய செல்வந்தர்களும், பெரிய முதலாளிகளும், தொழில் அதிபர்களும் பாராட்டுகிற முறையில்தான் அமைந்திருக்கிறதே தவிர ஏழை எளிய மக்களின் வாழ்க்கை வளம் பெற அமைந்ததாக இந்த நிதிநிலை அறிக்கை இல்லை என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தை மிகவும் வலியுறுத்திச் சொல்கிறார்கள். முதலாளிகள் மட்டும் பாராட்டுகிற அறிக்கை என்று சொல்கிறார்கள். இதே சட்டமன்றத்தில்தான் நேற்று முன் தினம் மணலி கந்தசாமி அவர்கள் இதை ஆதரித்து, இந்த பட்ஜெட்டைப் பொறுத்த வரையில் நல்லதொரு பட்ஜெட் என்று சொன்னார்கள். அவர்கள் முதலாளியாக எப்போது ஆனார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. பாலையா : மணலி கந்தசாமி அவர்கள் ஆதரித்திருக்கலாம். ஆனால் அவர்கள் சார்ந்துள்ள கட்சியின் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையினை எதிர்த்திருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் கங்கையையும் காவிரியையும் இணைக்கிற பணியினை இந்த அரசு ஏற்று இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பணியினை நாம் பாராட்டுகிறோம். கங்கையையும் காவிரியையும் இணைக்கிற பணி

நிறைவேற்றப்பட்டால் அண்டை மாநிலங்களுக்கு இடையே இருக்கிற தண்ணீர் தாவாக்கள் தீர்க்கப்படும் என்று கருதப் படுகிறது. கங்கையும் காவிரியும் இணைக்கப்படுவது அத்தகைய தாவாக்கள் வராமல் தவிர்க்கப்படுவதற்கு இயற்கையாக அமையக் கூடிய ஒன்று. கங்கையும் காவிரியும் இணைவது எப்படி வரவேற்க தக்கதோ அதேபோல் மத்திய அரசும் மாநில அரசும் ஒன்றாக இணைந்து செயல்படுவது வரவேற்புக்குரியதே. அப்படி இணைந்து செயல்படுமானால் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே நிலவும் எந்தவிதமான கருத்து வேறுபாடுக்கும் இடமே இருக்காது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அரசுக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தப்படியாக, இன்றையதினம் நாட்டிலே இருக்கிற விலைவாசி பற்றி நம்முடைய நிதிநிலை அறிக்கையில் சொல்லப் பட்டிருக்கிறது. விலைவாசி பற்றி சொல்கிறநேரத்தில், தமிழக அரசு தேர்தல் காலத்து வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட வேண்டியவை என்று கருதாமல் அவைகளைக் கல் மேல் எழுத் தெனக் கொண்டு இயன்ற வரையில் கடமை ஆற்றி வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

நாட்டில் இருக்கிற விலைவாசிகளைப் பார்க்கிற நேரத்தில் ஏழை எளிய மக்கள் வாங்குகிற அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் ஏறிக்கொண்டே இருக்கின்ற நிலைமையினைத்தான் நாம் காண்கிறோம். தேர்தல் காலத்தில் வாக்குறுதிகள் பல அளிக்கப் பட்டன. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விலைவாசிகளைக் குறைப்போம் என்று சொன்னார்கள், ஆனால் விலைவாசிகளைக் குறைப்போம் என்று அவர்கள் அளித்த வாக்குறுதிப்படி விலைவாசிகளைக் குறைப்பதற்கு இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இன்று தமிழகத்தில் அரிசியின் விலை மிக உச்ச கட்டத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறது. தேர்தல் காலத்தில் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** என்ன விலை? எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி படி ஒன்றுக்கு ரூ. 2.50 வரையில் விற்கப்படுகிறது.

தேர்தல் காலத்தில் சொன்னார்கள். ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவோம் என்று. பின், படிப்படியாக மூன்று படி அரிசி



போடுவோம் என்று சொன்னார்கள். விலைவாசியேற்றம் காரணமாக ஒரு படி அரிசிக்கு மூன்று ரூபாய் என்ற நிலைமை இன்றையதினம் உருவாகியிருக்கிறது. மக்கள் எல்லாம் இதுபற்றி அரசைக் கேட்கிற நேரத்தில் இன்றயதினம் அரசு சொல்கிறது விலைவாசி பற்றிய பிரச்னை அனைத்து இந்தியப் பிரச்னை, ஆகவே இதை அனைத்து இந்திய ரீதியில்தான் தீர்க்க முடியும் என்று சொல் கிறார்கள். தேர்தல் காலத்தில் அவர்கள் சொல்கிற நேரத்தில் விலைவாசிப் பிரச்னை என்பது ஒரு அனைத்து இந்தியப் பிரச்னையாக இருக்கிறது ஆகவே மாநில அரசால் அந்தப் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கவேண்டும். மக்களை ஏமாற்றி வோட்டு வாங்குவதற்காக நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விலைவாசிகளைக் குறைப்போம் என்று தேர்தல் காலத்தில் சொல்லிவிட்டு இன்று தட்டிக்கழிக்கிற முறையில்தான் அது ஒரு அனைத்து இந்தியப் பிரச்னை என்று" மக்கள் மத்தியில் இன்று பிரசாரம் செய்யப்படுகிறது. இந்த நிலை மாறவேண்டும்.

அடுத்தப்படியாக, தொழில் வளம் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. பொதுவாக தமிழகத்தில் குமரி மாவட்டம் தொழில் முன்னேற்றத்தில் மிகவும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. அது புறக்கணிக்கப்பட்ட ஒரு மாவட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. தமிழக அரசை நான் ஒன்று கேட்டுக்கொள்வேன் குமரி மாவட்டத்தை எந்த அரசியல் நோக்கத்திற்காக வேண்டியும் புறக்கணிக்கக்கூடாது என்றும் குமரி மாவட்டம் தொழில் வளர்ச்சி பெறுவதற்கு இந்த அரசு எல்லாவிதமான ஆதரவையும் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்

சமீபத்தில் மத்திய அரசிடம் ஒரு திட்டம் இருப்பதாக அறிகிறேன். சுமார் 20 கோடி ரூபாய் அளவில் டைட்டானியம் டை-ஆக்ஸைட் தொழிற்சாலை ஒன்றை தமிழகத்தில் நிறுவ மத்திய அரசு திட்டமிட்டிருப்பதாக அறிகிறேன். அந்த டைட்டானியம் டை-ஆக்ஸைட் தொழிற்சாலை நிறுவுவதற்கு தமிழக அரசு குறைந்த நிரக்கில் மின்சாரம் கொடுப்பதாக இருந்தால் தமிழகத்தில் அந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே அந்த தொழிற்சாலைக்கு குறைந்த நிரக்கில் மின்சாரம் கொடுத்து அந்தத் தொழிற்சாலையை மண்

வளம் நிறைந்த மணவாளக்குறிச்சியில் நிறுவுமாறு நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு பற்றி இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. "பிச்சைக்காரர்கள் இல்லாத ஒரு நிலை தமிழகத்தில் ஏற்படவேண்டும்" என்று இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அது வரவேற்கத்தக்க ஒன்றாகும். பிச்சைக்காரர்கள் இல்லாத தமிழகத்தைக் காண்பதற்கு நாம் ஆசைப்படுகிறோம், பூரிப்பு அடைகிறோம். பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்கு தமிழக முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். பிச்சைக்காரர்கள் மறுவாழ்விற்காக நிதி வசூல் செய்யவேண்டுமென்று மக்களைப் பார்த்துக் கேட்டார்கள். அதே நேரத்தில் நிதி நிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற வாசகங்களைப் பார்த்தால், 1 கோடி ரூபாய், முதல்வர் அவர்கள் வேண்டுகோளை ஏற்று மக்கள் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு அளித்து இருக்கிறார்கள் என்று இருக்கிறது. ஆனால் நான் சொல்கிறேன், முதல்வர் அவர்கள் வேண்டுகோளை ஏற்று 1 கோடி ரூபாய் அல்ல, இன்றைய தினம் பல கோடி ரூபாய் மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கப்பட்ட பணம் இந்த நிதியிலே கொண்டுவரப்படவில்லை. உதாரணமாக இந்த நிதியைப் பெறுவதற்காக வந்த அதிகாரிகள் ரசீது கொடுக்காமலேயே பணத்தைப் பெற்று இருக்கிறார்கள். இந்த பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியைப் பெறுவதற்காக 50 பைசா மதிப்புள்ள அட்டைகளை அரசு வெளியிட்டது. அந்த அட்டைகளைக் கொடுத்து பணம் வசூல் செய்யவேண்டுமென்ற விதி இருந்தது. ஆனால் அதிகாரிகள் அந்த அட்டையை மக்களிடம் காட்டிக் காட்டியே பணம் வசூலித்தார்களே தவிர, அட்டையை மக்களிடையே சேர்ப்பிக்கவில்லை. அதற்குப் பதிலாக, பணம் சேரவேண்டிய இடத்தில் சேர்க்கவில்லை. ஆனால் அரசுக் கணக்கில் பணம் வந்துசேரவில்லை. இப்படி பல லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்கள் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி என்ற பெயரில் மோசடி செய்யப்பட்டிருக்கிறது என்ற விபரத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது). இரண்டு நிமிடம் தாருங்கள்.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கோடிக்கணக்கான ரூபாய்களா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்): பேசக்கூடிய உறுப்பினர்கள் நிரம்ப இருக்கிறார்கள். அருள் கூர்ந்து உறுப்பினர்கள் ஒத்துழைக்கவேண்டும்.

திரு. ஏ. பாலையா: இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். அடுத்தபடியாக நிதிநிலை அறிக்கையிலே பஞ்சாயத்து யூனியன் பராமரிக்கிற சாலைகளில் இப்போது ஆயிரம் மைல் சாலைகளை அரசு மேற்கொள்வதாக அறிவித்து இருக்கக்கூடியது வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஆனால், இன்றையதினம் பஞ்சாயத்து யூனியன்களால் பராமரிக்கப்படும் சாலைகள் அனைத்தும் வாகன போக்குவரத்துக்கு ஏற்றவகையில் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. அரசு பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமான மானியங்கள் கொடுத்து, பஞ்சாயத்து யூனியன்கள் பராமரிக்கிற சாலைகள் நல்ல முறையில் பராமரிப்பதற்கு வழிவகை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி மன்றங்கள் இதற்கு முன்னால் 1½ ரூபாய் ஊராக தீர்வை மேல்வரியாக வசூலித்து வந்தது. இன்றையதினம் 2½ ரூபாய் ஊராக தீர்வை மேல் வரி வசூலிப்பதற்கு அரசு அனுமதி வழங்கியிருப்பதால் 2½ ரூபாய் வசூலிப்பதற்கு ஏழை எளிய விவசாய மக்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அந்த 2½ ரூபாய் வசூலிப்பதை நிறுத்தி வைப்பதற்கு அரசு தேவையான ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பஞ்சாயத்துக்கள் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு பல்வேறு குறைபாடுகள் இருந்து கொண்டேயிருக்கின்றன. முன்னால் கேரள அரசில் இருந்த நேரத்தில் அங்கே இயங்கிக் கொண்டிருந்த பஞ்சாயத்துக்களுக்கு (House tax matching grant) வீட்டு வரிக்குச் சமமான கிராண்ட் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இன்று பிரிக்கப்பட்டு செயல்பட்டு வரும் (House tax matching பஞ்சாயத்துக்களுக்கு வீட்டு வரி மானியம் grant) கொடுக்கப்படவில்லை. வீட்டு வரி மானியம் கொடுக்காத

காரணத்தால், அந்த பஞ்சாயத்துக்களின் நிதிநிலை மிகவும் மோசமாகியிருக்கிறது. பஞ்சாயத்துக்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கமுடியாத நிலைமை கூட ஏற்பட்டிருக்கிறது. மின் கட்டணம் செலுத்த முடியாத நிலைமை இருக்கிறது. மக்களுக்கு பணிகளான அபிவிருத்தி வேலைகள் செய்வதற்கு முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கும் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்துக்கள் என்ற பெயரிலே இயங்கிக் கொண்டிருக்கின்றனவே தவிர, பஞ்சாயத்துக்களால் மக்களுக்கு நலன் அளிக்கக் கூடிய திட்டங்கள் செய்யமுடியாத நிலைமையிருந்துகொண்டே இருக்கின்றன. அரசு ஒன்றைக் கருத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்று அங்கே இயங்கிக்கொண்டிருக்கிற பஞ்சாயத்துக்களுக்கு (House tax matching grant) வீட்டு வரி மானியம் கொடுக்கவேண்டும். அல்லது பழையமுறையிலேயே அந்தப் பஞ்சாயத்துக்களை மாற்றியமைப்பதற்கு இந்த அரசு தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கை மீதான என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சட்டப் பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1972-73-ம் ஆண்டுக்காக சமர்ப்பித்து இருக்கின்ற நிதிநிலை அறிக்கையை வரவேற்று, பாராட்டி என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல விழைகிறேன்.

நம்முடைய தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களின் பேருரையில் சமதர்மம் படைத்த சமுதாயத்தை உருவாக்கவும், ஏற்றத் தாழ்வற்ற பொருளாதார நற்நிலையை நிலைநாட்டவும், நமது நாட்டில் பூத்துக்குலுங்குகிற புரட்சிகரமான திட்டங்களை இந்த அரசாங்கம் வழி நடத்தவும் நல்ல பல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் படைத்து இருப்பதைப் பாராட்டி, வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்பு, இந்த நாட்டில் எந்த அளவுக்கு உணவுப் பிரச்னை தாண்டவமாடிற்று. அரிசிக்காக தாய்மார்கள், பெரியவர்கள் எத்தனை நாள் தவம் கிடந்தார்கள்



என்பதை மறந்துவிட்டு, ஏதோ பேசியிருக்கிறார்கள் என்று எண்ணும்போது, உள்ளபடியே நான் மெத்த வருத்தப்படுகிறேன்.

வேளாண்மையைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கம் பொறுப்பேற்றதற்குப்பிறகு, ஏர்முனையில் மிகுந்த அக்கறை காட்டி இருக்கிறது. கடன் வசதி அளிப்பதற்கு கவனம் செலுத்தியிருக்கிறது. பாசன வாய்ப்புகளை உருவாக்குவதில் மிகுந்த கவனம் செலுத்தியிருக்கிறது. உரங்கள் வழங்குவதற்கும், பயிர் பூச்சி கொல்லி மருந்து அளிப்பதற்கும் என்னென்ன ஏற்பாடுகளை செய்து இருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்கட்சி உறுப்பினர்கள் மறந்து விட்டார்கள் என்றே நான் கருதுகிறேன்.

மிகு பயன் தரும் வகைகள் 1971-72-ல் ஏறத்தாழ 59 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டது. நடப்பு ஆண்டில் 66 லட்சம் ஏக்கரில் பயிரிடுவதற்கு அரசாங்கம் வழிவகை செய்திருக்கிறது என்று எண்ணும்போது உள்ளபடியே நாமெல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நாட்டிலேயுள்ள விவசாயப்பெருங்குடி மக்கள் பாராட்டுகிறார்கள். வேளாண்மைத்துறையில் புதிய முறைகளைப் புகுத்த ஆங்காங்கு ஆராய்ச்சி நிலையங்களைத் துவக்கி, நல்ல புதிய வகைகளை கண்டுபிடிப்பதற்கும், அவற்றை விவசாயிகள் மூலம் அறிமுகப்படுத்துவதற்கும் இந்த அரசாங்கம் நல்ல முயற்சியெடுத்துக்கொண்டிருக்கிறது என்று கருதும்போது, மாண்புமிகு முதல்வர் அவர்களையும், விவசாய அமைச்சர் அவர்களையும், வேளாண்மைத் துறையையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்பு, 20 ஆண்டு காலம் ஆண்ட எதிர்கட்சிக்காரர்கள் 1966-ல் கொடுத்த கடன் தொகை ரூ. 31.41 கோடி தான். 1970-71-ல் நாம் கொடுத்த கடன் தொகை ரூ. 44.43 கோடியாகும். 1971-72-ல் நாம் கொடுத்த கடன் தொகை ரூ. 50 கோடியாகும். 1972-73-ல் நாம் 61 கோடி ரூபாயை கடன் வழங்குவதற்கு என்று ஏற்பாடு செய்து இருக்கிறோம் என்று எண்ணும்போதும், விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பயன் அடையப்போகிறார்கள் என்பதைப் பார்க்கும்போதும் உள்ளப்படியே நான் பூரிப்படைகிறேன்.

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1972 மார்ச் 6

நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பாசன வசதிக்காக 1966-67-ல் ரூ. 7.89 கோடி என்று இருந்ததை மாற்றி, 1971-72-ல் அதை ரூ. 14.23 கோடியாக்கி, இன்றைக்கு 1972-73-ல் அதை 14.23 கோடியாக மாற்றியதோடு மட்டுமல்லாமல், இந்த நாட்டில் விவசாயத்திற்கு அடிதளமாக இருக்கக்கூடிய பாசன வசதியைப் பெருக்குவதற்காக ஒவ்வொரு மாவட்டந்தோறும், கருத்தரங்குகளைத் துவக்கி, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில அளவில் உள்ள அதிகாரிப் பெருமக்கள் ஆகியவர்களை அழைத்துப் பேசி எந்த இடத்திலே அணை கட்டலாம், எந்தெந்த இடங்களில் வாய்க்கால்கள் அமைக்கலாம், எந்தெந்த ஏரிகளில் தூர் எடுக்கலாம் என்பதையெல்லாம் அறிந்து, அந்த அதிகாரிகளைக் கொண்டு அவற்றை துரிதமாக பரிசீலனை செய்ய வைத்து, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பல திட்டங்களை உருவாக்கி வருகிறார்கள். இத்தகைய சிரிய முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிற பொதுப் பணி துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு கரிகாலன் காலத்தில் செய்தது போல், பாசனத் துறையில் சிறப்பான பல திட்டங்களைப் போட்டு இருக்கிறது என்பதை எண்ணும்போது உள்ளபடியே நான் பெருமைப்படுகிறேன்.

அதேபோல் மின்சாரத்துறையை எடுத்துக்கொண்டால் இந்த அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்பு, வெள்ளைக்காரன் ஆண்ட காலம் முதல், அதற்குப் பிறகு அன்று காங்கிரஸ் ஆட்சி வரை, மின்சாரம் கண்டுபிடித்த காலம் முதல் 1966-67 வரை தமிழ் நாட்டில் ஏறத்தாழ 25,000 கிராமங்களுக்குத்தான் மின். இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

1967-ல் முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வர் ஆன பிறகு, 1971-72-ல் ஏறத்தாழ 50,900 கிராமங்கள் மின் வசதி பெற்றிருக்கின்றன என்றால், இந்த அரசு மின்சாரத் துறையில் எவ்வளவு அக்கறை காட்டியிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதேபோல், மின்சார பம்பு செட்டு இணைப்புக் கொடுப்பதிலும் மாபெரும் சாதனையைச் சாதித்து இருக்கிறது. 1966-67 வரை தாழ்த்தப் பட்ட மக்கள் குடியிருப்புகளுக்குக்



1972 மார்ச் 6] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

கடந்த கால அரசாங்கம் மின் இணைப்புக் கொடுத்தது 2,400 கிராமங்கள் தான். ஆனால் 72 வரையில் பார்த்தால் நம்முடைய தமிழக அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கியுள்ளது 15,600 கிராமங்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏழை எளிய மக்கள் முன்னேற்றத்திற்காக எவ்வளவு பாடு பட்டிருக்கிறது, எவ்வளவு அக்கறை காட்டியிருக்கிறது என்பதற்கு இது நல்ல ஆதாரமாக அமைகிறது என்று கருதுகிறேன்.

கிராமங்களுக்குச் சாலை இணைப்புச் செய்து கொடுத்தால்தான் விவசாய மக்கள் தங்கள் விவசாயப் பொருள்களை வேறு இடங்களுக்குக் கொண்டு போகவும், கழனியிலிருந்து வீட்டுக்குக் கொண்டு வரவும், சந்தைக்குக் கொண்டு போகவும் வசதியாக இருக்கும் என்பதை உணர்ந்து, பேருந்து செல்லும் ஊராட்சி ஒன்றியப் பாதைகளை 1,000 மைல் அளவில் ஏற்றுக் கொள்ள நல்லதொரு முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது. அதைப் பாராட்டி அதே நேரத்தில் என்னுடைய தொகுதியில் உப்பிட மங்களத்திலிருந்து பஞ்சப்பட்டி வரையில் செல்லும் சாலையை அரசாங்கமே ஏற்று நல்ல முறையில் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பாம்பாலத்தை ரூ. 5.33 கோடி செலவில் கட்ட இருப்பதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். டாக்டர் முதல்வர் அவர்கள் கிராம முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பதை உணர்ந்து, கிராம முன்னேற்றமே நாட்டிற்கு ஆணிவேர் என்பதை அறிந்து கிராமங்களெல்லாம் நகரங்கள் போல் அமையவேண்டும் என்ற சமதர்ம குறிக்கோளைக் கொண்டு கிராம முன்னேற்றத் திற்கான வழி வகைகளைச் செய்திருப்பதற்காக நாம் அவரைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

கிராமங்களில் சாலைகள் இல்லாமல் இருக்கக் கூடாது என்றும், குடி தண்ணீர் வசதி இருக்க வேண்டும் என்றும், மருத்துவ வசதி இருக்க வேண்டும் என்றும், சாக்கடைத் திட்டம் அமையவேண்டும் என்றும், நகரத்தில் உள்ளது போல் எல்லா வசதிகளும் வாய்ப்புக்களும் இருக்க வேண்டும் என்றும், டாக்டர் முதல்வர் அவர்கள் தன் நிதிநிலை அறிக்கையை நல்ல முறையில் உருவாக்கி யிருக்கிறார்கள். எல்லா கிராமங்களுக்கும், மின் வசதி, குடி நீர்

[திரு. பே. சௌந்தரபாண்டியன்] [1972 மார்ச் 6

வசதி, பள்ளிக்கூட வசதி, இன்னும் நல்ல பல திட்டங்களை உருவாக்கியதோடு, நல்ல முயற்சிகளையும் எடுத்து வருவதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின் மருத்துவ மனைகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்திருந்தும், இதுவரையில் அவை எடுக்கப்படவில்லை. நம்முடைய அரசாங்கம் இப்பொழுது இந்தக் கருத்தினை ஏற்றுக் கொண்டு, நடப்பு ஆண்டில் ஏறத்தாழ 45 மருத்துவ மனைகளை அரசாங்கமே ஏற்று நடத்தும் அளவுக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை முன் வந்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

இன்னொரு குறையையும் எடுத்து வைக்க விரும்புகிறேன். 1963-ம் ஆண்டில் நம்முடைய இந்திய அரசாங்கம், நம்முடைய தமிழ்நாட்டில் பெரிய அம்மை ஒழிப்புத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து அதில் 600 பணியாளர்கள் அம்மை குத்தும் பணிக்காக அமர்த்தப்பட்டு, 10 ஆண்டுக்காலம் அவர்கள் பணியாற்றியும் அத்தனை பேர்களும் இன்னமும் நிரந்தரம் ஆக்கப்படாமல் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி இறுதியில் பணியிலிருந்து நீக்கிவைக்கப்பட்டு ஒரு சில நாட்களுக்குப் பிறகு திரும்பவும் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். இப்படி இந்த 600 பணியாளர்களும் நிரந்தரமாக்கப்படாததால், ஆண்டுக் காண்டு, இந்த அம்மை குத்தும் பணியாளர்கள் இந்த நாட்டில் செத்துச் செத்துப் பிழைக்கும் சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பம் வருமானம் இன்றி தவிக்கும் சூழ்நிலை இருக்கிறது. தாங்கள் நிரந்தரம் ஆக்கப்பட வேண்டும் என்று ஆண்டுதோறும் அவர்கள் கூறிவருகிறார்கள். ஆனால் இந்தப் பிரச்சினைக்கும் மாநில அரசாங்கத்திற்கும் பொறுப்பு இல்லை என்பது எனக்குத் தெரியும். அத்தனை பேர்களும் மத்திய சர்க்காருடைய பணியாளர்கள். நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். நிரந்தரமாக்க வேண்டியது மத்திய அரசின் கடமை, பொறுப்பு. ஆனாலும் மாநில சர்க்கார் இப்படி அவதிப்படும் 600 பணியாளர்களையும், அவர்களது குடும்பங்களையும் காப்பாற்றும் முகத்தான் பெரிய அம்மை ஒழிப்புத் திட்டத்தில் இவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக்கேட்டுக் கொள்கிறேன்.



1972 மார்ச் 6] [திரு. பே. சௌந்தரபாண்டியன்]

நம்முடைய அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டபிறகு, கல்வித் துறையும் நல்ல முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. எத்தனை சதவிகிதம் படித்திருக்கிறோம் என்பதைவிட, என்னென்ன நல்ல திட்டங்களைப் புகுத்தியிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். டாக்டர் முதல்வர் அவர்கள் இதற்கென ஒரு நிபுணர் குழு அமைத்து இருப்பது பாராட்டுக்குரிய ஒன்று. இதன் மூலம் நாட்டிலுள்ள மாணவர்களின் கல்வித் தரத்தை என்னென்ன முறைகளில் உயர்த்தலாம் என்பதற்கான திட்டங்களை உருவாக்க வசதியாகச் செய்யப் பட்டிருக்கிறது. அதோடு, அயல் நாடுகளிலுள்ள தமிழ் அறிஞர்களை, வெளிநாடுகளில் அறிவு பெற்றவர்களை தமிழகத்திற்கு அழைத்து, அவர்களுடைய அறிவை தமிழ் நாட்டுக்கும் பயன்படுத்தும் வகையில் உதவித் தொகையளித்து, அவர்கள் பெற்ற அறிவை நாமும் பெற நல்லதொரு திட்டம் நடப்பு ஆண்டில் தீட்டியிருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் இந்த நாட்டில் இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு தொழில் வளர்ச்சி பெறவில்லை என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்று [illegible] தலைமையிலும், டாக்டர் கலைஞர் அவர்கள் [illegible] மத்திய சர்க்காரோடு வாதாடி, போராடி 1971-ம் ஆண்டு இறுதி வரையில் 40 அனுமதிக் கடிதங்களும், ஏறத்தாழ 45 உரிமங்களும் பெறுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் இதை மறந்து விட்டார்கள். இவையெல்லாம் நிதிநிலை அறிக்கையிலே தெரிகின்றன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல நம்முடைய அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு [illegible] மக்கள் வாழ வழியற்ற [illegible] என்று செய்யும் [illegible] வர்கள் நலனுக்காக [illegible] வேண்டும் [illegible] மறுவாழ்வு திட்டம் பணியின் [illegible] பொறுத்த என்பதை நாம் உணர வேண்டும். தமிழகத்தைப் [illegible] இருக்கிறார்கள். 6,000-க்கும் [illegible] வரையில் 60,000 பிச்சைக்காரர்கள் [illegible] பிச்சைக்காரர்கள் உலவிக் [illegible] மேற்கொண்டு [illegible] தொழுநோய் [illegible]

கொண்டிருக்கிறார்கள். இப்படிச் சமுதாயத்தின் சாக்கடைகளாக இருக்கும் பிச்சைக்காரர்களை மறுவாழ்வு பெறச் செய்து, நாட்டில் பிச்சைக்காரர்களே இல்லாத நிலையை உருவாக்க டாக்டர் கலைஞர் பெரு முயற்சி மேற்கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

இப்படி நல்ல பல திட்டங்களை நாட்டின் முன்னேற்றத்திற்காக உருவாக்கி, சமதர்ம பூங்காவாகப் பூத்துக் குலுங்கவும், ஏழை எளிய மக்கள் வாழ வகை செய்திருக்கும் இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பாராட்டி, வரவேற்று, போற்றிப் புகழ்ந்து விடைபெறுகிறேன், வணக்கம்.

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் தலைவர் அவர்களே, இந்த வரவு-செலவுக் கணக்கை நான் ஆதரிக்கிறேன்.

போன வருஷம் 15 கோடி வரையில் பற்றாக்குறையாக இருந்தது. அந்தப் பெரும் பளுவையும் நிரப்பி, மத்திய சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய 3 கோடி ரூபாய் கடனையும் கொடுத்து, 2.40 லட்சம் உபரியாகக் காட்டியிருப்பதை இந்தச் சர்க்காருக்கு நிதி நிர்வாகத்தில் எந்த அளவுக்கு திறமை இருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது என்று பாராட்டுகிறேன். அது மட்டுமல்லாமல், எந்த அளவுக்கு வருமானம் வந்த போதிலும், விவசாயத்திற்குப் போன வருஷத்தைவிட 15 லட்சம் அதிகப்படியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல. தொழிலுக்காக போன வருடம் 1971–72-ல் எவ்வளவு ஒதுக்கப்பட்டதோ, அதைவிட 35 லட்சம் ரூபாய் இந்த வருடம் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சமுதாய நல அபிவிருத்திக்குப் போன வருஷத்தைவிட இந்த வருடம் 35 லட்சம் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தொழில் அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, சமுதாய நல அபிவிருத்தி என்பதெல்லாம் போகப் போக, இந்தக் குறைவான ஒதுக்கீடு காரணமாக மிகவும் பாதிக்கப்படுகிறது.

அது மட்டுமல்ல. ஒவ்வொரு வருஷமும் தொழிலுக்கு இவ்வளவு பணம் என்று ஒதுக்குகிறோம். ஒதுக்கிய வருடத்தில் அந்த ஃபேக்டரியோ, தொழிற்சாலையோ உடனே ஓடுவதில்லை. பல





வருடங்கள் ஆகின்றன. அப்படி வருஷா வருஷம் ஒதுக்கும் பணமானது (Consolidated Fund) "கன்சாலிடேட்டட் ஃபண்டு" க்கு வருகிறதா? அந்தப் பணம் மறுபடி எவ்வாறு எடுத்துக்கொள்ளப்படுகிறது என்பதை பட்ஜெட்டின் மூலம் அறிய விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. லாட்டரியில் இந்த வருடம் எவ்வளவு வருமானம் வந்தது; அது என்னென்ன காரியத்துக்காக செலவு செய்யப்பட்டது என்ற அறிக்கை அவசியம் இருக்க வேண்டும். லாட்டரிச் சீட்டு வருமானம் இந்த பட்ஜெட்டில் சேர்க்கப் படவில்லை. இந்த பட்ஜெட்டில் அதை சேர்த்து, அது எவ்வாறு செலவழிக்கப்படுகிறது, என்னென்ன காரியங்களுக்காக செலவழிக்கப்படுகிறது என்பதையும் சொல்ல வேண்டும்.

தஞ்சாவூரில் காவேரி தண்ணீர் திட்டத்திற்கு ரூ. 40 கோடி வெளிநாடுகளிலிருந்து கடன் கேட்டோம். அது சாங்ஷன் செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ வாங்கவில்லை. என்ன காரணம் என்று பட்ஜெட்டில் தெரியப்படுத்தி இருந்தால் மிகவும் நலமாக இருக்கும்.

ஏப்ரல் மாதத்திலிருந்து திட்டங்களுக்காக 'ஓவர் டிராப்ட்' கொடுக்க மாட்டோம் என்று மத்திய சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள். சென்ற தேர்தலின்போது 'கரிபி ஹடாவோ' 'வறுமையை ஒழிப்போம்' என்ற கோஷம். இப்போது புதிய கோஷம்—'செல்ஃப் ரிலையன்ஸ்' (Self-reliance) ஏனென்றால் அமெரிக்கா உதவியை நிறுத்தி விட்டது. கடன் கொடுப்பதில்லை. ஆனாலும் உலக பாங்க் தலைவர்கள் வரும்போது எதாவது கிடைக்காதா என்று பார்க்கலாம். அப்படிப் பார்க்கும் சமயத்தில் நம் மாநில சர்க்கார் 'ஓவர் டிராப்ட்' வாங்கக் கூடாது. திட்டங்களுக்காக மாநிலங்கள் மிகு வரி போட்டு பணம் ஒதுக்க வேண்டும் என்று சொல்வது சரியா? எந்த அளவுக்கு பணம் யாரிடத்தில் வாங்குவது? ஏற்கனவே அதிகமாக வரி போட்டாயிற்றே என்ற முறையில் 'ஓவர் டிராப்ட்' வாங்கக் கூடாது என்று சொன்னதை எதிர்த்திருக்க வேண்டும்.

சர்க்கார் வரவு-செலவுக் கணக்கில் 1967-ம் வருடத்திலிருந்து 25 சாதனைகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அந்தச் சாதனைகளுக்குள் நான் போக விரும்பவில்லை. காங்கிரஸ் ஆட்சிக்

[திரு. என். கே. பழனிசாமி] [1972 மார்ச் 6

காலத்திலேயே இந்த மாதிரி அவர்கள் எஸ். எஸ். எல். சி. வரை சம்பளம் இல்லாமல் படிப்பு, சமூக நலம் போன்றவற்றைச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொன்னதற்கும் நாம் சொல்வதற்கும் வித்தியாசம் இருக்க வேண்டும். போன வருஷம் வரவு-செலவுக் கணக்கில் என்னென்ன செய்வதாகச் சொன்னோம்? இந்த வருஷம் என்னென்ன செய்யவில்லை? செய்யாத காரணம் என்ன? நிதிநிலை இல்லாததனால் அல்லது அதிக அதிகாரம் தேவையா என்பதை தெளிவாக்கியிருக்க வேண்டும்.

போன வருஷம் இருந்த நிலைமைக்கும் இந்த வருஷம் தமிழ்நாட்டில் இருக்கும் நிலைமைக்கும் மாறுபட்ட நிலைமை இருக்கிறது. தொழிலாளர்கள், ஆசிரியர்கள், சர்க்கரை மில் தொழிலாளர்கள் தோட்டத் தொழிலாளர்கள் இப்படி சகல பேர்களும் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். வேலை நிறுத்தத்திற்கான காரணங்கள் என்ன? அவர்கள் சொல்லும் காரணங்கள் ஒப்புக் கொள்ளக்கூடியவையா? அவை ஒப்புக்கொள்ளக் கூடியவையாக இருந்தால் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒப்புக்கொள்ளத் தகுதியற்றவை நிராகரிக்க வேண்டும் என்பதை இங்கே சொல்ல வேண்டும். சர்க்கார், இந்த தமிழ்நாட்டில் இருக்கும் பிரச்னைகள் என்ன என்பதை 'ஃபேஸ்' பண்ணும் நிலைமை இல்லை. ஆகவே தமிழ்நாட்டு மக்களின் பிரச்னைகளை எவ்வாறு போக்குவது என்ற 'அசெஸ்மெண்ட்' அக்கறை சர்க்காருக்கு இருக்குமேயானால், அந்த 'அசெஸ்மெண்டை' வைத்துக் கொண்டு தைரியமாக அதை 'ஃபேஸ்' (face) பண்ணி தீர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

உதாரணமாக, தமிழ்நாட்டில் போன வருடம் இருந்ததற்கு இந்த வருடம் ரூபாய் மதிப்பு குறைந்து விட்டது. விலைவாசி ஏற்றம் காரணமாக ஜனங்களின் வாங்கும் சக்தி குறைந்து விட்டது. ஆகவே, வேலைநிறுத்தப் போராட்டங்கள் வெடித்து வருகின்றன. நாம் வேண்டுமென்றாலும் வேண்டாமென்றாலும் இப்படிப்பட்ட போராட்டம் வருவதற்குக் காரணம் விலைவாசி ஏற்றம்தான். ஜனங்கள் வாழ முடியாத நிலைமை. சாதாரணமாக ஒரு புருஷன், மனைவி, இரண்டு குழந்தை கொண்ட குடும்பம் ஒரு சாதாரண நகரத்தில் இருந்தால் போன வருடம் எந்த அளவுக்கு செலவு செய்ய முடியுமோ, அதை விட மாதம்



1972 மார்ச் 6] [திரு. என். கே. பழனிசாமி]

23 ரூபாய் அதிகம் செலவு செய்தால்தான் சாதாரண வாழ்க்கை நடத்த முடியும். இது ஆசிரியர்கள், என்.ஜி.ஓ.க்கள் அல்ல; தொழிலாளர்கள் அல்ல. அவர்களாக இருந்தால் போராடிப் பெறுவார்கள். சாதாரணமாக கோடிக்கணக்கான மத்தியத் தர குடும்பம் இந்த மாதிரி நிலையில் இருக்கிறது. 'கண்ட்ரோல்' எடுத்ததால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் முன்னேறவில்லை. மாதம் ஒன்றுக்கு 23 ரூபாய் அதிகம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இந்த மாதிரி நிலைமையைத் தீர்ப்பதற்கு வழி இந்த வரவு-செலவுக் கணக்கில் காணப்படவில்லை.

அடுத்தபடியாக, இந்த வரவு-செலவுக் கணக்கில் 'பெசண்ட்-புரொட்யூசருக்கு' லாபமில்லை. உற்பத்தி செய்த பருத்திக்கு சரியான விலை கிடையாது. ஆனால் நூல் விலை, துணி விலை அதிகம். அதே மாதிரி கடலை விலை குறைவு. வனஸ்பதி விலை அதிகம்; சோப்பு விலை அதிகம். உற்பத்தியாளருக்கு நியாய விலை கிடைக்கவில்லை. உற்பத்தி செய்யும் அவர்கள் நாசமடையும் நிலைமை இருக்கிறது.

நம் மாநிலத்தில் கோயம்புத்தூர் ஜில்லா, இராமநாதபுரம் ஜில்லா பின் தங்கிய பிரதேசம். வெள்ளைக்காரன் காலத்திலேயும் பின்தங்கி இருந்தது. ஐந்து வருடத்திற்கொரு முறை பஞ்சம் வந்தது. தொடர்ந்து பஞ்சம் இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் அதற்கு அபிவிருத்திக்கான திட்டங்கள் இல்லை. வெள்ளைக்காரன் காலத்தில் இந்தத் திட்டமே இல்லை. நம் சர்க்கார் அதற்கு முயற்சி செய்து அந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முயற்சி, நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த நடவடிக்கைக்கு தனியாக பண ஒதுக்கீடும் கிடையாது.

போன வருடம் மத்திய சர்க்கார் இராமநாதபுரம் மாவட்ட அபிவிருத்திக்காக ரூ. 2 கோடி கொடுத்தார்கள். பாதிப் பணத்திற்கு மேல் செலவழித்து ரோடு போட்டார்கள். அபிவிருத்தி நடவடிக்கை இல்லை. மழை பெய்ததுடன் ரோடு பூராவும் போய் விட்டது.

பஞ்சப் பிரதேசமான கோயம்புத்தூரில் 5 வருஷமாக மழை கிடையாது. இந்த வருஷம் குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடையாது. ஐந்து வருஷமாகக் கடனை ஒத்தி வைத்திருந்ததை

ஒரே வருஷத்தில் வசூல் செய்ய கெடுபிடி நடவடிக்கை
எடுத்திருக்கிறார்கள். விவசாயம் செய்ய முடியாத போது
கடனையும் எவ்வாறு திருப்பிக் கட்டுவது?

ஆகவே, இந்த மாதிரி டெல்டா பிரதேசத்தில் இருக்கும்
விவசாயிகளுக்கு செய்யப்பட்ட சட்டங்கள், அவர்களுக்குப்
பாதுகாப்புக் கொடுக்கும் சட்டங்கள்—குத்தகை பாதுகாப்பு
சட்டம், நில வெளியேற்றத் தடைச் சட்டம்—இப்படி பாதுகாப்பு
இருக்கிறது. ஆனால் வறண்ட பிரதேச விவசாயிகளுக்கு எந்தவித
நன்மையும் இல்லை. டெல்டா பிரதேச விவசாயிகளுக்கு ஒரு
ஏக்கருக்கு சராசரி 145 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது.
ஆனால் வரண்ட பிரதேசத்தில் ஒரு ஏக்கருக்கு 25 ரூபாய்தான்
கொடுக்கப்பட்டு வருகிறது. வரண்ட பிரதேச விவசாயிகளுக்கு
அதிகப்படி கடன் வசதி தேவையாக இருக்கிறது. கிணறு
வெட்டுவது, பம்ப் செட் போன்றவைகளுக்கு அதிக விலை
ஆகிறது. ஆகவே அவர்களுக்கு உதவியாக அதிகக் கடன்
கொடுத்து, கிணறு வெட்டி, பம்ப் செட் குறைந்த விலையில்
கொடுக்க வேண்டும்.

இன்றைக்கு 'கரண்ட் சார்ஜ்' அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது.
இந்த 'கரண்ட் சார்ஜ்' வறண்ட பிரதேச விவசாயிகளுக்கு
ஏமாற்றமாக இருக்கிறது. கரண்டுக்கு எவ்வளவு பணம்
கொடுக்கிறோமோ, அந்த அளவுக்கு விவசாயத்தில் மிச்சமானால்
போதும் என்ற நிலைமை இருக்கிறது. தொழில் அபிவிருத்திக்கு
ஏராளமான சலுகை கொடுக்கிறார்கள். அதே மாதிரி விவசாய
உற்பத்திக்கு இந்த கரண்ட் சார்ஜைக் குறைத்து அவர்களுக்கு ஒரு
உதவி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்களைப் பற்றி குறிப்பிட
விரும்புகிறேன். 1967-க்கு முன்னாலேயே கிராம சுய ராஜ்யமாக
இயங்கி வந்த பஞ்சாயத்து யூனியன்களின் அதிகாரங்கள்
படிப்படியாகக் குறைந்து போய், இன்று அதன் அதிகாரங்கள்
யாவும் சர்க்காருக்குப் போய்விட்டது. பஞ்சாயத்து யூனியன்
களுக்கு மூன்று லட்சம் ரூபாய் இருந்தால்தான் கலெக்டரைக்
கேட்டுக் காரியங்கள் செய்ய முடியும். மூன்று லட்சம் ரூபாய்க்குக்
குறைவாக இருந்தால் சர்க்காரைக் கேட்டுதான் காரியங்களைச்
செய்ய வேண்டியிருக்கிறது.



முற்போக்குத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துவதுதான்
இந்த அரசாங்கத்தின் கொள்கை என்று சொல்லப்படுகிறது.
ஆனால் அதன் செயல்முறைகளைப் பார்க்கும்போது அவ்வாறு
இருப்பதாகத் தெரியவில்லை. உதாரணமாக சோஷியல்
எட்யூக்கேஷனுக்கு 1966-ல் ஒதுக்கப்பட்டிருந்த தொகையைவிட
இப்போது குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போன்று
பள்ளிக்கூடங்களுக்கும் தொகை குறைவாக ஒதுக்கப்
பட்டிருக்கிறது; அனிமல் ஹஸ்பண்டரிக்கும் குறைவாகத்தான்
ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் 50 மைல் நீளத்திற்கு
ரோடு இருந்தால் 25 மைல் நீளத்திற்குத்தான் கிராண்ட் கொடுக்கப்
படுகிறது. ஆகையால் ஏற்கெனவே போடப்பட்ட ரோடு
களுக்கு மெயின்டனன்ஸ் இல்லாமல் அவை பழுதடைந்துள்ளன.
அவைகளைப் புதுப்பிக்க முடியாமல் இருக்கின்றது. கிராமங்களில்
சாலை வசதிக்காகவும், குடிநீர் வசதிக்காகவும் செஸ் சர்சார்ஜை
அதிகப்படுத்தப் போவதாக பட்ஜெட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.
இந்த வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு வசதியாக பஞ்சாயத்து
யூனியன்களை இரண்டு பாகமாகப் பிரித்துக் கொண்டால் நல்லது.
அதாவது தண்ணீர் வசதி இல்லாத பஞ்சாயத்து யூனியன்
என்றும், தண்ணீர் வசதி இருந்து 'வாட்டர் செஸ்' வரி
விதிக்கும் பஞ்சாயத்து யூனியன் என்றும் பிரித்துச் செயல்பட்டால்
தான் தேவையான வசதிகளை சீராக செய்து கொடுக்க முடியும்.
இதுவரை செஸ் வரி ஒன்றரை ரூபாய் போடப்பட்டிருந்தது.
சர்க்காரிடமிருந்தும் அதற்கு ஈடான ஒரு தொகையை பஞ்சாயத்து
யூனியன்கள் பெற்று வந்தன. சமீபத்தில் சர்க்கார் ஒரு உத்தரவு
அதாவது ஒரு 'அமென்ட்மென்ட்' போட்டிருப்பதாகத்
தெரிகிறது. அதாவது யூனியனின் அதிகமானச் சில
செலவினங்களுக்குப் பொது நிதியிலிருந்து பணத்தை எடுத்துச்
செலவிடலாம் என்று உத்தரவு வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.
மேற்கொண்டும் இதுவரை ஒன்றரை ரூபாய் சர்சார்ஜ் விதித்து
வந்ததை இரண்டரை ரூபாய் வரை விதிக்க வகைச் செய்யப்
படுகிறது.

பஞ்சாயத்து யூனியன்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குத்
கொடுக்கக் கூடிய சம்பளத்தில் 60 சதவிகிதத்தை சர்க்காரும்,
40 சதவிகிதத்தை பஞ்சாயத்து யூனியனும் கொடுத்து வந்தன.

[திரு. கே. என். பழனிச்சாமி] [1972 மார்ச் 6]

இப்பொழுது ஆசிரியர்களுக்குச் சம்பளம் உயர்த்தப்பட்டிருப்பதனால் பஞ்சாயத்து யூனியன்களின் செலவு இந்த வகையிலும் அதிகரிக்கிறது. ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை சர்க்கார் நேரடியாக 'ட்ரஷரி'யில் போட்டுவிடும். அந்தப் பணத்தை ஆசிரியர்களின் சம்பளத்திற்காக மட்டுமே எடுக்க வேண்டும். ஆனால் பஞ்சாயத்து யூனியனில் மற்ற வேலைகளுக்கு நிதி பற்றுக்குறை ஏற்படும்போது இந்தப் பணத்தை எடுத்துச் செலவு செய்து விடுகிறார்கள். அதனால் ஆசிரியர்களுக்கு ஒழுங்காக சம்பளம் கிடைப்பதில்லை.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன்களில் ரயில்வே செஸ் வசூலிக்கப்படுகிறது. அந்தப் பணத்தை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களே செலவு செய்து கொள்ளலாம். ஆனால் சர்க்கார் அதை அனுமதிப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. இப்படி பல வரிகளை பஞ்சாயத்து யூனியன்கள் வசூலிக்கின்றன. மேலும் லோக்கல் செஸ் சர்சார்ஜையும் அதிகரித்தால், அதுவும் அங்குள்ள மக்கள் மேல்தான் விழும். எனவே, இந்த சர்சார்ஜை இரண்டரை ரூபாயாக உயர்த்தாமல், முன்போலவே ஒன்றரை ரூபாயாகவே இருக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1947 முதல் 1967 வரை தொழில் அமைதி இருந்தது. அதற்குப் பின்னால் தொழில் அமைதி இல்லை. தொழிலாளர் நலனில் அக்கரை கொண்ட அரசாங்கம் என்று சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையைப் பார்த்தால் அவ்வாறு இருப்பதாகத் தெரியவில்லை. சிம்சன் தொழிற்சாலையில் சரியாக போனஸ் கொடுக்காததால் தகராறு ஏற்பட்டது. சோமசுந்தரா மில்லிலிருந்து இ.எஸ்.ஐ. ஆஸ்பிட்டலுக்குக் கொடுக்க வேண்டிய 25 லட்சம் ரூபாய் இன்னும் பாக்கியாக இருக்கிறது. அதை வசூலிப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆயிரம் தொழிலாளர்களுக்குக் குறைவாக வேலை செய்யும் தொழிற்சாலையில் 7-ந் தேதிக்குள் சம்பளம் கொடுக்க வேண்டும். அதற்கு மேற்பட்டத் தொழிலாளர்கள் இருந்தால் 10-ந் தேதிக்குள் சம்பளம் கொடுக்க வேண்டும். ஆனால் நடைமுறையைப் பார்த்தால் சம்பளம் கொடுப்பதற்கு மூன்று மாதம், நான்கு மாதம் ஆகிறது. தொழிலாளர்கள் சம்பளம் கேட்டால் அவர்கள் தலை மேல் அடிதான் கிடைக்கும். அவர்கள் மண்டைதான் பிளக்கும்.



1972 மார்ச் 6] [திரு. என். கே. பழனிச்சாமி]

இப்படி இருந்தால், தொழிலில் எப்படி அமைதி இருக்கும்? இந்த நிலையில் தொழிலாளர் யூனியனில் தொழிலாளரே தலைவராக இருக்க வேண்டுமென்று சொன்னால், அந்த தொழிலாளர்கள் நிலை என்ன ஆகும்? அவர்கள் பிரச்னைகள் எப்படித் தீர்க்கப்படும்? ஆகவே சர்க்கார் இதற்கெல்லாம் பரிகாரம் காணக்கூடிய வகையில் ஒரு தொழில் கொள்கையை உருவாக்கினால்தான் தொழிலில் அமைதி ஏற்பட முடியும்.

ஆயிரம் பேர் வேலை செய்தால் 500 பேரைதான் நிரந்தரப் பணியில் வைத்துக் கொள்கிறார்கள். மீதி 500 பேரை டெம்பரரி ஒர்க்கர்களாக வைத்திருக்கிறார்கள். நிரந்தரமாக பணியாற்றக் கூடியவர்களுக்குப் பத்து ரூபாய் சம்பளம் என்றால் இவர்களுக்கு 7½ ரூபாய் கொடுத்தால் போதும். ஆக இந்த வகையிலும் முதலாளிகள் கொழுக்கின்றார்கள். 7½ ரூபாய் சம்பளம் வாங்கும் தொழிலாளி பத்து ரூபாய் சம்பளம் கேட்டால் தகராறு வருகிறது. அவனை வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். அங்கே போராட்டம் நடக்கிறது. இம்மாதிரி நேரங்களில் அரசாங்கம் தீவிரமான நடவடிக்கை எடுக்காவிட்டால் கஷ்டப்படும் தொழிலாளர்களை எப்படிக் காப்பாற்ற முடியும்? இந்த மாதிரி காரியங்களில் தொழிலாளர்களுக்கே சாதகமாக தீர்வு காணப் பட்டால் தொழிலில் அமைதி ஏற்படும். மேற்கொண்டு இது மாதிரி சர்ச்சைகள் வராது. மேலும், நிர்வாகத்தில் கன்ஸ்யூமர், ஊழியர், முதலாளி ஆகிய மூன்று தரப்பினரும் இடம் பெறும் வகையில் தொழில் கொள்கையை உருவாக்க வேண்டும்.

இப்பொழுது சர்க்கார் பல வாரியங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதை நான் எதிர்க்கவில்லை. ஏனென்றால் அந்த வாரியங்கள் இருந்தால்தான் எல்.ஐ.சி. போன்ற ... கிடைக்கும். ஆனால் அந்த வாரியங்களில் உயர்தர அதிகாரிகளை—ஐ.சி.எஸ். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை—ஏன் நியமிக்க வேண்டும்? அதனால் அரசாங்கத்தின் பணம் வீணாகிறதே தவிர என்ன பயன் கிடைக்கப் போகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. மெட்ராஸ் டிஸ்ட்ரிக்ட் ரிவேஷன் ஆபீசர் என்று பத்துப் பேரைப் போட்டிருக்கிறார்கள். இந்தப் பத்து பேரும் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா என்றால் இல்லை. அது மட்டுமல்ல. சென்னை கார்ப்பரேஷனில் இப்போது ஒரு உயர்தர

[திரு. கே. என். பழனிச்சாமி] [1972 மார்ச் 6

அதிகாரியை செக்ரட்டரியாக நியமித்திருக்கிறார்கள். இது தேவையா? இப்படிப்பட்டப் பதவிகளினால் அரசாங்கத்தின் பணம்தானே வீணாகிறது. (மணியடிக்கப்பட்டது) மக்களுடைய வரிப்பணம் தானே பாழாகிறது. ஆகவே, இவைகளையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. மு. சுருளிவேல்:** பேரவைத் தலைவரவர்களே, இருநூறு ஆண்டு காலமாக நம்மை ஆதிக்கம் செலுத்தி வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒழித்து நாட்டை அடிமைப்படுத்தி வைத்திருந்த அடிமை விலங்கினை சுக்குநூறாக உடைத்தெறிந்தோம் என்று காங்கிரஸ்காரர்கள் பெருமைப்படுகிறார்கள். அதே நேரத்தில் இந்தி ஏகாதிபத்தியத்தை 1965-ம் ஆண்டில் மாணவர்கள் எதிர்த்து போராடிய நேரத்தில் 500-க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொன்று குவித்ததும் இந்தக் காங்கிரஸ்காரர்கள்தான் என்பதை நாம் மறந்துவிடவில்லை. அத்தகையக் கொடுமையைச் செய்த காமராஜர் (*) இன்று மாணவர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள். சிம்ஸன் தொழிலாளர்கள் மேல் அக்கறை கொண்டவர்கள்போல் பரிந்து பேசுகிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் பேசும்போது 'காமராஜர்' * என்று பேசினார்கள். அப்படி அவர்கள் பேசியதை இந்த சபையின் நடவடிக்கையிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த முறையில் பேசுவதற்கு எல்லோருக்கும் தெரியும். ஆனால் இந்த சபையின் கண்ணியத்தைக் காப்பதற்காக நாம் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டியிருக்கிறது. எனவே, 'காமராஜர்' (*) என்ற வார்த்தைகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் (*) என்று சொல்வதற்குப் பதிலாக குழு என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1972 மார்ச் 6]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கூட்டம் என்று கூட சொல்லலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** கூட்டம் என்றும் சொல்லலாம். ஆனால் குழு என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** (*) என்ற சொல்லை சபையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

**திரு. மு. சுருளிவேல்:** சிம்ஸன் தொழிலாளர் பிரச்சினையில் அக்கறைக் காட்டிய காங்கிரஸ்காரர்கள் ஆவடி டாங்கித் தொழிலாளர்கள்மீது அக்கறை காட்டாதது ஏன்? உண்மையிலே தொழிலாளர்மீது அக்கறைக் கொண்டவர்களாக இருந்தால், ஆவடி டாங்கி தொழிலாளர்கள் மீதும் பரிவு காட்டியிருக்க வேண்டும். ஆனால் வாய்மூடி மௌனிகளாகி விட்டார்கள் இவர்கள் பிரச்சினையில்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரும், தமிழகத்தின் நிதியமைச்சருமான டாக்டர் கலைஞர் மத்திய அமைச்சரோடு தொடர்பு கொண்டு, ஆவடி டாங்க் தொழிலாளர்களோடும் தொடர்பு கொண்டு, சுமுகமான முடிவு ஏற்பட்டு, மீண்டும் அந்தக் தொழிற்சாலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆக, தொழிலாளர்கள், ஏழை எளிய கிராம மக்கள், விவசாயத் தொழிலாளர்கள், பெருங்குடி மக்கள், குத்தகைதாரர்கள் ஆகியோர் பயன் பெறும் வகையில் பல நற்போக்கான திட்டங்களைக் கொண்ட இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய [illegible] கட்சி உறுப்பினர்களும்—இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த பெரியவர் ஐயா மணலி அவர்களும் இந்த நிதிநிலை அறிக்கையை வெகுவாகப் பாராட்டியதோடு அதன் சிறப்பு அம்சங்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

இந்திய-பாகிஸ்தான் யுத்தத்தைப் பற்றி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம்முடைய முன்னுரையில்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

குறிப்பிட்டிருக்கிறார்கள். வங்காள தேசத்தை சர்வதேச அரங்கில் ஒன்றாக எல்லா நாடுகளாலும் ஒப்புக்கொள்ளச் செய்ய நமது இந்தியப் பிரதமர் எடுத்துக்கொண்ட முயற்சிகளை எல்லாம் நாம் அறிவோம். இந்தியத் துணைக் கண்டத்தில் அதன் காரணமாக ஏற்பட்ட விளைவுகளை எல்லாம் அறிவோம். அப்படிப்பட்டவர்கள் இன்றையதினம் தம்முடைய மறைந்த மாபெரும்—இதய தெய்வம் அண்ணா அவர்கள் நமக்கு வழிகாட்டிச் சென்ற மாநில சுயாட்சி பற்றி நாம் கோரிக்கை எழுப்பும்போது எத்தகைய வதந்திகளைப் பரப்பி விடுகிறார்கள். முதலாளித்துவ பத்திரிகைகள் எல்லாம் இதைப் பிரிவினைவாதம் என்பதாக எந்த எந்த வகைகளில் எல்லாம் சித்தரிக்கின்றன என்பதை நாம் அறிவோம். நம்மைப் போன்ற சாதாரணமானவர்களுக்குக் கூட புரியாத வகையில் இராஜாஜியைப் போன்றவர்கள் எத்தகைய பொய்த் தகவல்களை மத்திய அரசுக்கு அனுப்பி வந்தாலும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உண்மைக்குப் புறம்பானது என்று சொல்லுங்கள். பொய் என்ற வார்த்தையை இந்த அவையில் உபயோகப்படுத்தக்கூடாது.

**திரு. எஸ். ஆறுமுகம்:** சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இதே சட்ட மன்றத்தில் முன்பு முதல் அமைச்சராக இருந்த திரு. காமராஜர் அவர்கள் பொய் என்று சொல்லலாம் என்பதாகத் தீர்ப்பு அளித்திருக்கிறார்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யார் சொல்லியிருந்தாலும்—அதை காமராஜரே சொன்னது என்றாலும் அந்த வார்த்தை பார்லிமெண்டரி ஆகிவிடாது.

**திரு. மு. சுருளிவேல்:** நாம் மாநில சுயாட்சி கேட்கிற நேரத்தில் மட்டும் திராவிட நாட்டுப் பிரிவினை வாதத்தைக் கிளப்பு றார்கள் என்கிற தவறான பிரசாரம் செய்யப்படுவதைக் ாண்கிறோம். இந்திய-பாகிஸ்தான் யுத்தத்தின் விளைவாக மற்கு பாகிஸ்தானின் சர்வாதிகாரக் கொடுமையில் இருந்து லட்சத்திற்கும் மேற்பட்ட வங்காளிகள் காப்பாற்றப்பட்டார்கள் ன்கிறபோது—சர்வாதிகாரம் அழிக்கப்பட்டது என்றால் இல்லை. ன்றைக்கு நமது இந்தியப் பிரதமரிடத்தில்தான் சர்வாதிகார னப்பான்மை தலைதூக்கிக்கொண்டு வருகிறது. அவர்களுடைய



உள்ளத்தில் சர்வாதிகார மனப்பான்மை வளர்ந்து வருகிறது என்பதை வருத்தத்துடன் சொல்ல வேண்டியதாகத்தான் இருக்கிறது.

இந்திய-பாகிஸ்தான் யுத்தம் என்றவுடன் 55 கோடி மக்களும் ஒன்று திரண்டு ஒரே எண்ணத்துடன்—ஒரே கருத்துடன் அவர்களுக்கு அளித்த ஆதரவை அவர்கள் மறந்துவிட்டு தேர்தலிலே தம்முடைய கட்சிப் பிரச்சாரத்தில் ஈடுபடும்போது அவர்கள் என்ன சொல்லி வருகிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். மத்திய அரசுக்கு கைதூக்குகிற நிலையில்தான் மாநில அரசுகள் இருக்கவேண்டும் என்கிற தொனியில் கேலித்தனமாக அங்கங்கே பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். பேச்சு மட்டுமல்ல—எழுதுவதிலே கூட தம்முடைய சர்வாதிகார மனப்பான்மை தலைதூக்கி நிற்கத்தான் எழுதி வருகிறார்கள். திருப்பதியில் பேசும்போது தம்முடைய கட்சியினருக்குத்தான் வாக்களிக்கவேண்டும் என்கிற நிலையில்

"You must elect those State Governments which will act in time with the Central Government".

என்று கூறியிருக்கிறார். மத்தியில் எந்தக் கட்சி இருக்கிறதோ, அதே கட்சி மாநிலங்களில் இருக்கிற போதுதான்—மத்திய அரசுக்கு கைதூக்குகிற மாநில அரசுகளாக இயங்க முடியும்—அதைத்தவிர வேறு என்ன நன்மை அதன் காரணமாக ஏற்படும் என்று தெரியவில்லை.

மத்தியில் பண்டித நேரு அவர்கள் பிரதமராக இருந்தபோது தான் அதே கட்சியைச் சேர்ந்த திரு. காமராஜர் அவர்கள் இங்கே முதல்வராக இருந்தார். அவர் அங்கே சொல்வதற்கு எல்லாம் இங்கே இவர் சரி என்று சொல்லி நல்ல முதல்வர் என்று பெயர் கட்டிப் போவதில் கருத்துடையவராக இருந்த காரணத்தினால், எவ்வளவு பெரிய இழப்புகள் நமக்கு ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

தேவிகுளம்—பீர்மேடு பகுதியை ஒட்டியிருக்கிற போடி நகரைச் சேர்ந்தவன் நான். மற்றவர்களைக் காட்டிலும் அந்தப் பிரச்சினையில் எனக்கு நேரடி அனுபவம் உண்டு. தேவிகுளம்-பீர்மேடு பிரச்சினை வந்தபோது தமிழ்நாட்டுடன் சேரவேண்டிய அந்த நியாயமான கோரிக்கையை திரு. நேரு அவர்கள்

அலட்சியப்படுத்தியபோது திரு. காமராஜர் என்ன செய்தார்? அவர் சொல்வதே சரி என்று சும்மா இருந்த காரணத்தினால் இன்றையதினம் முக்கியமான அந்தப் பகுதிகள் நம் ராஜ்யத்தோடு இணைக்கப்படாது கேரளாவுடன் சேர்க்கப்பட்டுவிட்டன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தேவிகுளம்-பீர்மேடு பிரச்சினை வந்தபோது அந்தப் பகுதி தமிழ்நாட்டோடு இணைக்கப்படவேண்டும் என்பதற்காக திருவிதாங்கூர்—கொச்சியில் இருந்த காங்கிரசைச் சேர்ந்த நாங்கள் போராட்டம் நடத்தினோம். அதற்காக நாங்கள் எல்லாம் சிறைச்சாலை சென்றவர்கள். கடைசியில் ராஜ்ய புனர் அமைப்புக் கமிஷன் நமக்கு விரோதமாகத் தீர்ப்பு அளித்துவிட்ட காரணத்தினால் அந்தப் பகுதி நமக்கு இல்லாமல் போய்விட்டது. இன்றைக்கு அதுபற்றி ஆளும் கட்சியைச் சேர்ந்த இவர்கள் ஒரு போராட்டம் நடத்தத் தயாராக இருந்தாலும் நாங்களும் ஆதரவு கொடுக்கத் தயாராய் இருக்கிறோம்.

**திரு. மு. சுருளிவேல்:** மாண்புமிகு உறுப்பினர் சிறை சென்றிருக்கலாம். ஆனால் மத்தியிலும் மாநிலத்திலும் காங்கிரஸ் கட்சியே—ஆளும் கட்சியாக இருந்த நிலையில் திரு. காமராஜர் அவர்கள் தமிழர்களுடைய நியாயமான கோரிக்கையை எடுத்து வற்புறுத்தத் தவறிவிட்டதன் காரணமாக அந்தப் பகுதி தமிழர்களுக்கே துரோகம் செய்துவிட்டார். அதோடு காங்கிரஸ் கட்சியினர்களின் கோரிக்கைகளையே ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிறார். அதன்காரணமாக இன்றையதினம் தமிழகம் 50 கோடிக்கும் அதிகமான அந்நியச்செலாவணியை—அந்தப் பகுதியில் இருந்து கிடைப்பதை—இழந்து நிற்கிறது. அதே நேரத்தில் அந்தப் பகுதியில் உள்ள 5 லட்சம் தமிழர்கள்—தமிழர்—மலையாளி என்கிற இனப்பிரிவு காரணமாக அரசியல் கட்சிகளின் தவறான போக்குகளினால் இன்றைக்குப் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அங்கிருந்து தமிழர்கள் எல்லாம் மலையாளிகளால் விரட்டப்படக்கூடிய சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** பீர்மேடு சம்பந்தமாக கனம் மெம்பர் பேசுகிற காலத்திலே மலையாளிகளுக்கும்—தமிழர்களுக்கும் மோதல் என்கிற அளவில் பேசுவதை தயவு செய்து





வெளியிடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறான சூழ்நிலை அங்கில்லை. நம்மிடையேயும் இல்லை.

**திரு. மு. சுருளிவேல்:** நான் அங்கே ஒரு பிரச்சினையை உண்டாக்கவேண்டும் என்று பேசவில்லை. முஸ்லீம் லீக் உறுப்பினர் அவர்கள் தத்துவத்தை எடுத்துச் சொல்கிறார். ஆனால் நான் அங்கே நடக்கிற நிகழ்ச்சிகளைச் சொல்கிறேன். மலையாளிகளினால் கொடுமைப்படுத்தப்படுகிற தமிழர்கள்—கற்பழிக்கப்பட்ட பெண் இந்தச் சம்பவங்களை எல்லாம் முதல்வர் அவர்களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவர்களும் நான்காவது ரெவின்யூ போர்டு மெம்பரை அங்கே அனுப்பி இன்றுள்ள நிலைமையைக் கண்டறியச் செய்திருக்கிறார்கள். இத்தகைய அவல நிலை மத்தியிலும் காங்கிரஸ் ஆட்சி—மாநிலத்திலும் காங்கிரஸ் ஆட்சி என்று இருந்தபோதுதான் உண்டானது. நம்முடைய உரிமைகள் தக்கமுறையில் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தான் மாநில சுயாட்சிக் கோரிக்கையை திராவிட முன்னேற்றக் கழகம் பெருமைபடக்கூடிய அளவில் நமது கலைஞர் அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள். எங்கள் இதய தெய்வம் மாமேதை அண்ணா அவர்கள் எங்களுக்கு விட்டுச்சென்றிருக்கும் உயில் ஆகும் இது. மத்திய அரசை பலப்படுத்துவதற்காக மாநில சுயாட்சிக் கோரிக்கையை நாங்கள் முன் வைத்திருக்கிறோமே தவிர மத்திய ஆட்சியைப் பலவீனப்படுத்துவதற்காக வைக்கவில்லை.

ஆனால் அரசியலிலே. இந்தியத் துணைக் கண்டத்து அரசியலிலே பலமான அரசு—ஸ்ட்ராங் சென்டர்—எத்தகைய ரத்தக் களறிகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். நாம் கேட்பது எத்தகைய சுய ஆட்சி என்பதை அவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாங்கள் இதய சுத்தியுடன் தெரிவித்துக்கொள்கிறோம், நாங்கள் கேட்கும் மாநில சுயாட்சி தமிழச் சமுதாயத்தின் நன்மைகளைப் பேணிக் காப்பாற்றுவதற்காகத்தான் கேட்கிறோம். நாலரைக் கோடி மக்களின் நன்மையை உத்தேசித்துக் கேட்கிறோம். நாட்டுமக்களின் மத்தியிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம். மாநில சுயாட்சி கிடைத்தவுடன் ஏதோ எங்களுக்கு ஒரு பெரிய அந்தஸ்து

[திரு. மு. கருளிவேல்] [1972 மார்ச் 6

கிடைத்துவிடும். ஒரு பெரிய கௌரவம் கிடைத்துவிடும் என்பதற்காகக் கேட்கவில்லை.

அடுத்தபடியாக, ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். மாநில சுயாட்சி என்பது நாங்களாக ஏற்படுத்தியது அல்ல. அன்றைய தினம் இந்தியா—பாகிஸ்தான் என்று இரு நாடுகளாக இந்தியா பிரிக்கப்பட்டபோதே சுயாட்சித் தத்துவம் ஏற்பட்டது என்பதை தயவுசெய்து மறந்துவிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவின் சரித்திரம் நமக்கு எதை அறிவுறுத்துகிறது என்பதைப் பார்க்க வேண்டும். பிரிட்டிஷார் நாட்டுக்கு சுதந்திரம் அளிப்பதற்கு முன் இந்தியத் தேசியக் காங்கிரசும், முஸ்லீம் லீகும் முதலில் விடுதலைப்பிரச்சினையைத்தான் முன்வைத்தன. பின்னர் காலப்போக்கில், இந்தியாவில் இந்துக்கள் மெஜாரிட்டியாக இருக்கிறார்கள். முஸ்லீம்கள் மைனாரிட்டியாக இருக்கிறார்கள். மைனாரிட்டிகளின் பாதுகாப்பை முன்னிட்டு, தனி நாடு வேண்டும் என்று முஸ்லீம் லீக் பல போராட்டங்களையும் பல தியாகங்களையும் செய்து வந்துகொண்டிருந்த நேரத்தில் இங்கிலாந்தில் பிரிட்டிஷ் பிரதமராக அட்லி இருந்தார். 1946 மார்ச் 23-ம் தேதி பிரிட்டிஷ் கேபினெட் மிஷன் என்ற பெயருடன், லார்ட் பெதிக் லாரன்ஸ், லார்ட் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ், இன்னும் ஒருவர் அடங்கிய குழு இந்தியாவுக்கு வந்திருந்தது. அவர்கள் டெல்லியிலும், சிம்லாவிலும் பல மாநாடுகளைக் கூட்டி, காங்கிரஸ், முஸ்லீம் லீக் தலைவர்களை அழைத்துப் பேசினர். பின்னர் ஒரு முடிவுக்கு வந்தனர். இந்தியாவுக்கு ஒரு பெடரல் சர்க்கார் அமைப்பது என்றும், எந்த அளவுக்கு சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அளிப்பது என்றும் பேசப்பட்டது. பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, கம்யூனிகேஷன் போன்றவைகள் மத்திய அரசாங்கத்திடம் இருப்பது. மற்ற அதிகாரங்களை மாநில அரசுகளுக்குக் கொடுத்து விடுவது என்று பேசப்பட்டது. ஏதாவது ஒரு மாநில அரசு தனக்கு இருக்கின்ற அதிகாரத்தை மத்திய அரசுக்குத் தந்துவிட விரும்பினால் தந்து விடலாம். மௌலானா அபுல் கலாம் ஆசாத் இம்மாதிரி யோசனையை வெளிப்படுத்தினார். முஸ்லீம் லீக் கட்சியும் அந்த யோசனையை ஒப்புக்கொண்டது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும், சர்தார் வல்லபாய் படேல் அவர்களும்தான் இந்தியா, பாகிஸ்தான் என்று இருநாடுகளாக துண்டித்தார்கள். அதன் பயனைத்தான் இன்றைய தினம் நாம்



1972 மார்ச் 6] [திரு. மு. கருளிவேல்]

கோடிக்கு மேலாக ராணுவத்திற்காக இரண்டாயிரம் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். அவ்வாறே பாகிஸ்தானும் ராணுவத்திற்காகச் செலவழித்துக் கொண்டு வருகிறது. நாடு பிரிவினைக்கு இவர்கள் இருவருமே முக்கியமான காரணஸ்தர்கள். நாடு பிரிவினைக்கு ஜனாப் ஜின்னாவோ அல்லது முஸ்லீம் லீக் கட்சியோ காரணமல்ல. நான் சொல்வது வெறும் பேச்சல்ல. இது சரித்திரம் கூறுகிற உண்மை.

காங்கிரஸ் கட்சியின் தலைவராக ஆறு ஆண்டுக்காலம் இருந்தவர் மௌலானா அபுல் கலாம் ஆஸாத். அவர் எழுதிய 'இண்டியா வின்ஸ் ஃப்ரீடம்' என்ற நூலில் இதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பெடரல் சர்க்காரை காங்கிரஸ் கட்சியினுடைய ஏ.ஐ.சி.சி. மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டது. மகாத்மா காந்தியும் முதலில் இதை ஏற்றுக் கொண்டார். மகாத்மா காந்தி கூறுவதாக திரு. ஆசாத் அலி அவர்கள் 'Gandhiji was emphate that only a Federal Constitution could work in a country like India என்று கூறுகிறார்.

பல மொழிகளையும், பல ஜாதிகளையும் கொண்ட ஒரு பெரிய நாட்டுக்கு குடியாட்சி தத்துவம் சிறந்த தத்துவம் என்று காந்தி ஒத்துக்கொண்டிருக்கிறார். இந்தியா, பாகிஸ்தான் என்கிற பிரிவினை இல்லை என்கிற நிலை ஏற்பட்டபோது, இங்கேதான் ஜவஹர்லால் நேரு அவர்களும், சர்தார் வல்லபாய் படேல் அவர்களும் வில்லன்களாக வருகிறார்கள். ஜவஹர்லால் நேருதான் அன்றையதினம் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தார் . . .

THIRU K. M. SUBRAMANIAM: Sir, on a point of order. The hon. Member must speak on the Budget.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது வரவு-செலவுத் திட்டம். மாண்புமிகு உறுப்பினர் நிதிநிலை அறிக்கையை யொட்டிப் பேச வேண்டும்.

திரு. மு. கருளிவேல்: அந்த வரலாறுகள் எல்லாம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை. அந்த சரித்திர வரிகள் சிறப்பு மிக்கவை.

'The acceptance of the Cabinet Mission Plan by both the Congress and the Muslim League was a glorious event in the history of the freedom movement.'

இது விடுதலை வரலாற்றிலேயே பொன்னாள் நிகழ்ச்சியாகும் என்று ஆசாத் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் 1946 ஜூலை 10-ம் தேதியன்று காங்கிரஸ் தலைவர் பிரஸ் கான்பிரன்ஸ் ஒன்றைக் கூட்டினார். அந்த கூட்டத்தில், 'பிரிட்டிஷ் கேபினட் மிஷன் அளித்த அறிக்கையைத் திருத்துவதற்கு காங்கிரஸ் கட்சிக்கு உரிமை இருக்கிறது' என்று கூறினார். தொடர்ந்துதான் முகமது ஜனாப் ஜின்னா அவர்கள், மைனாரிட்டி மக்களுக்கு பாதுகாப்பு இல்லை, எங்களுக்கு தனி நாடு வேண்டும். பிரிட்டிஷ் கேபினட் மிஷன் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று வகையில் தனி நாடு கோரிக்கையை முன்வைத்தார். நாம் பிரிவினைக்கு அன்றையதினம் ஜவஹர்லால் நேரு அவர்களும், சர்தார் படேல் அவர்களும்தான் எதிர்ப்பாக இருந்தார்கள். அன்றையதினம் மாநில சுயாட்சி மறுக்கப்பட்டதன் காரணமாக இந்தியா-பாகிஸ்தான் என்ற இரு நாடுகள் உருவாயின. இன்றைக்கு நாம்—திராவிட முன்னேற்றக் கழகம்—மாநில சுயாட்சி என்று சொன்னவுடன் [illegible] என்று சொல்கிறார்கள்.

இன்னும் ஒரு சான்று கூற விரும்புகிறேன். அன்றையதினம் மாநில சுயாட்சிக்கு பண்டித ஜவஹர்லால் நேரு விரோதமாக இருந்தார். இன்றையதினம் அவருடைய மகள் திருமதி இந்திரா காந்தி இருக்கிறார்கள். மேலும், ஷேக் முஜிபுர் ரஹ்மான் அவர்கள் முதன்முதலில் தேர்தலில் போட்டியிட்டபோது ஆறு அம்சத் திட்டங்களைத்தான் முன்வைத்தார். நாமும் அவரைப் போலத்தான் மக்களை வாழ வைப்பதற்கு, மக்களின் கஷ்டங்களைப் போக்குவதற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம். முஜிபுர் ரஹ்மான் அவர்கள், வெளிநாட்டுச் செலாவணி, வெளிநாட்டு வர்த்தகம், கரன்சி வைத்துக்கொள்ளுதல் போன்றவற்றை வைத்துக்கொள்ள உரிமை வேண்டும் என்று சொன்னார்கள். அவர் கேட்டது ஒரு தனி நாடு போன்றுதான் உரிமைகளைக் கேட்டார்கள். வேண்டுமானால் மத்திய அரசு இருந்துவிட்டுப் போகட்டும் என்கிற தன்மையில்தான் முஜிபுர் ரஹ்மான் கோரிக்கைகளை முன்வைத்தார். அப்படிப்பட்ட சுயாட்சிக்கு இந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆதரவு





அளித்தார்கள். அதற்காக அயல்நாடுகளுக்குச் சென்று* "உலக நாடுகளே, யாஹியாகானைப் பாருங்கள், அவருடைய ராணுவம் செய்யும் அட்டூழியங்களைக் காணுங்கள், அங்குள்ள பெண்களின் கற்பைச் சூறையாடுவதைப் பாருங்கள்" என்று கூறிதான் முஜிபுர் ரஹ்மானுக்கு ஆதரவு தேடினார்கள். இன்றையதினம் அது தனியாக, தனிநாடாக உதயமாகியிருக்கிறது. அப்படி முஜிபுர் ரஹ்மான் திட்டத்திற்கு ஆதரவு கொடுத்தவர்கள், அந்த சுயாட்சியை ஆதரித்தவர்கள், நாம் மாநில சுயாட்சி கேட்கும்போது எதிர்க்கிறார்கள். எங்களுடைய மதிப்புமிக்க தானைத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் கேட்கும் மாநில சுயாட்சியை மறுப்பது எதற்காக? நாங்கள் முஜிபுர் ரஹ்மானைப்போல் கேட்கவில்லை. (மணியடிக்கப்பட்டது.)

டெல்லியிலே பலமான சர்க்கார் இருக்க வேண்டுமென்று கூறுவது எதற்காக? இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறு விளையாத வகையில் நாம் மாநில சுயாட்சி கேட்கிறோம். ஏனோ டெல்லி அரசு இதனை மறுக்கிறது. முதன்முதலில் வங்க தேசத்தின் உரிமைகளை யாஹியாகான் மதிக்காத தன்மையினால்தான் இன்றையதினம் பங்களா தேஷ் உதயமாகியிருக்கிறது. மாநில சுயாட்சி மறுக்கப்பட்டதன் காரணமாகத்தான் இந்தியாவானது இந்தியா-பாகிஸ்தான் என்கிற இரு நாடுகளாக பிரிந்தன. நாம் சுயாட்சி கேட்டால், திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினைக் குரல் எழுப்புகிறது என்று சொல்கிறார்கள். பிரிவினை நமது லட்சியம் அல்ல, மாநில சுயாட்சியை அடைவதே நமது லட்சியம். இந்த லட்சியத்தை நாம் அடைய முடியாவிட்டாலும், வருங்கால சந்ததியினர் ரத்தக்களரி மூலமாகவாவது பெறுவதற்கு போராட்டம் நடத்துவார்கள் என்பதைக் கூறி. இந்த வரவு செலவுத் திட்டம் ஏழை எளிய மக்களுக்காக, அவர்களின் நன்மைக்காக அமைந்திருக்கிறது என்பதைக் கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. க. சுப்பு:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பேசிவந்ததை அவர்கள்** என்று இப்பொழுது பேசிய உறுப்பினர்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

அவர்கள் சொன்னார்கள். ** என்று சொல்வது பார்லிமெண்டரி வார்த்தைகள்தானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்ற சொல்லை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

***திரு. நா. வெ. குருசாமி:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1972-73-ஆம் ஆண்டின் பட்ஜெட் உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

சாலைப் போக்குவரத்து நல்ல முறையிலே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டிலே நீண்டதூரம் பிரயாணம் செய்யக்கூடிய சாலைகள் எல்லாம் மோசமாக இருக்கின்றன. நான் சிறுபிள்ளையாக இருந்தபொழுது அதாவது 1947-ஆம் ஆண்டுக்கு முன்பு சுதந்திரம் அடைவதற்கு முன்னால் இருந்த நிலைமையை நினைவில் கொள்ளவேண்டியிருக்கிறது. இந்த சாலை வசதிகளுக்கு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அதிகமாகப் பணம் ஒதுக்கிச் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை மாவட்டத்தில் குழுளி. வைகை அணைப் பகுதிகளில் வெளிநாடுகளிலிருந்து அதிகமாகப் பயணிகள் வருகிறார்கள். அங்கே போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலைமை இருக்கிறது. மதுரையிலிருந்து வைகை அணைக்குப் போவதற்கு நாற்பது மைல் இருக்கிறது. சொகுசாகச் செல்லக்கூடிய கார்ப் பயணம் ஆக இருந்தாலும் கூட இரண்டு மணி நேரம் ஆகிறது. இன்றைக்கு அந்த சாலை உள்ள நிலைமையில் வாகனங்கள் ஒழுங்காகப் போய் வர முடியவில்லை. எனவே, நல்ல முறையிலே அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைய முன்தினம் ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் பேசினார்கள், இந்த பட்ஜெட் தேர்தலுக்கு முன்பாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் இன்னும் அதிகமான இடங்களை ஆளுங்கட்சி பெற்றிருக்கும் என்று சொன்னார்கள். நான் சொல்லிக் கொள்கிறேன், இந்த பட்ஜெட் தேர்தலுக்கு முன்னதாக வந்திருந்தால்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





மனுவிலக்கை எடுத்துவிட்டிருந்தால் முடிவு வேறு விதமாக இருந்திருக்கும். நிச்சயமாக ஆளுங்கட்சிக்குச் சாதகமாக இருந்திருக்காது. பாதகமாகத்தான் இருந்திருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு என்று லாட்டரி சீட்டுகள் விற்கப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர்களிடத்திலும், கிராம சேவக்குகளிடத்திலும் டிக்கெட்டுகளைக் கொடுத்து 2,000 ரூபாய் வசூல் செய்துகொண்டுவரவேண்டும், இல்லாவிட்டால் சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்வோம் என்று சொல்லப்படுகிறது. வேலைகளில் இருந்தும் நீக்கி விடுவோம் என மிரட்டப்படுகிறது. இப்படிச் செய்துதான் பாதுகாப்பு நிதி திரட்டவேண்டுமா? உருட்டலாலும், மிரட்டலாலும் 3.30 கோடி ரூபாய் திரட்டியிருப்பதாகக் கணக்கிடப்படுகிறது. இதை எல்லாம் எங்களைப்போல் பார்ப்பவர்களுக்குத்தான் தெரியும். இன்னும் முதலமைச்சர் கூறிய பத்துக் கோடி ரூபாய் எப்படித் திரட்ட முடியும் என்ற சந்தேகத்துடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் விதிக்கின்ற சர்சார்ஜ் 1½ ரூபாயாக இருப்பதை 2½ ரூபாயாக மாற்றவேண்டுமென்று இந்த பட்ஜெட்டில் கூறப்பட்டு இருக்கிறது. அம்மாதிரிச் செய்தால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுவார்கள். ஊராட்சி ஒன்றியங்களுக்கு மேட்சிங் கிராண்ட் பணத்தையும் சேர்த்து இதன்மூலம் வசூல் செய்யும் பணத்தையும் சேர்த்து மொத்தமாகக் கொடுத்துவிட்டால் அவர்கள் குடிநீர் போன்ற திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வார்கள்.

ஊராட்சி மருந்தகங்களை அரசாங்கமே எடுத்துக்கொள்ளப் போவதாக பட்ஜெட்டிலே கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 45 ஒன்றிய மருந்தகங்களை அரசு எடுத்துக்கொள்ளப்போவதாக கூறப்பட்டிருக்கிறது. எங்களுடைய ஆண்டிபட்டித் தொகுதியிலே மருத்துவ வசதிகள் தேவையான அளவுக்கு இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த மருந்தகத்தையும் அந்த 45-லே ஒன்றாக இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. நா. வெ. குருசாமி] [1972 மார்ச் 6

கைத்தறி நெசவாளர்கள் எங்கள் தொகுதியிலுள்ள சக்கம்பட்டி, சுப்பலாபுரத்திலும் போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார்கள். கடந்த மூன்று நாட்களாக பஸ் முன்னால் மறியல் செய்து அவர்கள் கைதுசெய்யப்பட்டு பெரியகுளம் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். நான் பெருமைப்படுகிறேன், அங்கே போர்க்கொடி உயர்த்தியிருக்கிறவர்கள் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். இதைப்பற்றி நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதை இன்று எடுத்துக்கொண்டு தள்ளிவிட்டார்கள். எனவே அரசாங்கம் அவர்களுடைய பிரச்னையில் தலையிட்டு—அவர்கள் வறுமையால் வாடுகிறார்கள், பசியிலும் பட்டினியிலுமாய் கிடக்கக்கூடிய மோசமான நிலைமையில் இருக்கிறார்கள்—வெளியூருக்குச் சென்று பிழைக்கக்கூடிய நிலைமைத்தான் இருக்கிறது—அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுப் புனர் வாழ்வு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்திலே ஒரு நைலான் தொழிற்சாலை ஏற்படுத்தப்போவதாக அறிகிறேன். சில ஆளுங்கட்சித் தோழர்கள் அவர்கள் பகுதிக்கு வேண்டுமென்று கேட்பதாக அறிகிறேன். அதை எங்கள் தொகுதியில் ஏற்படுத்தினால் அங்குள்ள ஏழைகள், நெசவாளர்கள் பயன் அடைவார்கள்—அதற்கு 120 ஏக்கர் இடம் தேவைப்படுகிறதாகச் சொல்கிறார்கள், அதற்கு இடம் எங்கள் பகுதியில் இருக்கிறது எடுத்துக் கொள்ளலாம்—நெசவாளப் பெருமக்களை கஷ்டப்படுகின்ற மக்களை வாழவைக்கவேண்டுமென்றும் இந்த ஆண்டே அதை ஆரம்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுடைய பிரச்னை மோசமாக இருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்கள் தாலுகா அலுவலகங்களுக்கு சென்று மனுக்கொடுக்கப் போவதாகச் சொல்கிறார்கள். எழுச்சி நாள் என்று ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



1972 மார்ச் 6]

* THIRU K. M. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, I think I should be one of those who should congratulate the framers of this Budget because we are always accused that we do not refer to all the good things that are done by the D.M.K. Government. I have heard ever since I entered this Assembly, that the Congress Party is always critical and never appreciates whatever the ruling party does. I feel, Sir, that the duty of the Opposition is to support the ruling party whenever it does good things and criticise whenever it does wrong things and help the Government by offering constructive criticism whenever they are lagging behind in certain respects. We are not therefore criticising the Government for the sake of criticism.

Coming to the Budget, this is an unusual Budget because we are for the first time seeing a surplus Budget in any State in India after 1952. Surplus budget is a budget that comes from prosperous countries and not from developing countries which need lot of money for development. It looks as if we have completed everything and we have given the best form of education and we have built the best schools and hospitals. It looks as if we have fulfilled all the social needs of our people. I think this is the first time that a surplus Budget is presented by a Party which says, that they are Socialists without fulfilling any Government explanations. This Budget is an extremely unsocialistic Budget and it is a capitalistic Budget and I think any intelligent person will agree with me that a surplus Budget cannot be presented at this juncture when we want money for various welfare purposes.

I find there has been a very good appreciation from the other side.

THIRU S. KANDAPPAN: May I seek a clarification? When the country is suffering from run-away inflation, what is the alternative to a surplus budget?

THIRU K. M. SUBRAMANIAM: When there is a seminar on that subject I can answer that question. I cannot answer it in one or two minutes. It is a pertinent question and it needs a pertinent answer and it would take sufficient time to give the answer.

Our friends say that they had allotted Rs. 94 crores for education whereas Congress Government allotted only Rs. 54 crores during 1966-67. But let me remind them through you that

[Thiru K. M. Subramaniam] [1972 மார்ச் 6

during 1966-67 the revenue was only Rs. 194 crores whereas revenue today is Rs. 394 crores. When there is thus Rs. 200 crores increase in revenue from 1966-67 to 1972-73, naturally you must have increased expenditure and your expenses must increase. Otherwise what is the use of getting extra revenue ? When revenue has increased by Rs. 200 crores, naturally the expenditure must increase. So there is nothing spectacular in spending Rs. 94 crores on education.

Next there is the "debt charges" item. Nowhere do I find any particulars regarding what is the interest or rate of interest we pay for the loans taken, for the debts incurred. I went through the pages and I do not find any item giving me clear picture as to what is the total interest charge this Government has to pay on account of 'debt services'. For the progress of the country the most essential thing is to get money at the cheapest rate of interest. In Germany we find that the deposit interest rate has gone down to 3 per cent. I do not know what the Reserve Bank is charging as interest for the overdrafts. I know in the Madras Corporation, we have been paying 9½ per cent interest for the money borrowed from banks, which is absolutely wrong.

So far as our people concerned, they have not only to pay the taxes levied by the State Government, but also Central taxes and also taxes levied by municipalities. It looks as if not only the revenue of State has increased by Rs. 200 crores during the last five years, but the taxes levied by municipalities, just to quote an example, Conjeevaram Municipality and Corporation of Madras, have increased by 300 per cent from 1967 to 1972. The total amount of property tax collected from the public by the municipalities have considerably gone up.

Coming to agriculture, we find that Tamil Nadu has played its part so splendidly. But there is nothing special to take special pride. In 1947 the total agricultural product was 4.7 crores of tons and to-day it is 10 crores. It has more than doubled during 1970. Of course certain States like Punjab, where it has trebled, there is plenty of wheat for sale and I hope the Hon. Ministers must have seen the recent statement by Punjab Government. There is nothing to take pride : with all the fertiliser factories opened by Central Government, dams constructed by Congress Government before 1967, with all the canals that have been dug,



1972 மார்ச் 6] [Thiru K. M. Subramaniam]

if this Government has not grown up, it would mean that it had prevented growth. What has happened is with all the foundations we have laid, it has automatically grown. That is all.

Coming to unemployment, the Hon. Chief Minister has mentioned that a certain Youth Corps had been formed and employment would be given for 2,000 boys and perhaps to 15 girls. That is a drop in the ocean. Unemployment is so widely prevalent that we have to tackle it in a big way. Unemployment is so rampant that we have to find out whether we had gone in the wrong direction in the matter of industrialisation. The problem has to be tackled drastically. No piecemeal solution would solve the problem.

Of course, the question of prices is there but I do not want to mention anything about it here now. Coming to unemployment problem, we find a bread factory had been opened in Madras and many small bread shops had closed down because of this. It may be that I may be termed anti-deluvian or 200 years old in my thinking but that is not the case. I am referring to the problem of unemployment that the starting of bread factory had created.

By the dairy farm, how many mikmen had lost their livelihood and how many had to go to the farm to supply milk there, are all known to us.

There is the problem of hawkers. I know hawking on foot path is a bad thing. But how many families are depending on that trade ? When 4,000 families are depending on hawking business, we must find them alternative means of livelihood before driving them out of their business.

Coming to my constituency of Madras City, I represent Thyagaraya Nagar and it represents in miniature all the parts of City. We in the Corporation have been pleading for many amenities. The Corporation was asked to borrow from L.I.C. for various schemes of Corporation. Instead of Government helping it the Corporation had to seek loans from L.I.C. We got Rs. 5 crores from L.I.C. but we were asked to put it in deposit with Reserve Bank on the account of 'State Government'. Why should the Corporation then borrow? I have a shrewd suspicion that on account of over-drafts with the Reserve Bank, Government had been forced to borrow this money through us.

Coming to rural development, we find that the roads in City are in bad condition. (Thiru N. Veerasamy: Rural development does it including City). I mean the condition of roads is not happy So far as Veeranam is concerned, the allocation is only Rs. 2 crores in 1971-72 and in 1972-73, we do not find bigger allocation but only Rs. 2 crores. They ought to have provided Rs. 7 crores during 1972-73 if they wanted to complete the scheme in 1973. I do not want to take up your time, Sir.

MR. DEPUTY SPEAKER: Not my time, but the time of the House.

THIRU K. M. SUBRAMANIAM: Coming to the last point and very important point, so fas as Madras City is concerned elementary education is the sole responsibility of the Corporation During the year 1919 an Act was drafted and we have gone back tto the same Act by the present Act. We have gone 50 years back. Elementary education has to be managed with the education cess which the Corporation is collecting as a percentage on property tax. The entire City children are to be educated by the Corporation of Madras. I think it is very reasonable instead of giving a surplus Budget, the Corporation should have been given a cent per cent matching grant on educational cess. If the Corporation has collected Rs. 100 crores by way of education cess, the Corporation must be given Rs. 100 lakhs. But the Government is giving only Rs. 50 lakhs now following the same 1919 British Act. The pro-socialist, poor man's Government is continuing the practice of British regime of 1919. How can we work, how can we develop? How can be carry on?

I am very happy about the last paragraph in the Chief Minister's Budget speech. He has brought in there the State Autonomy question. There are many who have discussed it without understanding it. Perhaps either I have not understood or they have not understood what the Chief Minister has said. The Chief Minister has categorically stated there and he has used a wrong term 'State Autonomy'. What he wants is more powers to do better things. If that is the case, no body will have quarrel, provided these powers asked for are reasonable powers, powers asked for are the result of the experience of administration during the last 23 years. If there is difficulty, let us sit down together and solve the difficulties. If prices are increasing and if it is because of the Government of India, let all the Ministers meet



together and sit down and discuss how to solve it. That is the way to do it and not by getting out of the Union. State Autonomy according to English dictionary is a power to do without anybody's compulsion. I think once India minus Burma was India. India minus Burma and Ceylon was India. Today India minus Burma, Ceylon, East and West Pakistan is India. India minus Burma, Ceylon, East and West Pakistan and Tamil Nadu should not be India. We do not want that. All that we want is, we should be united. We should continue like this. But wherever there is difficulty, you can solve it.

Some hon. Members suggested that finance should be improved. Suppose income-tax is given to us, can we manage? I am very clever businessman and I have been in business. I will have a shop in Madras. I will sell an article costing one rupee at Rs. 1.50 at Madras. If income-tax is State business I will have my shop in Calcutta, another branch, no shop actually but on paper, that is, letter-head, bill book, etc. I will have another shop in Gujarat, another shop in Trivandrum and I will say I will give a bill from Trivandrum for Rs. 1.50, I will give a bill from my shop in Calcutta for Rs. 1.20, 1.40 or 1.50. That is all I have seen during British days happening. That is the reason why great intellectuals like Dr. Ambedkar and Sir Alladi Krishnaswami Iyer and other people sat together and discussed about evasion of tax. All these things have to be done calmly and they cannot be done overnight. So far as finance is concerned, definitely we will be, our party will be with the ruling party to demand a higher share or even a share out of surcharge as the Hon. Chief Minister has put it.

Now, Sir, my only request to the Hon. Minister for Sales Tax is this. Unfortunately he is not in the Assembly. I have a last request to make. Please avoid this surcharge, and remove this surcharge. It does not bring us anywhere. What is the use of having a surcharge of 5 per cent? You have got a surplus Budget. This is the time to avoid the surcharge. This surcharge is creating a lot of difficulty and a lot of false accounts and so that should be avoided.

As far as urban land tax is concerned, it is the property of the Corporation of Madras. It is the Corporation of Madras that gives roads drainage, and water-supply. It is the Corporation that

[Thiru K. M. Subramaniam] [1972 மார்ச் 6

has increased the value of the properties. If the Government is fair and just, I think the Government should give the entire urban land tax collection from the City of Madras to the Corporation to supplement their income. Thank you, Sir.

**திரு. வை. பாலசுந்தரம்:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தின் நம்முடைய தமிழக முதல்வர் புதுமை மனம் காட்டி, புரட்சிக்கனல் தெறிக்கும் பொன்னுரையாய் ஒவ்வொரு சமுதாய மக்களினுடைய பாதுகாக்க வேண்டிய பொறுப்புகள் நம்முடைய கரங்களிலே தவழ்ந்து, 2½ கோடி ரூபாய் உபரி வருவாயைக் கொண்ட இந்த நிதிநிலை அறிக்கையை மனமார வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1972-73-ம் ஆண்டுத் திட்டப் பணிகளுக்காக மத்திய சர்க்கார் 45 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது. அதை இதே ஆண்டில் திருப்பிக் கொடுக்கும்போது 53 கோடி ரூபாயாகத் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்நிலைமையில் இருக்கிறது. ஓராண்டுக் காலத்திற்குள் மத்திய சர்க்கார் கொடுத்த 45 கோடி ரூபாயை 53 கோடி ரூபாயாகத் திருப்பித் தரவேண்டுமென்று சொல்லப்படுகிற நிலையில் ஏறத்தாழ 8 கோடி ரூபாய் வட்டியாக மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் தரவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. இப்படிப்பட்ட சங்கடமான சூழ்நிலை மனிதாபிமானத்திற்கு ஒத்ததா என்பதை மத்திய சர்க்கார் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட சங்கடமான சூழ்நிலையிலே நம்முடைய தமிழக சர்க்கார் தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்னும் சொல்லப்போனால் இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநில முதலமைச்சரும் எடுக்காத அளவுக்கு நல்ல முடிவுகளை, புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்திக் கொடுத்திருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைய வேண்டிய நிலையிலே இருக்கிறேன். அப்படிப்பட்ட நிலையிலே தமிழகம் இந்தியத் துணைக் கண்டத்திற்கே முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் விளங்குகிறது.

வேளாண்மைத் துறையில் பசுமைப் புரட்சியின் மூலமாக மகத்தான மாறுதலை இன்றைக்குச் செய்து காட்டியிருக்கிறது. அதன் அடிப்படையில் பார்க்கும்போது கடந்த ஆண்டில்



1972 மார்ச் 6] [திரு. வை. பாலசுந்தரம்]

செய்த நிலைக்கு
ஏறத்தாழ 59 லட்சம் ஏக்கர் நிலத்தில் பயிர் விளைவிப்பதற்கான
மாறாக, நடப்பு ஆண்டில் 66 லட்சம் பயிரை இதை எப்படிச் செய்திருக்
சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. விவசாயப் பெருங்குடி
கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கும்போது கடன்களை
மக்களுக்கு அவர்களுடைய மனம் கனியும் அளவுக்கு நம்முடைய
வழங்கியிருக்கும் தன்மையைப் பார்க்க வேண்டும். கடன்களை
அரசு எந்த அளவுக்குத் தாராள மனப்பான்மையோடு 1967-ல் சுமார்
வழங்கியிருக்கிறது என்ற கணக்கைப் பார்த்தால், நடப்பு ஆண்டில்
31 கோடி ரூபாய் தான் வழங்கப்பட்ட நிலையிருக்க கடன்களாக வழங்கப்
சுமார் 61 கோடி ரூபாய் விவசாயிகளுக்குக் இன்றைக்கு மிகப் பெரிய
பட இருக்கிறது. விவசாயத் துறையில் காட்டியிருப்பது ஒரு
புரட்சியை. பசுமைப் புரட்சியைச் செய்து
சிகரமாகத் திகழுகின்ற அளவுக்கு இருக்கிறது.

தமிழக அரசு செய்கிறவைகள் நாட்டின் நலனுக்காக என்று
சொல்லப்படுகிற அடிப்படையில் இன்றைக்கு மின்விளக்கு எரியாத
ஊர்களே இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
மின்விளக்கைக் காணாத கிராமமே இல்லையென்ற நிலை ஏற்படுத்தப்
பட்டிருக்கிறது. அந்த வகையில் இந்த ஆண்டு 51,000
கிராமங்கள் மின் விளக்குகளைப் பெற்றிருக்கின்றன. இதைவிட
மகிழ்ச்சியான ஒன்று 1967-க்கு முன்பு அரிசனக் காலனிகளில்
2,500 கிராமங்களில்தான் மின்விளக்குகள் பொருத்தப்பட்ட
சூழ்நிலை இருந்தது.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை
ஏற்றவுடன் இந்த நடப்பாண்டில் 15,000 ஹரிஜனக் காலனிகளுக்கு
மின் விளக்குகள் அமைத்துத் தந்திருக்கிற பெருமை இந்த
அரசைச் சாரும்.

தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள், அடித்தளத்தில் தாழ்ந்து
வீழ்ந்திருக்கின்ற மக்கள் உயர்மட்டத்திற்கு வரவேண்டும்,
அவர்களது வாழ்க்கை மாங்குயில் கூவும் பூஞ்சோலையாக மாற
வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் தமிழக
முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் எட்டு கோடிக்கு மேலாக
ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்
கருதி என்றால், அவர்களது பெருந்தன்மையை உள்ளபூர்வமாக

நான் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதி என்ற முறையில் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே அடிப்படையில் இந்தச் சர்க்கார் நிலச் சீர்திருத்தத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தைச் செய்திருக்கிறது. இந்திய கம்யூனிஸ்டு தோழர்கள் பேசலாம், எந்தெந்த முறையில் இந்த சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் காரணங்கள் காட்டினாலும் இன்று இந்திய வரலாற்றிலேயே புரட்சிகரமாகச் செய்யப்பட்டிருக்கிற இத்திட்டத்தினைக் கூர்ந்து கவனிக்கிறபோது 1961-ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சி உச்சவரம்பு கொண்டு வருகிறோம் உச்சவரம்பு கொண்டு வருகிறோம் என்று சொல்லிச் சொல்லி காலம் கடத்தியபோதே இல்லாத அளவிற்கு சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் கழக ஆட்சி உச்சவரம்பு கொண்டு வருகிற சட்டத்தைப் பிரகடனப்படுத்தி உடனடியாக ஒரு ஆளுக்கு 15 ஏக்கராவுக்கு மேல் இருக்கக்கூடாது என்ற நிர்ப்பந்தத்தை நிலைநாட்டிக் காட்டியது. இன்றையதினம் அதைவிடத் தீவிரமாக, அதைவிடப் புரட்சிகரமாக, அதைவிட வேகமாக ஒரு குடும்பத்திற்கு 60 ஏக்கர் என்ற வகையில் நிலைமையை மாற்றி 40 ஸ்டாண்டேர்ட் ஏக்கர்கள்தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற ஒரு முடிவை, மகிழ்ச்சிகரமான தித்திக்கும் செய்தியை இந்த அவையில் நமது முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்று நான் கூறும்போது முதல்வர் அவர்களது பெருந்தன்மை மட்டுமல்ல. ஏழை எளிய மக்கள் மீது, அடிமட்டத்தில் வீழ்ந்து கிடக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் மீது அவர்களுக்குள்ள அக்கறையை எடுத்துக் காட்டுகிறது. அவர்கள் அத்தனை பேர்களும் மனமுவந்து முதல்வர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள் இப்படிப்பட்டதொரு புரட்சிகரமான திட்டத்தை உருவாக்கித் தந்ததற்காக.

இப்படிப்பட்ட நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு வருகிற தருணத்தில் வெளியில் பேசப்படுகிறது. வட்டம், மாவட்டம், இதெல்லாம் சுத்த மட்டம் என்று வெளியிலே பேசப்படுகிறது. வட்டச் செயலாளர்கள் வளம் கொழிக்கும் நிலையை அடைந்துவிட்டார்கள் என்று பேசுகிறார்கள். மாவட்டச் செயலாளர்கள் லட்சாதிபதிகளாக மாறிவிட்டார்கள் என்று பேசுகிறார்கள்.





நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்வேன். இன்று மதிப்பிற்குரிய பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் ஊர் எல்லாம் சென்று பேசி வருகிறார்கள். அமைச்சர்களைப் பற்றிக் கூறுகிற நேரத்தில் அமைச்சர்கள் இன்று லட்சம் லட்சமாகக் குவித்துக் கொண்டு, அவர்கள் தங்கள் வாழ்க்கையை வளம் கொழிக்கக் கூடிய வாழ்க்கையாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் சொல்லி வருவதைக் கண்டு மிகவும் வேதனைப்படுகிறேன். அவர்கள் பெரும் தலைவர். அப்படிப்பட்டவர் இப்படிப்பட்ட சிறிய விஷயத்தில் தம்மை ஆட்படுத்திக் கொண்டு உணர்ச்சி வசப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படிப்பட்ட பெரும் தலைவர் அமைச்சர்களின் தரத்தைக் குறைத்துப் பேசுவது மட்டுமல்ல. அவர்களைப் பற்றிப் பேசும் போது லட்சம் லட்சமாகக் குவித்து விட்டார்கள் என்று குற்றஞ்சாட்டிப் பேசுகிற நேரத்தில், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு உங்கள் நினைவைக் கொண்டு செல்ல விரும்புகிறேன். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த நேரத்தில் ஹைதராபாத் பாங்கில் ஏறத்தாழ ஒன்றரைக் கோடி ரூபாய் அவர்களது சொந்தப் பொறுப்பில் முதல் இருக்கிறது என்று முக்கியமான பல நகரங்களின் முக்கியமான பல வீதிகளில் அச்சடிக்கப்பட்டு போஸ்டர்கள் போடப்பட்டன. அது பத்திரிகைகளின் மூலமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் காமராஜ் அவர்களின் பெயரில் ஹைதராபாத் வங்கியில் பணம் இருப்பதாகக் கூறுவதை உறுப்பினர் அவர்கள் நிரூபிப்பதற்குத் தயாராயிக்கிறார்களா? அதற்குப் போதிய ஆதாரம் அன்னார் கைவசம் இருக்கிறதா? அல்லது அவர்களது கட்சிக்காரர்கள் கைவசமாவது இருக்கிறதா? இந்த மாதிரியான குற்றச்சாட்டுகளை யார் வேண்டுமானாலும் சொல்லலாம். பொதுவாக உறுப்பினர்கள் இந்த மாதிரியான குற்றச்சாட்டுகளைச் சாட்டும்போது அதற்குத் தகுந்த ஆதாரங்களோடு எழுப்புவதுதான் பொருத்தமாக யிருக்கும் என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். தலைவர்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 6

காமராஜ் அவர்களுக்காக வேண்டி நான் இங்கே வாதாடவில்லை. அப்படி ஏதாவது தவறுகள் இருந்தால் நாங்கள் அதைச் சந்திப்பதற்குத் தயாராகயிருக்கிறோம் என்பதை நான் தங்கள் மூலம் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

**திரு. திருப்பூர். ஏ. எம். மொய்தீன்:** தலைவர் அவர்களே. பொருத்தமில்லாததும், ஆதாரமில்லாததுமான தகவல்களை யாரும் கொடுப்பது நல்லவை முறையானதல்லயென்பதை இந்தப் பேரவை ஒப்புக் கொள்ளும். காமராஜ் அவர்களைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டதுபோல் எனது பெருமதியாதைக்குரிய காங்கிரஸ் உறுப்பினர்களும் அமைச்சர்களைப் பற்றி பல கருத்துக்களை வெளியிடுவதும் உண்டு. அம்மாதிரிக் கருத்துக்களை வெளியிடுகிறபோது அதுவும் கேள்வி ஞானத்தோடுதான் வெளியிடப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அதுபோன்று தான் இதுவும் கேள்விஞானம்தான். அப்படி போஸ்டர்கள் ஒட்டியிருந்தார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே நான் சொல்வது என்னவென்றால். உண்மையாகவே அம்மாதிரி நிலைகள் இருக்கின்றன என்றால் ஆதாரத்தோடும், புள்ளி விவரத்தோடும் அவற்றை இந்த சபையில் சமர்ப்பிப்பார்களேயானால், அது மிகவும் பெருமை வாய்ந்ததாக இருக்கும், பொருத்த முடையதாகவும் இருக்கும். சிந்திப்பதற்குரியதாகவும் இருக்கும் என்பதை மிருந்த அன்போடு தங்கள் சார்பில் வேண்டிக் கொள்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்:** அதைத்தான் நானும் சொல்கிறேன். ஆதாரத்தோடுதான் எதையும் சொல்லவேண்டும் என்பதற்காகத் தான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நேற்று முன் தினம் இந்த மன்றத்தில் பேசப்பட்டதை எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆதாரமற்றச் செய்திகளை சொன்னார்கள். ஆதாரமுள்ள செய்தியை நான் கூறு கிறேன். அவர்கள் இல்லை என்றால், அதை மறுத்தால் அதை ஒப்புக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒன்று, மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக ஹைதராபாத் பாங்கில் ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு அவருக்கு பற்று இருந்தது. அதை விளம்பரங்கள் மூலம், போஸ்டர்கள் மூலம் சொல்லப்பட்ட நேரத்தில் காமராஜர் அதை உண்மை என்று ஒப்புக்கொள்ளவும் இல்லை. அப்படிக்



1972 மார்ச் 6] [திரு. வை. பாலசுந்தரம்]

கூறுவது உண்மைக்குப் புறம்பான செய்தி என்று காமராஜர் மறுக்கவும் இல்லை. அதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்று கேட்டுக்கொள்ளப் பிரியப் படுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அது உண்மை என்று உறுப்பினர் அவர்கள் நம்புகிறார்களா? அந்தக் குற்றச்சாட்டை மறு முறையும் இந்த மன்றத்தில் அவர்கள் கூறுகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்:** அந்தப் பெரும் தலைவருக்குப் பழி வரக்கூடாது என்ற நல்லெண்ணத்தோடுதான் இதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அப்படி இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினால் மெத்த மகிழ்ச்சியோடு நான் அதை ஒப்புக் கொள்வேன். அரசியல் நாகரீகப்படி அதை ஏற்றுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதே அரசியல் நாகரீகத்தை பழைய காங்கிரஸ் கட்சி நண்பர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அதுகுறித்து விளக்கமாகக் கூறினேன்.

**THIRU K. M. SUBRAMANIAM:** Sir, on a point of order, I would like to know, under what head, reference to Rs. 1 crore and 50 lakhs is made in this House now.

**திரு. வை. பாலசுந்தரம்:** இப்படிப்பட்ட சங்கடங்கள் எதிர் காலத்தில். . . .

**DR. H. V. HANDE:** Sir, I request the Chair to give a
decision on the point, whether such highly insinuating charges
can be made against anybody and for that matter any leader and
whether it is going to be allowed. If it is going to be allowed,
every Member of this House should be allowed to make any
charges against Ministers. I am going to make such charges
against every Minister and against all Ministers. So, I want a
ruling from the Chair whether he is going to expunge it or allow
it.

என்று
அப்படிப் பேசிக்கொள்கிறார்கள், இப்படி பேசுகிறார்கள்
பேசுவது தவறு. எனக்கும் அப்படிப் பேச சாமார்த்தியம் இருக்
கிறது.

I except a clear ruling from the Chair.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதை நான் முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்கிறேன். பாதி ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் மிச்சப் பகுதியை—நான் இருந்தபோதே அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். அமைச்சர்கள் மீதும், எல்லா அமைச்சர்கள் மீதும் இதுபோல் குற்றம் சாட்டுவேன் என்று தயவுசெய்து அமைச்சர்களைப் பயமுறுத்த வேண்டாம். குற்றஞ் சாட்ட அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதைத் தாராளமாகச் சாட்டலாம். அதற்குண்டான பதிலைச் சொல்ல நாங்கள் கடமைப் பட்டிருக்கிறோம்.

தலைவர் காமராஜ் பற்றி இப்போது திரு. பாலசுந்தரம் பேசியது சரி என்று ஏற்றுக்கொண்டு, ஆமாம், அவர் பேசியது சரிதான் என்று சொல்லவில்லை. எங்களைப் பார்த்து அமைச்சர்களின் மீது நான் குற்றம் சாட்டுவேன், தெரியுமா, ஜாக்கிரதை என்று பேசுவது முறை அல்ல. அப்படிப் பயமுறுத்தினால் அந்தச் சவாலை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறோம். நண்பர் பாலசுந்தரம் பேசியது அவசியமில்லாத ஒன்று. அதை சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுவதில் ஆட்சேபணை யில்லை. அவற்றை நீக்கிவிடலாம் என்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(MR. DEPUTY SPEAKER IN THE CHAIR)

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a point of order. The hon. Member is speaking something which has absolutely no relevance to the Budget. Just because he enjoys immunity as a Member of the House, he should not say that Rs. 1½ crores. . . .

MR. DEPUTY SPEAKER: Relevance is a big question—

THIRUMATHI T. N. ANANDANAYAKI: It is patently irrelevant. When the hon. Member enjoys immunity, he has got some responsibility and he cannot say anything he likes . . .

THIRU R. PONNAPPA NADAR: Sir, I would like to raise a point of order. The hon. Member has been saying that there are certain allegations against our revered leader, Thiru Kamaraj, who is not before this House. If any allegation is mad against



the Government, Ministers are here to defend them whereas Thiru Kamaraj is not present in the House to defend himself and on his behalf we the Members of his Party have to speak and we do not have direct knowledge. But the Ministers are in possession of records to rebutt whatever allegation is made against the Government. We do not have that advantage. Such an allegation made against Thiru Kamaraj is out of taste and it is not in good humour. Also the immunity enjoyed by the Members should not be abused on the floor of the House and the Chair may give a ruling on the point, whether the immunity is absolute and whether he can make any statement without substantiating it . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, வெளியே இருக்கிற கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்கிற போது, உள்ளபடியே அதற்கான ஆதாரங்களை வைத்துக் கொண்டு இந்தச் சபையிலே பேசவேண்டும். வெளியே உள்ளவர்களைப் பற்றிய குற்றச்சாட்டுகளைச் சொல்கிறபோது, அவர்கள் அந்தக் குற்றச்சாட்டுகளை இங்கே மறுக்க முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளை, கருத்துக்களைச் சொல்லக் கூடாது. அப்படித்தான் இந்த மன்றம் கடைப்பிடித்து வரும் நியதியாகும். இங்கே இருப்பவர்களைப் பற்றி குற்றச்சாட்டு சொன்னால், அதற்கு அவர்கள் பதில் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அப்படிப் பேசும்போது கூட சில பல ஆதாரங்களை வைத்துத்தான் பேச வேண்டும். ஆதாரங்கள் இல்லாமல் பேசுவது, குற்றச்சாட்டு சாட்டுவது முறையாகாது. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டது போன்று அந்தத் தொடர்களை இந்த நடவடிக்கை குறிப்பிலிருந்து எடுத்து விடுவது நல்லது. அவர்கள் இந்த பட்ஜெட்டைப் பொறுத்த கருத்துக்களையும். அத்துடன் ஒட்டி வருகிற நிகழ்ச்சிகளைப் பற்றியும் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் இந்த மன்றம் பயன் பெறத் தக்க அளவில். அத்தகைய கருத்துக்களைக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோப்பூர் திருவேங்கடம்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நேற்றைய தினம் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் முன்பு இருந்த நிலைமை என்ன என்று நிலைமை என்ன. இப்போது இருக்கிற

பேசினார்கள். அவையில் இல்லாத பல வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் இருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டுக்கும், மாவட்டச் செயலாளர்களுக்கும் என்ன சம்பந்தம் என்று நினைத்து அவர்கள் சொன்னார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சபையில் இல்லாதவர்களைப் பற்றி கூடியவரையில் பேசாமல் இருப்பது நல்லது. அவர்கள் சபையில் கூறப்பட்ட கருத்துக்களுக்கு மறுப்புக் கூற முடியாது. சபையில் பேசுகிறபோது ஆதாரத்தோடு குற்றச்சாட்டு சொல்லுங்கள். ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது.

**திரு. ஜே. எஸ். இராசு :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். விவாதத்தை துவக்கிய மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. சுவாமிதாஸ் அவர்கள் மாவட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் ஆகியோரைக் குறித்துப் பேசினார்கள். காமராஜைப் பற்றிய பிரச்னை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமானால், மாவட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் ஆகியோர் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய கருத்துக்களையும் குறிப்பிலிருந்து நீக்கப்படுவது நியாயமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதற்கு நேற்றே முதலமைச்சர் அவர்கள் கேட்டு, அதற்கு விளக்கம் கொடுக்கப்பட்டு, அது முடிந்து விட்டது. நீங்கள் ஆதாரத்தோடு சொல்ல முடியுமா? இல்லையென்றால் சபையின் நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கம் செய்யப்படும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** 3 ஆண்டுகளுக்கு முன்பு இப்படிப்பட்ட நிகழ்ச்சி முக்கியமான வீதிகளில் சுவரொட்டிகள் மூலம் போடப்பட்டிருந்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதை இந்தச் சபை ஏற்றுக் கொள்ள முடியாது. திரு. பாலசுந்தரம் அவர்கள் காமராஜரைப் பற்றி சொன்ன குற்றச்சாட்டுகளை இந்தச் சபையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கம் செய்ய உத்தரவிடுகிறேன். *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் தீர்ப்பையொட்டி இப் பகுதிகள் நடவடிக்கை குறிப்பில் சேர்க்கப்படலாம் என ஆணையிடப்பட்டு அவை நீக்கப்படவில்லை.





**திரு. வை. பாலசுந்தரம் :** அப்படிப்பட்ட அரசியல் நாகரீகம் பழைய காங்கிரஸ் நண்பர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே. காமராஜர் அவர்களைப் பற்றி சொன்னதை நீக்கினீர்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் உரையில் ஒரு பொடியை வைத்துவிட்டு போய் இருக்கிறார்கள். நாளைக்கு அது பெரியதாக வரும். அதையும் நீக்கிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. பாலசுந்தரம் அவர்கள் காமராஜரைப் பற்றி சொன்னதிலிருந்து. என்னுடைய தீர்ப்பு வரையில் இந்தச் சபையின் நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்*.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட பேச்சுக்கு காரணமே. அருமை பழைய காங்கிரஸ்காரர்கள் தான் என்பதை நான் மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்தச் சப்ஜெக்டை நீங்கள் விட்டு விடுங்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, does the hon. Member **want to create scene here? If he does not** want any Opposition Party to function here, we are prepared to go out . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. பாலசுந்தரம். அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்ட பிறகு, அந்த சப்ஜெக்ட்டுக்கு போகாமல் இருப்பது நல்லது.

**திரு. வை. பாலசுந்தரம் :** அந்தப் பிரச்னைக்குப் போகவில்லை. அந்தப் பிரச்னையை ஒட்டியிருக்கும் கருத்துக்களைப் பற்றி சொல்ல உரிமையில்லையா? மாண்புமிகு பெரும் தலைவர் அவர்களை நான் மதிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த சப்ஜெக்டே வேண்டாம். நீங்கள் சொல்வது எல்லாம் வேண்டாம். அவர்களை குறை சொல்லவும் நீங்கள் மதிக்கவும் வேண்டாம். பிறகு இந்த வரவு-செலவு திட்டம் பற்றி மட்டும் பேசுங்கள்.

**We need not create bad taste here.**

**திரு. வை. பாலசுந்தரம்:** நான் ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட பிரச்னைகளைப் பற்றி பேசுகிற போது அப்படிப்பட்ட தலைவர்களைப் பற்றியும், பிரமுகர்களைப் பற்றியும், இந்தச் சபையில் இல்லாததால் பேசக்கூடாதா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்தச் சபையில் இல்லாதவர்களைப் பற்றி பலமுறை இந்தச் சபையில் பேசப் பட்டிருக்கிறது. விமர்சிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தாலேயே. அந்தத் தலைவர்கள் இந்தச் சபையில் இல்லா விட்டாலும் அவர்கள் பிரச்னைக்குரியவர்கள் என்ற காரணத்தினால் இப்படிப்பட்ட விவாதங்கள் எழுப்ப வேண்டியிருக்கிறது. அப்படிச் சொல்லி வருகிற வகையில் தான் பெரியவர் காமராஜர் அவர்களைப் பற்றியும். . .

THIRU R. PONNAPPA NADAR: Is the hon. Member abiding by the ruling of the Chair?

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவு செய்து அத்தனை பேரும் உட்காருங்கள். இந்தச் சபையில் இல்லாதவர்களைப் பற்றி பேசக்கூடாது என்று சட்டம் கிடையாது. பேசலாம். நல்ல ஒரு விவாதத்திற்குரிய பிரச்னையாக இருக்குமானால் பேசலாம். அதை விட்டு சபையில் பெரிய உணர்ச்சியை ஏற்படுத்துவது நல்லதல்ல. நீங்கள் சொல்கிற குற்றச்சாட்டு பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தால், நடவடிக்கை குறிப்புகளில் காணப்பட்டவையாக இருந்தால் பேசலாம். விவாதத்திற்குரிய பிரச்னைகளை பேசக் கூடாது. சபையில் இல்லாதவர்களைப் பற்றி பேசக்கூடாது.

**திரு. வை. பாலசுந்தரம்:** எனவே விவாதத்திற்குரிய பிரச்னையை. . .

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஒளாரிபிகேஷன். திரு. பாலசுந்தரம் அவர்கள் காமராஜர் அவர்களை மதிக்கிறேன் என்று சொன்னார்களே, அதையும் நீக்கி விட்டார்களா, அதுவும் இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நோ கிளாரி பிகேஷன்.



**திரு. வை. பாலசுந்தரம்:** அந்த வார்த்தையைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய தலைவராக கருதப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் இன்னொரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அது தெளிவாக பத்திரிகைகளில் வந்திருக்கிறது. இதற்கு மாத்திரம் ஆதாரம் உண்டு இன்று இல்லாவிட்டாலும், நாளை மறு நாள் கொடுக்கிறேன் கள்ள நோட்டுக்கும், காமராஜருக்கும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம். அதை விட்டு விடுங்கள்.

**திரு. வை. பாலசுந்தரம்:** பத்திரிகையில் வந்திருக்கிறது. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள் சொல்லுகிறேன். பத்திரிகைச் செய்திகளையும், சுவர் ஒட்டிகளையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு நாம் இங்கே பேசக்கூடாது.

**திரு. வை. பாலசுந்தரம்:** ஒரு முடிவுக்கு வரவேண்டும். .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை உறுப்பினர் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவைத்தலைவர் செய்வார்கள். நீங்கள் அதை விட்டு விட்டு பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** 'காமராஜர் கள்ள நோட்டு' என்று சொன்னதையெல்லாம் 'எக்ஸ்பஞ்ச்' செய்து விடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை விட்டு விட்டு, வேறு பொருள்பற்றிப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவாதிக்க வேண்டிய, பல முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைப் பேச வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர் களே, மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களின் வாதங்களுக்கு வெளியிலே உள்ளவற்றை ஆதாரங்களாகக் காட்டக் கூடாது என்று மன்ற விதிகளில் இல்லை. தன் கருத்துக்களுக்கு ஆதாரத் தோடு பேச, வெளி நிகழ்ச்சிகளை முறைப்படுத்திச் சொல்வது விதிகளுக்குப் புறம்பானது அல்ல. ஆனால் வெளியிலே இருக்கிற வர்கள் மீது குற்றச்சாட்டுகள் சாட்டும் போது அவர்களுக்குப்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 6]

பதில் அளிக்க முடியாத நிலை ஏற்படுகிறது என்பதால் அப்படிப் பட்ட குற்றச்சாட்டுக்களை சாட்டக் கூடாது என்பதுதான் விதி முறையாக இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையிலே, தங்கள் தீர்ப்பினை ஒட்டி, மாண்புமிகு உறுப்பினர் வரவு-செலவுத் திட்டத்தின் மீது கருத்துக்களைச் சொல்வது நல்லது, குற்றச் சாட்டுக்களை விட்டுவிட்டுப் பேசுவது நல்லது என்று கூறிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் 'கள்ள நோட்டுக்கும் காமராஜருக்கும்' என்று சொன்னதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவு இடுகிறேன்.* அத்தகைய முரண்பாடான கருத்துக்களை விட்டு விட்டு, வேறு பொருளைப் பற்றிப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தாங்கள் தீர்ப்புக் கொடுத்த பிறகு நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட உணர்ச்சி வசமான வாதத்தில் இப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லும் போது, நல்ல கருத்துக்களை இந்த மன்றத்திலே சொல்லுகிறோம். வெளியிலே பேசுவதானால் . . .

DR. H. V. HANDE : On a point of Order, Sir. I would like to know what he is referring to by saying " இப்படிப்பட்ட " The Hon. Deputy Speaker has given a clear ruling that he has to completely leave the subject and go to another subject. Whenever I had been speaking and whenever the Chair had directed me to go to another subject, I respectfully obeyed the Chair and went to other subject. May I respectfully submit to the Chair by saying " இப்படிப்பட்ட " the hon. Member is referring to an expunged matter. We are not even competent to refer to expunged matter. I respectfully submit to the Hon. Deputy Speaker that the hon. Member should respect the Chair.

MR. DEPUTY SPEAKER : This is not a class-room. This is Assembly. We have got some limitations. Even the Chair has got its limitations. We cannot dictate or direct with full authority.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் தீர்ப்பையொட்டி இப்பகுதி நடவடிக்கைக் குறிப்பில் சேர்க்கப்படலாம் என்று ஆணையிடப் பட்டு, அது நீக்கப்படவில்லை.



1972 மார்ச் 6] [Mr. Deputy Speaker]

இப்படிப்பட்ட does not mean so much. It is a vague word. So many things have happened in this House.

DR. H. V. HANDE : He is referring to an expunged matter.

THIRU R. PONNAPPA NADAR : That amounts to reflection.

MR. DEPUTY SPEAKER : I think we are not so minute and strict in this House.

உறுப்பினருக்கு அதிகமாக இடைஞ்சல் கொடுத்தால் பேச முடியாது.

**திரு. வை. பாலசுந்தரம் :** அது எவ்வளவோ கருத்தைக் குறிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது முழுவதையுமே மறந்துவிட்டு, வேறு பொருள் பற்றிப் பேசுங்கள் என்று வேண்டு கோள் விடுக்கிறேன். கட்டளைகூட அல்ல.

**திரு. துரைமுருகன் :** குற்றமுள்ள நெஞ்சு குறு குறு என்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சபாநாயகருக்குத் தெரியும் யாருடையது குற்றமுள்ள நெஞ்சம் என்று.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவரவர் மனச் சாட்சிக்குத் தெரியும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** சமதர்ம சமுதாயத்தை நோக்கி பல சலுகைகளைக் கொடுத்து, நல்ல பல சாதனைகளை இந்த சர்க்கார் செய்து கொண்டிருக்கிறது. அதை நல்ல இதயம் பணம் படைத்தவர்கள் உணருகிறார்கள். ஆனால் சிலர் அரசியல் நோக்கத்தோடு, அரசியல் ஆதாயம் பெற சிலர் அவற்றை எதிர்க் கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல கருத்துக்களைச் சொல்லும்போது, மக்கள் மன்றம், வெளியிலே இருக்கிறவர்கள் கூர்ந்து கவனிக் கிறார்கள். கிராமப் புறத்திலேயிருந்து வருகிற உறுப்பினர் என்ற வகையில் அத்தகைய நிலைகளை நான் பார்க்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாநில சுயாட்சி என்பது ஒரு தத்துவப் போர் முறையாகும். மாநில சுயாட்சி என்பது இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, இந்தியா

[திரு. வை. பாலசுந்தரம்] [1972 மார்ச் 6]

பூராவிலும் அதுவே மையப் பொருளாக இருக்கிறது. இந்திய துணைக்கண்டம் மட்டுமின்றி, அகில உலகத்திலும் அரசியல் விற்பன்னர்கள் அந்தத் தத்துவம் என்ன என்று ஆராயும் தன்மையில் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது எங்கோ தெற்குப் பக்கத்தில் ஒரு மூலையில் எழுப்பப்படுகிறது அல்ல. அப்படி இங்கு மட்டும் ஒலிக்கிறது என்று யாரும் கருத மாட்டார்கள். எல்லா பாகங்களிலும் இருக்கிறது. பக்கத்திலே கேரளத்தில் ஒலிக்கிறது. அண்டை நாடான வங்காளத்தில் ஒலிக்கிறது. இருக்கின்ற அத்தனை மாநிலங்களிலும் மாநில சுயாட்சி என்பது நல்ல முறையில் பேசப்படுகிறது. அப்படிப் பேசும் ஒரு மையப் பொருளாக இருக்கிறது. இந்த மாநில சுயாட்சிபற்றி சென்ற ஒரு வார காலத்திற்கு முன் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்ற நாளிதழ் விமரிசம் செய்திருந்தது. அது இந்த மாநில சுயாட்சி என்பதால் தாழ்த்தப்பட்ட மக்கள் அநீதிக்குள்ளாவார்கள் என்று பாதிக்கும் வகையில் இருந்தது. உள் நோக்கத்தைப் பார்த்தால், இந்த மாநில சுயாட்சி என்பதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாழ வகை செய்யும் தத்துவம் உள்ளது என்பதை உணரமுடியும். வறுமையில் வாடும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இது நல்லதொரு பரிகாரமாக அமையும் என்பதை உள்ளத்தில் கொள்ளவேண்டும். அரசியல் காழ்ப்பு உணர்ச்சி காரணமாக மாநில சுயாட்சியை கட்சிக் கண்ணோக்கோடு பார்த்து அதை எதிர்க்கலாம் என்பவர்களுக்கு டாக்டர் முதல்வர் அவர்கள் அழகாக எடுத்து உரைத்திருக்கிறார்கள். மாநில சுயாட்சித் தத்துவத்தை வங்கத்தில் சொல்லிச் சொல்லி அலுத்தது. கடைசியில் பிரிவினை கோரும் நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. அந்த நிலைகள் ஏற்படாத வகையில் முதல்வர் கலைஞர் அவர்கள் உறுதியாகக் கூறியிருக்கிறார்கள்.

அப்படி ஒருமைப்பாட்டு சிந்தனை உணர்வை பட்டித் தொட்டிகளில் பரப்பி வரும் நோக்கில் எங்கள் மனம் புண்படும் அளவுக்கு நேற்று முன்தினம் என் நண்பர் சிதம்பரம் உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். 'அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு என்று சொன்னவர்கள்தானே இன்றைக்கு மாநில சுயாட்சி கேட்கிறார்கள்' என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லுகிற நோக்கில் வருத்தப்படுகிறேன். நியாயமான



1972 மார்ச் 6] [திரு. வை. பாலசுந்தரம்]

அடிப்படையில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இந்திய மக்கள் இந்திய ஒருமைப்பாட்டுக்கு உட்பட்ட மக்களாக வாழ வேண்டுமென்ற கருத்தில், முன்னேற்றக் கழகம் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டு ஜனநாயக ரீதியில், ஆரோக்கியமாக அரசியலை வளர்க்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி கேட்கிறது. ஆனால், பிரிவினைக் கண்ணோட்டத்துடன் பழைய காங்கிரஸ்காரர்கள் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறார்களே என்று எண்ணும் போது எனக்கே சந்தேகமாக இருக்கிறது, எங்கே திராவிட முன்னேற்றக் கழகம் விட்டுவிட்ட பிரிவினையை பழைய காங்கிரஸ் நண்பர்கள் எடுத்து பிரிவினை வேண்டுமென்று சொல்லி விடுவார்களோ என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. அந்த அச்சத்தை, சந்தேகத்தை நீக்குவதற்கு திருவாளர் பொன்னப்ப நாடார் அவர்கள் முன்வர வேண்டும். ஒற்றுமை சீலத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற பண்புள்ளத்துடன் மாநில சுயாட்சி கேட்கிறோம். மாநில சுயாட்சி என்றால் ஏதோ தனி நாடாக பிரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில், கருத்தில் பேசுகிறார்கள் என்ற எண்ணத்தைக் கொள்ளவேண்டாமென்று பழைய காங்கிரஸ் நண்பர்களுக்குத் தெரிவித்து, எதிர்காலத் தமிழகம் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக உருவாக்கும் திட்டங்களின் முற்போக்கு கருத்துப் பெட்டகமாக, கருவூலமாக இந்த நிதிநிலை அறிக்கையை ஒரு பொன்னேடாக மதித்து, நாலரைக் கோடி தமிழ்ச் சமுதாயத்தின் தலைவிதியை நிர்ணயம் செய்யும் சாசனமாக மதித்து இந்த நிதிநிலை அறிக்கையினை வரவேற்கிறேன். வணக்கம்.

**திரு. என். மருதாசலம்:** தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் தொழிலைப் பொறுத்த வரையில் திட்டவட்டமாக அறிவிக்கப்படவில்லை என்பது என்னுடைய கருத்து. அதாவது இதற்கு முன்னால் 5 மில்களை எடுத்து நடத்தியதாகக் கூறப்படுகிறது. 6 மில்களை எடுத்து நடத்துவதாக கூறியது அரசு. அது இதில் குறிப்பிடவில்லை. ஆகவே அந்த 6 மில்களை எடுத்து நடத்துவதற்கு மத்திய சர்க்கார் அனுமதி தரவில்லை என்று கூறப்படுகிறது. 'மத்திய சர்க்கார் அனுமதி தரவில்லை. மத்திய சர்க்காரைக் கேட்பதற்கு இங்கே இருந்து எம்.பி.க்கள் போய்

கேட்டும் கூட, அனுப்புகிறேன் என்று சொல்லியும், அனுப்பப்படவில்லை. ஆகவே, மத்திய சர்க்கார் அனுமதி அனுப்பாததால்தான் தொழிலாளர்கள் போராட்டம் என்பதால், இந்த அரசாங்கத்தின் மீது அதிருப்தியை ஏற்படுத்தும் நிலைமையை மத்திய சர்க்கார் உண்டு பண்ணுகிறது" என்று இந்த அரசாங்கமே ஒரு தீர்மானம் கொண்டு வரவேண்டும். அந்தத் தீர்மானத்தில் "மத்திய சர்க்கார் உடனடியாக எங்களுக்கு மில்களை எடுத்து ஓட்டுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும். அப்படி அளிக்காமல் இருந்தால் இந்த மாநிலத்தில் உள்ள, இந்தியா பூராவும் உள்ள தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வார்கள். அந்த வேலைநிறுத்தத்திற்கு மாநில சர்க்கார் ஆதரவு தரும்" என்று தீர்மானம் கொண்டு வந்தால், அந்தத் தீர்மானத்தை நாங்கள் பரிபூரணமாக ஆதரிக்கிறோம். அப்படிச் செய்தால்தான் இந்த மத்திய சர்க்கார் நமக்குப் பணிந்து வரும். தொழில்கள் முறையாக நடத்த முடியும்.

அடுத்தபடியாக, இன்றைக்குத் தொழிலாளர்கள் மறியல் செய்தால் கைது செய்யப்படுகிறது. அதே சமயத்தில் பல முதலாளிகள் பல முறைகேடுகளை கையாள்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்படுவதில்லை. கோயம்புத்தூரில் தொழிலாளர்களிடத்திலிருந்து பிடித்த பிராவிடெண்ட் ஃபண்டு பணம் 85 லட்சம் ரூபாய் அரசுக்கு அவர்கள் கட்டவில்லை. அந்த முதலாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் ஒன்றுமே இல்லை. அதே சமயத்தில் குறிச்சி சாரதா மில் ஆனது 15 லட்சம் ரூபாய் அரசாங்கத்தில் வாங்கி மில்லை நடத்தினார்கள். அந்த மில்லை இன்றைக்கு காரணமின்றி சாத்தி விட்டார்கள். அந்த முதலாளிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அரசாங்கத்தை ஏமாற்றும் முதலாளிகள் பேரில் தக்க நடவடிக்கை எடுத்து அவர்களைக் கைது செய்ய வேண்டும். அப்போது தான் பல முதலாளிகள் பயப்படுவார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அரிஜனங்கள் விஷயமாக ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அரிஜனங்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறினால் மட்டும் போதாது. சமுதாயத் துறையிலும் முன்னேற வேண்டும் என்று இந்த



வரவு—செலவுத் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. சமுதாயத் துறையில் அவர்கள் முன்னேற வேண்டுமானால், பொது ஸ்தாபனங்களில் அவர்கள் அங்கம் வகிக்க வேண்டும். அப்படி அங்கம் வகிக்க அரசு உதவி செய்யவேண்டும். இன்றைக்கு கோயம்புத்தூரில் சூப்பர் மார்க்கெட் இருக்கிறது. அரசாங்கத்தின் அனுமதி பெற்றுத்தான் இருக்கிறது. அந்த சூப்பர் மார்க்கெட்டில் ஆயிரக்கணக்கான பணியாளர்கள் இருக்கிறார்கள். அதில் இன்றைக்கு பணியாளர்களாக இருப்பவர்களில் பள்ளன், பறையன், சக்கிலியன் ஒருவன் உண்டா என்று கேட்டால், கிடையாது. அதே சமயத்தில் அதற்கு ஒரு கமிட்டி அமைத்திருக்கிறார்களே. சூப்பர் மார்க்கெட்டிற்கு, அதில் தாழ்த்தப்பட்டவர்கள் யாராவது உண்டா? இன்றைக்கு இருக்கின்ற நிலவள வங்கியில் 'நாமினேடட் மெம்பர்' தாழ்த்தப்பட்டவர் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. யாராவது அப்படி தாழ்த்தப்பட்டவர்களை சேர்த்திருக்கிறதா என்று கூறவேண்டும். இன்றைக்கு கோயில்களில் டிரஸ்டிகள் போடுகிறார்கள். அப்போது காங்கிரஸ்காரர்கள் காலத்தில் சின்னச் சின்ன கோயிலுக்கு டிரஸ்டியாக தாழ்த்தப்பட்டவர்களைப் போட்டால் போடுவார்கள். அப்படி தாழ்த்தப்பட்டவர்களைப் போட்டால் தான் மற்றவர்களுடன் பழகுவதற்கு உதவியாக இருக்கும். இப்போது அதுவே இல்லை. தாழ்த்தப்பட்டவர்கள் ஏதோ ஒன்றிரண்டில் தான் இருக்கிறார்கள். எந்தக் கோயிலிலும் தாழ்த்தப்பட்டவர்கள் அதிகம் கிடையாது என்பதை தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நியாயவிலைக்கடை என்று இருக்கிறது. அதில் கோயம்புத்தூரில் 150 கடைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது? 10 ஆவது 12 சதவிகிதம் கொடுக்கப்பட்டதா என்றால், இல்லை. கொடுக்கப்பட்டதா என்றால், இல்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறநிலையத் துறையில் தாழ்த்தப்பட்டவர் நியமனம் பற்றி கேள்வி எழுப்பினார்கள். எங்கள் ஊர் மாரியம்மன் கோயிலில் எஸ். பழனியப்பன் என்ற தாழ்த்தப்பட்ட நண்பர், இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர், அவரை டிரஸ்டியாக

போட்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை மீனாட்சி—சுந்தரேஸ்வரர் கோயில் தேவஸ்தானத் தலைவரே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்.

**திரு. என். மருதாசலம்:** தீர்மானம் கொண்டு வந்தால் ஆதரிக்கத் தயார் என்ற முறையில் தான் சொல்லிக் கொள்கிறேன். இந்த மாதிரி பொது ஸ்தாபனங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் அங்கம் வகித்தால் தான் மற்றவர்களுடன் பழக முடியும்; தங்கள் சமுதாயத்தை முன்னுக்குக் கொண்டு வர முடியும். அதுதான் சமுதாய முன்னேற்றம் என்று கருதப்படும். அது நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் அதை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும், என்று அரசாங்கத்திற்கு கூறிக் கொள்கிறேன்.

இன்றைக்கு சமுதாயத்தின் கீழ்த்தட்டில் இருப்பவர்கள் தமிழகம் பூராவும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த நகரசுத்தி தொழிலாளர்கள், அவர்கள் சாக்கடை மலம் வாரி இந்த நாட்டின் சுகாதாரத்தை பாதுகாக்கும் நகரசுத்தி தொழிலாளர்கள்—அவர்களுக்கு என்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது—அந்தக் கமிட்டி என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அவர்களுடைய குறைபாடுகளை நிவர்த்தி செய்து விசாரிப்பதற்கு ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டி என்னவாயிற்று என்று தெரியவில்லை. ஆகையால் இந்த நகரசுத்தி தொழிலாளர்கள் 19 கோரிக்கைகளை அரசின் முன்பு வைத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலித்து அவர்கள் வாழ்க்கை வளம் பெறுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில் இன்றைக்கு கல்வித்துறைக்கு அரசு பல கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அப்படி ஒதுக்கி இருந்தாலும் கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் இன்றைக்கு உண்ணா விரதம் இருக்கிறார்கள். ஒரு எம்.எல்.ஏ. தலைமையில் உண்ணா விரதம் இருந்திருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரிகிறது. அவர்களுடைய குறைபாடுகளை விசாரிப்பதற்கு நேரடியாகக் கூப்பிட்டு விசாரித்து அவர்களை திருப்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்தால் நலமாக இருக்கும். ஏனென்றால் ஆசிரியர்கள் தான் இந்த நாட்டில் எல்லா வகையிலும்



முன்னணியில் நிற்பவர்கள். அந்த ஆசிரியர்கள் குறைகளைக் களைவதற்கு தக்க நடவடிக்கை எடுத்து உடனடியாகக் கூப்பிட்டு விசாரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஏதோ கோடிக்கணக்கில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் முறையாகச் செலவிடப்படுகிறதா என்று பார்த்தால் அறவே இல்லை. இன்றைக்கு வட்டியில்லாக் கடன் என்று ஒவ் வொரு மாவட்டத்திலிருந்தும் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் அப்படி பெற்றிருக்கும் அங்கத் தினர்கள் 10 பேர் 5 பேர். அதற்கு மேல் இல்லை. இப்படித் தான் வட்டியில்லாக் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. தொழில் அபிவிருத்திக்காகக் கேட்கப்படும் விண்ணப்பங்கள் சரிவரக் கவனிப்பதில்லை.

அதுமட்டுமல்ல. பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற மாணவர் களுக்கு ஒழுங்காக ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுவதில்லை. இதை அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் கூட நான் சொல்லியிருக் கிறேன். போன பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட பணம் கூட இன்னும் கொடுக்கப்படவில்லை. ஆகையால் இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜன் வெல்பேர் ஆபீஸரிடம் கேட்டால், அவர்கள் ஸ்காலர் ஷிப் பணத்திற்கான செக் அனுப்பப்பட்டுவிட்டதாகச் சொல் கிறார்கள். பி.டி.ஓ. அந்த செக்கை உரிய காலத்தில் பணமாக மாற்றிக் கொடுக்கவில்லை. அதற்கு நாங்கள் என்ன செய்யமுடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த குறைகளையும் போக்கி, அரிஜன மாணவர்களுக்கு உடனடியாக ஸ்காலர்ஷிப் பணம் கிடைக்க தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலாகாலத்தில் மாணவர் களுக்கு உபகாரச் சம்பளம் சென்று சேரவில்லை என்று சொன்னார்கள். ஆனால் அவருடைய பேச்சின் இரண்டாவது பகுதியில், நலத் துறையிலிருந்து செக் அனுப்பப்பட்டுவிட்டது என்றும், ஆனால் எடியூக்கேஷன் டிப்பார்ட்மெண்டிலே உள்ள வர்கள் அதை பணமாக மாற்றிக் கொடுப்பதற்கு தாமதம் ஆகிறது

என்றும் சொன்னார்கள். அதுதான் உண்மை. நலத்துறை ஆகஸ்ட் மாதத்திற்குள்ளாகவே செக் அனுப்பிவிடுகிறது. ஆனால் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்த செக்கை பணமாக மாற்றி, மாணவர்களுக்குக் கொடுப்பதிலே தாமதம் ஏற்படுகிறது. எனவே இது நலத்துறையில் உள்ள தாமதம் அல்ல.

**திரு. என். மருதாசலம்:** நானும் அதைத்தான் சொல்கிறேன். செக்கை மாற்றிக் கொடுப்பதிலேதான் தாமதம் ஏற்படுகிறது. ஆகையால் பள்ளி, கல்லூரி இயக்குநரோடு தொடர்புகொண்டு, மாணவர்களுக்கு உரிய காலத்திலே ஸ்காலர்ஷிப் பணம் கிடைக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவையில் ஒரு கல்லூரி மாணவனுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை வேறு மாணவனுக்குக் கொடுத்துவிட்டார்கள். அந்த மாணவன் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன். அரிஜன மாணவனுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பணம், பின்தங்கிய மாணவனுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. மாணவர்களின் பெயர் ஒரே மாதிரியாக இருந்தால் தகப்பனார் பெயரையாவது பார்த்துக் கொடுக்கவேண்டாமா? பின் அரிஜன மாணவன் பணத்தைக் கேட்டால், பின்தங்கிய மாணவனிடமிருந்து வாங்கித்தருகிறேன் என்று சொல்கிறார்கள். மேலும் இம்மாதிரியான தவறுகள் நடக்காவண்ணம் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். அழகுத் தேவர்:** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த 1972-73-ம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழிலாளர்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் விவசாயிகளுக்கும் நன்மை பயக்கும் வகையிலும், பஞ்சாயத்து யூனியன்களில் ரோடு வசதி, நல்ல குடிதண்ணீர் வசதி கிடைக்கின்ற வகையிலும் இந்த நிதிநிலை அறிக்கையில் வகைசெய்யப்பட்டுள்ளதை நான் பாராட்டுகிறேன்.



இப்போது சாத்தூர், கோவில்பட்டி, ஏழாயிரம்பண்ணை, சிவகாசி ஆகிய இடங்களிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் போனமாதம் 28-ந் தேதி தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும்பொருட்டு வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று சொல்லி ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி என்னையும் அழைத்தார்கள். வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதாக இருந்தால்தான் நான் கூட்டத்தில் கலந்துகொள்வேன் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அதேநேரத்தில், எங்களுடைய கோரிக்கைகளை நீங்கள் எல்லாம் தமிழகத்து முதலமைச்சர் அவர்களுக்கும், தொழில் அமைச்சர் அவர்களுக்கும் எடுத்துச்சொல்லியிருந்தால், எங்கள் குறைகளைத் தீர்த்திருப்பார்கள். இனியாவது எடுத்துச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். வேலை நிறுத்தம் மத்திய சர்க்காரின் போக்கை கண்டிப்பதற்கே தவிர, மாநில சர்க்காரை எதிர்த்து அல்ல என்றும் சொன்னார்கள். நீங்கள் முன்னரே என்னிடம் விஷயத்தைச் சொல்லியிருந்தால், நான் முயற்சி செய்து, தக்க பதில் சொல்லியிருக்க முடியும். நீங்கள் வேலை நிறுத்தம் செய்யாதீர்கள். நான் அமைச்சர்களிடத்திலே உங்கள் கோரிக்கையை சொல்கிறேன் என்று சொன்னேன். அதற்கிணங்க, அவர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுவிட்டு, மீண்டும் தொழிலை செய்து வருகிறார்கள்.

அவர்கள் கோரிக்கை என்னவென்றால், இதுவரை அந்தத் தொழிலாளர்கள் நல்லமுறையில் நடத்தப்பட்டனர். இப்போது தனியார் சிலரின் தூண்டுதலால் அவர்களுக்கு பல தொல்லைகள் கொடுக்கப்படுகின்றன. சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் இந்தத் தொல்லைகளுக்கு ஆளாகின்றனர். சாத்தூர் வட்டாரத்தில் மட்டும் பத்தாயிரம் தொழிலாளர்கள் இத்தொழிலை வைத்தே வாழ்க்கை நடத்துகின்றனர். இந்தப் பத்தாயிரம் தொழிலாளர்களும் சிந்திகோ—சிறு தீப்பெட்டித் தொழிற்சாலை சொஸைட்டிகளின் கீழ் இயங்கி வருகிறார்கள். முன்பு இருந்தபடி திரும்பவும் பண்டேர் முறை வேண்டுமென்று தொழிலாளர்கள் கேட்கிறார்கள். பண்டேர் முறை இல்லாத காரணத்தினால் பல தவறுகளுக்கு இடம் அளிக்கிறது. நம்முடைய அரசாங்கம், மத்திய அரசாங்கத்தை கலந்து ஆலோசித்து, அவர்களது தொல்லைகளை நீக்கவேண்டு

என்றும் சொன்னார்கள். அதுதான் உண்மை. நலத்துறை ஆக... மாதத்திற்குள்ளாகவே செக் அனுப்பிவிடுகிறது. ஆனால் ப... களிலும், கல்லூரிகளிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அ... செக்கை பணமாக மாற்றி, மாணவர்களுக்குக் கொடுப்பதி... தாமதம் ஏற்படுகிறது. எனவே இது நலத்துறையில் உ... தாமதம் அல்ல.

**திரு. என். மருதாசலம்:** நானும் அதைத்தான் சொல்கிறே... செக்கை மாற்றிக் கொடுப்பதில்தான் தாமதம் ஏற்படுகிற... ஆகையால் பள்ளி, கல்லூரி இவற்றோடு தொடர்புகொண்... மாணவர்களுக்கு உரிய காலத்திலே ஸ்காலர்ஷிப் பணம் கிடைக்க... செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவையில் ஒரு கல்லூரி மாணவனுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை வேறு மாணவனுக்குக் கொடுத்து விட்டார்கள். அந்த மாணவன் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன். அரிஜன மாணவனுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பணம், பின்தங்கிய மாணவனுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. மாணவர்களின் பெயர் ஒரே மாதிரியாக இருந்தால் தகப்பனார் பெயரையாவது பார்த்துக் கொடுக்கவேண்டாமா? பின் அரிஜன மாணவன் பணத்தைக் கேட்டால், பின்தங்கிய மாணவனிட மிருந்து வாங்கித்தருகிறேன் என்று சொல்கிறார்கள். மேலும் இம்மாதிரியான தவறுகள் நடக்காவண்ணம் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். அழகுத் தேவர்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த 1972-73 ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழிலாளர்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் விவசாயி களுக்கும் நன்மை பயக்கும் வகையிலும், பஞ்சாயத்து யூனியன் களில் ரோடு வசதி, நல்ல குடிதண்ணீர் வசதி கிடைக்கின்ற வகையிலும் இந்த நிதிநிலை அறிக்கையில் வகைசெய்யப் பட்டுள்ளதை நான் பாராட்டுகிறேன்.



இப்போது சாத்தூர், கோவில்பட்டி, ஏழாயிரம்பண்ணை, சிவகாசி ஆகிய இடங்களிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் போனமாதம் 28-ந் தேதி தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும்பொருட்டு வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று சொல்லி ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி என்னையும் அழைத்தார்கள். வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதாக இருந்தால்தான் நான் கூட்டத்தில் கலந்துகொள்வேன் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அதேநேரத்தில், எங்களுடைய கோரிக்கைகளை நீங்கள் எல்லாம் தமிழகத்து முதலமைச்சர் அவர்களுக்கும், தொழில் அமைச்சர் அவர்களுக்கும் எடுத்துச்சொல்லி யிருந்தால், எங்கள் குறைகளைத் தீர்த்திருப்பார்கள். இனியாவது எடுத்துச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். வேலை நிறுத்தம் மத்திய சர்க்காரின் போக்கை கண்டிப்பதற்கே தவிர, மாநில சர்க்காரை எதிர்த்து அல்ல என்றும் சொன்னார்கள். நீங்கள் முன்னரே என்னிடம் விஷயத்தைச் சொல்லியிருந்தால், நான் முயற்சி செய்து, தக்க பதில் சொல்லியிருக்க முடியும். நீங்கள் வேலை நிறுத்தம் செய்யாதீர்கள். நான் அமைச்சர் களிடத்திலே உங்கள் கோரிக்கையை சொல்கிறேன் என்று சொன்னேன். அதற்கிணங்க, அவர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுவிட்டு, மீண்டும் தொழிலை செய்து வருகிறார்கள்.

அவர்கள் கோரிக்கை என்னவென்றால், இதுவரை அந்தத் தொழிலாளர்கள் நல்லமுறையில் நடத்தப்பட்டனர். இப்போது தனியார் சிலரின் தூண்டுதலால் அவர்களுக்கு பல தொல்லைகள் கொடுக்கப்படுகின்றன. சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் இந்தத் தொல்லைகளுக்கு ஆளாகின்றனர். சாத்தூர் வட்டாரத்தில் மட்டும் பத்தாயிரம் தொழிலாளர்கள் இத்தொழிலை வைத்தே வாழ்க்கை நடத்துகின்றனர். இந்தப் பத்தாயிரம் தொழிலாளர்களும் சிந்கிகோ—சிறு தீப்பெட்டித் தொழிற்சாலை சொசைட்டிகளின் கீழ் இயங்கி வருகிறார்கள். முன்பு இருந்தபடி திரும்பவும் பண்டேர் முறை வேண்டுமென்று தொழிலாளர்கள் கேட்கிறார்கள். பண்டேர் முறை இல்லாத காரணத்தினால் பல தவறுகளுக்கு இடம் அளிக்கிறது. நம்முடைய அரசாங்கம், மத்திய அரசாங்கத்தை கலந்து ஆலோசித்து, அவர்களது தொல்லைகளை நீக்கவேண்டு

மென்பது அவர்களது கோரிக்கை. எனவே முதலமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் அவர்களின் இந்த கோரிக்கையை கவனித்து, உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களில் சம்சாரிகள் இப்போது பல விதமான தீர்வை செலுத்தி வருகிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் யூனியன்கள் வசதிகளைப் பெருக்குவதற்காக சர்சார்ஜை ஒன்றரை ரூபாயாக இருந்ததை இரண்டரை ரூபாயாக உயர்த்த வகைசெய்யப்பட்டிருக்கிறது. இந்த சர்சார்ஜை கூட்டத் தேவையில்லை. காரணம், பஞ்சாயத்து தலைவர்கள் அங்கங்கே வீட்டு வரியை அதிகப்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே சர்சார்ஜையும் உயர்த்தினால் சம்சாரிகள் பாதிக்கப்படுவார்கள் என்பது என் அபிப்பிராயம். போன பட்ஜெட்டில் விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய கரண்டு சார்ஜ் கூட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த சர்சார்ஜ் உயர்வினால் சம்சாரிகள் பாதிக்கப்படுவார்கள்.

நமது தமிழகத்தில் விவசாயத்திற்கு, அரசாங்கம் காட்டும் தீவிரத் திட்டத்திற்கு சம்சாரிகள் முழு ஒத்துழைப்பு கொடுத்து வருகிறார்கள். ஆகையால் அவர்கள் சர்சார்ஜ் உயர்வினால் மேலும் கஷ்டப்படாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் விவசாயத்தில் முன்னணியில் இருக்கிறது.

விவசாயம் என்றால் ஒரு எக்கருக்கு வேளாண்மை செய்ய ரூ. 500 ஆகிறது. இதற்கு முன்னால் ரூ. 100 இருந்தால்போதும். உரவிலை, மற்ற மற்ற சாமான்கள் விலை, கூலி உயர்ந்துவிட்ட காரணத்தினால் ரூ. 500 ஒரு எக்கருக்கு ஆகிறது. ஆனால் உற்பத்தி 16 குவிண்டால்தான் இருக்கும். இந்த நிலையில் விவசாயிகள் அரசாங்கத்தினிடம் வாங்கிய கடனைக் கூட அடைக்க முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த நிலையில் விவசாயிகளுக்கு அனுகூலம் செய்யக்கூடிய வகையில் இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருப்பதற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972-73-ஆம் ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி வரவேற்று அதன் சார்பாக என்னுடைய



கருத்துக்களை இந்த அவைமுன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நடுவண் அரசின் கடன் சுமை தாழ்த்துகிற நிலை, வரி போட வேண்டியவர்களுக்கு வரி போட்டு, தொழிலாளர்கள், கிராமப் புறத்து மக்கள், ஹரிஜனங்கள், பின் தங்கிய வகுப்பினர்கள், சமுதாயத்தில் அழுகிப்போனவர்களாகக் கருதப்படுகிற பிச்சைக்காரர்கள் இவர்களை எல்லாம் கவனத்தில் கொண்டு அதற்கேற்றவகையில் செலவினங்கள் ஒதுக்கப்பட்டு பயனுள்ள பணிகளுக்கு பணம் ஒதுக்குவதில் கருமித்தனம் இல்லாமல், பயனற்ற பணிகளில் பாழ்படுத்துகின்ற ஊதாரித்தனமும் இல்லாமல் இவ்வாண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள உபரி பட்ஜெட்டை நாடும், நடுநிலைப் பத்திரிகைகளும் வரவேற்றுப் பாராட்டியிருக்கின்றன.

நாட்டில் பொருளாதார மாற்றம், சமுதாய மாற்றம் உருவாக்கப் பட வேண்டும் என்ற அடிப்படையில் 1967-இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசின் இவ்வாண்டு நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. இதனைப் பாராட்ட முன்வராதவர்கள் ஒன்று இந்த மாற்றத்தைப் பார்த்து பதைபதைக்கக்கூடிய பழமை விரும்பிகள் அல்லது இந்த அரசு எதைச் செய்தாலும் எதிர்க்க வேண்டுமென்ற எரிச்சல் மனம் படைத்தவர்கள் தான். பாராட்டியவர்கள் கூட இந்த நிதிநிலை அறிக்கை இலக்கிய நடையில் அமைந்திருப்பதாகப் பாராட்டினார்கள். இலக்கிய நடையில் பொருளாதார—சோஷலிச சமுதாய வழியில் செல்கிறது என்று இதைப் பாராட்டுவதற்குத் தயக்கம் காட்ட வேண்டியதில்லை. ஆனால் ஐயா மணலி கந்தசாமி போன்றவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையும் முதலாளித்துவத்தின் வேரில் வெந்நீரை ஊற்றுகிறது என்பதை உணர்ந்து பேசியதற்கு நான் நன்றி தெரிவிக்க முன்வருகிறேன்.

கடந்த நிதிநிலை அறிக்கையில் பேசுகின்ற நேரத்தில் எங்கள் சிவகாசியில் நெருப்பு வளம் இருக்கிறது, நீர் வளம் இல்லை என்று தெரிவித்தேன். இன்றைக்கு அங்கே நெருப்பு வளம் இருக்கிறது, நீர்வளமும் இருக்கிறது—அந்த நீர்வளத்தை நல்லமுறையில் விவசாயத்திற்குப் பயன்படுகிற நீர்பாசனத் திட்டங்களாக உருவாக்கித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. கா. காளிமுத்து] [1972 மார்ச் 6

பொதுவாக நாடு எங்கும் மழை பெய்தபோது எங்கும்
பசுமை விளங்கும் தஞ்சை மாவட்டக் கோலத்தோடு விளங்கிய
இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீவில்லிபுத்தூர் ஒழிய
பாக்கி பல பிர்க்காக்கள் வறட்சி நிலையினால் இன்று பெரிதும்
பாதிக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளின் அடிப்படைத்
தேவைகளை உணர்ந்து செயல்படுகின்ற அரசாக இது இருந்தாலு
சட்டத்தின் ஏவலாளர்களாக இருக்கிற அதிகாரிகள் இன்றை
தினம் இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள விவசாயிகளை
பலவிதமான கடன்களுக்காக ஜப்தி செய்யக்கூடிய வேலையில்
ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த மாவட்ட விவசாயிகளின் கடன்
தவணைகளை ஒத்தி வைத்துத்தரும்படியாகக் கேட்டுக்கொள்
கிறேன். உதகை மண்டலத்து மலர்க்காட்சியைக் கண்டு
கொண்டிருக்கிறபோதே முகவைப் பகுதியின் வறட்சியை
உணர்கின்ற கருணை மனம் படைத்தவர்கள் நம் கலைஞர். அவர்
களுக்கு தங்கள் மூலமாக இந்தக் கோரிக்கையை விட விரும்பு
கிறேன்.

எனக்கு முன்பு பேசிய அழகுத்தேவர்
போல மத்திய அரசு கண்டிரோல் குறிப்பிட்டுள்ளதைப்
காரணமாக தீப்பெட்டித் தொழிற்சாலைகளையே முறையை நீக்கியதன்
முதலாளிகள் கருதுகிறார்கள். மீண்டும் மூடிவிட
முறையைக் கொண்டுவரவேண்டுமென்று அந்த கண்டிரோல்
வற்புறுத்தியும், தீப்பெட்டித் தொழிலில் மத்திய அரசை
கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு ஈடுபட்டுள்ள ஆயிரக்
முதலாளிகளின் இரக்க உணர்ச்சியை மட்டும் நிலையில் இருந்து
நிலையைமாற்றி சட்டத்தின் அடிப்படையில் நம்பியிருக்கக்கூடிய
ளாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு இந்த அரசு அந்தத் தொழி
செய்யவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். ஆவன

சிவகாசியில் தேவைக்கேற்ற வகையில் அங்கே ஒரு காகிதத்
தொழிற்சாலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று தொழில்
அமைச்சர் அவர்கள் எற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். அந்த
ஆலோசனையையும் செயல்படுத்தித்தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் திட்டத்திற்காக 8.17 கோடிக்கு ஒதுக்கியிருக்கிற
நிலையில் மேற்கு இராமநாதபுரத்தை வளப்படுத்த அழகர் அணைக்



1972 மார்ச் 6] [திரு. கா. காளிமுத்து]

கட்டுத் திட்டத்தை, வைப்பாறு திட்டத்தைச் செயல்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்விக்காக 89.85 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அந்தக் கல்வியை வளப்படுத்துவதற்காக ஸ்ரீவில்லிபுத்தூரில் பல்கலைக்கழகம் ஒப்புதல் வழங்கிய கல்லூரி ஒன்றினை அமைத்துத்தர முன்வரவேண்டுமென்று கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி வேண்டுகோள்விடுத்துக்கொண்டு செல்லக்கூடிய வகையில் பல நன்மைகளை எதிர்பார்க்கக்கூடிய நிதிநிலை அறிக்கையாக இது அமைந்திருக்கிறது. அதற்கேற்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கை உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் சோஷலிச சமுதாயத்தை உருவாக்கக்கூடிய பணிகளில் கழக அரசு ஈடுபட்டுச் செயல்பட்டு வருகிற நிலையில் முன்னாள் பெரியவர் திரு. காமராஜ் அவர்கள் திண்டுக்கல்லில் பேசுகிறார், கழக ஆட்சியின் ஊழலை எதிர்ப்பதற்கு மாணவர்கள் முன்வரவேண்டும் என்பதாக. அங்கே திரு. காமராஜை வரவேற்றவர் வீரையா. இந்த வீரையாதான் 1965-இல் மொழிக் கிளர்ச்சியின்போது மாணவர்களை வெட்டியவர் என்பதை நினைவுகூர்ந்து குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் கரத்தால் திரு. காமராஜருக்குப் பொன்னாடை போர்த்தப்படுவதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. 1965-ஆம் ஆண்டு நிகழ்ச்சிக்குப் பிறகு மாணவர்களைக் கருதப்பட்ட திரு. வீரையா தாலுக்கா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராக இருக்கிறார். அப்படிப்பட்டவர்களை வைத்துக்கொண்டு மறுபடியும் கசாப்புக்கடைக்கு ஆடுகளாக மாணவர்களை அழைக்கிறார்களா என்பதை வேதனையுடன் நான் கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : சார், திரு. வீரையாவைப் பற்றி உறுப்பினர் குறிப்பிடுகிறபோது கசாப்புக்கடை போன்ற வார்த்தைகளை உபயோகப்படுத்துகிறார். அந்த மாதிரி நாங்களும் பேசிக்கொண்டு போகலாம். திரு. வீரையா அவர்கள் மீது கேஸ் போடப்பட்டதா, அவருக்கு தண்டனை அளிக்கப்பட்டதா ஆகியவை எல்லாம் தெரிந்து கொண்டு பொறுப்புணர்ச்சியோடு இந்த அவையில் பேசுவதுதான் பொருத்தமாக இருக்கும். வீண் குற்றச்சாட்டுகளைக் கூறவேண்டாம் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

யூனிட்டியை விரும்புகிறோம். ஆனால் யூனிஃபார்மிட்டியை விரும்பவில்லை. அதிகாரம் பூராவும் உத்தரப் பிரதேசத்துக்காரரின் உதட்டளவில் சட்டமாக வேண்டுமென்கிற நிலை இருக்கக்கூடாது என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகிறது. தமிழகத்தின் கலையைக் காப்பாற்றவும் தமிழகத்தின் மேன்மையை வளர்க்கவும், தமிழ்நாட்டின் வளத்தைப் பெருக்கவுமே தான் திராவிட முன்னேற்றக் கழகம் பிறவி எடுத்துள்ளது என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள்.

மத்தியிலே ஒரு யாஹ்யாகானை உருவாக்கக்கூடாது என்று மாணவர்கள் கருதுகிறார்கள். இந்த நாட்டின் மொழிகளை, கலைகளை, சிதைத்து, எல்லாம் ஒன்று, எல்லாம் ஒரே மயம், எல்லாம் ஒரே அச்சிலே வார்த்தவை என்ற ரீதியில் மத்திய ஆட்சியின் நடவடிக்கைகள் இருக்கக்கூடாது என்று மாணவர்கள் எண்ணுகிறார்கள். வெடிமருந்துக்குப் பக்கத்தில் நெருப்பு வரக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தின் தனித்தன்மையைப் போக்கும் வகையில், தமிழ்நாட்டின் கலையைச் சிதைக்கும் வகையில் இந்த நாட்டின் பட்டாளம் மட்டுமல்ல—உலக வல்லரசுகளின் பட்டாளமே திரண்டு வந்தாலும்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடைசித் தொண்டன்கூட அந்த நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடத் தயங்கமாட்டான் என்பதை தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் இருக்கும் ஐந்தாம்படைகள் சில இந்த நாட்டின் பெருமையைக் குலைக்க முன்வந்தாலும், [illegible] சிலர்கள்கூட இந்த நாட்டின் பாரம்பர்யம் நிலைக்க வேண்டுமென்பதற்காக நிச்சயம் பாடுபடும், உழைக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் மொழியைக் காப்பாற்ற தீக்குளித்து, மரணத்தைத் தழுவிய பெருமை எங்கள் கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. அதுபோல மாநில சுயாட்சிக்காகப் போராட, கழகத்தின் இளந் தலைமுறையினர் மக்கள் அணியிலே சென்று போராட முன்வருவர். கழகத்தின் இளந் தலைமுறையினர் அர்ஜுனனுக்கு முன்னர் அபிமன்யு முந்திக் கொண்டது போல மாநில சுயாட்சிக்காக தங்களுடைய இன்னுயிரை நீப்பதற்குக் கூட தயாராகவே இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போராட்ட அறிவிப்பு



என்றைக்கு, என்றைக்கு என்று எங்கள் தானைத் தலைவரை, எங்கள் கழகத் தலைவரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**திரு. தொ. ப. [illegible]:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையை தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மிகச் சிறந்த முறையிலே இந்த மன்றத்திலே எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பாராட்டக்கூடிய வகையில் வைத்து, மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பாராட்டும் அளவுக்கு நல்ல முறையில் பேரவை முன் வைத்துள்ளார்கள். அந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று உரையாற்ற முன்வருகிறேன்.

பொதுவாக இருபதாண்டுக் காலமாக தமிழகத்திலே பற்றாக் குறை பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டு வந்தது. பட்ஜெட் வரும் போதெல்லாம், முதலமைச்சர் என்ன வரி போடுவாரோ, என்னென்ன வரிகளைக் கட்ட வேண்டியிருக்குமோ என்று ஏழை எளிய விவசாய மக்கள் அஞ்சுவார்கள். இவ்வளவு வரி கட்டியாக வேண்டுமே என்று மிகவும் வேதனைப்படுவார்கள். இவையெல்லாம் பலருக்குத் தெரியும். அந்த நிலைமை இந்த நாட்டு நாலரைக் கோடி மக்களும் அறிவார்கள். ஆனால் இப்பொழுது அப்படி இல்லை. இந்தியத் துணைக் கண்டத்திலேயே இத்தகைய ஒரு மிகுதியான வரவைக்கொண்ட உபரி பட்ஜெட்டை வேறு எந்த மாநிலமும் சமர்பித்ததே இல்லை. இந்த நிதிநிலையினைக் கண்டு எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் பாராட்டுகிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் 2.49 கோடி ரூபாய் மிச்சம் காட்டி அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் புதிய வரிகள் எதுவும் போடப்படவில்லை. அரசு அலுவலர்களுக்கும் சிறந்த முறையில் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்.

குறிப்பாகவும், சிறப்பாகவும் சொல்லப்போனால் தமிழகத்தில் விவசாயத்தை முதல் இடத்தில் வைத்திருக்கிறோம். நல்ல முறையில் கவனம்செலுத்தி வருகிறோம். சிறப்பான முறையில் இந்தப் பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நம்முடைய முதல்வர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தார், பள்ளிகளில் எல்லாம் வள்ளுவர் வாசகத்தைப் பொறித்துள்ளார்.

[திரு. தொ. ப. சீனிவாசன்] [1972 மார்ச் 6

எல்லா சுற்றுலா மாளிகைகளிலும் வள்ளுவர் படத்தை வைக்க வேண்டுமென்று சொல்லி, அந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளார். வள்ளுவர் வாக்கின்படி தமிழக அரசு அமைய வேண்டுமென்பதற்காகத்தான்,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராதியல்வது நாடு"

என்ற குறட்பாவை எழுதி, அவ்வாறே அரசும் அமைய பாடுபட்டு வருகிறார்.

முதலாவதாக, பசி நீங்கிட வேண்டுமென்கிற அடிப்படையில் பசுமைப் புரட்சிக்கு எந்த எந்த வகையில் ஒத்துழைக்க வேண்டுமோ, அந்த வகையில் ஒத்துழைப்புத் தந்து வருகிறது இந்த அரசு. முதலில் பசி நீங்கிட வேண்டும்.

பசி நீங்கின பின்னர், பிணி நீங்குவதற்கு நல்வாழ்வுத் துறை மூலமாக நல்ல பல திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். தற்போது ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் நடைபெற்று வரும் மருந்தகங்களை அரசே ஏற்றுக்கொள்வதென முடிவு எடுத்துள்ளது. ஊராட்சி ஒன்றியத்தின் நிதிநிலை பற்றாக்குறை காரணமாக மக்களுக்கு வேண்டிய நல்ல பல மருத்துவப் பணிகளைச் செய்திட இயலாத காரணத்தினால், அரசே ஏற்று நடத்தி, மக்களின் நல்வாழ்வை மேம்படுத்த வகை செய்திருக்கிறது. இந்த பட்ஜெட்டில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் நடைபெற்று வரும் மருந்தகங்களை அரசு மேற்கொள்ளும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் தொத்து வியாதிகள் எங்கே காணப்பட்டாலும் உடனடி நடவடிக்கை எடுத்து, ஆரம்பத்திலேயே பரவ விடாமல் தடுத்து விடுகிறது. கோவை மாவட்டத்தில் [illegible] நோய் வந்தபோது அங்கு சுகாதார அமைச்சர் அவர்களும், மற்ற அதிகாரிகளும் அங்கே சென்று பார்வையிட்டு, தேவையான மருந்துகளை உடனுக்குடன் விநியோகித்து நோயைக் கட்டுப்படுத்தினர். நோய்க்குத் தேவையான மருந்து இந்நாட்டில் இல்லாதிருந்த நேரத்திலும், வெளிநாடுகளிலிருந்து விமானம் மூலம் வரவழைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி நோயைக் கட்டுப்படுத்தினர். ஆகவே, பிணி நீங்கவும் இந்த அரசு நல்ல பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.



1972 மார்ச் 6] [திரு. தொ. ப. சீனிவாசன்]

பிணிக்கு அடுத்தபடியாக பகை நீங்க வேண்டும். பகை நீங்கவேண்டுமென்பதற்காகத்தான் நாங்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நண்பர் பாலசுந்தரம் அவர்கள் பேசினார்கள். அவர் பேசிக்கொண்டிருக்கையில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகவும் ஆத்திரப்பட்டார்கள். அப்போது உங்கள் மனம் வேதனைப் படுவதைப்போலத்தான் எங்களைப்பற்றி நீங்கள் பேசும்போதும் எங்கள் மனமும் வேதனைப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் பல இடங்களில், பல நேரங்களில் எங்கள் மனம் வேதனைப்படக்கூடிய வகையில் பேசுகிறீர்கள், நாங்கள் பொறுத்துக்கொள்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த நேரத்திலும், நாவலர் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த நேரத்திலும், 'எதிர்க் கட்சித் தலைவர்' இப்படித்தான் இருக்கவேண்டும் என்பதற்கு ஓர் முன் உதாரணமாக விளங்கினார்கள். அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ஒரு புதிய பாரம்பரியத்தை உண்டாக்கினார்கள்.

இந்த மன்றத்திலே எதிர்க் கட்சித் துணைத் தலைவராக அம்மையார் அவர்கள் இருக்கிறார்கள். அம்மையார் அவர்கள் சட்டம் படித்தவர். எப்போதும் நான் அவருடைய பேச்சை ஆர்வத்தோடு கேட்பவன். என்னுடைய ஊரில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அந்தப் பொதுக்கூட்டத்தில் அம்மையார் பேசுவதாக இருந்தது. நான் அவருடைய பேச்சைக் கேட்பதற்காக சென்னையிலிருந்து சாரை எடுத்துக்கொண்டு ஊருக்குச் சென்றேன். நாலரைக் கோடி மக்களின் தலைவன், எங்களுடைய இதயத் தலைவன், எங்களுடைய தானைத் தலைவன்—அவரைப்பற்றி எங்களுடைய இதயம் விம்முகின்ற வகையில் அந்தப் பொதுக் கூட்டத்தில் பேசப்பட்டது. 'இந்நாட்டின் முதலமைச்சர் அமெரிக்கா நாட்டுக்குச் சென்றார். வியாதி வந்தது என்றால், வியாதி வந்துவிட்டால் குடியா முழுகிவிடும்?' என்று கூறிய வார்த்தைகளைக் கேட்டு வேதனைப்பட்டேன். என்னைப்போலவே பல கழகத் தோழர்களும் இந்த சொற்களைக் கேட்டு துடித்தனர். ஒரு நாட்டின் முதலமைச்சரைப்பற்றிக் குறைகூற வேண்டுமென்றால், அம்மையார் அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. மேலும் அவர்கள் பேசுகையில், 'அங்கே சென்றவர்கள் தங்கரும் வைரமும் கொண்டு வருகிறார்கள்' என்று கூறினார்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, என்னவோ, எங்கேயோ, நான் பொதுக்கூட்டத்தில் பேசியதாகவும், அதை அவர் கேட்டதாகவும் சொல்கிறார். அவர் இப்போது பேசுவது உண்மை என்று எப்படி நம்புவது? அதற்கு என்ன ஆதாரம்? மக்கள் மத்தியிலே பரவலாக இப்படிப்பட்ட வதந்திகள் இருப்பதாக பொதுமேடையில் பேசப்பட்டது. நீங்கள் எவ்வளவோ பேசினீர்கள். ஒரு சட்டசபை உறுப்பினர் பேசும்போது பொறுப்புணர்ச்சியோடு பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை விட்டுவிட்டு, இங்கே வந்து, இப்படிப் பேசினார்கள், அப்படிப் பேசினார்கள் என்று சொல்லிக்கொண்டு போவது நல்லது அல்ல. வேண்டுமானால் அடுத்த மேடை ஒன்று போட்டு விளாசுங்களேன். யார் வேண்டாமென்றது? எங்கள் கட்சியின் லட்சியங்களை எடுத்துச்சொல்கிற நேரத்தில் மக்கள் மத்தியில் பரவியிருக்கின்ற வதந்திகளை எடுத்துச்சொல்லி, இப்படிப்பட்ட வதந்திகள் உலவுகின்றனவே, இது சரியா என்றுதான் கேட்டார்கள். அப்படிப் பேசுவதற்கு உரிமை உண்டு. எங்கள் கட்சியை வளர்க்க மக்கள் மத்தியில் உலவும் கருத்துக்களை எடுத்துக் கூறுகிறோம். அதற்காக உறுப்பினர் அவர்கள் சட்டசபையில், 'நான் ஒரு கூட்டத்திற்குப் போயிருந்தேன், இப்படிப் பேசினார்கள், கண்ணீர் விட்டேன்' என்று சொல்வதற்கு இந்தச் சட்டமன்றத்தைப் பயன்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் பொதுக்கூட்டத்திலே வதந்தியைப் பேசினேன் என்று சொன்னார்கள். அமெரிக்காவிலிருந்து முதலமைச்சர் தங்கம், வைரம் எடுத்து வந்தார் என்று சொன்னது வதந்தியாகப் பேசினார்களா அல்லது அதை ஏற்றுக்கொண்டு அவர்கள் பேசினார்களா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் முதலமைச்சர் அவர் களுக்குப் பதில் சொல்ல நான் தயாராக இருக்கிறேன். மேலவையிலே இதற்கு அவர்கள் பதில் சொன்னார்கள். இந்தச் சபையிலே சொல்லவில்லை, மேலவையிலே மட்டும் சொன்னதால் எங்களுடைய உரிமை பறிக்கப்படுகிறது. இந்த அவையில் சொல்லியிருந்தால் பரவாயில்லை. செய்தி தாளில் எல்லாம் இது பற்றி வந்திருக்கிறது.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் மேலவையிலே பதில் சொல்லியது உரிமையைப் பறிக்கக்கூடியதாகும் என்று சொன்னார்கள். இந்தப் பிரச்னை அங்கே வந்தபோது அது தொடர்பாகப் பதில் சொன்னேனே தவிர வேறு அல்ல. இங்கே அதுபற்றி வரவில்லை. ஆகவே இங்கே சொல்லவில்லை. அம்மையார் அவர்கள் வதந்தி என்று சொன்னார்கள். அமெரிக்காவிலிருந்து தங்கமும் வைரமும் கொண்டுவருவது என்றால் எங்கெங்கெல்லாம் சோதனை போடுவார்கள் என்பது நமக்குத் தெரியும். வதந்திகளை எந்த அளவுக்குப் பேசலாம், பேசக்கூடாது என்று ஒரு வரையறை இருக்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பேசவில்லையா என்று கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அப்படிப் பேசவில்லை. வெளிநாடுகளுக்கு அப்பொழுது இருந்த அமைச்சர்கள் எத்தனையோ முறைகள் சென்று வந்திருக்கிறார்கள், அப்பொழுது எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அப்படிப் பேசவில்லை. அவர்கள் எல்லாம் அந்தஸ்து உள்ளவர்கள், வெளிநாடுகள் செல்லலாம். நாங்கள் சாதாரணமானவர்கள் வெளிநாட்டிற்குச் சென்றால் வைரம், தங்கம் கொண்டு வந்தார்கள் என்று சொல்லுவது உங்களுக்குச் சுலபமாக இருக்கிறது. நன்றாகப் பேசுங்கள், இப்பொழுது அல்ல, 67-லேயும் பேசினீர்கள். ஆனால் அதை நம்பி மக்கள் உங்கள் பக்கம் வந்து விடவில்லை. நீங்கள் அப்படிப் பேசிக் கொண்டே போகிறீர்கள். அதனால் நீங்கள் வளரப்போவதில்லை.

**திரு. நா. வீராசாமி:** ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், சார். அம்மையார் அவர்கள் பேசும்பொழுது மேலவையிலே முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இங்கே சொல்லவில்லை என்று சொன்னார்கள். மேலவையிலே பொறுப்பாகச் சொன்னார்கள் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்வது சரிதானா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மேலவையில் பொறுப்பில்லை என்று யாரும் சொல்லவில்லை. சாதாரணமாக, 'Lower House representing the direct representatives of the people must have priority' என்ற நிலை இருக்கிறது. ஆகவே பார்லிமெண்டரி முறையில் அதற்குள்ள பொறுப்பையும் உரிமையையும் குறைக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை.

நீங்கள் அதற்கு இடம் கொடுக்காமல் இருந்திருக்கலாமே என்று தான் சொன்னேன். அன்றைக்கு நாங்கள் அப்படிச் சொல்ல வில்லை என்று சொன்னார்கள். அன்றைக்கு அப்படி வதந்தி வரவில்லை. ஆனால் இன்றைக்கு வருகிறது என்றால் அதைப் பார்த்து திருத்திக்கொள்ள வேண்டும். அரசியல் கட்சிகள், பொதுவாக எல்லாக்கட்சிகளும் வதந்திகளைப் பயன்படுத்திக் கொள்வார்கள். சாதாரணமாக எல்லா அரசியல் கட்சிகளிலும் அது நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு மதிப்பு கொடுக்க வேண்டியதில்லை என்றால் ஏன் மேலவையில் சொல்லியிருக்க வேண்டும். வதந்தி உங்கள் காதுக்கு வந்துதானே மேலவையிலே பதில் சொல்லியிருக்கிறார்கள். எனவே அது அரசியல் கட்சிகள் சாதாரணமாக கொண்டுள்ள பழக்கம்தான் என்பதை முதல் அமைச்சரவர்களும் தெரிந்து இருப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: ரூல் 82 ஸ்டேட்மெண்ட் என்று இருக்கிறது. அதன்கீழ் மேலவையில் கொடுக்கவில்லை. அப்படி மேலவையிலே கொடுத்திருந்தால் சட்டசபையிலே கொடுக்காமல் மேலவையிலே ஏன் கொடுத்தார்கள் என்று கேட்கலாம். நியாயமான கேள்வி. அங்கே தொடர்பாக பேச்சு வந்ததால் நான் பதிலளித்தேன். இங்கே அது தொடர்பாக பேச்சில்லை அதனால் சொல்லவில்லை. வதந்திகளை வைத்துக்கொண்டு பேசி இருக்கிறீர்கள். ஆனால் வதந்திகளை வைத்துக்கொண்டு அரசியல் பிழைப்பு நடத்தவேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை.

**திரு. தொ. ப. சீனிவாசன்**: அம்மையார் அவர்கள், அங்கே வந்து பேச்சைக் கேட்டார்களா, இல்லையா என்று கேட்டார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் மிக அடக்கத்தோடு பேசும் பொழுது நாங்கள் எங்களுக்குள்ள பண்போடு அதை மறுத்து நாங்கள் தவறான வார்த்தைகளைச் சொல்லவில்லை என்றார்கள். அம்மையார் அவர்கள் அதை மட்டும் சொல்லவில்லை. மற்றொரு செய்தியையும் சொன்னார்கள். நாங்கள் மிகவும் வேதனைப் பட்டோம். நான் அதைச் சொல்ல விரும்பவில்லை. உடனே போலீஸ்காரரைக் கூப்பிட்டு நாங்கள், பொறுப்பு உள்ள அங்கத்தினர் இப்படியெல்லாம் பேசியிருக்கிறார்கள். உடனடியாகத் தெரிவியுங்கள் என்று சொல்லியது மட்டுமல்ல . . .





**திருமதி த. ந. அனந்தநாயகி**: மேலும் மேலும் அவர்கள் அதைச் சொல்லிக்கொண்டு போகிறார்கள். முதலில் அவர் வந்திருந்தாரா என்பதைப் பார்க்கவேண்டும், மேலும் சுருக்கெழுத்து எடுத்ததை என்னிடம் காட்டியிருக்க வேண்டும் . . .

**திரு. தொ. ப. சீனிவாசன்**: அதற்குப் பிறகு நாங்கள் எல்லாம் ஒற்றுமையாகக் கட்சித் தோழர்களுடன் மிக வேதனையோடு . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: தாங்கள் கூட்டத்தில் நான் வைரம் கடத்தி வந்தேன் என்ற வதந்தியின் அடிப்படையை நம்பிப் பேசியதை ஒத்துக்கொள்கிறீர்களா?

**திருமதி த. ந. அனந்தநாயகி**: மக்களிடம் பேசப்படுகிற வதந்திகளைத்தான் நாங்கள் பேசுகிறோம். சுருக்கெழுத்தாளர் எழுதியதை என்னிடம் காட்டியிருக்கவேண்டும். உறுதி செய்து கொள்ளவேண்டும். நாங்களும் சட்டம் படித்தவர்கள்தான். எங்களுக்கும் சட்டத்தின் சந்துபொந்துகள் தெரியும். லிங்கன் சிலை வரவில்லையே என்று பேசப்படுகிறது. வலதுசாரிக் கட்சித் தலைவர் கல்யாணசுந்தரம் அவர்கள் கூறியது எல்லாம் செய்தித் தாள்களில் வந்துகொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: கல்யாணசுந்தரம் அவர்களைத் துணைக்கு அழைக்கவேண்டாம். அவர்கள் எது வரையில் எங்களுடன் இருந்தார் என்பது எனக்கும் தெரியும். அவர்களும் இணைந்து இருக்கிறார்கள், அதுவும் எங்களுக்குத் தெரியும். சட்டத்தின் சந்துபொந்து எல்லாம் தெரியும் என்று சொன்னார்கள். நான் வைரம் கடத்திவந்தேன் என்ற அடிப்படையிலேதான் அவர்கள் பேசினார்களா?

**திருமதி த. ந. அனந்தநாயகி**: வதந்தி வந்தது என்று சொன்னேன். அதை ஏன் மறுக்கக்கூடாது என்று கேட்டேன். இந்த வீட்டிலே பணம் எடுத்தார்கள், அந்த வீட்டிலே பணம் எடுத்தார்கள் என்றெல்லாம் வதந்திகள் வருகின்றன. இப்படி வருவதால் மக்களிடத்திலே உங்களுக்குள்ள நம்பிக்கை குறைந்துவிடும் என்றுதான் கேட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: அம்மையார் அவர்களை சிம்ஸன் முதலாளிக்கும் கருணாநிதிக்கும் அடிமை என்று அறிக்கை விட்டார்கள். அதை மறுத்து அம்மையார் அவர்கள்

அறிக்கை விட்டார்கள். அம்மையார் அவர்கள் மறுப்பு அறிக்கை விடுத்தும் என்ன வந்தது?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** குசேலர் விட்ட அறிக்கைக்கு மறுப்புக் கொடுத்திருக்கிறேன், என்ன எப்பொழுதும், மீண்டும் அவர்கள் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறீர்கள். மக்கள் மன்றம் கவனித்துக் கொள்ளும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆம், குசேலர் பாணியையே நீங்களும் கைக்கொண்டிருக்கிறீர்கள். மக்கள் மன்றம் தீர்ப்பு அளிக்கும் என்று சொல்கிறீர்கள். இரண்டு முறைகள் மக்கள் மன்றம் தீர்ப்பு அளித்துவிட்டது. மூன்றாவது முறை உங்களுக்குப் படுமோசமாகத் தீர்ப்பு அளிக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** குசேலர் மட்டுமல்ல. எல்லாக் கட்சிகளிலுமே அப்படிப்பட்டவர்கள் இருப்பார்கள். இங்கே பேசிய ஒரு உறுப்பினர் அவர்கள் ஒன்றரைக் கோடி ரூபாய் என்று சொல்லி புகார் கிளப்பி இருக்கிறார்கள் . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பாலசுந்தரம் அவர்கள் புகார் கிளப்பியதாகச் சொன்னார்கள். என்ன புகார் சொன்னார்கள்?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நீங்கள் அப்பொழுது இல்லை. இருந்தால் தெரிந்திருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன என்று சொல்லுங்கள். நானும் அப்பொழுது சட்ட சபையிலே இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் காமராஜ் ஹைதராபாத் பாங்கில் ஒன்றரைக் கோடி போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள் . . .

THIRU K. T. K. THANGAMANI: Sir, on a point of order. A certain allegation was made and it was duly expunged by the Chair. So, is it proper to request the hon. Member to repeat the allegation.

MR. SPEAKER: It is quite now. A remark has been expunged but discussion has ensued and there may be another ruling. The hon. Member has made certain allegation. . . .



THIRU R. PONNAPPA NADAR: Are you going to allow the allegation to be made again?

MR. SPEAKER: I do not know whether it is going to be an allegation or not . . . .

THIRU K. T. K. THANGAMANI: I have raised a point of order and I have got a right to get a ruling from the Chair.

MR. SPEAKER: You have got the right to raise the point of order.

அம்மையார் அவர்கள் ஒன்றரைக் கோடி என்று சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்று கேட்டேன். சபையிலே நான் இல்லை என்பதால் கேட்டேன். அவர்கள் சொல்வதிலே ஒன்றும் ஆபத்து இல்லை. சொல்லலாம். அதைப் பேசக்கூடாது என்பது நிரந்தரமான தீர்ப்பு அல்ல. இன்றைக்கு சபாநாயகர் வேறொரு தீர்ப்புகூட வழங்கலாம். அதனை இன்னொரு உறுப்பினர் பேசுகிறார் என்று வைத்துக்கொண்டால் அதை எப்படித் தடுக்க முடியும்? நான் இப்பொழுது கேட்பது. முதலமைச்சரவர்களோடு நீங்கள் விவாதம் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஒன்றரைக் கோடி ரூபாய் காமராஜருக்கு ஹைதராபாத் பாங்கில் இருப்பதாக ஒருவர் குற்றம் சாட்டினார் என்று சொன்னார்கள்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** பாயிண்ட் ஆஃப் எக்ஸ்ப்ளனேஷன், சார். இந்த ரூலிங் டெபுடி ஸ்பீக்கர் கொடுத்து எக்ஸ்பஞ்ச் ஆகிவிட்டது. அதற்கு 'காண்ட்ரரி'யாக மறுபடியும் ரூலிங் கொடுக்க வேண்டுமென்றால் அது முறையா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு பெரிய தலைவரைப்பற்றிய விஷயம். இங்கு நடைபெறும் விவாதங்களுக்கு விளக்கத்திற்காகத்தான் பேசிக்கொண்டிருக்கிறோம். வேறொரு விவாதத்தில் போகிறேன். காமராஜர் ஹைதராபாத் பாங்கில் ஒன்றரைக் கோடி வைத்திருக்கிறார்கள் என்று ஒரு நபர் சொன்னார் என்று அவர்கள் சொன்னார்கள்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, சிறு மாற்றம். திரு. பாலசுந்தரம் அவர்கள் சொன்னதைக்கூட அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அவர் சொன்னது. ஒன்றரைக் கோடி

ரூபாய் பாங்கில் போட்டு இருப்பதாக சுவரொட்டிகள் ஒட்டியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். போட்டிருப்பதாகச் சொல்லவில்லை. ஆனால் அம்மையார் அவர்கள் திரித்துச் சொல்கிறார்கள். பாலசுந்தரம் சொன்னதெல்லாம் காமராஜர் ஒன்றரைக் கோடி ஹைதராபாத் பாங்கில் போட்டிருக்கிறார்கள் என்று சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தது என்றுதான் சொன்னார்கள். அதைப்போல முத்துராமலிங்கத்தேவர் கட்சியினர் காமராஜ நாடார் கள்ளநோட்டுக்கும் சம்பந்தம் உண்டு என்று சொன்னார்கள் என்று நான் சொன்னேனே தவிர அவர் சொன்னதாகச் சொல்லவில்லை.

THIRU R. PONNAPPA NADAR: The same allegation is brought in again deliberately after the Chair has ruled that the hon. Member must prove his allegation.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவருக்குச் சொல்லிக்கொள்வதெல்லாம், ஒரு ரூலிங் கொடுத்தால் . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** வேறொரு வழியாக மறுபடியும். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ரொம்ப வருத்தப்படுகிறேன், மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் என் ஆத்திரப்படுகிறார்கள் என்று தெரியவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஆத்திரப்படாமல் பொறுமையோடுதான் இருக்கிறோம். இல்லையென்றால் வெளியே போயிருந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடப்பது கண்டனத்திற்குரியது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், நான் கிளப்பிய பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்னவென்றால், டெபுடி ஸ்பீக்கர் அவர்கள்—நான் அந்த பீரியட்டில் இல்லை போகவில்லை—வெளியே என்ன முக்கியமான நிலைமையைப்பற்றி [illegible] பேசிய உறுப்பினர் தெரிவித்த அதன்பேரில் சில விஷயங்களை சுட்டிக்காட்டிய பிறகு தலைவர் அவர்கள் சில விளக்கங்களைச் சொல்லி வெளியிலே இருப்பவர்கள்மீது குற்றம் சொல்ல வேண்டுமானால் ஆதாரபூர்வமாகச் சொல்லி உறுப்பினர் [illegible] வைக்க வேண்டுமென்ற நிலையிருந்தால் சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். அது



முடிந்தபிறகு இறுதியிலே உதவி சபாநாயகரவர்கள் இந்த அலிகேஷன் சம்பந்தமாகவும், அதைத் தொடர்ந்து பலர் பேசிய விஷயங்களும் எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட விஷயம் சம்பந்தமாக உதவி சபாநாயகரவர் ஒரு ரூலிங் கொடுத்தபிறகு, அந்த ரூலிங் இப்பொழுது இருக்கிறதா? அல்லது வேறு ஒரு ரூலிங் நீங்கள் கொடுக்கப் போகிறீர்களா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். என்னுடைய பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்னவென்றால் அதே விஷயத்தை மறுபடியும் எழுப்புவது 'அவுட் ஆஃப் ஆர்டர்' என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த விவாதம் எழும்பவில்லை. அந்த விவாதத்தில் ஒரு தொடர்பான விவாதத்தை அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். வேறு சபாநாயகர் வேறு ரூலிங் கூட கொடுக்கலாம். நான் அந்த நேரத்தில் இருந்திருந்தால் அந்த மாதிரி ரூலிங் கொடுத்திருக்க மாட்டேன். சபாநாயகர் ரூலிங் கொடுத்தது தவறு என்பது அல்ல. இன்னொரு ரூலிங் கொடுப்பது இன்னொருவரின் அபிப்பிராயமாக இருக்கலாம். ஏனென்றால் கொஞ்சம் அமைதியாக யோசித்தால் காமராஜர் ஹைதராபாத் பேங்கில் ஒன்றரைக் கோடி போட்டிருக்கிறார்கள் என்று பாலசுந்தரம் பேசியிருந்தார் என்றால் அப்படிப் பேசக்கூட உரிமை உண்டு. அதைக் கூட நான் மறுக்கவில்லை. வெளியிலே இருப்பவர்களைப்பற்றியே பேசக்கூடாது. உள்ளே இருப்பவர்களைப் பற்றி மட்டும்தான் பேச வேண்டுமென்பதுகூட அல்ல. ஆனால் அப்படிப் பேசினால் ஆதாரத்தோடு பேச வேண்டும், அவதூறாகப் பேசக்கூடாது. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லியது போல் அலிகேஷன் என்றால் ஆதாரத்தோடு பேச வேண்டும். காமராஜரைப்பற்றியே பேசக்கூடாது என்பது அல்ல, கடவுளைப் பற்றியே பேசுகிறோம். உறுப்பினர்களைப்பற்றி மட்டும்தான் பேசலாம் என்றால் நான் இந்த சபாநாயகர் பொறுப்பை வகிக்கும் வரையில் அதை நான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. ஒன்றரைக் கோடி ரூபாய் போட்டிருக்கிறார்கள் என்றால் ஆதாரத்தோடு சொல்லலாம். இல்லையென்றால் உரிமையைத் துஷ்பிரயோகம் செய்வதாக ஆகும்.

திரு. பாலசுந்தரம் சொன்னது தன்பர் வியாபாரி சொல்லி யதைப் போல சொல்லியிருந்தால், நான் அப்பொழுது இங்கு இருந்திருந்தால், அந்தத் தீர்மானம்—இன்றைக்கு போட்டிருப்பதாக உள்ள போன்டாக்களுக்கு ஆதாரமிருந்தால் அது சட்டசபை நிகழ்ச்சியிலே இருக்க வேண்டியது என்ற அந்த அவ்விதமான் நீக்கப்பட வேண்டுமென்ற தவிர தீர்ப்பாக இருந்திருக்காது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், எப்படி வேண்டுமானாலும் பேசலாம், நாம் பொது வாழ்க்கையிலே இருக்கிறோம், விவாதங்களைப் பேச உரிமை இருக்கிறது என்ற முறையிலே பாங்கிலே பேசியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது வேண்டுமானால் ஆட்சேபணைக்குரியதாக இருந்திருக்கலாமே தவிர போன்றிலே பேசியிருக்கிறார்கள் என்று சொன்னால் அதை நீக்குவதற்குரிய நிலையிருந்தால் அது சட்டசபை நிகழ்ச்சியிலேயிருந்து நீக்கப்பட வேண்டியதாகவோ அல்லது இங்கு இல்லாதவர்களைப்பற்றிப் பேசியதாகவோ ஆகாது. தலைவர்களைப் பற்றிப் பேசுகிறார்கள். பேசுகிறார்கள். காமராஜர் அவர்களைப்பற்றி, ராஜாஜி அவர்களைப்பற்றிப் பேசுகிறார்கள் என்றால் அவர்களின் பிரதிநிதிகள் இங்கே இருக்கிறார்கள். பொது விஷயங்களைப்பற்றித்தான் பேசுகிறோம். தனி விஷயத்தை, தனிப்பட்ட விவகாரங்களைப்பற்றிய விவகாரம் அல்ல. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை அந்த அவையிலே இருக்கிறதே தவிர நான் புதிய விவாதத்திற்குச் செல்லவில்லை.

சீனிவாசன் பேசினார்கள். அதைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். அம்மையார் அவர்கள் பேசினார்கள். அம்மையார் அவர்களால் எழுந்த பிரச்சினையே தவிர, சைதாப்பேட்டைப்பற்றி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டதால் எழுந்த பிரச்சினை என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: On a point of Order, Sir. I invite the attention of the hon. Speaker to Rule 235 of our Assembly Rules which says as follows:—

2. "If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent, or unparlimentary or undignified or grossely irregular he may, in his discretion, order that such word or words be expunged from



the official report of the proceedings of the House, and all consequential alterations made in such report and make an announcement in the Assembly of the fact of his having made such order."

இந்த விதிமுறைப்படி தீர்ப்பளிக்கப்பட்டதை மறைமுகமாக அல்லது இன்னொருவிதமாக இங்கே கொண்டு வருவது பொருத்தமல்ல. அதிலும், குறிப்பாக, இம்மாதிரி கூறுவது என்றால் வேறு வழியாக முன்பு எக்ஸ்பஞ்ச் செய்ததை மறுமுறையும் இந்த மன்றத்திற்குக் கொண்டுவர இது ஒரு ஏதுவாக இருக்கும். ஆகவே இந்த நடவடிக்கை ஒழுங்கானது அல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இத்தகைய முறைகளிருந்தால் எதிர்க்கட்சியாகிய எங்களைப் போன்றவர்கள் இயங்க முடியாது. நாங்கள் 'அப்போசிஷன்'ஆக இருக்க வழியில்லாத நிலையிலே இருக்கிறோம் என்ற காரணத்தினால் நாங்கள் இந்த அவையை விட்டு வெளியேறுகிறோம் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[காங்கிரஸ் (அமைப்பு) கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்.]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் குறுக்கிடுகள் எழுந்து, அதன் தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஏற்கனவே நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு வார்த்தையை அவர்களேதான் தொடக்கத்திலே பயன்படுத்தி அவர்கள் அந்த வார்த்தையை முழு வாக்கியமாகச் சொல்லாத காரணத்தால் நான் அதைப்பற்றி விவரம் சொல்ல, முன்னே நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து எடுக்கப்பட்ட வாக்கியங்களையும் இன்னும் இரண்டொரு வாக்கியங்களையும் சேர்த்துக்கொண்டு அவர்கள், மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் மீது ஏற்கனவே எப்பொழுதோ பரப்பப்பட்ட ஒரு வதந்தியைப் பற்றிய கலசொட்டியைப் பற்றிச் சொன்னார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை இது போன்ற வதந்திகள், வசைச்சொற்கள், அவதூறுகள், அபாண்டங்கள், மாசு, களங்கங்கள் இவற்றை எல்லாம் தாங்கித் தாங்கிப் பழக்கப்பட்டது. அந்தக் காரணத்தால் அவர்கள் எவ்வளவு

பேசினாலும் அவர்களுக்கு ஒருமுறை எடுத்துச் சொல்லிவிட்டு அமைதியாக இருந்து விடுவது முறையாக இருக்கிறது. அதே நேரத்தில் பதிலுக்குப் பதில் எதிர்க்கட்சியின் வாதங்களையோ, இதுபோன்ற சுவரொட்டி சம்பவங்களையோ எடுத்துக் கூறிக் கொண்டிருப்பது முறையல்ல என்ற காரணத்தால் திரு. பால சுந்தரம் பேசியதை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து எடுத்து விடலாம் என்று அவை முன்னவர் நாவலர் அவர்கள் சொன்னார்கள். அதற்கேற்ப துணைத் தலைவர் அவர்களும் அதை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து எடுத்துவிடலாம் என்று சொன்னார்கள். அது சட்டப்படி சரியா இல்லையா என்ற விவாதத்தைத் தொடங்கி தீர்ப்புக் கூறவேண்டிய முழுப் பொறுப்பும், மாபெரும் அதிகாரமும் அவைத் தலைவருக்கு இருக்கிறது என்பதை மறக்கவில்லை என்றாலும் தங்கள்பால் நாங்கள் கொண்டிருக்கும் மரியாதை எள்ளளவும் குறையவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுவது போல் இந்தத் தீர்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது. இந்த மன்ற உறுப்பினர்கள் அவ்வளவு பேரையும் காக்க வேண்டிய கடமை அவைத் தலைவருக்கு இருக்கிறது என்று சுட்டிக்காட்டும் அதே நேரத்தில் மதிப்பிற் குரிய காமராஜர் அவர்கள், அவர்களுடைய கட்சிக்காரர்கள் எவ்வளவு கூறினாலும், அதற்குத் தொடர்பு இல்லாத, ஆதாரம் இல்லாத விஷயத்தை அவர்கள் மீது சொல்லுவது தவிர்க்கப்பட வேண்டுமென்ற முறையில் அனந்தநாயகி அம்மையார் அவர்கள் 'ஒன்றரைக் கோடி ரூபாய். . . . .' என்று ஆரம்பித்த அந்தத் தொடரிலிருந்து அதன் தொடர்பாக எழுந்த வாதங்கள் எல்லாம் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து எடுத்துவிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** அப்படி இருந்தால் அவர்கள் வெளி நடப்புச் செய்ததும் பத்திரிக்கையில் வரக்கூடாது. அந்த வெளி நடப்பும் பத்திரிக்கையில் வராமல் செய்யவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்போதும் பெருந்தன்மை மிக்கவர்கள். சபையின் பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னுடைய பொறுப்புக் களைத்தான் சொன்னேன். துணைத் தலைவர் அவர்கள் தீர்ப்புச் சொன்னபிறகு பின்னால் அதே பிரச்சினை எழுகின்ற நேரத்தில் என்



னுடைய தீர்ப்பைச் சொல்லாமல் விட்டால் ஏதோ திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணியதுபோல் சட்டமன்றத்தில் எல்லாவற்றையும் எக்ஸ்பஞ்ச் பண்ணிவிடலாம் என்ற நிலை அல்ல. இந்த விவாதத்தின் தொடர்பாக அதற்கான உரிமைகள் உண்டு. ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு வெளியே நடப்பதைப் பற்றியும் பேசலாம் என்ற முறையிலேதான் என்னுடைய தீர்ப்பாகச் சொன்னேன்.

தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கத் திற்குப் பிறகு முதலில் இருந்து, இந்தக் குற்றச்சாட்டு தொடங்கிய திலிருந்து எழுந்த விவாதங்கள், இதன் தொடர்பாக வாக் அவுட் பண்ணினார்கள் என்பது வரை இந்தச் சபையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். திரு. சீனிவாசன் பேச்சிலிருந்து தொடங்கிய எல்லா விவாதங் களும் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று ஆணையிடு கிறேன்.*

பேரவையின் அலுவல்கள் இன்று இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## (6) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

41. Notification issued with G.O. Ms. No. 381, Agriculture, dated the 3rd February 1971, in regard to an amendment to the rules for the regulation of hunting, shooting and fishing and to prohibit the poisoning of water and the setting up of traps or snares within the limits of all reserved forests situated in Tamil Nadu. [Laid on the Table of the House under section 64-A of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882).]

---

* 7-3-1972-ம் நாளன்று இவை அனைத்தும் நடவடிக்கைக் குறிப்பின் பகுதியாக இருக்கும் என மாண்புமிகு பேரவைத் தலைவரால் ஆணையிடப்பட்டது.

45. Notification issued with G.O. Ms. No. 3139, Home, dated the 19th November 1971 in regard to cancellation of Home Department Notification II-1 No. 4718 of 1971 and levy of concessional rate of tax in respect of certain vehicles belonging to the Action for Food Production (AFPRO) Bangalore. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

46. Notification issued with Rc. No. 66334/71 F2, dated the 2nd July 1971 in regard to removal of Thiru L. Balaraman from the Office of the Chairman of the Kaniyambadi Panchayat Union Council in North Arcot district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

47. Statement of guarantee given by the Government of Tamil Nadu to the State Housing Board. [Laid on the Table of the House under section 92 of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

*B. Reports, Notification and Other Paper*

'*Nil*'

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

## செவ்வாய்க் கிழமை, 1972 மார்ச் 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் (திரு. பெ. சீனிவாசன்) அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினுக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

*Postage stamp in memory of late Thiru Muthuramalinga Thevar.*

* 331 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Government have urged the Central Government to issue a stamp of late Thiru Muthuramalinga Thevar; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) காலஞ்சென்ற திரு. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் நினைவாக ஓர் அஞ்சல் தலை வெளியிட இந்திய அரசின் முடிவை விரைவில் இவ் வரசுக்குத் தெரிவிக்குமாறு, இந்த அரசு 14-10-1971 அன்று அஞ்சல்-தந்தித் துறைத் தலைமை இயக்குநரைக் கேட்டுள்ளது.

**திரு. என். டென்னிஸ்:** தமிழ்நாட்டைச் சார்ந்த எத்தனை பெரியவர்களுடைய பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதுபோல், திரு. தளவாய் அரியநாத முதலியார் அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலை வெளியிட 27—1—1971 அன்றும், திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்று 20—9—1971 அன்றும், திரு. வ. உ. சி. அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலை வெளியிட 16—11—1971 அன்றும், டாக்டர் அழகப்பச்

செட்டியார் அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலை வெளியிட 4—3—1972 அன்றும் அஞ்சல்-தந்தித் துறை தலைமை இயக்குநர் அவர்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது. பதில் எதிர்பார்க்கப் படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** திரு. பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் அவர்களின் நினைவாக ஒரு விசேஷ அஞ்சல் தலை வெளியிட வேண்டும் என்று நமது அரசு கோரிக்கை அனுப்பி ஐந்து மாத காலம் ஆகிவிட்டது. அதற்கு இன்னும் அவர்கள் பதில் அனுப்பாத நிலையில், அதை ஞாபகப்படுத்தக்கூடிய ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 14—2—1972 தேதியிட்ட இடைக்கால பதில் ஒன்று அஞ்சல்-தந்தித் துறைத் தலைமை இயக்குநரால் அனுப்பப்பட்டு, அது மாநில அரசுக்குக் கிடைத் திருக்கிறது. இந்தக் கோரிக்கை மத்திய அரசால் அமைக்கப் பட்ட அஞ்சல் தலை ஆலோசனைக் குழுவின் முன்னால் வைக்கப் படும் என்றும், அந்தக் குழு 1973-ம் ஆண்டுக்கான 'ப்ரோக்ராம்' இன்னின்னாருடைய நினைவாக அஞ்சல் தலைகள் வெளியிடுவது என்கிற திட்டப் பரிசீலனைக்கு இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை என்றும், அதற்குப் பிறகு நமக்கு உரிய பதில் கிடைக்கும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

**திரு. மு. பழனிவேலன் :** தலைவர் அவர்களே, பன்னீர்செல்வம் அவர்களுடைய நினைவாகத் தபால் தலை வெளியிட அரசு ஏதாவது முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதுபோன்ற முயற்சி இப்போது எடுத்துக்கொள்ளப்படவில்லை. இப்போது மாநிலத்தின் சார்பாக எடுக்கப்பட்டிருக்கிற முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட பிறகு, அதன் தொடர்பாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவைகளில் அந்த முயற்சியும் ஒன்றாகும்.

**திரு. என். வடிவேல் :** பெரியவர் திரு. இயக்கத்தின் முன்னணி வீரரும், கம்யூனிஸ்ட் கட்சியின் சிறந்த தலைவருமான திரு. ப. ஜீவா னந்தம் அவர்களுடைய நினைவாகத் தபால் தலை வெளியிட அரசு பரிந்துரைக்குமா ?



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** திரு. ப. ஜீவானந்தம் அவர்களுடைய நினைவாகத் தபால் தலை வெளியிடப்பட வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போலவே ஆர்வம் உண்டு. திரு. பன்னீர்செல்வம் அவர்களைப் பற்றிய, கேள்விக்கு விடையளித்ததையொட்டி, அந்த முயற்சியின் தொடர்பாக இந்த முயற்சியும் மேற்கொள்ளலாம்.

**திரு. கே. என். குமாரசாமி :** தொழிலாளர்களுடைய தலைவர் களில் மிக முக்கியமான தியாகி திரு. என். ஜி. ராமசாமி அவர் களுடைய நினைவாகத் தபால் தலை வெளியிட அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்படி வரிசையாக ஒவ்வொருவரும் தபால் தலை வெளியிடவேண்டும் என்று கோரும் போது, நிலைமை என்னவென்றால், இப்போதே அங்கு இந்த ஆண்டு தபால் தலைகள் வெளியிட வேண்டுமென்று 174 கோரிக்கைகள் மத்திய அரசுக்கு வந்திருப்பதாகவும், அவை பரிசீலிக்கப்படுவ தாகவும் நமக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே இவை களெல்லாம் நிதானமாக பொறுத்திருந்துதான் செய்ய வேண்டும்.

## *Sub-Treasury for Pallipat*

* 332 Q.—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to have a Sub-Treasury at Pallipat in Chingleput district; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) இல்லை.

(இ) இந்த வினாவிற்கு இடமில்லை.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** தலைவர் அவர்களே, பள்ளிப் பட்டில் உள்ளவர்கள் 24 மைல்களுக்கப்பாலுள்ள திருத்தணிக்குச் செல்ல வேண்டியிருப்பதால், பள்ளிப்பட்டிலேயே ஒரு சப்-ட்ரெஷரி அமைக்க விரைவில் அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்தணிக்கும் பள்ளிப்பட்டுக்கும் இடையே உள்ள தூரத்தை விளக்கிச் சொன்னதற்கு நன்றி, திருத்தணியில்

பணிச்சுமை அதிகமாக இல்லை என்ற குறை இருப்பதால், அதற்கு 24 மைல் இன்னொரு சப்-ட்ரெஷரி இருப்பது அவ்வளவு அவசியம் இல்லை என்றுதான் அரசு கருதுகிறது.

### மதுவிலக்குக்குத் தனித்துறை

*333 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுவிலக்கு ஒத்திவைப்புச் சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க தனி இலாகா அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மதுவிலக்கு ஒத்திவைப்பு சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க தலைமைச் செயலகத்தில் புதியதாக ஆயத் தீர்வை-மதுவிலக்கு என்ற ஒரு துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதைத் தவிர வேறு துறை அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

திரு. எம். தேவராசன் : மது விலக்கை ஒத்திவைத்தது நல்லது தான் என்றாலும், மதுவுக்குப் பதிலாக இன்னும் வார்னிஷைக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். மதுவின் விலை அதிகமாக இருப்பதால் இப்படி வார்னிஷைக் குடிப்பதாகக் கூறுகிறார்களே அது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சில பேருக்கு அதிகக் காரம் தேவைப்படுவதால் அப்படிப்பட்ட முயற்சிகளில் இறங்குகிறார்கள் என்கிற தகவல்கள் வந்திருக்கின்றன. அப்படிப்பட்டவர்கள் வீணாக அதுபோன்ற போதைப் பொருட்களுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டு விரைவிலே அழிந்து போவதைத் தடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள் அறிவுரை வழங்குவது நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரவர்கள் இன்றைக்கு அவைக்கு வர இயலாததால் அவருடைய கேள்விகள் தள்ளி வைக்கப்படுகின்றன. அடுத்து, 334 எண்ணுள்ள கேள்வி எடுத்துக் கொள்ளப்படுகிறது.



### *Pension for Municipal employees*

*334 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether pensions have been paid to the eligible municipal employees from 14th January 1970; and

(*b*) if not, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) 14—1—1970 முதல் ரூ. 90-ம் அதற்கு மேலும் ஊதியம் பெறும் நகராட்சி ஊழியர்களுக்கு அரசு அண்மையில் தனி மாநில நகராட்சிப் பணியை அமைத்து உள்ளது. அரசாணைகள் 20-23, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை, தேதி 5—1—1972-ல் தமிழ்நாடு நகராட்சிப் பணி, ஒழுங்குமுறை, மேல்முறையீடு, ஓய்வூதியம் பற்றிய விதிமுறைகள் வரையப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஓய்வூதிய விதிமுறைகளின்படி நகராட்சி ஊழியர்கள் ஓய்வூதிய நிதி அமைப்பது பற்றியும் இந் நிதியை இயக்க உள்ளாட்சி நிதிக் கணக்குத் தலைமை ஆராய்வாளர் (Examiner of Local Fund Accounts) பெயரில் அலுவல் பெயர் வைப்புத் தொகைக் கணக்கு Personal Deposit account வைப்பது பற்றியும் 11-2-1972 அன்று அரசு ஆணை எண் 256-ல் உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்குறித்த ஆணைக்கிணங்க நகராட்சி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க நகராட்சி நெறியாளர் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, 14—1—1970-க்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு இப்போதாவது இந்த ஓய்வூதியத் தொகை கொடுக்க முன்வந்திருப்பது வரவேற்கத் தக்கது. அதே நேரத்தில் 14—1—1970-க்கு முன்னால் ஓய்வுபெற்ற இந்த நகரசபை சிப்பந்திகள் 763 பேர்கள்தான் இருப்பதாக நான் அறிகிறேன். அது இன்னும் நாளாக நாளாகக் குறையும் என்ற நிலையில், அவர்களுக்கும் இந்த வசதியைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1972 மார்ச் 7.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 14—1—1970-லிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு—ரூ. 90-ம் அதற்கு மேலும் ஊதியம் பெறும் நகராட்சி ஊழியர்களுக்கு—ஓய்வூதியம் அளிக்கலாம் என்ற நோக்கம் கொண்டிருந்ததன் காரணமாக அதுவரையில் அவர்களுக் கென்று கொடுக்கப் பட்டிருக்கிற நிதியைத் திரட்டிக் கொடுக்குமாறு கேட்கப்பட்டு, அந்த முறையின் அடிப்படையில் ஓய்வூதியம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 14—1—1970-க்கு முன்னால் பிராவிடெண்ட் பண்டு என்ற வகையில் நகராட்சிகள் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையை அவர்கள் கொடுத்து, ஊழியர்கள் அவைகளெல்லாம் பெற்றுவிட்டார்கள். இப்பொழுது ஓய்வூதியம் தரவேண்டு மென்றால் நகராட்சிகள் எந்த அளவுக்கு நிதி உதவி செய்ய முன்வருகிறார்கள் என்ற கருத்தின் அடிப்படையில்தான் செய்ய வேண்டும். அதுபற்றி நகராட்சிகளிடமிருந்து சிலபல கருத்துக்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. இந்த வகையில் கொடுப்பது என்பது இயலாத ஒன்றாக இருக்கும்; வேறு வகையில் தான் திட்டமிட வேண்டியிருக்கும். அவர்களுக் கென்று ஒதுக்கப் பட்ட தொகையை அவர்கள் பெற்றுக்கொண்டுவிட்டார்கள். 14—1—1970-லிருந்து பெறப்படாமலே சேமித்து வைத்திருந்த காரணத்தால் இந்தத் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. அது பற்றி அரசு பரிசீலனை செய்து விரைவில் அதுபற்றியும் முடிவு எடுக்கும்.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** ஓய்வூதியம் ஊராட்சி ஒன்றியங் களிலும், ஊராட்சிகளிலும் பணியாற்றுகிற பணியாளர்களுக்கு அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இக் கேள்வி நகராட்சிப் பணியாளர்கள் பற்றியது. அது இப்போது மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. அது தனியாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** 14—1—1970-க்கு முன்பு ஓய்வு பெற்றவர்கள் சம்பந்தமாகப் பரிசீலனை செய்வதாகத் தெரிவித் தார்கள். அதன் முடிவு எப்போது தெரியும் ?



1972 மார்ச் 7]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதற்கு நகர சபைகளின் ஒப்புதல் தேவைப்படுகிறது. அவர்கள் கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களின் கருத்துக்கள் அரசுக்கு வந்ததற்குப் பிறகு அதுபற்றி முடிவு எடுக்க வேண்டிவரும். அவர்கள் கருத்துக்கள் எல்லாம் திரட்டப்பட்டு வருகிறது. அது வந்ததற்குப் பிறகு முடிவு எடுக்கப்படும்.

### நகராட்சிப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்

* 335 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றி ஓய்வு பெறும் ஆசிரியர் களுக்கு, ஓய்வு ஊதியம் வழங்கும்பொழுது, பஞ்சப்படியும் சேர்த்துக் கணக்கிட்டு ஓய்வூதியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 26—2—1970-ம் தேதியோ அல்லது அதன் பிறகோ நகராட்சிப் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களின் ஓய்வு ஊதியத்தைக் கணக்கிடும் பொழுது 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திய பஞ்சப்படியையும் சேர்த்துக் கணக்கிட வேண்டும் என்று அரசு, தனது ஆணை எண் 1988 (நிலை) கல்வி, நாள் 17—11—1971-ல் உத்தரவிட்டுள்ளது.

**திரு. கே. என். குமாரசாமி :** அது நகரசபைகளில் அமுலாக்கப் பட்டு வருகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 17—11—1971-ல் அந்தப் பஞ்சப்படியையும் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதால் அதன் அடிப்படையில் இப்போது சம்பளம் வழங்கப்படும்.

### ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்

* 336 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் எழுத்தர்கள், சுகாதார உதவியாளர்கள், மருத்துவ மாதுகள், கடைநிலை ஊழியர்கள், ஆயாக்கள், இரவு காவலர்கள் இவர்களுக்கு ஓய்வு

கால ஊதியம் வழங்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையி லுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம். இந்தப் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எம். முத்தையா :** அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது என்று சொன்னார்கள். எப்போது நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைப்பற்றி விளக்குவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தால் இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசாங்கமே மேற்கொண்டு அந்த ஆசிரியர்களுக்கு லிபரலைஸ்ட் பென்ஷன் ஸ்கீம் என்ற அடிப்படையில் ஓய்வூதியத் திட்டத்தின் பயன்கள் ஏற்கனவே அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. தி. பொன்னுமலை :** இந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆயாமார்களுக்குச் சம்பளம் கொடுப்பதில் பல ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 30 என்றும், சில ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 50 என்றும், சில ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 70 என்றும் இப்படி பல்வேறாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரேமாதிரியாகச் சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றித்தான் பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொன்னேன். ஒருமுகப் படுத்தவும், சீர்படுத்துவதற்குமான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் எழுத்தர்கள், ஆயாக்கள் போன்றவர்கள் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களாகக் கருதப்படுகிறார்கள். இவர்களை அரசாங்கப் பணியாளர்களாக மாற்றுவதற்கு உத்தேசமுண்டா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுதான் மூலக் கேள்வி. அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருவதாகக் குறிப்பிட்டேன்.

**திரு. வி. கே இராஜாப்பிள்ளை :** ஊராட்சி ஒன்றியங்களில் தற்காலிகமாக வேலை செய்துவரும் தையல் ஆசிரியைகள் போன்றவர்களை நிரந்தரமாக்கும் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி தனிக் கேள்வி போட வேண்டும். சில பேர்களை பார்ட் டைமாக வைத்துக்கொள்ளும்போது அவர்களைப் பகுதிநேர ஊழியர்களாகத் தான் வைத்துக்கொள்ள முடியும். முழு நேரமாக்குவதற்குத் தனி முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தரப்படும்.

### அம்மாப்பேட்டையிலுள்ள அரசு மருந்தகம்

*** 337 வினா—திரு. ந. சோமசுந்தரம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், அம்மாப்பேட்டை அரசினர் மருந்தகத்தை அரசினர் மருத்துவ மனையாக விரிவு படுத்துகின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தஞ்சை மாவட்டம் அம்மாப்பேட்டையில் உள்ள மருந்தகம் நீண்ட நெடுங்காலமாக எவ்வித படுக்கை வசதியும் இன்றி இருக்கிறது. ஆகவே இதை விரிவுபடுத்த இனிமேலாவது அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மருந்தகம் என்பதற்கும் மருத்துவமனை என்பதற்கும் இடையே உள்ள வேறுபாட்டை உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மருந்தகம் டிஸ்பென்சரி மட்டும்தான். படுக்கை வசதியை விரிவுபடுத்துவது தாலுகா மருத்துவ மனைகளிலேயே

இயலாத ஒன்றாக இருந்து வருகிற நிலையில் இங்கு அப்படி படுக்கை வசதியை விரிவுபடுத்துவதோ அல்லது ஏற்படுத்துவதோ இப்போது இயலாத காரியம்.

* 338 வினா—திரு. ந. சோமசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், அம்மாப்பேட்டை அரசினர் மருந் தகத்தில் பெண் மருத்துவர் ஒருவரை நியமனம் செய்ய செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தஞ்சை மாவட்டம் அம்மாப்பேட்டை அரசினர் மருந்தகத்தில் கூடுதலாக ஒரு பெண் மருத்துவரை நியமிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## ஆலைத் தொழிலாளர்களின் விடுப்புச் சம்பளம்

* 339 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழி லாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்கள் இ.எஸ்.ஐ. லீவ் எடுத்தால் லீவுக்குண்டான சம்பளம் லோகல் ஆபீசில் பெறுவதற்குப் பதிலாக அந்தந்த மில்களிலேயே விநியோகிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தொழிலாளர்கள் இ.எஸ்.ஐ. விடுமுறை எடுத்தால் விடுமுறைக்குண்டான சம்பளம் லோகல் ஆபீசில் பெறுவதற்குப் பதிலாக அந்தந்த மில்களிலேயே விநியோகிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி:** இந்த லீவ் சம்பளம் பெறுவதற்கு ஒரு நாள் லீவ் எடுத்துக் கொண்டு லோக்கல் ஆபீஸுக்குப் போக வேண்டியிருக்கிறது. அதை ஆலைகளிலேயே விநியோகிக்கும் ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமானால் இப்படி லீவ் எடுக்காம லேயே அங்கேயே பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அதைச் செய் வதற்கு அரசாங்கம் ஏதாவது சிபார்சு செய்யுமா ?



**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** ஏற்கனவே இதுபற்றி ஈ.எஸ்.ஐ. இயக்குநர் சில சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். அந்த சிபார்சுகள் எல்லாம் 25—4—1971-ல் கோவையில் நடை பெற்ற ஈ.எஸ்.ஐ. மண்டலக் குழுவில் தொழில் அதிபர்கள், தொழி லாளர்கள் பிரதிநிதிகள் இவர்களிடையே ஆலோசனை செய்யப் பட்டு தற்போதுள்ளபடி லோக்கல் ஆபீஸில் அப்படிச் சம்பளம் வழங்கப்படும் முறை தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டுமென்றும் அதுதான் சிறந்தது என்றும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பொதுவாக எனக்குத் தெரிந்த வரையில் மதுரையில் இம்மாதிரி ஈ.எஸ்.ஐ. லீவ் சம்பளம் வாங்கு வதில் காலதாமதம் ஆகிறது. இன்று கூடப் பார்த்தாலும் நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் க்யூவில் நிற்பதும் ஒருநாள் லீவ் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது. ஆகவே, இதைத் தவிர்க்க, வேறு ஏதாவது ஆலோசனை அரசிடமிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** கனம் உறுப்பினர் அவர்களின் யோசனை சமயம் வரும்போது பரிசீலனை செய்யப் படும்.

**திரு. பா. நாகலிங்கம்:** மீஞ்சூரில் ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனை இருக்கிறது. அங்கு லோக்கல் ஆபீஸ் இல்லாமல் கூட அம் மருத்துவமனை இடம் பெறுகிறது. தொழிலாளர்கள் எல்லாம் திருவொற்றியூருக்கு வந்துதான் லீவ் ஊதியம் பெற வேண்டியிருக் கிறது. ஆகவே, மீஞ்சூரில் ஒரு லோக்கல் ஆபீஸ் திறப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** ஏற்கெனவே அதற்காகச் செலவிடும் தொகை அதிகமாக மாநில அரசுக்கு ஏற்படுவதை கனம் உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். இப்போது அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கு அரசாங்கம் இணங்குவது என்றால் அதற்காக மேலும் செல வாகும். இருந்தாலும் அதுபற்றி யோசிக்கப்படும்.

## தொழிற்சாலைகள் துவக்க உரிமங்கள்

* 342 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1969-70-ம் ஆண்டில் தனியார் துறை, கூட்டுறவுத்துறை, அரசுத்துறை ஆகியவற்றின் மூலம் எத்தனை தொழிற்சாலைகள் துவக்கப்படுவதற்கான அனுமதி மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

| ஆண்டு. | தனியார் துறை. | கூட்டுறவுத் துறை. | மாநில அரசுத் துறை. | மத்திய அரசுத் துறை. |
|---|---|---|---|---|
| 1969 .. | 95 | இல்லை. | 2 | 2 |
| 1970 .. | 136 | இல்லை. | 6 | 1 |

திரு. என். கிட்டப்பா : இதில் எந்தெந்த வகையினருக்கு எவ்வளவு உரிமங்களுக்கு மத்திய அரசினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதையும், அன்னியச் செலாவணி தேவைப்படாத தொழில்களுக்காவது காலதாமதமில்லாமல் அனுமதி வழங்கும்படி மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்துமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தெந்தத் தொழில்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை. ஆனால் காலதாமதம் இருக்கக் கூடாது என்பதை மத்திய அரசிடம் அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : தொழில் துறையில் பெர்மிட் வழங்கும்போது, பெர்மிட்டை இன்னொருவருக்கு விற்றுவிட்டு பெர்மிட் பெற்றவர் தொழில் நடத்தாமல் இருப்பது ஏதாவது நம் மாநிலத்தில் உண்டா? இப்படிப் பெர்மிட் பெற்றவர்கள் தொழில்களை நடத்துவதற்குக் காலதாமதம் ஆவதன் மூலம் பெர்மிட் கொடுப்பதால் என்ன பிரயோஜனம்? அரசாங்கம் இது சம்பந்தமாக ஏதாவது தீர்க்கமான முடிவிற்கு வந்திருக்கிறதா?



மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழில் உரிமம் வழங்குவதும் அதை அமல் நடத்துவது என்பதும் மத்திய அரசின் பொறுப்பாகும். நம்மைப் பொறுத்தவரையில் இப்படி நம் மாநிலத்தில் கொடுக்கப்பட்டவை காலதாமதமாக்கப்படுமானால் அதை மாநில அரசே எடுத்து நடத்துவதற்கு மத்திய அரசு வழி வகுக்க வேண்டுமென்ற கொள்கையை வற்புறுத்தி வருகிறோம்.

## மாமந்தூரில் கனி வளங்கள்

* 343 வினா.—திரு. ந. நாச்சியப்பன் :
திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், மாமந்தூர் என்ற இடத்தில் தாமிரம் கிடைப்பதாக ஆய்வு செய்யப்பட்டு பல ஆண்டு ஆகியும் இன்னும் வேலை துவக்கப்படாததின் காரணம் என்ன?

(இ) அவ் வேலை எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ)—இந்திய புவியியல் பிரிவு தென்னாற்காடு மாவட்டத்தில் மாமந்தூர் அருகில் தாமிரம், ஈயம், துத்தநாகம் கலந்த கனிப்பொருள் சுமார் 9 லட்சம் டன் அளவில் இருப்பதாகவும் அது பூமியில் 700 அடி வரையில் பரந்திருப்பதாகவும் கண்டுபிடித்துள்ளது. இவ்விடத்தில் கனிவளம் சிறிதளவே காணப்படுவதால், இந்திய புவியியல் பிரிவு மேற்கொண்டு ஆராய்ச்சி செய்ய சிபாரிசு செய்தது. அதனால் தமிழ்நாடு கனிவள வளர்ச்சித் திட்டம் மேற்கொண்டு இவ்விடத்தில் ஆராய்ச்சி நடத்தி வருகிறது. இது சம்பந்தமான வேலை தொடர்ந்து நடந்து வருகிறது. இக்கனி வளத்தை பயன்படுத்துவது இவ்வாராய்ச்சி முழுவதும் முடிந்த பின் கிடைக்கும் பலனைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும்.

## மேல் காவேரியில் அணை

* 344 வினா—திரு. கே. ஏ. வகாப் :
திரு. கே. என், குமாரசாமி :
திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல் காவேரியில் மைசூர் அரசாங்கம் அணை கட்டு வதை எதிர்த்து தமிழக விவசாயிகள் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) தமிழ் நாடு அரசு தனியாக இது சம்பந்தமாக ஏதேனும் வழக்கு போட்டுள்ளதா?

(உ) ஆம் எனில், இந்த வழக்குகள் தற்போது எந்த நிலையில் உள்ளன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இந்த அரசு தொடுத்த வழக்கும், உழவர்கள் தாக்கல் செய்த இரு ரிட் மனுக்களும் இந்தியத் தலைமை நீதிமன்றத்தில் முடிவுறு நிலையிலுள்ளன.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, மைசூரில் தேர்தல் முடிந்து புதிய அரசு ஏற்படும்போது நிலைமையில் மாற்றம் ஏற்படலாம் என்று இந்த அரசு கருதுகிறதா ? அப்படி அமையும் புதிய அரசோடு பேச்சு வார்த்தை நடத்த இந்த அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிற காரணத்தால் எந்த வித கருத்தும் சொல்வதற்கில்லை.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** தலைவரவர்களே, இந்த வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். மத்திய திட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் அணை கட்ட பச்சைக்கொடி காட்டி விட்டதாய்ச் சொன்னதாகப் பத்திரிக்கைகளில் செய்தி வந்ததே, அது சம்பந்தமாக இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ?



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இது போன்ற செய்திகள் பத்திரிக்கைகளில் வந்ததும், நான உடனடியாகத் திட்ட அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்களோடு தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு, பத்திரிக்கைகளில் இப்படிச் செய்தி வந்திருக் கிறதே என்று கேட்டபோது, பத்திரிக்கைகளில் சில செய்திகள் திரித்துப் போடப்பட்டு இருக்கிறது என்றும், தான் அவ்வாறு எதுவும் கூறவில்லை என்றும் மறுத்து இருக்கிறார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, கோர்ட்டில் வழக்கு இருக்கிறபோது, மேல் அணை கட்டுவது என்ற முறையிலே மைசூர் அரசாங்கம் அந்த வேலையைச் செய்து கொண்டிருக்கிறதே, அதைத் தடுத்து நிறுத்த கோர்ட்டு ஏதாவது உத்தரவு பிறப்பித்துள்ளதா, அல்லது மத்திய அரசாவது அதை நிறுத்தச் சொல்லி உத்தரவு பிறப்பித்துள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சுப்ரீம் கோர்ட்டில் இது போன்று ஒரு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது. சுப்ரீம் கோர்ட் இது போன்ற ஆணையைப் பிறப்பிக்கவில்லை. மத்திய அரசும் இது போன்ற ஒரு ஆணையைப் பிறப்பிக்கவில்லை.

**திரு. எம். முத்தையா :** தலைவரவர்களே, இதற்கான செலவை மத்திய அரசாங்கம் ஒப்புக் கொள்ளுமா, மாநில அரசாங்கத்தின் மீது சுமத்துமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எந்தச் செலவு என்று சொல்லுங்கள்.

**திரு, எம். முத்தையா :** கோர்ட் செலவு,

(பதில் இல்லை)

**திரு. கே. டி. கே. தங்கமணி :** நாம் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றபோது அதைத் தடைசெய்ய வேண்டுமென்று கேட்டோம். சுப்ரீம் கோர்ட் சில டெக்னிகல் பாயின்ட்ஸ் காரணமாகத்தான் இந்தத் தடை உத்தரவு கொடுக்காமல் இருக்கிறார்கள். இது முக்கிய

மான அரசியல் பிரச்னையாகிவிட்ட காரணத்தால், மத்திய அரசு மாநில அரசை அந்த வேலையைத் தொடரக் கூடாது என்று சொல்வதற்கு அரசு மீண்டும் மத்திய அரசுக்கு விண்ணப்பிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நாம் பல முறை மத்திய அரசிடம் இதைப் பற்றி வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். நம்முடைய வற்புறுத்தலை அவர்கள் முறையாகக் கேட்காத காரணத்தால்தான் நாம் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டி வந்தது. இதை அனைத்துக் கட்சித் தலைவர்களும் உணருவார்கள். ஏனென்றால், இது ஒரு முக்கியமான பிரச்னை. தமிழ்நாடு முழுவதையும் பொறுத்த பிரச்னை. இதில் அரசு மாத்திரம் முடிவு எடுத்து விடாமல், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்து பேசி, அவர்களுடைய கருத்து அறிந்த பிறகு நீதி மன்றத்திற்குச் செல்ல முடிவு எடுக்கப்பட்டது.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, சமீபத்தில் நான் மைசூர் சென்று இருந்தபோது, கபினி ஆற்றில் வேகம் வேகமாக அணை கட்டுவதைப் பார்த்தேன். வழக்கு முடிவு தெரிவதற்குள் அவர்கள் அணையைக் கட்டிவிடும் அபாயம் இருக்கிறது. ஆகவே, அரசு உடனடியாக வேறு ஏதேனும் நடவடிக்கை எடுக்க முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்போது நாம் செய்து இருக்கின்ற இந்த நியாயமான பணிகளைத் தவிர வேறு எதையும், இந்தப் பணிகளைத் தடுப்பதற்கு, செய்ய இயலாத சூழ்நிலையில் இருக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இவ் வழக்கை சுப்ரீம் கோர்ட் துரிதமாகப் பைசல் செய்வதற்கு அரசாங்கத் தரப்பிலிருந்து ஏதாவது மனுக்களைக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஏற்கெனவே அப்படிப்பட்ட கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. துரிதமாகப் பைசல் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றே நம்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வழக்கறிஞர்கள் நமக்குக் கொடுத்திருக்கின்ற தகவலின் படி

Inspection of the relevant documents relating to the issue for the denial or acceptance of the other States is to take place to-day. As soon as the genuineness of the documents is finalised, issues will be framed and the case will be posted for hearing. இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இதைப்பற்றிய வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் சமீபத்தில் மைசூர் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் நேரத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் தேர்தல் பிரசாரம் செய்கிற நேரத்தில், ஹேமாவதி அணை வெற்றி பெற வேண்டுமானால், இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டுப் போடுங்கள் என்று சொன்னார்களே, அப்படிச் சொல்வது நியாயமா? அப்படிச் சொல்வதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இது அடுத்த மாநிலத்தின் பிரச்னை. அவர்கள் தேர்தல் பிரசாரத்தில் இதை எப்படி எப்படிப் பயன்படுத்தினார்கள் என்பதைப் பற்றிச் சொல்ல முடியாது. நாம் பொதுவாக, மத்தியில் இருக்கும் அமைச்சர்கள் இதில் எப்படி நடந்து கொண்டார்கள் என்று கவனிக்க வேண்டும். அது பற்றி இங்கே கேள்வி எழுப்பப்பட்டது. நான் உடனே, அந்தச் செய்தியை யார் தந்தார் என்று பத்திரிக்கைகளில் வந்ததோ, அவர்களை—திரு. சி. சுப்பிரமணியம் அவர்களைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்ட நேரத்தில், அந்தச் செய்தி தவறானது என்று கூறப்பட்டது. அவர்கள் தேர்தல் பிரசாரத்தில் எப்படி இதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதைப்பற்றி நாம் சொல்ல முடியாது. மைசூர் மாநில மக்களுக்கு விரோதமான முறையில் உத்தரவு போட வேண்டுமென்று மத்திய அரசை நாம் கேட்டுக் கொள்ளவில்லை. கர்நாடக மக்களுக்கும், தமிழ் நாட்டு மக்களுக்குமிடையே எந்தவிதமான சார்பும் இல்லாத வகையில்தான் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமென்று நாம் கருதுகிறோம்.

**திரு. கு. காமாட்சி :** தலைவரவர்களே. மைசூர் மாநிலத்தில் தேர்தல் பிரசாரத்தின்போது. திரு. சுப்பிரமணியம் அவர்கள், மைசூர் மாநிலத்திற்கு வந்தால், மைசூர் முதலமைச்சர் அவர்கள் மைசூர் மாநிலத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் உள்ள உறவு பாதிக்கப்படும்

என்று சொன்னார்களே, மைசூரிலே காவிரி ஆற்றிலே அணை கட்டு வதால் மைசூருக்கும், தமிழ் நாட்டுக்கும் உள்ள உறவு பாதிக்கப் படும் என்று தேர்தல் பிரசாரத்தில் அவர்களால் கூறப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிக் கூறப்பட்ட தாகத் தெரியவில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, காவேரியில் மேல் அணைக்கட்டு வேலைகள் எந்த அளவில் இருக்கிறது? முடியும் தறுவாயில் இருக்கிறதா? நிறுத்தப்பட்டு விட்டதா? அது பற்றிய தகவல் நம் அரசுக்கு ஏதேனும் கிடைத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா :** நமது அரசுக்கு தகவல் கிடைத்து இருக்கிறது. வேலைகள் நடைபெற்று வருவ தாகத் தகவல் கிடைத்து இருக்கிறது.

**திரு வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, மைசூர் மாநிலம் தனது மாநிலத்திற்கென்று சில அணைகளை நிறைவேற்றி வருவதால், நாம் இது வரை தாமதப்படுத்தி வந்த நொய்யலாறு அணை, கட்டளை அணை ஆகியவற்றை மற்றவர்களை எதிர் பார்க்காமல் உடனடியாக நிறைவேற்ற அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே சாதிக் பாட்சா :** இந்த பிரச்னைக்கு மற்றொரு பிரச்னை பரிகாரமாகி விடாது. சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் இருக்கிறோம். முடிவை எதிர்பார்க்கக் கடமைப்பட்டிருக் கிறோம். அரசு முனைந்து எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

**திரு கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, கோர்ட் மேல் அணை கட்டுவதைத் தடை செய்யவில்லை. அவர்கள் அணை கட்டிக் கொண்டே இருக்கிறார்கள். நாளைக்குக் கோர்ட் முடிவு வருவதற்குள் அவர்கள் கட்டி முடித்து விட்டால் என்ன செய்வது? சீக்கிரம் முடிவு கிடைக்குமா அல்லது காலதாமதம் ஆகுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் ஏற்கனவே திரு பொன்னப்ப நாடார் அவர்களின் கேள்விக்குப் பதில் சொன்னபோது கோர்ட்டிலே தாக்கல் செய்யப்பட்ட



டாகுமெண்டுகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன, 1-2 மாதங் களுக்குள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லி இருக்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, இப்போது காவேரி ஆற்றின் குறுக்கே அணை கட்டப்பட்டு வரும் இந்த நேரத்தில், மைசூரில் அங்கே உள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ளும் பொறுப்பில் இல்லை. ஆளுநர் அவர்கள் பொறுப்பில் ான் அரசு நடந்து வருகிறது. ஆளுநர் அவர்கள் பொறுப்பில் ரசு நடந்து வருகிறது என்றால், மத்திய அரசு நேரடியாக ஆட்சி ற்று இருக்கிறது என்றுதான் பொருள். மத்திய அரசு ரடியாகப் பொறுப்பேற்று இருக்கிற இந்த நேரத்தில், தமிழ் ட்டைப் பாதிக்கக்கூடிய இந்தக் காவேரி அணை கட்டுகிற ட்டத்தைத் தமிழ்நாடு பல முறை எடுத்துக் கூறியும், வற்புறுத்தியும், வழக்கு மன்றத்திற்குச் சென்றும், இதை நிறுத் தாமல் இருப்பது, மறைமுகமாக இந்தியப் பேரரசே இந்தத் திட்டத்திற்கு இசைவு தருகிறது என்று பொருளாகிறது. இந்தியப் பேரரசின் போக்கு இப்படி வளர்ந்து கொண்டே போனால், தமிழ் நாட்டுக்கு எப்படிக் காவேரி நதித் தண்ணீர்ப் பங்கீட்டை நல்ல முறையில் செய்து முடிக்க வழி வகை ஏற்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளியிலே வருத்தத்தோடு சொல்கிற வார்த்தைகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதுவே அனைவர் உள்ளத்திலும் இருக்கிறது. இந்தக் கேள்விகள் தமிழக மக்களின் உணர்ச்சிகளைக் காட்டுகிறது. இன்றைக்கு இருக்கும் சூழ்நிலை, ஒரு மாநில அரசு இன்னொரு மாநில அரசின் திட்டத்திலே எந்த அளவுக்குத் தலையிட இயலும். உடனடியாகத் தடுத்து நிறுத்த வாய்ப்புக்கூறுகள் இருக்கின்றன என்பவற்றை யோசிக்க வேண்டும். ஆகவேதான் ஜனநாயக ரீதியில் நாம் பல முறை மத்திய சர்க்காரை அணுகினோம். நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நீதி மன்றத்திற்கும் சென்றிருக்கிறோம். இந்த முடிவுகள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் மாநாட்டில் கலந்தாலோசித்து எடுக்கப்பட்டவை. இப்படி எடுக்கப்பட்ட முடிவுகளுக்குப் பிறகு, இன்னும் ஏதாவது முடிவுகள் எடுக்க வேண்டும் என்றால், தனித்த முறையில் எதையும் சொல்லாமல், அனைத்துக்

கட்சித் தலைவர்கள் மாநாட்டைக் கூட்டி, முடிவுகள் எடுத்து, இந்த மாமன்றத்தின் முன் வைக்க முடியும். இந்த நிலையில் தொடர்ந்து கேள்விகள் கேட்பது, வழக்கு நீதி மன்றத்தில் இருப்பதால், அவ்வளவு உசிதம் இல்லை யென்று கருதுகிறேன்.

## நாகையநல்லூர் வாய்க்கால் திட்டம்

* 345 வினா.—திரு. சீ. க. வடிவேலு : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டத்தில், நாகையநல்லூர் வாய்க்கால் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அத் திட்டம் எப்போது துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

## தமிழ்நாட்டு கடற்கரையின் நீளம்

* 346 வினா.—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டின் மொத்த கடற்கரை நீளம் என்ன?

(இ) இந்து மாசமுத்திரம் தமிழ்நாட்டின் கடற்கரையில் எவ்வளவு நீளம் பரவியுள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) 992 கி. மீட்டர்.

(இ) குமரிமுனைக்கு அப்பால் உள்ள கடல் இந்துமகா சமுத்திரம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள், தமிழ் நாட்டின் கடற்கரை 992 கிலோ மீட்டர் என்று சொன்னார்கள். இந்திய உப கண்டத்திலேயே தமிழ் மாநிலத்திற்குத்தான் இவ்வளவு நீண்ட கடற்கரை இருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் இந்தியாவின் கடற் துறை பாதுகாப்பு இருக்க வேண்டும். பதிலாக,



விசாகப்பட்டணத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி, சென்னைத் துறைமுகத்தில் கடற்படையை நிறுவ தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கடற்படை பற்றிய வினாவிற்கு விடையளிக்க முடியாததற்கு வருந்துகிறேன்.

## வீட்டு வசதிக்கு ஒதுக்கப்பட்ட நிதி

* 347 வினா—திரு. ஏ. சுப்ரமணியம் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீட்டு வசதி பெருக்கத்திற்காக மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளில் பெரும் பகுதி மாநிலங்கள் பயன்படுத்தாததால் 'லேப்ஸ்' ஆகிவிட்டது என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் நான்காவது திட்ட காலத்தில் எந்த ஒரு தொகையும் தமிழ் நாடு அரசு "லாப்ஸ்" ஆகவிடவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இந்திய அரசு மாநில திட்டங்கள் அனைத்திற்கும் சேர்த்து மொத்த கடனாகவும், மொத்த மானியமாகவும் தான் வழங்குவதேயன்றி வீட்டு வசதிக்கென்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்வதில்லை.

## மோதூரிலுள்ள காட்டு நிலங்கள்

* 384—திரு. மே. சி. தாயமணி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப் பாளையம் தொகுதி, மோதூரில் காட்டு இலாகாவுக்குச் சொந்தமான உபயோகமற்ற நிலங்களை விவசாயத்திற்காக நிலமற்ற விவசாயிகட்கு வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

## அரசு பேருந்துகளில் நிருபர்களுக்கு இலவசப் பயணச் சீட்டுகள்

* 349 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு பேருந்துகளில் பத்திரிகை நிருபர்களுக்கு இலவசப் பிரயாண ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, சென்னையில் அனுமதி பெற்ற பத்திரிகை நிருபர்களுக்கு 2,500 கிலோ மீட்டர் வரை பயணம் செய்ய கட்டணச் சலுகை ரெயில்வேயில் கொடுக்கப்படுகிறது. அரசாங்க பஸ்களில் இலவசமாக இல்லாவிட்டாலும், குறைந்த செலவிலாவது அனுமதிக்க அரசாங்கம் ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ரெயில்வேயில் எப்படி என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. குறைந்த செலவிலோ இலவசமாகவோ அனுமதிக்க வேண்டிய செயற்குறிப்பு இப்பொழுது இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், கேரளத்தில், சர்க்கார் பஸ்கள் பூராவிலும், பத்திரிகை நிருபர்களுக்கு இலவசமாகப் பயணம் செய்ய, மதுரை டி.வி.எஸ். நிறுவனத்தார் அனுமதித்து வந்தார்கள். இப்பொழுது பாண்டியன் ரோட்வேயில் அப்படி அனுமதிக்கப்படுகிறது. தொடர்ந்து, சென்னையிலும் அது போல் விரும்பும் கரஸ்பாண்டெண்டுகளுக்கு வசதிகள் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, கேள்வி அரசு பேருந்துகளில் பத்திரிகை நிருபர்களுக்கு இலவசமாக பயணம் செய்ய சீட்டுத்தரப்படுமா என்பது பற்றியது. சென்னை மாநகரில் தரப்படுமா என்று கேட்கிறார்கள். பாண்டியன் போக்குவரத்து கழக நிர்வாகக் குழு டி.வி.எஸ். நிறுவனத்தில் கொடுக்கப்பட்ட சலுகையைத் தொடர்ந்து கொடுக்கிறார்கள். அதேபோல் பல்லவா போக்குவரத்து கழகத்திலும் செய்ய, மாண்புமிகு உறுப்பினரின் கருத்து அந்தக் கழகத்தின் நிர்வாகக் குழுவிற்கு அனுப்பப்படும்.



**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இப்பொழுது சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இலவச சீட்டுக்கள், இப்பொழுது அமைந்திருக்கும் பாண்டியா, பல்லவா போக்குவரத்து கழக பஸ்களில் செல்லுபடியாகாது என்கிறார்கள் என்பது உண்மையா ? அப்படியானால் அதை மறுபடியும் செல்லுபடியாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளித்திருக்கும் பாஸ்கள் அரசாங்க பேருந்துகளுக்கு என்று இருந்தாலும், பல்லவா போக்குவரத்துக் கழகத்தில் ஏற்கனவே அரசுத் துறையில் ஓடிக் கொண்டிருந்த பேருந்துக்கள்தான். ஆகவே, இந்தச் சலுகையை சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், சேர, சோழ, பாண்டியா போக்குவரத்துக்கள் இப்பொழுது புதிதாக நாட்டுடைமையாக்கப் பட்டவை. அங்கேயும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குச் சலுகை வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அந்த அந்த நிர்வாகக் குழுவினர் அந்தச் செலவினை அரசாங்கத்திடம் கேட்டிருக்கிறார்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துக்களில் இலவசப் பயணம் செய்ய அனுமதிக்சப் பட்டிருப்பவர்களின் பட்டியலை அமைச்சர் கொடுப்பார்களா ?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துப் பணியாளர்கள், அதிகாரிகள், எம்.வி. எம்.ஐ. சிப்பந்திகள், பார்வையற்றவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், ஆகியவர்கள் (பலத்த சிரிப்பு) எல்லோரும், இலவசமாகப் பயணம் செய்கிறார்கள்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்களுக்கு இலவசமாக அனுமதிக்க உத்தேசம் இல்லை என்று சொன்னார்கள். அரசாங்கத்தால் அனுமதிக்கப் பட்ட பத்திரிகைகள் பொறுத்தவரையிலாவது பாஸ்கள் வழங்க அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த பாஸ்கள் வழங்கப்படும்போது, அங்கத்தினர் எடுத்துச் சொன்ன யோசனையையும் கருத்தில் கொள்ளப்படும்.

## கோயில்களில் தீ மிதி முதலியவைகளுக்குத் தடை

[1972 மார்ச் 7

* 350 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பக்தியின் பெயரால் அலகு குத்திக்கொள்ளுதல், தீ மிதித்தல் ஆகிய செயல்களைத் தடை விதிப்பதற்கு செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, கோவில்களில் ஆண்டவனுக்கு ஆடுகள், மாடுகள் இவற்றைப் பலியிடுவதோடு, இப்படி மனிதர்கள் மீது அலகு குத்திக் கொள்வதைத் தடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, ஆடு, மாடு இவை பலியிடப்படுவது என்பதில் நேரிடையாக உயிர்வதையைப் பார்த்து, சட்டத்தைக் கொண்டு வந்தோம். தீ மிதித்தல், அலகு குத்திக் கொள்வது போன்ற செயல்களில் அசம்பாவிதமான சம்பவங்கள் எதுவும் ஏற்பட்டதாக அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. அதையும் பகுத்தறிவு பிரசாரத்தின் மூலம்தான் தடை செய்யமுடியும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தீ மிதித்தலுக்கு, அலகு குத்திக் கொள்வதற்கும் தடை இருப்பதாக அறிகிறேன். அதையும் மீறி சில பேர் அலகுகளைக் குத்திக் கொள்கிறார்கள். தடைச் சட்டம் 10, 20 ஆண்டுகளுக்கு முன்பே வந்துவிட்டது. இருந்தும், அலகு குத்திக் கொள்பவர்கள், ஆண்டவனுக்குக் காவடி எடுப்பவர்கள், நாவிலே நேரிடையாகக் குத்திக் கொள்ளாமல், மேலுக்கு சில கருவிகளைப் பொருத்திக் கொண்டு, அலகுபோட்டும் தெரிவதுபோல் ஸ்பிரிங் வைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். பார்த்திருக்கிறேன். சட்டம் இருந்தாலும், அலகு குத்திக் கொள்வதாகத் தந்திரம் செய்து ஏமாற்றி வருகிறார்கள். இவற்றைத் தடுக்கும் சட்டத்தைத் தீவிரப்படுத்த முயற்சி எடுக்கலாம்.

**திரு. வீ. இராசகோபால் :** தலைவர் அவர்களே, இன்னமும் ஆண்டவன் பெயரால், ஆடையில்லாமல், மாரியம்மனுக்கு என்று வேப்பிலையை அணிந்து கொண்டு, தமிழ் நாட்டின் நாகரிகத்தை



பாதிக்கும் வகையில் அநாகரிகமாகவும் அசிங்கமாகவும் செய்கிறார்கள். அதை அரசு தடை செய்யுமா ? உதாரணமாக என் தொகுதியில் ஊத்துக்கோட்டையில், சித்திரையில் அப்படிப்பட்ட விழா நடைபெறுகிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதுவரையில் விளம்பரம் ஆகாமல் இருந்த அந்த ஊருக்கு, இங்கே பேசிக் கூட்டம் சேர்த்ததற்கு நன்றி. (சிரிப்பு)

## மீனளக் கார்ப்பரேஷன்.

* 340 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மீனளக் கார்ப்பரேஷன் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இல்லை.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, இப்போது நம்முடைய நாட்டிலே உணவுப்பற்றாக்குறை இருக்கிறது. இந்தப் பற்றாக் குறையைப் போக்க, மீன் உணவை அதிக அளவில் பயன்படுத்தலாம் என்று சொல்லப்படுகிறது. எனவே, மீன் உணவைப் பெருக்கும் வகையில் இந்தத் துறையில் ஒரு கார்ப்பரேஷனை ஏற்படுத்தி, மீன்வளத்தைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, ஏற்கெனவே மீனள கார்ப்பரேஷன் சார்பில் ஒரு கழகம் அமைக்க வேண்டுமென்று அப்போதிருந்த இயக்குநர் கருத்துத் தெரிவித்தார். அதற்குப் பின்னால் வந்த இயக்குநர், கேரளாவிலும், ஒரிசாவிலும் நடைபெற்று வரும் கழகங்களைப் பார்வையிட்டு, அவை நல்லமுறையில் லாபகரமாக நடைபெறாமல் நஷ்டத்தில் செயல்பட்டு வருவதாகவும், அதனால் தமிழ்நாட்டில் கார்ப்பரேஷன் அமைக்கத் தேவையில்லை என்றும் தெரிவித்தார். ஏற்கெனவே மத்திய அரசு நடத்திவரும் மீனளக் கழகத்தில் நமது மாநிலம் பங்கு பெற்றிருக்கிறோம். நமது பங்குத் தொகையாக மூன்று

லட்சம் ரூபாய் செலுத்தி இருக்கிறோம். இப்பொழுது நமது மாநிலத்திற்குத் தனியாக மீனளத் தொழில் வளர்ச்சிக் கழகம் ஒன்று ஏற்படுத்துவது குறித்து பரிசீலனைச் செய்யப்படுகிறது.

**திரு. தொ. பா. சீனிவாசன் :** தலைவரவர்களே, சாத்தனூர் நீர்த் தேக்கத்தில் ஏராளமான மீன்கள் அரசுத் துறையால் பிடிக்கப் பட்டு, மத்திய மீனளக் கார்ப்பரேஷன் மூலம் விற்பனை செய்யப் படுகிறது. அவர்கள் அந்த மீன்களை நேரடியாக கல்கத்தாவிற்குக் கொண்டு சென்று விற்றுவிடுகிறார்கள். ஆகவே, திருவண்ணாமலை, போளூர், ஆரணி போன்ற இடங்களுக்கு நல்ல மீன் கிடைக்காமல் போய்விடுகிறது. அந்த பகுதிகளுக்கும் மீன் கிடைப்பதற்கு மீனளக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, அதன் மூலம் அந்த மீன்களை விற்பனை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, இந்திய அரசின் மீனளக் கார்ப்பரேஷனில் நாமும் பங்கு பெற்றிருக்கிறோம். அந்த அடிப்படையிலே, அவர்கள் இங்கே பிடிக்கப் படும் மீன்களை மேற்கு வங்கத்திற்கு அனுப்பிக் கொண்டிருக் கிறார்கள். மேலும் பிடிக்கப்படும் மீன்களை உரிய காலத்தில் பக்குவப்படுத்தி, விற்பனை செய்வதற்கு நம் போன்ற சில மாநிலங் களில் வசதி இல்லாததால் அந்தக் கழகத்தின் மூலம் விற்பனைச் செய்யப்படுகிறது. அந்தக் கழகத்தினர் அவர்களுக்கு வசதியாக எடுத்துச் சென்று விற்பனை செய்கிறார்கள். எனவே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, மாநில மீன் தொழில் வளர்ச்சி கழகம் அமைக்கப்பட்டுவிட்டால் அந்தக் கழகத்தின் மூலம் கனம் அங்கத்தினர் அவர்கள் கூறிய இடங்களுக்கும் மீன்கள் தாராள மாகக் கிடைக்கச் செய்ய அரசு பரிசீலனை செய்யும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், நம்முடைய கடலோரங் களில் இரால் மீன் வளம் குறைந்துகொண்டே வருகிறது. எனவே, இரால் மீன் அதிகமாக கிடைக்க ஆவனச் செய்ய, அர சாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அப்படி வந் திருந்தால் அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத் துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, இரால் மீன் கிடைக்கவில்லை என்று சொல்ல முடியாது. கிடைக் கின்ற இரால்களைத் தனியார்கள் வாங்கி, பக்குவப்படுத்தி அந்நிய



நாடுகளுக்கு அனுப்பி, அந்நியச் செலவாணி ஈட்டுவதோடு, அதிக லாபமும் அடைகிறார்கள். ஆகவே, சிறு சிறு இரால்கள் மட்டும் விற்பனைக்காக மார்க்கெட்டுக்கு வருகின்றன.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, சிக்கலான பிரச்சனைகளுக்கெல்லாம் வாரியங்கள் அமைத்து தீர்வு காண் கின்ற நமது அரசாங்கம், இந்த மீன் பற்றாக்குறையைப் போக்கவும் ஒரு மீனள வாரியத்தை ஏற்படுத்தி, உணவுப் பற்றாக் குறைப் பிரச்சனையையும் தீர்க்கின்ற வகையில் நடவடிக்கை எடுக் குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்தபடி, மாநில மீனள தொழிற் வளர்ச்சிக் கழகம் ஏற்படுத்தப்பட்டுவிட்டால், இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் எவ்வளவு மீன் பிடிக்கப்படுகிறது? தமிழ் நாடு அரசு மீன் தொழில் வளர்ச்சிக் கழகம் செயல்பட இருப்ப தாகச் சொன்னார்கள். இந்தக் கழகத்தின் மூலம் ஆழ்கடல் மீன் பிடித் திட்டமும் செயல்படுத்தப்படுமா ? அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, எவ்வளவு மீன் பிடிக்கப்படுகிறது என்பதற்கான திட்டவட்ட மான குறிப்பு என்னிடம் இல்லை. என்றாலும், ஆண்டொன்றுக்கு மூன்று முதல் நான்கு லட்சம் டன் அளவுக்கு மீன் பிடிக்கப் படுகிறது. மாநில மீனள தொழிற் வளர்ச்சிக் கழகம் அமைக் கப்பட்டுவிட்டால், ஆழ்கடல் மீன்பிடித் திட்டமும் அதற்கு உட் பட்டதாகத்தான் இருக்கும்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, நமது மாநிலத்தில் 992 கிலோ மீட்டர் கடற்கரை இருக்கிறது. அதிலே இந்துமகா கடலில் பல்வேறு வகையான சிறந்த மீன்கள் கிடைப்பதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். எனவே, அங்கு சென்று ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்காக இந்திய அரசு 30 மீன்பிடி கப்பல்களை வாங்கி யதாகவும், ஆனால் தமிழகத்திற்கு அதில் ஒன்று கூட கிடைக்க

வில்லை என்றும், அவைகளைத் தனியார்களுக்குக் கொடுத்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறதே. அது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் கூறுவது தவறு. ஆழ்கடலில் எங்கெங்கே என்னென்ன மீன்கள் கிடைக்கும் என்பதை ஆய்வு செய்வதற்காக நான்கு மீன்பிடிக் கப்பல்களை வாங்குவதற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்தது. நான்கு கப்பல்களைக் கட்டுவதற்கு கல்கத்தாவில் உள்ள ஒரு கம்பெனியைக் கேட்டிருக்கிறோம். அதில் இரண்டு கப்பல்களைக் கட்டி முடித்துவிட்டார்கள். அந்தக் கப்பல்கள் ஆய்வு செய்யப்பட்டு, எந்தெந்த இடத்தில் என்னென்ன மீன்கள் கிடைக்கும் என்பதை அறிந்து சொல்லப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, மேட்டூர் அணை போன்ற இடங்களில் மீன்களைப் பிடித்து, தனியாருக்கு ஏலத்தில் விற்று விடுகிறார்கள். தனியார்கள் குறைந்த விலைக்கு ஏலத்தில் எடுத்து, அதிக விலைக்கு விற்பனைச் செய்கிறார்கள். எனவே, அந்த மீன்களை மீன்வளத் துறை மூலமாகவே விற்பனைச் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, நாம் தொடங்க இருக்கின்ற மீன்வளத் தொழில் வளர்ச்சிக் கழகம் என்னென்ன பணியைச் செய்யும் என்ற திட்டத்தை வகுக்கும்போது கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்தும் மேற்கொள்ளப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், ஆழ்கடல் மீன்பிடித் திட்டத்திற்கு இந்தோநார்வேஜின் உதவி செய்யப் போவதாகச் சொல்லப்படுகிறதே. அரசாங்கம் அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? மேற்கொண்டு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, அப்படி உதவி கிடைப்பதாக தற்போது என்னிடம் குறிப்பில்லை. ஆனால் இந்தோநார்வேஜின் திட்டப்படி, மண்டபத்தில் ஆராய்ச்சிக் கழகம் ஏற்படுத்தி, பணியாற்றி வருகிறார்கள். ஆழ்கடல் மீன் பிடித் திட்டத்திற்கு அவர்கள் உதவி இப்போது இருந்து வருகிறது.



**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, இந்த இந்தோ நார்வேஜின் திட்டம் ஒருபுறம் இருக்கட்டும். இப்போது இராமேஸ்வரம் பகுதியில் மீனவர்கள் நெடுந்தூரம் சென்று மீன்பிடிப்பதில் திறமை மிக்கவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மீன்பிடிக்கச் சென்றால் ஒரு வாரம் வரையில் கடலில் தங்கிவிடுகிறார்கள். அப்படிப்பட்ட மீனவர்களை ஊக்குவிக்கும் வகையில், ஆழ்கடலில் அவர்கள் மீன்பிடிக்க உதவக்கூடிய அடிப்படையில், அவர்களுக்கு உதவும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, சால் இரு கப்பல்கள் ரெண்டு இப்போது நமக்குக் கிடைத்திருக்கின்றன. அந்தக் கப்பல்களை ஆய்வு செய்து, ஆழ்கடல் மீன்பிடித் திட்டத்திற்கு அவை எவ்வகையில் உதவும் என்பதை அறிந்து, மாநில மீனவர் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கனம் உறுப்பினர் அவர்களின் கருத்தினைப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** தலைவரவர்களே, உதகையில் 'ட்ரவுட்' என்னும் சிறந்த நல்ல ருசியான மீன் கிடைக்கிறது. இந்த மீன் வளர்ப்புப் பணியை அபிவிருத்தி செய்து, மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, இந்த மீன் இனம் நீரோட்டம் உள்ள இடங்களில் மட்டும்தான் வளரும். இப்பொழுது உதகையில் அவலாஞ்சியில் இந்த மீன் வளர்க்கப்படுகிறது என்று நினைக்கிறேன். அந்த இனத்தை வளர்க்கும் பணியை விரிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. நீரோட்டமும் நீர் ஊற்றும் உள்ள இடத்தில் இந்த மீன்களை வளர்க்க முடியும். இது நம்முடைய நாட்டு மீன் அல்ல. ஜப்பான் நாட்டு மீன். இப்பொழுது குற்றாலம் இந்த மீன்களை வளர்ப்பதற்கு ஏற்ற இடமாக இருக்கும் என்று கருதுகிறோம். மின்சாரத்தைப் பயன்படுத்தி நீரோட்டக் கட்டங்களை உண்டு பண்ணியும் இந்த மீன் இனத்தை வளர்க்க முடியும் என்றும் தெரிகிறது. எனவே அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதில் நல்ல பலன் கிடைத்தால், படிப்படியாக மற்ற பல இடங்களிலும் இந்த மீன் வளர்ப்புப் பணியை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## Ferro-Cement Boats.

*311 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(a) whether the Ferro-Cement Boat built at Boat Building Yard in Madras is to be launched; and

(b) if so, the features of this boat?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) ஆம்.

(இ) (1) இரும்பு-சிமிட்டியினாலானதும் 35 அடி முதல் 45 அடி வரை நீளமுடையதுமான படகுகளின் உடற்பகுதி எடை, மரம் உருக்கு அல்லது கண்ணாடி இழையினாலான படகுகளின் உடற்பகுதி எடைக்குச் சமமானதாகும். 45 அடிக்கு மேற்பட்டு நீளமுடையதும், இரும்பு-சிமிட்டியினாலானதுமான படகுகள், மரம், உருக்கு அல்லது கண்ணாடி இழையினால் ஆன படகுகளின் எடையைக் காட்டிலும் எடை குறைவாக உள்ளன.

(2) இரும்பு-சிமிட்டியினாலான படகு விறைவதில்லை அல்லது துருப்பிடிப்பதில்லை; மின் பகுப்பு (Electrolysis) மூலம் பாதிக்கப்படுவதில்லை. மரம் அல்லது உருக்கினாலான படகுகளின் உடற்பகுதிகளைப் பேணுவதில் உள்ள பணிச் சுமையும் கவலையும் இத்தகைய படகுகளின் உடற்பகுதியைப் பேணி வருவதில் இல்லை.

(3) இரும்பு-சிமிட்டியினாலான படகு, ஒட்டுகள் எதும் இல்லாமல் ஒரே வார்ப்படமாகக் கட்டப்பட்டுள்ளதால் படகில் கசிவு ஏற்படக் காரணமில்லை.

(4) இரும்பு-சிமிட்டி அமைப்பு வெப்பத்தைக் குறைவாகக் கடத்தும் திறனுடையதாகும்.

(5) இரும்பு-சிமிட்டியினால் செய்யப்பட்ட படகின் உடற்பகுதிக்கான செலவு, மரம் அல்லது உருக்கினால் செய்யப்பட்ட படகின் உடற்பகுதிக்கான செலவைக் காட்டிலும் 50 சதவீதம் குறைவாக இருக்குமெனத் தெரிகிறது.

(6) துளையிடுவதில் பெயர்போன கடற்பூச்சிகளால் இப்படகு பாதிக்கப்படமாட்டாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இப்போது நாம் கொடுத்திருக்கும் மெகனைஸ்டு போட்டுகளை ஹார்பரில் தூங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் உள்ள குறைபாடுகள் என்ன என்பதை



அரசு ஆராய்ந்ததா? இதை ஒழுங்கு செய்த பிறகுதான் பெர்ரோ சிமின்ட் போட்டுகளைக் கொண்டுவர வேண்டும் என்பதை முடிவு செய்வார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இப்போது கூறிய பதிலில் இருந்தே—மெகனைஸ்டு போட்டுகள் துருப்பிடிக்கிறது, பூச்சி அரிக்கின்றது. ஓட்டை விழுகிறது—ஆகையினால் தான் இரும்பினால் கட்டப்படுகிற அவற்றுக்குப் பதிலாக சிமின்டினால் இந்த பெர்ரோ—சிமின்ட் போட்டைக் கட்ட நமது மீனளத்துறை முன்வந்திருக்கிறது என்று அறியலாம். அதோடு மெக்கனைஸ்டு போட்டைக் காட்டிலும் இதற்கு 50 சத வீதம் செலவு குறைவாகவே இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அப்படியானால் மெக்கனைஸ்டு போட்டுகளை யார் யாருக்குக் கொடுத்திருக்கிறோமோ அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கும் இந்த பெர்ரோ—சிமிண்ட் போட்டை அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** எதுவுமே இனிமேல் கொடுக்கிறவர்களுக்குதான் அரசாங்கம் இதுபோன்ற போட்டுகளை வழங்க முன்வருமே தவிர முன்னே வழங்கப்பட்டவர்களுடைய போட்டுக்களையும் திரும்பப்பெற்று அவற்றை எல்லாம் நஷ்டக் கணக்கில் எழுதுவது சாத்தியம் இல்லை.

**திரு. செ. கந்தப்பன்:** இப்படிப்பட்ட சிமிண்ட் படகுகளைக் கட்ட முன்வந்திருப்பது நம்முடைய மாநிலத்தில் ஒப்பற்ற சாதனையாகும். கடல் பகுதி மீன் வளர்ச்சியைக் குறித்து—அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தில் இருந்து இந்தப் படகுகளை நம்மிடம் இருந்து வாங்குவதற்கு வெளிநாடுகள் ஏதாவது முன் வந்திருக்கின்றனவா? உள்நாட்டில் விற்பனை செய்வதற்கும் நம் அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இந்தப் படகுகளை நம்முடைய மாநில உபயோகத்திற்குத்தான் தயாரித்திருக்கிறோம். அமெரிக்க நாட்டில் இருந்து வந்தவர்கள் இதைப் பார்வையிட்டு, இதுபற்றிய விளக்கங்களை எல்லாம் கேட்டார்கள். அதுபோன்ற படகுகளை பின்னால் நம்மிடம் இருந்து கேட்பார்களோ என்னமோ இப்போது நாம் எதுவும் சொல்ல முடியாது.

**திரு. ஏ. எம். இராஜா :** இப்போது மேல்நாடுகளில் ப்ளாஸ்டிக்கினால் கப்பலே கட்டுவதாக செய்தித் தாள்களில் இருந்து அறிகிறோம். அந்த முறையில் நம் நாட்டிலும் ப்ளாஸ்டிக்கினால் படகு கட்ட அரசு ஏதாவது முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** படகுகள் கட்டுவதற்கு எல்லாவிதமான முறைகளையும் இந்த அரசு நன்கு பரிசீலனை செய்த பிறகுதான்—இதுபோன்ற பெர்ரோ—சிமிண்ட் படகுகளைக் கட்ட முன்வந்திருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** பெர்ரோ—சிமிண்ட் படகுகள் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு கட்டப்படுகின்றன? விலை என்ன ஆகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இப்போது 38 அடிப் படகு ஒன்று அரசுத் துறையில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. தற்காலிகமாக வெள்ளோட்டமும் விடப்பட்டிருக்கிறது. மேலும் சென்ற ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் காரணமாக 8 படகுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு அதிகமாக இருக்க முடியும்.

சாதாரணமாக மெக்கனைஸ்டு படகு ஒரு 38 அடி நீளம் கட்டுவதற்கு 65 ஆயிரம் ரூபாய் ஆகும் என்றால் இந்தப் படகுக்கு 33 ஆயிரம்தான் ஆகும். 32 அடி படகு ஒன்று கட்டுவதற்கு 51 ஆயிரம் ஆகும் என்றால் இந்த 25 ஆயிரம்தான் ஆகும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அப்படியானால் இந்தப் படகுகளை மீனவர்களுக்குக் கொடுக்கிறபோது என்ன விலைக்குக் கொடுப்பார்கள்? தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கிறபோது என்ன விலைக்குக் கொடுப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இரண்டு பேர்களுக்கும் விலையில் வித்தியாசமான வேறுபாடும் கிடையாது. ஆனால் மீனவர்களுக்கு சப்சிடி கொடுக்கிறோம். மற்றவர்களுக்கு சப்சிடி கொடுப்பதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. நடைமுறைக் கேள்வி.

### காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் செய்த வெளிநடப்பு பற்றிய குறிப்பு நீக்கப்பட்டது குறித்து

THIRU R. PONNAPPA NADAR : On a point of order, Sir, **yesterday we staged a walk-out consequent on certain proceedings that happened in the House. Certain proceedings were expunged** from the House and I referred to Rule 235 of our Rules of Procedure and my submission before this House is that staging a walk-out **does not form part of the proceedings and as such it cannot be expunged. That walk-out has been withheld from the Press and also from the proceedings of this House. I would once again refer** to Rule 235—

**"If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent, or unparliamentary or undignified, or grossly irregular he may in his discretion, order that such word or words be expunged from the official report of the proceedings of the House, and all consequential alterations made in such report and make an announcement in the Assembly of the fact of his having made such order."**

Here, the House may be aware, that what is referred to his "word or words which has or have been used in debate". So far as **staging a walk-out is concerned, it may not be proper to expunge it,** because that arose incidentally and that will have to be recorded and my submission is that the procedure adopted is not legal and in **consonance with the rules of procedure. As such, I would request a ruling from the Chair on this point.**

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Mr. Speaker, I have also . . . . .

**MR. SPEAKER : Is it on the same point?**

THIRUMATHI **T. N. ANANDANAYAKI :** I have given notice yesterday. I am referring to walk-out staged by our party. According to Rule 235 " **a word or words which has or have been used in debate, which is or are defamatory or indecent,** or unparliamentary or undignified or grossly irregular " may in the discretion of the Hon. Speaker be expunged. But walk-out does not form part and **parcel of records. Only such words which go on record can be** expunged. Walk-out cannot, therefore, be expunged. It is an

' action ' and is not a ' word ' or ' words '. My submission is yesterday the Hon. Speaker ordered expunction of even walk-out. Walk-out is a weapon which is used by Opposition parties to show their dissatisfaction against the ruling party. My submission is walk-out should not be expunged by the Hon. Speaker. That takes away the right and privilege of hon. Members of the Assembly. I hope this may not be repeated again in this Assembly to safeguard the privileges of hon. Members here.

**Dr. H. V. HANDE** : May I just say a few words by way of a point of order? In the annals of Democratic Parliamentary Institutions anywhere in the world a walk-out has never been expunged. As far as I know, no Speaker has expunged the process of walking-out. Walk-out is a sort of legitimate protest allowed in all democratic institutions for the Opposition to express their resentment on a particular ruling. Even on the rulings of Speakers, walk-outs have been staged. Supposing the Hon. Speaker gives a ruling and normally we are not allowed to comment on the ruling itself. But even on the rulings of the Speakers walk-outs are staged. Therefore, may I suggest not by way of trying to make it a debatable point—whatever happened has happened and I am not going into that—that at least in future it is better we are protected from this sort of ruling whereby even walk-outs are completely scorched.

For instance, if we want to express our resentment in the extraordinary manner, not sufficient by words, by staging a walk-out the very process by which we can express our unwillingness on a particular ruling is denied. Now when the Opposition is in a very very small minority, we have got only very few opportunities to express our resentment. We cannot bring a No-Confidence Motion. We do not have even the quorum to bring a No-Confidence Motion. I, therefore, request in all earnestness without trying to make it a debatable point and make a fervent appeal to the Hon. Speaker to give us an assurance that at least hereafter staging of walk-outs will not be expunged. from the proceedings of the House.

**திரு. நா. வீராசாமி** : தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த மன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையொட்டி காங்கிரஸ் காரர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். அப்படி வெளிநடப்புச் செய்ததையும் சேர்த்து எக்ஸ்பஞ்ச் செய்யும்படி சபாநாயகர்



'காங்கிரஸ்
தீர்ப்பு அளித்தார். அப்படி இல்லையென்றால்,
காரர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்' என்ற செய்தி பத்திரிகை
களில் வரும். ஏன் வெளிநடப்புச் செய்தார்கள் என்ற கேள்வி
பிறக்கும். அதற்காகத்தான் வெளிநடப்புச் செய்ததையும்
சேர்த்து எக்ஸ்பஞ்ச் செய்தார். மாண்புமிகு பேரவைத் தலைவர்
ஒரு பிரச்சினையின்மீது ஒரு தீர்ப்புக் கொடுத்தபிறகு, மீண்டும்
அந்தத் தீர்ப்பைக் குறித்து கேள்வி கேட்பதுபோல் கேட்பது
முறைதானா?

**திரு. தொ. ப. சீனிவாசன்** : தலைவர் அவர்களே, நேற்றைய
தினம் நடந்த விவாதத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு
பேரவைத் தலைவர் சில பகுதிகளை பேரவை நடவடிக்கைக் குறிப்
பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று தீர்ப்பு அளித்தார்கள். இப்
போது அந்த பகுதிகள் சேர்க்கப்படவேண்டுமென்று அம்மையார்
அவர்கள் கேட்கிறார்கள். அம்மையார் பேசியதையாவது அந்தக்
குறிப்பில் சேர்க்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர்கள்
பாயின்ட் ஆஃப் ஆர்டரைக் கிளப்பியிருக்கிறார்கள். டாக்டர்
ஹாண்டே அவர்கள் "இப்படி உலக சரித்திரத்திலேயே இல்லை"
என்றார்கள். அவருக்குத் தெரிந்த சரித்திரம் வேறு. எனக்குத்
தெரிந்தது வேறு. எனக்குத் தெரிந்திருப்பதைவிட அவருக்கு
அதிகமாகத் தெரிந்திருக்கக்கூடும். சட்டப் பேரவைத் தலைவன்
என்ற முறையில் இந்த மன்றத்தின் உரிமைகள், கடமைகள்
போன்றவற்றிக்குப் பாதுகாவலனாக இருக்கிறேன். இந்த மன்றத்
தில் இருக்கிற உறுப்பினர்களின் உரிமைகள், கடமைகளுக்கும்
பாதுகாவலனாக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும்
வேறு விவகாரங்களுக்குப் போக வேண்டாமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்ச்சிகளை அகடமிக் இஷ்யூ
வாக எடுத்துக்கொண்டு ஒரு ரூலிங் கொடுக்க அனுமதிக்க வேண்டு
மென்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்டுக்கொண்டார்
கள். வேறு விவகாரங்கள்பற்றி பேசுவதற்கு வேறு நேரம் இருக்
கிறது. இப்போது அவர் எழுப்பிய பிரச்சினையிலே இரண்டு
விவகாரங்கள் இருக்கின்றன.

ஒன்று, திரு. பொன்னப்ப நாடார் எழுப்பிய முதல் பிரச்சினை, ஒரு ஸ்பீக்கர் ரூலிங் கொடுத்த பிறகு இன்னொரு ஸ்பீக்கர் அதை மாற்றலாமா என்று. அதற்கு 235-வது விதியைப் படித்துக் காட்டினார்கள்.

"If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent, or unparliamentary or undignified, he may in his discretion, order that **such word or words be expunged from the official report of the** proceedings of the House, and all consequential alterations made in **such report and make an announcement in the Assembly of the fact of his having made such order.**"

என்று சொன்னார்கள். ஒரு சின்ன விவகாரம், மிகத் தெளிவானது. சட்டமன்ற விதிகளிலும் இருக்கிறது. ஒரு சபாநாயகர் அளித்த ரூலிங்குக்கு விரோதமாகவோ, அல்லது அதை மாற்றியோ அல்லது அதற்கு முரண்பாடாகவோ இன்னொரு சபாநாயகர் ரூலிங் கொடுக்கக்கூடாது என்று இல்லை. அப்படி வழக்குமன்றத்திலும் ஒரு ஜட்ஜ் அளித்த தீர்ப்போடு வழக்குகள் முடிந்து விடுவதில்லை. அப்படி ஒரு ஜட்ஜ் அளித்த தீர்ப்புதான் சரியானது, அதை மாற்ற முடியாதது என்றால் உலகமே முடிந்துவிட்டிருக்கும். கடைசி சபாநாயகர் அளித்த தீர்ப்பைத்தான் ஒட்டிப் போகவேண்டும்.

That holds the House.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, சாதாரணமாக ஸ்பீக்கர் ரூலிங் கொடுத்தவுடனே, அதுதான் ஃபைனல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே விஷயத்தை வேறு ஏதாவது வகையில் கிளப்பினால் அதற்கு வேறு ஒரு ரூலிங் வரும். ஒரு ரூலிங்குக்கு அப்பீல் கிடையாது. நேற்று நடந்த சம்பவங்களின் மீது கொடுத்த ரூலிங்குக்கு அப்பீல் கேட்பதுபோல் இருக்கிறது. தாங்கள் இந்த அப்பீலை ஏற்றுக்கொண்டால், இரண்டாவது ரூலிங் கொடுக்க வேண்டி வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது முற்றிலும் புதிதானது. திருமதி அனந்தநாயகி அவர்கள் எழுப்பிய பிரச்சினையின் அடிப்படையிலே இது எழுந்தது.



One Speaker's ruling is not binding on the other.

அதற்குக் கட்டுப்பட வேண்டும் என்று இல்லை. நமது புத்தகத்தில் இருக்கிறது. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு வழக்கறிஞர். கோர்ட்டுகளில்கூட அந்த நிலைமை இல்லை. அப்படியானால் ஒரு காரியம்கூட நடைபெறாது. அந்த ரூலிங்கை ரீ ஓபன் பண்ணுவதும் இல்லை.

இரண்டாவதாக, திருமதி அனந்தநாயகி அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். நேற்று நடந்த சம்பவம் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்குமே தெரியும். பத்திரிகை நிருபர்கள் மத்தியிலே கூட "வாக்அவுட் செய்ததைப் பத்திரிகைகளில் போட்டால் என்ன?" என்கிற கேள்வி எழலாம். இது பொதுப் பிரச்சினையாக இருக்கிற காரணத்தால் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபற்றி என்னுடைய ரூலிங்கை கொடுக்க இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 'குறிப்பிட்ட செய்தி' பற்றிச் சொன்னார்கள். மறுபடியும் அதைச் சொல்ல நான் விரும்பவில்லை. ஒருமுறை ரூலிங் கொடுத்த பிறகு, அந்தப் பிரச்சினையைப்பற்றி மறுபடியும் வரலாமா என்று குறிப்பிட்டார்கள். நேற்று நடந்த சம்பவங்கள் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து போக வேண்டும், பத்திரிகைகளிலும் வெளிவரக் கூடாது என்று தாங்கள் அறிவித்தீர்கள். இன்றைக்கு எழுப்பப் பட்டிருக்கிற பிரச்சினையின் தன்மையினால், 'நேற்று இப்படி ஒரு சம்பவம் நடந்தது' என்று நேற்றைய சம்பவங்கள் வெளிப் படுகின்ற நிலைமை ஏற்படுகிறது. நேற்று அளித்த தீர்ப்புக்குப் பிறகு இன்றைக்கு வேறு ஒரு தீர்ப்பு அளிக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை முன்னவர் கருத்தை இந்த விஷயத்தில் நான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. நாம் இதை அகடமிக் இஷ்யூவாக ஏற்றுக்கொள்ளப் போகிறோமா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். இரண்டாவது பிரச்சினை, ஒரு ஸ்பீக்கர் ரூலிங் கொடுத்தால் மறுபடியும் இன்னொரு ஸ்பீக்கர் ரூலிங் கொடுக்கலாமா? வாக்அவுட் செய்ததை பத்திரிகை

களில் போடக்கூடாது என்று ஸ்பீக்கர் உத்தரவிடலாமா என்பது. இது தனி நபர் பிரச்சினை அல்ல. இது மன்றம், மன்றத்தினுடைய தலைவர் விஷயமாக இருக்கிற காரணத்தினால் இது பற்றிய ஒரு தீர்ப்பை வழங்கலாம் என்று இருக்கிறேன்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. தங்கமணி அவர்களும் பல பிரச்சினைகளை எழுப்பினார்கள். வாக்-அவுட் என்பது ப்ரொசீடிங்ஸில் சேருமா, அது ப்ரொசீடிங்ஸின் பாகமா, அப்படி ப்ரொசீடிங்ஸில் இருந்தாலும் அதனை நீக்க சபாநாயருக்கு உரிமை இருக்கிறதா, வாக்-அவுட் பண்ணுவதற்கு உரிமை இல்லையா? பேசுவதைத்தான் எக்ஸ்பஞ்ச் பண்ணுகிறீர்கள், வாக்-அவுட் பண்ணுவதையும்கூட எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமா என்றெல்லாம் கேள்விகளை எழுப்பினார்கள். இதற்கு என்னுடைய தீர்ப்பை வழங்க இருக்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன மாதிரி எல்லாவற்றிற்கும் உபயோகமாக இருக்கும் இது பற்றிய தீர்ப்பை இப்பொழுது வழங்குகிறேன்.

Thirumathi T. N. Anandanayaki has stated that under Rule 235 of the Assembly Rules, the Hon. Speaker may order expunction of words which are defamatory and that expunction would only apply to a recorded proceedings. She has further stated that on 6th March 1972, the Hon. Speaker has ordered expunction of an instance of walk-out by hon. Members of the Congress Party which does not form part and parcel of the recorded proceedings. She is, therefore, of the view that it amounts to a breach of privilege of hon. Members.

அதற்கு முன்பு ரொம்பச் சாதாரணமான விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். வார்த்தைகளைக்கூட சில வேளைகளிலே அர்த்தம் பார்ப்பது இல்லை. ப்ரசீடிங்ஸ் என்றால் ஆக்ஸ்பர்ட் அகராதியின்படி பார்த்தால் action, piece of conduct ப்ரசீடிங்ஸ்தான். ப்ரசீடிங்ஸ் என்பது பேசுவது மட்டுமல்ல, action, piece of conduct ' இவைகளும் ப்ரசீடிங்ஸில்தான் சேரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.



Rules 234 and 237 of the Assembly Rules relate to the publication or report proceedings and other documents by or under the authority of the Tamil Nadu Legislative Assembly. Clause (2) of Article 194 says—

". . . . ' no person shall be so liable in respect of the publication by or under the authority of a House of such a Legislature of any report, paper, votes or proceedings '."

According to Basu's Commentary on the Constitution of India,—

"' This part of Clause (2) practically reproduces the substance of the (English) Parliamentary Privileges, Act, 1840, which was enacted to override the decision ' in *Stockdale* v. *Hansard* to the effect that the resolution of a House of Parliament was not sufficient to exempt a person, publishing a defamatory matter under authority of such resolution of the House from the law of defamation.

The Act of 1840 conferred absolute privilege from the law of defamation on all ' reports, papers, votes, and proceedings published by order of *either* House of Parliament.'."

" The immunity under this clause is confined to publication by or under the authority of a House. A newspaper is not privileged under this clause even though its report be faithful, unless it is authorised by the House."

To afford immunity to the Press, the Indian Parliament has passed the Parliamentary Proceedings (Protection of Publication) Act, 1956. But this Act applies to the publication of the proceedings of the Lok Sabha and Rajya Sabha only. Such an act has not been passed by the Tamil Nadu Legislature.

In England, this position was settled following the judgment in the well known English case of *Stockdale V. Hansard* (1836-37), by the passing of the Parliamentary Papers Act in 1840, to provide immunity to the publishers of Parliamentary papers by the orders of the respective House of Parliament.

According to May's Parliamentary Practice,—

' . . . . If either House desire to withhold their proceedings form the public, it is within the strictest limits of their jurisdiction to do so, and to punish any violation of their orders. '

From the above it will thus be seen that the House has an absolute privilege to prohibit the publication of its proceedings entirely or such part of its proceedings as has been directed to be expunged. Such part of the proceedings as has been directed to be expunged does not form part of the 'proceedings' of the House and a publication thereof without the authority of the House constitutes contempt.

According to May's Parliamentary Practice,—

'Proceedings covers both the asking of a question and the giving written notice of such question, and includes everything said or done by a Member in the exercise of his functions as a member in a committee of either House, as well as everything said or done in either House in transaction of parliamentary business'.

I have underlined the words 'everything said or done in either House in the transaction of Parliamentary business.'

Rule 235 of the Assembly Rules prescribes that if the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent, or unparliamentary or undignified, or grossly irregular, he may in his discretion order the expunction of such word or words . . . Rule 242 of the Assembly Rules enables the Speaker to regulate the conduct of the Business of the Assembly in all matters, not provided for in the Constitution or in the Rules. Under these rules, the Hon Speaker is empowered not only to order the expunction of a word or words which are undignified or grossly irregular, but also prohibit the publication of walk-out which in the present case was staged by the Congress Party and formed part of the Proceedings.

DR. H. V. HANDE: Sir, one word. I do not want to speak on the ruling.

MR. SPEAKER: It is very clear. I do not want the hon. Member to dilate any further on the matter.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் இப்பொழுது தாங்கள் அளித்த தீர்ப்பின்மீது எதுவும் பேசப் போவதில்லை.



மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன்
நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன்
அவர்கள் பேசிய நேரத்திலே திருமதி அனந்தநாயகி அம்மையார்
அவர்கள் பொதுக்கூட்டத்தில் பேசியதைக் குறிப்பிட்டுச் சில
விஷயங்களைச் சொன்னார்கள். அப்பொழுது திருமதி அனந்த
நாயகி அம்மையார் அவர்கள் எழுந்து குறுக்கிட்டு அதற்குச் சில
காரணங்களைத் தெரிவித்தார்கள். நானும் குறுக்கிட்டுச் சில
விஷயங்களைப்பற்றி அம்மையார் அவர்களிடத்திலே கேட்டேன்,
அவர்களும் பதிலளித்திருந்தார்கள். அந்தக் குறுக்கீட்டின்
இறுதியிலே, ஏற்கெனவே பேசப்பட்டு நடவடிக்கைக் குறிப்
பிலிருந்து அகற்றப்பட்ட விஷயத்தை அம்மையார் அவர்கள்
சுட்டிக் காட்டினார்கள். யாரோ ஒரு பெருந்தலைவர் மீது எழுப்பப்
பட்ட பிரச்னை அது. அதை நான் விளக்க விரும்பவில்லை. அவர்கள்
ஒன்றரைக் கோடி என்று ஆரம்பித்தார்கள். அதிலிருந்து விவாதம்
பரபரப்புக்குள்ளாகி நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து எடுக்கப்
பட வேண்டுமென்று தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஒரு வேளை
நான் தெரிவித்த நேரத்திலே நான் சரியான விளக்கம் தராத
காரணத்தினாலோ என்னவோ முழுக் குறிப்பையும் எடுத்துவிட
வேண்டுமென்று தாங்கள் தீர்ப்பு அளித்தீர்கள்.

நேற்றைய தினம் பிரச்னையை உருவாக்கியது 'ஒன்றரைக்
கோடிப்' பிரச்னையும் அதைத் தொடர்ந்து வந்தவையும்தான்.
தங்கள் தீர்ப்பிலே நான் குறுக்கிடுகிறேன் என்று நினைக்க
மாட்டீர்கள் என்று கருதுகிறேன். அந்த 'ஒன்றரைக் கோடி
பிரச்னை'-க்குப் பின்னாலே வந்தவைகளை தாங்கள் ஏற்கனவே நீக்கி
யிருக்கிறீர்கள். அதற்கு முன்பு திரு. சீனிவாசன் அவர்கள்
பேசியவையும், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள்
குறுக்கீடுகளும், அதற்குப்பிறகு நான் குறுக்கிட்ட விவாதங்களும்
அப்படியே நடவடிக்கைக் குறிப்பிலே இருக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Arising out of what the Hon. Chief Minister has stated, I want to raise a point of order and that is a very valid point of order which would be very useful for the House. The Hon. Chief Minister has stated three-fourth of the proceedings has already been expunged. If any of us had stated even half of what he had stated, we would have been pulled up by

the Hon. Speaker by the thumping of the desk. Now the point is that the Hon. Chief Minister has requested the Chair to de-expunge what was already expunged. Indirectly and in a very respectful manner he is questioning the very judgment of the Hon. Speaker . . .

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, on a point of order. The hon. Member should not interpret it as questioning the Chair.

DR. H. V. HANDE : I am speaking on a point of order and the Hon. Minister does not know the rules of the House. He should not interrupt me and I am not yielding . . . .

THE HON. THIRU K. ANBAZHAGAN : Mr. Speaker, Sir, . . .

DR. H. V. HANDE : I am not yielding the floor . . .

THE HON THIRU K. ANBAZHAGAN : The hon. Member should not interpret it as questioning the Chair.

DR. H. V. HANDE : Don't you have confidence in the Hon. Speaker ? He can protect himself . . . .

THE HON. THIRU K. ANBAZHAGAN : It is our duty to see that an hon. Member does not interpret as he pleases.

DR. H. V. HANDE : The Hon. Speaker can protect himself and he does not require the help of others. My question is, how can the Hon. Chief Minister request the Chair to de-expunge what was already expunged and even the Chair did not allow the newspapers to publish certain remarks. According to the Rules of Procedure, the Hon. Speaker has got a right to say that the Press should not publish expunged matter. If some words or portions of speech are expunged from the proceedings, the Press has got a right to say that remarks of such and such Member had been expunged by the Hon. Speaker. The Press at the same time do not have the right to publish the expunged matter. Therefore I would like the Hon. Speaker to give his decision on—

(1) whether the Press does not have that right to say. It has been the practice all along. Even when the D.M.K. was in Opposition, the previous Speakers have been allowing it when certain remarks were expnnged.



(2) when the Hon. Speaker does not allow us to say whatever we wanted to say on this issue, he has allowed the Hon. Chief Minister to say what all he wanted to say from his side. So he must now give an opportunity for the Opposition to say what our views are. There is one more point.

If walk-out is 'proceedings of the House', the Hon. Speaker has no need separtely to expunge it. If it does not come under proceedings', it cannot be expunged since it is not 'proceedings of the House.'

MR. SPEAKER : Are you commenting on my ruling?

DR. H. V. HANDE : No. I want the Hon, Speaker to give his ruling on the following :—

(1) Whether it is possible for the Hon. Speaker to allow the Hon. Chief Minister to comment on what has been exunged;

(2) Whether it is valid on the part of the Hon. Chief Minister to request the Hon. Speaker to de-expunge what has been expunged already; and

(3) Whether walk-out is 'proceedings of the House'? If it is so, there is no need to expunge it separately. If it is not coming under 'proceedings of the House', how can it be expunged?

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், நேற்று நடந்த புரொசீடிங்ஸிலேயெல்லாம் எதையெதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்று நீங்களே உத்தரவு கொடுத்திருக்கிறீர்கள். இந்த இடத்திலேயிருந்து இந்த இடம் வரை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்னையை நான் எழுப்பவில்லை. தாராளமாக வரட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் இதே சபையிலே மெஜாரிட்டி இருக்கின்ற காரணத்தினால் கனம் முதலமைச்சரவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். நீங்கள் ரூலிங் கொடுத்தீர்கள். உங்கள் ரூலிங்கையே ரிவைஸ் செய்ய முடியுமா? ரிவிஷன் அத்தாரிட்டி யார்? ஸ்பீக்கர் ரூலிங்கை கொஸ்டின் செய்யும் முறையில் அரசாங்கத்தின் முதல்வரவர்களின் விருப்பம் என்று சொன்னால் அது நியாயமாகுமா என்பதுபோன்ற பல மரபுகளை வரையறுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். உங்கள் ரூலிங்கையே கொஸ்டின் செய்கிறார்கள்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 7

The Speaker's ruling cannot be questioned. But now it has come to the stage of even the Hon. Chief Minister questioning the ruling of the Hon. Speaker. When such is the case, how can the d guity of the House be safeguarded? That is our question.

அவர்கள் நினைத்து நினைத்து ஒரு நாளைக்கு எக்ஸ்பஞ்ச் செய்யுங்கள் என்று சொல்வது ஒரு நாளைக்கு வேண்டாம் என்று சொல்வது 184 பேர்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால். நேற்றே சொல்லியிருக்கலாம். எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்று நீங்கள்தான் சொன்னீர்கள். இன்று இதைச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். இப்படி நினைத்து நினைத்து தங்களுக்கு மெஜாரிட்டி இருக்கின்ற காரணத்தினால், நாங்கள் 14 பேர்களே இருப்பதால் இப்படிச் செய்தால் பிரிவிலிஜுக்குச் சரியாக இருக்காது. அது மிகவும் வருந்தத்தக்கது.

The Speaker's ruling cannot be questioned. The Speaker has no power to revise the ruling once given. That is the very strong protest we are making.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், நான் எழுந்து என் கருத்தைச் சொல்ல வேண்டாமென்றுதான் நினைத்தேன். நான் ஆரம்பத்திலேயே எழுப்பிய ஒரு விஷயம் நேற்று முதன் முதலில் டெபுடி ஸ்பீக்கர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி ரூலிங் கொடுத்திருக்கிறார்கள். அம்மாதிரி கொடுத்த ரூலிங் பெயரிலே அப்பீல் இல்லை என்பது பலமுறை தீர்ப்பில் வந்து இருக்கிறது. இரண்டாவதாக அதே விஷயத்தை வேறொருவர் எழுப்பினால் ரூலிங் கொடுக்கத் தங்களுக்கு அதிகாரமுண்டு. அப்படிக் கொடுத்த, நேற்றுக் கொடுத்த ரூலிங்கை ரிவைஸ் செய்வது என்ற முறையிலே நீங்கள் எழுப்புவது முறையல்ல என்று நினைக்கிறேன். ஆகவே ஒரு முறை எக்ஸ்பஞ்ச் செய்த விஷயத்தை. சில பகுதிகள் இப்பொழுது கொடுக்க வேண்டு மென்று சொல்வது முறையல்ல. அம்மாதிரி ஏதாவது அந்த புரொசீடிங்க்ஸில் இருக்கும் சில விஷயங்களை அரசு சபைக்கு முன்னால் கொண்டுவர வேண்டுமென்று விரும்பினால் அவர்களுக்கு எப்பொழுதும் அதற்கு வசதியிருக்கிறது. எந்த நேரத்திலும் 82-வது பிரிவின் கீழ் சில விஷயங்களை சொல்லி இருக்கலாம். குறிப்பாக மேல்சபையில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள்



1972 மார்ச் 7] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அவர்கள் பெயரில் எழுப்பப்பட்ட சில அவதூறுகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பதிலைச் சொல்ல வேண்டுமென்று அவர்கள் விரும்பினால் எந்த நேரத்திலும் இன்றோ நாளையோ 82-வது பிரிவின்படி சொல்வதற்கு அதிகாரமிருக்கிறது. ஆகவே, அம்மாதிரி இருக்கும்பொழுது அந்த எக்ஸ்பஞ்ச் செய்யப்பட்ட பகுதிகளில் சில பகுதிகளைத் தாங்கள் ஏற்க வேண்டுமென்றும், சில பகுதிகளை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்றும் சொல்வது முறை அல்ல,

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நேற்று நடந்த சில நிகழ்ச்சிகளையொட்டி நடைபெற்ற வெளிநடப்பு உட்பட பத்திரிக்கைகளில் வராது என்ற நிலை நேற்று ஏற்பட்டது. ஆனால் இன்றைக்கு நம்முடைய அவை முன்னவர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல் மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவரும் மற்றவர்களும் இங்கு வெளிநடப்புப் பற்றிப் பேசிவிட்ட பிறகு இந்த நிகழ்ச்சிகளனைத்தும் பத்திரிகைகளில் வரத்தான் போகின்றன. ஆனால் மக்களுக்கு நேற்று நடந்த வெளிநடப்பு எதற்காக என்று தெரியாமல் போகக் கூடும். நேற்று வெளிநடப்பு நடந்தது இன்று இங்கு எழுந்த விவாதத்தின் மூலம் நாட்டுக்கு, மக்களுக்குத் தெரியத்தான் போகிறது. அதை மறைக்க முடியாது. ஏனென்றால் இப்பொழுது நடைபெற்ற நிகழ்ச்சிகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடக் கூடிய நிலைமையுமில்லை, எடுத்துவிடுவது நல்லதுமல்ல. நேற்று ஏன் வெளிநடப்பு நடைபெற்றது என்பதைக் கேள்விக்குறியாக ஆக்குவது இந்த மன்றத்திற்கு நல்லதல்ல. எனவே நேற்று நடந்த வற்றில் முக்கால் பகுதியை விட்டுவிட்டுக் கால் பகுதியைச் சேர்த்துக் கொள்வது என்றோ அல்லது முக்கால் பகுதியைச் சேர்த்துக்கொண்டு கால் பகுதியை விட்டுவிடுவது என்றோ இல்லாமல், நேற்றைக்கு வாக்-அவுட் நடந்தது இன்றைக்கு விவாதத்திற்கு வந்துவிட்ட காரணத்தால் நேற்று அனந்தநாயகி அம்மையார் 1½ கோடி என்று சொன்னதும் மற்றும் காங்கிரஸ் கட்சித் தலைவர் சொன்னதும் எல்லாவற்றையும் சேர்த்துக்கூட மீண்டும் அதிலே இணைத்தால்தான் நேற்றைக்கு வாக் அவுட் நடந்த காரணத்தை அறியக் கூடும். கால்பகுதி அரசாங்கம் சம்பந்தப்பட்ட விஷயம் என்று அரசாங்கக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. ஒரு கட்சியின் தலைவரைப்

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 மார்ச் 7,

பற்றி ஆதாரமில்லாமல் பேச வேண்டாமென்று அவை முன்னவர் அவர்கள் பொறுப்போடு சொன்னாரே தவிர—மீண்டும் வந்துவிடுமே என்ற காரணத்திற்காக அல்லாமல் வேறல்ல என்பதால்தானே தவிர—ஆளும் கட்சியினர் பொறுப்போடு சொன்னதுதானே தவிர வேறல்ல. ஆகவே வெளிநடப்புச் செய்த விஷயம் இன்றைக்கு நடந்த விவாதங்களின் மூலம் நாட்டுக்குத் தெரியும் என்ற காரணத்தினால், அது ஏன் நடந்தது என்பது மறைமுகமாக, மர்மமாக இருந்து விடும் என்ற காரணத்தினால் நேற்று நடைபெற்ற எல்லா விஷயங்களையும் அருள் கூர்ந்து சேர்ப்பது நாட்டுக்கும் ஜனநாயகத்திற்கும் நல்லது. இல்லையென்றால் நேற்று நடந்த வெளிநடப்பு ஏன் நடந்தது என்பது பெரிய மர்மம் என்பதாக ஆகிவிடும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** சபாநாயகரவர்களே, இப்பொழுது இங்கே விவாதிக்கப்பட்ட விஷயங்களிலே என்ன காரணத்திற்காக, என்ன நியாயத்திற்காக அந்தப் பிரச்னையை நீக்கிவிடுவது அல்லது சேர்த்து விடுவது என்பது அல்ல. இந்தச் சபையிலே இருக்கும் உறுப்பினர்களை, உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சபாநாயகருக்கு இருப்பதால் அரசாங்கத் தரப்பிலே சொல்லும் வாதத்தை எடுத்துக்கொண்டு சபாநாயகர் செய்வது என்றால் இங்கேயிருக்கும் உறுப்பினர்களுக்கு சபாநாயகர் உரிய பாதுகாப்பை அளிக்கவில்லை என்ற எண்ணம் ஏற்படக்கூடும். இது எதற்காகச் சொல்லப்படுகிறது? நேற்றைக்கு நீக்கியாகிவிட்டது, இன்றைக்குச் சேர்க்க வேண்டுமென்ற வாதத்திற்கு அவசியமில்லை. ஆனால் அப்படி நடந்த பிறகு நடந்ததை எடுத்துக் கொள்வது என்பது சரியானதல்ல, நியாயமுமல்ல என்பதுதான் பிரச்னை. இந்தச் சபையிலே எடுத்துக்கொள்வதா வேண்டாமா என்பதுதான் வாதமே தவிர ஆதாரங்கள், காரணங்கள் எவ்வளவோ இருக்கலாம் என்ற முறையிலே அந்தக் காரியத்தைச் செய்வது சரியல்ல. ஆகவே சபாநாயகரவர்கள் ஒரு தடவை நீக்கியதை மீண்டும் சேர்ப்பது என்ற முறையிலே செய்யக்கூடாது என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சார், தாங்கள் அளித்த தீர்ப்பிற்குப் பிறகு மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்களே அதை வேறு விதமாக, ஒரு தீர்மான வடிவமாக இல்லாவிட்டாலும்,



1972 மார்ச் 7]

அதைக் கொண்டுவர வேண்டும். சபைக் குறிப்பிலே அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது விதிகளுக்குப் புறம்பானது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். நான் இன்னும் அந்த விதியிலே ஒரு பகுதியை மட்டும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"and all consequential alterations made in such report and make an announcement in the Assembly of the fact of his having made such order."

என்று விதி 235-ன் பிற்பகுதியில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி கான்சிக்வென்ஷியல் ஆல்டரேஷன் ஏற்பட்டிருக்கிறது. அதற்குத் தாங்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறீர்கள். ரூல் 242-ல் . . .

MR. SPEAKER : Please explain what do you mean by "consequential alterations".

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** Anything said and done என்பதாக தாங்கள் ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள். முழுக்க எதெல்லாம் பேசப்பட்டிருக்கிறதோ, எதெல்லாம் செய்யப்பட்டிருக்கிறதோ அவை எல்லாம் முழுமையாக உட்படும் என்றுதான் கருதுகிறேன். அதை மறுபடியும் வேறு வடிவத்தில், வேறு ரூபத்தில் கொண்டுவர நமக்கு உரிமை இல்லை என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படியானால் முன்பு கொடுத்திருக்கும் தீர்ப்பு இந்த விதிகளுக்குப் புறம்பானதாக இருக்கும் என்ற கருத்து தொனிக்கக்கூடும். ரூல் 242-ல் இப்படி இருக்கிறது.

"The Speaker shall have power to regulate the conduct of business in the Assembly in all matters not provided for in the Constituion or the rules."

இந்த இன்ஹெரன்ட் பவர் அல்லது ரெசிட்யுவரி பவர் என்று சொல்லுகின்ற அந்த அதிகாரத்தைத் தாங்கள் இந்த மன்றத்தின் பிரதிநிதி என்ற முறையில் உபயோகத்திருக்கிறீர்கள். அதைப் புறப் பரிசீலனை செய்வது பொருத்தமானது அல்ல; நியாயமானது அல்ல ; இந்த விதிகளுக்கு முரண்பட்டதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் முதலிலேயே சொன்னேன். காட்டமான இஷ்யூவாக இது வந்துவிடக் கூடாதே என்று நினைத்தேன். இப்போது வந்த ஆபத்து அம்மையாரால் தான் ஆரம்பமானது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் நடந்து கொண்டிருக்கிற நிகழ்ச்சிகளில் தவறு ஏற்படுவதைச் சுட்டிக் காட்டுவதற்கே தவிர வீட்டிலிருந்து வந்து எழுப்புகின்ற பிரச்சினைகளுக்கு அல்ல. அவர்கள் பிரிவிலெஜ் மோஷன் கொடுக்கலாம். சபாநாயகர் மீது கொடுக்க முடியாது. நம்பிக்கை யில்லாத் தீர்மானம் வேண்டுமென்றால் கொடுக்கலாம். அதற்கு வேண்டிய முகாந்திரம் இல்லையோ என்னவோ தெரியவில்லை. பொதுவாக, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல பிரச்சினை களைக் கிளப்பினார்கள். அவற்றில் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் சட்டமன்ற ஜனநாயக மரபுகளை மேம்படுத்த வேண்டுமென்ற அக்கறை எல்லோருக்கும் உண்டு. ஆரம்பத் திலேயே, இந்த விவாதத்தை ஆபத்தான நிலையில் ஆரம்பிக்கிறோம். ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று ஆரம்பத்திலேயே சொன்னேன். மாண்புமிகு அம்மையார் அவர்களும். மற்றவர்களும் அதை வேறு இடத்தில் கொண்டு போய் விட்டு விட்டார்கள். அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாதகமாக எடுத்துக் கொண்டார்கள். கோர்வையாக ஒருவர் பேசுகின்ற நேரத்தில் விட்டுவிடுகிறோம். முதலமைச்சர் எக்ஸ்பஞ்ச் பண்ணுதீர்கள் என்று சொன்னார்கள். சிலர் எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டுமென்று சொன்னார்கள். எக்ஸ்பஞ்ச் பண்ணினால் ஏன் எக்ஸ்பஞ்ச் பண்ணுகிறீர்கள் என்று கேட்கிறார்கள்.

இன்றைக்கு அம்மையார் அவர்கள் ரொம்பக் கோபாவேச மாகப் பேசினார்கள். சபாநாயகர் எப்படி புதிதாகத் தீர்ப்பு அளிக்க முடியும் என்று கேட்டார்கள். இப்போது முதலமைச்சர் சொல்லுகிறார்கள் என்பதற்காக மறுபடியும் அதை மாற்றலாமா என்று இப்போது கேட்கிறார்கள். இதற்கெல்லாம் சபாநாயகருக்கு அதிகாரம் இருக்கிறது. இங்கே என்று அல்ல; ரூமில் கூட போய் நீக்க வேண்டியவற்றை நீக்கலாம். அதை அவைக்கு அறிவிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் நான் பக்கம் பக்கமாக நடவடிக் கைக்' குறிப்பைப் பார்த்து கையெழுத்துப் போடுகிறேன். தீர்ப்புச் சொல்லிய பிறகு எக்ஸ்பஞ்ச் பண்ணக் கூடாது என்பதெல்லாம் விவாதத்திற்கு உரியவை அல்ல.



நேற்று அவர்களுக்கு இருந்த கவலை எல்லாம், திருமதி அனந்த நாயகி அம்மையார் அவர்கள் எழுப்பிய பிரச்சினை எல்லாம் வெளியிலுள்ள தலைவர்களைப் பற்றி இங்கே பேசலாமா என்பது. நேற்று 'போளூர் கூட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டதில் ஆரம்பித்து எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டும்' என்று சொன்னேன். இப்போது எல்லோருக்கும் அனுகூலம் ஏற்பட்டு விட்டது. வாக் அவுட் பண்ணினார்கள் என்பது இப்போது வந்துவிட்டது. முதலமைச்சர் அவர்கள் கூறியது போல் இதிலே மர்மங்கள் தேவையில்லை. இங்கே நடைபெறுகின்ற வாதங்களில் மர்மங்கள் எதுவும் தேவையில்லை. ஜனநாயக மன்றத்தின் நடவடிக்கையில் ரகசியங்கள் எதுவும் இல்லை; மூடி மறைப்பதற்கு எதுவும் இல்லை; எல்லாம் விமர்சிக்கக் கூடியவையே.

நேற்றைய தினம் வாக் அவுட் செய்தது, எக்ஸ்பஞ்ச் செய்யப் பட்ட நிகழ்ச்சிகள், விவாதங்கள் எல்லாம் நடவடிக்கைக் குறிப்பின் பகுதியாக இருக்கும் என்று தீர்ப்புக் கூறுகிறேன். வாக் அவுட் பண்ணினார்கள் என்பதையும் பிரசுரிக்க உரிமை யுண்டு என்றும் ஆணையிடுகிறேன். இதற்கு மேல் இந்த விவாதத்தைத் தொடரக் கூடாது என்று கூறி அடுத்த நிகழ்ச்சிக்குச் செல்லுகிறேன்.

## (3) ஒற்றிவைப்புத் தீர்மானம்

**சென்னையில் பட்டதாரி ஆசிரியர்களின் உண்ணு நோன்பு போராட்டமும், அவர்கள் கைதானதும் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 42-வது விதியின்கீழ் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்—

" I move that the business of the House do stand adjourned to discuss about a definite matter of urgent public importance, viz.,

'the hunger strike lanched by the Graduate Teachers at Madras on 6th March 1972 and the consequent arrest of about 300 teachers ".

என்று ஒரு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கே டி கே தங்கமணி, திரு கே சுப்பு, திரு ஜே ஜேம்ஸ், திரு. வா. மை. அப்துல் ஜப்பார், திரு. ஏ. சுவாமிதாஸ் ஆகியோரும் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இது எப்படி அவசரப் பொது முக்கியமான விஷயம் என்பதைப் பற்றி சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, பட்டதாரி ஆசிரியர்கள் இந்த மன்றம் நடந்து கொண்டிருக்கும்போது போராட வேண்டுமென்ற அறிக்கையை அரசாங்கத்திற்குக் கொடுத்து அவர்கள் போராட்டப் பாதையில் ஈடுபட்டிருக்கிறார்கள். பட்டதாரி ஆசிரியர்களின் சில கோரிக்கைகள் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு அவற்றை எல்லாம் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறது என்று முன்பு இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அறிவிக்கப்பட்ட முடிவுகள் ஏற்றுக் கொள்ளத்தக்கவை அல்ல என்று அவர்கள் தீர்மானித்ததின் காரணமாக இன்று விபரீத விளைவுக்குக் கொண்டுபோய் விட்டுவிடுமோ என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நேற்றைய தினம் அவர்கள் ஊர்வலமாகச் சென்றதாகவும், உண்ணாநோன்பு மேற்கொண்டதாகவும், 300-க்கு உட்பட்ட ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டதாகவும் கேள்விப்படுகிறேன். இப்போது பள்ளிக்கூட இறுதித் தேர்வு நேரம். குறிப்பாக, நமது ஆசிரியர் சமூகம் போராட்டப் பாதையில் சாதாரணமாகச் செல்வதில்லை. நமது நாட்டுக்கு இது ஒரு பெரும் பேராபத்தை விளைவித்துவிடும். குறிப்பாக, பட்டதாரி ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றவர்கள் இந்த மாதிரிப் போராட்டத்தை நடத்துகிறார்கள் என்று சொன்னால் நாம் அதற்கு ஆக்கபூர்வமான முடிவை எடுத்தாக வேண்டும். நாமெல்லாம் பெற்றோர்கள் என்ற முறையில் பிள்ளைகளின் படிப்பு பாதிக்கும் என்பதை உணர்ந்து, வருங்கால சந்ததியினருக்கு பாதகம் ஏற்படாத வகையில் இதிலே முடிவு எடுக்க வேண்டியது அவசர முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தச் சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும் நோக்கில் அவர்கள் எல்லோரும் ஊர்வலமாகச் சென்று கொண்டிருப்பார்கள். முதலமைச்சர் அவர்கள் மூன்று மாத காலம் கெடு கொடுத்து அதையும் குறைத்து பிறகு இரண்டு மாதம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியர் பிரதிநிதியோ, என்.ஜி.ஓ. பிரதிநிதியோ அதிலே கலந்து கொள்ள ஏற்பாடு செய்வதாகவும் மேலவையில் குறிப்





பிட்டிருக்கிறார்கள். இதற்கு துரிதமான முடிவு எடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த மன்றத்தின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

இதிலே அரசியலைப் புகுத்தாமல், காழ்ப்புணர்ச்சி இல்லாமல் ஆசிரியர்கள் பிரச்சினை என்ற முறையில் சுமுக முடிவு ஏற்படுத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் முனைந்து வரவேண்டும். இரண்டு மாதகால தவணைக் கொடுத்திருப்பதற்குப் பதிலாக உடனே பைசல் செய்ய முடியுமா என்று ஆராய வேண்டும். போராட்டமானது இன்னும் அதிகமாக ஆகிவிடாமல், மற்றப் பகுதிகளிலும், மற்ற மாவட்டங்களிலும் இந்த நிலை பரவாத முறையில் அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இது ஒரு அவசரமான காரியம், ஒரு முக்கியமான காரியம், நம் நாட்டை முழுமையாகப் பாதிக்கும் ஒரு காரியம் என்ற காரணத்தினால், இதில் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், இந்த பட்டதாரி ஆசிரியர்கள் சம்பந்தமாக ஏற்கனவே இங்கு சனிக்கிழமை அன்று விரிவாக விவாதிக்கப்பட்டு அரசுடைய கருத்தும் தெரிவிக்கப்பட்டது. மேலவையிலும் இதுமாதிரி பிரச்னை எழுப்பப்பட்டதாகவும் அந்த மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஆறு மாதம் என்றிருப்பதை மூன்று மாதமாகக் குறைக்கலாம் என்று சொன்னதாக, பத்திரிகைகளில் நான் படித்தேன். அதற்குப் பின்னால் நடந்த சம்பவங்கள் சென்னை கோட்டையைச் சுற்றியிலேயே நடந்திருக்கின்றன. அதுவும் நடந்து கொண்டிருக்கிறது. அதைக் கவனிக்காமலும் அதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவராமலும் இருந்தால் நாங்கள் உறுப்பினர்களின் கடமையைச் செய்தவர்களாக மாட்டோம்.

இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில், நான் அறிந்த மட்டில், அவர்களாகவே ஒரு ஸ்தாபனத்தை அமைத்து 20,000 பட்டதாரி ஆசிரியர்கள் ஒரு ஆண்டுக்கு போனஸ்போல தங்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை, இதை அநீதி இழைக்கப்பட்டது என்று சொல்வதை விட injustice has been committed என்ற முறையில் அவர்கள்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 7

தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இன்று வேண்டுமானால் அவர்கள் ஊதியம் கொஞ்சம் ஜாஸ்தியாக இருக்கலாம் அல்லது மற்ற மாநிலங்களைவிட அதிகமாக இருக்கலாம். நான் எடுத்துச்சொல்ல முடியும் இங்கு அவர்களுக்கு கிடைக்கும் ஊதியத்தை விட அதிகமான ஊதியம் புதுச்சேரியில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் ஆர்கு மெண்ட்டுக்குத்தான் வரும்.

அவர்கள் ஆண், பெண் ஆசிரியர்கள் எல்லோரும் சேர்ந்து எங்களுக்கு அநியாயம் விளைவிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி யிருக்கிறார்கள். நேற்று முதற்கொண்டு உண்ணாவிரதம் இருப்ப தாக அவர்கள் அறிவித்து, அதை எல்லோருக்கும் தெரிவித்துத் தான் இப்படிச் செய்கிறார்கள். நேற்று உண்ணாவிரதம் இருந்ததில், மேலவை உறுப்பினர் ஒருவர் கூட உண்ணாவிரதம் இருந்ததாக அறிகிறேன். உண்ணாவிரதம் இருந்து ஊர்வலம் சென்ற ஆசிரியர் களில் நூற்றுக்கு அதிகமான பேர்கள் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். இன்றும் அந்த உண்ணாவிரதம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. நாளைக்கும் அவர்கள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே இதை ஒரு கௌவரப் பிரச்னையாகப் பார்க்காமல் இன்று மாலையிலாவது அந்தப் பிரச்னை தீர்ந்து விட்டது என்றிருக்க வேண்டும்.

கமிஷனுக்கு விடுவது என்பதைப் பொறுத்தவரையில் பொது வாகவே எனக்கு அவ்வளவு நம்பிக்கை கிடையாது. இரண்டாவது சம்பளக் கமிஷன் ரிப்போர்ட் வெளிவந்தவுடனே ஒரு அனாமலீஸ் கமிஷன் ராகவன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது. அது என்னவாயிற்று என்றே தெரியவில்லை. அவர்களுக்குச் சில விவரங் கள் தெரியும். அந்த ராகவன் கமிஷனில் இதில் அனாமலீஸ் இல்லை என்று சொன்னதாகவும், அந்த அடிப்படையில் அரசு உத்தரவு கொடுத்தாகவும் அவர்கள் சொல்கிறார்கள். அது மேலவையில் மறுக்கப்பட்டது. அப்படி உத்தரவு போட்டிருந்தாலும் கூட எல்லாவற்றையும் சேர்த்து பரிசீலனை செய்வோம் என்று, பி.டி. ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை மேலும் வைத்துக் கொண்டிராமல் இன்றே அதற்கு ஒரு தீர்வு கண்டு விட்டோம் என்றளவில் அவர்களில் பொறுப்பானவர்களை அழைத்து அவர்கள் திருப்தி அடையத்தக்க அளவிற்கு ஒரு நியாயமான முடிவைக்



1972 மார்ச் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்பதை வற்புறுத்து
வதற்காகவே இதைக் கொண்டு வந்துள்ளேன். அன்றே இது
பற்றிக் கொண்டு வந்திருந்தாலும்கூட தொடர்பானதொரு
பிரச்னையாக இல்லாமல், இது முக்கியமானதொரு பிரச்னை
என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு நீங்கள்
அனுமதித்தால் இதுபற்றி விவாதித்து எங்களுடைய ஆலோசனை
களைச் சொல்ல உதவிகரமாக இருக்கும் என்பதால் அவையை
ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, ஆசிரியர்கள் இயற்கையாகவே நாட்டில் அன்பையும்,
பண்பையும், கல்வியையும் ஒருங்கு சேர்த்துத் தருபவர்கள்,
அவர்கள் இன்று போர்க்கோலம் கொண்டிருக்கிறார்கள் என்று
சொன்னால் அது நாட்டுக்கு மிகவும் தீங்கானது. எதிர்கால
மக்கள் பாதிக்கப்படத்தக்க வகையில் அது அமையும். இந்த
பட்டதாரி ஆசிரியர்கள் தங்களை சமத்துவம் என்ற வார்த்தைக்கு
மாறாக நடத்துவதாக உணருகிறார்கள். தங்களுக்குச் சமமாகப்
படித்தவர்கள் அல்லது தங்களுக்குக் குறைவான பட்டம்
பெற்றவர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தை விட தங்களுக்கு
ஏதோ காரணத்தினால் குறைவாக்கப்பட்டு விட்டது என்றதொரு
கௌரவப் பிரச்னை மீது அவர்கள் போராட்டம் அமைந்திருக்
கிறது. ஆகவே அவர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளார்கள்.

எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு முன்புள்ள
வெளிப்புறத்தில் இரவெல்லாம் அந்தப் பனியில் கூட காத்திருக்க
வேண்டியதொரு துர்பாக்கியகரமான நிலையைப் பார்க்கும்போது
இது மேலும் நாட்டில் குழப்பத்தை உண்டாக்கும் என்று அஞ்சு
கிறேன். மாணவர்கள் இயற்கையாகவே ஆசிரியர்கள் மீது அன்பு
கொண்டவர்கள். ஆகவே பிரச்னைகள் மேலும் கிளம்பிக்கொண்டு
போகும் என்ற காரணத்தினால் அரசாங்கம் உடனடியாக இதில்
தலையிட்டு நல்லதொரு பரிகாரத்தை ஏற்படுத்தித் தரவேண்டும்.

மேலும் அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்றால்,
எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு விரைவில் வர இருக்கிறது. இரண்டு
மாதங்கள் இந்தக் குழுவிற்கு அவகாசம் கொடுத்துவிட்டால்
எஸ்.எஸ்.எல்.சி., தேர்விற்கு அவர்களைப் பயன்படுத்திவிட்ட

பிறகு மீண்டும் இதே கமிட்டி அவர்களுக்கு அநீதி விளைவித்து விடுமோ என்று அஞ்சிய எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு வருவதற்கு முன்பாகவே தங்கள் கோரிக்கைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று ஆவலுள்ளவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அரசு, ஏற்கனவே ஆசிரியர்கள் மீது கருணை உள்ளம் கொண்ட அரசு இந்தப் பிரச்னையில் சுய கௌரவம் பார்க்காது ஆசிரியர்களின் நியாயமான இந்தக் கோரிக்கையை தீர்க்க முற்பட வேண்டு மென்று கேட்டுக்கொண்டு ஆயப்பற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிச் சார்பிலும், கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், முஸ்லிம் லீக் கட்சிச் சார்பிலும் அளிக்கப்பட்டுள்ள இந்த ஒற்றி வைப்புத் தீர்மானங்கள் கடந்த இரண்டு நாட்களாகப் பட்டதாரி ஆசிரியர்கள் நடத்துகிற கிளர்ச்சியை யொட்டியதாகும்.

பட்டதாரி ஆசிரியர்களுடைய பிரச்னை ஏற்கெனவே இந்த அரசுக்கு எடுத்துக் கூறப்பட்டு ஊதியக் குழுவின் செயலாளர் அந்த முரண்பாடுகளைக் கவனிக்க வேண்டுமென்று அறிவுறுத்தப் பட்டு அதன் தொடர்பாக அந்த முடிவுகள் அவர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்ற நிலைமை எடுத்துரைக்கப்பட்டபோதே நானும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் மேலவையில் விவாதத்திற்குப் பதிலளித்தபோது மீண்டும் அவர்களுடைய பிரச்னை பரிசிலிக்கப்படும் என்கிற உறுதியை அவர்களுக்குத் தந்தோம். அந்த உறுதி அளிக்கப்பட்ட ஒரு திங்களுக்குள்ளாக நிதிநிலை அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டபோது, அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், இவர்கள் தந்துள்ள, ஊதியக்குழு அளித்துள்ள பரிந்துரைகளில் சில முரண்பாடுகள் இருப்பதை நீக்கிட வேண்டுமென்ற அந்த மனுக்களை எல்லாம் பரிசிலித்து விரைவில் முடிவு காணத்தக்க அளவிற்குத் தலைமைச் செயலாளர் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு அமைக்கப்படும் என்றும், அது ஆறு மாதங்களுக்குள்ளாக தன் அறிக்கையை சமர்பிக்கும் என்றும், அதன் மீது அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.





அதற்கான விளக்கங்களை இந்த மன்றத்தில் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் வந்தபோது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். மேலவையிலும் எடுத்துக் கூறினார்கள். மேலவையில் அவர்கள் அந்த விளக்கத்தைத் தந்த போது மேலவை உறுப்பினர்கள் சிலர் முதல் அமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் பட்டதாரி ஆசிரியர்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்து உரையாடிக் கவனிப்பதாகச் சொல்வார்களேயானால், இந்தக் கிளர்ச்சியை ஒத்தி வைப்பார்கள் என்று நம்புகிறோம், அதைச் செய்வீர்களா என்று கேட்டபோது கல்வி அமைச்சர் அவர்கள் நாங்கள் அவர்களைப் பல முறை சந்தித் திருக்கிறோம், சந்திப்பதற்கு எந்த விதமான தடையும் இல்லை. நாங்களும் சந்தித்திருக்கிறோம், அதிகாரிகளும் சந்தித்திருக் கிறார்கள் என்றும் சொன்னார்கள். அதற்குப் பிறகு ஆறு மாத காலம் என்பதை மூன்று மாத காலத்திற்குள்ளாகத் தலைமைச் செயலாளர் தலைமையில் அமைந்துள்ள அந்தக் குழு இந்த முரண்பாடுகளை எல்லாம் நீக்குகிற அளவிற்கு அறிக்கையைத் தரும் என்ற உறுதியையும் நான் அளித்தேன்.

அதற்குப் பிறகு நேற்று முன் தினம் இரவு 10 மணியிலிருந்து 12-30 மணி வரையில், திரு. ஈஸ்வரமூர்த்தி எம்.எல்.சி., அவர்களும், மற்றும் சில மேலவை உறுப்பினர்களும் என்னை ஏற்கனவே சந்தித்ததற்கு இணங்க, திரு. ஈஸ்வரமூர்த்தி, வேறு பல பட்டதாரி ஆசிரியர்கள், நிர்வாகக் குழுவைச் சேர்ந்த தலைவர், செயலாளர், மற்ற உறுப்பினர்களும் என்னைச் சந்தித்துப் பேசினார்கள். என்னைச் சந்தித்துப் பேசினார்கள் என்றால்கூட அவர்களுக்கு ஒரு வேளை அவமானமாக இருக்கக்கூடும், என் கௌரவத்தை உயர்த்து வதாக இருக்கக்கூடும், நான் அவர்களை அழைத்துப் பேசினேன். அவர்களை அழைத்துப் பேசி, கிட்டத்தட்ட இரவு 12-30 மணி வரையில் விவாதித்து அவர்களது கிளர்ச்சியை நிறுத்திவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், முஸ்லீம் லீக் நண்பர் அவர்களும் எடுத்துக் காட்டியதைப் போல் சமுதாயத் திற்கு கேடு விளைவிக்கக்கூடிய ஒன்றாக இதை ஆக்கிவிடக் கூடாது என்ற அடிப்படையில் நான் அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். நீண்ட விளக்கங்களுக்குப் பிறகு மூன்று மாதம் என்பதை நீங்கள் இந்தப் போராட்டத்தை நடத்தாமல் இருப்பீர்களானால்,

இவ்வளவு கோழைத்தனமாக இருக்கிறதே என்று எள்ளி நகையாடக்கூடிய அளவுக்கு, கௌரவப் பிரச்னை பார்க்காமல் நடந்துகொண்டு வந்திருக்கிறது. அவர்கள் உண்ணாவிரதத்தைத் தொடங்கி இருப்பதாக அறிந்தேன். அவர்களுடைய பிரதிநிதிகள் 6-7 பேர் வந்திருக்கிறார்கள். அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறேன். அவர்களுக்கு அளிக்கிற உறுதியை இந்த மன்றத்தின் மூலமாக நேரடியாக அளிக்க விரும்புகிறேன். இரண்டு மாத காலத்தில் அந்தக் குழுவின் அறிக்கை வந்துவிடும். போராட்டத்தை கை விட்டுவிடுங்கள்.

இன்னொரு ஏற்பாடும் செய்யப்பட்டு இருக்கிறது. மதிப்பிற்குரிய என்.ஜி.ஓ. சங்கத்தைச் சார்ந்தவர்கள் கூட மகிழ்ச்சி தெரிவித்து இருக்கிறார்கள். அந்தக் குழுவைக் குழு என்று அமைக்காமல், 'ஒன்-மேன் கமிஷன்' என்ற வகையில் தலைமைச் செயலாளரை நியமித்து விட்டு, கன்சல்டேடிவ் கமிட்டி என்று ஒன்று அமைத்து, அதிலே இப்போது பல பேர் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். இப்போது அதிலே ஆசிரியர்களும் பிரதிநிதியாக இருப்பார்கள். எப்படி என்.ஜி.-ஓக்களுக்குப் பிரதிநிதித்துவம் தருகிறோமோ அதேபோல், ஆசிரியர்களுக்கும் பிரதிநிதித்துவம் தருவது என்று முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. இதை ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்வது முறையாகும். இரண்டு மாதம் என்பது நீண்ட காலம் அல்ல அதற்குள் முடிவு தரத் தயாராக இருக்கிறார்கள். மீண்டும் இன்றும் மாண்புமிகு கல்வியமைச்சரோடும் அவர்கள் பேச இருக்கிறார்கள். நல்ல முடிவு ஏற்படும் என்று நாங்கள் எண்ணுகிறோம். அதற்கு ஏற்றவகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பொன்னப்ப நாடார் அவர்களும் மற்றவர்களும் கொண்டு வந்துள்ள பிரச்னையை அரசு உணர்ந்திருக்கிறது என்று கூறி, இந்த விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையை ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.





## (4). அமைச்சரின் அறிக்கை

## கேரள மாநிலத்திற்கு நெல் கடத்திச் செல்லப்படுவதாகக் கூறப்படும் புகார் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சரவர்கள் சட்டப் பேரவை 82-வது விதியின் கீழ் ஒரு அறிக்கையை வெளியிடுவார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, தமிழ் நாடு சட்டப்பேரவை 82(1) விதியின் கீழ் ஒரு அறிவிப்பை வெளியிடுகிறேன்.

மாநில எல்லையைக் கடந்து கேரள மாநிலத்திற்கு நெல் அனுப்பப்படுவதாக அடிக்கடி புகார்கள் வந்துள்ளன. இவ்வாறு கள்ளத்தனமாக அனுப்பப்படுவதை சோதனையிட வசதி அளிக்கும் பொருட்டு மாநில எல்லைநெடுக 15 மைல் அகலமுள்ள பகுதி 1964-ம் ஆண்டு தென் மாநிலங்கள் (அரிசி ஏற்றுமதி முறைப்படுத்துதல்) ஆணையின் கீழ் எல்லையோரப்பகுதியாக அறிவிக்கப்பட்டது. இப்பகுதிக்கு வெளியே வேறு ஒரு இடத்திலிருந்து இப்பகுதிக்குள் நெல் அனுப்புவதற்கும் எல்லையோரப்பகுதிக்குள் நெல் அனுப்புவதற்கும் அனுமதிச் சீட்டு வேண்டும்.

எனினும் மாநில எல்லை நெடுக 15 மைலுள்ள பகுதியில் பெரும் மக்கள் தொகை கொண்ட பெரிய நகரங்கள் உள்ளன என்று தெரிய வந்துள்ளது. இங்கு மக்களுக்கு உள்ளூர் உற்பத்திக்கு மேல் எந்த அளவுக்கு உணவு தானியங்கள் தேவைப்படுகின்றனவோ, அந்த அளவுக்கு நெல், அரிசி முதலியவற்றை அப்பகுதிக்குள் அனுப்புவதற்கு அனுமதிக்க வேண்டியிருந்தது.

இவ்வாறு உள்ளூர் உற்பத்தியோடு பெருமளவு நெல் அரிசி எல்லையோரப்பகுதிக்குள் அனுப்பப்பட்டதால் மாநில எல்லையைக் கடந்து கள்ளத்தனமாக நெல் கடத்திச்செல்வதற்கு போதிய அளவில் நெல் கிடைக்க வழி கோலியது. எனவே எல்லை ஓரப்பகுதியின் அகலத்தை 5 மைலாக குறைக்கவும் இப்பகுதியில் முறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு முறையை கொண்டு வரவும் அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த முறை செயற்படுத்தப்படுவதால் இப்பகுதிகளுக்குள் கொண்டு செல்லப்படும் நெல், அரிசி அப்பகுதிகளுக்குள்ளேயே பங்கிட்டுக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறு பங்கிட்டு வழங்கு

இவ்வளவு கோழைத்தனமாக இருக்கிறதே என்று எள்ளி நகையாடக்கூடிய அளவுக்கு, கௌரவப் பிரச்னை பார்க்காமல் நடந்துகொண்டு வந்திருக்கிறது. அவர்கள் உண்ணாவிரதத்தைத் தொடங்கி இருப்பதாக அறிந்தேன். அவர்களுடைய பிரதிநிதிகள் 6-7 பேர் வந்திருக்கிறார்கள். அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறேன். அவர்களுக்கு அளிக்கிற உறுதியை இந்த மன்றத்தின் மூலமாக நேரடியாக அளிக்க விரும்புகிறேன். இரண்டு மாத காலத்தில் அந்தக் குழுவின் அறிக்கை வந்துவிடும். போராட்டத்தை கைவிட்டுவிடுங்கள்.

இன்னொரு ஏற்பாடும் செய்யப்பட்டு இருக்கிறது. மதிப்பிற்குரிய என்.ஜி.ஓ. சங்கத்தைச் சார்ந்தவர்கள் கூட மகிழ்ச்சி தெரிவித்து இருக்கிறார்கள். அந்தக் குழுவைக் குழு என்று அமைக்காமல், 'ஒன்-மேன் கமிஷன்' என்ற வகையில் தலைமைச் செயலாளரை நியமித்து விட்டு, கன்சல்டேடிவ் கமிட்டி என்று ஒன்று அமைத்து, அதிலே இப்போது பல பேர் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். இப்போது அதிலே ஆசிரியர்களும் பிரதிநிதியாக இருப்பார்கள். எப்படி என்.ஜி.ஓ.க்களுக்குப் பிரதிநிதித்துவம் தருகிறோமோ அதேபோல், ஆசிரியர்களுக்கும் பிரதிநிதித்துவம் தருவது என்று முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. இதை ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்வது முறையாகும். இரண்டு மாதம் என்பது நீண்ட காலம் அல்ல. அதற்குள் முடிவு தரத் தயாராக இருக்கிறார்கள். மீண்டும் என்னோடும் மாண்புமிகு கல்வியமைச்சரோடும் அவர்கள் பேச இருக்கிறார்கள். நல்ல முடிவு ஏற்படும் என்று நாங்கள் எண்ணுகிறோம். அதற்கு ஏற்றவகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பொன்னப்ப நாடார் அவர்களும் மற்றவர்களும் கொண்டு வந்துள்ள பிரச்னையை அரசு உணர்ந்திருக்கிறது என்று கூறி, இந்த விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையை ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.



## (4). அமைச்சரின் அறிக்கை

## கேரள மாநிலத்திற்கு நெல் கடத்திச் செல்லப்படுவதாகக் கூறப்படும் புகார் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சரவர்கள் சட்டப் பேரவை 82-வது விதியின் கீழ் ஒரு அறிக்கையை வெளியிடுவார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டப்பேரவை 82(1) விதியின் கீழ் ஒரு அறிவிப்பை வெளியிடுகிறேன்.

மாநில எல்லையைக் கடந்து கேரள மாநிலத்திற்கு நெல் அனுப்பப்படுவதாக அடிக்கடி புகார்கள் வந்துள்ளன. இவ்வாறு கள்ளத்தனமாக அனுப்பப்படுவதை சோதனையிட வசதி அளிக்கும் பொருட்டு மாநில எல்லைநெடுக 15 மைல் அகலமுள்ள பகுதி 1964-ம் ஆண்டு தென் மாநிலங்கள் (அரிசி ஏற்றுமதி முறைப்படுத்துதல்) ஆணையின் கீழ் எல்லையோரப்பகுதியாக அறிவிக்கப்பட்டது. இப்பகுதிக்கு வெளியே வேறு ஒரு இடத்திலிருந்து இப்பகுதிக்குள் நெல் அனுப்புவதற்கும் எல்லையோரப்பகுதிக்குள் நெல் அனுப்புவதற்கும் அனுமதிச் சீட்டு வேண்டும்.

எனினும் மாநில எல்லை நெடுக 15 மைலுள்ள பகுதியில் பெரும் மக்கள் தொகை கொண்ட பெரிய நகரங்கள் உள்ளன என்று தெரிய வந்துள்ளது. இங்கு மக்களுக்கு உள்ளூர் உற்பத்திக்கு மேல் எந்த அளவுக்கு உணவு தானியங்கள் தேவைப்படுகின்றனவோ, அந்த அளவுக்கு நெல், அரிசி முதலியவற்றை அப்பகுதிக்குள் அனுப்புவதற்கு அனுமதிக்க வேண்டியிருந்தது.

இவ்வாறு உள்ளூர் உற்பத்தியோடு பெருமளவு நெல் அரிசி எல்லையோரப்பகுதிக்குள் அனுப்பப்பட்டதால் மாநில எல்லையைக் கடந்து கள்ளத்தனமாக நெல் கடத்திச்செல்வதற்கு போதிய அளவில் நெல் கிடைக்க வழி கோலியது. எனவே எல்லை ஓரப்பகுதியின் அகலத்தை 5 மைலாக குறைக்கவும் இப்பகுதியில் முறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு முறையை கொண்டு வரவும் அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த முறை செயற்படுத்தப்படுவதால் இப்பகுதிகளுக்குள் கொண்டு செல்லப்படும் நெல், அரிசி அப்பகுதிகளுக்குள்ளேயே பங்கிட்டுக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறு பங்கிட்டு வழங்கு

வதற்காக கொடுக்கப்படும் அட்டையில் குறிப்பிட்டிருக்கும் அளவினையொட்டி இப்பகுதிக்குள் அனுப்பப்படும் நெல், அரிசியின் அளவும் முறைப்படுத்தப்படும். இதனால் கள்ளத்தனமாக அரிசி, நெல் கடத்திச் செல்வதற்கான வாய்ப்புகள் கணிசமான அளவுக்கு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அறிவிக்கப்பட்ட எல்லையோரப்பகுதியைத் தவிர மாநில எல்லைகளை அடுத்துள்ள பெரிய பகுதிகள் சிலவற்றில் உள்ளூர் உற்பத்தி காரணமாகவோ அங்கு நடைபெறும் பணிக முறை காரணமாகவோ நெல், அரிசி உபரியாக உள்ளதால் அந்த நெல், அரிசி போக்குவரத்தின் மீது கட்டுப்பாடு விதித்திருப்பது நல்லது எனக் கருதப்படுகிறது. எனவே, கன்னியாகுமரி, கோயம்புத்தூர் மாவட்டங்கள், மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம், பெரிய குளம் வட்டங்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை, தென்காசி வட்டங்கள், நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டம் ஆகியவற்றை தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நெல், அரிசி (போக்கு வரத்து கட்டுப்பாடு) ஆணையின் கீழ் அறிவிக்க அரசு திட்டமிட்டுள்ளது. அவ்வாறு அறிவிக்கப்படுவதன் மேல் இப்பகுதிகளிலிருந்து நெல், அரிசி எதும் கொண்டு செல்ல அனுமதி தேவைப்படும். இதனால் எல்லையோரப் பகுதிக்கு நெல், அரிசி, அனுப்பப்படுவதை உன்னிப்பாக கவனிக்க இயலும்.

எல்லையோரப்பகுதிகளில் முறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு முறைக்கான தேவைகளை நிறைவு செய்வதற்காக, போதிய உள்ளூர் உற்பத்தி இருக்கும் கன்னியாகுமரி மாவட்டம், மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம், பெரியகுளம் வட்டங்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை, தென்காசி வட்டங்கள் ஆகிய பகுதிகளில் வாங்கப்படும் நெல், அரிசி அளவில் 15 சதவீத விதிப்புக்கொள்முதல் முறை செயல்படுத்தப்படும். இவ்வாறு விதிப்புக் கொள்முதல் மூலம் கிடைக்கும் நெல், அரிசி அந்தந்த வட்டங்கள் அல்லது மாவட்டங்களின் எல்லையோரப்பகுதிகளில் வழங்குவதற்காக பயன்படுத்தப்படும். இதனால் சம்பந்தப்பட்ட பகுதிகளில் கிடைக்கக்கூடிய நெல், அரிசியின் அளவு குறையாது.

ஏனெனில் கொள்முதல் செய்யப்பட்ட இருப்புகள் அடுத்துள்ள எல்லையோரப்பகுதிகளிலேயே வழங்கப்படுகின்றன. மற்றும் இப் புதிய ஏற்பாடு சோதனையில் இல்லாத காலத்திலும் அங்கு உற்பத்தி



யாகும் நெல், அரிசியைக் கொண்டே அப்பகுதிகளின் தேவை முக்கியமாக சரிக்கட்டப்பட்டு வந்துள்ளது. எல்லையைக் கடந்து கள்ளத்தனமாக நெல், அரிசி அனுப்பப்படுவதனால் எல்லையோரப் பகுதிகளில் நெல், அரிசி விலைகள் உயர்வதற்கு வழிகோலுவதோடு மாநிலத்தின் எஞ்சிய பகுதிகளிலும் கூட அவை உயர்வதற்கு வழி கோலும். ஆகவே, கள்ளத்தனமாக நெல், அரிசி இவற்றை கள்ளத்தனமாய் கடத்துவதைத் தடை செய்ய பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்று அரசு இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

## (5) 1972-73-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—(தொடர்ச்சி).

* திரு. என். டென்னிஸ்: துணைத் தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

இப்பொழுது ஒரு சர்ப்ளஸ் பட்ஜட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. சர்ப்ளஸ் பட்ஜட்டெல்லாம் சிறந்த பட்ஜட் எனவும், டெபிசிட் பட்ஜட்டுகள் மோசமான பட்ஜட் என்றும் சொல்வதற்கில்லை. ஒரு பட்ஜட் சர்ப்ளஸ் பட்ஜட்டா அல்லது டெபிசிட் பட்ஜட்டா என்பதிலிருந்து அதன் தரத்தை நிர்ணயிக்கமுடியாது. ஒரு பட்ஜட்டில் ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை முன்னேற்ற, பொதுமக்களின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்த்துவைக்க என்னென்ன, என்னென்ன கொள்கைகள், திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதிலிருந்துதான் ஒரு பட்ஜெட்டின் தரத்தை நிர்ணயிக்க முடியும். பழைய நிதிநிலை அறிக்கைகளைப் பார்த்தால் ஏழை மக்களின் நல்வாழ்விற்காக நல்ல பல திட்டங்கள் இடம்பெற்றிருக்கும். வயோதிகர்களுக்குப் பென்ஷன், ஏழைகளுக்கு இலவச மதிய உணவு, இலவசக் கல்வி போன்ற திட்டம் அந்த பட்ஜெட்டுக்களில் இடம் பெற்றிருக்கும். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் பார்க்கும் போது, மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடும் வழிவகைகளை காணவில்லை.

முதலாவதாக எடுத்துக்கொண்டால் வேலையில்லாத் திண்டாட்டம் என்றும் இல்லாத அளவில் வளர்ந்திருக்கிறது. படித்தவர்கள், படிக்காதவர்கள் இவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து வந்திருக்கிறது. ஏற்கனவே படித்தவர்கள் வேலையில்லாமல் இருக்கும்போது, ஆண்டுதோறும், படித்தவர்கள் ஆயிரக்கணக்கில் வெளிவருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்புக்கள் அளிக்க வழிவகை இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெறவில்லை.

அடுத்து, விலைவாசியைக் கட்டுப்படுத்த இந்த அறிக்கையில் திட்டங்கள் வகுக்கப்படவில்லை. அத்யாவசியப் பண்டங்களின் விலைகள் விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிறது. இதன் மூலம் சாதாரண ஏழை எளிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்துவது மத்திய சர்க்காரின் கடமை என்பதுபோல் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த விஷயத்தில் மத்திய சர்க்காருக்கும், அதே போல், மாநில அரசுக்கும் கடமை இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தேசத்திலுள்ள மாநிலங்களெல்லாம் விலைவாசியைக் கட்டுப்படுத்துவது எங்கள் பொறுப்பு இல்லை என்று சொன்னால், பண்டங்களின் விலைகள் கட்டுப்படாது. அவ்விதமான நிலை ஏற்பட்டால், தேசத்திலுள்ள பண்டங்களின் விலைவாசிகள் உயர்ந்து கொண்டேபோய், தேச மக்கள் கஷ்டப்படுவார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பண்டங்களின் விலைகளையும் அத்யாவசியப் பண்டங்களின் விலையையும் கட்டுப்பாடு செய்ய அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் துறையில் சில மாதங்களாக அமைதியின்மை இருக்கிறது. தொழில் துறையில் வளர்ந்து வரும் அமைதியின்மையைப் போக்க வழிவகைகள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெறவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், பல ஆண்டுகளாகத் தொழில் துறையில் அமைதியான நிலை ஏற்பட்டிருந்ததால், வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டே இருந்தது. அதனால் பலருக்கும் வேலை வாய்ப்புக்கள் கிடைத்தது. கடந்த சில மாதங்களில் அப்படிப்பட்ட அமைதி இல்லை. அமைதி காக்கப் [illegible]





அடையும். வேலை வாய்ப்பும் கிடைக்கும். உற்பத்தியும் பெருகும். இப்படி விலைவாசிப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் இல்லாமல் இருப்பது வருந்தத்தக்கது.

இந்த நிதிநிலை அறிக்கையின் நான்காவது பக்கத்தில், "ஆசிரியர்களுக்கு சலுகைகள், வேலை வாய்ப்பு" எனக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பட்டதாரி ஆசிரியர்கள், ஏனைய ஆசிரியர்கள் பிரச்சினைகள் இவற்றிக்கு வழிவகைகள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை. இன்னும் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். கஷ்டப்படுகிறார்கள். ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அப்படியானால்தான், கல்வித்தரம் உயர வழி ஏற்படும். மாணவர்களிடம் இருக்கும் அமைதியின்மையும் தீரும். இந்தப் பிரச்சினையில் காலந்தாழ்த்தாமல் தீர்க்கப் படவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

இது வரி இல்லாத ஒரு சிறந்த பட்ஜட் என்று கூறப்பட்டது. 1971-72-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கைக்குப் பிறகு வரிகள் மூலம் வருமானத்தை இந்த அரசு பெருமளவில் பெருக்கிக்கொண்டது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் அதிக வருமானம் வந்திருப்பதாக மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1972-73-க்கான வரவு-செலவு திட்ட இணைப்பைப் பார்க்கும்போது, 1966-67-ல் இந்த மாநிலத்தில் ஏகதேசம் ரூ. 200 கோடி வருமானம் வந்தது. 1972-73-ல் அது ஒரு மடங்கு அதிகமாகி ரூ. 400 கோடி வருமானம் வந்திருக்கிறது. ஆகலால் ஐந்தாண்டுகளில் ஒரு மடங்கு அதிகமாகியிருக்கிறது. மதிப்பீட்டில் முதல் பக்கத்தில் பார்த்தால், 1966-67-ல் விற்பனை வரி மூலம் ரூ. 48 கோடி வரவு. ஆனால் 1972-73-ல் 104 கோடி ரூபாய் வரவு வந்திருக்கிறது. ஆக ஐந்தாண்டுக்களில் ஏகதேசம் 56 கோடி ரூபாய் விற்பனை வரியின் மூலம் மாத்திரம் அதிகம் வந்திருக்கிறது. வருமான வரியை எடுத்துக் கொண்டால், கடந்த ஆண்டைவிட ஏகதேசம் பத்துக் கோடி ரூபாய் அதிகம் வருவாய் வந்திருக்கிறது. அதற்கும் மேலாக, மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டதன் காரணமாக, 1972-73-ல் 35½ கோடி ரூபாய் கூடுதல் வருவாய் வந்திருக்கிறது. ஆதலால், அதற்கும் மேல் மக்கள் வரியைத் தாங்கமாட்டார்கள் என்று

இருக்கும் நிலையில், பெரிய வரிகள் எதுவும் விதிக்கவில்லை. அல்லாமல் வரிகள் குறைக்கப்படவோ அல்லது வரிக் கொடுமையிலிருந்து விடுவிக்கப்படவோ இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமங்களுக்குச் சாலைகள் அமைக்கவும், குடிநீர் பெருக்கவும், மோட்டார் வாகன வரியில் 10 சதவிதம் சர்-சார்ஜ் போட்டும், லோகல் செஸ் சர்-சார்ஜை 1½ ரூபாயிலிருந்து, 2½ ரூபாய் வரை விதிக்கலாம் என்று ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதிநிலை அறிக்கை மூலம் அனுமதி கொடுக்கப்படுகிறது. இந்த வரிகள் உயர்த்தப்படாமல் அறிக்கை அமைக்கப்பட்டிருந்தால், நன்றாக இருந்திருக்கும். இப்பொழுது இருக்கும் லோகல் செஸ் சர்-சார்ஜ் . 1½ ரூபாய் வரி கூட அநேக பஞ்சாயத்து யூனியன்களில் இல்லாமல் இருக்கிறது. இந்த நிலையில் 2½ ரூபாய் என்று ஆனால், அதை பஞ்சாயத்து யூனியன்கள் வசூலிக்க முன் வருவார்கள் என்று எண்ண முடியாது. நோக்கம் ஈடேறாமல் போகும். இந்த வரிகள் விதிக்காமலே நிதிநிலை அறிக்கையில் வழி செய்திருந்தால் நலமாக இருந்திருக்கும்.

பிச்சைக்காரர் மறுவாழ்வுக்காக வரிகள் சில விதிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி வரிகள் விதிக்காமலே வகை செய்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். இன்னும் பட்ஜெட்டைப் பார்க்கும்போது, கல்விக்காக, விவசாயத்திற்காக, பல முதலீடுகள் செய்யப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. 1966-67-ல் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருந்தது. 1971-72-ல் இவ்வளவு ஒதுக்கப் பட்டிருக்கிறது, எனக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் 1966-67-ல் எவ்வளவு வருமானம், 1971-72-ல் எவ்வளவு வருமானம் என்பதை பார்க்க வேண்டும். பழைய காரியங்களையே தொடர்ந்து செய்து கொண்டு வருகிறது. இந்த அரசு புதிதாக ஒன்றும் செய்யவில்லை.

இந்த நிதிநிலை அறிக்கை தேசிய ஒருமைப்பாடு என்று தொடங்கி, மாநில சுயாட்சி என்கிற குறிப்போடு முடிக்கப்பட்டிருக்கிறது. 27 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில் 5 பக்கங்கள் மாநில சுயாட்சிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாநிலங்களில் பணிகள் சிறப்பாக நடக்க அதிகாரங்கள், நிதி வசதிகள் வேண்டும் என்பதில் இரு கருத்துக்கள் இருக்க





முடியாது. ஆனால் சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுத முடியும். அதே போல் இந்தியா சிறப்பாக ஒன்றாக இருந்தால்தான் மாநிலங்களும் சிறப்படைய முடியும். தேசீய ஒருமைப்பாட்டிற்குப் பங்கம் ஏற்படாமல் ஆற அமர்ந்து முடிவு எடுக்க வேண்டும்.

அடுத்து, என்னுடைய மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தின் சில பிரச்சினைகளைக் கூறி முடிக்கலாம் என்று கருதுகிறேன். இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் சித்தாறு-பட்டணங்கால் திட்டம் நடந்தேறிக் கொண்டிருக்கிறது. அதில் பல கிளைக் கால்வாய் "ஸ்லூயிஸ்" அமைக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும், கிளைக் கால்வாய் வெட்டுவதற்கும் மடைகள் வைப்பதற்கும் அதற்கான வழிவகை செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். சித்தாறு-பட்டணங்கால் திட்டத்தில் கருங்கல் 'டிஸ்டிரிப்யூட்டரியில்' தண்ணீர் ஒழுங்காக விடப்படவில்லை. எப்பொழுதும் அந்தப் பிரதேசத்தில் பயிர்கள் கரிந்து நாசமடைகின்றன. ஆகவே அணையில் தண்ணீர் இருந்தும் கூட இவ்வித நிலை ஏற்பட்டிருப்பது விவசாயிகளுக்குக் கஷ்டம் கொடுப்பதாக இருக்கிறது. இந்த நிலையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் தொழிற்சாலை இல்லாத மாவட்டம். படிக்காதவர்களும், படித்தவர்களும், வேலை வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். ஆதலால் அங்கு ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்குரிய நல்ல வாய்ப்பிருக்கிறது. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டிய வழிவகை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குளச்சல் துறைமுகம் தமிழ்நாட்டின் மேற்கு கடற்கரையில் இருக்கும் துறைமுகம் அது. அதை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குழித்துறை ஆற்றில் ஞாறமலைக்கடவு, மாங்காடு, திக்குறிச்சி ஆகிய இடங்களுக்குப் பாலம் அமைக்க வேண்டுமெனப் பொதுமக்கள் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கருங்கல் பிரைமரி ஹெல்த் சென்டரை டிஸ்பென்சரியாகவும், தேங்காய்பட்டணம் டிஸ்பென்சிரியை, ஆஸ்பிட்டலாகவும் ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் 10 நிமிடங்களுக்குள் தங்கள் பேச்சைக் கண்டிப்பாக முடித்துக்கொள்ள வேண்டும்.

*** திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, 1972-73-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் இலட்சியத்தின் அடிப்படையில் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திட்டம் வகுத்துச் செயல்பட்டு வருவதை இங்கே எதிர்க் கட்சிகளுக்கு எந்த அளவு எரிச்சல் தந்துள்ளது என்பதை அவர்கள் பேச்சிலிருந்து நாம் புரிந்துகொள்ள முடிகிறது. பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டம் பட்ஜெட் சமர்ப்பித்து, துண்டு விழும் பணத்துக்குச் சரிக்கட்ட மேலும் புதிய வரிகள் விதிக்கப்படும். அதை வைத்து அரசியல் நடத்தலாம் என்று பல் துலக்கிக் கொண்டிருந்த பல அரசியல் வாதிகள் இன்றைய தினம் டாக்டர் கலைஞர் அவர்களின் இந்த பட்ஜெட்டைக் கண்டு நிச்சயமாக அவர்கள் மனதிற்குள் புழுங்கிக் கொண்டிருப்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது. வருமானம் ரூ. 397.27 கோடி, செலவு ரூ. 394.78 கோடியாகவும் மதிப்பிட்டு ரூ. 2.49 கோடி உபரியாகக் காட்டிவிட்டார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போட வேண்டிய வரி எல்லாம் போடப்பட்டு விட்டது. தேர்தல் வரும் நேரத்தில் மட்டும் உபரி பட்ஜெட், தேர்தல் பட்ஜெட் என்று மக்கள் சொல்லக்கூடிய அளவுக்குப் பட்ஜெட் கொண்டு வருவது வழக்கமாக நம் நாட்டில் இருந்து வந்திருப்பதை எந்த அரசியல்வாதியும் மறுக்க முடியாது. ஆனால் இப்போது அண்மையில் தேர்தல் இல்லாத நேரத்தில் கூட, தேர்தலைச் சந்திக்க வாய்ப்பில்லாத இந்த நேரத்தில் கூட நமது டாக்டர் கலைஞர் அவர்கள் 'இது தேர்தல் பட்ஜெட் அல்ல, தேர்ந்த பட்ஜெட்' என்று நாட்டு மக்கள் ஒப்புக்கொள்ளும் அளவுக்கு இந்த பட்ஜெட்டைத் தயாரித்து அளித்திருக்கிறார்கள்.





இந்த நிதிநிலை அறிக்கையில் தொழிலாளர்களுக்குப் பங்கு மூலதனம் அளிக்க இடம், வழிவகை செய்திருப்பது இந்தியத் துணைக் கண்டத்தில் பிற மாநிலங்கள் ஏற்று பின்பற்ற வேண்டிய ஒரு திட்டம் என்பதை நான் மன நிறைவுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசிற்கும் கூட, இம் மாநில அரசின் திட்டத்தின் மூலம் வழிகாட்டியாக அமைந்துள்ளது என்பதையும் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளைத் தவிர ஏனைய இடங்களில் இத்தகைய திட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, நஞ்சை நிலங்கள் ஏராளமாக நிறைந்துள்ள தஞ்சை மாவட்டத்தில் இருந்து வரும் சட்டப்பேரவை உறுப்பினர் என்ற முறையில் பட்ஜெட்டில் நமது மதிப்புக்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் நில உச்சவரம்புச் சட்டத் திருத்தம் மூலம் புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்கி இருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அறநிலையங்களுக்கு அளிக்கப்பட்ட விதி விலக்குகளை ரத்து செய்து, அதே நேரத்தில், ஒரு குடும்பத்திற்கு 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றிருந்ததை 40 ஸ்டாண்டர்ட் ஏக்கராகக் குறைத்திருப்பது போற்றி வரவேற்கத்தக்கதாகும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் உச்சவரம்பு முதலில் கொண்டு வந்தார்கள் என்று அறிவிக்கப்பட்டாலும், உண்மையான நில உச்சவரம்பு கலைஞர் ஆட்சிக் காலத்தில் தான் வந்தது என்பதை என் போன்ற தஞ்சை மாவட்ட விவசாயப் பகுதியினர் உணர்ந்து கொள்ள முடிகிறது.

தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்திலும் தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வானம் பொய்த்தால், வெள்ளப் பெருக்காலும், இயற்கையின் சோதனைகளாலும் ஏற்பட்ட கொடுமைகளின் காரணமாக எண்ணற்ற விவசாயக் குத்தகைதாரர்கள் தாங்கள் அளக்க வேண்டிய குத்தகை பாக்கியை அளக்க முடியாமல் தவித்துக் கொண்டும், நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டு தத்தளிப்பதைத் தடுக்க நம் டாக்டர் கலைஞர் அவர்கள் போட்ட பட்ஜெட் மூலம் மிக விரைவாகவும் துரிதமாகவும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வரும் அதே நேரத்தில், அத்தகைய முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் முறையில், கேலி பேசும் அளவில் யுத்த நிதிக்குப்

அவர்கள் அளிக்க வேண்டிய குத்தகை பாக்கி—அது நிலச் சுவான்தார்கள், ஆலயம், ஆதினம், மடங்களாக இருந்தாலும்—அளிக்க முடியாமல் நிலத்தை விட்டு வெளியேற்றும் சூழ்நிலையிலிருந்து குத்தகைதாரர்களின் அத்தகைய குத்தகை பாக்கியை ரத்து செய்து சட்டமியற்ற முன்வந்திருப்பதை நன்றி உள்ள எந்தக் குடிமகனும் பாராட்டாமலிருக்க முடியாது.

பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றத்திற்குச் சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு அதிகம் நிதி ஒதுக்கப்பட்டது வரவேற்கத் தக்கதாகும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொழில் நிதியும் அதைப் போலவே வியாபாரத்துக்கு அரசு வட்டியில்லாக் கடன் வழங்குவது போல் பிற்பட்ட மக்களுக்கு அத்தகைய வட்டியில்லாக் கடன், மற்றும் தொழில் நிதி வழங்கப்பட வேண்டுமென்று பிற்படுத்தப்பட்ட மக்கள் சார்பில் நமது அரசைத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாநில அரசு வளர்ச்சிப் பணிகளுக்கு இப்படி ஏராளமாகச் செலவிட்டு வந்த போதிலும், மத்திய அரசு அதை நிறைவேற்ற நிதி வசதி செய்து தராமல் இருப்பது வருந்தத் தக்கதாகும்.

அது மட்டுமல்ல. இந்த ஆண்டு மத்திய அரசிடம் பெற்ற கடனைத் திருப்பித் தரவேண்டிய தொகை ரூ. 8 கோடிக்கு அதிகமாக உள்ளது. கடனுக்கு வட்டி அதிகமாக வசூலிக்கப்படுகிறது. ஆனால் மத்திய அரசு வெளிநாடுகளிலிருந்து தாங்கள் வாங்கும் கடனுக்குச் செலுத்தும் வட்டியைவிட நமது மாநிலத்தில் அவர்கள் வசூலிக்கும் வட்டித் தொகை மிக அதிகமாக இருப்பதை நாம் எண்ணிப் பார்க்கும்போது மத்தியிலே ஒரு மார்வாடித் தனமான ஆட்சி நடைபெறுகிறது என்பது மிகவும் கண்டனத்திற்குரிய ஒன்று என்பதைச் சுட்டிக்காட்ட நாம் மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநில முதலமைச்சரும் அறிவிப்பதற்கு முன்னதாகவே, இன்றைய தினம் முன்னேற்றக் கழக அரசைக் கேலி பேசுகிறவர்கள் கூட மனதிற்குள் பாராட்டத்தக்க அளவிற்கு, போர் நிதிக்கு 10 கோடி ரூபாய் அளிக்கப் போகிறேன் என்று இந்த மாநிலத்து மக்கள் சார்பாக அறிவித்த பெருமை நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும். அத்தகைய முறையில் அதற்கான நல்ல முயற்சிகளை மேற்கொண்டு



பணம் தராதே என்று வெளிப்படையாக இல்லாவிட்டாலும் மறைமுகமாகச் சொல்லும் தேசபக்தர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் சிலர், இன்றைக்கு தேசபக்தி மிக்க திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பார்த்து "நாட்டைத் துண்டாட வருகிறார்கள் வேறு போர்வையில்" என்று பேசுகிறார்கள் என்றால், அதற்கு நாட்டு மக்கள் அவர்களுக்குத் தீர்ப்பளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்புடன் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதியைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். நமது அரசு 1967-ம் ஆண்டுக்குப் பின்னால் ரூ. 45 லட்சம் செலவில் மாயூரம் மேம்பாலம் கட்டி இருக்கின்றது. இது மிகப் போற்றத்தக்க பணியாகும். அடுத்து ரூ. 5 லட்சம் செலவில் அன்னை அஞ்சுகம் அம்மையார் பெயரால் காவிரியின் குறுக்கே ஒரு பாலம் கட்டப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்து வருகிறது நமது அரசு.

அடுத்தபடியாக, இணைப்புச் சாலைகள் போடும் பணியை நமது அரசு விரைவுபடுத்தி வருகிறது. எனது பகுதியிலும் பல இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன. மேலும் பல இணைப்புச் சாலைகளை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், ஏற்படுத்துவதோடு, பொதுவாக தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக கிழக்குத் தஞ்சையில், முக்கியமாக மாயூரத்தில் பாலம் கட்டுவதற்கும், இணைப்புச் சாலைகள் போடுவதற்கும் இன்னும் அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, நிதிநிலை அறிக்கையினை வரவேற்று எனது உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். வடிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கும் இந்த 1972-73-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாக்கல் செய்துள்ள வரவு செலவுத் திட்ட அறிக்கையில் விவசாயிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கும், அறக்கட்டளைகளுக்கு அளிக்கப்பட்டிருந்த விதி

விலக்கை ரத்து செய்வது, குடும்பத்திற்கு அதிக அளவு 60 ஸ்டாண்டர்டு ஏக்கரை 40 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைப்பது, ஏழை விவசாயிகளுக்குக் கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வருவது, 1380-ம் பசலி முடியவுள்ள குத்தகைப் பாக்கிகளை ரத்து செய்வது போன்ற சிறந்த பாராட்டுக்குரிய அறிவிப்பிற்கு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்கக் காரியதரிசி என்ற முறையிலும், தஞ்சை மாவட்டத்திலுள்ள 25 ஆயிரம் விவசாயிகளில் நானும் ஒருவன் என்ற முறையிலும் முதலமைச்சருக்குப் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் அறிவிப்போடு நின்றுவிடாமல், விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான, நிலத்திற்கும் நிலத்தை உழுகின்ற உழவர்களுக்கும் நில உறவை ஏற்படுத்துகின்ற வகையில் பல்வேறு சட்டங்களைத் தீட்டி, நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 25 ஆண்டுக் காலமாக இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியினர் ஏழை எளிய மக்கள், உழவர் பெருமக்களின் அடிப்படையான பிரச்சனைகளுக்காக தமிழ்நாட்டிலே பல போராட்டங்கள் நடத்தி இருக்கின்றார்கள். 1961-ம் ஆண்டில் அறப் பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்துப் போராட 16 ஆயிரம் பேர் சிறை சென்றார்கள். அடுத்து, நிலமீட்சிப் போராட்டம் நடத்தி, 13 ஆயிரம் பேர் சிறை சென்றார்கள். அதற்கடுத்து நியாயக் கூலிப் போராட்டம் நடத்தி, 6 ஆயிரம் பேர் சிறை சென்றார்கள். இந்தப் போராட்டங்கள் வெற்றி பெறும் வகையிலே இன்றைக்கு ஆளுகின்ற தி.மு.க.வினர் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தக் கூட்டத் தொடரிலேயே அதற்கானச் சட்டத்தை நிறைவேற்றிவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் பருவ மழை பொய்த்தது. நிலம் வறண்டது. விளைபொருள் உற்பத்தி பாதிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு வேலை இல்லை. உணவுப் பொருள் பற்றுக்குறையால் விலைவாசிகள் ஏறிவிட்டன. அதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். ஜீவனம் நடத்துவதற்காகத் தனிப்பட்ட லேவாதேவிக்காரர்களிடம் கடன்



பெற்றார்கள். அரசாங்கத்திடம் கடன் வாங்கி, கிணறு வெட்டினார்கள். வெட்டிய கிணற்றிலோ தண்ணீர் கிடைக்கவில்லை. அவர்கள் பாடு மேலும் கஷ்டமாகியது. லேவாதேவிக்காரர்களுக்கு வட்டியைக் கூட கொடுக்க முடியவில்லை. அரசாங்கத்திடம் வாங்கிய கடன் தவணையையும் கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டார்கள்.

இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில், லேவாதேவிக்காரர்கள் தங்கள் கடனுக்காக நிலத்தைப் பறிமுதல் செய்தார்கள். அரசாங்கக் கடனுக்காக அதிகாரிகள் நிலத்தை ஜப்தி செய்தார்கள். இந்த இக்கட்டான நிலையை உணர்ந்து, இந்த இந்த அரசாங்கம் கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்திருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் நிவாரணச் சட்டம் இந்த ஆண்டிலேயே, இந்தக் கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சமதர்ம வழியில் நடைபெறும் இந்த அரசாங்கம் நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தைக் கையகப்படுத்துவதைப் பாராட்டுகிறேன். இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிற சட்டங்களை இந்தக் கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றினால் லட்சக்கணக்கான குடியானவர்களும் இந்த அரசாங்கத்தைப் பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை. நான் 1952-லேயும் சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். அப்போதும் பல சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால் அவையெல்லாம் சட்டமாக இருந்தனவே தவிர, சரியாக அமல்படுத்தப்படவில்லை.

உதாரணமாக

1938-ம் ஆண்டில் கடன் நிவாரணச் சட்டம்;
1947-ம் ஆண்டில் ஜமீன் ஒழிப்புச் சட்டம்;
1948-ம் ஆண்டில் ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்டம்;
1949-ம் ஆண்டில் ஜமீன் விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம்;
1952-ம் ஆண்டில் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்;
1955-ம் ஆண்டில் நில வெளியேற்றத் தடைச் சட்டம்;
1956-ம் ஆண்டில் குடியானவர்கள் பாதுகாப்புச் சட்டம்;

இன்னும் நியாயவாரச் சட்டம், இனாம் சட்டம் போன்ற பல சட்டங்களை காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்தார்கள்.

அந்தச் சட்டங்கள் எல்லாம் நிலப்பிரபுக்களை வாழ வைத்தனவே தவிர, குடியானவர்களை—ஏழை விவசாயிகளை—உழவர் பெரு மக்களை வாழ வைக்கவில்லை.

அந்தக் குறைகளை யெல்லாம் போக்குகின்ற வகையிலே, இப்போதைய திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இந்த பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறார்கள். முன்போலவே இதுவும் ஏட்டளவில் இல்லாமல் உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கேட்டுக் கொள்கின்ற நேரத்தில், 1380-வது பசலி முடிய, அதற்கு முன்னால் கொடுக்க வேண்டிய பாக்கிகள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டுமென்று இந்தக் கூட்டத் தொடரிலேயே சட்டம் கொண்டுவரப்படுவதை பாராட்டுகிறேன். ஆனால் இதில் ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். குத்தகைக்காரர்கள் நடப்பு ஆண்டில் கொடுக்கப் பட்ட குத்தகைப் பாக்கியை நில உடமையாளர்கள் அதற்கு முந்திய ஆண்டுகளுக்குள்ள பாக்கியில்தான் வரவு வைத்திருக் கிறார்கள். எனக்கு 700 ரூபாய் பாக்கி இருந்தது. அதைக் கட்டினேன். ஆனால் நான் கட்டிய ஆண்டுக்கு அது வரவு வைக்கப்படவில்லை. அதற்கு முந்திய பாக்கியில்தான் வரவு வைக்கப்பட்டது. எனவே, 1380-ம் பசலிக்குள்ள பாக்கியை 1971-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந் தேதி கட்டியிருந்தாலும், எல்லாப் பாக்கியையும் ரத்து செய்ய வேண்டுமென்ற முறையிலே கொண்டுவரப்பட இருக்கும் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட் டால்தான் அதன் பலனை அடைய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் கொண்டுவரக்கூடியச் சட்டம் நல்ல பயன் அளிக்க வேண்டுமென்றால் நான் இப்போது கூறுகின்ற அடிப் படையில் இருக்க வேண்டும்.

அதாவது நில உச்சவரம்புச் சட்டத்தில் 15 ஏக்கர் என்று இருப்பதை ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கர் என்று திருத்தவும், 1959-ம் வருடத்திற்குப் பிறகு பினாமியாகவும், கிரயப் பத்திரங் களாகவும் எழுதி வைத்த ரிக்கார்டுகள் அனைத்தும் ரத்து செய்யப் படவேண்டும்.

அடுத்து, தர்ம பரிபாலனங்களுக்கு உள்ள (கோவில் மடம்) நிலங்கள் அனைத்தையும் அரசு எடுத்து, விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய வேண்டும். ஏனென்றால் எந்தக் கோவிலும்





எனக்கு சோறு போதவில்லை. வயிற்றை வலிக்கிறது என்று சொல்லப் போவதில்லை. பகுத்தறிவுப் பிரச்சாரத்தில் ஈடுபட் டிருக்கும் நாம் அதைச் செய்வது சாலச் சிறந்தது.

அடுத்து, மாநிலம் முழுவதும் உள்ள விவசாயிகள் குடியிருந்து வரும் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்க, தஞ்சை மாவட்டச் சட்டத்தை தமிழகம் பூராவும் விஸ்திரிக்க வேண்டும். இப்பொழுது தஞ்சை மாவட்டத்தில் மட்டுமே இருக்கிறது. குறிப்பாக குடியிருப்பு மனைகள் மேல்ஜாதியினர் வாழ்கின்ற பகுதிகளில் இருந்தால், அந்த மனைகளில் அரிஜன மக்களையும், ஏழை எளிய விவசாயிகளையும் குடியமர்த்த வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்போதுதான் வளர்ந்துவரும் சமுதாயத்தின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், நாகரிகம் ஆகியவற்றிற்கு ஏற்ப அவர்கள் தங்களை மாற்றிக்கொள்வார்கள்.

அடுத்து, தஞ்சை மாவட்ட நியாயக் கூலிச் சட்டத்தில் திருத்தம் செய்து, தமிழ்நாடு முழுவதும் அமல் படுத்தவும், நியாயக் கூலியை உயர்த்த சட்டம் செய்யவும் வேண்டும். இப்போது கிழக்குத் தஞ்சையில் இருக்கும் சட்டம் மேற்குத் தஞ்சையில் இல்லை. ஆனால் இரண்டு பகுதியிலிருக்கும் தொழி லாளர்களும் ஒரே இனத்தவர்தான். இது எப்படி இருக்கிற தென்றால், ஒரு கண்ணிலே வெண்ணெயும், ஒரு கண்ணிலே சுண்ணாம்பும் தடவுவதுபோல் இருக்கிறது. இந்தப் பாரபட்சம் இல்லாமல் எல்லோருக்கும் ஒரேமாதிரியான சட்டம் இருக்க வேண்டும். மற்றச் சட்டங்களுக்கு போலீசார் பாதுகாப்புக் கொடுப்பதுபோல் இந்தச் சட்டத்திற்கு காவல் கொடுப்பதாக இல்லை. இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் காவல்துறை யினர் நிலப்பிரபுக்களுக்குத்தான் காவலாக இருக்கிறார்கள். எனவே இந்தச் சட்டத்தை அரசாங்கம் சரியாக அமல் படுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறேன். இனிமேலாவது இந்தச் சட்டத்தை சரியாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1968-ம் ஆண்டிற்குப் பிறகு குத்தகை பாக்கிக்காக நிலத்திலிருந்து ரெவின்யூ கோர்ட், மூன்சீப் கோர்ட்டுக்கள் மூலம் வெளியேற்றப்பட்டது செல்லாது என்று சட்டம் கொண்டுவரவும், உடனடியாக ரெவின்யூ கோர்ட்டுக்களைக் கலைத்துவிடவும், குத்தகை

பாக்கிகள் சம்பந்தமான வழக்குகள் அனைத்தும் தள்ளுபடி செய்யவும் சட்டம் கொண்டுவரவும் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக குடும்பத்திற்கு அதிக அளவு 40 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறைத்திருக்கிறார்கள். 20 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைத்தால் போதும் என்று நான் நினைக்கிறேன்.

அதேபோல கடன் நிவாரணச் சட்டத்தில் அரசு கூட்டுறவு வட்டிக்கடைக்காரர்கள், நிலச் சுவான்தார்கள், கோவில், மடம் ஆகியவற்றிற்குக் கொடுக்க வேண்டிய கடன்கள் அனைத்திற்கும் கடன் நிவாரணம் கொடுத்துச் சட்டம் கொண்டுவர வேண்டும்.

இன்றைக்குத் தடுக்கி விழுந்தால் வட்டிக்கடையில்தான் விழுகிறார்கள். உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்று சொல்லப்படுகிற முதியோர் சொல் அவர்களுக்கு இன்றைக்கும் சரியாக இருக்கிறது. உணவு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இந்த மாநிலம் நிலச் சீர்திருத்தங்களுக்கு எல்லாம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே வழிகாட்டியாக இருக்கிறது என்றார்கள். ஆயினும் உழவர்களுக்கு என்ன நன்மைகள் இதுவரை ஏற்பட்டிருக்கின்றன என்பதை ஆய்வு செய்ய வேண்டும். என்னுடைய சீர்காழி தாலூக்காவை எடுத்துக் கொண்டால் இந்தப் பக்கம் மூட்டை ரூ. 32 என்றால் கொள்ளிடத்திற்கு அப்பால் ரூ. 42. இந்தப் பயன் விவசாயிகளுக்குக் கிடைக்கிறதா என்றால் இல்லை. இது இடையில் இருக்கிற தரகர்களாகிய வர்த்தகச் சூதாடிகளுக்குத்தான் போகிறது. இதைப் போக்க அரசு முனைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயில் நிலங்களை எல்லாம் கண்டுபிடித்து நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க இந்த அரசு முன்வர வேண்டும். சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகள் ஆகியும் கூட எந்தச் சட்டம் வந்தாலும் கடைக்கோடியில் இருக்கக்கூடிய விவசாயிகள் பயன் அடையக்கூடியதாக இல்லை. எல்லாப் பயனும் மேல்தட்டில் நின்று விடுகிறது. ஆகவே விவசாயிகள் பயன் அடையக்கூடிய வகையில் இந்த அரசு செயல்பட வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.





* திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (திருச்சி): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை ஆதரித்து அதன்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1971-72-இல் நம்முடைய நிதிநிலை பற்றுக்குறை ரூ. 15.87 கோடியாக அமைந்திருந்தும் 1972-73-இல் வரவு ரூ. 397.27 கோடியாகவும், செலவு ரூ. 394.78 கோடியாகவும் அதனால் உபரி ரூ. 2.49 கோடியாக உபரி பட்ஜெட்டைப் போட்டிருப்பது அரசு மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுகிறது.

1972-73-ஆம் ஆண்டில் திட்ட வகையிலும் பிற வகையிலும் மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கும் கடன் ரூ. 45.80 கோடியாகும். ஆனால் திருப்பிக் கொடுக்க வேண்டியது ரூ. 53.38 கோடியானதால் நாம் பெறுவதைவிட திருப்பித்தர வேண்டியது 8 கோடியாக இருப்பது வருந்தத்தக்கதாகும்.

இந் நிலையிலும் நம்முடைய அரசு பல்வேறு துறைகளில் கவனம் செலுத்தி அதுவும் முக்கியமாக குறிப்பாக வேளாண்மைத் துறைக்கு அதிகமான கடன் உதவிகளை எல்லாம் அளித்து வருகிறது. குறிப்பாக காங்கிரசார் ஆண்ட காலத்தில் விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடன் ரூ. 31.41 கோடிதான் வழங்கப்பட்டது. ஆனால் கழக அரசாட்சி ஏற்பட்ட பின் படிப்படியாக விவசாயிகளுக்கு அளிக்கிற கடன் உதவி உயர்ந்து தற்போது 1972-73-இல் திட்டப்படி ரூ. 61 கோடியாகியிருக்கிறது. இது ஏழை எளிய விவசாயிகளுக்கு எல்லாம் மிகுந்த ஊக்கமளிப்பதாகும்.

அதேபோல நீண்டகாலக் கடன் ரூ. 3 கோடியிலிருந்து தற்போது 30 கோடிக்கு மேல் உயர்ந்திருப்பதும் பாராட்டத் தக்கது.

(திரு. செ. கந்தப்பன் தலைமை)

வேளாண்மைத் தொழிற் கழகம் ஏற்படுத்தி அதன்மூலம் 1,080 டிராக்டர்கள் விவசாயிகளுக்குக் கொடுப்பது மிகவும் பாராட்டத் தக்கது. இப்படி வேளாண்மைத் துறையில் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக நம்முடைய தமிழகம் இருக்கும் வகையில் கழக அரசு பற்பல திட்டங்களை நிறைவேற்றி வருவதைக் கண்டு நாம் பெருமைப்படுகிறோம்.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (திருச்சி)] [1972 மார்ச் 7

விவசாயத்திற்கு மிகவும் இன்றியமையாத கால்நடைகளைப் பராமரிப்பதில் அரசு தனிக் கவனம் செலுத்தி, சிறப்பான பிரச்சாரம் செய்வதும் மற்ற மாநிலங்களுக்கு நம் கழக அரசு வழி காட்டுவதாகவே அமைந்துள்ளது. கால்நடைகளுக்கு மட்டுமின்றி கோழிப்பண்ணை, வெண்ணிறப் பன்றி வளர்ப்பு ஆகியவற்றுக்கு அரசு ரூ. 3.06 கோடியிலிருந்து ரூ. 4.03 கோடி செலவிட்டு, அவற்றை வளர்ப்பவர்களுக்குக் கடன் உதவி செய்வது மிகவும் வரவேற்கத் தக்கதாகும்.

மாதவரம் பால்பண்ணையில் 33,000 லிட்டர் பாலிலிருந்து 70,000 லிட்டராக உயர்த்தியிருப்பதும் பாராட்டுதற்குரியது.

கல்விக்காக காங்கிரசார் செலவிட்ட தொகை ரூ. 53.56 கோடி. ஆனால் கல்விக்காக தற்போது 1972-73 இல் கழக அரசு ரூ. 89.85 கோடி ஒதுக்கியிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது. புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி அளித்திருப்பது, தமிழகத்தில் ஏழை எளியவர்கள் தங்களின் குழந்தைகளை கல்விமான்களாக்கி மகிழ வழி வகுக்கிறது.

மக்கள் நல்வாழ்விற்காக 1966-67-இல் 16.75 கோடிதான் அப்போதிருந்த அரசு ஒதுக்கியது. ஆனால் நமது கழக அரசு பொறுப்பேற்ற பின் படிப்படியாக அந்தத் தொகை உயர்த்தப்பட்டு தற்போது ரூ. 33.38 கோடியாகியிருக்கிறது. இப்படி கழக அரசு பொறுப்பேற்ற 4 ஆண்டுகளில் இந்தத் தொகை இரட்டிப்பாகி உள்ளது பாராட்டத்தக்கது.

பிற்பட்டோர் நலனுக்காக 1966-67 இல் ரூ. 3.59 கோடியாக இருந்தது, 1972-73-க்கு ரூ. 8.41 கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது மிகமிகப் பாராட்டத்தக்கது.

கழக அரசுப் பொறுப்பேற்றபொழுது 2,400 அரிசன குடியிருப்புகள் மின்வசதி பெற்றன. தற்போது 15,600 அரிசன குடியிருப்புகள் மின்னொளி பெற்று பொலிவுடன் காணப்படுகின்றன.

அரசு அலுவலாளர்களின் இரகசியக் குறிப்பு ஒழிப்பு முறை மற்ற மாநிலங்களுக்கு நமது கழக அரசு காட்டுகின்ற வழியாக அமைந்திருக்கிறது.



1972 மார்ச் 7] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (திருச்சி)]

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்—டாக்டர் கலைஞர் அவர்களின் செயல் திறனுக்கு எடுத்துக் காட்டு. மறுவாழ்வு விடுதிகள் திறக்கப்பட்டிருப்பது மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டும் வழியாக அமைந்துள்ளது.

குடிநீர் வழங்கும் திட்டம் நல்ல திட்டம். அதற்காக அரசு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்படுத்தியுள்ளது பாராட்டுதற்குரியது. திருச்சி நகருக்கு நீர்ப் பாசனத்திற்காக ரூ. 3 கோடியே 60 லட்சத்திற்கு ஆய்வு செய்யப்பட்டு ஆண்டிற்கு 1 கோடியே 20 லட்சமாக அளித்து உதவியிருப்பது பாராட்டுதற்குரியது.

அதேபோல திருச்சி நகருக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு 2 கோடியே 85 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, அதற்காக முன்பணம் ரூ. 35 லட்சம் கழக அரசால் அளிக்கப்பட்டிருப்பதும் மிகவும் பாராட்டுதற்குரியது.

ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திருச்சி நகரத்தில் காங்கிரஸ் கட்சி நகரசபைதான் இருக்கிறது. இருந்தபோதும் நமது கழக அரசு எந்தவிதமான கட்சி வேறுபாடுமின்றி—கட்சி மாச்சரியங்களுக்கு இடமின்றி—பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு உதவியிருப்பதை மாற்றுக் கட்சியினர்களும் பாராட்டத்தான் வேண்டும். பல்லாண்டு காலமாக இங்கே காங்கிரஸ் ஆட்சி இருந்த காலம் தொட்டு திருச்சிக்குப் பாதாள சாக்கடை வேண்டும் என்கிற கோரிக்கை வற்புறுத்தப்பட்டு வந்தும்கூட அன்றைக்கு மாநில ஆட்சிப் பொறுப்பிலிருந்த காங்கிரஸ்காரர்கள் அதனைச் செய்யத் தவறிவிட்டார்கள். ஆனால் 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன்தான் அந்தத் திட்டத்திற்கு முதன் முதலாகக் கையொப்பமிட்டு ரூ. 2 கோடியே 85 லட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள் என்பது நாம் பெருமைபடக்கூடிய ஒன்றாகும். அதன் முன்தவணையாக ரூ. 35 லட்சம் எல்.ஐ.சி. அளித்திருப்பதும், அதேபோல வடிகால் வாரியத் தலைவர் திருச்சி நகருக்கு நீர்ப்பாசனத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு 1 கோடியே 20 லட்சம் ஒதுக்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சென்ற சட்டமன்றக் கூட்டத்திலும் எடுத்துச் சொல்லப்பட்டு, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக திருச்சியிலே ஒரு பல்கலைக் கழகம் அமைக்க இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (திருச்சி)] [1972 மார்ச் 7

அதை யொட்டி அங்கே ஒரு பெண்கள் கல்லூரி தேவைப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் இரண்டு பெண்கள் கல்லூரிகள் இருக்கின்றன. அரசின் சார்பில் இன்னும் பெண்கள் கல்லூரி ஒன்று ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்ப் பெருமக்கள் வாழ்ந்த இடம் திருச்சி மாவட்டமாகும். திருச்சியில்தான் தமிழ்க்கடல் திரிபுரசுந்தர மீனாட்சி சுந்தரம் அவர்கள் பிறந்தார்கள். தஞ்சை மாவட்டத்திலுள்ள கரந்தையில் தான் தமிழ்ப் புலவர் கல்லூரி இருக்கிறது. அதேபோன்று திருச்சி மாவட்டத்திலும் ஒரு தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மருத்துவ மனைகளிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், க்ஷயரோக மருத்துவத்திற்கு மேலும் அதிக வசதிகளைச் செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு, 1972-73-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எம். ஆர். கண்ணன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விழைகிறேன்.

இங்கு காங்கிரஸ் கட்சி நண்பர்கள் பேசும்போது, "பற்றுக் குறை நிதிநிலை அறிக்கையால்தான் சமதர்ம சமுதாயத்தை அமைக்க முடியுமே தவிர, உபரி பட்ஜெட்டால் அமைக்க முடியாது" என்று கூறினார்கள். அதுதான் உண்மை நிலைமை என்று பலர் நினைத்து வந்தார்கள். ஆனால் இன்றைய தினம் தமிழக முதலமைச்சர் அவர்கள் உபரி பட்ஜெட்டாலும் சமதர்ம சமுதாயத்தை அமைக்க முடியும் என்பதை எடுத்துக் காட்டியிருக் கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையை அனைவரும் போற்று கிறார்கள், எல்லாப் பத்திரிகைகளும் பாராட்டி வரவேற்கின்றன. ஆனால் குறிப்பாக சில பத்திரிகைகள் விரும்பி பாராட்டவில்லை. அவர்களுக்கு வேறு வழி இல்லாத காரணத்தினால்தான் பாராட்டு கிறார்கள். அந்தப் பத்திரிகைகளின் ஆதரவு, நல்லெண்ணம்



1972 மார்ச் 7] [திரு. எம். ஆர். கண்ணன்]

எல்லாம் இந்தக் கட்சியின் ஆட்சிக்கு ஆதரவாக இல்லை. ஒரு சிறிய விஷயத்தைக்கூட பெரிய விஷயமாக ஆக்கி, இந்த ஆட்சிக்கு எவ்வளவு கெட்ட பெயரை உண்டாக்க முடியுமோ அந்த அளவிற்குச் செயல்பட்டு வருகிறார்கள். இந்த ஆட்சியில் ஏதாவது குற்றம் குறைகள் கிடைக்காதா, அதை வைத்துக் கொண்டு இந்த ஆட்சியின் நல்ல பெயரைக் கெடுக்கலாமே என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சி நண்பர் ஒருவர் பேசும்போது வீராணம் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டு, 'இன்னும் இந்தத் திட்டத்திற்கு எத்தனை ஆண்டுகள் ஆகுமோ? இதற்கு எவ்வளவு ரூபாய் செலவாகுமோ?' என்று பேசினார். வீராணம் ஏரித் திட்டம் சென்னை மக்களுக்கு குடிநீர் தருகின்ற ஒரு நல்ல திட்டமாகும். அந்தத் திட்டத்தை அவர் கேலி செய்து பேசினார். இங்கே இருக்கின்ற பத்திரிகைகள் எல்லாம்கூட, இது நல்ல திட்ட மாயிற்றே, குடிநீர் திட்டமாயிற்றே என்று எண்ணி ஆதரிக்காமல், கேலியும் கிண்டலும் செய்கின்றன. இந்தப் பத்திரிகைகள் இந்தத் திட்டத்திற்கு ஆதரவு தராவிட்டாலும், எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருந்தால் போதும். நேற்றுகூட 'இந்து' பத்திரிக்கையில் இதைப் பற்றி நியூஸ் வந்திருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக இரண்டு தொழிற்சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறோம். ஒன்று பண்ருட்டி யிலும், மற்றொன்று திருக்கழுக்குன்றத்திலும் ஆரம்பித்திருக் கிறோம். சாமான்கள் எல்லாம் மேற்கு ஜெர்மனியிலிருந்து வர இருக்கின்றன. தொழிற்சாலைகள் விரைவில் செயல்பட விருக்கின்றன. இவ்வளவு விஷயங்கள் தெரிந்திருந்தாலும்கூட, 'இந்தத் திட்டம் என்னவாயிற்று? எவ்வளவு ரூபாய் செல வாகும்? எப்போது தண்ணீர் வரும்?' என்றெல்லாம் கேட்கிறார்கள்.

அடுத்தபடியாக, அதேபோல் கூவம் அபிவிருத்தித் திட்டத்தைக் கேலி செய்தார்கள். நாம் எல்லாம் பொதுமக்களின் பிரதிநிதிகள். மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டிய நிலையில் இருப்பவர்கள். கூடியவரையில் மக்களின் நல்வாழ்வுப் பணிகளைத் தீட்டி செயல் படுத்த வேண்டும். ஏதாவது குற்றங் குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால் அதற்கும் முறை இருக்கிறது. குற்றங் குறைகளை எடுத்துச் சொல்லும்போது பண்போடு பேச

வேண்டும். சட்டமன்றத்தில் பேசுவது ஒருமுறை, வெளியே போய் பேசுவது ஒருமுறை என்று வைத்துக்கொள்ளக் கூடாது. அம்மையார் அவர்கள் பல மேடைகளில் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். பண்போடு பேச வேண்டும். அவர் பெண்ணாக இருந்தாலும் நல்ல பண்போடு பேச வேண்டும். மேடைகளில் பேசும்போது, நாட்டின் தலைவர்களை, மற்றக் கட்சியினரை, 'அவன்' 'இவன்' என்று பேசுவது நல்லதல்ல. அது நல்ல பண்பாடு அல்ல. நல்ல பெண்மணியாக விளங்க வேண்டும். 'நல்ல பெண்மணியார்' என்பதை விளக்கி சினிமா பாட்டு ஒன்றுகூட வந்திருக்கிறது. ஒரு தமிழ்ப் பெண், அதுவும் கல்வி கற்ற பெண், நம் நாட்டுத் தலைவர்களை—எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி—இழித்துப் பேசாமல் நல்ல பண்புடன் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பேசும் பண்பு ஏன் இப்படி குறைந்து போக வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

மேலும், இந்த ஆட்சியைக் குறை கூறுபவர்கள் நல்ல வலுவான குற்றச்சாட்டுக்களைச் சொன்னால் அதைக் கேட்டு திருந்திக் கொள்ள முடியும். ஐந்தாண்டுக் காலத்தில் இந்த ஆட்சி என்ன என்ன சட்டங்களை இயற்றியது, என்ன திட்டங்களைப் போட்டது, என்ன என்ன திட்டங்களை முடித்தது, எந்த எந்த வரிகளைப் போட்டிருக்கின்றது? அதனால் எந்த விதத்தில் ஏழை மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் விளக்கமாகப் பேசினால் நல்லது. எந்தக் கட்சியாவது இவைகளைப் பற்றிப் பேசுகிறதா என்றால் இல்லை. மேலும், நமக்கு எதிர்க்கட்சியாக வாய்த்திருப்பதெல்லாம் அகில இந்தியக் கட்சிகள் தாம். அகில இந்தியப் பிரச்சினைகளையோ மற்றவற்றையோ பற்றிப் பேசாமல்—டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட அகில இந்தியக் கட்சியைச் சேர்ந்திருந்தாலும்—முதலமைச்சர் எல்லா அறிக்கைகளிலும் தம்முடைய படத்தைப் போட்டு விளம்பரப் படுத்திக் கொள்கிறார், ஏன் அந்தப் போஸ்டரில் அவருடைய படம் வருகிறது, இப்படி வரலாமா என்றுதான் பேசுகிறார். அகில இந்திய ரீதியில் பிரச்சினைகளா இல்லை. பொருளாதாரப் பிரச்சினை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சினைகள் இல்லையா பேசுவதற்கு? அகில இந்திய ரீதியில் செயலாற்ற வேண்டிய



சுதந்திராக் கட்சியின் உறுப்பினர் இங்கே, இந்த விளம்பரம் எதற்கு, அந்தப் பத்திரிகைகளுக்கு மட்டும் விளம்பரம் கொடுக்கலாமா என்ற ரீதியில் பேசுவது நல்லதல்ல.

அடுத்தபடியாக, பல பத்திரிகைகள் தவறான முறையில் பிரசாரம் செய்து கொண்டிருக்கின்றன. இம்மாதிரியான பத்திரிகைகளை ஒழிக்க வேண்டும். இதனை ஒழிப்பதற்கு போலீஸோ மத்திய மாநில புலனாய்வுத் துறையோ பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். சில பத்திரிகைகள் தவறான செய்திகளை பரப்பி வருகின்றன. தவறான எண்ணத்தை மக்கள் மத்தியிலே பரப்பி வருகின்றன. நாட்டு இப்படி தவறான செய்திகள் பத்திரிகைகளில் வரும்போது, நாட்டு மக்களிடத்தில், 'ஒருவேளை இப்படியும் இருக்குமோ' என்று எண்ணக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

பெரும் தலைவர் என்று அழைக்கப்படுபவர்—பெருந் தலைவர் சொல்ல என்றால் இல்லை. ஏதாவது ஒரு பத்து ஊழல்களைச் சொல்லிக் கொண்டே வருகிறார். என்று எங்கே பார்த்தாலும் சொல்லிக் கொண்டே வருகிறார். எங்கே ஊழல், எந்த இடத்தில் ஊழல், யார் ஊழல் செய்தது என்கிற விளக்கங்களை ஆதாரபூர்வமாக எடுத்துச் சொல்கிறாரா என்றால் சிலர் கோபித்துக் கொள்கிறார்கள்—ஊழல், ஊழல் முடியுமா? இன்னின்ன அமைச்சர்கள், இன்னின்ன எம்.எல்.ஏ.க்கள் இப்படிப்பட்ட குறைகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாக எடுத்துக் காட்டினால் அது எல்லோருக்கும் உபயோகமாக இருக்கும். அதை விட்டு விட்டு, 'இந்த ஆட்சியில் ஊழல் நடக்கிறது, இந்த ஆட்சியை ஒழிக்க எல்லோரும் என்னுடன் வாருங்கள்' என்று பேசிக் கொண்டு வருவது பெருந் தலைவருக்கு அழகல்ல. இப்படி பொதுப்படையாக என்னைப் போன்ற சாதாரணமானவர்கள் வேண்டுமானால் சொல்லலாம், பெருந்தலைவர் அப்படிச் சொல்வது முறையல்ல. பெருந்தலைவர் பேச்சையும் சர்க்கார் கண்காணிக்க வேண்டும். எங்கே ஊழல் நடந்தது, யார் யார் ஊழல் செய்தார்கள் என்பதை அவர் ஆதாரபூர்வமாகச் சொல்ல முடியுமா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** மரியாதைக்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நேற்று நடந்த பிரச்சினையினுடைய ஓரத்தைத் தொட வேண்டாமென்று கேட்டுக்

[திரு. ஏ. எம். மொய்தீன்] [1972 மார்ச் 7

கொள்கிறேன். அதோடுகூட வெளியிலே இருப்பவர்களைப்பற்றி விமர்சிக்கும்போது முறையாக விமர்சிக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன. நம்முடைய சபையினுடைய நடவடிக்கைகள், அதனுடைய காரியங்கள் எல்லாம் இம்மாதிரியான தனிப்பட்டவர்களைப் பற்றிப் பேசும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதைப்பற்றி இரண்டு நாட்களாக நடந்துவரும் நிகழ்ச்சிகளை நாம் அறிகிறோம். தயவுசெய்து உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரியான நிலைமை வரும்போது, ஓரளவு நபர்களின் பெயர் சொல்லாமலே விஷயங்களைச் சொல்லி விவாதிப்பது பொருத்தமாக இருக்கும். அதை இந்தப் பேரவை பின்பற்ற வேண்டும் என்று அன்போடும் மரியாதையோடும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். ஆர். கண்ணன் :** நேற்றைய விவகாரங்கள் எதையும் எடுத்துக் கொள்ளவில்லை. வேண்டுமென்றே ஊழல், ஊழல் என்று சொன்னால் என்ன பொருள்? சட்ட மன்றம் சட்டங்களை இயற்ற முடியும். இந்தச் சட்டத்தில் இன்ன குறை, இந்த வரி போட்டதில் இன்ன குறை என்று யாராவது கருத்துச் சொன்னார்களா? புதிதாக நாங்கள் ஏதாவது ஒரு வரி போட்டிருக்கிறோமா? பழைய வரிகளில்தான் அரை சதவீதம், ஒரு சதவீதம் என்றுதான் உயர்த்தியிருக்கிறோம். அதுவும் வரிப்பளுவை தாங்கக் கூடியவர்கள் மீதுதான் வரி விதித்திருக்கிறோம். ஏழைகளின்மீது வரிப் பளுவைத் திணிக்கவில்லை. வியாபாரிகள் முதலில் விற்பனை வரிச் சலுகை பத்தாயிரம் ரூபாய் வரையில் என்று இருந்தது. அதுவும் அவர்களால் தாங்க முடியாத பளு என்ற காரணத்தினால் 15 ஆயிரம் ரூபாய் வரை என்று செய்தோம். பின்னர் 20 ஆயிரம் ரூபாய் வரை என்று அளவு நிர்ணயித்திருக்கிறோம். ஆகவே, பல வழிகளிலும் வியாபாரப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், இன்னும் பலதரப்பட்ட மக்களுக்கும் பல வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்திருந்தும்கூட அதைப் பாராட்ட மாற்றுக் கட்சியினருக்கு மனம் இல்லாமல், இப்படி போஸ்டர் போட்டுக் கொள்ளலாமா என்றுதான் பேசுகிறார்கள். அகில இந்தியக் கட்சியினர் இப்படிப் பேசுவதைக் கண்டு வருத்தப்படுகிறோம். உங்கள் பிரச்னையெல்லாம் மிக உயர்ந்த பிரச்னையாக இருக்க வேண்டும். இன்று ஊழல் என்கிறீர்கள், வேலையில்லாத் திண்டாட்டம் என்கிறீர்கள், அதைப்



1972 மார்ச் 7] [திரு. எம். ஆர். கண்ணன்]

பொறுத்துக் காரணம் சொல்லியிருக்கிறோம், விலைவாசி ஏற்றம் என்று சொன்னீர்கள். இன்றைக்கு அதற்காக ஒரு கழகமே அமைத்து ரெட் டேப்பிஸத்தைக் குறைத்து நல்ல முறையிலே நடத்த ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். இப்படி எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

தொழில் தகராறுகள் என்கிறீர்கள். சில தொழிலாளர் தலைவர்கள் போலீஸ்காரர்களைப் பார்த்துப் பேசுகிறார்கள், இந்த நாய்கள் வந்து நம்மை என்ன செய்வது என்று சொல்கிறார்கள். போலீஸாரும் தொழிலாளர்கள் அல்லவா, அவர்களும் நம்முடைய நாட்டு மக்கள்தானே, அவர்களைப் பார்த்து 20, 30 நாய்கள் நம்மை என்ன செய்ய முடியும் என்று கேட்கிறார்கள். இதற்கு முன்னாலே காங்கிரஸ் ஆளுங் கட்சியாக இருந்தபொழுது எதிர்க் கட்சிக்குத்தான் போலீஸ் ரிப்போர்ட் கேட்பார்கள். ஆனால் இப்பொழுது நம்முடைய அரசு எதிர்க் கட்சி மட்டுமல்ல, ஆளுங்கட்சிக்காரர்கள் பேசும்பொழுது போலீஸ் ரிப்போர்ட் கேட்கிறது, அவர்களுடைய சஜெஷன்ஸ் என்ன என்று கேட்கலாம், தவறாகப் பேசியவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கலாம் என்ற முறையிலே யார் பேசினாலும் போலீஸ் ரிப்போர்ட் கேட்கிறோம் (மணியடிக்கப்பட்டது) எனக்கு அளிக்கப்பட்ட 10 நிமிடங்கள் இன்டரடொக்ஷனுக்கே சரியாக போய்விட்டது. இன்னும் என் தொகுதியைப் பற்றி நான் பேசவில்லை. ஆகவே டிமாண்டிலாவது எனக்கு அதிக நேரம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஓ. என். சுந்தரம் :** சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1972-73-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை விவாதத்திலே கலந்துகொள்ளுகிற வாய்ப்பிலே இரண்டொரு கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டிலே 397.27 கோடி ரூபாய் வரவினத்திலும் அதன் தொடர்பாக 2.49 கோடி ரூபாய் உபரியாகக் கிடைக்கும் என்று காண்பிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டிலே எதிர்பார்த்ததை விட அதிகமாக 56.62 கோடி ரூபாய் வரியின் மூலமாக வருவாய்

கிடைத்து இருக்கிறது. உபரி பட்ஜெட் காட்டுகிற நேரத்திலே வரிகள் ஏதும் போடவில்லை என்ற நிலையிலே இதைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு பட்ஜெட்டிற்கும் இந்த ஆண்டின் பட்ஜெட்டிற்கும் மத்தியிலே பல இனங்களிலே வரிகளை போட்டிருக்கிறார்கள், மதுவிலக்கை ஒத்திவைத்து 36 கோடி ரூபாய், மற்றும் பஸ் கட்டணச் சீரமைப்பு, மின் கட்டண உயர்வு போன்ற பல வகைகளிலே வரிகளைக் கூட்டியிருக்கிறார்கள். ஆனால் பொதுவாக இந்த பட்ஜெட்டைப் பார்க்கிற நேரத்திலே வரிகள் ஏதும் போடவில்லை என்ற முறையிலே படம் பிடித்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பட்ஜெட் உரையிலே மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்றும் அடித்தளத்திலே இருக்கிற மனித தெய்வங்களை ஆராதனைக்குரியவர்களாக ஆக்குவதற்கு இந்த அரசு முற்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கோயிலில் உள்ள தெய்வங்களுக்கு நெய்வேத்தியம் காண்பித்து எடுத்துவிடுகிற மாதிரி மனித தெய்வங்களுக்கும் கொடுத்து எடுத்துவிடாமல், நில உச்சவரம்பு போன்ற நல்ல திட்டங்களை மிகவும் கண்டிப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்றும் உளப்பூர்வமாக நிறைவேற்ற வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, சென்ற ஆண்டு 358.52 கோடி செலவிருக்கும் என்றும் அதன் காரணமாக 15.87 கோடி ரூபாய் பற்றுக்குறை இருக்கும் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் இந்த ஆண்டிலே செலவு 394.78 கோடியாக இருந்தும் 2.49 கோடி ரூபாய் உபரியாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக அவர்கள் 1967-ஆம் ஆண்டிற்குப் பிறகு சாதித்தவற்றை கிட்டத்தட்ட 25 சாதனைகளை அவர்கள் காண்பித்திருக்கிறார்கள். மெத்த மகிழ்ச்சியடைகிறேன். மதுவிலக்கை ஒத்தி வைத்ததன் மூலமாக எத்தனையோ கோடி ஏழை மக்கள், நடுத்தர மக்கள் நிலைமை மோசமாகி இருக்கிறார்கள். கள், சாராயம் போன்ற வகைகளிலே வரியைப் போட்டு அவர்களுக்கு இன்னல்களை உண்டாக்கியிருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மதுவிலக்கை ஒத்திவைத்த நேரத்திலே விற்பனை வரிமூலம்



கிட்டத்தட்ட 104.90 கோடி ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது. ஆனால் 1948-ம் ஆண்டு மதுவிலக்கை அமலுக்குக் கொண்டுவந்த நேரத்திலே முதலமைச்சராக இருந்த ராஜாஜி அவர்கள் அதன் காரணமாக நாட்டிலே 4 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகின்ற காரணத்தால் அதற்காக விற்பனை வரியை அமலுக்குக் கொண்டு வந்தார்கள். இப்பொழுது மதுவிலக்கை ஒத்தி வைத்திருப்பதால் விற்பனை வரிகளை முழுவதுமாக ரத்து செய்ய வேண்டுமென்று கூட நான் சொல்லவில்லை. சர்சார்ஜுகளையாவது நீக்கிவிட வேண்டும். சமீபத்தில் கூட்டப்பட்ட விற்பனை வரி விதங்களைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவற்றையெல்லாம் பரிசீலனை செய்வதற்கு ஒரு நிபுணர் குழு போட்டு எந்த எந்த வரிகள் எந்த எந்த அளவிலே குறைக்க முடியும், உணவுப் பொருள்கள் மீது உள்ள வரிகளை எந்த, எந்த அளவுக்கு நீக்க முடியும் என்று சீர்திருத்தி அமல் நடத்த வேண்டும். உதாரணமாக பல கட்ட விற்பனை வரியினால் வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் எந்த அளவு தொல்லைக்கு ஆளாகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இதையெல்லாம் கவனிக்க நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பசுமைப் புரட்சி வேகமாக நடந்து கொண்டிருக்கிற நேரத்திலே விவசாயிகள் பயன்படுத்துகின்ற உரம், பிண்ணாக்கு இவைகளின் விலை அதிகமாக இருக்கிறது. 35 ரூபாய் என்று ஆரம்பித்து விவசாயிகளுக்குக் கிடைக்கிறபோது 42 ரூபாய் அளவிற்குப் போய்விடுகிறது. ஒரு மில்லர் உற்பத்தி செய்யக் கூடிய பொருள், ஹோல்சேல் டீலர், ரீடெயில் டீலர் இவர்கள் மூலமாகச் சென்று 42 ரூபாய் என்ற அளவிற்குப் போய்விடுகிறது என்றால் விவசாயிகளுக்கு எந்த அளவிற்கு அதை கொள்முதல் அடக்க விலையில் வைத்துக் கொள்ள முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். பல கட்ட விற்பனை வரியை நிச்சயமாக ஒரு கட்ட விற்பனை வரியாகச் செய்ய வேண்டுமென்று நாங்கள் சொல்வதை நீங்கள் எடுத்துக் கொள்ளவில்லை. 1957-ஆம் ஆண்டு ஜூலை மாதம் நான் அன்று மறைந்துவிட்ட அப்பொழுது எதிர்க் கட்சியில் இருந்த அவர்கள் சொல்லிய சில வாசகங்களைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். "வியாபாரி

களுக்குச் சர்க்கார் சலுகை காட்டுகிறார்கள் என்று நாங்கள் சொல்கிறோம் என்று அஞ்சி விற்பனை வரி விஷயத்தில் கண்டிப்பாக இருப்பீர்கள். அப்படியிருந்தால் அதை மாற்றிக் கொண்டு ஒரு முனை விற்பனை வரிப் போடுங்கள், இயன்றவரையில் உணவுப் பொருட்களுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்று பேசியிருக்கிறார்கள். நீங்கள் அதைப் பின்பற்றுங்கள். இதை வற்புறுத்தி பல கட்ட விற்பனை வரியை ஒருமுனை விற்பனை வரியாக அமைக்க ஒரு நிபுணர் குழு அமைத்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ் ஆட்சியின்போது இதற்காக ஒரு நிபுணர் கமிட்டி போட்டு பரிசீலனை செய்தார்கள். ஆனால் என்னவோ அமலுக்கு வரவில்லை. நீங்கள் கவனித்து அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தினசரி காலையிலே எழுந்து பத்திரிக்கையைப் படித்தால் இங்கே எந்த அளவுக்குத் தொழில் அமைதி இருந்ததோ அந்த அளவுக்கு அது இல்லாமல் சீர்கெட்டுப் போய் கொண்டிருக்கிறது என்ற நிலைமைதான் தெரிகிறது. கோவையில் மில் தொழிலாளர்கள் போராட்டம், மதுரையிலே நெசவாளர் போராட்டம், 60-க்கும் மேற்பட்ட நெசவாளர்களுக்குப் பிரம்படி ஜக்கம்பட்டியிலே, அசோக் லேலாண்ட் தொழிலாளர்கள் வீதிக்கு வந்திருக்கிறார்கள், கள்ளக்குறிச்சியிலே ஆலையடைப்பு இப்படிப் பல உண்டு.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கள்ளக்குறிச்சி ஆலை ஓடிக் கொண்டிருக்கிறது.

**திரு. ஓ. என். சுந்தரம் :** அவர்களுடைய இன்பர்மேஷனுக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல முன்னேற்றத்தைக் கண்டு கொண்டிருக்கின்ற இந்த அரசு இப்பொழுது கடுமையான சோதனைக்குள்ளாகியிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அப்படியிருக்கும் நிலையில் அங்கே சரியானபடி வழி வகுத்து இம்மாதிரியான போராட்டங்களை, அமைதியின்மையை மாற்றுவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டும்.

சமீப காலமாக, இன்று வேலையில்லாத் திண்டாட்டம் இவைகளைப்பற்றி யெல்லாம் பட்ஜெட்டிலே விரிவாக அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் அது நல்லதல்ல. லட்சக்கணக்கான பட்டதாரிகள், வாலிபர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.





சீரான முறையிலே அவர்களுக் கெல்லாம் நல்லமுறையிலே அளிக்கும் மானியம் அளித்து அவர்களுக்கு வேலை வாய்ப்பினை முறையில் திட்டங்களைத் தீட்டி ஸ்டேட் லெவலிலாவது செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் இம்மாதிரியான நிலைகளையெல்லாம் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசப்பட்டபோது குற்றச்சாட்டுகள் என்று. எங்கே என்று சொன்னார்கள். ஊழல் குற்றச்சாட்டுகள் தமிழகத்திலே இன்று எல்லாக் கேட்கிறார்கள். பொதுவாகவே தமிழகத்திலே பரவலாக மக்களின் மத்தியிலே கிளப்பினார்கள் கட்சிகளின் சார்பாக எல்லா யார் கிளப்பினார்கள் சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறார்கள். விசாரணை தேவை என்று சொல்லப்பட்டு, என்பது பிரச்னையல்ல. எதிர்க் கட்சியானாலும் தேவையை இங்கே ஆளுங் கட்சியானாலும், விசாரணை எப்பொழுது ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். சர்ச்சைக்குரிய பிரச்னையே ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதுதான் யாரும் சொல்லவில்லை. தனி விசாரணை செய்வதைத் தவறாக யாரும் சரி அம்மாதிரி 67-ஆனாலும் சரி, 57-ஆனாலும் சரி, 47-ஆனாலும் சரி வேண்டுமென்று விசாரணை ஏற்படுத்த இந்தச் சர்க்கார் முன்வர [illegible] இந்தச் சந்தேகங்கள் மக்கள் கேட்பது எதற்காக வென்றால் அது அந்தத் தலைவர் மத்தியில் பரவலாக ஏற்பட்டுள்ளதால் களையவே . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, கனம் உறுப்பினரவர்கள் ஊழலைப்பற்றிப் பேசுகிறார்கள். பேசியிருக்க வேண்டியதில்லை. பேசுகிறார்கள். இதைப்பற்றி விசாரணை வேண்டு மென்று சொல்கிறார்கள். [illegible] இந்த மாநிலத்து நீதிபதி வேண்டாம். வெளிமாநிலத்து நீதிபதி வேண்டுமென்று சொல்லக் கூடும். நான் [illegible] விரும்புவது என்னவென்றால், ஊழல் ஊழல் என்று கற்பொருக பேசுவது என்றால் எதைப் பற்றிப் பேசுகிறார்கள், என்ன ஊழல் என்று குறிப்பிட்டுப் பேசுங்கள். பொதுவாக ஊழல் [illegible]. பெரிய ஊழல். பெருத்த ஊழல். ஆதாரம் ஊழல் என்பதுபோல் பேசுவது அரசியல் அல்ல. இந்த மன்றத்திலிருப்பவர்கள். பொறுப்புள்ள அங்கத்தினர்கள் ஆதாரத்தோடு இந்த ஊழல் நடைபெற்றிருக்கிறது, இதற்கு

முதலமைச்சர் விசாரிக்க வேண்டும், அதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள் என்று கேட்டால், அமைச்சரவைமீது குற்றம் சாட்டப்பட்டால் அதற்குப் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால் பொத்தாம் பொதுவில் ஊழல் இருக்கிறது என்று சொல்லி ஏதோ எங்களைத் திருடர்கள் போலவும், தாங்கள் ஒன்றுமற்ற குற்றமற்றவர்கள் போலவும், எங்களைப் பாவிகள் போலவும், பேசுபவர்கள் ஏதோ புண்ணிய வான்கள் போலவும் சொல்வது முறையல்ல. குற்றமிருந்தால் என்ன குற்றம், என்ன ஊழல் என்று தைரியமாகச் சொல்லுங்கள். விசாரணைக்கு வெளிமன்றம் ஏன்? இந்த மன்றத்தில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா? ஊழல் என்ன, அந்த ஊழலை அமைச்சரவை நடத்தியிருக்கிறதா என்பது போன்று இவை ஒன்றுமேயில்லாமல் இப்பொழுது சொல்வது அரசியல் நாகரிகமாக ஆகிவிட்டிருக்கும் இந்தக் காலத்தில், ஊழல் பற்றிப் பேசுவது நாகரிகமாக ஆகி விட்டது, பொதுக்கூட்டத்தில் மந்திரிகள் ஊழல், லஞ்சம் என்று சொல்வது நாகரீகமாக ஆகிவிட்டது.

நாங்கள் ஏழைகளாக இருக்கலாம் ஆனால் இவ்வளவு கேவலமாக எங்களைப் பேசுவது முறையல்ல. கொஞ்சம் கண்ணியமாக, எங்களுக்காக இல்லாவிட்டாலும், இந்த இடத்திலிருப்பதற்காக வாவது, நாட்டை ஆளும் பொறுப்பிலேயுள்ளவர்கள் என்ற முறையிலாவது. தனிப்பட்ட எங்களுக்கு மரியாதை கொடுக்கத் தேவையில்லை. இவ்வளவு பெரிய மக்கள் மதிப்பைப் பெற்று வந்திருக்கிறோம் என்ற அந்தக் காரணத்திற்காகவாவது கண்ணியக் குறைவில்லாமல் பேசுங்கள். ஊழலைப் பற்றி என்ன ஊழல் என்று ஆதாரத்தோடு பேசுவதென்றால் பேசுங்கள். இல்லாவிட்டால் அதைப்பற்றிப் பேசாமல் வேறு எதையாவது பேசுங்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சார், ஊழலைப்பற்றிப் பேசுவதைப்பற்றி அமைச்சரவர்கள் கூறினார்கள். இதிலே பொது வாக விசாரணை தேவை என்று அவர்கள் கூறினார்களே தவிர அதுவல்லாமல் மேட்டுக் குடியிலே பிறந்தவர்கள், தாழ்ந்த குடியிலே பிறந்தவர்கள் என்று கேவலமாகப் பேசவில்லை. நாங்கள் மேட்டுக்குடியில் பிறந்தவர்கள் அல்ல, சாதாரண குடும்பத்திலே யிருந்து வந்தவர்கள்தான். ஏதோ குற்றச்சாட்டுக் கூறி யிருக்கலாம். இருந்தும் பேசுவதற்காகத்தான் எதிர்க்கட்சி



இருக்கிறது என்று அவர்கள் எதிர்க் கட்சியாக உட்கார்ந்திருந்த சமயத்திலே பல தடவைகள் கூறியிருக்கிறார்கள். எனவே அவர்கள் பேச அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்):** ஊழலைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்பொழுது பொதுப்படையாகக் குற்றம் சாட்டிப் பேசுவது நல்லது அல்ல. வெளியிலே பேசுகிறார்கள் என்று குறிப்பிடுவது சரியல்ல. வெளியிலே கூறப்படும் விஷயங்களையெல்லாம் இங்கே குறிப்பிட ஆரம்பித்தால் இந்த மன்றத்தின் நடவடிக்கைகளை நாகரீகமாக நடத்துவது கடினம் என்பதை விவரம் தெரிந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆகவே இரண்டு தரப்பிலேயிருந்தும் குற்றச்சாட்டுகளை ஆதாரமின்றிக் குறிப்பிடாமலிருப்பது தான் நல்லது.

**திரு. ஓ. என். சுந்தரம்:** தலைவரவர்களே, நான் பேசும் பொழுது மிகக் கவனமாகத்தான் சொன்னேன். எல்லாக் கட்சித் தலைவர்கள் மீதும் எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் வெளியிலே பரவலாக . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்):** மீண்டும் கட்சித் தலைவர்கள் சொல்கிறார்கள் என்பதை ஆதாரமாக வைத்துச் சொல்கிறார்கள். இது எல்லோரும் செய்தித் தாள்களில் படித்ததுதான். நீங்கள், விசாரணை வேண்டுமென்று ஆதாரத் தோடு சொல்லிக் கேளுங்கள். யாரோ சொன்னார்கள், அதற்கு விசாரணை செய்யுங்கள் என்று கூறுவது நல்லதல்ல.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நாங்கள் எதிர்க் கட்சியிலிருந்தபொழுது அறிஞர் அண்ணா அவர்கள் வற் புறுத்திக் கூறினார்கள். அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் சொத்து விவரங்களைக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தினோம். ஆனால் அப்பொழுது கொடுக்க முடியாது என்று மறுத்தார்கள். கொடுக்க வேண்டிய அவசியமில்லை, நாங்கள் என்ன திருடர்களா என்று இப்படிப் பேசப்பட்டது. ஆனால் நாங்கள் வந்ததற்குப் பிறகு கணக்கு காட்ட வேண்டு மென்று காட்டுகிறோம். நாங்கள், அமைச்சர்கள் கணக்குக் காட்டுகிறோம். எல்லா உறுப்பினர் (குறுக்கீடு) ஏறக்குறைய

களும் காட்டுகிறார்கள், தவறாகச் சொல்லவில்லை. அதில் ஏதாவது தவறு இருந்தால், சொத்து இவ்வளவு சேர்த்திருக்கிறது ஊழல் என்று சொன்னால் அதில் அர்த்தமிருக்கும். சொத்து சேர்த்ததுகூட அல்ல, வேறு ஏதாவது நிர்வாகத்தில் ஊழல் செய்திருந்தால் சொல்லுங்கள். நான் கேட்டுக்கொள்வது, ஒரு மரபைக் கடைபிடிக்க வேண்டும். ஒருவருக்கொருவர் எரிச்சல் மூட்டிக் கொள்ளாமல் பிரச்னைகளைத் தெளிவாகத் தீர்க்கலாம். எதற்காகவாது இந்த ஊழல் என்று குறிப்பிட்டுப் பேசுங்கள். இல்லாவிட்டால் பொதுவாகப் பேசுவது போலிருந்தால் நாங்கள் பேசாமல்கூட இருக்கலாம். ஆனால் நாங்கள் தவறு செய்திருந்தாலும் கனம் உறுப்பினரவர்களின் வாதம் எங்களுக்கு உதவ வேண்டுமே தவிர அது குத்தலாகவோ, எரிச்சலாகவோ இருக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஓ. என். சுந்தரம்:** பொதுவாக மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கினார்கள். அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. என்றாலும் வெளியிலே 57-லேயிருந்து விசாரணை வைக்க வேண்டு என்று சொன்னதற்காகத் தானே தவிர . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்):** வெளியிலே சொன்னதை இந்த மன்றத்தில் அனுமதிக்க விரும்பவில்லை. வெளியிலே பேசுபவர்கள் சவால் விடக்கூடும். நேற்றுகூட உங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினரவர்கள் வெளியிலே பேசுவதையும் மன்றத்திலே பேசுவதையும் பாகுபடுத்தினார் என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். வெளியிலே பேசியதை வைத்துக் கொண்டு, அரசியல் தலைவர்களைப்பற்றி ஆதாரமின்றி எந்தக் கருத்தையும் வெளியிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஓ. என். சுந்தரம்:** அடுத்து, நான் அந்த விவகாரங்களை நிறுத்திவிட்டு என்னுடைய தொகுதி விவகாரத்திற்கு வருகிறேன்.

வேலை வாய்ப்புகளுக்கு ஆள் எடுக்கும்பொழுது மதுரை மாவட்டத்தில் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ் நிறுவனத்தில் 500, 600 பேர்கள் தேவையானாலும், பேப்பரிலே அட்வர்டைஸ்மெண்ட் செய்தாலும், குறிப்பாக மின்துறையைப் பொறுத்தவரையிலும் மதுரையில் எம்ளாய்மெண்டு எக்சேஞ்சில் மாத்திரம் 500 பேர்களை எடுத்துக் கொள்கிறார்கள். திண்டுக்கல் போன்ற பல தாலுக்காக்



களிலிருந்து அதிலே எடுக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதிரி விஷயங்களையெல்லாம் அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும். ஆங்காங்கு பரவலாக வேலைவாய்ப்பு எல்லோருக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்பதை மனத்தில் வைத்து இனிமேலாவது சிக்கேடுகள் ஏற்படாமல் எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கும் முறையில் வேலைவாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, திண்டுக்கல்லில் பெண்கள் ஆதாரப் பயிற்சிப் பள்ளி என்று இருக்கிறது. அதையெல்லாம், கல்வி நிதி ஒதுக்கீட்டில் ஏராளமாகச் செலவழிக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்த ஆதாரப் பயிற்சிப்பள்ளி மூடப்படுகின்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பது வருந்தத் தக்க விஷயமாகும். அம்மாதிரியான பயிற்சிப் பள்ளிகளை மூடிவிடாமல் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல்லிலுள்ள பெண்கள் கலைக்கல்லூரி வேறு இடத்தில் மாற்றப்பட்டிருக்கிறது. அப்படி மாற்றும்பொழுது அந்த இடத்தில் சர்க்கார் பெண்கள் உயர்நிலைப்பள்ளியை நிச்சயமாக உருவாக்க வேண்டும். திண்டுக்கல் விஸ்தரித்து ஜனத்தொகை பெருகி வரும் நோக்கில் பெண்களுக்கு மேலும் வாய்ப்பளிக்கின்ற முறையிலே அந்த இடத்தை விற்காமல் உயர்நிலைப்பள்ளியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, திண்டுக்கல் நகரத்திலே, எதிர்க்கட்சி வரிசையிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும்கூட பல தொழில் திட்டங்களை அமைச்சரவை அமைக்கும் நோக்கில் திண்டுக்கல்லில் நான் எதிர்க்கட்சி ஆள் என்ற நிலையிலே விட்டுவிடாமல் அந்தப் பகுதியிலேயும் பல தொழிற்சாலைகளை விஸ்தரிக்க வேண்டுமென்ற முயற்சியிலே நீங்கள் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. க. மு. இராசகோபால்:** தலைவர் அவர்களே, எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ள 1972-73-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறிக் கொள்கிறேன்.

எங்கள் கட்சியின் தலைவர், முதலமைச்சர் அவர்கள் பெரும் வீரதீரத்தோடு தமிழ் மக்களுடைய உள்ளத்தில் இருக்கும் நீண்ட நெடுங்காலக் கனவை தமிழக சமுதாயத்தின் சுயமரியாதையை இந்த பட்ஜெட்டிலே இணைத்து தாக்கல் செய்திருக்கிறார்கள். கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும். தேவர் மொழி என்ற சமஸ்கிருதத்தை அறவே நீக்கி தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்ற திட்டமும், அந்தக் கோயில்களில் அர்ச்சகர்களாக தமிழகத்தின் எந்தக் குடும்பத்தில் பிறந்தவர்களும் இருக்கலாம் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டத்தையும் வீரத்துடன் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட வீரதீர பராக்கிரமம் இதற்குமுன் யாருக்கும் வரவில்லை.

நம்முடைய இராசகோபாலாச்சாரியார் அவர்கள் காந்தியாரின் சம்பந்தி. ஒரு உயர்ந்த இனம் என்று சொல்லக்கூடிய இனத்தின் மதத் தலைவர். அவர் பக்கத்தில் பல பத்திரிகைகளின் பலத்தை வைத்திருப்பவர். அது மட்டுமல்ல; அவர் நாவசைத்தால் பல பேர் . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, பெருந்தலைவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது அவர்கள் சேர்ந்திருக்கும் ஜாதியைப் பற்றிக் குறிப்பிடாமல் இருப்பது பொருத்தமாக இருக்கும். உயர்ந்த ஜாதி. தாழ்ந்த ஜாதி என்ற உணர்ச்சியைத் தூண்டுகின்ற முறையில் பேசுவதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. மு. இராசகோபால் :** ராஜகோபாலாச்சாரியார் பார்ப்பனர்களுக்கு வக்காலத்து வாங்குகிறார் என்று சொல்லவில்லை. அவர் செட்டியார் வகுப்பில் தன்னுடைய மகளைத் திருமணம் செய்து கொடுத்தால். . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சே. கந்தப்பன்) :** இதைக் கூடத் தவிர்ப்பது நல்லது.

**திரு. க. மு. இராசகோபால்:** கன்னியாகுமரி கோயிலில் உயர்ந்த ஜாதிக்காரர்களாக இருந்தால்தான் அவர்களிடமிருந்து தட்டைக் கையில் வாங்குகிறார்களே தவிர, வேறு யாருடைய தட்டையும் அங்கிருக்கும் அர்ச்சகர்கள் கையில் வாங்குவது இல்லை. மற்ற பல இடங்களில் அந்த நிலைமை இல்லாதிருந்தாலும் கன்னியாகுமரி கோயிலில் அந்த நிலை இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசு இதற்கெல்லாம் பரிகாரம் தேடும் வகையில் இன்று இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. எங்களுடைய ஆட்சி எதுவும் செய்யவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் செய்தது என்ன என்று எல்லோருக்கும் தெரியும்.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எதிர்க் கட்சிக்காரர்கள் பேசும்போது வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் நிலை எல்லாம் எந்த அளவுக்கு இன்று உயர்ந்திருக்கிறது என்ற கணக்கைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். எதிர்க் கட்சியிலிருப்பவர்களும் சாதாரண குடும்பத்தில் எங்களைப் போன்று வந்தவர்கள்தான் பின்னர் எப்படி ஆனார்கள்? உலகப் பெருந்தலைவர் என்று அவர்களால் போற்றப்படுகின்ற அவர்களுடைய தலைவர் சாதாரண குடிமகனாக இருந்துதானே இந்த ஆட்சியில் 1967 வரை இருந்துவிட்டு அந்த ஆண்டு தோல்வியுற்றார்கள். அவரைப் பற்றி அவர்கள் கட்சிக் காரர்கள் சொல்லுகிறார்கள்—ஒரு வேட்டி, ஒரு சட்டை, மேல் துண்டு தவிர வேறு ஒரு செல்லாக் காசு கூட அவருக்குக் கிடையாது என்று சொல்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அவையிலே இல்லாத ஒரு தலைவரைப் பற்றிப் பேசக் கூடாது என்று . . .

MR. DEPUTY SPEAKER : It can be referred to in a general way.

**திரு. க. மு. இ. இராசகோபால்:** அவர்கள் அவசரப்படுகிறார்கள். எங்களுக்கும் தலைவன் உண்டு; நாங்கள் ஆளுகின்ற நிலையில் பருவம் அடைந்த பெண்ணின் நிலையில் இருக்கிறோம். எங்களைப் பற்றிப் பகிரங்கமாகக் குற்றச்சாட்டுகளை அவர்கள் சொல்லும் போது நாங்கள் மட்டும் தாங்கிக் கொள்ள வேண்டும்; அவர்களைப் பற்றிப் பேசும்போது அவர்களால் பொறுக்க முடியவில்லை.

அந்தத் தலைவர் நீண்ட காலம் ஆட்சியில் இருந்தார்கள். 1967-ம் ஆண்டு தோல்வியுற்றார்கள். தோற்றதற்குப் பிறகும் அவர் ஒரு நாள் டெல்லி, மறுநாள் பம்பாய், மறுநாள் கல்கத்தா என்று விமானத்தில் பறந்து கொண்டே இருக்கிறார்களே, அதற்குக் காசு

[திரு. க. மு. இராசகோபால்] [1972 மார்ச் 7

எது? நான் சொல்லவில்லை. பொது மக்கள் கேட்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது வேகமாகப் பேசினார்கள். அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டுகளைச் சொல்லுவதில் வேகமாக இருந்தார்கள். . . .

**திரு. கே. எம். சுப்பிரமணியம் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் சார். அதற்கெல்லாம் எங்கே இருந்து பணம் கிடைத்தது என்று கேட்டார்கள்?

MR. DEPUTY SPEAKER : Please resume your seat :—

**திரு. க. மு. இராசகோபால் :** திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும் புறம்போக்கு நிலத்தைப் பட்டா செய்து கொண்டிருந்தால் அதை யெல்லாம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிக் கொடுக்கவில்லையென்றால் அதிகாரிகள் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆனால் அதே சமயத்தில் காங்கிரஸ் நண்பர்களைப் பற்றி ஒன்று சொல்கிறேன்.

காஞ்சீபுரத்தில் எங்களை எல்லாம் ஆளாக்கிய பெருந்தலைவர். உலகத்திற்கே வழிகாட்டக் கூடிய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1962-ம் ஆண்டு அங்கு தேர்தலில் நின்றபோது அவர்களை எதிர்த்து நின்று வெற்றி பெற்றவரை பிரதம மந்திரி நேரு அவர்களிடம் கொண்டுபோய் நிறுத்தி 'இவர் யார் தெரியுமா? திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரையே தோற்கடித்தவர்' என்று சொன்னார்கள். அந்த நடேச முதலியார் தோப்புப் புறம்போக்கை என்னுடைய தொகுதியில் நீண்டகாலமாகக் கைப்பற்றி வைத்துக் கொண்டிருக்கிறார். அவருக்குக் கோடிக் கணக்கில் சொத்து இருக்கிறது. பல வியாபாரங்களைச் செய்கிறார்.

THIRU K. M. SUBRAMANIAM rose.

MR. DEPUTY SPEAKER : The hon. Member should resume his seat.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I am raising a point of order.



1972 மார்ச் 7]

THE HON. THIRU P. U. SHANMUGAM : Let the hon. Member please resume his seat.

நண்பர் இராசகோபால் அவர்கள் பெயரைச் சொல்லாமல் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I want the ordinary rules to be observed. I am raising a point of order . . .

MR. DEPUTY SPEAKER : The hon. Member should not advise the Chair.

THIRU K. M. SUBRAMANIAM : I am not advising the Chair. I resume my seat . . .

MR DEPUTY SPEAKER : What is the point of order?

THIRU K. M. SUBRAMANIAM : Sir, my point of order is that as hon. Member of this House should not refer to the name of a person who has no opportunity to defend himself in this House. I do not want that Thiru Natesa Mudaliar . . .

MR. DEPUTY SPEAKER : The hon. Member should not give any personal explanation.

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பொதுவாக, இந்த மன்றத்தில் இல்லாதவர்களைப் பற்றி இங்கு பேசக்கூடாது என்ற மரபை வைத்திருக்கிறார்கள். இந்த நாட்டை ஆண்ட அமைச்சர். முதலமைச்சர் பொறுப்பில் இருந்தவர்களைப் பற்றிச் சுட்டிக் காட்டக் கூடாது என்றால் ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசக்கூடிய நேரத்தில் எப்படி குற்றச்சாட்டுகளை இந்த மன்றத்தில் எடுத்துக் கூற முடியும்? இதற்கு முன்னால் அமைச்சராக இருந்தவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுவதற்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசக்கூடாது என்று இல்லை. அவதூறு கிளப்பிப் பேசக்கூடாது. அவதூறாக அவையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசினால் அதற்கு அவர்கள் இங்கே பதில் சொல்லக்கூடிய நிலையில் இல்லை என்ற காரணத்தால்தான் அவர்களைப் பற்றி அவதூறாக இந்த அவையில் பேசக்கூடாது என்று சொல்லுகிறோம்.

திரு. எஸ். ஆறுமுகம்: ஒரு கட்சியைப் பற்றிச் சொல்லும் போது அந்தக் கட்சியின் தலைவர்களின் பெயர்களைச் சொல்லி, உறுப்பினர் அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஒருவரது பெயரைச் சொல்லி அவர் சர்க்கார் சொத்தை இந்த அளவிற்கு ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார் என்று சொல்லிச் சொல்வது எப்படித் தப்பாகும்? பெயரைச் சொல்லாமலே சொல்ல வேண்டுமென்று சொன்னால் இந்தச் சபையில் எதிர்தரப்பில் உள்ளவர்கள் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்று சொல்வார்கள். பெயரைச் சொல்லாமல் சொல்ல வேண்டுமென்பது முறையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குற்றச்சாட்டுகள் சாட்ட உரிமை இருக்கிறது. அதை நிரூபிக்கிற பொறுப்பையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பட்டா பொருந்த வரையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எல்லாப் பட்டாக்களையும் வாபஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் எல்லோரும் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த விவரம் சரியான விவரமா என்று கேட்க விரும்புகிறேன். ஏனென்றால் செய்யாறு உறுப்பினர் இன்னும் கொடுக்கவில்லை என்று தகவல் கிடைத்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இங்கிருக்கிறார்கள். . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தயவு செய்து இந்த அவைக்கு இப்படி ஒரு தவறான தகவலைக் கொடுக்க வேண்டாம். அவர்கள் ஏற்கனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, சபாநாயகராக இருந்தபோதே முதல் அமைச்சர் அவர்கள் சொன்னவுடன் வேண்டியதில்லை என்று அப்போதே எழுதிக் கொடுத்து விட்டார்கள்.

Dr. H. V. Hande: Has it been returned?

The Hon. Thiru P. U. Shanmugam: It has been returned and it has been surrendered. It is now under the custody of the Government.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குற்றஞ்சாட்டுவதில் ஆதாரத்தோடு குற்றஞ்சாட்டவேண்டும். அதை நிரூபிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். ப்ரிவிலேஜஸ் கமிட்டிக்கு . . . .

The Hon. Thiru P. U. Shanmugam: Sir, I would like to correct the statement just now made. The land had not been assigned to Pulavar Govindan but to his daughter or somebody else. The entire land has been surrendered at the request of the Hon. Chief Minister.

திரு. க. மு. இராசகோபால்: தலைவர் அவர்களே, செய்யாறு தொகுதி உறுப்பினர் பற்றிய விளக்கத்தைத் தெரிவித்தார்கள். எனக்கும் தெரியும். அப்படிக் கொடுக்கவில்லை என்றால் ஹாண்டே அவர்கள் என்னை அழைத்தால் அதற்கான பரிகாரத்தைத் தேட தயாராயிருக்கிறேன். இந்தத் தேர்தலிலும் நிற்கவைக்கப்பட்டவர், எங்கள் அண்ணனை தோற்கடித்தவர் என்று சொல்கிற அவர்களுக்கு அந்த இடத்தில் முப்பது ஏக்கர் நிலம் இருக்கிறது. ஒரு சென்ட் ரூ. 150 தேறும். கீழ்நீர் வற்றாத இடம். சர்வே நம்பர் 34-ல் 4.39 சென்ட் நிலம் இருக்கிறது. சர்வே நம்பர் 26-ல் உள்ள நிலத்தையும் சேர்த்து 7.45 சென்ட் நிலம் இருக்கிறது, இவ்வளவையும் அவர்கள் கைப்பற்றி வைத்திருக்கிறார்கள் . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த அவையில் அதைத் தெரிவித்ததற்கு நன்றி செலுத்துகிறேன். ஒன்று உறுதியளிக்கிறேன். அப்படி கைப்பற்றிய இடத்தை நிச்சயமாக அரசாங்கம் கையகப்படுத்தி திரும்பப்பெறும். (ஆரவாரம்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதோடு விட்டு விடலாம்.

திரு. க. மு. இராசகோபால்: அதோடு விட்டுவிட்டேன். அரசியல் நோக்கத்தோடு அவர்கள் பலவிதமாகப் பேசுகிறார்கள். பேசுவது என்றால் அரசியல் நாகரீகத்தோடு பேசவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்களைப் பற்றியும் தொண்டர்கள் பற்றியும் பேசப் படுகிறது. அரசியல் நாகரீகத்தோடு பேசவேண்டும். மாநில சுயாட்சி கேட்பதுபற்றிப் பேசுகிறார்கள்.

மத்திய அரசின் போலீஸ் இருக்கவேண்டுமென்று பேசப் படுகிறது. அப்படியானால் அந்த நகர்வாலா எனப்படுபவன் ஐந்து நிமிடத்தில் போன் மூலம் 65 லட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டானே அவனுக்காக அமெரிக்கா போலீஸா வருவது? (சிரிப்பு) அவ்வளவு கேவலமாகப் பேசப்படுகிறது நாட்டில். இன்னொரு மத்திய அமைச்சர் அங்கே ஒரு ஊழலில் ஈடுபட்டு அங்கிருந்து இரண்டு முறை விரட்டப்பட்டார் தமிழகத்திற்கு. அவருக்கு எந்த போலீஸ் வருவது? இங்கு மத்திய போலீஸ் வேண்டும் என்று சொல்கிறார்கள். பொறுப்புள்ள வர்கள் பொறுப்பற்ற முறையில் பேசுகிறார்கள். ராசகோபால் இப்படி இப்படி பணம் சம்பாதித்திருக்கிறான், இப்படி இப்படி கொள்ளை அடித்திருக்கிறான் என்று விவரமாக விவரங்களைக் கூறுங்கள். அப்படியானால் மறுபடியும் இந்த இடத்திற்கு அனுப்பு வார்களா மக்கள்? அதுதானே நியாயம்? அதை விட்டுவிட்டு வேறு முறையில் பேசுவது என்றால் எங்களுக்கும் பேசத் தெரியும். இப்போதுகூட, அங்கே போராட்டம். இங்கே போராட்டம் என்று முற்போக்குச் சக்திகளையும் இழுத்துக் கொள்கிறார்கள், நியாயத்தை அவர்கள் ஒரு பக்கம் பேசுவதை வைத்துக்கொண்டு, எப்படியாவது இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்று பார்க்கிறார்கள். 184 உறுப்பினர் வந்திருக் கிறார்கள், அப்படிபட்டதொரு கட்சியின் ஆட்சியைக் கவிழ்ப்பது என்றால் எந்த அளவிற்கு ஜனநாயகம் வளர்ந்திருக்கிறது என்று பாருங்கள்.

நான் மதிப்பிற்குரிய முற்போக்கு இயக்கத்தில் இருப்பவர் களுக்கு சொல்கிறேன். இந்த நாடுதான் ஜனநாயக நாடு என்று சொல்லப்பட்ட நாடு, ஜனநாயக சோஷியலிஸத்தை வளர்ப்போம் என்று கூறினார்கள். அவர்கள் கேரளாவில் ஒரு ஐந்து ஆண்டுகளாவது. அரசியல்சட்டப்படி, ஒரு ஆட்சியை பிழைக்க வைத்தார்களா என்று கேட்கிறேன். எவ்வளவோ தடவை கழுத்தை முறித்து முறித்துப் போட்டார்கள். மாநிலங் களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கிறோம். இதில் என்ன தவறு இருக்கிறது. என் எங்கள் கட்சி அமைச்சர்களும், உறுப்பினர்களும் மாநிலச் சுயாட்சி வேண்டுமென்று, மாநிலங்களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கக்கூடாது? பாரதத்தில் ஒரு கதை





உண்டு. சந்தனுவைத் திருமணம் செய்துகொண்டாள் கங்கை யானவள். கணவன் கொடுத்த வாக்குறுதிப்படி பெற்ற தாய் தான் பெற்றெடுத்த குழந்தைகளை முறித்துப்போட்டதாக வில்லிப்புத்தூரார் பாரதத்தில் அழகாக எழுதியிருக்கிறார்கள். அதேபோல் ஜனநாயகத்தை வளர்ப்போம், சோஷலிஸ ஜனநாயகத்தை வளர்ப்போம் என்று சொல்பவர்கள் கேரளத்தில் ஒரு ஐந்து ஆண்டுகளாவது ஒரு ஆட்சியைப் பிழைக்க வைத்தார் களா என்று கேட்கிறேன். என் அங்கு ஒரு ஐந்து ஆண்டு காலம் கூட ஒரு ஆட்சியும் நிலைக்கவில்லை. என் உங்களுக்கு அந்தளவிற்கு வயிற்றெரிச்சல்?

மத்திய அரசாங்கத்தினிடம் அதிகாரங்கள் குவிந்து கிடக்க வேண்டுமென்று சொல்லும்போது நாங்கள் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டுமா, எங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கக்கூடாதா? இப்படியா ஜனநாயகத்தை வளர்க்கப் போகிறீர்கள்? பிரதமர் அவர்கள் என்ன பேசியிருக் கிறார்கள்? எந்த முதல் அமைச்சரும் தமக்குப் பின்னால் வருவதாக இருந்தால் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். இப்படியா ஒரு நாட்டின் பிரதம மந்திரி பேசுவது? இதுவா ஜனநாயகம்? எந்தக் கட்சிக்காரர்களும் வரக்கூடாது, வேறு கட்சியே வேண்டாம். ஒரு கட்சிதான் வேண்டும் என்றால் நீங்களே இரண்டாக மடிந்துவிட்டீர்களே, பின் எப்படி ஒரு கட்சி. வருவது? இப்படி ஒரு ஜனநாயகத்தை வளர்ப்பது ஏன்? எடுத்துக்காட்டிற்காகத்தான் இதைச் சொல்கிறேன். இப்படிப் பட்டதொரு கொடுமையை நாட்டில் வளர்க்கக்கூடாது. நாம் மாநில சுயாட்சி வேண்டும் என்று கேட்பது, மாநிலங்களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்பது தமிழகத்திற்கு மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டுமல்ல கேட்பது. (மணியடிக்கப்பட்டது.) எனக்கு பேச எப்போதும் சமயம் கொடுப்பதில்லை.

என் தொகுதிபற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்பு கிறேன். என்னைப் பார்த்து ஆத்திரப்படுகிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களை எடுத்துக்கொண்டால் குடிநீர் திட்டம் அமைப்ப தற்கு எல்.ஐ.சி.-யிலிருந்து கடன் கொடுக்க மாட்டேன் என்கிறார் கள். லோக்கல் செஸ் சார்ஜை 1.50-ல் இருந்து ரூ. 2.50 வரை

விதிக்க ஒன்றியங்களுக்கு இந்த அறிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது. எல்.யூ.எவ். மூலம் ஒன்றியங்களுக்கு கடன் அளித்து குடிநீர் திட்டங்களை எல்லா ஒன்றியங்களிலும் நிறைவேற்றித் தர ஏற்பாடு செய்யவேண்டும். உத்திரமேரூர் பஞ்சாயத்து ஒன்றியம் தமிழகத்திலேயே பெரியதோரு ஒன்றியமாகும். 70 ஊராட்சி மன்றங்களை உள்ளடக்கிய ஒன்றியம் அது. அதை இரண்டாகப் பிரித்தால் தவிர அந்த ஒன்றியம் வளர இயலாது. இரண்டாகப் பிரித்தால்தான் அது வளர வழி எற்படும். எங்கள் தொகுதிக்கு வந்திருந்தபோது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு இரண்டு இடங்களைக் காண்பித்துள்ளேன. பாலாற்றின் குறுக்கே ஒரு தாம்போதி கட்டித் தரவேண்டும். ஆத்தூர்-இரட்டாற்றுப் பற்றின் இடையிலும் ஒரு தாம்போதி கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மானியக் கோரிக்கைகள் வரும்போது எனக்குப் பேச வாய்ப்பு கிடைக்கும் என நினைக்கிறேன். போனால் போகிறது என்று விட்டுவிடுகிறேன். நானும் எவ்வளவோ சொல்லலாம்.

ஆகவே, இனிமேலாவது நாகரீமாகப் பேசவேண்டும். அப்படிப் பேசவில்லையென்றால் ஒருவரும் பொது மக்களுக்கு சேவை செய்ய வரமாட்டார்கள். பொதுமக்கள் மதிக்கிற வகையில் குற்றச்சாட்டுக்களை ஆதாரத்தோடு கூறவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஆ. கருப்பையா : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களை சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை உண்மையிலேயே கிராம மக்கள், ஏழை, எளிய பாட்டாளி மக்களுடைய வாழ்க்கையை அப்படியே, அவர்கள் வீட்டில் தினம் தினம் எப்படி நடந்துகொண்டிருக்குமோ அதே முறையில் இங்கே கலைஞர் அவர்கள் படம் பிடித்துக்காட்டியிருக்கிறார்கள் என்பதை எல்லோரும் நன்றாக அறிவார்கள். இருந்தாலும்கூட, அரசியல் காரணமாக இதை ஏற்றுக்கொள்ள முடியாத காரணத்தாலோ என்னவோ, இந்த நிதிநிலை அறிக்கையில் ஒன்றும் இல்லை என்ற அளவில் பேசி வருகிறார்கள். நீங்கள் பாராட்டுவீர்கள் என்று எதிர்பார்த்து கலைஞர் அவர்கள்



இந்த நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரி தூற்றுவோர் தூற்றட்டும் என்று சொல்லி, நாங்கள் தொடர்ந்து அண்ணா வழியில் செல்வோம் என்ற நிலைமையில்தான் இந்த நிதிநிலை அறிக்கையினை எங்களது முதல்வரவர்கள் சமர்ப்பித்து இருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கை உண்மையிலேயே பார்க்கப்போனால் ஏழை எளிய மக்களுக்கு உண்மையிலேயே பல நன்மைகளை கொடுத்திருக்கிறது. நான்கு ஆண்டுகள் குத்தகை பாக்கி இருந்தாலும், அந்த பாக்கிகளையெல்லாம் இந்த ஆண்டு பாக்கி செலுத்தியிருந்தால் தரவேண்டியது இல்லை என்று செய்யப் பட்டிருப்பதை பார்க்கிறபோது உண்மையிலேயே ஏழை எளிய பாட்டாளி மக்கள் வாழ்த்துகிறார்கள். அவர்கள் இதுவரையில் பயந்து கொண்டிருந்தார்கள். ஆண்டுதோறும் அவர்கள் குத்தகை பாக்கிக்காக ப்ரோ நோட்டு எழுதிக் கொடுத்து விட்டு, எந்தக் காலத்தில் இவற்றையெல்லாம் கொடுக்கப்போகிறோமோ என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருந்த நேரத்தில், விவசாயப்பெருங்குடி மக்களுக்கு இப்படிச்செய்வது ஒரு பெரிய நல்ல திட்டமாக, அவர்கள் பாராட்டக்கூடிய அளவில் அமைந்திருக்கிறது.

இன்றைக்கு தொழிலாளர்கள் மாதம் ரூ. 200, ரூ. 300 என்று சம்பளம் வாங்கிவிட்டு, அவர்கள் சம்பளத்தில் முக்கால்வாசித் தொகையை வட்டிக்காரனிடத்தில் கொடுத்துவிட்டு, கையில் காசு இல்லாமல் வீட்டுக்குத் திரும்பிப்போகும் நிலையைப் பார்க்கிற போது, கூடிய வட்டிக்கு பணம் வாங்கி விட்டு அவர்கள் தவிக்கும் தவிப்பை பார்த்து விட்டு, அவர்களுக்கு நன்மையளிக்கிற வகையில் அவர்களுக்கு கடன் நிவாரண சட்டம் கொண்டு வந்திருப்பதைக் கண்டு ஏழைமக்களின் சார்பில் நான் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசனங்கள் நலனுக்காக இந்த ஆண்டு ரூ. 8.41 லட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அரிசன மக்களை மத்திய அரசாங்கம் கைவிட்டுவிட்டது. அப்படியிருந்தாலும்கூட மாகாண சர்க்கார் நல்ல முறையிலே அரிசன மக்களுக்கு நன்மை செய்வதற்காக ரூ. 8.41 லட்சம் ஒதுக்கியிருப்பதைக் கண்டு நாங்களெல்லாம் பெருமைப்படுகிறோம். அதற்காக அரசிற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆ. கருப்பையா] [1972 மார்ச் 7

ஊழலைப்பற்றிப் பலபேர் சொன்னார்கள். ஊழலைப்பற்றி பேசக் கூடாது என்று சொல்கிறார்கள். எங்களுக்கு இருக்கும் சங்கடங்கள் எல்லாம் இந்த மன்றத்திலே சொல்ல ஆரம்பித்தால் நேரம் போதாது. அவர்கள் 1966-ல் செய்த சில ஊழல்கள்—பஞ்சாயத்துகளில் செய்த ஊழல்கள்—ஆகியவற்றிற்கு எங்களால் பதில் சொல்லமுடியாத அளவுக்கு இருக்கிறது. 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெருந்தலைவர் அவர்கள் அங்கே சுற்றுப் பயணம் வந்தபோது தேர்தல் நிதியாக கொடுக்க வேண்டுமென்று ரூ. 500, 1,000 என்று எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இன்று வட்ட செயலாளர்கள் மாவட்ட செயலாளர்கள் எப்படி இருந்தார்கள் என்று கேட்கிறார்களே அவர்கள் கட்சிக்காரர்கள் தான் இப்படி எல்லாம் செய்திருக்கிறார்கள். யாருடைய அதிகாரத்தைக் கொண்டு பஞ்சாயத்து நிதியிலிருந்து தேர்தல் நிதிக்கு பணம் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. ஒவ்வொரு பஞ்சாயத்து பிரசிடெண்டும் 'கட்டாயப்படுத்தி கையெழுத்து வாங்கி ரூ. 200, 300 என்று எடுத்துவிட்டு, இன்று வரை அதற்கு சரியான முறையில் ரசீது கொடுக்காததால் ஆடிட் அப்ஜெக்ஷன் ஆண்டுக்கு ஆண்டு வந்து கொண்டேயிருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதையெல்லாம் விட்டு திராவிட முன்னேற்றக் கழகம் என்ன ஊழலை செய்துவிட்டது என்று நான் கேட்கிறேன். மக்களுடைய வரிப்பணத்தை எடுத்து தேர்தல் நிதிக்கு கொடுத்துவிட்டவர்கள் இன்று ஊழலைப் பற்றிப் பேசுகிறார்கள். ஏழை எளிய பாட்டாளி மக்கள் கட்டிய வரிப் பணத்தை இப்படிச் செலவு செய்திருக்கிறார்கள்.

விலைவாசி உயர்ந்துவிட்டது என்று சொல்கிறார்கள். விலைவாசி எப்போதிருந்து உயர்ந்திருக்கிறது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1967-ம் ஆண்டு ஜனவரியில் இருந்த விலைவாசி என்ன? ஒரு கிலோ மிளகாய் வத்தல் ரூ. 9 இருந்தது. 1 படி அரிசியின் விலை ரூ. 3.50 என்று இருந்தது. அதை யாரும் மறுக்க முடியாது. அப்போது பெருந் தலைவர் அவர்கள் என்ன சொன்னார்கள்? என்ன விலைவாசி ஏறிப் போய்விட்டது என்று சொல்கிறீர்கள்? மிளகாய் வத்தல் ரூ. 9 விற்றால் தானே விவசாயிக்கு அந்த விலை கொடுக்க முடியும் என்று சொல்லவில்லையா? இப்போது அந்த விவசாயிக்கு அதிக விலை தரவேண்டுமென்ற எண்ணம் ஏன் வரவில்லை? நான்



1972 மார்ச் 7] [திரு. ஆ. கருப்பையா]

முன்பே கூறியது மாதிரி, போற்றுவோர் போற்றட்டும்
தூற்றுவோர் தூற்றட்டும், நாம் நல்லதையே செய்வோம், அண்ணா
வழி நடப்போம் என்று கலைஞர் அவர்கள் இத்தகைய சிறப்பான
ஒரு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று கூறிக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழை எளியவர்களுக்கு இந்த அரசு சரியாக சலுகை செய்ய
வில்லை என்று சொன்னார்கள். உண்மையிலேயே சிந்தித்துப்
பார்க்கவேண்டும். கூட்டுறவுத் துறை ஆரம்பிக்கப்பட்டு 50
ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த 50 ஆண்டுகாலத்தில் எங்காவது
ஒரு கூட்டுறவுச்சங்கத்தில் ஒரு அரிசனமகன் தலைவனாக வர
முடிந்ததா? இந்த அரசு ஏற்பட்ட பிறகு தான் அவர்கள் அதில்
காலடி எடுத்து வைத்து இருக்கிறார்கள் என்பதை சிந்தித்துப்
பார்க்கவேண்டும். இந்த அரசு வருவதற்கு முன்பு இந்த
நிலைமையுண்டா என்பதை இங்கே உள்ள உறுப்பினர்கள் நெஞ்சில்
கையை வைத்துச் சொல்லட்டும்? திராவிட முன்னேற்றக் கழகம்
ஆட்சிக்கு வருவதற்கு முன்பு எத்தனையோ முதலமைச்சர்கள்
தோன்றியிருக்கலாம். ஆனால் அவர்களுக்கெல்லாம் அப்படிப்
பட்ட நல்ல எண்ணம் வந்ததுண்டா? அரிசன மக்களுக்கு
பிரதிநிதித்துவம் கொடுப்பதை அதிகப்படுத்தவேண்டுமென்று
நினைத்ததுதான் உண்டா? இது வரை 16% பிரதிநிதித்துவம்
என்று இருந்ததை இப்போது 18% என்று உயர்த்தியிருக்
கிறார்கள். இப்போது எங்கே பார்த்தாலும், அரிசன மக்களுக்கு
வீடு இல்லாதவர்களுக்கு வீடு. நிலம் இல்லாதவர்களுக்கு நிலம்,
கடன் கிடைக்காதவர்களுக்கு கடன் இப்படியெல்லாம்
கிடைக்கிறது. இது வேறு எந்தக்காலத்திலாவது உண்டா
என்று அறியவிரும்புகிறேன். இனிமேல் உங்களுடைய ஏமாற்று
வித்தையை அரிசன மக்கள் நம்பமாட்டார்கள். அவர்கள்
உங்களை நன்கு புரிந்து கொண்டு விட்டார்கள் என்று கூறி,
என்னுடைய தொகுதியைப் பற்றிய சில வார்த்தைகள் சொல்ல
விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் பராக்கிரமபாண்டியன்குளம் என்ற
இடத்திற்கு அருகே ஒரு பாலம் உடைந்து இருக்கிறது. இந்தப்
பாலத்தை கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
என்னுடைய தொகுதி மானாவாரியை சார்ந்தது. சங்கரன்

கோவில் வட்டத்தைப் பற்றி தெரியும். என்னுடைய பகுதியில் 50–60 அடி ஆழத்தில் கிணறு வெட்டினால் கூட தண்ணீர் கிடைக்காது. அப்படிப்பட்ட பகுதி. என்னுடைய தொகுதியில் பல நல்ல காரியங்கள் செய்ய வேண்டுமென்று பல முறை கேட்டிருக்கிறேன். அதை அரசு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தேவர்குளம் பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகயிருக்கிறது. அங்கே உள்ள மக்கள் நகர்ப்புறங்களை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். கிராமப் புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதால் மக்களெல்லாம் நகர்ப்புறங்களுக்கு ஓடுகிறார்கள். நகரங்கள் அந்த மக்கள் சக்தியைத் தாங்கும் நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு ஸ்பின்னிங் மில்லோ அல்லது ஆலையோ ஆரம்பித்தால், அவர்கள் அப்படி நகரை நோக்கி ஓடுவதைத் தடுக்கலாம்.

மானூர் குளத்திற்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று வாதாடிக்கொண்டு வந்திருக்கிறேன். அதற்கு சேர்வலாறு திட்டத்தை நிறைவேற்றவேண்டும். தமிழகத்தில் ஓடுகின்ற சேர்வலாறு திட்டத்தை நிறைவேற்ற வேறு ஒருவரை நாம் கேட்கவேண்டியதில்லை. இதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறுகிறோம் என்று இப்பவும் சொல்கிறார்கள். இரண்டு ஆண்டுக் காலமாக ஒப்புதல் கிடைக்கப் பெறுவதை எண்ணி மிக வருந்துகிறேன். இதற்குத்தான் மாநில சுயாட்சி வேண்டும் என்று கேட்கிறோம். இரண்டு ஆண்டுக் காலமாக இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் கிடைக்கவில்லை என்றால், அதன் காரணம் என்ன? ஆகவே, இந்த சேர்வலாறு திட்டத்தை நிறைவேற்றி மானூர் குளத்திற்கு தண்ணீர் கொண்டு வந்து அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

*திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சீரும் சிறப்பும் மிக்க ஏற்பாடு மிகு நிதி நிலை அறிக்கையை வரவேற்றுப் பேசும்போது ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. அறுசுவை உண்டியை ருசித்து உண்ணும்போது, வாயிலே சிறு கல்பட்டு பல்லுக்கு வேதனையைக் கொடுப்பதுபோல், இந்தச் சிறந்த அறிக்கையில் கல் ஒன்று





குறுக்கிடுகிறது. ஆம், கள்தான். மதுவைக் குறிப்பிடுகிறேன். மதுவின் மூலம் கிடைக்கும் 35 கோடி ரூபாயை ஏழை எளியவர்கள்தான் கொடுக்கிறார்கள். அப்படி விதிக்காமல், வேறு வரிகள் மூலம் இந்த 35 கோடி ரூபாயையும் வசூல் செய்ய வழி வகை செய்திருந்தால் நானும் என் கட்சியும் மகிழ்ச்சியடைந்திருப்போம். அதை ஒரு துணிச்சலான செயல் என்றும் பாராட்டியிருப்போம். எதிர்காலத்திலாவது, மதுவை நீக்கி ஏழை எளிய மக்களைக் காப்பாற்றி இந்த 35 கோடியை அடைய மாற்றுத் திட்டம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டுப் பாதுகாப்புக்காக உயிர் இழந்த வீரர்களுக்கு ஈட்டுத் தொகை கொடுப்பதில் போர் நடந்து கொண்டிருக்கும்போதே, செய்தி வந்ததும் உடனுக்குடன் ஈட்டுத் தொகையை கொடுத்ததற்காக முதல் அமைச்சரைப் பாராட்டுகிறேன்.

1972-73-ம் ஆண்டில் 10 புதிய கால்நடை மருந்தகங்களை அமைக்கப்போவதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அப்படிப் புதிய மருந்தகங்கள் அமைக்கும்போது, என் தொகுதியில் 15,000 ஜனத்தொகையைக் கொண்டது பள்ளப்பட்டியில். மருந்தகம் ஒன்று அமைக்க வேண்டும். அதற்கான நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, என்னுடைய தொகுதியில் வேறு தொழில் வசதிகள் மற்றவைகள் இல்லை. ஆனால், புல் வளம் இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு ஆட்டு வளர்ச்சிப் பண்ணையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முன்பெல்லாம், 2, 3 ரூபாய்க்கு விற்ற ஆட்டிறைச்சி. இன்றைக்கு கிலோ 6, 7 ரூபாய் விற்கிறது. ஆகவே அதனால் மிருந்த சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறோம். ஆகவே நல்ல ஆட்டு வளர்ச்சிப் பண்ணையை அங்கே ஏற்படுத்தினால் நல்ல வாய்ப்பாக இருக்கும்.

பாசன வசதி பற்றிச் சொல்லும்போது, என் தொகுதிக் குறைகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நொய்யலாற்றில் ஒரு திட்டம், குடவனாறுத் திட்டம் இவை தேங்கிக் கிடக்கின்றன. நங்கனி ஆற்றில் பள்ளப்பட்டிக்கு அருகாமையில் அணை அமைக்க வேண்டும் என்பதை தற்போது பரம்பரை திட்டத்திலே. மைசூர் மாநிலத்தையும், எற்கனவே தெரிவித்திருக்கிறேன். இந்த உயிரான பிரச்சினையை மற்றவர்களையும் எதிர்பார்த்து.

[திரு. வா. மை. அப்துல ஜப்பார்] [1972 மார்ச் 7

தாமதம் செய்யாமல், நல்ல முடிவு எடுக்க வேண்டும். மாநிலத்திலுள்ள ஆறுகளை ஒவ்வொன்றாக இணைத்துச் செயல்பட வேண்டும்,

டவுன்ஷிப் ஒன்றியங்களின் சாலைகளை எடுக்கவிருப்பது வரவேற்கத்தக்கது. குறைந்த வருவாய் உள்ள ஒன்றியங்களின் சாலைகளை அவர்களால் பராமரிக்க முடியவில்லை. இது கலியாணம் முடிந்தால் தான் பைத்தியம் தீரும் பைத்தியம் தீர்ந்தால் தான் கலியாணம் ஆகும் என்ற சொல்படி இது இருக்கிறது. அதாவது பேருந்துகள் செல்லும் சாலைகள் அரசால் எடுக்கப் படும். என்றால், சாலைகள் ஒழுங்காக இருந்தால்தான் பேருந்துகள் விடுகிறார்கள். நான் பேருந்துக்காக வாதாடிய போதெல்லாம், சாலைகள் சரியில்லை என்று சொல்லிவிட்டார்கள். இப்பொழுது பேருந்து ஓடுகின்ற சாலை என்றால், அது எப்படி சரியாக இருக்கும் என்பது புரியவில்லை. ஆகவே, பேருந்துகள் ஓடும் சாலைகள் என்கிற நிபந்தனையை எடுத்துவிடவேண்டும்.

லோகல் செஸ் சர்சார்ஜ் 1½ ரூபாயிலிருந்து 2½ ரூபாய் வரை விதிக்கலாம் என்று சொல்லும்போது, என்னுடைய பகுதி வறட்சி மிகுந்த பகுதி. அங்கே எற்கனவே உள்ள 1½ ரூபாயையே முழுமையாக விதிக்க முடியாமல் இருக்கிறது. அதிகப்படுத்துவது அதிகமான சிரமத்தையே கொடுக்கும்.

திருப்பூர் பனியன் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்யப்படுகிறது. அதில் ஏறக்குறைய 600 தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. 10, 20 தொழிற்சாலைகள்தான் நல்ல வசதியுள்ள பணக்காரர்களால் நடத்தப்படுகின்றன. மற்றவை களெல்லாம், குடிசைத் தொழிலாக சிறிய சிறிய தொழிலாளி களால், தங்கள் சேமிப்பை வைத்து நடத்துகிறார்கள். கிட்டத் தட்ட 9,000க்கும் அதிகமான தொழிலாளிகள் வேலையற்று இருக்கிறார்கள். இதனை ஒட்டி, பெட்டி செய்தல், லேபிள் ஒட்டுதல், சலவை செய்தல் போன்ற தொழில்கள் செய்பவர்களும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் கிட்டத்தட்ட 25,000 பேர்களுக்குமேல் இந்த பனியன் தொழில் வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு மாதமாக வேலை நிறுத்தம் நடக்கிறது. மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் முக்கிய பொறுப்பு எடுத்துக் கொண்டு



1972 மார்ச் 7] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

திருப்பூருக்குச் சென்று இரு தரப்பாரையும் கூட்டி, ஒரு
அட்ஜுடிகேஷன் அல்லது உத்தரவு என்ற முறையில் தீர்ப்பு
அளிக்க வேண்டும் என்றும். வேலை நிறுத்தத்தை முடிக்கும்.
வகையில் வழி காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ரகசியக் குறிப்பேட்டு முறையை நீக்கியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இது தக்க சமயத்திலே செய்யப் பட்ட நல்ல காரியம்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டத்தை முதல்வர் அவர்கள் ஆர்வத்துடன் செயலாற்றுவதற்கு உண்மையிலேயே நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இனியும் பிச்சைக் காரர்கள் இல்லை என்கிற நிலையைப் படிப்படியாகச் செய்வதில் நாங்களெல்லாம் உங்களுக்குத் துணை நிற்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1961-ல் செய்த
நிலச் சீர்திருத்தம் சம்மந்தப்பட்டவரையில், மாவட்ட
உச்சவரம்பு மிச்ச நிலம் என்ன என்று எங்களுடைய சொச்சம்
ஆட்சியாளரைக் கேட்டதில் அவர்கள் 2,300 எக்கர் கையகப்
என்று சொன்னார்கள். இந்த 2,300 சொச்சம் எக்கரில் ஆண்டிலேயே
படுத்தியிருப்பது 1,800 எக்கர்தான் 1961-ம் படுத்தப்படவில்லை
செய்யப்பட்ட போதே இவ்வளவு நிலம் கையகப்படுத்தப்படவில்லை நிலங்கள்
என்றால், 1970-ம் ஆண்டு உச்சவரம்புச் சட்டத்தின் மிச்ச இந்த
எப்பொழுது கையகப்படுத்தப்படும் என்பது தெரியவில்லை. அதுதான்
நிலையில் ஒரு அச்சுறுத்தலையும் பார்க்கிறோம். நீக்குவதற்கான
அறக்கட்டளைகளுக்கு இருக்கும் விதிவிலக்கை என்னுடைய
சட்டம் கொண்டு வரப்படும் என்கிற வாசகங்கள். சிறுபான்மை
பணிவான வேண்டுகோள். முஸ்லிம் சமுதாயத்தினர் பள்ளிவாசல்கள்
யோர். அவர்களுடைய வணக்கஸ்தலங்கள். அவற்றின்
இவற்றிற்கு நிலங்கள் விடப்பட்டிருக்கின்றன. கொண்டு
பராமரிப்புக்காக. அந்த நிலத்தின் வருவாயைக் செய்யவேண்டியதாக
அங்கே இருப்பவர்கள் காரியங்களைச் செலவுக்காகவே இது
இருக்கிறது. அந்தப் பராமரிப்புச்
காப்பட்டிருக்கிறது.

அந்த நிலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டால் வணக்கத்திற்கே பாதகம் ஏற்படும். அந்த 'மஸ்ஜிதுகள்' ஒழுங்காகப் பராமரிக்கப் படாமல் போய்விடும், வணக்கமும் பாதிக்கப்படும் என்ற காரணத்தால் அது எங்களுடைய மத உரிமை. ஆகவே தயவு செய்து நிதானம் காட்ட வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கனம் அங்கத்தினர் அவர்கள் தவறுதலாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் மசூதிக்கு சொந்தமான நிலத்தை எடுக்கும் எந்த யோசனையும் இல்லை. நீங்களாக கற்பனை செய்து கொண்டு அப்படிப் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். சரியாகப் படியுங்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கம் திருப்தி அளிக்கிறது. அதற்கு அவர்களுக்கு நன்றி செலுத்திக் கொள்கிறேன்.

கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவரப்படுவதாக சொல்லப் பட்டிருக்கிறது. அதில் ஒரு அம்சம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அது என்னவென்றால் சிறிய கிராமங்களில் பட்டிக்காடுகளில் குறைந்த பணம் 50 ரூபாய் 100 ரூபாய் கடன் கொடுக்கும் ஸ்தாபனங்கள் அரசாங்கத் தரப்பில் தேவை. அது இல்லாத காரணத்தால் ஏழைமக்கள் கடன் பெற கூடுதல் வட்டியில் கடன் பெற்று அதில் நஷ்டம் அடைகிறார்கள். ஆதலால் ஒரு திட்டத்தை அரசு வகுக்கவேண்டும். இதற்கு பட்டிக்காடுகளில் [illegible] தவணைகளில் குறைந்த வட்டியில் சிறு தொகையாக 40, 50, 100 ரூபாய் அதாவது [illegible] கடன் கொடுக்க வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக மாநில சுயாட்சி பற்றி எங்களுடைய கட்சியின் கருத்தை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல் நிர்ணய சபையில் இந்த மாநில சுயாட்சி பற்றி கோரிக்கைகள் பேசப்பட்ட போது, எங்கள் மாபெரும் தலைவர் கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்கள் 'மாநிலங்களை முனிசிபாலிட்டி அளவிற்கு தாழ்த்திவிடாதீர்கள்; மத்திய அரசு வலிவுள்ளதாக இருக்கவேண்டும். அதே சமயம் மாநிலங்கள் மக்களுக்கு நன்மைக்காக பாடுபடும் அளவிற்கு அதிகாரம்



பெற்றதாக இருக்கவேண்டும்,' என்று வாதாடியபோது, 'இதோ பாகிஸ்தானி பேசுகிறார்; இவர் நாட்டை துண்டித்த பிறகும் இவ்விதம் வாதம் கிளப்புகிறார்' என்று டி. டி. கிருஷ்ணமாச்சாரி போன்ற தேசிய போர்வை போர்த்தியவர்கள், அன்று மத்திய அரசு வலிவுள்ளதாக இருக்கவேண்டும், இஸ்மாயில் சாகிப் அவர்கள் மாநில அரசுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்டதற்காக அதற்கு எதிராக ஒரு கருத்தை தெரிவிக்கவேண்டும் என்பதற்காக டி. டி. கே. போன்றவர்கள் மாநில அரசிடமிருந்த அதிகாரங்களைப் பறித்து மத்திய அரசிடம் கொடுப்பதில் பெருமை காட்டினார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்று அரசியலில் சொல்லாக் காசாகி ஓடிவிட்டார்கள். இனி சுயாட்சி பெறுவதில், அதிக அதிகாரம் பெறுவதில் எவ்வித தங்கு தடையும் இருக்காது. அதற்காக முஸ்லீம் லீக் ஆரம்ப காலம் முதல் நாடு சுதந்திரம் பெற்ற காலம் முதல், இன்று வரை அதற்கு உறுதுணையாக இருக்குமென்று உறுதிப்படுத்துகிறேன்.

(திரு. செ. கந்தப்பன் தலைமை)

இறுதியாக தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி ஒரு வேண்டுகோள் விடுத்து என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவ ஏதோ 50 லட்சம் ஒரு கோடி என்று கூட்டிக் கொண்டு நிதிநிலை அறிக்கை போவது பற்றி பெருமைப்படுகிறோம். இது சாதாரண வரவு செலவுத் திட்டத்திற்கே சரியாகப் போய் விடுகிறது. கல்லூரி மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவித் தொகை கொடுப்பது, நிர்வாகச் செலவில் சரியாகப் போய் விடுகிறது. நான் வேண்டுவதெல்லாம் ஒருவித "க்ராஷ் புரோகிராம்" அதாவது ஆண்டொன்றுக்கு ஒரு மாவட்டத்தை தனியாக எடுத்துக் கொண்டு அந்த மாவட்டத்திற்கு நிதி 10 கோடி ஒதுக்கி அந்த மாவட்டத்தில் எந்த அரிஜனும் குடிசை இல்லாதவனே இல்லை; தொழில் இல்லாதவனே இல்லை; குடிநீர் வசதி இல்லாத அரிஜன் கிராமமே இல்லை என்று சொல்லும் அளவிற்கு முழுமை பெற்று விட்டோம் என்று விழாக் கொண்டாடும் அளவிற்கு ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாவட்டத்தை எடுத்துக்கொண்டு அதற்கு என்று ஒரு சிறப்புத் தொகை ஒதுக்கவேண்டும். ரூ. 330 கோடி அளவிற்கு திட்டம் வகுக்கும்போது அதில் 10 கோடி தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கி ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாவட்டம் முழுமை

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1972 மார்ச் 7,

பெறச் செய்வதில் சிரமம் இருக்காது என்று கூறிக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த துணைச் சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

*திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, 1972-73-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது ஓரிரு கருத்துக்களை இந்த சந்தர்ப்பத்தில் கூறலாம் என்று நினைக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை ஒரு புரட்சிகரமான அறிக்கையாக
இருக்குமென்று நாங்களெல்லாம் எதிர்பார்த்தோம். ஆனால்
இல்லை. மது விலக்கு ரத்து செய்யப்பட்டதால் விற்பனை வரியை
நீக்குவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் விற்பனை வரி
நீக்காதது மிகவும் வருந்தத்தக்கது. அத்துடன் விலைவாசிகள்
விஷம் போல் ஏறிக் கொண்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த
இந்த நிதிநிலை அறிக்கையில் எந்த விதமான முக்கிய கொள்கையு
மில்லை என்பது ஏமாற்றத்தைத் தருகிறது. பல முனை வரிகளை
யாவது நீக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. சாதாரண
மக்களின் அத்தியாவசியப் பொருட்கள் பல்பொடி, வாஷிங்
சோப் போன்ற பொருட்களுக்கு பல முனை வரி போடுவது
வருந்தத்தக்கதாகும். அத்துடன் லட்சக்கணக்கான படித்த
இளைஞர்கள் தமிழகத்தில் கல்வி பயின்றவர்கள் அவர்களே
சொந்தப் பொறுப்பில் தொழில் செய்பவர்களுக்கு ரூபாய்
ஆயிரம் கடனைக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்
பட்டிருக்கிறது. இப்போதுள்ள விலைவாசியில் ரூபாய்
ஆயிரத்தை வைத்து எந்த தொழிலும் செய்ய முடியாத
சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்குக் குறைந்தபட்சம்
ரூ. 3,000 கடனைக் கொடுக்க அரசு முன் வரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதி பாதிக்கு மேல் விவசாயமும், பீடித்
தொழிலும் கொண்ட தொகுதியாகும். அங்கு இட்டத்தட்ட
பாதிக்கு மேல் நிலம் குளத்தை வைத்து விவசாயம் செய்ய
வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்தக் குளம் மராமத்து
செய்யப்பட்டு 30, 40 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அதை
மராமத்து செய்தால் வளத்தை பெருக்க முடியும். ஒரு
பெருக்கில் ஒன்றும் செய்யமுடியவில்லை. இப்போதுள்ள



1972 மார்ச் 7] [திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்]

சூழ்நிலையில் இரண்டு பெருக்கு பெருக்கினாலும் தண்ணீர் நிரம்பாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அரசு உடனடியாக அங்கே சர்வே செய்து குளம் மராமத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இது போக, எங்கள் ஏரியாவில் சிறு சிறு விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் பம்பாய், கல்கத்தா, டில்லி, மெட்ராஸ் போன்ற ஊர்களில் இருந்து கொண்டு தங்கள் வயதான தாய் தகப்பனுக்கு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கா நிலம் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். வயதானவர்கள் கணவனை இழந்த பெண்கள் தாங்கள் சொந்தத்தில் பயிர் செய்ய முடியாமல் குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். அப்படி குத்தகைக்கு விடப் பட்ட இடங்களில் அவர்கள் சரியாக குத்தகையும் அளப்பதில்லை. இப்போது நீங்கள் புதிதாக அறிவித்துள்ள குத்தகை பாக்கியைத் தள்ளுவீர்களானால்—நியாயமாக ஏற்கனவே ஒரு சட்டம் போட்டிருக்கிறோம்—60:40 குத்தகை அளக்கவேண்டுமென்று—இப்போது நீங்கள் அறிவித்துள்ளபடி பார்த்தால், அந்த சட்டத்தை மதித்து நடந்தவர்கள் எல்லாம் ஏமாளிகள் சட்டத்தை மதிக்காதவர்கள் கெட்டிக்காரர்கள் என்ற நிலைமை ஏற்படுவதுடன் வருங்காலத்தில் யாருமே சரியான குத்தகை அளக்க முடியாத ஒரு சூழ்நிலை வரும். குத்தகை பாக்கி வைத்தால் அரசு தள்ளிவிடும் என்பதை வாய்ப்பாகக் கொண்டு சிலர் செயல்படுவார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரியப் படுத்தி, இந்த மாதிரி சூழ்நிலை ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாளையங்கோட்டை—அம்பாசமுத்திரம் சாலையில் வீரவநல்லூர் சேரமாதேவி, கல்லிடைக்குறிச்சி ஆகிய ஊர்கள் இருக்கின்றன. தருவையாறு, கோரையாறு என்ற இரு பெரிய வாய்க்கால் நடுவில் வருகிறது. இரண்டு மாதத்திற்கு முன்பு தமிழ்நாட்டில் பெய்த பெருமழை காரணமாக அங்கு எந்தவித போக்குவரத்துமில்லாது தீவு மாதிரி இருக்கும் சூழ்நிலை அந்த ஏரியாவுக்கு ஏற்பட்டது. அங்குள்ள கீழ்தள தாம்போதி பாலம் 40 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த போக்குவரத்தை அனுசரித்து கட்டப்பட்டது. வேறு பாலங்கள் கிடையாது.

[திரு. கி. சி. ஆ. சிவப்பிரகாசம்] [1972 மார்ச்

இப்போதுள்ள நாகரீக போக்குவரத்தை அனுசரித்து அதை மேல்நிலைப் பாலமாக ஆக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முக்கூடல்—வீரவநல்லூர் இணைப்பு பாலம் நீண்ட நெடுங்காலமாக எங்கள் ஏரியா பிரச்னையாக இருக்கிறது. எனக்கு முன்பு சேர்மாதேவி தொகுதி உறுப்பினராக இருந்த எனது தந்தையார் டி. எஸ். ஆதிமூலம் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் இந்தப் பாலத்தின் அவசியம் பற்றி இந்த மன்றத்தில் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அந்தப் பாலம் மிகமிக முக்கியமானது. கண்டிப்பாக பாலம் ஏற்படுத்தித் தரவேண்டும்.

வீரவநல்லூரில் பத்திரப் பதிவு அலுவலகம் (சப் ரிஜிஸ்டிரார் ஆபீஸ்) உள்ளது. கிட்டத்தட்ட 15, 20 மைல்களுக்கப்பால் உள்ள கிராமத்தார் வீரவநல்லூர் போகவேண்டி இருக்கிறது. முக்கூடல் வடகரையில் இருக்கிறது. தென்கரையில் வீரவநல்லூர் இருக்கிறது. மத்தியில் தாமிரவருணி நதி இருக்கிறது. முக்கூடல் பீடித் தொழிலுக்கு கேந்திரமான இடம். அங்கு லட்சக் கணக்கான ரூபாய் சரக்கு மத்திய பிரதேஷ், குஜராத்திலிருந்து பீடி புகையிலை, பீடி இலை வந்து கொண்டிருக்கிறது. எங்களுக்குப் பக்கத்தில் ஒன்றரை மைலில் வீரவநல்லூர் ரயில்வே ஸ்டேஷனாது இருந்தும் அதை பயன்படுத்த முடியாமல் 15 மைலுக்கு அப்பாலுள்ள திருநெல்வேலியிலிருந்து சரக்குகளை எடுத்து வரவேண்டி இருக்கிறது. முக்கூடலில் அநேகம் பெண்கள் பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆற்றில் தண்ணீர் வரும் நேரங்களில் அவர்கள் அவற்றை கொண்டு வருவது பெரும் பிரச்னையாக இருந்து கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. ஆற்றுக்குத் தென்கரையில் வயல்கள் இருக்கின்றன. அந்த வயல்களுக்குச் சொந்தக்காரர்களில் 60 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் ஆற்றுக்கு வடக்கே இருக்கின்றார்கள். அவர்கள் ஆற்றைக் கடந்து தங்கள், வயல்களுக்கு உரங்கள், பயிருக்கு வேண்டிய பூச்சி மருந்துகள் கொண்டுவர வேண்டும். அதைப் போன்று அறுவடைக் காலத்தில் நெல், வைக்கோல் போன்றவைகளை ஆற்றைக்கடந்து கொண்டு செல்ல வேண்டும். இதனால் அந்த மக்களுக்குப் போக்குவரத்திற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே, அங்கே ஒரு பாலம்



1972 மார்ச் 7] [திரு. கி. சி. ஆ. சிவப்பிரகாசம்]

அமைக்கவேண்டுமென்று நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. இந்தக் கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சரவர்கள் பாலம் கட்டித் தருவதற்கான உறுதிமொழியைத் தருவார்களானால் அதற்கு ஆகும் செலவிற்காக மக்களின் சார்பில் 25,000 ரூபாய் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என் தொகுதியில் பீடித் தொழிலாளர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். பீடித் தொழிலாளர்களை காச நோய் சுலபமாகப் பற்றிக் கொள்கிறது, அவர்கள் காச நோய் சிகிச்சை பெறவேண்டுமென்றால், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆசாரிப்பள்ளம் காச நோய் மருத்துவ மனைக்குத் தான் போகவேண்டும். அவ்வளவு தூரம் சென்று சிகிச்சைப் பெற அந்த ஏழை பீடித் தொழிலாளர்களால் முடியவில்லை, கஷ்டப்பட்டு அவ்வளவு தூரம் சென்றாலும், போகும் எல்லோரையும் இன்பேஷன்டாக வைத்துக் கொள்வதில்லை. எனவே, இதற்கு ஒரு சர்வே நடத்தி, எங்கள் பகுதியில் ஒரு காச நோய் மருத்துவமனை கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மூன்று மாதங்களுக்கு முன்பு எங்கள் ஊரில் சொக்கலால் பீடிக் கம்பெனியில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக 25, 30 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சரக்குகள் தீய்க்கு இரையாகிவிட்டன. தீ விபத்து ஏற்பட்டவுடன் அதாவது இரவு ஒன்றரை மணிக்கு 'ஃபயர் சர்வீஸுக்கு' தெரிவித்தோம். ஆனால் 4½ மணிக்குத்தான் தீ அணைப்புப் படையினர் வந்தார்கள். அதற்குள் கிட்டத்தட்ட 30 லட்சம் ரூபாய் சரக்குகள் எரிந்துவிட்டன. முக்கூடலில் இதுபோன்ற லட்சக்கணக்கான ரூபாய் முதல் போடப்பட்ட பல கம்பெனிகள் இருக்கின்றன. எனவே, அங்கே ஒரு ஃபயர் சர்வீஸ் ஸ்டேஷன் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முக்கூடல்—கடையம் ரோடு 1952-ம் ஆண்டில் எனது தந்தை, அங்கு ஜில்லா போர்டு தலைவராக இருந்தபோது போடப்பட்ட திட்டம், அந்த ரோட்டை அபிவிருத்தி செய்யும்

[திரு. கி. சி. ஆ. சிவப்பிரகாசம்] [1972 மார்ச் 7

பணி மெதுவாக நடைபெற்று வருகிறது எனவே, ரோட்டை செப்பனிட்டு, சீர்படுத்தும் பணியை விரைவுபடுத்தி, முடித்துக் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதி மக்கள் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மண்பாண்டம் செய்தல், கூடை பின்னுதல், பாய் முடைதல் போன்றக் கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வருமானம் மிகக் குறைவு மக்கள் படிப்பில் ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் பக்கத்தில் கல்லூரி எதுவும் கிடையாது. கல்லூரிக்குச் செல்லவேண்டுமென்றால் 20 அல்லது 25 மைல் தூரத்தில் இருக்கின்ற பாளையங்கோட்டைக்குச் செல்ல வேண்டும். எனவே, அங்கு அரசு சார்பில் ஒரு கல்லூரி அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அங்குள்ள கைத்தறித் தொழிலாளர்களுக்குத் தேவையான மூலப்பொருள்கள் கிடைப்பதில் பலவித கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகையால் கைத்தறித் தொழிலுக்குத் தேவையான தறி, சாயம், ரசாயனப் பொருட்கள், நூல் போன்ற பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, முக்கியமான கோரிக்கையாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். அதாவது, ஒரு பத்தாண்டு காலத்திற்குக் கிராமங்களில் தான் புதிய ஆலைகளைக் தொடங்க வேண்டும். அப்படிச் செய்தால் சென்னை சிட்டி போன்ற பெரிய சிட்டிகளில், கிராமங்களிலிருந்து மக்கள் வந்து குடியேறுவது நின்றுவிடும். சிட்டியில் நெருக்கடி குறையும். அதேநேரத்தில் கிராமங்களில் தொழில் அபிவிருத்தி ஏற்படுவதோடு, பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும்.

இன்னும் ஒன்றை மட்டும் கூறி முடித்துக்கொள்கிறேன். என் தொகுதியில் பெரிய ஆலைகள் எதுவும் கிடையாது. ஆகவே, ஏதாவது ஒரு பெரிய தொழிற்சாலையை அங்கு அமைக்க அரசாங்கம் வேண்டிய முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1972 மார்ச் 7]

* திரு. காதர் பாஷா என்ற வெள்ளைசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நமது பேரவையில் மார்ச்சு திங்கள் 1-ம் நாள் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட 1972-73-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, பாராட்டி எனது கருத்துக்கள் சிலவற்றை கூற விரும்புகிறேன்.

1952-ம் ஆண்டு முதல் 1966-ம் ஆண்டு வரையில் பல வரவு-செலவுத் திட்டங்களை நாம் பார்த்திருக்கிறோம். பெரும்பாலும் அப்பொழுது வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் எல்லாம் பற்றாக்குறை பட்ஜெட்டாகத்தான் இருந்தன. அப்படிப் பற்றாக் குறை பட்ஜெட்டாக இருந்தபோதிலும் தமிழ்நாட்டிலே ஏதாவது அபிவிருத்தி ஏற்பட்டிருந்ததா என்றால் அதுவும் இல்லை. உதாரணமாக 1960-61-ம் ஆண்டு பட்ஜெட்டில் 33 லட்சம் ரூபாய் பற்றாக்குறை இருந்தது. 1961-62-ம் ஆண்டு பட்ஜெட்டில் 637 லட்சம் ரூபாய் பற்றாக்குறை இருந்தது. 1962-63-ம் ஆண்டு பட்ஜெட்டில் 286 லட்சம் ரூபாய் பற்றாக்குறை இருந்தது. அன்று இருந்த காங்கிரஸ் ஆட்சியின்போது இவை போன்று பல பட்ஜெட்டுகள் பற்றாக்குறை பட்ஜெட்டாகவே போடப்பட்டன. அப்படி இருந்தும் தமிழகத்தில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. என்பதை நாம் அறிவோம். அவர்கள் தயாரித்த பற்றாக்குறை பட்ஜெட் போலவே, உணவு உற்பத்தியிலும் பற்றாக்குறையாகவே இருந்தது. விவசாயத் துறையிலும், உணவு உற்பத்தியிலும் மிகமிகப் பின்தங்கி இருந்தோம்.

ஆனால் நடப்பாண்டில், அதாவது 1972-73-ம் ஆண்டு வந்திருப்பது உபரி பட்ஜெட். 2.40 கோடி ரூபாய் உபரி இருக்கும் அளவில் தயாரிக்கப்பட்டிருக்கிற பட்ஜெட்டை முதலமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். 1972-73-ம் ஆண்டில் 397.27 கோடி ரூபாய் வரவு இருக்கும் என்றும் பட்ஜெட்டில் காட்டப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. வேளாண்மைத் துறையில் நடப்பாண்டில் 73 லட்சம் டன் அரிசி உற்பத்தியாக இருப்பது மிகமிக பாராட்டுவதற்குரிய ஒன்றாகும். இந்த அளவுக்கு உணவு உற்பத்தியின் வேகம் பெருகி இருக்கிறது.

1972-73-ம் ஆண்டில் 66 லட்சம் ஏக்கர் அதிக விளைச்சல் உற்பத்தியாகத் திட்டமிட்டுள்ளது. இதையெல்லாம் பார்க்கும் போது எனக்கு மூவேந்தர் ஆண்ட காலம் நினைவுக்கு வருகிறது.

மூவேந்தர் காலத்தில் எந்த அளவுக்கு விவசாயத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்களோ, அந்த அளவுக்கு இன்று இருக்கிற கழக அரசும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. பாண்டிய மன்னர்கள் ஆண்ட காலத்தில் தென் பாண்டி மண்டலத்திற்கு ஒரு சிறப்பு உண்டு. அதாவது விவசாய உற்பத்தியில் அதிகமாக இருந்தது என்பதை,

"மாடுகட்டி போரடித்தால் மாளாது செந்நெல் என்று
ஆனை கட்டி போரடித்தான்"

என்ற பாட்டின் மூலம் அறிகிறோம். ஆனால் காங்கிரஸார் ஆட்சி காலத்தில் மாடுகள் கட்டி போரடிக்கவேண்டிய தேவைகூட இல்லாமல், மனிதர்களே காலால் மிதித்து நெல்லை பிரிக்கக்கூடிய நிலைதான் இருந்தது. பின்னால் வந்த கழக அரசு, ஆனைகளைக் கொண்டு போரடிக்காவிட்டாலும், இயந்திர டிராக்டர்களைக் கொண்டு போரடிப்பதை மதுரையிலும் மற்ற பல பகுதிகளிலும் காண்கிறோம்.

உணவு உற்பத்தியைப் பெருக்கின்ற வகையில், ஐ.ஆர். 8, ஐ.ஆர். 25, ஐ.ஆர். 28, போன்ற மிகு பயன் தரும் நெல் விதைகளைப் பயன்படுத்தி வருகின்றோம், கூட்டுறவுத் துறையின் மூலம் பசுமைப் புரட்சித் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். நில அடமான வங்கிகள் மூலம் விவசாயத்திற்குக் கடன் கொடுக்கப் பட்டு வந்தது காங்கிரஸ் ஆட்சி காலத்தில். அவர்கள் பயன் படுத்திய வார்த்தையைக் கூட நல்ல வார்த்தையாகப் போடக் கூடாதா? நில அடமான வங்கி என்று சொன்னாலே நிலத்தை அடமானம் வைத்து கடன் பெற்றார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். ஆனால் நமது கழக அரசின் ஆட்சியிலே நிலவள வங்கி மூலம் கடன் வழங்கப்படுகிறது. நில அடைமான வங்கி என்ற சொல் நில வள வங்கி என்று வளமாக மாறியிருக்கிறது.

கூட்டுறவுத் துறையிலே விவசாயத்திற்குக் கணிசமான கடன் வசதி பெற வகை செய்யப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக 1966-67-ல் குறுகிய, மத்திய கால கடன் 31.41 கோடி ரூபாய். அது 1970-71-ல் 44.43 கோடியாகவும், 1971-72-ல் 50 கோடியாகவும், 1972-73-ல் 60 கோடியாகவும் உயர்ந்திருக்கிறது. அதேபோன்று 1966-67-ல் நீண்டகால கடன் 3 கோடி ரூபாயாக இருந்தது. அது





1968-69-ல் 15.48 கோடியாகவும், 1970-72-ல் 22.66 கோடியாகவும், 1971-72-ல் 29.40 கோடியாகவும், 1972-73-ல் மேலும் உயரக்கூடிய வகையிலும் இருக்கிறது. இந்த புள்ளிவிவரங்களைப் பார்க்கும் போது நமது அரசு, கழக அரசு, விவசாய முன்னேற்றத்தில் எந்த அளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை நாம் தெளிவாக புரிந்துகொள்ளமுடியும். ஆகையால் இந்த அரசை விவசாய மக்கள் மனதாரப் பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.

அதேபோல நீர்ப்பாசனத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் நடப்பு ஆண்டில் ரூ. 8.17 கோடி ஒதுக்கியிருப்பது மிகமிகப் பாராட்டக்கூடிய ஒன்றாகும். அப்படி ஒதுக்கியிருப்பது மட்டுமல்ல. சில ஆண்டுகாலமாகப் பார்க்கிறோம். என்னுடைய பகுதி முதுகுளத்தூர் பகுதி கடந்த 20 ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல்—பலவிதமான நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற வாய்ப்பு இருந்தும் நிறைவேற்றப்படாமல் இருந்து வந்திருக்கிறது. ஆனால் கடந்த வாரத்தில்தான் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் பாலையாறு திட்டத்திற்குக் கல்போடப்பட்டது. இது எந்த ஊருக்குப் பயன்படப்போகிறது என்றால் 1957-இல் காங்கிரஸ் ஆட்சியில் படுகொலை நடத்தப்பட்ட கீழத்தூவலுக்காக அமைகிற நீர்ப்பாசனத் திட்டமாகும். பழைய காங்கிரஸ் ஆட்சியாளர் காலத்தில் கீழத்தூவல் பகுதியில் கண்ணீர் வந்தது என்றால் இன்றைய கழக ஆட்சியில் அங்கே தண்ணீர் வர இருக்கிறது. கண்ணீருக்கும், தண்ணீருக்கும் உள்ள வித்யாசத்தை உணராதவர்கள் இருக்க முடியாது. ஆகவே அந்தப் பகுதி மக்களின் சார்பாக இந்தக் கழக அரசை மனதாரப் பாராட்டுகிறேன்.

34 கண்மாய்களுக்கு 16 லட்சம் ரூபாயை கழக அரசு வழங்கியிருக்கிறது. இன்னும் நாராயண காவேரித் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இப்படி காங்கிரஸ் ஆட்சியில் புறக்கணிக்கப்பட்ட பலவிதமான திட்டங்களை கழக அரசு நிறைவேற்றி வருவதை நாம் காண்கிறோம். முன்பெல்லாம் செல்வாக்குப் பெற்றவர்களுடைய பகுதியில்தான் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதை நாம் கண்டு வந்தோம். ஆனால் கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்டவுடனே—மின்சாரம் இல்லாத

[திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி] [1972 மார்ச் 7

கிராமங்களே இருக்கக்கூடாது என்கிற அடிப்படையில்—1971-72-ஆம் ஆண்டு இறுதியில் மின் இணைப்புக் கொடுக்கப்பட்ட கிராமங்கள் 50,900 என்றால் 1972-73-இல் தமிழகம் முழுவதும் மின் இணைப்புப் பெறும் என்று வரையறுத்திருக்கிற திட்டத்தை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். வள்ளுவனார் குறிப்பிட்டதுபோல் அமைச்சர் அவர்களுக்குரிய இலக்கணத்தோடு நடுநிலைமையில் நின்று எல்லா பகுதிகளும் வளம் பெற வேண்டுமென்று உரிய நோக்கத்தோடு செயல்பட்டு வருவது பாராட்டத்தக்கதாகும். அதற்காக முதல் அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருப்பதும் ரூ. 89.35 கோடியாக உயர்ந்திருக்கிறது. கல்வி என்று சொல்லும்போது என் பகுதி மீண்டும் நினைவுக்கு வர ஆரம்பிக்கிறது. நீண்டநெடுங்காலமாக மாற்றாந்தாய்ப் பிள்ளையாகவே முதுகுளத்தூர் பகுதி நடத்தப்பட்டது. அங்குள்ள பள்ளிக்கூடங்கள் எல்லாம் நிரந்தர போலீஸ் ஸ்டேஷன்களாக ஆக்கப்பட்டிருந்தன. போலீஸ் ஸ்டேஷன்களாக மாற்றப்பட்டிருந்ததை எல்லாம் பழையபடி பள்ளிக்கூடங்களாக மாற்றிய பெருமை இந்தக் கழக அரசுக்கே சாரும். அதுவும் முதல் அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டில் எங்களது ஒப்பற்ற தலைவராக விளங்கிய தேவர் அவர்கள் நினைவில் அங்கே ஒரு கல்லூரியைத் துவக்கியது எங்களுக்கு எல்லாம் மிகவும் பெருமை அளிக்கக்கூடிய ஒன்றாகும். மக்களது நல்வாழ்வுக்கு வரப்பிரசாதமாக அமைந்த அந்த கல்லூரி நல்லமுறையில் செயல்படுவதற்கான காரியங்களையும் இந்த அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு பிற்பட்டோர் நலக்குழு அமைந்து பின்தங்கிய மக்களுக்காக 1966-67-இல் ஒதுக்கியது ரூ. 0.91 கோடி என்றால் 1972-73-இல் அதனை ரூபாய் 4.68 கோடியாக உயர்ந்திருப்பது மிகமிக வரவேற்கத்தக்கதாகும். அதற்காக எங்கள் பகுதி பிற்பட்டோர் மக்கள் சார்பாக எனது இதயம் கனிந்த நன்றியை முதல்வருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1972 மார்ச் 7] [திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி]

முதுகுளத்தூர் பகுதியைப் பொறுத்த வரையில் நீண்ட நெடுங்காலமாக ஒரு கோரிக்கை இருந்து வருகிறது. கள்ளர் ரெக்ளமேஷன் என்று இருப்பதுபோல முதுகுளத்தூர் பகுதியில் மறவர் ரிக்ளமேஷன் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டும். தனிப்பு அதிகாரிகளைப் போட்டு சமுதாயத் துறையிலும், கல்வித் துறையிலும், பொருளாதாரத்துறையிலும் மிகவும் மோசமான நிலையில் இருக்கிற மறவர் சமுதாயம் முன்னேற்றம் அடைவதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல அந்தப் பகுதியில் இன்னும் பல பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்பதாகத் தொகுதிமக்கள் சார்பாக பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக முதுக் குளத்தூர் தாலுக்காவில் ஆய்வில் உள்ள மலட்டாறு திட்டம், கிருதமால்நதித்திட்டம், கஞ்சம்பட்டி கால்வாய்த் திட்டம், பழைய நாராயணக்காவேரி திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றி அந்தப் பகுதியை வளமுடையதாக ஆக்கித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எங்கள் பகுதியில் சிமிண்ட் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள் ஜிப்சம், சுண்ணாம்புக்கல் அங்கே கிடைக்கிறது. அவற்றை எடுத்து மற்ற இடங்களில் உள்ள சிமிண்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்புகிறார்கள். சுண்ணாம்புக்கல், ஜிப்சம் போன்றவை அந்தப் பகுதியில் ஏராளமாக இருப்பதால் சிமிண்ட் தொழிற்சாலை ஒன்றை பெருநாழி பகுதியில் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கமுதி மருத்துவமனையை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை நீண்டநெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் நம்முடைய கழக அரசுதான் அதை அரசே எடுத்துக்கொள்ளும் என்கிற முடிவைச் செய்து எடுத்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசைப் பாராட்டுவதுடன் அந்த மருத்துவ மனையை அதிகப் படுக்கைகளுடன் விஸ்தரித்து கட்டடங்கள் இல்லாத குறையையும் போக்கித் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். கீழ்த்தூவல், போனூர் போன்ற இடங்களில் உள்ள சுகாதார நிலையக் கட்டிடங்களையும் பழுது பார்த்துத்தரவேண்டும்.

கடைசியாக மாநில சுயாட்சி பற்றி ஒரே ஒரு வார்த்தை சொல்லி முடித்துக்கொள்கிறேன். மாநில சுயாட்சி என்பது எல்லோருக்கும் இன்றியமையாத ஒன்று என்பதை எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்திருக்கிறவர்களும் ஒப்புக்கொண்டாக வேண்டும். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். இன்றைய தினம் ஒரு சின்னச் சின்ன விஷயத்திற்குக் கூட மத்திய அரசிடம் கையேந்தி நிற்க வேண்டியிருக்கிறது என்றால், இது தன்மானம் உள்ள தமிழர்கள் அனைவரும் தலைகுனிய வேண்டிய ஒன்றாகும். உதாரணமாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சிறை மீட்டான் அவர்கள் தொகுதியில் பாம்பூர் என்கிற ஊர் ஒன்று இருக்கிறது. அந்தப் பெயரை நாகர்பட்டி என்று மாற்ற வேண்டுமென்று கோருகிறார்கள். அதற்குக் கூட மாநில அரசு அனுமதி அளிக்க முடியாத நிலையில் மத்திய அரசை அனுமதி கேட்டு தவம் நிற்கவேண்டிய அவல நிலை இருக்கிறது என்றால் இதை தன்மானம் உள்ள தமிழர்கள் எவரும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. இதுபோல இன்னும் பல நிகழ்ச்சிகளைச் சொல்ல முடியும். நெடுஞ்சாலைகளைப் பேணிக் காப்பது மாநில அரசு—ஆனால் மக்களுடைய நன்மைக்காக நடுவில் ஒரு தூணை வைக்கவேண்டுமென்றால் கூட மத்திய அரசின் கே. எல். ராவ் அவர்களின் அனுமதியைப் பெற்றே செய்ய வேண்டும் என்கிற நிலையை பொறுத்துக்கொண்டே இருப்பதா? தன்மானம் உள்ள தமிழ் இனம் இதை சகிக்காது—மாநில சுயாட்சி பெற்றே தீருவோம் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. இராசாங்கம்:** பெருமதிப்பிற்குரிய சட்டப்பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய விவாதத்தில் உள்ள 1972-73-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஆதரித்து நானும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழக அரசினுடைய நிதிநிலை அறிக்கை எப்படிப்பட்டது என்பதை நாங்கள் சொல்வதைவிட இந்த நாட்டு சமுதாய, பொருளாதார வகையில் தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ளவர்களும் முன்னேற்றம் அடைந்தே ஆகவேண்டும். அவர்களும் அரசியல் சமத்துவம் பெற்றே ஆகவேண்டும் என்று விரும்பிய மகாத்மா காந்தியினுடைய ஆவி, நேருவினுடைய ஆவி, அறிஞர் அண்ணா



